நன்றி - ஊடறு

# தழும்புகள் காயங்களாகி

## கருக்கு, சங்கதி

பாமா

விடியல் பதிப்பகம்
கோயம்புத்தூர் – 641 015

விடியல் பதிப்பகம், இரண்டாம் பதிப்பு ஜூலை, 2004,
தி . ஆ.2035. முதற்பதிப்பு 2001, தி.ஆ.2032
விடியல் பதிப்பகம், 11, பெரியார் நகர்,
மசக்காளிபாளையம் (வடக்கு)
கோயம்புத்தூர் - 641 015. தொலைபேசி 0422 -2576772
மின்னஞ்சல் vitiyal2000@eth.net

தழும்புகள் காயங்களாகி , பாமா
(கருக்கு, சங்கதி இரு நூல்களின் தொகுப்பு)
முன் அட்டை ஓவியம் : எரன் ங்
அச்சாக்கம் மணி ஆப்செட், சென்னை-5
விலை ரூ.100

Vitiyal Pathippagam, Second Edition June, 2004 T.Y.2035
First Edition, 2001, T.Y.2032
VITIYAL PATHIPPAGAM, 11, Periyar Nagar
Masakkalipalayam (North), Coimbatore - 641 015
Phone : 0422-2576772
E-Mail : vitiyal2000 @ eth.net

TALUMPUKAL KAYANKALAKI, Bama
Collection of *Karukku* and *Cankati*
Front Cover Painting : Erin Ng
Printed By : Mani offset, Chennai - 5.
Price : Rs.100

*பாமாவின் கருக்கு (1992, 1994), சங்கதி (1994, 1996) ஆகிய இரு நூல்களும் அடங்கிய தொகுப்பாக 2001-ஆம் ஆண்டில் எமது பதிப்பகம் வெளியிட்ட நூலின் மறுபதிப்பே இந்நூல். இந்நூலை வெளியிட அனுமதியும், இந்நூலுக்கான புதிய முன்னுரையும் வழங்கிய பாமாவுக்கு நன்றி. இந்நூல் வெளிவர ஒத்துழைத்த மாற்கு அவர்களுக்கும், வெளியிட அனுமதியளித்த அருட்திரு. மிக்கேல் ஜெயராஜ் அவர்களுக்கும் ஐடியாஸ் நிறுவனத்திற்கும், இந்நூலுக்கான முன் அட்டை ஓவியத்தை வரைந்தளித்த எரன் ங் அவர்களுக்கும் நன்றி.*

*இந்நூலில் இடம் பெற்றிருக்கும் ‘கருக்கு’ வின் ஆங்கில மொழிபெயர்ப்பு (2000, Macmillan ) இந்திய வட்டார மொழிகளிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த நூலுக்கான 2000 ஆம் ஆண்டின் Crossword விருதைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

*தற்போது பாமா உத்திரமேரூரில் ஆரம்பப் பள்ளியா சிரியராகப் பணியாற்றுகிறார்.*

நன்றி - ஊடறு

# பதிப்புரை

தீண்டத்தகாதவர்களென ஒதுக்கப்பட்ட தலித் மக்கள், அவர்களுடைய அவலங்கள், வேதனைகள், கலகக்குரல்கள் ஆகியவற்றை இலக்கியக் கருப்பொருள்களாகக் கொண்ட தலித் இலக்கியம் மகாராஷ்டிராவிலும் குஜராத்திலும் கர்நாடகத்திலும் பெரும் தடத்தைப் பதித்திருந்த சூழலில், தமிழகத்திலும் தலித் இலக்கியம் ஏறத்தாழப் பத்து ஆண்டுகளுக்கு முன்பு முளைவிடத் தொடங்கியது. தலித் மக்களை இழிவாகப் பார்க்கும் மேல்சாதி இலக்கியக்காரர்களின் மரபான மனப்பதிவைக் கலைத்து, தலித் மக்களின் மனிதப் பண்புகளை, வேதனைக் குரல்களை எழுத்தில் வார்க்கத் தொடங்கிய தமிழ் தலித் இலக்கியம் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஒடுக்கப்பட்டு வரும் தலித் மனிதனின் தொலைந்து போன, பிடுங்கியெறியப்பட்ட தன்னிலையை மீட்டெடுத்து, மறுக்கப்பட்ட அவனுடைய மனித அடையாளத்தை வெளிப்படுத்த முயற்சித்தபோது, கன்னடத்திலிருந்து தமிழுக்கு வந்த சில தலித் படைப்புகளும் இம்முயற்சிக்குத் துணையாக நின்றன(புதைந்த காற்று - கன்னட தலித் இலக்கியத்தொகுப்பு, 1996; சித்தலிங்கய்யா வின் ஊரும் சேரியும், 1996; அரவிந்த மாளகத்தியின் கவர்ன்மெண்ட் பிராமணன், 1998 ; தேவனூரு மகாதேவவின் பசித்தவர்கள், 1999).

இலக்கியத்தின் சமூக வேர்களின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்திருக்கும் தலித் இலக்கியம் தனக்கென வரையறுத்த முன் மாதிரிகள் எவற்றையும் பின்பற்றுவதில்லை. மேல்சாதிச் சிந்தனை மரபால் இதுவரை எழுதப்பட்டவற்றைப்போல் அல்லாமல் தனது மக்கள் ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் நிலையைத் தன் படைப்புகளில் தீவிரத்துடன், கோபத்துடன், ஆத்திரத்துடன் வெளிப்படுத்தி, பிறரிடம் பேசும் உக்கிரமான முதற்கட்டத்தைத் கடந்து, பிறரைத் தவிர்த்து, படைப்பாக, தனக்குள்ளாகவே பேசும் இரண்டாவது கட்டத்தைத் தொட்டு நிற்கிறது தலித் இலக்கியம். தலித் இலக்கியம் தமிழ் இலக்கியத்தின் தேக்கநிலையை உடைத்து, புத்துணர்வை ஊட்டியது உண்மையெனினும் வழிபாட்டுக்குரியதாகவோ அல்லது எளிதில் தலித் விடுதலையைக் கொண்டுவந்துவிடக் கூடியதாகவோ அல்லது புனிதமானதாகவோ அது தன்னை எப்போதும் பிரகடனப்படுத்திக்கொண்டதில்லை.

அதேசமயத்தில், தலித் இலக்கியம் வளர்ந்து வரும் சூழலில் சூட்சுமமான மனித நேயத்தை முன்வைத்து தலித்துகளையே தலித்துகளுக்கெதிராக நிறுத்தும் உன்னதமான கலையழகு மிகுந்த நாவல்களும் (இமையத்தின் கோவேறு கழுதைகள், 1994; ஆறுமுகம், 1999 ) சமூகத்தின் விளிம்பு நிலையிலுள்ள இருவேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்களென்று (?) பலரும் கருதுகின்ற ஒர் ஆணையும் பெண்ணையும் மோத விட்டுவிட்டு, குரூரமாக இரசிக்கும் முகமற்ற கதைசொல்லியின் மேதைமையை உயர்த்திப் பிடித்துச் சலசலப்பை உருவாக்கும் கதை (தேவிபாரதியின் பலி, 1993) யும்கூட தலித் படைப்புகளாக முன்னிறுத்தப்பட்டன. ஒருங்கிணைக்கப்படாமல் பிரிந்து நிற்கும் தலித் இயக்கங்கள், தேர்தல் அரசியல், உத்வேகம் இழந்து நின்று போகும் நிலையை எட்டிவிட்ட தலித் பத்திரிகைகள், ‘தலித்’ என்ற சொல்லும், ‘தலித் இலக்கியம்’ என்ற கூட்டுச்சொல்லும் கலாச்சார வர்த்தகப்பெயராக, சந்தைப் பொருளாக விற்பனைக்குப் பயன்படுத்தப்படும் போக்கு - இவை தமிழ் தலித் இலக்கியத்தின் வளர்ச்சியைப் பாதிக்கத்தான் செய்கின்றன. தலித் எழுத்துகளை இலக்கியத்தன்மையற்றவை யாகவும், இலக்கியத்திற்கு அப்பாற்பட்டவையாகவும் முறைசாரா மானிடவியல் ஆவணமாகவும் பார்க்கும் பார்வையும், தலித் இலக்கியத்திற்கான எதிர்கால வாய்ப்புகளைக் கேள்விக்குள்ளாக்கு கின்றன. இதற்கிடையில் தங்களது அனுபவங்களைப் படைப்பு களில் வெளிப்படுத்துவதும், கற்பனையின் விரிவைக் கருத்துகள் தடை செய்யாதவாறு எழுதும் முயற்சியில் வெற்றிபெறுவதும் இன்று தலித் படைப்பாளிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளாகும்.

இந்நிலையில், மராத்தி தலித் படைப்புகளான லட்சுமண் மானேவின் உபாரா - அன்னியன் , லட்சுமண் கெய்க்வாடின் உச்சாலியா - பழிக்கப்பட்டவன் , கிஷோர் சாந்தாபாய் காலேவின் குலாத்தி - தந்தையற்றவன் ஆகிய நூல்கள் இப்பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு முன்னுதாரணங்களாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை. இம்மூன்று நூல்களின் தமிழ் மொழிபெயர்ப்பு களையும் அத்துடன் பாமாவின் கருக்கு, சங்கதி ஆகிய இரு நூல்களின் தொகுப்பான தழும்புகள் காயங்களாகி யையும் வெளியிடுவதில் விடியல் பதிப்பகம் மிகுந்த மகிழ்ச்சியடைகிறது.

# முன்னுரை

*1992*-ஆம் வருடம். என் வாழ்க்கையில் மறக்க முடியாத வருடங்களுள் இதுவும் ஒன்று. 'கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல' என்று சொல்வார்கள். கண்ணைக் கட்டாமல் காட்டில் விட்டாலும் எனக்கு அதே நிலைதான்.

*1985* முதல் *1992* வரை துறவறத்துக்குள் முடங்கிவிட்டு, *1992* இறுதியில் துறவறத்தை விடுத்து வெளியில் வந்தபோது, எனக்கே நான் அந்நியமாகிப்போன அவலத்தை உணர்ந்தேன். என்னிலிருந்து மட்டுமின்றி, சொந்த ஊரிலிருந்தும், உறவுகளிலிருந்தும், சொந்த பந்தங்களிலிருந்தும், இந்தச் சமுதாயத்திலிருந்தும்கூட அந்நியமாக் கப்பட்டுவிட்டதை உணர்ந்து அழுது புலம்பிய நாட்கள் அவை.

படித்திருந்தேன்; ஆனால் வேலை இல்லை. அடுத்த வேளை உணவுக்கும், உடைக்கும், இருக்குமிடத்திற்கும் உத்திரவாதமில்லாத வாழ்க்கைக்குள் திடீரென நான் நுழைந்திருந் தேன். செய்த வேலையை உதறிவிட்டு, அனைவரின் விருப்பத் திற்கும் மாறாக துறவறத்துக்குள் சென்றுவிட்ட என்னை வரவேற்று ஏற்றுக்கொள்ள யாருமில்லை. என்னை ஈன்றெடுத்த தாயின் இதயத்தில் மட்டுமே எனக்கு மாறாத பாசமும், புகலிடமும் கிடைத்தது. ஆனால் அப்போதைய சூழலில் அவர்களாலும் எனக்கு எதுவும் செய்துவிட முடியவில்லை.

நண்பர்களின் நட்பும், ஆதரவும் இல்லாமல் இருந்திருந்தால் கருக்கு பாமா காணாமலே போயிருப்பாள் என்றுதான் கூறவேண் டும். பத்தோடு பதினொன்றாக எங்கோ, எப்படியோ இருந்திருப் பேன். மதுரை ஐடியாஸ் நிறுவனத்தின் அப்போதைய தலைவர் அருட்திரு.மிக்கேல் ஜெயராஜ் அவர்களும், அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த நண்பர் அருட் திரு.மாற்கு அவர்களும், என் வேதனைகளைப் பகிர்ந்துகொண்டு, நான் சாதனை படைக்க வேண்டுமென ஊக்கமளித்தனர். ஆனாலும், இடையிடையே என் அம்மா அடிக்கடி கூறும் ஒரு பழமொழி நினைவில் உறுத்தியது ; "பன மரத்துல ஏறுரவன கை எட்டுர மட்டுந்தான் தூக்கிவிட முடியும்". எத்தனை காலம் நண்பர்கள் உதவுவார்கள்? அம்மா சொன்னதுபோல் கை எட்டும் வரைதானே... அதன்பின்? நான்தானே, என் முயற்சியால்தானே பனையின் உச்சியைத் தொட

முடியும் என்ற வினாக்களும், விடைகளும் மனதுக்கு விபரமாகத் தெரிந்தன என்றாலும் ஏற முடியாது என்ற பலவீனமும் நம்பிக்கையின்மையுமே எனக்குள் மண்டிக்கிடந்தன.

மனதும், உடலும் ஊனமாகிப் போனது போன்ற உணர்வு.

இந்நிலையில் என் மனது ஏக்கத்துடன் கடந்தகால சுகதுக்கங்களை அசைபோடத் துவங்கியது. சின்னஞ்சிறு வயதில் துள்ளித் திரிந்த கிராமத்து வாழ்க்கை, அரை வயிறும் குறை வயிறுமாய் இருந்தபோதும் அளப்பரிய உல்லாசத்தோடு கிராமத்து வீதிகளில் ஆடிப்பாடித் திரிந்த நேரங்கள், சர்வசதாகாலமும் ஆராவாரத்தோடு இயங்கிய எனது ஊர், தெருக்கள், சண்டை சச்சரவுகள், சந்தோசங்கள், என் பெற்றோர்கள், என்னுடன் பிறப்புக்கள், நான் படித்த பள்ளிகள், கல்லூரிகள், நம்பிய கடவுள்கள், செபித்த கோவில்கள், விளையாடிப் புரண்டெழுந்த புழுதி... இப்படியாக என் மனப் பயணம் விரிந்து விரிந்து, பறந்து செல்லச் செல்ல இவை அனைத்திற்கும் நான் அந்நியமாக்கப் பட்டுவிட்ட அநியாயமும், அவலமும், இயலாமையும் இல்லாமையும் என்னை வாட்டி வதைத்தன.

நிஜத்தை விட்டு விட்டு, நிழலை நிஜமென நம்பி ஏமாந்து போன எனக்கு வாழ வழி தெரியவில்லை; வாழ்வதற்குத் துணிவில்லை. இருண்டுபோன எதிர்காலம் பற்றிய அச்ச உணர்வைவிட, திடீரெனத் தேக்கமடைந்துவிட்ட நிகழ்கால வாழ்க்கைதான் எனக்குள் பேரச்சத்தை உண்டாக்கியது. மனம் அசைபோட்டதை நண்பரிடம் பகிர்ந்தபோது அவர் அவற்றை அப்படியே எழுதச் சொன்னார். எழுதினால் மனச்சுமை குறையுமென்றார். அந்த நேரத்து துக்கத்தைக் குறைத்துக்கொள்ள தினம் தினம் எழுதினேன். எனக்காக மட்டுமே எழுதியதால் மிகவும் சுதந்திரமாகவே எழுதினேன். நிகழ்கால வேதனைகளை எழுதும்போது ஏனோ கடந்தகாலத் தழும்புகளும் காயங்களாக மாறி என்னைக் கஷ்டப்படுத்தின. இன்றிலிருந்து நாளை என்ற நம்பிக்கைப் பயணமின்றி, இன்றிலிருந்து நேற்று என்றதொரு அலைக்கழிப்புதான் அதிகம் இருந்தது. மனதிற்குத் தோன்றியதை வார்த்தை களாக்கினேன். எழுத எழுத மனது இலகுவானது. அழிக்கப்பட்ட வாழ்க்கையின் எளிமையும், இனிமையும் எனக்குள் முளைவிட ஆரம்பித்தன. பழைய மண்வாசனையுடன் புதியதொரு வளர்ச்சி யைக் காண முடிந்தது. வாழ வேண்டும் என்றதொரு தாகமும், வேகமும் எனக்குள் தலைதூக்கின.

எழுதும்போது, இப்படித்தான் எழுதவேண்டும் என்ற எவ்விதத் திட்டமோ, வடிவமோ, இன்றித்தான் எழுதினேன்.

எழுதிய பின்பு முழுவதையும் வாசித்துப் பார்த்த நண்பர், இதை இப்படியே புத்தகமாகப் போடலாம் என்றபோது வேண்டவே வேண்டாமென மறுத்தேன். அதற்குக் காரணம், நான் புத்தக வடிவத்தில் அதைத் திட்டமிட்டு எழுதவில்லை; எனக்குள் இருந்த விசயங்களை என்னியல்புப்படி எழுதினேன். அதில் இருந்த ஒளிவு மறைவற்ற நிஜத்தன்மையும், அதனால் பிரச்சினைகள் வருமோ என்ற அச்ச உணர்வும், புத்தகமாக்கினால் என்னென்ன விளைவுகள் வருமோ என்ற கலக்கமும் என்னைத் தயக்கமுறச் செய்தன. இதை எழுதி யிருக்கவே வேண்டாமே என்றும் எண்ணினேன். இறுதியில் நண்பர் களின் கட்டாயத்தின் பேரில் சம்மதித்தேன். அதன்பிறகு அதை முழுமையாக நான் வாசித்தபோது, எனக்குச்சிரிப்பும் அழுகையும் சேர்ந்தே வந்தன.

பனை மட்டையின் இருபுறமும் இரம்பம்போல இருக்கும் கருக்கு எளிதில் நம்மை அறுத்துவிடும். தலித் மக்கள் பல்வேறு நிலைகளில் அடக்கப்பட்டு, அறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு வாழும் நிலையைக் குறிக்கவும், தங்களிடம் இயல்பாகவே உள்ள போர்க்குணத்தை இழந்துவிடாமல், தங்களை அடிமைப்படுத்தும் தடைகளை உடைத்தெறிந்து, தளைகளை அறுத்தொழித்து விடுதலை பெறவேண்டும் என்ற ஆசையினாலும் புத்தகத்திற்கு கருக்கு என்று பெயரிட்டேன்.

‘கருக்கு’ விற்குப் பரவலான எதிர்ப்பும், வரவேற்பும் இருந்தன. இலக்கியத்தளத்தில், இதன் வடிவம், மொழிநடை, சொல்லாடல்கள், இலக்கியத்தரம், செய்நேர்த்தி, போன்ற பல விசயங்களைப் பற்றிப் பலர் திரும்பத் திரும்ப விவாதித்தார்கள். இறுதியில் இது ஒரு புதிய வடிவம், புதிய முயற்சி என்று சொன்னார்கள்; பாராட்டினார்கள். இதென்ன மொழிநடை, இதென்ன இலக்கிய வகையெனப் பலர் விமர்சித்தார்கள். இவ்விருவகையான விமர்சனங்களைப் பற்றி நான் கவலைப்பட்டுக் கொள்ளவில்லை. ஆனால், எனது ஊர்மக்களே இதை ஏற்றுக் கொள்ள மறுத்தபோது நானே அதிர்ந்து போனேன். அவர்களைப் பற்றிய விசயங்களை எழுதி அவர்களை இழிவு படுத்திவிட்டதாக எண்ணி என் பெற்றோரிடம் சண்டை போட்டனர்; என்னை ஊருக்குள் நுழையக்கூடாது எனத் தடுத்தனர். இத்தகைய விளைவை எதிர்பார்க்காத எனக்கு இது மிகவும் புரியாததொன்றாகவே இருந்தது. இழிவுபடுத்தும் நோக்கத்தோடு இது எழுதப்படவில்லை என்பதைப் புரிந்துகொண்டு அவர்களுக்கு ‘கருக்கு’ வையும், என்னையும் ஏற்றுக்கொள்ளப் பல மாதங்கள் ஆயின. எங்கள் ஊர் இளைஞர்கள் பலர் இப்புரிதல் ஏற்பட உதவினர்.

அடுத்த ஆண்டுகளில் 'கருக்கு' பல தளங்களிலும் பலராலும் பேசப்பட்டது; விவாதிக்கப்பட்டது; விமர்சிக்கப்பட்டது ; ஆய்வுக்குட்படுத்தப்பட்டது; பாடநூலாக்கப்பட்டது; பாராட்டப் பட்டது. எனக்கு இது மிகவும் ஆச்சரியமான சந்தோசத்தைத் தந்தது. 1994-ல் இதன் இரண்டாம் பதிப்பும் வெளியிடப்பட்டது. 'கருக்கு பாமா' என்ற புதிய அடையாளம் எனக்குக் கிடைத்தது. 'கருக்கு' வை வாசித்த பலரும் அடுத்த புத்தகம் எழுதுங்கள் எனச்சொன்ன போது, எனக்கு பிரமிப்பாகவே இருந்தது. தலித் பெண்களை மையமாகக் கொண்டு எழுதலாம் என்ற எண்ணம் எழ, எனக்குள் பதிவாகிப் போயிருந்த பல எழுச்சிமிக்க பெண்களைப்பற்றி சங்கதி என்ற தலைப்பில் எழுதினேன். அது 1994 ஆம் ஆண்டு வெளி வந்தது. கருக்கு பேசப்பட்ட அளவுக்கு 'சங்கதி' பேசப்படவில்லை என்றாலும் எனக்குப் பிடித்தது சங்கதியே. இதன் இரண்டாம் பதிப்பு 1996 ல் வெளிவந்தது.

கடந்த ஆண்டுகளில் கருக்கு வளர்ந்தது. நானும் வளர்ந்தேன். மக்களும் விழிப்படைந்துள்ளனர். சங்கதியில் பதிவு செய்யப்பட்டுள்ள பெண்கள் போல ஏராளமானோர் துடிப்புடன், உயிரோட்டத்துடன், உறுதியுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தலித்துகளின் எழுச்சியைக் கண்டு, அவர்களை வீழ்ச்சியடையச் செய்ய எத்தனையோ சக்திகள் செயல்பட்டுக்கொண்டுதான் இருக் கின்றன. இருந்தாலும், முன்வைத்த காலைப் பின் வைக்கப் போவ தில்லை என்ற முனைப்போடு, பல்வேறு தளங்களில் அவர்களின் விழிப்புணர்வு விசாலமாகிக்கொண்டே வருகிறது. தலித் இலக்கியம் இன்னும் வீரியத்துடன் வந்து, விடுதலையைப் பரவச்செய்ய வேண்டுமென மனிதத்தை மதிப்பவர்கள் விரும்பு கின்றனர்.

கருக்கு , சங்கதியை வெளியிட உதவிய நண்பர் மிக்கேல் ஜெயராஜ், நண்பர் மாற்கு ஆகியோருக்கும் என் கிராமத்து மக்கள் அனைவருக்கும் பெருமகிழ்ச்சியுடன் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாமா

# கருக்கு

# ஒன்று

எங்க ஊரு ரொம்ப அழகான ஊரு. ரொம்பப் பெரிய முன்னேத்தமோ, எதுவுமோ இல்லன்னாக்கூட அதோட அழக வச்சுத்தான் எனக்கு அத ரொம்பப் பிடிக்கும். சின்ன ஊருதானாலும் இங்க பல சாதி மக்க குடியிருக்காக. சாதிசனத்தப்பத்திச் சொல்றதுக்கு முன்ன ஊரப்பத்தி நெறய்ய சொல்ல வேண்டியது இருக்குது.

ஊரச்சுத்தி வருசயா மலைகளா இருக்குது. பாக்குதுக்கு அழகா இருக்கும். அத மேக்குத்தொடர்ச்சி மலன்னு சொலறாக. இந்த மலைகளுக்கு பேர் கூட வச்சிருக்காக. ஒன்ன மரக்காப்பூச்சி மலங்கி றாக. இந்த மல பாக்கிறதுக்கு நெல்லு அம்பாரங்கெணக்கா இருக் குது. மல உச்சில ஒரு கல்லு மரக்காமாறி நிக்குது. அதுனாலதா இந்த மலைக்கு மரக்காப்பூச்சி மலன்னு பேரு.

இன்னொரு மலமேல பெருமாள்சாமி கோயில் இருக்குது. நாய்க்கமாருக கும்புடுற கோயிலு. அதச் சுத்தி நாய்க்கமாருக காடுக இருக்குது. இந்த மலைக்குப் பெருமாறன்னு பேரு. காடுகள பெரு மாறக் காடுகம்பாக.

இன்னும் நெறய்ய நரிப்பாற, வண்ணாம்பாற, வட்டுலு வித்தாம்பாறன்னு அங்கங்க இருக்குது. நரிப்பாறையில் முன்னாடி நரிக்காடுக வதியளிஞ்சு கெடக்குமாம். அங்ன இருந்துக்கிட்டு சுத்திலாப்ட வெள்ளாமை வெளச்சல்கள அழிம்மாண்டஞ் செய்யு மாம். இப்ப அம்புட்டுச் சாஸ்தி இல்லியாம். வண்ணாம் பாறையில் ஒரு ஊருணி இருக்காம். முந்தி வண்ணாங்க அங்க வெள்ளாவி போட்டுத் துணிமணி வெளுப்பாகளாம். இப்ப அம்புட்டு தொல வட்டுக்குப் போறதில்லை. வட்லு வித்த நாய்க்கரு காடு அங்ன இருக்குறதுனால, அதுக்கு வட்லுவித்தாம் பாறன்னு பேராம். சுத்தி இருக்கிற இந்த மலகதான் ஊருக்குப் பார்டரு குடுத்தமாறி நிக்கிதுக.

வெவசாயந்தா முக்கியமான வேல. காட்டு வேல இல் லாமப்போனா மலங்காட்டுச்செம வெறகு பெறக்கிட்டு வந்து வித்துப் பொழப்பு நடத்துவாக. மேச்சாதி ஆளுக்கு இந்தச் செரமம் ஒன்னுங் கெடயாது. வயலுவரப்பு வச்சு, அதுல கெணறுகவெட்டி, பம்பு செட்டு போட்டுக்கிட்டு வருசம்பூரா வெவசாயம் பண்ணிக்கிட்டு வீட்ல இருந்துக்கிட்டு தின்னு சொகப்படுவாக. கெணறுக தவர ஏகப்பட்ட கொளங்களும் இருக்குது.

மழச்சீசன்ல ஊறு இன்னும் அழகு சவுந்தர்யமா இருக்கும். மழத்தண்ணி மலைகள்ள உருண்டு ஓடியாந்து ஊரச்சுத்தி இருக்கிற ஓடைக வழியா தண்ணி ரொம்பி ஓடும். அப்பயெல்லாம் ஓடக் காட்டுகள்ள மீனு புடிக்கலாம். இந்தத் தண்ணி பூரா கொளத்துகள்ள போய்ச் சேந்துரும். அத வச்சும் வெள்ளாம செய்வாக.

மேக்கருந்து எடுத்துக்கிட்டா வருசயா தாமரக்கொளம், பாதுராங்கொளம், சீவநெரிக்கம்மா, ஐயர் கொளம், பெரியகொளம், போதர் கொளம், வில்ராங் கொளம்னு வருசைக்க கொளந்தான். எங்க தெருவுக்கிட்ட இருக்கிற கம்மாய்க்கு ரெண்டுபேராம். எங்க பக்கத்துல இருக்குறதுக்கு அனுப்பாங்கொளம்னு பேரு. அங்குட்டு இருக்குறதுக்கு வத்ராங்கொளம்னு பேரு.

மழகிழ பேஞ்சு பெரிய கொளம் நெறஞ்சுபோனா, எங்க கம்மாவும் ரொம்பிரும். கம்மாயில தண்ணி ரொம்பிக் கெடக்கயில கரவழி நடந்து போனா நல்லா இருக்கும். தண்ணி நெறய்யா இருந்தா கலுங்கல்ல மட்டத்த புடுங்கி உட்டு மட்டந்தட்ட வப்பாக. தண்ணி மட்டந்தட்டும் போது பானச்சாறு போட்டு எக்கச்சக்கமா மீனு புடிப்பாக. அப்பப் பாத்தா தெருக்காடெல்லாம் மீனா வதியளியும். செலேபிக் கெண்ட, பாம்புக் கெண்ட, கெளுத்தி, அயிர, கொறவ, வெராலு, இப்படி பல தினுசுள்ள மீனுக விப்பாக. எங்க தெருவுகள்ள அநேகமா செலேபிக் கெண்டயும், பாம்புக் கெண்டயுந்தான் சாஸ்தி வாங்கி கொழம்பு வப்போம். ஏன்னா இதுதான் சீப்பா கெடைக்கும். அயிர, கெளுத்தி, வெராலு, இப்படி பல தினுசுள்ள மீனுகள்ளாம் மேச்சாதி ஆளுக வாங்கித் திம்பாக. அம்புட்டு வெல குடுத்து எங்காளுக வாங்கித் திங்க முடியாது.

கம்மா பெருகிக் கெடக்கயில கம்மாக்கர ஆலமரத்து நெழல்ல சனங்க ஒக்காந்து பழம பேசிக்கிட்டு இருப்பாக. குளுகுளுன்னு காத்து அங்கன கடல்காத்து மாறி வரும். சொகம்மா இருக்கும். அப்படியே ஒறக்கம் கண்ண சொக்கிக்கிட்டு வரும். காத்துக்குக் கம்மாத்தண்ணி அலகெணக்கா அசஞ்சிக்கிட்டு பார்க்க அழகா இருக்கும். கரையில நின்னுக்கிட்டே, தண்ணிக்குள்ள தவ்வுற மீனுகளப் பாக்கலாம். வெயிலுக்கு அதுக்குமா பளுச் பளுச்சுன்னு மீனுக எம்பித் தவ்வும். தண்ணிப் பாம்புகளும் தலயத் தூக்கிக்கிட்டு பாக்கும். பெயல்க கல்லக்கொண்டி பாம்ப எறிவானுக. படக்குன்னு தண்ணிக்குள்ள ஓடிப்போகும்.

கம்மாய குத்தக எடுத்தவனுக கஞ்சி கிஞ்சி குடிக்கப் போயிட்டா சிறுசும் பெருசுமா தூண்டிவச்சு மீனுபுடிப்பாக. குப்பக்காட்டுகளத் தோண்டி மண்புழு எடுத்துக்கிட்டு தூண்டில் வச்சு போட்டா மீனு நல்லா உளும். பெறகு புடுச்ச மீனுகள

கரையிலேயே கூளத்தப்போட்டு பத்தவச்சு சுட்டுத்திம்பானுக. நல்லா ருசியா இருக்கும். கம்மாக் காவக்காரங் கண்ணுல பட்டா அம்புட்டுத்தான். புடுச்ச மீனுகளையும் புடுங்கிக்குவான். தூண்டிக்கட்டையையும் ஒடுச்சு போட்டுருவான்.

சின்னப் பிள்ளைக பூரா மத்தியான சுடுவெயிலுக்குள்ள, கம்மாத் தண்ணிக்குள்ள கெடந்து தவக்கா கெணக்கா வெளாண்டுட்டுக் கெடக்குங்க. தத்தக்கா புத்தக்கான்னு அதுல நீச்சடிக்கப் பழகிக்குங்க. பக்கத்துலய எரும மாடுகளுஞ் சொகம்மா படுத்துக் கெடக்கும். செல குசும்புக்காரப் பெயல்க எரும முதுகுல ஏறி ஒக்காந்துக்கிட்டே நடுக்கம்மா வரயிலகூடப் போயிட்டு வருவானுக. நேத்துப்பெறந்த விடுக்குகூட அம்மணக் குண்டியா கம்மாத் தண்ணிக்குள்ள வெளாண்டுட்டுக் கெடக்கும்.

கம்மாய்க்குள்ள ஒரு ஊருணி இருக்குது. ஊருணிக்கரைலயும் ஆலமரங்க இருக்குது. கம்மாயில தண்ணி வத்துனாலும் ஊருணிக்குள்ள தண்ணி கெடக்கும். கம்மா வத்தும்போது அங்க வெள்ளரிக்கா, கம்பு, சோளம் இப்பிடி ஏதாச்சும் வெதச்சு வெளய வைப்பாக. கம்மாய்க்குள்ள போயி வெள்ளரிக்கா புடுங்கித் தின்னா வெயிலுக்கு அதுக்கும் தவுச்ச நாக்குக்கு நல்லா இருக்கும். களவாண்டு திங்குறதுல்ல ஒரு தனிருசிதான்.

விடியங்காட்டியும் சாயங்காலமும் கெழக்கயும், மேக்கயும் சூரியனைப்பாத்தா அழகா இருக்கும். காலைல ஓடைக்குக் கொல்லைக்குப் போம்போது கெழக்கச் சூரியன் ரவுண்டா செக்கச் செவேர்னு எந்துருச்சு மேலாம மானத்துல வரும். மரங்களுக்கு எடயில எட்டிப் பாத்துக்கிட்டு தகதகன்னு ஒளி அடுச்சுக்கிட்டு வரும். அதுமாறித்தான் மசங்குற நேரத்துலயும், மலைகளுக்கு எடயில போய் சூரியன் உளுகும்போது வயக்காடு பூரா மஞ்சேர்னு மினுங்கும். வயக்காட்டுச்செம தென்றல் காத்து சிலு சிலுன்னு அடிக்கும். பயிர்கபூரா மினுங்கிக்கிட்டு காத்துல ஆடுறது மனசுக்குச் சந்தோசமா இருக்கும். மேற்காம திரும்பி ஒளியடிக்குறதப்பாத்தா கடவுளே காச்சி அளிக்குற மாறி இருக்கும், அந்நியாரந்தான் கொக்கு, காக்கா, குருவிகள்ளாம் கெழக்காம அதது கூட்டுகளுக்குப் பறந்து வருங்க.

ஊருக்கு மேற்க மண்டவம்னு ஒரு எடமிருக்கு. அங்கன பாழடைஞ்ச மண்டவமொன்னு இருக்கு. அங்னதான் முனியப்பசாமி கோயில் இருக்கு. எங்க தெருவுல இருந்து இது ரொம்ப தூரந்தான். வயுத்துப் பொழப்புக்காக அஞ்சாறுமைல் தொலைவுல இருக்குற இந்த மண்டவக் காட்டுக்கெல்லாம் சனங்க வேலவெட்டிக்குப் போகுங்க. அங்ன இருக்குற முனியப்பசாமிக்

கோயில்ல இந்துக்க வருசத்துக்கொருதடவ பொங்கவச்சு காணிக்க போடுங்க. எங்க ஊர்ல வடக்குத் தெருவுல இருக்குற பொந்தங்குற ஆளு அங்கபோய் காணிக்கத்துட்டக் களவாண்டுட்டு, கெட்டிக் கெடந்த மணியையும் அவுத்துட்டு வந்துட்டாராம். களவுன்னா செமகளவு செய்வாராம். போயும் போயும் முனியாண்டி கோயில்ல போயா களவாங்குற துன்னு பேசிக்கிட்டாக.

அன்னையலர்ந்து ராத்திரியாச்சுன்னா முனியாண்டிசாமி கையுல தீப்பந்தத்தோட எங்கதெரு நாராசத்து வழியா கோவத்தோட நடந்துச்சாம். ஏங்கோயில் மணியக்கெட்டு, ஏங்காணிக்கத் துட்டப் போடு. இல்லன்னா இந்த தெருவப் பூராஞ் சுட்டுப் பொசுக்கிடு வேன்னே சொல்லிக்கிட்டு அலஞ்சிருக்கு. இப்டி நெறய்யப்பேரு கண்ணுல தெம்பட்டுருக்கு. ஒருத்தருக்கும் ஒன்னும் வெளங்கல யாம். பெறகு விசாரிச்சுப் பாத்தா பொந்தனோட அய்யா சவரிநாய கம் தாத்தா நடந்த வெசயத்த ஊர்ல சொல்லி இருக்காரு. எல்லாஞ் சேர்ந்து பொந்தனப்போயி திரும்ப மணியக் கெட்டிட்டு, துட்டப் போட்டு வரச்சொன்னாகளாம். அவனும் சிலுவக்குறி போட்ட மேனிக்கா மண்டவம் போயி மணியக் கெட்டிட்டு, எடுத்த துட்டப் போட்டுட்டு வந்துட்டானாம். அதுக்குப் பெறகு அந்தப் பேய்க் கண்டாரளி எங்க தெருப்பக்கமே வரலையாம்.

இந்த மாமா பொந்தனப்பத்தி இன்னும் நெறய்யா கதகதயா சொல்வாக. சம்சாரிக தோப்பு தொரவுல எலுமிச்சங்கா, மாங்கா, தேங்கான்னு களவாண்டு விக்கிறதுதான் இவருக்குப் பொழப்பு. அப்பிடி ஒருதடவ தென்னமரத்துல தேங்கா புடுங்க நடுச்சாமத்துல ஏறி இருக்காரு. இவரு கீழாம இருந்து மேலாம ஏறுனா, மேலாம இருந்து கரேர்னு ஒரு உருவம் கீழாம எறங்குச்சாம். சே, பேய்க கழுதயில இப்பிடி ஏமாத்துதுன்னு சொல்லி சரசரன்னு எறங்கி வேற தோப்புக்குப் போயிட்டாராம்.

இன்னொரு நாளு நல்லா ஒரு குட்டிச் சாக்கு நெறய்யா மாங்கா புடுங்கிக்கிட்டு வார நேரத்துல காவக்காரென் வந்துட்டா னாம். தப்பிக்க வேறவழி இல்லாம பக்கத்துல இருந்த கெணத்துக் குள்ள மூட்டையோட குதிச்சு மூட்டைய தண்ணிக்குள்ள அமுக் கிக்கிட்டே நேரத்தக் கடத்தி இருக்காரு. "வெயிலுக்குப் பயந்து வெந்நிப் பானைக்குள்ள உளுந்த கதையா" கெணத்துக்குள்ள ஒரு நல்ல பாம்பு படமெடுத்துக்கிட்டு இவரக் கொத்த வந்துருக்கு, உஸ் உஸ்னு அப்பிடிச் சத்தமாம். இருட்டா வேற இருந்துருக்கு. எப்பிடியோ பாம்புக்கும் ஆட்டங்காட்டிட்டு மூட்டையோட வீட்டுக்கு வந்துட்டாராம்.

ஒரு தடவ களவாங்கப்போன எடத்துல காலு கட்டவெரல்ல

பாத்து பாம்பு கடுக்சுருக்கு. பாம்புன்னா சாதாரணப் பாம்பில்ல. கருநாகமாம். வேறொருத்தர்னா அங்னய பயந்து கழுஞ்சு செத்துருப்பான். இவரு ஒடனே தீப்பெட்டியப் பத்தவச்சு கடுச்ச எடத்தச்சுட்டுட்டு அருவாளக் கொண்டு அந்த வெரலச் சீவி எறிஞ்சுட்டு, களவாண்டுட்டு வந்துருக்காரு. அம்புட்டு கில்லாடி ஆளு இவரு.

கம்மாவழி வர்ர அய்யங்காச்சிப் படையக் கூட இவரு பாத்து சமாளிச்சுருக்காரு. அய்யங்காச்சிப்படைன்னா பேய்க சிறுசும் பெருசுமா கூட்டமா தீப்பந்தங்களோட வருமாம். அது யாரு கண்ணுக்கும் அம்புடாதாம். அம்புட்டா ஆள உடாதாம். அதப்பாத்தாக் கூட காச்சல் வந்து மஞ்சப்பீயா பேண்டு செத்துருவா களாம். அதக்கூட செமாளிச்சிட்டாராம்.

நாய்க்கமார்ககிட்டதா நெலமே இருக்குது. ஒவ்வொரு நாய்க்கமாரு காடுகளும் பல மைல்களுக்கு பரவிக்கெடக்கும். ஒவ்வொரு திக்குக்கும் பேரு வச்சுருக்காக. ஒரு காட்டுக்குப்பேரு ஒலி விழிக்காடு. நம்ம பேசறது அப்பிடியே எதிரொலிக்குற அத்து வானக்காடாம். அதுக்குத்தான் அந்தப்பேரு. இன்னும் வேற மண்டவக்காடு, ஒத்தாலு காடு, சடையாலுக்காடு, தாமரக்கொளத்துக் காடு இப்பிடி பேர்க வச்சு கரெக்டா அங்கபோய் எங்க ஆளுக வேல செஞ்சுட்டு திரும்பி வருவாக. ஒரே ஆலமரம் நிக்குறதுனால அது ஒத்தாலு காடு; சடைசடையா உழுதுக புடுச்சுப்போயி ஆலமரம் நிக்குதுனால சடையாலுக்காடுன்னு பேரு.

ஊருக்குள்ள நொழயுற எடத்துல சின்ன பஸ் ஸ்டாண்டு இருக்கு. அதுதான் கடேசி பஸ் ஸ்டாண்டு. அதுக்குமேல பஸ் போகாது. எங்க ஒலகமே அத்தோட முடிஞ்சமாறித்தான். பக்கத்துல ஒரு ஓடபோகுது. மழபேஞ்சா அதுல தண்ணிவரும். இல்லன்னா அது நாத்தமெடுத்த பீக்காடுதான். எடது பக்கெத்துல ஓடப்பட் டின்னு ஒரு பத்து இருவது வீடுக இருக்கு. அங்ன பூரா பனையேறி நாடார்க இருக்காக. வலது பக்கம் தெருக் கூட்ற கொரவனுகளும், செருப்புத் தைக்கிற சக்கிலியனுகளும் இருக்காக. கொஞ்சந்தள்ளி, சட்டிபான செய்ற கொசவங்களும் இருக்காக. இவுகளுக்கு அடுத்துத்தான் பள்ளக்குடி. அதையொட்டி நாங்க பறக்குடி. ஊருக்கு கெழக்க கல்லற இருக்கு. இதயொட்டிதான் நாங்க இருக்கோம்.

மத்தபடி தேவமாரு, செட்டிமாரு, ஆசாரிக, நாடாருக வருசயா இருக்காக. இவுகளுக்கு அப்பால நாய்க்கமாருக தெரு. அங்க ஒரு ஒடையார் பட்டி இருக்கு. அதுல ஒடையார்க இருக்காகளாம். இதெப்படி மேச்சாதியா ஒரு பக்கம், கீச்சாதியா ஒரு பக்கம்னு பிரிச்சாகன்னு தெரியல. அவுக எங்க தெருப்பக்கம் வரவே

மாட்டாக. போஸ்டாபீஸ், பஞ்சாயத்துபோர்டு, பால் பண்ணை, பெரிய கடைக, கோயிலு பள்ளிக்கொடங்க, எல்லாமே அவுக தெருவுகள்ளதா இருக்குது. அவுக எதுக்கு எங்க தெருவுக்கு வரப்போறாக? மேச்சாதிக்காரகளுக்குன்னே ஒரு பெரிய பள்ளிக் கொடம் நாய்க்கமார் தெருவுல இருக்குது.

எங்க சாதிக்குன்னு தெக்குத்தெரு, நடுத்தெரு, கீழ்த்தெரு, ஓலத்தரப்பட்டித்தெருன்னு அஞ்சு தெருவுக. வருச வருசயா வீடுக. முக்காவாசி பன ஓலையில மேஞ்ச குடுசைக. எடயில செல ஓட்டு வீடுக. அங்கங்க காரவீடுகளும் இருக்குது. அதெல்லாம் சர்க்காரு உத்தியோகம் பாக்குறவுக வீடுக.

தெருக்கள்ள பிள்ளைக்காடுக ஆணும் பொண்ணுமா, அம்மணக்குண்டியா அலையுவாக. செல பெயல்க டவுசர் போட்டா லும் மறைக்க வேண்டியதை மறைக்காமத்தான் அது எறங்கிக் கெடக்கும். வகுறு பெருசா இருக்குறமாறி குண்டி இருக்காது. அதான் டவுசர் நிக்காது. பன்னண்டு மணி ஆனாபோதும், பிளேட்டுகளத் தூக்கிட்டு சத்துணவு வாங்கித் திங்க சாரை சாரையாக நண்டு நசுக்கெல்லாம் போகும். கோயில்ல பன்னண்டுக்கு மணி அடிப்பாக. அதான் கணக்கு.

சாயங்காலம் அஞ்சு மணிக்கு மேலத்தெருவுல ஒரே கூப்பாடாத்தான் இருக்கும். கூகொலோன்னு ஆணும் பொண்ணும் அலயும். இருக்கிற ஒரே அடிகுழாய்ல தண்ணி அடிக்க சண்டக்காடு நாறும். வகுற எக்கி எக்கி அடுச்சு ஒரு கொடம் ரொம்புரதுக்கு அம்புட்டு நேரம் ஆகும். அங்ன வார சண்டைகள கேட்டாச் சிரிப்பான சிரிப்பு வரும்.

ஒரு நாளு நானப்பூன்னு நடுத்தெரு பொம்பள பக்கெட்டை வருசயுல வச்சிட்டு என்னமோ சோலியாப் போனாளாம். போயிட்டு வர்ரதுக்குள்ள பக்கட்டெத் தூக்கி கடேசில வச்சுட்டா களாம். என்னமாடி ஏம்பைக்கட்டெத் தூக்கி எறிவீகன்னு பிடி பிடின்னு புடிச்சு பேசுனாளாம். பக்கெட்டை பைக்கெட்டுன்னு சொன்னதுக்கு அங்ன ஆப்புட்டவுக சிரிச்சிருக்காக. நானப்பூக்கு கோவம் வந்து என்ன பயமக்கா சிரிப்பாணி அள்ளுதுன்னு கெட்டவார்த்தை சொல்லி வஞ்சாளாம். எங்க தெருவுகள்ள இருக்குற பேர்களக் கேட்டா ரொம்ப அருவசமாத்தான் இருக்கும். கோயில்ல வைக்கிற பேரு ஒண்ணா இருக்கும். தெருக்காட்டுல கூட்புடுற பேரு வேறயா இருக்கும்.

ஒரு பிள்ள பேரு முன்கோவம். இன்னொருத்தி பேரு மத்தியான மசால. மத்தியானம் மசால அரச்சு கொழம்பு வச்சாளாம். அதுக்குத்தான். மத்தியானத்துகள்ள எங்க தெருவுகள்ள வழக்கமா

யாருஞ்சமயல் செய்யமாட்டாக. சோறாக்கி, கொழம்பு வைக்கிறது ரவைக்கு மட்டுந்தான். மத்த நேரமெல்லாங் கூழுதான். அதனால மத்தியானம் மசால அரச்சது அருவசமா இருந்துருக்கு. இன்னொரு பிள்ள நல்லா கறேர்னு பருத்துப்போயி இருந்தான்னு அவளுக்கு முருகஞ் சொனப் பன்னின்னு பேரு. முருகனோட சொனையில பன்னிக செழிப்பா இருக்குமாம். நல்லா தின்னுட்டு அலயுமாம். அதான். இன்னொருத்தி வெளிக்குப் போம்போதெல்லாம் கால் வழியா கழிஞ்சு வப்பாளாம். அதுக்கு அவா பேரு கழுஞ்சா. கெணத் துல நீச்சுப்பழகப்போன லெக்குல நீச்சுத் தெரியாம மெதந்த பிள்ளைக்குப் பட்டப்பேரு மெதந்தா. இன்னுமொருத்தி சின்னப் பிள்ளைல காக்காய வெரட்டிக்கிட்டு திருஞ்சாளாம். அதுக்கு அவா பேரு காக்கா. இப்பிடி அடுக்கிக்கிட்டே போகலாம். கொன்ன வாச்சி, மாறா, செவுடி, ஊம, கிறுக்கி, செவேரியா, கட்டெறும்பு, மனச்சி , ஊழமூக்கி , பச்சமூக்கி, ஊசிக்குண்டி இப்பிடி எம்புட்டோ பேரு.

பெயல்களுக்கும் பேருக்குக் கொறச்சல் இல்ல. அவனு களுக்கும் ஏகப்பட்ட பேர்க இருக்கு. பருப்புக்குண்டின்னு ஒருத்த னுக்கு பேரு. எதுக்குன்னு தெரியல. கல்குண்டான்னு இன்னொருத் தன் பேரு. எங்கய்யான்னு சொல்றதுக்கு என்றய்யான்னு சின்னதுல சொன்னவனுக்கு என்றய்யான்னே பேரு. கேப்பக்கூழுன்னு சொல்றதுக்கு டேப்ப டூழுன்னு சின்னதுல சொன்னவம் பேரு டேப்ப டூழு. இப்பிடி கருவாயன், நெழுச்சான், தொப்புளான், காமன், பெந்தன், வித்வி, நாடோடி, மூட, அரக்காதன் இப்பிடி அடுக்கிக்கிட்டே போகலாம்.

இந்த காமங்கிற பெய எங்க வீட்டுக்குப் பக்கந்தான். அவனோட நெசப்பேரு மரியலூர்தாம். எதுக்கு யாரு இப்பிடி ஒரு பேர வச்சாகளோ தெரியல. சின்னதுலருந்தே இந்தப் பேருதான். இப்ப அவனுக்கும் இருவது இருவத்தஞ்சு வயசு இருக்கும். இரண்டு வருசத்துக்கு முன்னாடி வரைக்கும் வேலவெட்டி எதுக்கும் போகாம தெருக்காட்டு வழியா சுத்திக்கிட்டு திருஞ்சான். யாராவது கடகண்ணிக்குப் போச்சொன்னா போவான். போஸ்டாபீசு போய் கடிதம் வாங்கவோ கடிதம் போஸ்ட் பண்ணவோ சொன்னாலும் போவான். அப்பிடிப் போயிட்டு வந்தா அஞ்சோ, பத்தோ பைசா குடுக்கனும். வாங்கித் தின்னுட்டு கூழக் கீழக் குடிச்சுப்போட்டு திருணைகள்ள செவனேன்னு மல்லாந்து கெடந்து சாயங்காலம் மாடுக பாலு பீச்சப் போந்தட்டிக்கும் ஒறங்குவான். செலபேரு அவன வெகுளிம்பாங்க. செலபேரு அரக்கிறுக்கும்பாக. ஒரு மாறி சோகபிடிச்ச பெயகெணக்கா இருந்தான்.

ஆனா இன்னைக்கு நெலம வேற. எங்கயோ வேலைக்குப் போறானாம். என்ன வேலைன்னுதான் தெரியமாட்டேங்கிது. ஆனா அந்த வேலைக்குன்னு ஒரு காக்கி யூனிபாரம் குடுத்திருக்காங்க. நாயித்து கெழமை கோயிலுக்கு அதத்தான் போட்டுட்டு வருவான். அந்த காக்கி பேண்டும், சட்டையும் பாத்துட்டு ஊர்ல சிரிக்காத ஆளு இல்ல. பெறகு கொஞ்சநாளு அதுவும் இல்லாம பழயபடி திருணைகள அடகாத்துட்டு கெடந்தான். பெறகு என்ன ஆச்சோ, நாலு ஆளப்போல கூலிவேலைக்குப்போக ஆரம்பிச்சான். இப்ப தொயந் தடியா வேலைக்குப் போறானாம். இந்த நாலஞ்சு மாசமா அவனுக்குக் கல்யாணம் வேணுமின்னு கேக்கானாம். ஒனக்குப் போயி யார்ரா பொண்ணு குடுப்பான்னு கேட்டா, எனக்கென்ன கொறச்சலு, ஏம்பொண்ணு குடுக்கமாட்டாகன்னு திலுப்பிக்கிட்டு கேக்கானாம். உள்ளூர்க்குள்ள தெருஞ்சவுக அவனுக்கு பொன்னு புள்ள தரமாட்டாக. அசலூர்க்காரி யாராச்சும் அம்புட்டாத்தான் உண்டுன்னு ஊர்ல பேசிக்கிறாக.

இவெங் கலியாணங் காச்சின்னு முடிச்சாலும் நல்லா சோறு தண்ணி காச்சிருவாம்னு கொஞ்சப்பேரு சொல்றாக. பொம்பள கெணக்கா நல்லா கஞ்சிதண்ணி காச்சுவானாம். ஆனா காச்சி வச்ச சோத்த அவனே தின்னுபோட்டு சட்டியையுங் கழுவி வச்சிட்டு போயிருவான்னும் சொல்றாக. அவனோட அம்மையே சொல்றா ளாம். இவென் ஒருத்தன் அரப்பிடி அரிசி கஞ்சி திம்பானாம். இப்படிப் பல தினுசுல சனங்க இருக்குது. ஒவ்வொருத்தனையும் பத்தி ஒரு பொஸ்தகமே எழுதலாம். ஊருக்கு மேற்கே ஒரு கிராமம் இருக்குது. அருச்சனாரம்னு பேரு. அங்கதா நல்ல தங்கா கோயிலு இருக்குது. ஊருக்குள்ள நல்லதங்கா ரொம்ப பெரபலமானது. பெரியவுககிட்ட கேட்டா ரொம்ப வெவரமா, ஆவலா அந்தக் கதையச் சொல்வாக.

அந்தக் காலத்துல அண்ணனும் தங்கச்சியுமா ரெண்டுபேரு அந்த ஊர்ல இருந்துருக்காக. தாய்தகப்பஞ் செத்துப்போகவே அண்ணங்காரந் தங்கச்சி நல்லதங்காள வளத்து ஆளாக்கி எங் குட்டோ மானாமருதப் பக்கம் கெட்டிக் குடுத்துருக்கான். தங்கச்சிய கெட்டிக் குடுத்தப் பெறகு அவனுங் கலியாணம் முடிச்சிக்கிட்டான். ஆனா, அவனுக்கு வாச்சவா ஒரு மூளி அலங்காரி. ஒருசாதி சனத்த அண்டவிடமாட்டா.

இப்பிடி இருக்கையுல, நல்ல தங்காள கெட்டிக் குடுத்த மானாமருதயில கடுமையான பஞ்சம் உண்டாகிருச்சு. நல்ல தங்காளும் வருசையா ஏழு பிள்ளைகள பெத்துப் போட்டாளாம். ஒவ்வொரு பிள்ள பெறந்த ஒடனே அண்ணங்காரனுக்குக் கடிதம்

போட்டுருக்கா. ஆனா எல்லாக் கடிதத்தையும் அண்ணிக்காரி மூளி அலங்காரி வாங்கி படிச்சுப்போட்டு தீக்குள்ள போட்டாளாம். இதுனால அண்ணங்காரனுக்குச் சங்கதி ஒன்னும் தெரியல. நல்ல தங்கா என்ன ஆனாளோ எப்படி இருக்காளோன்னு கவலப்பட்டுக் கிட்டே இருந்துருக்கான்.

மானாமருதயில பஞ்சம் வந்த பெறகு நல்லதங்கா தன்னோட கஸ்ட நெலவரத்தச் சொல்லி அண்ணனுக்குக் கடிதம் போட்டுருக்கா. எந்தச்சாமி செஞ்ச புண்ணியமோ அந்நியாரம்பாத்து அண்ணங்காரன் வீட்டுல இருந்து கடிதத்தைப் படிச்சுப்பாத்துட்டு பொம்பள கெணக்கா கேவிக் கேவி அழுதுருக்கான். இதுக்கு முன்னாடி போட்ட கடிதமெல்லாம் எங்கன்னு பொண்டாட்டியக் கேட்டதுக்கு என்னென்னமோ பொய்யப் புளுகச் சொல்லி நம்ப வச்சுப்போட்டா. ஒடனே அண்ணங்காரன் மானாமருதபோயி நல்லதங்காளையும், அவளோட ஏழுபிள்ளைகளையும் கூட்டிக் கிட்டு வந்தான். ஊர் நெருங்கயில நல்லதங்காளையும், பிள்ளை களையும் வீட்டுக்குப் போகச் சொல்லிட்டு சாமாஞ்சட்டு வாங்கி யாரம்னுட்டு போயிட்டான். நல்லதங்காளும் ஏழு புள்ளைகளும் வீட்டுக்கு வாரதப்பாத்த மூளி அலங்காரி, ஓடிப்போயி எல்லா கதவு களையும் பூட்டிக்கிட்டா. நல்ல தங்கா வீட்டுக்குவந்து தட்டித் தட்டிப்பாத்துட்டு, கடேசில நானு ஒரு தங்கைப்பத்தினின்னா இந்தக் கதவு ஒடனே தெறக்கனும்னு சொல்லி இருக்கா. ஒடனே கதவுக தெறந்துடுச்சு.

பிள்ளைகள கூப்புட்டு உள்ளபோயி ஒக்காந்திருக்கா. வேனாப்பறந்த வெயில்ல பசியோட வந்த பிள்ளைக வீட்ல இருந்தத எடுத்து ஆவலா தின்னுருக்குதுங்க. இதப்பாத்த மூளி அலங்காரிக்கு மூக்குக்கு மேல கோவம் வந்து பச்சப்பிள்ளைக தின்னுக்கிட்டுருந்ததைப் புடுங்கிக்கிட்டு வீட்டவிட்டுத் தொரத்தி உட்டுருக்கா. நல்லதங்கா எழு பிள்ளைகளையும் கூட்டிக்கிட்டு இனி எங்குட்டு போயி எப்பிடிப் பொழைக்கப் போறோம்னுட்டு, பக்கத்துல இருந்த கெணத்துக்குள்ள ஏழுபிள்ளைகளையும் தள்ளிட்டு தானும் உழுந்து செத்துப்போனாளாம். பிள்ளைகள கெணத்துக்குள்ளப் போடும்போது, கடேசிப்பெய தப்புச்சிக்கிட்டு ஓடுனானாம். அங்குனகுள்ள ஆடு மேச்சுக்கிட்டுருந்தவங்கிட்ட போயிருக்கான். நல்லதங்கா ஓடிப்போய் ஆட்டுக்காரங்கிட்ட இருந்து புள்ளையப் புடுங்கிட்டுவந்து கெணத்துக்குள்ளே போட்டுட்டு தானுங்குதிச்சிட்டாளாம்.

அண்ணங்காரன் சாமாஞ்சட்டு வாங்கிக்கிட்டு வீட்டுக்கு வந்தா பொண்டாட்டி மட்டுந்தான் இருந்திருக்கா. நல்லதங்காளை

யும் பிள்ளைகளையும் எங்கேன்னு கேட்டதுக்கு, அவுக வரவே இல்லன்னு வேசம் போட்டுருக்கா. ஒடனே வெளியே ஓடியாந்து தேடிப் பாத்துருக்கான். ஆட்டுக்காரன் பூராச் சங்கதியையும் சொல்லிட்டான். அண்ணங்காரனுக்கு வெசயம் வெளங்கிப்போச்சு. தாம் பொண்டாட்டி செஞ்ச கொடுமையிலதான் தங்கச்சி இப்பிடி செஞ்சுட்டான்னு தெரிஞ்சுக்கிட்டு மூளி அலங்காரியத் தூக்கிக் கொண்டுபோய் கொதிக்கிற காளவாசல்ல போட்டு அப்பிடியே நீத்திப்பிட்டானாம். நல்ல தங்காளையும் ஏழு பிள்ளைகளையும் செலயா செஞ்சி அவுக உழுந்து செத்த கெணத்துக்கிட்டேயே ஒரு கோயிலக் கெட்டி அந்த செலகள அங்க வச்சானாம். அந்த ஆட்டுக்காரனுக்கும் ஒரு செலசெஞ்சு வச்சுப்போட்டு அவனும் செத்துப்போனானாம். இது நெசமோ பொய்யோ தெரியல. ஆனா இன்னைக்கும் அந்தக் கெணறும், கோயிலும், செலைகளும் அங்னயே இருக்குதுக.

# இரண்டு

தீண்டாமைன்னு சொல்லிக்கிறத நானு மூனாங்கிளாஸ் படிக்கையில கேட்டதே இல்ல. ஆனா இப்பிடின்னா என்னன்னு பாத்து, ஒணந்து, அனுபவிச்சு, அவமானப்பட்டிருக்கேன்.

பள்ளிக்கொடத்துக்குப் போயிட்டு பழைய பை ஒன்ன மாட்டிக்கிட்டு வீட்டுக்கு வந்திட்டுருந்தேன். சாதாரணமா பள்ளிக்கொடத்துல இருந்து பத்து நிமிசத்துல வீட்டுக்கு வந்துரலாம். ஆனா, வழக்கமா கொறஞ்சது முப்பது நிமிசமாவது ஆகும், நான் வந்து சேர்ரதுக்கு.

தெருவுகள்ள, கடைகள்ள, செக்கடிபசாருல நடக்குற வெளாட்டு, களியாட்டம், வேடிக்கை வெநோதங்களப் பொறுத்து வீட்டுக்கு வாரதுக்கு அரமணியோ ஒருமணியோ ஆகும். மத்த எடத்துகள்ள ஒன்னுமில்லேன்னாக்கூட செக்கடி பசாருல ஏதாவது ஒன்னு கண்டிப்பா இருக்கும்.

கொரங்காட்டி வச்சுருக்கிற கொரங்கு, பாம்பாட்டி பெட்டிக் குள்ள வச்சு வெளாட்டு காட்டுற பாம்பு, மூனுநாளா கீழ எறங்காம விடிய விடிய சைக்கிள் அடிக்கும் ஆளு, அவன உற்சாகப்படுத்தி அவஞ்சட்டைகள்ள குத்துன ரூவாத்தாளு, பொட்டிராட்டுனம், கொடராட்டுனம், மாரியாத்தா கோயிலு, அங்க தொங்குற பெரிய மணி, கோயிலுக்கு முன்னாடி செய்யுற பொங்கலு, காந்தி செலக்கிட்ட வச்சுருக்குற கருவாட்டுக்கட, முட்டாய்க்கட, பணியாரக்கட இப்பிடி பலதரப்பட்ட கடைக, ஊதாக்கலர வயலட்டு கலரா மாத்திக்காட்டுற தெருவெளக்கு, பொட்டிக்குள்ள தேவாங்க அடச்சுவச்சுக்கிட்டு, பாசி, மணி, ஊசி, காதுகுடும்பி, ஊக்கு விக்கிற நரிக்கொறவங்க, இப்பிடி சொல்லிட்டே போகலாம். இம்புட்டும் எனிய மேல போவுடாம சுண்டி இழுத்து நிப்பாட்டிரும்.

ஒவ்வொரு டயத்துல கச்சிக்காரனுக மேடபோட்டு, மைக்செட் போட்டு, கத்துவாங்க. இதோட, தெருக்கூத்து, பொம்மலாட்டம், மந்திரமில்லை, மாயமில்லை வித்தைக இப்பிடியும் அங்னகுள்ள இருக்கும். இவைகள்ளாம் அப்பப்ப வரும், போகும். ஆனா கண்டிப்பா ஏதாச்சும் ஒன்னு இருந்துக் கிட்டேதான் இருக்கும்.

இவைக இல்லன்னாக்கூட, பசாருல இருக்கிற கௌப்புக் கடைக, அங்க ஓசரமா தூக்கித் தூக்கி காப்பி ஆத்துரது, அந்த கடைகளுக்கு முன்னாடி ஒக்காந்துக்கிட்டு, கண்ணுல கண்ணீர் வராம, எங்குட்டோ பாத்துக்கிட்டே ஈராங்காயை கடகடன்னு வெட்டுறது, அங்ன நிக்குற வாதாமரம், எப்பயாச்சும் அதுல இருந்து காத்துக்கு உளுற வாதாம் பழம் இப்பிடி இவைகள்ளாஞ் சேந்து எனிய வீட்டுப் போக உடாம காலக் கெட்டிப் போட்டுருங்க.

இன்னஞ் சீசனுக்குத் தக்கன மாம்பழம், வெள்ரிப்பழம், கரும்பு, சீனிக்கெழங்கு, பனங்கெழங்கு, பயறு, பதினி, நொங்கு, பனம்பழம், கௌாப்பழம், பெலாப்பழம் இப்பிடி இவைகளுங் கெடைக்கும். வேற பணியாரம், பாயசம், அல்வாகேசரி, சவ்வுமுட்டாய், ஆமவடை, பருப்புவடை, உளுந்தவடை, அவுச்ச புளியங் கொட்டை, குச்சி ஐஸ் இவைகளும் தெனமும் அங்ன விப்பாக.

இப்பிடி இது எல்லாத்தையும் பார்த்துக்கிட்டே பள்ளக் குடியத்தாண்டி எங்க தெரு - அதான் பறக்குடிக்குள்ள பையுங் கையுமா நொழஞ்சேன். தெரு மொனயில நாய்க்கமாரு களம்போட்டு கதிரடிச்சுக்கிட்டு இருந்தாக. நாய்க்கரு திருணையில சாக்குப் போட்டு ஒக்காந்து பாத்துக்கிட்டு இருந்தாரு. எங்காளுக வேல செஞ்சுகிட்டு இருந்தாக. பொனயல் மாடுக ரவுண்டு ரவுண்டா வைக்கலு மேல சுத்திக்கிட்டு இருந்துச்சு. வைக்கலத் திங்காம இருக்க மாடுகளுக்கு வாக்கூடு போட்டுருந்தாக. அங்னக்குள்ள செத்தநேரம் நின்னு வேடிக்கைபாத்துக்குட்டு இருந்தேன்.

அந்நியாரம் செக்கடிப் பக்கத்துல இருந்து எங்கதெருப் பெரியவரு ஒருத்தரு வந்தாரு. அவரு வந்த தோரணயப் பார்த்து எனக்குச் சிரிப்பு பொத்துக்கிட்டு வந்துச்சு. அவ்வளவு பெரிய ஆளு கையுல ஒரு பொட்டலத்துக்குள்ள வடையோ வாழக்கா பச்சியோ இருந்துருக்கும் போல, வெளியே சுத்தியிருந்த தாளெல்லாம் எண்ணெய்யா இருந்துச்சு. அவரு பொட்டலத்தைத் தொடாம, அதக்கெட்டியிருந்த சரடப்புடுச்சு தூக்கிட்டு வந்தாரு. இப்படி புடுச்சா பொட்டலம் அவுந்து வட கீழே உளுந்துருமேன்னு நெனச்சுக்கிட்டே நிக்கேன்.

வந்தவரு நேரா நாய்க்கருட்ட போயி முதுகக் கூனி வளச்சுக்கிட்டு, பொட்டலம் இருந்த கைய நொட்டாங் கையால தாங்கிப் பிடிச்சுக்கிட்டு, நாய்க்கர்க்கிட்ட பொட்டலத்தைக் குடுத்தாரு. நாய்க்கரு பொட்டலத்த அவுத்து உள்ள இருந்த ஆம வடய எடுத்துத் திங்காரு.

இதெல்லாம் பாத்துட்டு வீட்டுக்குப் போனேன். வீட்ல எங்கண்ண இருந்தாக. வடப் பொட்டலத்தைக் கையில் புடிக்காம,

கட்டியிருந்த சரடப் புடுச்சு தூக்கிட்டு வந்த விஷயத்தை வேடிக்கையா வெவரமா அண்ணங்கிட்ட சொன்னேன். அவ்வளவு பெரிய ஆளு அப்பிடி தூக்கிட்டு வெளாண்டு வர்ரார்னு சொல் லிட்டுச் சிரிச்சேன். ஆனா அண்ணனுக்குச் சிரிப்பே வல்ல. அண்ணன் சொன்னாக : அவரு வெளாட்டுக்குப் பொட்டலத்த அப்பிடித் தூக்கிட்டுப் போகலயாம். நாயக்கமாரு ஒசந்த சாதிங்கிறது னால, பறப்பெயலுக பொட்டலத்த தொடக்கூடாதாம். தொட்டா தீட்டாம். அதனால, சரடப் புடுச்சுத்தான் தூக்கிட்டு வரனுமாம்.

இதக் கேட்டப்பெறகு எனக்கும் சிரிப்பு வரல. ரொம்ப வெசனமா இருந்துச்சு. மொதல்ல வாழ எலபோட்டு, பெறகு பேப்பர் போட்டு சுத்திக் கட்டுனப் பெறகும் பறயன் தொட்டா அசிங்கமாம். எனக்கு வந்த ஆத்துரத்துல, வடயவே கையுட்டுத் தொட்டுப்போடனும் போல இருந்துச்சு. இவுகளுக்கு எதுக்கு நாம வட வாங்கியாந்து குடுக்கனும்னு நெனச்சேன். அம்புட்டு பெரிய ஆளு கடைக்குப் போய் வாங்கியாந்து இப்பிடிக் கூனிக் குறுகிப் போயி குடுக்க, இவரு ஒக்காந்து திங்கனுமாக்கும்னு கோவமா வந்துச்சு. அப்பிடி என்ன இவுக பெரிய இவுக? நாலு காசு வச்சுக்கிட் டாம்னா, அதுக்காக இப்பிடி மனுசத்தன்ம இல்லாமலா நடக்கனும்? பறச்சாதின்னா என்ன? அம்புட்டு அசிங்கமாவா போச்சி? நாங்களும் மனுசங்கதானே! நம்மாளுக இவனுகளுக்கு இப்பிடி எடுபிடி வேலைகள்ளாம் செய்யக்கூடாது. இவனுக காட்டுகள்ள வேல செஞ்சமா, சம்பளம் வாங்குனமா வந்தமான்னு இருக்கனும்.

என்னோட பாட்டிங்க ரெண்டுபேரும் இப்பிடித்தான் நாய்க்கமாருக்குச் சேவகம் பண்ணிட்டு இருந்தாங்க. அவங்களோட வயல் வரப்புல பாட்டி வேலைசெய்யும் போது, நேத்துப் பெறந்த சின்னப்பிள்ளைகூட அது நாய்க்கமாரு சாதிங்கறதுனாலே, பாட்டியப் பேருசொல்லி மரியாதை இல்லாம கூப்பிட்டு வேலை ஏவும். இந்தப் பாட்டியும், வேலை செய்ற மத்தவங்களும் அந்தப் பொடிப்பெயலக்கூட 'ஐயா ஐயா' ன்னு கூப்பிட்டுக்கிட்டு அவமிட்ட வேலைகள ஓடியாடி செய்றதப் பாத்தா பூழாப்பா இருக்கும். தாகத்துக்குத் தண்ணி குடிக்குறதுல கூட அசிங்கத்தனந்தான். நாய்க்கமாரு பொம்பளைக தண்ணிய நாலு அடிக்கு ஒசரப்புடுச் சிட்டு ஊத்த, பாட்டியும் மத்தவங்களும் கையை விரிச்சு வாய்கிட்ட வச்சு தண்ணி வாங்கி குடிப்பாங்க. எனக்கு ஒரு மாதிரி இருக்கும். இன்னொரு பாட்டியும் இப்படித்தான். பொழுது விடிஞ்சா நாய்க்கமாரு வீட்டுங்கள்ள போயி மாட்டுத்தொழுவம் பெருக்கி, சாணி சகதி அள்ளிப் போட்டுட்டு முந்துன நாள் மிஞ்சிப்போன பழைய சோறு, கொழம்பு வாங்கிட்டு வருவாங்க. அது கெடைக்

கிறது என்னவோ தேவாமிர்தமே கெடச்சமாறித்தான்.

ரொம்ப நாள் கழிச்சுத்தான் பாட்டி இப்படி நாய்க்கமாருக்கு வேண்டாத, அவுங்க தூரப்போடுற சாப்பாட்டை வாங்கிட்டு வர்ராங்கன்னு தெரிஞ்சுக்கிட்டேன். ஒரு நா நான் பாட்டிக்கூடப் போயிருந்தேன். அசிங்கமான வேலை அத்தனையும் பாத்துட்டு அப்புறமா பாட்டி பாத்திரத்தை சாக்கடைகிட்ட வைக்க, நாய்க்கரம்மா பழைய சோற எட்ட நின்னுட்டு பாட்டி பாத்திரத்துல ஊத்திட்டு போனது. அவுங்க பாத்திரம் பாட்டி பாத்திரத்தைத் தொட்றக் கூடாதாம். தீட்டாம். பெறகு ஒரு நேரம் பாட்டிகிட்ட இப்படியெல்லாம் செய்யக்கூடாது, அசிங்கமா இருக்குதுன்னு சொன்னேன். பாட்டி சொன்னாக ஃ நமக்குச் சோறு போடுற மகரா சனுக அவுக இல்லன்னா, எப்பிடி நம்ம பொழைக்க முடியும்? பரம் பரை பரம்பரையா அவுக மேச்சாதி, நம்ம கீச்சாதின்னு இருக்கு துல்ல. அதை மாத்த முடியுமா?

அண்ணன் வெளியூரு போய் படிச்சிட்டு லீவுக்கு வீட்டுக்கு வந்தாங்க. பக்கத்து ஊர்ல இருக்கிற லைப்ரேரிக்குப் போய் புஸ்தகம் எடுத்துட்டு வருவாங்க. அப்ப ஒரு நாள் அண்ணன் கம்மாக்கர மேலே போயிருக்குது. பின்னாடியே ஒரு நாய்க்கமாரு ஆளு போயிருக்குது. அண்ணன் புதுசா தெரியவும், யாருப்பா நீ? ஒம்பேரு என்னன்னு கேட்டிருக்காக. அண்ணனும் தம்பேரைச் சொல்லி யிருக்குது. ஒடனே, தம்பி ஒனக்கு எந்த தெருவுன்னு கேட்டிருக்காக. எந்தத் தெருவுன்னு கேட்டா எந்தச் சாதின்னு தெரிஞ்சுபோகுமாம். அதான் ஒடனே அண்ணனும் நான் சேரித்தெருப் பறையன்னு பட்னு மூஞ்சில அடிச்சாப்ல சொல்லிட்டு விடுவிடுன்னு போயிருச்சாம். நாய்க்கருக்கு ரொம்பக் கோவம். அவமானமாப் போச்சு. பக்கத்தில இருந்த இன்னொரு ஆள்கிட்ட, இது யாரு மகன்? இப்பிடி பேசிட்டு போறான்னு கேக்க, அவரும் இது நம்ம ராக்கம்மா பேரன்னு எங்க பாட்டிய வச்சு அறிமுகம் செஞ்சுட்டாரு.

மறுநாள் வேலைக்குப்போன பாட்டிகிட்ட, ஒம்பேரன் என்ன அவ்வளவு திமிரா பதில் சொல்லிட்டு போறான்னு கோவமா பேசியிருக்காரு. பாட்டியும் ஐயா படிச்சபுள்ள பாருங்க. அதா அப்படி சொல்லிட்டு போயிருக்கானு சொல்லி சமாளிச்சாங்களாம். அண்ணன் இதைக் கேட்டுட்டு சிரிச்சாங்க.

லைப்ரேரியிலகூட இப்படித்தானாம். சேரித்தெரு பறப் பயலுகன்னா ஒரு சைசாத்தான் பாப்பானுகளாம். அண்ணன் ஒரு தடவ கையெழுத்து போடும்போது பேருகூட தன்னோட படிப்பை யும் எம்.ஏ ன்னும் வேணுமின்னே எழுதினாங்களாம். ஒடனே அந்த லைப்ரேரியன் ஒரு ஸ்டூலைப் போட்டு ஒக்காருங்கன்னு சொன்னது

மில்லாம சார் சார்னு வேற கூப்பிட ஆரம்பிச்சிட்டானாம்.

இத அண்ணன் எங்கிட்ட சொல்லும்போது கூடவே இந்த பறச்சாதியில் நாம் பெறந்திட்டதினாலே நமக்குன்னு மதிப்போ, மரியாதையோ, கௌரவமோ இல்லாம போச்சு. ஆனா நாம நல்லா படிச்சு முன்னுக்கு வந்தோம்னா, இந்த அசிங்கமெல்லாம் இல்லன்னு ஆக்கிப்போடலாம். அதுனாலே ஒங்கிட்ட படிப்புக்காக ஒட்டிக்க பாப்பாக. அதனால கருத்தா, கவனமா படிச்சிரு. படிப் பிலே மொதல் பிள்ளன்னா, எல்லாருமே ஒங்கிட்ட படிப்புக்காக ஒட்டிக்க பாப்பாக. அதனால கஷ்டப்பட்டு படிச்சிக்கிடனும் அப்ப டீன்னு சொன்னாங்க. இது என் மனசிலே ரொம்ப ஆழமா பதிஞ்சு போச்சு. அதனால முழுமூச்சா வெறித்தனமா படிச்சேன். அண்ணன் சொன்னது போல, வகுப்புல முதல் ஆளா நின்னேன். அதனாலயே நான் பறைச்சினாக்கூட நிறையப்பேரு எங்கிட்ட சிநேகிதம் பண்ணிக்கிட்டாங்க.

நான் படிச்ச பள்ளிக்கொடத்துல கூட இப்பிடித்தான். எங்க சாதின்னா ஒரு அசிங்கமா பேசுவாக. என்ன தப்பு நடந்து போனாலும் ஒடனே சேரிப்பிள்ளைகதா செஞ்சிருக்கும்னு கூசாம சொல்லுவாக. பள்ளிக்கொடத்துல முக்கால்வாசிப் பிள்ளைக பள்ளக்குடி பறக்குடி பிள்ளைகதா. ஆனா பள்ளிக்கொடத்த நாடாக்க மாரு தெருக்கிட்டதான் இந்தச் சாமியாருங்க கட்டிவச்சிருக்காங்க. கோயிலும் அவுங்க தெருவுலதான். சாமியாரு இருக்கிறதும் அங்கதாம். அரிசனப் பிள்ளைகனா எல்லாத்துக்கும் அசிங்கமாத்தான் தெரியுது. ஆனா அவுகள வச்சு வேலை மட்டும் வாங்குவாக. பள்ளிக்கொடத்து வேல பூரா நாங்கதான் பாக்கனும்.

நான் ஏழாங்கிளாஸ் படிச்சுக்கிட்டு இருந்தேன். பள்ளிக்கொடம் முடிஞ்சு தெனமும் நானு எங்க தெருப் பெயல்ககூட வெளாண்டுத்தா வீட்டுக்குப்போவேன். எங்க சொந்தக்காரப் பெயககூடரெண்டு மூணுபேரு இருந்தாக. வேற பிள்ளைகளும், பெயங்களும் கூட செத்த நேரம் வெளாண்டுதான் போவாக.

ஒரு நாளு நானு மத்த பிள்ளைகளோட பள்ளிக்கொடத்துக்கு முன்னாடி இருந்த வேப்பமரத்து கெளைகள்ள காலைப் போட்டுக்கிட்டு தலைகீழா வவ்வாலு மாதிரி தொங்குற வெளாட்டு வெளாண்டேன். பெறகு செத்த நேரங்கழிச்சு அங்கன இருந்த தென்னமரத்துல ஓடி ஓடி ஏறி ஏறித் தென்னமரத்து உச்சியைத் தொட்டுட்டு வர்ர வெளாட்டு. தென்னமரம் தோதா சாஞ்சிட்டு இருந்துச்சு ரொம்ப தொலவுல நின்னுகிட்டு ஓடியாந்து அப்படியே தென்னமரத்துல ஏறுனா உச்சியில இருக்குற தேங்காயத்தொட்டுப்

போடலாம். இப்படி ஒருத்தர் மாத்தி ஒருத்தர் மரத்துல ஏறி தேங்காயத் தொட்டுப் போட்ட உற்சாகத்துல இருக்கைல, பெறகு போன எல்லாரும் தேங்காயப் புடுச்சு திருகிட்டு திருகிட்டு எறங்குனோம். நாம் போய் தேங்காயத் தொட்ட நேரம் தேங்கா பொட்டுனு கீழே உழுந்திருச்சு. அது வெளஞ்ச தேங்கா கூட இல்லை. இத்தினிக்கானு தண்ணிகூட இல்லாத பிஞ்சுக்கா. எல்லாப் பிள்ளைகளும் பயந்தடிச்சு ஓடிப்போனாக. எல்லாரும் நாந்தா தேங்காய புடுங்கிட்டேன்னு சொல்லிட்டாக. தேங்காய அங்குன குள்ளேயே போட்டுட்டு நேரா வீட்டுக்கு ஓடியாந்திட்டோம்.

மறுநாள் பள்ளிக்கொடத்து அசம்பிளியில கெட்மாஸ்டர் எம்பேரைச் சொல்லிக் கூப்பிட்டு பறச் சாதிப் புத்தியக் காட்டிட்டியே; நேத்து எல்லாரும் வீட்டுக்குப் போனபிறகு பள்ளிக்கொடத்து தென்னமரத்துல ஏறித் தேங்கா திருடிட்டு போயிருக்க! ஒன்ன ஸ்கூல்ல சேக்க முடியாது. வெளியே நில்லுன்னு சொன்னாரு. எல்லாப் பிள்ளைகளுக்கும் முன்னாடி எனக்கு கேவலமும் அவமானமும் வேதனையுமா இருந்துச்சு.

கெட்மாஸ்ட்டரு சாலியர். அப்பச் சாலியருக்கும் எங்க சாதிக்கும் கல்லறய வச்சு சண்டை நடந்துக்கிட்டு இருந்துச்சு. பிள்ளைக பூரா என்ன ஒரு மாதிரியா பாத்துட்டு கிளாஸ்குள்ள போயிட்டாங்க. எனக்கு வெக்கத்துல வேதனையில என்ன சொல்றதுன்னு தெரியல. எங்க தெருவு வாத்தியாரு ஒருத்தர் வந்து, சாமியார்கிட்ட போய் சொல்லி அவர்கிட்ட இருந்து ஒரு கடிதம் எழுதி வாங்கியாந்து கெட்மாஸ்டர்கிட்ட குடுன்னு சொன்னாரு. நான் சாமியார்கிட்ட போய் நடந்த வெவரம் பூராஞ்சொல்லி என்ன பள்ளிக்கொடத்துல சேக்கனும்னு கேட்டேன். ஒடனே சாமியாரும் சேரிப்புள்ளதானே; செஞ்சுருப்ப செஞ்சுருப்பன்னு சொன்னாரு. எனக்கு அழுகை அழுகையா வந்துச்சு. அழுதேன். ரொம்ப நேரங்கழிச்சு சாமியார் என்னப் பள்ளிக்கொடத்துல சேக்கலாம்னு எழுதிக்குடுத்தாரு. நான் அதக் கொண்டுபோய் கெட்மாஸ்டர்கிட்டே குடுத்தப்ப வாய்க்கு வந்தபடியெல்லாம் வஞ்சப் பெறகு என்ன கிளாஸ்கு போகச் சொன்னாரு, கிளாஸ்குள்ள போம்போது பிள்ளைக பூரா என்னப் பாத்தது கண்டு கூனி குறுகிப்போய் பெஞ்சுல ஒக்காந்து அழுதுட்டு இருந்தேன்.

ஊர்ல எட்டாங்கிளாஸ்வரை படிச்சிட்டு பக்கத்து ஊர்ல ஹைஸ்கூல் படிப்புக்குப் போய் சேந்தேன். அங்க இருந்த பள்ளிக்கொடத்தையும் பிள்ளைகளையும் அவுக துணிமணிகளையும் பாத்து ரொம்ப அசந்து போயிட்டேன். ரொம்ப வெக்கமாகவும் பயமாகவும் இருந்துச்சு. அத்தன பெரிய பள்ளிக்கொடத்துல மெத்த

மேல இருக்குற கிளாஸ்கு ஏறிப்போறதே நல்லா இருந்துச்சு. சீக்கிரத்லேயே பழகிக்கிட்டேன். படிப்பையும் ரொம்ப ஆர்வமா படிக்கத் தொடங்கிட்டேன். ஆஸ்டல்ல இருந்த என் வயசுப் பிள்ளைக நல்ல துணிமணி, நக, நட்டு, ரெஸ்ட் வாட்ச் இப்படி போட்டுக்கிட்டு இருந்தாக. அவுக ஒசந்த சாதியா இருக்கும்னு நெனச்சுக்கிட்டேன்.

ஆஸ்டல்ல இருந்த வர்டன் சிஸ்டருக்கு கீழ்ச்சாதி பிள்ளைக, ஏழைப் பிள்ளைகன்னா ஆகாது. வெவரமில்லாம கண்டதுக்கும் புடுச்சு வையும். கொஞ்சம் ஒடம்பு தடியாச்சுன்னா கூட வையும். இவள்களுக்கு வீட்ல ஒன்னுங் கெடைக்காது. இங்க வந்து தின்னுட்டு தடிக்காளுகன்னு எல்லார் முன்னாலயும் சொல்லி வையும். லீவுக்கு வீட்டுக்குப் போயிட்டு வந்த ஒடனே, இந்தச் சேரிப்பிள்ளைகள பாருங்க இங்க இருக்கையிலே நல்லா தின்னுபோட்டு உருளக்கெழங்கு மாதிரி இருப்பாளுக. வீட்டுக்குப் போயிட்டு வந்து பாரு வத்தல் கணக்கா வந்திருக்காளுகன்னு சொல்லும். ரொம்ப கஸ்டமா இருக்கும். மத்தவக மாதிரித்தான் நாங்களும் சாப்பாட்டுப் பணம், அந்தப் பணம், இந்தப்பணமுன்னு கட்டுனோம். இருந்தாலும் இப்படி ஒரு பேச்சு.

லீவுக்கு வீட்டுக்குப் போகும்போது பஸ்ல ஏம்பக்கத்தில நாய்க்கமாரு பொம்பளைக ஒக்காந்திருந்தா, ஒடனே எங்கிட்ட எந்த ஊரு போற, எந்தத்தெருவுன்னு கேக்கும். சேரித்தெருன்னு சொன்ன துமே எந்திரிச்சு வேற சீட்டுக்குப் போயிருவாக. அல்லது என்ன வேற சீட்டுக்குப் போச் சொல்லுவாக. நானா போவேன்! நானு அழுத்தமா ஒக்காந்துக்கிடுவேன். அதுக எந்திரிச்சு நின்னுக்கிட்டே கூட வருமே தவிர ஏம்பக்கத்துலயோ எங்க தெரு பொம்பளைக பக்கத்துலயோ ஒக்காராதுக. தீட்டுப்பட்டுருமாம்! இப்பிடி பல தடவ நடந்திருக்கு. வீட்ல வந்து எங்கம்மாட்ட சொன்னா நீ வேற சாதி ன்னு சொல்லு. கண்டுக்கமாட்டாகன்னு சொன்னாங்க. ஆமா, இவுகளுக்காக நாம எதுக்கு வேறசாதின்னு பொய் சொல்லனும்னு கோவமா சொல்லிக்கிட்டாலும் மனசுக்குள்ளே கொஞ்ச நஞ்ச வலி யில்ல.

கிளாஸ்ல படிப்பு வெசயத்துல நெறய பிள்ளைக ரொம்ப மந்தமாத்தா இருந்தாக. நானு நல்லா படிச்சு மொதல் ரேங்க் எடுத்தேன். அத வச்சுக்கிட்டு அத்தன பிள்ளைக்காடும் எங்கிட்ட நல்லா பேசிக்கிட்டாக. அண்ணன் வீட்டுல இருக்கும்போது சொன்னது அப்பப்ப நெனவுக்கு வந்து போகும். எனக்கு பாடஞ் சொல்லிக்குடுத்த டீச்சர்களும், சிஸ்டர்களும் என்ன அடிக்கடி பொகழ்ந்தாங்க. எங்கிட்ட பிரியமா நடந்துகிட்டாக. எனக்கு

ரொம்ப உற்சாகமா போச்சு. எதுவுந் தெரியாத பிள்ளைகளுக்கு என்ன பாடஞ் சொல்லிக்குடுக்கச் சொன்னாக. நாஞ் சொல்லிக்குடுத்த பிள்ளைகளும் நல்ல மார்க் வாங்குச்சுக. எனக்கு ஏகப்பட்ட சந்தோசம். அப்பப்ப பி.டி.டீச்சரும், எங்க கிளாஸ் டீச்சரும் என்னத்துக்கோ அசெம்பிளியில, கிளாஸ்ல வந்து, அரிசன பிள்ளைகல்லாம் நில்லுங்கன்னு சொல்லுவாக. நிப்போம். எங்க பேர எழுதிகிட்டு ஒக்காரச் சொல்லுவாக. இது ரொம்ப கஷ்டமா இருக்கும். கிட்டத்தட்ட ரெண்டாயிரம் பிள்ளைகளுக்கு முன்னால, தலய தொங்கப் போட்டுக்கிட்டு என்னமோ தப்பு தண்டா செஞ்சமாதிரி நிக்கணும். கேவலமாத்தா இருக்கும்.

எஸ்.எஸ்.எல்.சி. கவர்மென்ட் பரிச்சையில் அந்த வட்டாரத்துக்கே அரிசனப் பிள்ளைகள்ல மொத ஆளு நாந்தேன்னு பிரைஸ் குடுத்தாக. பள்ளிக்கொடத்து அசெம்பிளியில வச்சு எம்பேரச் சொல்லிக் கைதட்டுனாக. நானும் எங்க அம்மாவும் சந்தோசமா நின்னுக்கிட்டு இருந்தோம். அன்னைக்கு அரிசனப் பிள்ளைகள்ள மொத ஆளா வந்தம்னு சொன்னப்ப எனக்கு நான் அரிசன சாதின்னு சங்கட்டமா இல்ல. சந்தோசமாத்தான் இருந்துச்சு. பள்ளிக்கொடத்து பிள்ளைக மத்திலயும் நான் நல்ல மார்க் எடுத்திருக்கேன்னு எல்லாருஞ் சொல்லி என்ன வாழ்த்திக்கிட்டாக. ஏன் அரிசனப் பிள்ளையா இருந்தா படிக்க முடியாதா என்ன... மத்தவக மாதிரி நாங்களும் படிக்க முடியும், முன்னுக்கு வர முடியும்னு ஒரு வீராப்பு எனக்குள்ள வந்துச்சு.

இப்பிடி இங்க படிப்பை முடிச்சுப்புட்டு தொல தூரத்துல இருந்த ஒரு ஊருக்கு காலேஜ் படிப்பு படிக்கப் போனேன். இம்புட்டு தூரத்துல, இவ்வளவு பெரிய காலேஜ்ல, இவ்வளவு பிள்ளைகளுக்கெடயிலே, சாதி கீதி ஒன்னும் இருக்காதுன்னு நெனச்சுக்கிட்டு இருந்தேன். ஆனா அங்ககூட சாதி வித்தியாசம் பார்க்கத்தான் செஞ்சாக. திடீர்னு ஒருநாள் கிளாஸ்ல ஒரு லெக்சரர் அரிஜன பிள்ளைக எல்லாம் நில்லுங்க, கவர்மென்ட் பிற்படுத்தப் பட்டோருக்குச் சாயந்தர நேரம் டியூசன் ஏற்பாடு பண்ணி இருக்குன்னு சொன்னது. ரெண்டே பேரு, நானும் இன்னொரு பிள்ளையும் நின்னோம். மத்த பிள்ளைகளுக்கெடயே சலசலப்பு, ஏளனச் சிரிப்பு. எனக்குன்னா கோவம் அப்படி வந்துச்சு. ஒடனே அந்த மிஸ்கிட்ட எனக்கு அந்த டியூசனும் வேண்டாம் ஒன்னும் வேண்டாம்னு சொல்லிட்டு ஒக்காந்தேன். எங்க போனாலும் என்ன படிச்சாலும், இந்த சாதி நம்பள லேசா உடாது போலருக்கு.

இன்னொரு தடவ, என்னோட தம்பி தங்கச்சி புதுநன்மை வாங்குனாங்கன்னு வீட்டுக்குப் போக உத்தரவு கேட்டேன். அது

ஒரு சனி, ஞாயிறு லீவுநாளுகதான். இருந்தாலும் என்னமோ அந்த பிரின்ஸிபாலும், வார்டனும் சேந்துக்கிட்டு என்ன உடமாட்டேன்னு அடம்பண்ணுனாக. எனக்கு ரொம்ப வேக்காடாப் போச்சு. எங்கண்ணு முன்னாலேயே வேற பணக்காரப் பிள்ளைகள வீட்டுக்கு அனுப்புனாக. இதப்பாத்த எனக்கு ரொம்ப வெறியாகிப் போக, நேருக்கு நேராவே அவுகளமட்டும் உடுறீகளே, எதுக்கு என்ன உடமாட்டீங்கீகன்னு கேட்டேன். அதுக்கு அவுக சொன்னபதில் 'ஒங்க சாதியிலே என்னத்த பெரிசா புதுநன்மை வாங்குறதெல்லாம் கொண்டாடப் போறாங்க'. இதுக்கொல்லாம் அனுப்ப முடியாதுன்னு சொல்லித் திமிரா பேசுச்சுக. இவள்க இவ்வளவு சொன்னமட்டுக்கும் போயே தீரனும்னு எம் மனசுக்குள்ள ஒரு வெறித்தனம். அதுனால பிடிவாதமா போவேன்னு சொல்லி ஒத்தக்கால்ல நின்னேன். சாதிக்கொரு சட்டமில்லை, எல்லாருக்கும் ஒரே மாதிரிதான் சட்டம் போடனும்னு பேசி, கடைசில வீட்டுக்குப் போனேன்.

இப்பிடி அங்க முடிச்சுட்டு பி.எட் பண்ணனும்னு இன்னொரு காலேஜ்ல சேர்ந்தேன். அங்கயும் அதே கதிதான். ஆனாக்கூட படிப்பு, தெறமை இதுகள்னால, சாதியாவது மயிராவதுன்னு துணிஞ்சு அடிச்சு பேசிக்கிட்டிருந்தேன். எதுக்குனாலும் தலநிமிர்ந்து நின்னேன். எடுத்த காரியமெல்லா நல்ல வெற்றியோட செஞ்சு முடிச்சேன். அதனால டீச்சர்க, பிள்ளைக எல்லாத்துக்குமே எம்மேலே ஒரு பிரியந்தான்; ஒரு மதிப்புத்தான். இப்பிடி ஒவ்வொரு எடத்துலயும் படிப்பு ஒண்ணவச்சே, இப்படி சாதிப்பேச்சு பேசித் திரிஞ்ச இதுககிட்டு சமாளிச்சுட்டு வந்தேன். படிப்ப முடிச்சிட்டு வேலைக்குப்போய் சேர்ந்தேன். அங்க ஒரு கன்னியாஸ்திரி 'நீங்க நாடாரான்னு' கேட்டுச்சு. இல்ல நாங்க பறையர்னு சொன்னேன். அது மூஞ்சி போன போக்கப் பாத்தா இன்னைக்குக்கூட சிரிப்பா வருது. அங்க இருந்த கன்னியாஸ்திரிகள்ள முக்காவாசிப் பேரு தெலுங்குக்காரிகதான். அதனால எங்களப்போல தலித்களக்கண்டா அதுகளுக்குப் புடிக்கிறதில்ல. பெறகென்ன, அங்க வேலசெஞ்ச அஞ்சு வருசமும் போராட்டந்தான். அப்ப ரொம்ப துணிச்சலா இருந்தேன். ஏங்கிளாஸ் பிள்ளைக, ஸ்கூல் பிள்ளைகளுக்கு என்னப்புடிக்கும். அங்க ஏகப்பட்ட பிள்ளைக தலித் பிள்ளைகதான். ரொம்ப சந்தோசமா இந்த கன்னியாஸ்திரிகளோட சண்ட போட்டுக்கிட்டு அந்த பிள்ளைகளுக்குச் சொல்லிக் குடுத்திட்டு இருந்தேன். அப்படி எதுத்துக்கிட்டு நின்னு தெறமையா பாடஞ் சொல்லிக்குடுத்துட்டு இருந்தது நல்லாத்தான் இருந்துச்சு.

அப்பபடியே இருந்தாலும் இருந்திருக்கலாம். ஆனா

எங்கிட்டுகெடந்தோ ஒரு ஆச வந்துச்சு. இப்படி இந்த கன்னியாஸ் திரிக சேந்துகிட்டு தலித் பிள்ளைகள, டீச்சர்கள இந்தப்பாடு படுத்து துகளே, நம்ம ஒரு கன்னியாஸ்திரி ஆகி, இந்த மாதிரி கேவலப்பட்டு கெட்டுப்பட்டு கெடக்கிற சனங்களுக்கு ஏன் உதவி செய்யக்கூடா துன்னு மனசுல பட்டுச்சு. எம்புட்டுதான் ஒதுக்குனாலும் பொழுதி னிக்கும் இப்பிடியே நெனப்பு; அதுனால பாத்துக்கிட்டு இருந்த வேலையும் வேண்டாம்னு எழுதிக் குடுத்திட்டு ஒரு சபையிலே போய் சேந்தேன்.

எங்க வீட்லயுஞ்சரி, வெளில தெரிஞ்சவுகளுஞ்சரி இப்பிடி இருந்த வேலய உட்டுட்டுப் போகாத, கன்னியாஸ்திரியா இருந்து செய்யறதவிட வெளியிலேயே நெறய செய்யலாம்னாக. மடத்துக்குள்ள சாதிவித்தியாசம் ரொம்ப பாப்பாகன்னு சொன்னாக. நாங்கேட்டாத் தான. எல்லாத்தையும் மீறி ஒரு மடத்துக்குள்ளே போயிட்டேன். போறதுக்கு முன்னாடியே, அந்த சபையை உண்டாக்கிய அந்த அம்மா ஏழை எளிய சனங்களுக்காகவே அத உண்டாக்கிட்டு, அவுகளுக்காகவே வாழந்துட்டு செத்துப்போனா கன்னு புஸ்தகத்துல படிச்சிட்டு, இந்த மாதிரி சபைக்குள்ளதான் போயி, அவுகள மாதிரி ஏழை எளிய சனங்களுக்காக வாழனும்னு நெனச்சுக்கிட்டு, உள்ளே போயிட்டேன். உள்ள போனா, ஒரு பட்டிக்காட்ல இருந்து பெரிய பட்ணத்துக்குள்ள நொழஞ்சமாரித் தான். எனக்குச் சம்பந்தமில்லாத எடத்துக்கு வந்துட்டோம்னுதான் மொத நெனப்பு வந்துச்சு. சரி, இருந்து பாப்பமேன்னு நெனச்சுக் கிட்டு இருந்தேன். ரொம்ப சங்கடமா இருந்துச்சு. பெறகு என்னயே சமாதானப்படுத்திக்கிட்டு இருந்தேன்.

ஒரு நாளு, எங்களுக்கு டிரெயினிங் குடுக்கிற ஒரு சிஸ்டரு என்னோட சர்டிபிகேட்லயும் , ஞானஸ்நான சர்டிபிகேட்லயும் பெறந்த தேதி ஏன் மாறிப்போட்டுருக்குன்னு இங்கிலீஸ்ல கேட்டுச்சு. இந்த மாதிரி எங்க கிராமத்துல தெரியாத்தனமா பள்ளிக் கொடத்துல ஏதோ ஒரு பெறந்த தேதிப் போட்டுட்டாங்கன்னு சொன்னேன். அது நம்பல. நம்பாக் காட்டியும் போகுது. சும்மா கெடக்கலாமில்ல. பள்ளிக்கொடத்துல அட்மிசன் வாங்கனும்னு நீங்க தமிழ்காரங்க இப்பிடி ஏமாத்தி தேதி போட்டுகிட்டீகன்னு கத்துச்சு. இம்புட்டு நாளா சாதியத்தான் மட்டமாச் சொல்லி நம்பளத் தல நிமிரவுடாம செஞ்சாக. இப்ப என்ன தமிழ்காரககூட இந்தச் சபையில் பறச்சாதி மாறித்தானோன்னு தோணுச்சு.

சரி இந்தம்மாவுக்கு நம்ம ஊர்ச் சங்கதி தெரியாதுல்ல. அதான் இப்படி வள்ளுன்னு உளுகுதுன்னு நெனச்சேன். பெறகு வெளக்கமா, எங்க ஊர்ப்பள்ளிக்கொடத்துல, இப்பிடி அட்மிசன்

அது இதுன்னு கஷ்டமில்ல. எங்கள, வீட்டுக்கு வந்து டீச்சர்க பள்ளிக்கொடத்துக்கு புடுச்சிக்கிட்டு போவாக. அதுனால இப்படி தேதி கீதிய மாத்தி பள்ளிக்கொடஞ் சேர அவசியமில்லன்னு ஆர அமர வெளக்கினேன். அதுக்குப் பெறகும் அது நான் பொய் சொல்றேன்னு சொல்லுச்சு. சரிதான் இனி இவா கூட நமக்கென்ன பேச்சுன்னு வந்துட்டேன்.

பெறகுதான் போகப்போகப் புரிஞ்சது, அந்த சபையில தமிழ்காரங்க தாழ்ந்த சாதி மாதிரின்னு. அப்ப பாத்துக்கங்க ஏநெலமய. நானு தமிழ்காரி. தமிழ்காரியிலேயும் பறச்சாதி வேறு. இருந்தாலும் தொடர்ந்து இருந்தேன். சிஸ்டர் ஆகுறதுக்குன்னு எங்கூட ட்ரெயினிங் படிச்ச பிள்ளைகளுக்கு ஒவ்வொருத்தருக்கும் என்ன சாதின்னு தெரிஞ்சுக்கனும்னு கொள்ள ஆச. அதுகளுக் குள்ளயே சாதியப்பத்திப் பேசுவாளுக. ஒரு நா ஒரு பிள்ளை வந்து ஏங்கிட்ட நான் என்ன சாதின்னு கேட்டுச்சு. நான் எஞ்சாதியைச் சொன்னா நம்ப மாட்டேங்குது. அதுக்கு மேலே என்ன செய்யறது. சரிதான் போ. நம்புன்னா நம்பு நம்பலன்னா நான் என்ன செய்யட்டும்னு உட்டுட்டேன்.

டிரெயினிங்கெல்லாம் முடுச்சு சிஸ்டரா ஆறதுக்குக் கொஞ்ச நாள் இருந்துச்சு. அங்க இருந்த சிஸ்டரு ஒரு கிளாஸ்ல, சில சபைகள்ள அரிசனப் பிள்ளைகள சிஸ்டராச் சோர்த்துக்கமாட்டாக, அவுகளுக்குத் தனிச்சபைகூட எங்கயோ இருக்குன்னா. எனக்குத் தூக்கிவாரிப் பேட்டுச்சு. என்னடா இது கடேசி நேரத்துல வந்து இப்படி சொல்லுதுன்னு மனசுக்குள்ள வெசனமாப் போச்சு. சரி எதுக்குங் கேட்டுக்குவோம்னு அவுககிட்ட போயி இந்தமாதிரி நானு ஒரு அரிசனப் பிள்ளை, ஒங்க சபையில அரிசனப்பிள்ளைகள சேத்துக்குவீகளான்னு கேட்டேன். அவுக ஒடனே, வேற எந்த சபையும் ஒன்ன சிஸ்டரா கூப்பிட்டாகளான்னு கேட்டாக. ஆமா நானு இதுக்கு முன்னாடி ஒரு மடத்து பள்ளிக்கொடத்துல வேல பாத்துக்கிட்டு இருக்கையில, அவுக அந்த சபையில சேரச் சொன்னாகன்னு சொன்னேன். அப்ப அவுக கேட்டுருக்காகள்ள. அதனால ஒன்னுமில்லை. நீ இங்க இருக்கலாம்னு சொன்னாங்க. எனக்கு அப்பிடியே அந்த எடத்துலயே மறஞ்சு இல்லாமப் போயிட மாட்டோமான்னு இருந்துச்சு. இந்த சாதி இல்லாத எடமே இல்லையான்னு பொலம்பிட்டு கெடந்தேன். அந்தா இந்தான்னு சிஸ்ட்ராகிட்டு இன்னொரு மடத்துக்கு வந்து சேர்ந்தேன்.

அந்த மடத்தையும், பள்ளிக்கொடத்தையும் பாத்ததுமே எனக்குப் பகீர்னு போச்சு. இந்ததுக்குள்ள எப்படித்தான் காலத்த ஒட்றதுன்னு மலப்பா இருந்துச்சு. மடத்துக்குள்ளயும் சாதிபிரிவன

இல்லாம இல்ல. எடுத்த எடுப்புலேயே அங்கிருந்த நெலவரத்தப் புரிஞ்சுகிட்டேன்.

பெரிய பெரிய பணக்கார வீட்டுப் புள்ளைக படிக்கிற அந்தப்பள்ளிக்கொடத்ல, பள்ளிக்கொடத்தைக் கூட்டிக் கழுவிச் சுத்தம் பண்ண, கக்கூஸ் கழுவ இந்த மாதிரி வேலைகளப் பூரா எங்க சாதி ஆளுகதா பாத்துக்கிட்டு இருந்தாக. மடத்துக்குள்ளயும் அப்பப்ப கீச்சாதி சனங்களப் பத்திக் கேவலமா பேசிக்கிட்டாக. கீச்சாதி சனங்கள மனுஷங்களா நெனச்சுக்கூடப் பேசமாட்டாக. நான் ஒரு கீச்சாதி சிஸ்டர்தான்னு அவுகளுக்குத் தெரியாது. எனக்குள்ள ஆங்காரம் அப்படி வரும். ஆனா அவுக பேசுன பேச்சைக் கேட்டபெறகு, நானும் ஒரு கீச்சாதிகாரிதான்னு பட்டுன்னு சொல்ல தயிரியம் இல்லாம போச்சு. வாய்வரைக்கும் வந்ததைக்கூட முழுங்கிகிட்டு சொல்லாம எனக்குள்ளயே அவஸ்தைப்பட்டுக் கிட்டுக் கெடந்திருக்கேன்.

அவுக ஐடியாப்படி, கீச்சாதின்னா ரொம்ப மோசமானவுக . ஒழுக்கமோ, சுத்தமோ, பண்பாடோ எதுவுமே இல்லாதவுக. அவுகள மாத்தவே முடியாது. இவுகளுக்கு ஒதவி செய்றது நல்ல பாம்புகளுக்குச் செய்றமாதிரி. இப்படி என்னென்னவோ வாய்க்கு வர்ரதெல்லாம் பேசுவாக. நானு இடிச்ச புளியாட்டம் ஒக்காந்து கேட்டுக்குட்டு வெந்துசெத்துகிட்டுக் கெடந்தேன். நானு ஒரு தலித்துன்னு சொன்னா இவுக என்ன எப்பிடி வச்சுக்குவாகன்னு நெனச்சுப் பாக்கையிலேயே நடுக்கமெடுக்கும். நானும் பயந்தாங் கொள்ளியாப் பொழப்பு நடத்திக்கிட்டு இருந்தேன்.

நான் தமிழ்காரினாக்கூட நாஞ்செஞ்ச சகல காரியத்தையும் நல்லா தெறமையா செஞ்சதுனால, கொஞ்சம் மதிப்பாத்தான் இருந்தேன். ஆனா அங்க இருந்த மட்டமான அத்தன வேலையும் தலித் ஆளுக செய்றதையும், அவுகள கன்னாபின்னான்னு திட்டுறதையும், அவுகள மானக்கேடா ஈனத்தனமா நடததுறதையும் பாத்தா வகுத்தெரிச்சலா இருக்கும். இந்த ஆளுகளுக்கும் இந்த சிஸ்டர் களுக்கும், இவுககிட்ட குமிஞ்சு கெடந்த துட்டுக்கும், பவருக்கும், பயந்துகிட்டு, வயசான மனுசங்ககூட பச்சபுள்ள யாட்டம் அஞ்சி, நடுங்கி, ஒடுங்கி, மானம் மரியாதை எல்லாத் தையும் மண்ணுக் குள்ளே பெதைச்சுட்டு ஓடியாடி வேலைபாக்குதப் பாக்கும்போதும் வேதனையா இருக்கும். இவுககிட்டப் போய் இப்பிடி எதுக்குப் பயந்துசாகனும், ஒங்க வேலய ஒழுங்காப் பாத்துட்டு சம்பளத்த வாங்கிட்டுப்போக வேண்டியதுதானேன்னு சொன்னா, நீங்க என்ன இன்னைக்கு இங்க; நாளைக்கு எங்கோய போறவுக, சொல்லிப் பிட்டு போயிருலாம், நாங்கல்ல இவள்ககிட்ட

கெடந்து அவஸ் தைப்படனும்னு சொல்லுவாக. அதுவுஞ்சரிதான்னு தோணும்.

இந்தச் சமுதாயத்துல கீச்சாதியில பெறந்துட்டா, சாகுர வரைக்கும் கேவலப்பட்டு, சீரழிஞ்சுதான் பொழைக்க வேண்டியதா இருக்கு. செத்தப்பெறகுங்கூட சாதி வித்தியாசம் போறதில்ல. எங்குட்டுப் பாத்தாலும், என்ன வேல செஞ்சாலும், என்ன படிப்பு படிச்சாலும், மூலமுடுக்கெல்லாம் இந்தச் சாதிவெறி நம்பளப் பேயாட்டம் ஆட்டிப் படைக்குது. இதுனால , நாலுபேரப்போல நல்லாப்படிச்சு வளர்ந்து முன்னேறுதுக்கு வழி இல்லாம நசுங்கிப் போயி முழிபிதுங்கிப்போயி இருக்கவேண்டியதா இருக்குது. இதுனால நாத்தமெடுத்த வாழ்க்கதான் நமக்குக் கெடச்ச கெதியா இருக்கும்.

கீச்சாதியா பெறந்துட்டாலே ஒவ்வொரு நிமிசமும் தெணறித்தான் வாழ வேண்டி இருக்குது. இன்ன சாதின்னு தெரிஞ்ச ஒடனே மொகத்த சுளுச்சு அறுவெறுப்பா நம்பள பாக்குறாக. அப்பிடிப்பாக்கையில மனசுக்குள்ள எம்புட்டு வலின்னு சொல்ல முடியாது! வலியோட கோவமும் வரும். நம்ம கோவம் அவுகள என்ன செய்ய முடியும்! கோவத்த முழுங்கிக்கிட்டு, கேவலப்பட்டுக் கிட்டே வாழ வேண்டியதா இருக்கு.

எந்த வெதத்துல மேச்சாதிக்காரக ஒசந்துபோனாக; நாங்க தாந்துபோயிட்டோம்? அவுககிட்ட பணமிருக்கு. எங்ககிட்ட அது இல்ல. எங்கிட்டயும் பணமிருந்தா அவுகளுக்கு மேல நாங்க படிச்சு முன்னுக்கு வரமாட்டமா என்ன? பாக்கப்போனா எல்லாத்துலயும் அவுகளப்போல, அவுகளவிடவும், ஒசந்து நின்னாலும், இந்த சாதியினால கேவலமும், வேதனையும் பட்டுத்தான் ஆகவேண்டி இருக்குது.

ஊர்தேசம் போம்போது வண்டிகள்ள சேந்துகூட ஒக்கார அருவருப்புப் படற அளவுக்கு என்னத்துல நாங்க அசிங்கமா போனோம்? என்னமோ பெருவியாதிக்காரனப் பாக்குறமாறில்ல நம்பள பாக்குறாக. எங்குட்டுப் போனாலும் இடிதான். வலிதான். இதுக்கு ஒரு விடிவு காலமே வராதா? படிச்சவ, படிக்காதவன்னு வித்தியாசமே இல்ல. எல்லாப்பெய மக்களும் சாதிவெறிபுடுச்சுத் தான் அலையுதுக. இது என்ன, கடவுளுக்காக சேவை செய்யப் போறோம்னு சொல்லிக்கிட்டுப் போற கன்னியாஸ்திரிமாரு, சாமி யாருககூட, சாதி வித்தியாசம் பாக்கத்தாஞ் செய்றாக. ஏந்தா இந்தச் சாதில பெறந்தோம்னுகூட நெனச்சுக் கஸ்டப்பட்டுருக்கேன்.

தலித்துகன்னா மனுசப்பெறவிக இல்லியா? இவுகளுக்கு ப் புத்தி இல்லியா? மான மரியாதை ஒன்னும் இல்லியா? இவுகளுக்

கென்ன அறிவு, அழகு, அந்தஸ்துன்னு எதுவுமே இல்லியா? எதுல கொறஞ்சு போனாக? ஏதோ மான ஈனமில்லாத அடிமைகன்னு நெனச்சு அடாவிடித்தனமா நடத்துறாக. இதப் புரிஞ்சுக்கிட்டு, கொஞ்சம் ஒணர்ச்சியுள்ள மானஸ்தனா யாராவது தலித்துக வாழ நெனச்சுட்டா அது என்னமோ நடக்க வேண்டாத ஒன்னு நடந்து போன மாறில்ல குதிக்கிறானுக? காலகாலத்துக்கும் மாடா ஒழைக் குறவனுக ஒழைச்சு ஓடாத் தேயனும்; முன்னுக்கு வந்துரவே கூடா துன்னு சதிவேல பண்ணுறானுக.

இப்பிடிப் பரம்பர பரம்பரையா அடிமைகளா வச்சு அசிங்கம்னு சொல்லிச்சொல்லி, தலித்துகளே, நம்ப அசிங்கமான வுக, மானமரியாதை இல்லாதவுக, தீண்டத்தகாதவுகன்னு நம்பி, தாங்களாகவே ஒதுங்கிக்கிற நெலமைக்கு ஆளாயிட்டாக, இதுதா ரொம்பப் பெரிய அநியாயம். இதத்தான் பெறக்கிற பச்சப்பிள்ளை களுக்குஞ் சொல்லிக் குடுத்து வளக்குறாக. இதுனால என்ன ஆகுதுன்னா தலித்துகளுக்கு வெமோசனமோ, விடுதலையோ கெடைக்க வழி இல்லாமலே போகுது.

ஒறங்கிட்டுக் கெடக்குற நாம ஒவ்வொருத்தரும் கண்ண முழுச்சுப் பாக்கனும். இதுதா நம்ம விதின்னு சொல்லிக்கிட்டு அடிமைத்தனத்த, அநியாயத்த, ஒணர்வு கெட்ட ஜென்மங்களா அப்பிடியே ஏத்துக்காம, இந்த நெலய மாத்த துணிஞ்சு நிக்கனும். சாதிய வச்சு சல்லித்தனஞ் செய்யுற எல்லாத்தையும் நொறுக்கிப் போட்டு, மனுசனுக்கு மனுசன் என்ன ஒசந்தவன் தாழ்ந்தவன்னு செஞ்சுகாட்டனும். நம்பள அமுக்கி சொகங் கண்டவன் சாமானியத் துல நம்பள உடமாட்டான். நாமதா அவனுகள வைக்கவேண்டிய எடத்துல வச்சு எல்லாஞ் சமந்தான்னு சமுதாயத்தை மாத்திக் காட்டனும்.

# மூன்று

எனக்குப் பதினோரு வயது. எங்கம்மாவுக்கு ரெட்டப் புள்ளைக பெறந்துச்சு, அப்ப எனக்கு நல்லா நெனவு இருக்குது. ஒரு தம்பியும் தங்கச்சியும் சேர்ந்து வந்தது எங்களுக்குச் சந்தோசந்தான்னாலும், பெரியவுக என்னத்துக்கோ கஸ்டப்பட்டுக் கிட்டாக. வளக்குரதுக்கு ரொம்பச் சங்கட்டமா இருக்குமாம். அதெல்லாம் எனக்குப் புரியக் கூடிய வயசில்ல. அந்த டயத்துலதா எங்க சாதிக்கும் சாலியக்குடி ஆளுகளுக்கும் அடிக்கடி தகராறு வந்துக்கிட்டே இருந்துச்சு. செலசமயங்கள்ல பெரிய பெரிய சண்டைங்கல்லாம் வந்துருக்கு.

கிறிஸ்தவக பெணத்தப் பெதைக்குற கல்லற சாலியக்குடிப் பள்ளிக்கொடத்துப் பக்கம் இருந்துச்சு. அதுல எங்க தலித் சனங்கள மட்டும் பெதப்போம். ஒசந்தசாதி கிறிஸ்தவகளுக்குத் தனிக் கல்லற. அது பஸ்டாண்டுக்குத் தள்ளி இருந்துச்சு. எங்க கல்லறய சாலியக் குடிக்குச் சொந்தமின்னு சொல்லித்தான் ரெண்டு சாதிக்கும் சண்டைக்காடு நெறிஞ்சது. கல்லறய சண்ட கிண்ட போட்டு வாங் கிட்டா, பள்ளிக்கொடத்துக்கு வெளாட்டு மைதானமா, தோட்டமா ஆக்கிப் போடலாம்னு சாலியப் பெயலுகளோட திட்டம். அதுனால தொடந்தடியா சண்ட வந்துக்கிட்டே இருந்துச்சு.

எங்கதெரு ஆளுகளோட பேச்சுல இருந்து, சாலியப் பெயலுககிட்ட அம்புட்டு புத்தியோ, வெவரமோ கெடயாதாம். ஒரக்கப் பேசிட்டாக்கூட ஒன்னுக்கிருந்துவானுகளாம். அம்புட்டுத் தான் அவுகளுக்கு இருக்குற தைரியமாம், வீராப்பாம். ஆனா எங்க சாதிக்கிட்ட இருக்குறதவிட தோட்டந்தொரவு, பணமெல்லாம் நெறய்ய அவனுககிட்ட இருக்குதாம் , அத வச்சுக்கிட்டுத்தான் இந்தக் குதி குதிக்கிறானுகளாம். மத்த சாதிக்காரப் பெயலுக எங்க ஆளுகளோட தைரியத்தையும் பெலத்தையும் தெருஞ்சும் உடாப் புடியா சண்டை போட்டுக்கிட்டேதான் இருந்தானுக.

சாலியக்குடி வழியா பள்ளிக்கொடத்துக்குப் போற புள்ளை களப் பூரா அங்கிட்டுக்கூடிப் போக வேண்டாமுன்னு சொல்லிட் டாக. பஸ்டாண்டுக்கோ, காடுகரைகளுக்கோ அப்பிடிக்கூடிப் போறவுக உசாராபோய் வரனும்னு சொல்லிட்டாக. பொம்பளப் புள்ளைக ஒத்தயில அங்குட்டுப் போக வேண்டாமுன்னும்,

ஆம்பளக எப்படியும் இடுப்புல ஒரு ஆயுதத்தோட போகனும், வரணு முன்னும் சொல்லிட்டாக. இம்புட்டுச் சொல்லியிருந்தும் ஒரு நாளு சாயங்காலம் வடக்குத் தெரு இழுவ புருசனச் சாலியக்குடி ஆளுங்க குத்திப் போட்டாகன்னு ஊரே பதறிகிட்டு அங்கிட்டு, இங்கிட்டுமா எல்லா ஓடுனாக. ஒரே ஒப்பாரியும் கூப்பாடுமாக் கேட்டது.

பள்ளிக்கொடத்துல இருந்து அப்பத்தா நானு வீட்டுக்கு வந்திருந்தேன். தெருவுல எல்லாரும் ஓடுறதயும், பொம்பளைக தலயுல அடுச்சுட்டு அழுகுறதயும் பாக்கையில மனசு திக்கு திக் குன்னு அடிக்குது. வெவரம் ஒன்னும் புரியல. எங்கம்மாவும் பாட்டியும் எங்கள வெளியே போகக் கூடாதுன்னுட்டாங்க. வாசக் கிட்ட நின்னுக்கிட்டு ஒன்னையும் பாக்க முடியல, எங்க பாட்டி வெளிய போயி என்ன ஏதுன்னு வெவரம் தெருஞ்சுக்கிட்டு வந்தாக.

“அவா இழுவ புருசன் எம்மந்தட்டி ஆளு, அவனயே சாலியப்பெயக குத்திச் சாச்சுட்டானுகளே.”

“ஒரு தொடயில ஈட்டிக்கம்பு வச்சு குத்துனது மறாது பக்கத்துக்கு தொளச்சுக்கிட்டு வந்துருக்காம்.”

“ரத்தமான ரத்தமாம். அங்கனயே சாஞ்சுருச்சாம் அந்த பெரீய்யா. நல்ல காலத்துக்கு அந்த மாமா பணியாரமுத்து அந்நியாரம் பாத்துட்டு வந்து ஊருக்குள்ளே சொல்லியிருக்கு. இல்லன்னா இருந்த கொற உசுரும் அங்னகுள்ளயே போயிருக்கும்.”

“ஒடனே வண்டியக்கெட்டி தர்மாஸ்பத்திரிக்குத் தூக்கிட்டுப் போறாகளாம். பொழச்சா மறுபொழப்பாம். இப்படி தெருக் காட்டுல பல மாதிரி பேசிக்கிட்டாக.”

தெருவுல இருந்த ஆம்பளைகளுக்குக் கோவம்னா இன்ன மட்டும்னு இல்ல. “இவெ எம்மாத்திர ஆளு. இவனுக தரத்துக்கு நம்ம பயலுகளக் குத்திட்டாம்னா கேவலமா இருக்கு. சே, அசிங்கம் டா. பறப்பெயலுக சாலியங்கையால குத்துப்பட்டுச் செத்தாம்னு சரித்திரத்துலேயே கெடயாது” அப்படீன்னு ரொம்ப வீராவேசத் தோட சொல்லிட்டு புளிச்சுன்னு வெத்தல எச்சியத் துப்புனாரு மாமா பரலோகம்.

“அவனுக்குக் கடுகத்தன வீரமிருந்தா, நேருக்கு நேர வந்து சண்ட போட்டுல்ல குத்தனும். பொட்டக் கண்டாரளிக, சும்ம போனவனப்புடுச்சு குத்திருக்காளுக.”

“நீங்க ஒருசாதிக்குப் பெறந்த பெயல்கனா அவனுக ஒரு ஆள குத்துனதுக்குப்பதுலா அவனுகள்ளப் பத்துப்பேரக் குத்திக் கொடல உருவி மாலபோடனும், அப்பத்தான் அவனுக மப்பு அடங்கும்.”

இப்பிடி தவசிக்கெழவி சொல்லிக்கிட்டு இருக்கையில லேயே திமுதிமுன்னு ஆளுக கத்திகளும், கம்புகளும், தூக்கிக்கிட்டு கல்லறப் பக்கம் ஓடுனாக. ஆம்பள பொம்பள அத்தனபேரும் ஓடுனாக. அவுக பின்னால சின்னஞ் சிறுசுக அழுதுக்கிட்டே ஓடுனாக. அவுகளோட தெரு நாய்களும் கொரச்சுக்கிட்டே ஓடுச்சுக. தெருவே காலியான மாறி வெறிச்சோடிக்கெடந்துச்சு. மடத்துச் சாவடில ரெண்டு மூனு வயசான கெழவங்க மட்டும் ஒக்காந்து கெடந்தாக.

கல்லறத் தோட்டத்துல சண்டைக்காடு நாறிப்போச்சாம். சாலியனுக பொண்டுகப் பெயல்ககணக்கா மரத்துகளுக்குப் பின்னால ஒளுஞ்சுக்கிட்டு கல்லுங் கட்டியுமா எறுஞ்சானுகளாம். எங்க ஆளுக முன்னேறிப் போகப் போக, திரும்பிப் பாக்காமக்கூட ஒட்டமா ஓடிப்போயி பள்ளிக் கொடத்துக்குள்ள போயிக் கதவச் சாத்திக்கிட்டானுகளாம்.

‘ங்கோத்தா, கையில சிக்கிருந்தா பெணஞ்சிருப்பேன் பெணஞ்சு’

“நம்ம தலயக் கண்டாலே ஓடுற வெங்காயப் பெயலுக. இவனுகளுக்கெல்லா எதுக்கு இந்த ராங்கித்தனம். தேவிடியாப் பெயமக்க.”

இப்பிடி இன்னும் நெறய்யா கெட்ட கெட்ட வார்த்தைகளச் சொல்லி வஞ்சுக்கிட்டே மறுபடியும் தெருவுக்குள்ள ஆள் நடமாட்டம் வந்துருச்சு.

கொஞ்சநாளைக்கு ரெண்டு பக்கத்துலயும் அமேதியா இருந்துச்சு. பெறகு ஒருநாளு திடீர்னு சாலியக்குடி ஆளு யாரையோ எங்கதெரு ஆளுக அடுச்சுப்போட்டாகன்னு சண்ட வந்துச்சு. ஒடனே சாலியக்குடி ஆளுக போயி போலீஸ்டேசன்ல எங்க ஆளுகமேல கேசு எழுதிக் குடுத்துட்டாக. செஞ்சது செய்யாதது எல்லாஞ்சேத்து சோடன பண்ணி கேசு போட்டாகளாம்.

“அந்தமச்சா சின்னப்பனக் குத்துன அன்னைக்கே போலீசுல நம்ம போய் எழுதிக் குடுத்துருக்கனும். அப்பப் பேப் பயலுகளாக இருந்துட்டோம். இப்பப்பாரு சும்மா தொட்டதுக்கு எப்பிடி கேஸ சோடிச்சுட்டான்னு.” - வர்க்கீசு பொலம்புனாரு.

“அடிச்சவமேல மட்டுங் கேசு போடலியாம். பறையனுக எல்லார் மேலயுங் கேசு போட்டானாம்.”

“எல்லாப் பெயலுக மேலயுங் கேசு எதுக்குடா போடுவான். அடுச்சவ மேலதான போடனும்?”

“நம்ம ஆளுக பூரா சாலியக்குடிக்குள்ள போயி அவுக பள்ளிக்கொடம், வீடு, கோயில் எல்லாத்தையும் அடுச்சு நொறுக்குன

மாம்; ஓடுகள கல்லுட்டு எறுஞ்சு ஓடச்சமாம். பொம்பள புள்ளைகளை கையப்புடுச்சு இழுத்து மானபங்கப்படுத்துனமாம். வீட்டுக்குள்ள நொழஞ்சு கெடச்ச சாமானுகள அள்ளிக்கிட்டு வந்தமாம்-இப்பிடி எழுதிக் குடுத்துட்டானுகளாம்.”

“செரி, இந்த போலீஸ்காரனுக என்ன புத்திக்கெட்டுப் போயா அலையுறானுக. வெசாரிக்க வேண்டியதுதான.”

“அதான, சொல்றவஞ் சொன்னாம்னா கேக்குறவனுக்கு மதி எங்க போச்சு? அவனுக தெருக்காட்ல போயி ஏதாச்சும் அழிமாண்டம் இருக்கான்னு பாக்கட்டும்.”

“அதுக்குத் தக்கன சாலியப்பெயல்களே ரெண்டு மூனு ஓடுகள அங்கனயும் இங்னயுமா ஒடச்சு வச்சுக்கிட்டு கல்லுகரடுகள அங்கங்கே குமிச்சு எல்லாம் செட்டப்பண்ணிட்டானுகளாம்.”

“பெறகு இப்ப என்னல செய்றது நம்ம?”

“அதான் மச்சா, ஊர் நாட்டமக்கிட்ட சொல்லி வீட்டு வீட்டுக்கு வரிப் பிரிக்கனும். பிரிச்சு தேவையான ஆயுதங்களை செஞ்சு வைக்கனும். அந்த கட்டெறும்பு மகனுக்கு நாட்டு வெடி செய்யத் தெரியும். அதயும் செஞ்சு வச்சுக்கிடுவோம். இவனுக இம்புட்டு சொன்னமட்டுக்குஞ் செஞ்சே காட்டனும். இவனுகள சும்மா உடப்புடாது.” இப்பிடி பேசி முடிச்சப்பெறகு ஆகவேண்டிய காரியங்களப் பார்க்கக் கௌம்பிட்டாக.

இதெல்லாம் கேக்கக் கேக்க, எனக்கு இந்தக் கல்லறச் சண்டயப் பாக்கனும்னு இருந்துச்சு. ஆனா வீட்ல உடமாட்டாங் கன்னு தெரியும். சண்ட நடக்குற நேரத்துல வீட்டுக்குள்ள வச்சுக் கிட்டு வெளியே உடமாட்டாக. பள்ளிக்கொடத்துக்கு லீவு உட்டாச்சு. இந்த டயத்துல பாத்து ஏந்தம்பிக்கும், தங்கச்சிக்கும் சொகமில்லாமப்போச்சு. ரெட்டப் பிள்ளைகன்னா அப்பிடித் தானாம். எந்தச் சீக்கு வந்தாலும் சேந்தேதா வருமாம். எங்கம்மா ஒரு பிள்ளையும், எங்க பாட்டி ஒரு பிள்ளையுமா தூக்கிக்கிட்டு ரெண்டு மைலுக்கு அப்பால இருந்த ஆஸ்பத்திரிக்கு நடந்தே போனாங்க. போம்போது எங்கிட்ட வீட்டையும், தங்கச்சியையும் பாத்துக்கச் சொல்லிட்டுப் போனாக. அப்ப வீட்ல பெரியவ நாந்தான். எனக்கடுத்து ஏழு வயசுல ஒரு தங்கச்சி இருந்தா.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் தெருவுல ஒரே சத்தமா இருந்துச்சு. வெளிய போய் லேசா எட்டிப் பாத்தேன். திரும்பியும் கல்லறயில சண்ட நடக்குதுன்னு சொல்லிக்கிட்டே ஆணும் பொண்ணுங் கெழக்காம ஓடுனாக. எனக்கும் போகனும்னு ஆசை. எங்க வீட்ல இருந்து கல்லறைக்குப் போனும்னா, நாலஞ்சு தெரு கடந்து, ஊர்க் கடேசிக்குப் போகனும். கல்லறையில பெரிய அத்தி

மரம் இருக்குது. முன்னாடி அதுல அத்திப்பழம் பெறக்கப் போயிருக்கேன். அங்க நெல்லுக்களம் வச்சு அடுச்சப்ப நெல்லு தூக்க பிள்ளைகளோட போயிருக்கேன்.

சண்டயப் பாக்க போவமுன்னும் இருக்கு. வேண்டா முன்னும் இருக்கு. எங்கம்மா வந்துட்டா அடிப்பான்னு பயம்மா வும் இருக்கு. கொஞ்ச நேரம் தயங்கிட்டே இருந்தேன். பெறகு துணிஞ்சு தங்கச்சிய வீட்டப் பாத்துக்கச் சொல்லிட்டு நானுங் கல்லறைக்கு ஓடுனேன்.

எங்க தெருப்பக்கத்துல இருந்துக்கிட்டு எங்காளுக கல்ல வச்சு எறுஞ்சுக்கிட்டு இருந்தாக. எங்க பெரியய்யா கூட நின்னுக்கிட்டு எறுஞ்சதப் பாத்தேன். அப்பிடி எறுஞ்சுக்கிட்ட கம்புகளயும் தூக்கிக்கிட்டு ஆம்பளக முன்னாடி போக, பொம்பளக சின்னப் பிள்ளைக எல்லாம் பயந்துக்கிட்டே கொஞ்சங் கொஞ்சமா பின்னாடி போனோம். சாலியக்குடிப் பக்கமிருந்து ஒரு பயலுகளக் கூட காணோம். அவுக கல்லு எறியவுமில்ல. அவுக தோத்துப் போயிட்டாகன்னு நெனச்சுக்கிட்டேன். ஏ வயசுப்பிள்ளை பூராஞ் சேந்துக்கிட்டு அப்பிடித்தான் பேசிக்கிட்டோம். சாலியக்குடியில ஆளுக ஓடி ஒளுஞ்சுக்கிட்டாக. நம்மதா செவிச்சுட்டோம்னு சந்தோசமா பேசிக்கிட்டு இருந்தோம்.

சந்தோசப்பட்டுக்கிட்டு இருக்கும்போதே அது வெசனமா மாறிப் போச்சு. திடீர்னு சாலியக்குடியில இருந்து எக்கச் சக்கமான போலீசுக்காரங்க கம்போட வந்து எங்க ஆளுகள வெரட்டி வெரட்டி அடிச்சு கையுல அம்புட்டவுகள எல்லாம் புடுச்சு கண்டமானிக்கு அடிச்சு கைது பண்ணிட்டாக. இம்புட்டு நேரமும் இந்த போலிசுக எங்ன ஒளுஞ்சிருந்தாகன்னே தெரியல. தப்புச்சோம் பொழச் சோம்னு எல்லாரும் பின்னாங்காட்டி ஓடுனோம். ஆம்புளைக பூரா வயக்காட்டுச் செம ஓடி ஒளுஞ்சாக; போலீசு வெரட்டி வெரட்டிப் புடுச்சாக. ஓட முடியாதவக வரப்புகளுக்கெடயில படுத்து மூச்சப் புடுச்சிக்கிட்டுக் கெடந்தாகளாம். போலீசு ஊருக்குள்ளயும் வந்து, பாத்த ஆம்பளைகளப் பூரா அடி பின்னிடுச்சு. அடுச்சு அடுச்சு போலீஸ் லாரில ஏத்துச்சு. அதுனால ஆம்பளைக கம்மாக்கர வழியா ஓட்டமா ஓடி கொஞ்சம் பேரு தப்புச்சாக. வயலு வரப்புகளுக்குப் போயிருந்தவகள அப்படியே ஊருக்குள்ள வராம மலங்காட்டுப் பக்கமா இருக்கச் சொல்லிப்புட்டாங்களாம்.

நாங்க சின்னப்பிள்ளைக, பொம்பளைக எல்லாம் உளுந்தடுச்சு ஓடியாந்து வீட்டுக்குள்ள புகுந்துக்கிட்டோம். வெளிய பூரா போலீசுகாரங்க டப் டப்புன்னு பூட்சு போட்டு நடக்குறதும், டம்டம்னு ஆளுகளப் புடுச்சு அடிக்குறதும், அவுக ஐய்யோ

அம்மான்னு வலிதாங்கமாட்டாம அலறுரதுமா இருந்துச்சு. புருசன, புள்ளைய, அப்பன, அண்ணன, தம்பிய, சொந்தக்காரகள போலீசு அடிக்குறதப் பாக்குற பொம்பளைகளும் பரிதாபமாக் கத்திக் கத்தி அழுதாங்க. எங்க வீட்ல ஆம்பளைக யாரும் இல்ல. அப்பாவும், வெளி ஊர்ல இருந்தாக. ஆனா எனக்கும் அழுகை அழுகையா வந்துச்சு. அழுதேன். எனியப்பாத்துட்டு ஏந்தங்கச்சியும் அழுதா. நாங்க அழுதுக்கிட்டு இருக்கையிலேயே ஆஸ்பத்திரிக்குப்போன எங்கம்மாவும், பாட்டியும் வீட்டுக்கு வந்து சேந்துட்டாங்க.

வரும்போதே போலீசுகாரனுக ஆம்பளைகளப் புடுச்சு அடுச்சு அரெஸ்ட் பண்ணுறதை எங்கம்மாவும் பாட்டியும் பாத்துட்டு பயந்து போய் வந்தாக. என்னடி, என்ன ஆச்சுடி? திரும்பி யும் சண்டையான்னு எங்க பாட்டி கேட்டாக.

நான் நடந்ததைப் பூராஞ் சொன்னேன். ஒனிய யாரு கல்லறைல போய்ப் பாக்கச் சொன்னது? கல்லெறிபட்டு மண்டகிண்ட ஒடஞ்சா என்ன செய்றதுன்னு சொல்லிட்டு அத்தோட உட்டுட்டாக. அப்ப நெலவரம் அப்பிடி இருந்துச்சு. அதுனால தப்பிச்சிட்டேன். வேற ஒரு நேரம்னா நல்லா அடி வாங்கி இருப்பேன்.

சாயங்காலம் வரையுல தெருவுகள்ள அழுகையுங் கூப்பா டும் நிக்கல. சாயங்காலத்துல்ல தெருவே மயானக்காடுமாறி சத்தஞ் சந்தடி எதுவுமில்லாம வெறிச்சோடிக் கெடந்துச்சு. ஒரு ஆம்பிளயப் பாக்க முடியல. பொம்புளகமட்டும் அங்ன இங்னயுமா கூடிக்கூடி குசுகுசுன்னு என்னமோ பேசிக்கிட்டாக. எனக்கு ஒன்னுமே வெளங்கல. எங்க வீட்லயும் யாரும் யாருகிட்டயும் பேசல. கம்னு ஒக்காந்து கெடந்தோம். அப்பப்ப தம்பி, தங்கச்சி தொட்டியில கெடந்து அழுதாக்கூட சத்தம் போடக்கூடாதேன்னு பயந்து ஓடிப்போய் தொட்டிய ஆட்டுனேன். ஊரே அமைதியா இருக்கை யுல அந்தப் புள்ளைக அழுகுறது நெஞ்ச அறுத்துட்டு போறது மாறி வலிக்கும். ராத்திரி பாட்டி வந்தா. வந்து அன்னைக்கு நடந்த வெச யத்தைப் பூராஞ் சொன்னா.

“சாலியக்குடிகாரனுக அதென்னமோ ரெசர்வ் போலீசாம், அவுகள செவகாசில இருந்து கூட்டியாந்து வச்சு ஆடறுத்து விருந்து வைக்கானாம், நம்ப பயலுகள ஒழிச்சுக் கட்டனும்னு கெங்கணம் கெட்டிக்கிட்டு சோறு போடுறானுகளாம், நமக்கு அப்பிடி ஐவசு இருக்கா? குடிக்கக் கூழு த்தண்ணிக்குக்கூட நாம கஸ்டப்படவேண்டி இருக்கு. பெறகு எப்படி போலீசு சர்க்காரு நம்மபக்கம் இருப்பாக?”

“கண்ல ஆப்ட அத்தன ஆம்பளயையும் அடுச்சுக் கொண்டு போயிட்டானுகளாம்.”

"கொண்டுபோய் என்னபாட்டி செய்வாக?"ன்னு கேட்டேன்.

"கொண்டுபோயி ஆட்ட மாட்ட வெளுக்குறமாறி சும்மா கண்ணுமூக்குத் தெரியாம அடுச்சு அர உசுருங் கொற உசுருமா செயிலுக்குள்ள அடச்சுப் போடுவாக,"ன்னு சொன்னாக.

"அடச்சுப்போட்டு சோறு தருவாகளா?"ன்னு கேட்டேன்.

"சோறாவது மண்ணாவது. பேருக்கு இத்தினி கேப்பக்களி சோளக்களி, குடுப்பானுகளாம். பணக்காரக, ஒசந்த சாதிக்காரக, போலீசுக்கு வேண்டப்பட்டவனுகன்னா லேசா ரெண்டு தட்டுவா களாம். அவுகள செயில்ல நல்ல கெவனிப்பாகளாம்."

"பெறகு எப்ப பாட்டி வீட்டுக்கு உடுவாங்க?"ன்னு கேட்டேன்.

"பொழச்சுக் கெடந்தா தெரியாதா. அம்புட்டு அடிவாங்கிட்டு சித்திரவதப் பட்டுட்டு, கேசு, வாய்தா அது இதுன்னு முடிஞ்சு எப்ப வருவாகளோ ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்," என்றார்கள்.

அன்னைக்கு ராத்திரி யாருக்குமே ஒறக்கம் வரல. ராத்திரி பூரா போலீசு தெருவுல சுத்திச் சுத்தி வந்துச்சு. தெருவுல ஒரு சத்தங்கூட இல்ல. போலீசுக்காரங்க நடக்குற பூட்சு சத்தமும், நாய்க கொலைக்குற சத்தமுந்தான் கேட்டுச்சு. போலீசு நடக்குறதே பயம்மா இருந்துச்சு. ஒவ்வொரு பூட்சுக்காலையும் என்னோட நெஞ்சு மேல வச்சு அமுக்கி மிதிக்கிறமாறி இருக்கும். கத்தி அழவரும். பயத்துல தொண்டயப் புடிச்சிட்டு படுத்துக்கெடந்தேன். எடையுல எங்குட்டாச்சும் பச்சப் பிள்ளைக அழுக ஆரம்பிச்சா ஒடனே பொம்பளைக வேகமா அழுகச் சத்தத்தை நிப்பாட்ட முடிஞ்சதெல் லாம் செய்தாக. எங்க வீட்லயும் அப்பிடித்தான். அழுகச் சத்தத்தைக் கேட்டுட்டு போலீசு வீட்டுக்குள்ள வந்துடுவானோன்னு மனசுக் குள்ள பயம். சின்னச்சத்தங் கூட பெரிசா வந்து கேட்டு கொல நடுங் கச் செய்யும்.

மறுநாள் காலைல ஆம்பளைங்க செஞ்ச வேலைகளையுஞ் சேத்துப் பொம்பளைகளே செஞ்சாக. போலீசும் சுத்திச் சுத்தி வந்தது. தப்பிச்சு ஓடுன ஆம்பிளைகளப் பூராம் புடுச்சுட்டுப் போகத்தான் சுத்துராகளாம். காலைல வெளித் திருணயுல வந்து பயந்து பயந்து ஒக்காந்தேன். அங்கதான் நெறயப் பொம்பளைக பேசிக்கிட்டு இருந்தாக. மொதல் நாளு நடந்ததப் பத்தி ரகசியம் பேசுறமாறி ரொம்ப மெதுவா பேசுனாக.

"நடுத்தெருவுல யாரோ அல்போன்ச போலீசு ரொம்ப அடுச்சாகளாம், ரத்த ரத்தமாக கக்குனாராம். பொழைக்குறது

கஸ்டம்னாக."

"வடக்குத் தெருவுல, மாரியப்ப மகனப்புடுச்சு அடிக்கையில அவெமடியில இருந்து அஞ்சு ரூபா நோட்டு கீழ உளுந்துச்சாம். அத அவுக அம்ம போய் அழுதுக்கிட்டு குனுஞ்சு எடுத்தாளாம். ஒடனே போலீசு பூட்சு காலூட்ட அவ அடிவகுத்தல பார்த்து ஒரே மிதி மிதிச்சு தள்ளிட்டு ரூவாயை எடுத்து வச்சுக்கிட்டானாம்."

"வடக்குத்தெரு வாத்தியாரப் புடுச்சு ரெண்டு சாத்து சாத்திருக்கானுக. அவரு கையெடுத்துக் கும்புட்டு 'சார் நான் வாத்தியார் சார். இதுல எல்லாம் தலயிடல சார்' னு செஞ்சுனாராம். ரெண்டு அடியோட உட்டுட்டுப் போயிட்டாகளாம்."

இப்பிடிப் பேசிக்கிட்டு இருக்கையில போலீசு பூட்சு சத்தங் கேக்கவே எல்லாரும் ஓடிப்போனாங்க. நானும் வேகமாக வீட்டுக் குள்ள வந்து கதவச் சாத்திக்கிட்டேன்.

வழக்கம்போல பொம்பளைக கூலி வேலைக்குக் காட்டுக்குப் போனாக. அப்பிடிப் போம்போது காட்டுப்பக்கம் ஒளுஞ்சு கெடந்த ஆம்பிளைகளுக்குக் கூழு கொண்டுபோய்க் குடுத்துட்டு ஊர் நெலவரத்தையும் சொல்லிட்டு வந்தாக. ஆம்பிளைக சம்பாத்தியமும் இல்லாமலே பொம்பளைக சமாளிச் சிட்டு வந்தாக. தெனமும் போலீசு தெருவச் சுத்தி வந்தது. பெறகு வீடு வீடா நொழஞ்சு ஆம்புளைகள தேடிப்புடிக்க ஆரம்புச் சுட்டாங்க. வீட்டுக்குள்ள ஆம்பளைகள மறச்சு வச்சிருக்கிறதா பள்ளனுக சொல்லிக் குடுத்துட்டானுகளாம். இதக் கேட்டுட்டு எங்க பாட்டிக்கு ரொம்பக் கோவமா வந்துச்சு. இந்தப் பள்ளனுக பாரு என் சனத்தையே காட்டிக் குடுக்குறானுக. இவனுக போலீசுக்குப் பயந்துட்டு ஒளுஞ்ச டயத்துல, பூராப் பெயலுகளும் பறப்பெய வீட்டுக்குள்ளதா கெடந்தானுக. சோறு தண்ணிகூட குடுச்சுக்கிட்டு இருந்தானுக. நம்ம சனமுன்னுதான நாம மறச்சு வச்சு இவனுகள காப்பாத்துனோம். இப்ப இவனுகளுக்கு அந்த ஒணர்வு இல்லை யேன்னு சொல்லி ஒரு மூச்சு வஞ்சாங்க.

அந்நியாரத்துல எங்க வீட்டுக்கதவ யாரோ படபடன்னு வேகமா தட்டுனாக. போலீசுதான்னு எல்லாரும் பயந்துபோய் இருக்கையில எங்க பாட்டி போய்க் கதவத் தொறந்தாக. ஊர் நாட்டாம உள்ள பாஞ்சு ஓடியாந்து நெல்லுப் போட்டுவச்ச குலுக்கைக்குள்ள ஒளுஞ்சுக்கிட்டாரு. பின்னாலியே நாட்டாமயோட அம்மா வந்து, "வீடுவீடாக போலீசு தேடுது. இன்னியாரம் இவெ வேற எங்குட்டும் ஓட முடியாது. ஊரச்சுத்தி வேற போலீசு நிக்குது. எப்பிடியாவது இவன மறச்சு காப்பாத்துங்க"ன்னு சொல்லிட்டு வெளியே ஒக்காந்துக்கிட்டாக. எங்களுக்கும் பயம்மா இருந்துச்சு.

கடவுளே, போலீசு எங்க வீட்டுக்கு வரக்கூடாதுன்னு நெனச்சுக் கிட்டேன்.

திடீர் தடீர்னு போலீசுங்க அடிக்குற அடிகளும், ஆம்பள களோட அலறலும், பொம்பளைக கூப்பாடு போட்டு கத்துறதும் கேட்டுக்கிட்டே இருந்துச்சு. அதக்கேக்கக் கேக்க மனசுக்குள்ளே ஒரே நடுக்கம். எங்க வீட்டுக்குள்ள இருந்த திருணையில நின்னு பாத்தா வருசை வருசையாப்போற போலீசுகாரங்களோட இரும்புச் சட்டித் தொப்பி தெரியும். அடுத்த கொஞ்ச நேரத்துல திமுதிமுன்னு பத்துப் பன்னண்டு போலீசுக எங்க வீட்டுக்குள்ள நொழஞ்சாங்க. எங்கம்மா பிள்ளைய வச்சுக்கிட்டு நின்னாக. ஒவ்வொரு கதவயும் மிதிச்சு தள்ளித் தொறந்து பாத்தாக. குளிக்குற எடத்தையும் எட்டிப் பாத்தாக. வெறகு வச்ச இடம், எல்லாம் எடமும் பாத்தாக.

குலுக்கைக்குள்ள ஒளுஞ்ச நாட்டாமை குலுக்கை இருந்த அறக்கதவ உள்ளுக்குள்ளய பூட்டி வச்சிட்டு குலுக்கைக்குள்ள போயிருக்காரு. அந்தக் கதவ மிதிச்சுப் பார்த்துட்டு தொறக்கலன ஒடனே எங்கமாவ கூப்பிட்டுத் தொறக்கச் சொன்னாக. எங்கம்மா போய் தட்டிப்பாக்க கதவு உள்ளுக்குள்ளகூடி பூட்டிக்கெடக்கு. போலீசுக்குச் சந்தேகந் தட்டிப் போச்சு. உள்ளுக்குள்ள ஒளுச்சு வச்சிக்கிட்டா நாடகம் ஆடுறன்னு எங்கம்மாவ வஞ்சானுங்க. பெறகு காலுட்டய கதவ எத்தி ஒடச்சுட்டு உள்ள போய் தேடி குலுக்கைக்குள்ள இருந்தவனோட முடியப் புடுச்சு மேலாம தூக்கி சப்சப்ன்னு அத்தன போலீசும் அடிச்சாங்க. எனக்குக் கண்ணீர் வந்துருச்சு, மொத மொதல்ல போலீசு புடுச்சு அடிக்கிறதப் பாத்தேன். ஒரு போலீசு மொகத்துல அடுச்சா மீதி அத்தனை போலீசும் அதே எடத்துல அடிக்கிறானுக. ஒருத்தன் மிதிச்சா அத்தன பேரும் மிதிக்கிறாக. அப்பிடியே அடிச்சுக்கிட்டே அவர தரதரன்னு இழுத்து, ஒதச்சு வெளியே தள்ளுனாக. வெளியே அவுக அம்மா "ஐயா, இவெரு இந்த ஊரு நாட்டாம சாமி, உட்டுருங்க சாமின்னு" கெஞ்சிக்கிட்டே அழுதாக. இவந்தா நாட்டாமையான்னு சொல்லிக் கிட்டு இன்னுங் கொஞ்சம் சேத்து அடிச்சாங்க.

இந்தக் கெடுபிடிலகூட ரெண்டு மூனு வீட்ல பொண் டாட்டிக, புருசமார வீட்டுக்குள்ளேயே வச்சுக் காப்பாத்திட்டாளு களாம். ஒரு வீட்டுக்குள்ள ஆம்பளய வச்சு மூடிப்போட்டுட்டு, போலீசு வரவும் "ஐயா இப்பத்தா பெரசவ வலி ஆரம்பிச்சிருக்கு. இங்க வேற யாரும் இல்ல" ன்னு சொல்லிப் போகவச்சிருக்காளுக. அவுக வீடுகளுக்குள்ள ஒரே இருட்டு. போலீசு நம்பிக்கிட்டு போயிருக்குது.

இன்னொரு வீட்டுல சாக்குக்குள்ள புருசனப் போட்டு,

மேல பொண்டாட்டிக்காரி ஒக்காந்துகிட்டு “ஐயா எனக்கு குளுரு காச்சலு, நாலு நாளாச்சு எங்குட்டோ போனவரு வீட்டுப்பக்கமே வரல சாமி” ன்னு சொல்ல, போலீசு போயிருச்சாம்.

நடுத்தெருவுலகூட ஒரு வீட்ல ரெண்டுபேர ஒளுச்சு வச்சுக்கிட்டு “ஐயா மகளுக்கு வைசூரி வெளாண்டுருக்கு. பூட்சு காலோட போகாதிக, வேற ஆளுக யாரும் இல்லீங்கய்யா” ன்னு சொல்லவும் போலீசு வீட்டுக்குள்ள போகவே இல்லியாம். வீடு வீடா புகுந்து ஆம்பளைகள புடிக்கும்போது வீட்டுல இருந்த பொம்பளைககிட்ட போலீசுக்காரனுக தப்பிதமா நடந்தானுகளாம். கெட்ட வார்த்தையால வஞ்சுக்கிட்டு, ராத்திரிக்குப் புருசம்மாரு இல்லைல. ரெடியா இருங்கடி நாங்க வாரோம்னு சொல்லி கண்ணடுச்சுக்கிட்டு வைக்கக் கூடாத எடத்துல எல்லாம் துப்பாக்கிய வச்சு இடுச்சானுகளாம்.

சாயங்காலத்துல இருந்தே ஊருல பொம்பளைகளுக்கு ஒரே பயமெடுத்துக்குச்சு. வெள்ளனத்துல கஞ்சியக் காச்சி குடுச்சிட்டு பிள்ளைகளக் கூட்டிக்கிட்டுக் கோயிலுக்கு முன்னால படுக்கப் போயிட்டாளுக. மாடு கன்னுகளக்கூட செலபேரு அவுத்துட்டுப் போயிட்டாளுக. தெருவுல ஒரு ஈ, காக்கா கெடையாது. இதப்பாத் துட்ட எனக்கும் பயமாயிருச்சு. நானும் எங்கம்மாக்கிட்டப்போயி, கோயிலுக்குப் போயிரலாமுன்னு எம்புட்டோ சொல்லிப் பாத்தேன். ரெண்டு கைப்பிள்ளைகள வச்சுக்கிட்டு கோயில்ல எங்ன போய் தங்குவ? எங்குனக்குள்ள ரெண்டு தொட்டி கெட்டி அந்த மணலுக்குள்ள ரெண்டு பிள்ளகளையும் வச்சிக்கிட்டு இருப்பன்னு சொல்லி வரமாட்டேனுட்டாக. கடேசில எங்க வீட்ல மட்டுந்தான் ஆளுக இருந்தோம்.

ராத்திரி போலீசு சுத்திச் சுத்தி வந்துச்சு. ஆனா எங்க வீட்டுக்குள்ள வரல. காலைல வழக்கம்போல பொம்பளைக தெருவு களுக்குள்ள வந்துட்டு கூலிவேலைக்குப் போனாளுக. இந்தப் பொம்பளைக எம்புட்டு சமத்துக்காரின்னா, ஆம்பள இல்லாமலே வேல வெட்டி செஞ்சு பிள்ளைகளக் காப்பாத்திக்கிட்டு வராளு கன்னு சொல்லி, வேலைக்குப் போன பொம்பளைகளப் பூரா போலீசு போய் டிராக்டர்ல அள்ளிப் போட்டுக்கிட்டு வந்து ஊர்ப்பக் கமே உட்டுட்டு போயிட்டானுக. இது மட்டுமில்லாம வேலைக்குப் போற பொம்பளைக, காட்டுப்பக்கம் ஒளுஞ்சுக் கெடக்குற ஆம்பளைகளுக்குச் சாப்பாடு கொண்டு போய்க் குடுக்குறதாயும் கேள்விப்பட்டு போலீசுக்குக் கோவம்.

ரெண்டு மூனு நாளு கழுச்சு கோயில் கோபுரத்துல கொஞ்சப் பேரு ஒளுஞ்சிருந்தாங்கன்னு யாரோ போலீசுக்குச் சொல்ல, போலீசு

கும்பலா போயி கோபுரத்துல ஏறி அங்ன இருந்தவுகள பூரா புடுச்சிட்டு சாலியக்குடி தெருவழியே இழுத்துக்கிட்டுப் போனாக.

பங்குச்சாமியாருதான் போலீசுக்குத் தகவல் குடுத்ததா பொம்பளைக சொல்லிக்கிட்டாக. கோயில் கோபுரத்துல இருந்தவுகள்ள ஒரு ஆளு எப்பிடியோ தப்புச்சுட்டுவர போலீசு வெரட்டி இருக்குது. அப்ப சாமியாரு வயல்ல வேறசாதி ஆளு உழுதுக்குட்டு இருந்துருக்காரு. தப்புச்சி வந்தவரு உழுதுக்கிட்டு இருந்தவர்கிட்ட இருந்து கலப்பையை வாங்கி, மேலுகாலெல்லாம் சேத்த அள்ளிப் பூசிக்கிட்டு அவரப் போகச் சொல்லிட்டாராம். இவரும் மாட்டப் பத்திக்கிட்டு போலீசுக்கு மூஞ்சியச் சரியாகக் காட்டாமலே உழுது செமாளிச்சாராம். இப்பிடி என்னென்ன பாடுக பட்டும் முக்காவாசிக்கும் மேல ஆளுக புடிபட்டுட்டாக. கொஞ்சப்பேரு மலங்காட்டுகள்ள மறஞ்சு கெடந்தாக.

கோட்ல கேசு நடந்துச்சு. ஆளுகளப்பூரா மருதச் செயிலுக்கு மாத்திட்டதாச் சொன்னாக. கேசு நடத்தத் துட்டு இல்ல. அதுக்கும் பொம்பளைகளா வரிப்பிரிச்சு கேசு நடத்த துட்டுக்கு ஏற்பாடு பண்ணுனாக.

இந்தச் சமயத்துல பாத்து வடக்குத் தெருவுல ஒரு வீட்ல ஒரு பத்துவயசுப் பையன் செத்துப்போனான். அவுக எங்களுக்குக் கொஞ்சஞ் சொந்தங்கூட. கல்லறப் பக்கம் போகக்கூட நெறயப் பேருக்குப்பயம். சாலியப்பெயலுக இருப்பானுக. போலீசு இருக்கும். எங்க தெருவுக்குள்ள ஆம்பளவாடயே இல்லை. இற்த நெலயில பெணத்த வச்சுக்குட்டு என்ன செய்யுறதுன்னு எல்லாம் முழுச்சுக்குட்டு இருந்தாக. பெதைக்க முன்னாடி அவுகய்யா வந்து பாக்கனுமேன்னு வேற தவிப்பு. எங்க பாட்டியும் இன்னும் ரெண்டுமூனு பெரிய மனுசிங்கள்ளாஞ் சேர்ந்து ஒக்காந்து யோசிச்சு ஒரு முடிவெடுத்தாக.

அதுபெரகாரம் ரெண்டுபேரு போய் மண்டவத்துக் காட்டுல ஒளுஞ்சிருக்கிற அவுக அய்யாவைக் கூட்டியாரானும். போம்போது ஒரு சீல கொண்டு போகனும். மசங்கப்போயி கூட்டிக்கிட்டு ராவோடராவா வீடு வந்துசேரனும். கொண்டு போன சீலையை அவரக் கெட்டச் சொல்லி பொம்பளைகமாறி வந்துரனும். கொஞ்சம் பேரு சாயங்காலமா மம்முட்டிகளோட கல்லறைக்குப் போயி பெணத்தப் பெதைக்க ஒரு குழி வெட்டனும்.

குழி வெட்டும்போது யாராவது வந்து தகராறு பண்ணுனா என்ன பண்றதுன்னு ஒருத்தி கேட்டாளாம். ஒடனே எங்கபாட்டி, போடி பைத்தியக்காரி, சாலியப்பெயல்க ஒன்னுக்கு ரெண்டுக்குப் போறதுக்குக்கூட பேட்ரிக் கட்டையுங் கையுமா கூட ரெண்டு போலீசுக்காரனையும் தொணைக்குக் கூட்டிட்டுப் போறானாம்.

நம்ம கூட்டமா போயி மசங்குற நேரத்துல நின்னா கொல்லைக்குக் கூடப் போமாட்டானுக. இந்த போலீசுக்காரன வச்சுதான் அவனோட ஆட்டம் பாட்டமெல்லாம். பொழுதுளுகுற டயத்துல போலீசுக்காரங் கூட கல்லறப்பக்கம் போமாட்டானுக. நல்லா ஒசித்தீவனந்தின்னுட்டு மல்லாந்து கெடப்பானுகன்னு சொன்னா களாம்.

ஊருக்குள்ள இருந்து மண்டவம் மேற்க நாலஞ்சு மைல் தொலவு. மண்டவத்துக்கிட்டத்தான் ஒரு ஆலமரமிருக்குதாம். அதோட தூருல கொள்ளிவாய்ப் பெசாசு ஏழு அண்டாப்பணம் வச்சு காவக்காத்துக்கிட்டு இருக்குதாம். அந்தப் பக்கம் போறவுக வாரவுககிட்ட அண்டாப் பணத்தக்காட்டி ஆசைய ஊட்டுமாம். கண்ணு தீப்பந்தமா சொலிக்குமாம். வாயிலருந்தும் மூக்குலருந்தும் பொகையா வருமாம். அது எந்த ரூவத்துலயும் வருமாம். செலபேரு பச்சப்புள்ள மாறி, செலபேரு நாய்மாறி, செலபேரு கொமரி மாறிகூட பாத்துருக்காகளாம். அந்த மண்டவத்துக்குத்தான் பொம்ப ளைக சீலய எடுத்துக்கிட்டு விர் விர்னுநடந்து போனாகளாம்.

கொஞ்சப்பேரு மசங்குனப்பெறகு மம்முட்டிகளத் தூக்கிக்கிட்டு கல்லறயில் போயி குழிவெட்டுனாகளாம். பத்துப் பன்னெண்டு மணிவாக்குல சீலயக் கட்டின மாணிக்கா அவுக அய்யா வந்து பாத்துட்டு சத்தம் போட்டுக்கூட அழ முடியாம உக்கிப்போயி நின்னாராம். வார வழில போலீசுக்காரனுக மடக்கிக் கேட்டானாம். கூடப்போன பொம்பளைக ஒப்பாரி வச்சு இந்த மாறி ஆயிப்போச்சு சாமி, பக்கத்து ஊர்ல துட்டி கேக்க வர்ரோம்னு அழுதாகளாம். போலீசு போகச் சொல்லிட்டானாம்.

ராத்திரி பூரா முளுச்சுக்கெடந்து கோழி கூப்டுதுக்கு முன்னாடியே எந்துருச்சு பணத்தையும் தூக்கிக்கிட்டு பொம்பளை களா கல்லறைக்குப் போயி பெணத்த பெதைச்சிட்டு வந்துட்டா களாம். நல்லா விடியுறதுக்கு முன்னாலய கெட்டுன சீலயோடய அவுக அய்யா ரெண்டு பொம்பளைகள கொஞ்சதூரம் வரைக்கும் கூப்புட்டுக்கிட்டுப் போய் மறுபடியும் மண்டவக் காட்டுக்கே போயிட்டாராம். மறுநாள் ஊர் பூரா இதே பேச்சுத்தான். பொம் பளைகளா இருந்தாலும் கெட்டிக்காரிகதான். எம்புட்டுச் சுளுவா காரியஞ் செஞ்சுருக்காளுகன்னு எல்லாரும் மெச்சிக்கிட்டாங்க.

பெறகு கொஞ்ச நாள் கழுச்சு புடுச்சுட்டுப் போனவுகள்ள கொஞ்சப் பேரு சாமீன்ல வந்துட்டாக. கொஞ்சப் பேர அடச்சுவச்சு கிட்டாக, வாய்தா வாய்தான்னு போயி ரொம்ப நாளா கேஸ் நடந்துச்சு. எடயிலயே போலீசுகிட்ட அடிபட்டு ரத்தம் கக்குன நடுத் தெரு அல்போன்சு செயில்ல வந்த ரெண்டாவது நாளே செத்துப் போனாரு. எம்புட்டு தெடகாத்ரமான மனுசன். இப்பிடி போலீசு

அடிச்ச அடியில பொட்டுன்னு போயிட்டான்னு சொல்லி அழுது பெதச்சாக. கொஞ்சங் கொஞ்சமா கல்லற சண்டைய மறந்துக்கிட்டு வந்தோம். பறக்குடியும், சாலியக்குடியும் மறுபடியும் சகசமா பழக ஆரம்பிட்டாக. சாலியக்குடி ஆத்தாக்கமாரு பழயபடிக்கு பறக் குடிக்குச் சாணிபெறக்க, பயறு பச்ச புளியங்கொட்டை விக்க வந்து போனாக.

திடீர்னு ஒரு நாளு பள்ளிக்கொடத்துல இருந்து வரும்போது எல்லாரும் பஸ் ஸ்டாண்டுப் பக்கமா ஓடுனாக. அப்ப நானு வேற கிளாசுக்குப் பாஸ்பண்ணிப்போயிருந்தேன். என்னன்னு கேட்டப்ப கல்லற கேசு நம்ப பக்கம் செவிச்சிடுச்சு. செயில்ல இருந்து அம்புட்டுப் பேரும் விடுதல ஆகி வீட்டுக்கு வர்ராகன்னு சொன்னாக. நானு நேரா வீட்டுக்குப்போனேன். பைக்கட்ட வீசிட்டு வெளியே ஓடியாந்து மத்த பிள்ளைகளோட வேடிக்கைப் பாக்கப்போனேன். எங்க தெரு ஆளுக செயில்ல இருந்து வந்தாக. அவுங்க புருசமார் வீட்டுக்கு வந்த ஒடனே வீட்டுக்கு முன்னால ஒரு ஒலக்கயப் போட்டு அதத் தாண்டச் சொன்னாக. ஒலக்கயத் தாண்டுனப் பெறகு தண்ணி கொண்டாந்து வச்சு குளிப்பாட்டுனாக. பெறகு புது வேட்டி துண்டு எடுத்துப்போட்டு வீட்டுக்குள்ள போனாக. செயில்ல இருந்து வந்தவுக ஒவ்வொருத்தக வீட்டுலயும் இப்பிடித்தாஞ் செஞ்சாக. எங்குட்டுப் பாத்தாலும் சிரிப்பாணிதான்.

"நம்ம பாட்டெ பூட்டெங் காலத்துல இருந்து இந்தக் கல்லறையில பெதச்சுக்கிட்டு வாரோம். இவனுக இன்னைக்கு வந்து அடாவிடித்தனம் பண்றானுக. கடவுளுக்கே பொறுக்கல. அதாங் கேசு நம்ப பக்கம் செவிச்சுருச்சு."

"அந்த அந்தோணியாருதா நம்மளுக்கு வெற்றி கொண்டாந்துட்டாரு."

"பறப்பெயன்னா லேசுப்பட்டவனுகன்னு நெனச்சுக்கிட்டு ருந்தானுக. அந்த நெனப்புல தேவமாதா மண்ணள்ளிப் போட்டுட் டாருல்ல."

"வார நாயித்துக்கெழம இதுக்கு நன்றியறிதல் பாட்டுப்பூச வைக்கனும்."

"பாட்டுப்பூச எதுக்குடி வைக்கனும், இந்த சாமியாரு கால்தூசி மொயற்சி எடுத்தாரா? நம்மாளுக கோயில்ல ஒளிஞ்சுக் கிட்டுருந்து புடிபடும்போதுகூட கால்மேல கால்போட்டு பங்களா வுல சுருட்டுக்குடுச்சுக்கிட்டு பாத்துக்கிட்டு இருந்துருக்காரு."

"அதுமட்டுமில்ல மதினீ, வாய்தாவுக்குப்போக ரூவா இல்லாம சாமியார்கிட்ட கடனா கொஞ்சம் ரூவா கேட்டதுக்கு குடுக் கவே முடியாதுன்னுட்டாராம்."

இப்பிடி பலபேரு பலவெதமா தெருவுகள்ள பேசிக்

கிட்டாக. எப்பிடியோ கேசு எங்க பக்கமா முடிஞ்சதுபற்றி ஊருக் குள்ள ஒரே சந்தோசம்.

இந்தச் சாதி சண்டைக்குப் பெறகு பலதடவ பள்ளம் பறையனுக் கெடயில சண்டை வந்துருக்கு. ஒவ்வொரு தடவயும் ஒவ்வொண்ண வச்சுக்கிட்டு இந்த ரெண்டு சாதிக்குள்ள சண்ட நாறிப்போகும் நாறி.

மொதத்தடவ பள்ளனுக்கும் பறயனுக்கும் ஒரு வாழப் பழத்துனால சண்ட வந்துருக்கு. ஒண்டிவீரன்னு ஒரு பள்ளத்தெரு ஆளு மாட்டு வண்டில வாழத்தாரு ஏத்திட்டு வந்துருக்காரு. தவசி பேத்தியாவோட பேரன் பவுலுப்பெய போயி அதுல ரெண்டுமூனு பழத்தப் பிச்சுத் தின்னு போட்டான். மொத வாப்பேச்சுலயே கெட்ட வார்த்தை பேசி சண்ட போட்டுக்கிட்டு இருந்தவனுக பெறகு அடிபுடி சண்டையில எறங்கிட்டானுக. அங்குட்டு நாலு பள்ளனுக சேந்து பவுலுப் பெயல செம அடி அடிச்சு போட்டானுக. இவெ ஊருக்குள்ளே வந்து வஞ்சுக்கிட்டு சங்கதிய சொல்லிக்கிட்டு இருக்கை யிலேயே கம்புகத்திகளோட பறக்குடிக்குள்ள பள்ளனுக புகுந்துட் டானுக. பறக்குடில ஆளுக அம்புட்டுபேரு அப்ப இல்ல. பட்டாளத் துல லீவுக்கு வந்திருந்த சூசை, கொழந்தப்பெய இப்பிடி இன்னும் ரெண்டுமூனு பெரியவுகளா சேந்து கையெடுத்து கும்புட்டுக்கிட்டே பள்ளப்பெயலுகட்ட சமரசத்துக்குப் போயிருக் காக. அவனுக கல்லெறிய நிப்பாட்டல. இருந்தாலும் துணிஞ்சு போயி என்னப்பா ஒரு வாழப்பழத்துக்கா நாம குத்திக்கிட்டு சாகனும். சமாதானமா ஊர்க்கூட்டம் போட்டு முடிச்சிக்குவோம்னு கெஞ்சி சம்மதிக்க வைக்குறதுக்குள்ள பெரும்பாடாப் போச்சாம். பெறகு ஒரு வழியா ஊர்க்கூட்டம் போட்டு பவுலுப் பெயலத் தெண்டுச்சாகளாம்.

இந்த சண்டைக்குப் பெறகு ரெண்டு சாதிப்பெயல்களும் வர்மம் வச்சுக்கிட்டே இருந்தானுக. நாலஞ்சு மாசத்துக்குப் பெறகு ரேசங் கடையில வச்சு இன்னொரு சண்ட வந்துருக்கு. அந்தப் பெஞ்சமினு மகா புள்ள பொண்டுகப் பெய போயி ரேசங்கடையில மல்லுக்கட்டி பள்ளனுக்கும் பறையனுக்கும் திரும்பியுங் கலகம் வந்துருச்சு. இந்த வாட்டி ரெண்டுபெயல்களுமே ஆங்காரம் புடுச்சுப் போயி வெட்டிக்கவா குத்திக்கவான்னு சண்ட போட்டுருக்கானுக. பள்ளப்பெயல்க கம்மாக்கரையுல நின்னுக்கிட்டு கல்லுட்டயே எறுஞ்சுருக்கானுக. பறக்குடி ஆம்பளைகளும் கல்லக்கொண்டு எறிய சண்டபெலத்து வந்துருச்சு. பறக்குடியில இருந்த செல தைரியம் புடுச்ச பொம்பளைகளுங் கையுல இட்லிச் சட்டி மூடியவச்சு வர்ர கல்லத் தடுக்கப்புடுச்சுக்கிட்டு கல்லெடுத்து எறுஞ்சுருக்காளுக.

இப்பிடிச்சண்ட நடந்துக்கிட்டு இருக்கையிலேயே பட்டா

ளத்துக்கார சூசை வயக்காட்டு வழியா உழுந்தடுச்சு டேசனுக்கு ரிப்போட்டு பண்ணப் போயிருக்காரு. போறவழியில நாலஞ்சு பள்ளனுக அருவாளுங் கையுமா கரையுல அலயுதப் பாத்துட்டாரு. எந்தச் சாமிசெஞ்ச புண்ணியமோ, சட்டுன்னு காலுகைய கழுவுதுக் குப் போறமாறி அந்த காக்கா மண்டகெணத்துக்குள்ள எறங்கி ஒளுஞ்சுக்கிட்டாரு. அவனுக தலமறையவும் பெறகு வரப்புக்காட்டு வழியா உளுந்தடுச்சு ஓடி போலீசக் கூட்டியாந்துட்டாரு. போலீசு வரவும், எல்லாப் பெயல்களும் காக்கா கூட்டங்கெணக்கா பிச்சுக் கிட்டு ஓடிட்டானுக.

பெறகு ஒருவழியா சமரசஞ் செஞ்சு வச்சப் பெறகு கொஞ்ச நாள் கழிச்சு மொனங்கி மகன் செக்கடி கடையில என்னமோ வாங் கிட்டு நின்னவன, பள்ளனுக சேந்து செம அடி அடிச்சிருக்கானுக. தப்புச்சோம் பொழச்சோம்னு அவெந் தெருவுக்குள்ள ஓடியாந்து சொல்ல அப்பொருக்கா பெரிய கலவரம் வந்துருக்கு.

சண்ட கொஞ்சம் தனிஞ்சாப்ல இருக்கையுல காட்டுக்குப் போன பறப்பெய ஒருத்தன, பள்ளனுக சேந்து தாறுமாறா வெட்டி அங்னயே பெதச்சிட்டானுக. பறப்பெயலுக போயி பெரேதத்தைத் தோண்டி எடுத்துட்டு வந்து கல்லறைக்குள்ள வச்சிட்டு, சமயம் பாத்துக்குட்டு இருந்து கெழக்க எங்கயோ ஆடு மேய்க்கப்போன அப்ராணி பள்ளப்பெய ஒருத்தனைப்புடுச்சு கொன்னுபோட்டானுக. பெறகு போலீசு வந்து ரெண்டு சாதிக்காரப் பெயலுகளையும் புடுச்சு டேசன்னுக்குக் கொண்டு போய் நொறுக்கித் தள்ளி செயில்ல போட்டு சாத்திட்டானுக.

கேசு நடந்துக்குட்டு இருக்குது. வாய்தாக்கு மேல வாய்தா. கேசு இருக்குறதுனால சூத்தப் பொத்திக்கிட்டு ரெண்டு பெயல்களும் அலயுறானுக. என்ன ஆகுமோ கடவுளுக்குத்தான் வெளுச்சம். இப்பிடி சண்டைக்காடு போடுறானுக - பெறகு ஒன்னுக்குள்ள ஒன்னு கூடிக்கிறானுக. இருந்திருந்தாப்ல திடீர்னு மல்லுக்கெட்டும் வெட்டுங்குத்துமா அலையுறானுக. நாத்தமெடுத்த பெயசாதி. இவனுகளுக்குள்ளயே இப்பிடி நொடிக்கு நூறுதரம் மல்லுக்கெட்டு வருது. மேச்சாதிக்காரனுக இருக்குற ஊருக்குள்ள ஒரு ஒத்துமையா இருக்கனுமேன்னு இல்லாம, என்னக் குத்தவா ஒன்னக் குத்தவான்னு அலஞ்சா எல்லாப் பெயலுகளும் ஏறி மேயத்தாஞ் செய்வானுக.

# நான்கு

சின்னப்பிள்ளயிலிருந்தே நான் கஸ்டப்பட்டு ஒழைக்கற சனங்களப் பாத்து, அவுங்களோடவே வளந்து வந்துருக்கேன். வீட்ல எங்கம்மா, எங்க பாட்டிங்களும் விடிஞ்சதிலிருந்து அடஞ்சதுவர வேலதான் செய்வாங்க. எங்க ஊருச் சனங்களும் ஆணும் பொண்ணும் எடவிடாத வேலைகதான் செஞ்சு பொழக்கிறாக.

பலதரப்பட்ட வேலைக இருக்குது. காட்டு வேலன்னு எடுத்துக்கிட்டா உழுகுறது, ஒரம் போடுறது, தண்ணி பாச்சுறது, வெத வெதக்கிறது, நாத்துப்பாவுறது, நடுறது, கள எடுக்குறது, மருந்து அடிக்கிறது. கதரறுக்குறது, களத்துவேல, கடல போடுறது, காயுறுவறது, நெத்தெடுக்குறது-இப்பிடி ஏகப்பட்ட வேலைக இருக்குது. கெணறு வெட்டுறது, மண்ணு-சரளக்கல்லு அள்ளிச் செமக்கறது இப்பிடியும் இருக்குது. ஓலவேலை, செங்கச்சுட்டு அறுக்குறது இப்பிடி ஏதாச்சும் ஒன்னு செஞ்சுதான் சாப்புடனும்.

முக்காவாசிக்கும் மேம்பட்ட நெலம் நாய்க்கமார்க் கிட்டத்தான் இருக்குது. எங்கசாதி ஆளுக அவுகளுக்கு குடும்பங் குடும்பமா பண்ண வேலயும் செய்றாக. நா பாத்தமட்டுக்கும் இந்தமாறி வேலகள இந்த பள்ளுபறச்சாதிகதான் செய்துக. மத்த சாதிக்காரக இம்புட்டு கஸ்டப்பட்டு செய்றதில்ல. இந்த கொற வனுக, சக்கிலியங்க, தெருக்கூட்டி, வாறுகால்ல சாக்கடை அள்ளி சுத்தம்பண்ணி பொழைக்கிறாக. சொளகு, பொட்டி, நெல்லு தூக்குறகூட, பாஞ்சாலிக்கூட இதெல்லாங் கூட இவுக பின்னி விப்பாக. எங்கசாதியில எல்லாருமே கஸ்டப்பட்டு ஒழைக் குறவுகதான். செல வாத்திமார்க குடும்பங்க கொஞ்ச வசதியோட இருக்காக.

எங்க பாட்டி சரியான வேலக்காரின்னு எல்லாருஞ் சொல்லுவாங்க. நாய்க்கமார்க்கிட்ட பண்ண வேல பாத்துக்கிட்டு, அவுகளுக்கு வேலைக்கு ஆள் அமத்தி பொறுப்பா கூட்டிக்கிட்டுப் போயி, வேலவாங்கி, சம்பளம் வாங்கிக் குடுத்து-இப்பிடி கொத்தாளுவேல அவுகளுக்கு. நாயித்துக்கெழம தவர எல்லா நாளும் வேலைக்குப் போயாகனும். செலநேரம் நாய்க்கமாருக கெடுபிடி பண்ணுனா நாயித்துக்கெழம வெள்ளனத்துலயே போயி அரக்கப்பரக்க பூசைபாத்துட்டு வேல வெட்டிக்கு ஓடிப்போவாக.

கோழி கூப்டறதுக்கு முன்னாடியே ரெண்டுமணி மூனு மணிக்கு எந்துருச்சு, தண்ணி எடுத்து, வீட்டு வேலைகளப் பாத்துட்டு, அம்புட்டு தொலவட்டுக்கு நடந்தேபோயி, மசங்குற வரைக்கும் வேல செஞ்சுட்டு, ராத்திரி போல வீடு வந்து, பெறகு கஞ்சி தண்ணி காச்சுவாக.

நாங் கொஞ்சம் வளந்த பெறகு என்னையும் எங்கபாட்டி காடுகரைகளுக்குக் கூட்டிட்டுப்போவா. எங்க வீட்டுல அப்பிடி ஒன்னும் வசதி கெடயாது. அதுனால நான் பள்ளிக்கொட நாள்ல பள்ளிக்கொடம் முடிஞ்சபெறகு உயிர்வேலி முள்ளு, பனமட்ட, தென்னமட்டன்னு எரிக்கிறதுக்கு பெறக்கிட்டுப்போவேன். சாணிபெறக்கி எரு தட்டி வப்பேன், வயக்காட்டுச்செம போயி காஞ்ச எரு பெறக்கிட்டு வருவேன். பள்ளிக்கொடத்துக்கு லீவு உட்டுட்டாங்கன்னா எங்க பாட்டி கூட அல்லது யார் கூடயாவது சேந்து காட்டு வேலைக்குப் போயிருவேன். கடல புடுங்க, கடல கெளய, கடல ஒடைக்க இப்பிடித்தான் அதிகம் போயிருக்கேன். மத்த வேலைகளுக்குச் சின்னப்பிள்ளைகள அமத்த மாட்டாங்க.

கடலபுடுங்கி ஆயனும்னா விடியங்காட்டி கோழிகூப்ட எந்துருச்சு, தூக்குச் சட்டியில கூழ ஊத்திக்கிட்டு ஓடணும். போயி கடலச் செடிகளப் புடுங்கிப்போட்டுக்கிட்டு ஒக்காந்து கடல ஆயணும். எடயில மதியத்துக்கு கடலயக் கடிச்சுகிட்டு கூழக் குடிப்போம். மசங்குறவரயுல கடல ஆஞ்சு நாய்க்கமாருக கிட்ட களத்துக்குத் தூக்கிட்டுப் போவோம். அவுக பண்ணையாள விட்டு மரக்கா கணக்கா அளந்து, மரக்காலுக்கு அஞ்சுபைசா, அல்லது பத்து பைசா குடுப்பாங்க. முக்கிமுக்கி ஆஞ்சாலும் அஞ்சு ரூவாக்கு மேல வராது . அத வாங்கிக்கிட்டு பொழுது சாயத்தான் வீட்டுக்கு வருவோம். வந்த பெறகு அரிசி கிரிசி வாங்கி ஒல வச்சு ரவைக்குக் கஞ்சி காச்சனும்.

கடல கெளயப் போறதுன்னா கொஞ்சம் லேட்டா போவோம். அங்ன இங்னயுமா, கடல புடுங்குன காட்டுகள்ள போயி வேகாரிக்கு மம்முட்டிய வச்சு லொங்கு லொங்குன்னு தரய கெளஞ்சு கடல பெறக்குவோம். இதுக்குக்கூட நாய்க்கமாரு உடமாட்டாங்க வெரட்டி வெரட்டி கல்லுட்டயும் கட்டிட்டேயுமா எறுஞ்சு தொரத்தி உடுவாங்க. செல நாய்க்கமாரு கெளஞ்ச கள்ளயில மூனுல ஒருபங்கு இல்லன்னா ரெண்டுல ஒரு பங்கு அவுகளுக்குக் குடுக்கனும்னு பேசிக்கிட்டு கெளய உடுவாங்க. கள்ள கெடச்சா உண்டு. இல்லன்னா இல்ல. ஆனா சாயங்காலத்துல, கெளஞ்ச கள்ளயப் பகுந்துகிட்டுத்தான் நாய்க்கமாரு வீட்டுக்கு உடுவாங்க. மீதிக் கள்ளய கொண்டாந்து செக்கடில யாவாரிக் கிட்ட வித்துட்டு அரிசி அல்லது குருநா வாங்கிட்டுப் போவோம். கெடைக்குற

துட்டுக்குத்தக்கன அரிசியோ குருநாவோ வாங்குவோம். குருநாக் கஞ்சிய வாயுல வைக்க முடியாது. வீச்சமெடுத்துக் கெடக்கும். துட்டு இல்லன்னா குருநாக் கஞ்சிதான். நாஞ் செலசமயம் வித்து ரூவாயைக் கொண்டாந்து எங்கம்மாக்கிட்ட குடுப்பேன். இல்லன்னா கள்ளயாவே கொண்டாந்து குடுப்பேன்.

கள்ள ஒடைக்குறதுக்கு விடியக்கருக்கல்ல நாய்க்கமாருக வீட்டுக்குப் போவோம். அங்கேயும் மரக்கா கணக்குல காஞ்ச கள்ளய அளந்து குடுப்பாக. அவுக மாட்டுத் தொழுவத்துல ஒக்காந்து பொடு பொடுன்னு ரெண்டு கையிட்டயும் மாறி மாறி கடலய எடுத்து தரையில குத்திக் குத்தி ஒடைக்கனும். ரொம்ப வேகமா ஒடைக்கனும்னா ரெண்டு கையிட்ட மட்டுமில்லாம, வாயிட்டயும் ஒடப்போம். வாயுட்ட ஒடைக்கும்போது தூசி பூரா வாயுக்குள்ள போகும். தொண்டை கமறெலெடுத்துக்கும். அதெல்லாம் பாத்தா முடியுமா? மடமடன்னு ஒடச்சு தள்ளனும். அப்பிடி ஒடக்கையில பருப்பு ஒடஞ்சு போகாம கவனமா ஒடைக்கனும். ரொம்ப பருப்பு ஒடைஞ்சுப் போனா நாய்க்கரு வைவாரு. ஒடைஞ்ச பருப்ப வெதைக்க முடியாதுல்ல- அதுக்குத்தான். எடயில பேசிக்கிட்டிருந் தாலோ, ஒன்னு ரெண்டு பருப்பத் தின்னுட்டாலோ போச்சு. நாய்க்கருக்கு கெட்ட கோவம் வந்து கண்டமானிக்க வைவாரு. மரக்காலுக்கு அஞ்சு அல்லது பத்து பைசான்னு தருவாங்க. இதுலயும் அவ்வளவு துட்டு கெடைக்காது. மிஞ்சி மிஞ்கிப் போனா அஞ்சாறு ரூவா கெடைக்கும். இப்பிடியும் நானு லீவு நாளுகள்ள எங்க பாட்டிகூடப் போயிக் கடல ஒடச்சிருக்கேன்.

இப்பிடி எந்த வேலயும் கெடைக்கலைன்னா ஈராங்கா பெறக்க, முள்ளுப்பெறக்கன்னு போயிருவேன். கொஞ்ச நாளு மலங்காட்டுச் செம வெறகுக்குப் போன பிள்ளைகளோட வெறகு பெறக்கப் போனேன். அப்பிடிப் போறதுக்கு வெள்ளங்காட்டியே எந்துருச்சு தூக்குச்சட்டில கூழு ஊத்திக்கிட்டு காடருக்குக் குடுக்கறதுக்கு நாலனா எங்கம்மாகிட்ட வாங்கிட்டுப் போகனும். காடருக்குத் துட்டுக் குடுக்காட்ட வெறகு பெறக்க உடமாட்டாரு. அவுரு பாரஸ்டு பங்களாவுல இருப்பாரு. திடீர்னு சோதனைபோட வருவாரு.

மலங்காட்டுக்குள்ள போறது அம்புட்டு சொலபமில்ல. ஆளோட ஆளா ஏறிப்போயி, அங்ன ஒன்னு இங்ன ஒன்னுமா கெடக்குற காஞ்ச வெறகுகளப் பெறக்கி, ஒன்னுசேத்துக் கட்டணும். கட்டமுன்னாடி மூஞ்சிமொகற, கை, காலுன்னு பாக்காம முள்ளுக்காடு பெறாண்டிப்போடும். தோலெல்லாம் கீறி ரத்தம் வரும். அதெல்லாம் பாத்துக்கிட்டு நின்னா வெறகு பெறக்க முடியாது. முடியையும் கண்ட மாணிக்கப் புடுச்சு இழுத்து தலவலி

மண்டயப் பௌக்கும். எங்குட்டு கூடித்தான் போறதுன்னு தெரியாது. அங்க என்ன ரோடா போட்டு வச்சிருக்கு? நாமதான் முட்டி, மொளஞ்சு, மோதி பொதருக்குள்ளயும், முள்ளுக்குள்ளயும் போகனும்.

இந்தப்பாடுபட்டு வெறகப் பெறக்கிக் கெட்டிக்கிட்டு, தூக்கித் தலையில வச்சு நடந்து வரமுடியாது. இங்குட்டு ஒன்னு புடுச்சு இழுக்கும் அங்குட்டு ஒரு கொடியோ, மரமோ தடுக்கும். இப்பிடி லேசுக்குள்ள கீழே வந்துர முடியாது. மெள்ள மெள்ள வெறகுக் கெட்ட உருட்டி உருட்டித் தள்ளிக்கிட்டே ஊந்து வரனும். ஒரு வழியா மல அடிவாரத்துக்கு வந்து சேந்தப்பெறகு அங்கருந்து தலயில வெறகுக் கட்ட வச்சு சொமந்துக்கிட்டு ஊர் வர்ரதுக்குள்ள மீதி இருக்கிற உசிரும் போயிடும். அவ்வளவு கனங்கனக்கும். மலங்காட்டுக்கும் ஊருக்கும் எடயில கொஞ்சனஞ்ச தூரமில்ல. கொண்டாந்து அத நாய்க்கமாரு தெருவுல போட்டு, கெட்டு 7 அல்லது 8 ரூவான்னு வித்திருவாங்க. நாங்கொண்டுவந்த வெறகுக் கட்ட வித்ததில்ல. வீட்டுக்கு எரிக்கறதுக்குக் கொண்டு போயிருவேன்.

எங்கம்மாவும் அப்ப வெறகு பெறக்கப் போயிருக்காங்க. ஒரு தடவ வெறகுக்கெட்டக் கொண்டாந்து வீட்டுச் செவத்துல ஊனிட்டு, ரத்த ரத்தமா வாந்தி எடுத்தாங்க. இப்பிடித்தான், ஒடம்பு ஒடம்புன்னு பாராம எங்க சனங்க ஒழச்சாத்தான் கூழாவது குடிக்க முடியும். ஒரு பத்துப் பன்னெண்டு வயது ஆச்சுன்னா இப்பிடி ஏதாவது ஒரு வேலைக்குப் போயிருங்க. அதுவரைக்கும் வீட்ல பிள்ள தூக்கிட்டு அலயுங்க. அப்பிடியே முள்ளு கிள்ளுப்பெறக்கி கூழு கூட காச்சி வச்சிருங்க. வீட்ல இருக்கிற சகல வேலயும் பொம் பளப் பிள்ளைகதான் பாக்கனும். வேலைக்குப் போயிட்டு வந்து சாயங்காலத்துல பொம்பளைக வீட்டு வேலகளப் பாப்பாக. பயலுகளா இருந்தா ஆடு மாடுகள மேச்சிக்கிட்டு அலயுவானுக. கொஞ்சம் பெருசாயிட்டா பெரிய ஆம்பளக மாதிரி வேல வெட்டிக்குப் போயிருவானுக.

கதுரறுக்குற காலம் வந்துருச்சுன்னா ஒரு சொளகையும், கட்ட வௌக்க மாத்தையும் தூக்கிக்கிட்டு கம்மாக்கரை, நாராச ஓட இப்படி எங்குனகுள்ளயாவது நின்னு, அப்பிடிக்கூடி களத்துக்குப் போற கதுர் கட்டுகள்ள இருந்து உளுகுற நெல்லுகள கூட்டிப்பெறக்கி அள்ளிப் பொடச்சு வீட்டுக்குக் கொண்டாருவோம். சின்னப்பிள்ளைக, கெழடு கெட்டைகதான் இப்பிடி நிக்கிறது. பெரிய பொம்பளைக, கொமரிகள்ளாம் வயக்காட்டுக்கே போய் கூடை வச்சு நெல் தூத்துக் கொண்டாருவாக.

இப்பிடி வம்பாடுபட்டு நெல் பெறக்கியோ, தூத்தோ கொண்டு வந்து கடைகள்ளதான் போய் போடுவோம். இந்த

நாடாருக எங்க தெருவுகள்ள கடைகள வச்சுக்கிட்டு எடைக்கு எடை சீனிக்கெழங்கு இல்லன்னா நெல்ல வாங்கிக்கிட்டு வேற சாமானுக இப்பிடித் தருவாக. இப்பிடி பண்டமாத்தஞ் செய்யறதுல எம்புட்டு கள்ளவானித்தனம் பண்றாங்கன்ன அப்ப புரிபடல.

அதே மாரித்தான் பருத்திவெடுச்சு கெடக்கையில பருத்தி எடுத்துட்டு வந்து இப்பிடி கடைகள்ள பண்டமாத்தஞ் செய்வோம். கடக்காருக இந்த மாறி ஏமாத்தியே மூட்ட மூட்டையா நெல், பருத்தி சேத்துருவாக. பாதி ஒழப்ப நாய்க்கமாருக சொரண்டிப் போடுவாக. மீதி இருக்குறத இப்பிடி இவுக சொரண்டிப் போடு வாக. பெறகு எங்குட்டிகூடி முன்னேற முடியும்? ஏமாத்துறவனு கதான் முன்னேற முடியுது. நாயத்துக்குக் கெட்டுப்பட்டு வம்பாடு பட்டு ஒழைக்குற தலித்துக முன்னேற வழியே இல்ல.

நான் ஊர்ல எட்டாங்கிளாஸ் படிக்கிற வரைக்கும் இப்பிடி வேல செஞ்சுக்கிட்டு இருந்தேன். இப்பிடி நாய்க்கமாருகளுக்கு வேலைக்குப் போம்போதெல்லாம் அவுக சாமாஞ்சட்டிகளத் தொட்டுரக் கூடாது; அவுக இருக்குற பக்கம் போக்கூடாது; ஒதுங்கியே நிக்கனும். இப்பிடி சட்டம் போடுவாக. வெக்கமாகவும், வேதனையாவும் இருக்கும். இருந்தாலும் ஒன்னுஞ் செய்ய முடியாது. அவுக ஒசந்தசாதி, அவுக கிட்டதா துட்டு இருக்கு. அவுக சொல்றபடிதான் நாங்க கேக்கனும். எனக்குள்ள ஆங்காரமா வந்தாக்கூட எங்க தெரு பொம்பளககூட ஒதுங்கியேதான் நின்னுருக் கேன்.

ஒம்பதாங்கிளாஸ் படிக்க பக்கத்து ஊர்ல இருந்த மடத்துல சேத்து உட்டாங்க. அங்க இந்த மாறியெல்லாம் வேல வெட்டி இல்ல. சாப்புட்டுச் சாப்புட்டுப் படிக்கனும், அம்புட்டுத்தா. லீவுக்கு ஊருக்குப் போயிருவேன். மடத்துல போய்த் தங்கிப் படிச்ச பிள்ளைகளுக்கு ஊர்ல ஒரு தனி மவுசுதான். இருந்தாகூட லீவுக்கு வீட்டுக்குப் போனப்ப நான் வழக்கமா வேல செஞ்சுக்கிட்டுத்தான் இருந்தேன்.

பத்தாங்கிளாஸ் முழுப்பருச்சை எழுதிட்டு லீவுக்கு வீட்டுக்குப் போனேன். எங்கம்மா நாய்க்கமாரு தெருவுல இருந்து மாவெறகு பெறக்கி கெட்டிச் செமந்துட்டு வந்தாங்க. நானுங்கூடப் போயி ரெண்டு மூனு நடை மாவெறகு பெறக்கிக் கெட்டித் தூக்கியாந்தேன். நாய்க்கமாரு தெருவுல இருந்து எங்க தெருவுக்கு வரனும்னா நாடாக்கமாரு, வேதமாரு தெருவுகளத்தாண்டி செக்கடி பஜார்வழியாத்தான் வரனும். நான் அப்பிடி வெறகுக்கெட்டு தூக்கியாந்ததைப் பாத்த செலபேரு எங்கம்மாக்கிட்ட, ஒம்மக மடத்துல போயிச் சேந்து படுச்சிட்டு வந்தப்பெறகும் இப்பிடி வெறகுக்கெட்டு தூக்கிக்கிட்டு போறாளேன்னு ஆச்சரியமா

கேட்டாகளாம். இதுல ஆச்சரியப் படுறதுக்கு என்னதிருக்கோ தெரியல. அந்தமாதிரி ஒழைக்குறதுன்னா எனக்கு அப்ப ரொம்ப பிடிக்கும். இப்பத்தான் அப்பிடி வேலை செய்யமுடியல. நாலு எடத்துக்குப்போயி நாலு எழுத்துப் படிச்சுட்டு வந்ததுனால, ஒடம்பு வளயமாட்டேங்கு.

இப்பிடி ராப்பகலா ஒழைக்கிற எங்க சனத்தைப் பாக்கையிலே இவுகளுக்கு இம்புட்டுத் தெம்பு எங்கிட்டு கெடந்து வருதுன்னு எனக்கு ஆச்சரியமா இருக்கும். ஆம்பள பொம்பள அம்புட்டுப் பேரும் இப்பிடித் தெனமும் தேஞ்சு போக ஒழைக்குறதுக்கு எம்புட்டு முன்னுக்கு வரலாம் அப்பிடீன்னும் நெனப்பேன். ஆனா இவுக ஒழைக்குறதுக்குத் தக்கன கூலி கெடைக்குறது இல்ல. அதுலகூட ஒரே வேலய ஆம்பளயும் பொம்பளயும் செஞ்சாக்கூட ஆம்பளக்கு ஒரு சம்பளம், பொம்பளக்கு ஒரு சம்பளம்தான். ஆம்பளக்கு கொஞ்சம் கூடுதலான சம்பளம் தர்ராங்க. ஏன்னுதான் வெளங்க மாட்டிங்குது.

ஒடம்பு வலிக்க பாடுபட்டாலும் எப்பயும் இவுக சிரிச்சுக் கிட்டே உற்சாகமாத்தான் வேலை செய்றாக. ஒழைக்குறதுக்கின்னே பெறந்த சாதி இது. எம்புட்டுத்தா ஒழச்சாலும் தெனமும் அதே கூழுதா. அதே குருநாக் கஞ்சிதான். அதே கருவாட்டுக் தண்ணீதான். இப்பிடி இருக்கோமேன்னு இவுக நெனச்சுக்கூட பாக்க மாட்டாக போலுக்கோ. நெனச்சுப் பாக்க மொதல்ல இவுகளுக்கு நேரம் எங்க இருக்கு? இவுக மட்டும் இல்லேன்னா இந்த மேச்சாதிக்காரனுக எப்பிடி பொழப்பானுகளோ தெரியல. ராத்திரி ஒறங்கும்போது மட்டுந்தான் இவுக கையுங் காலும் சும்மாநிக்கும். மத்தநேரம் பூரா இவுக ஒழச்சுக்கிட்டேதான் இருக்கனும். சாகுந்தட்டிக்கும் ஒழைக்கனும். அப்பத்தான் அரைவயித்துக் கஞ்சியாவது கெடைக்கும்.

வரவர நெலம மோசமாகிட்டுத்தான் வருது. முன்னாடி சின்னஞ் சிறுசுக ஆட்ட, மாட்ட பத்திக்கிட்டு கைப்பிள்ளைகளக் கவனிச்சுக்கிட்டு வீட்டோட தெருவுகள்ள பெறண்டு எந்திரிக்குங்க. இப்ப பாவம். பெரியாளுக மாறி அதுகளும் வேல வெட்டி செய்யுதுங்க. காலங்காத்தால மருதவண்டி வர்ரதுக்கு முன்னாடியே தீப்பெட்டி ஆபீசு வண்டி வந்துரும். இத்தினிக்கானி நண்டுகூட ஒறக்கச்சடவோட தூக்குச் சட்டியில கூழையும் ஊத்திக்கிட்டு லம்பிக்கிட்டு வந்து வண்டியில ஏறிப் போகுங்க. தீப்பெட்டி ஒட்டுற வேல, மருந்துவேல, பட்டாசு வேல செஞ்சுட்டு சாயங்காலம் ஏழுமணிக்கு மேல கெறங்கிக் கிறுகிறுத்துப்போய் வீடுகளுக்கு வருங்க. பள்ளிக்கொடம் போயி நாலு பேர கெணக்கா படிச்சி, வெளாண்டுட்டு திரிய வேண்டிய வயசுல இப்பிடி தீப்பெட்டி

ஆபிசுக்குள்ள அடஞ்சுகெடக்க வேண்டிய நெலம. ஒன்னுக்கு ரெண்டு மூனு பள்ளிக்கொடங்க இருக்குது. ஆனா தீப்பெட்டி மருந்து வாசனதான் இவுகளுக்கு கெடச்சகெதி. படிப்பு வாசன கெடையாது. வகுத்துப்பாட்டுக்கே பெரும்பாடா இருக்கையில எங்குட்டு கூடி படிக்க முடியும்?

# ஐந்து

எங்க தெருவுகள்ள பொழுதுபோக்குன்னு ஸ்பெசலா ஒன்னுங்கெடையாது. பள்ளிக்கொடம் முடிஞ்சுவந்து நாங்க பிள்ளைகளா சேந்து வெளாடுவோம். ஆம்பள பொம்பளன்னு வித்தியாசமெல்லாங்கெடையாது, ஒன்னுக்குல ஒன்னா கெடந்துட்டு வெளாடுவோம்.

முக்கியமா செல வெளாட்டுக வெளாண்டுருக்கோம். பெயலுக ரெண்டு மூனு பேரு நாய்க்கமாருகளா இருப்பானுக. நாங்கள்ளாம் அவுகள ஐயா ஐயான்னு கூப்பிட்டுக்கிட்டு பண்ணையாளுகளா இருப்போம். அதுலய அவுகளுக்கு ரொம்பப் பவுரா இருக்கும். “ஏப்பிளா ஏப்பிளா”ன்னு எங்கள அதட்டி வேல வாங்குவானுக, நாங்களுஞ் சும்மாநாளும் அவுக வணக்காட்டுள வேல செய்யறமாறி செஞ்சுட்டு சம்பளம் வாங்கிட்டு வர்ரமாறி வெளாடுவோம்.

இத உட்டா வேற கடவச்சு வெளாண்டுருக்கோம். அந்த மொதலாளி நாடாரு கணக்கா பெயலுக கடை வப்பானுக. நாங்க போய் ஓட்டுத்துட்டு குடுத்துட்டு பலசரக்கு வாங்கியாருவோம். ஓட்டுத்துட்டுன்னா, ஒடஞ்ச மம்பானைகள ரவுண்டா தட்டி துட்டுக் கெணக்கா வச்சுருப்போம்.

கம்மாயில போயி, களிமண்ணு எடுத்தாந்து சட்டிப்பானைக, பொம்மைக செஞ்சும் வெளாண்டுருக்கோம். இதுகளவிட வேற நல்ல வெளாட்டுகள்ளாங்கூட இருக்குது. சர்க்கஸ் காட்டுறது, கூத்துக் காட்டுறது, கும்மி அடிக்குறது, டான்சு ஆடுறது இதெல்லாங்கூட செஞ்சுருக்கோம். ஒரு செலபேரு சாமியாரு , சிஸ்டரா வந்து பட்டு பட்டுன்னு அடிக்குற வெளாட்டும் வெளாண்டுருக்கோம்.

ஒருத்தருக்கொருத்தார் கலியாணம் முடிச்சுக்கிட்டு பஸ்ல பிராயணம் போறமாறி, புருசங்காரங் குடுச்சிட்டு வந்து அடுச்சு கலாட்டா பண்றமாறி, போலீசு வந்து புடுச்சு அடிக்குறமாறி இப்படியும் வெளாண்டுருக்கோம். இதெல்லாம் ரொம்பச் சின்னப் பிள்ளையா இருக்கும்போது வெளாண்ட வெளாட்டுக. கொஞ்சம் பெரிய பிள்ளையா ஆகவும் வெளாட்டுகளும் அதுக்குத்தக்கன

மாறிக்கிடுச்சு. இப்ப எல்லாம் கம்மாயில, கெணத்துக்காட்டுச் செம மீனு புடிக்கப் போவோம். இல்லன்னா பெயலுககூடப்போயி அவனுக மரத்துல ஏறி புடுங்கிப்போட்ற மஞ்சனத்திப்பழம், கொடிக்காப்பழம் இவைகளைப் பெறக்கிட்டு பெறகு அவனுக குடுக்குற பழத்தைத் தின்னுக்கிட்டு அவனுககூட அலஞ்சிருக் கோம். பெறகு பொம்பளப் பிள்ளைக எல்லாம் தாயம், நொண்டி, செதுக்கு முத்து, எத்துவான், பன்னாங்குழி, தட்டாங்கல்லு இப்பிடி வெளாண்டுருக்கோம். பெயலுக தெலுக்கா, பம்பரம், செல்லாங் குச்சி, கம்பேசார் கல்லேசார், கோலிக்குண்டு வெளாடுவானுக.

இதோட பாடி ஆட்டமும் ஆடியிருக்கோம். சாயந்தரக் கோயில் முடிஞ்சு வந்தப்பெறகு செலநாளு ராத்திரி ரொம்ப நேரத்துக்கு வெளாண்டுட்டுத்தான் படுக்கப் போவோம். வீட்ல சின்னத்தம்பி, தங்கச்சி இருக்குறவுக அவுகள தோள்மேல தூக்கி வச்சுக்கிட்டு பெட்ரோமஸ் லைட் தூக்குற வெளாட்டும் வெளாடுவோம். சோளத் தட்டையில சப்பரஞ் செஞ்சு அதத் தூக்கிக்கிட்டு ஊர்வலமா கொஞ்சப் பேரு முன்னா போக இந்த பெட்ரோமஸ் லைட்டுகள்ளாம் பின்னால போகும். மாட்டுச் சவ்வு வச்சு கொட்டு செஞ்சுக்கிட்டு அதவேற மேளம் அடுச்சுக்கிட்டு போவோம். நல்லா இருக்கும். தெருத் தெருவா அலைவோம். எல்லாத் தெருவுஞ் சுத்திட்டு கடைசியா செவத்தியார் குரூசு கிட்ட வந்து சப்பரத்தை எறக்குவோம். சப்பரம் அவுக அவுக வீட்டுப்பக்கம் போறபோது பாக்கனுமே. ஒவ்வொருத்தரும் நமட்டுச்சிரிப்புச் சிரிச்சுக்கிட்டே போவோம். பெரிய ஆளுகள்ளாம் பாத்துட்டு செலபேரு கேலியுங் கிண்டலுமா சிரிப்பாக. செலபேரு சள்ளுப்புள்ளுன்னு உளுவாக. தெருப் பூரா அடச்சுக்கிட்டுப்போனா வையத்தான செய்வாக!

மத்த சாதிப்பிள்ளைக கம்மாக்கர வழியா சோடிச்சுட்டு சினிமா பாக்கப் போவாக. ஆனா எங்க தெருவுல பொம்பளைக யாரும் சினிமாக்குப் போகக்கூடாதுன்னு ஊர்ச்சட்டம். ஏன்னா பலசாதிக் காரபெயலுக சினிமாக் கொட்டயில எங்கசாதி பொம்பள புள்ளைகள புடுச்சி இழுப்பானுகளாம். பெறகு மல்லுக்கெட்டு வந்துரும். அதுனால ஆம்பளைக மட்டுந்தான் போவாக. அதுலகூட எளவட்டங்கதான் போவாக.

பொம்பளப்பிள்ளைக வளந்தப் பெறகு வெளாட்டுமில்ல. வேல வெட்டிக்குப் போயிட்டு வந்து வீட்டுவேல பாக்குறதோட சரி. வேற ஒன்னுங்கெடையாது. இப்ப சிறுசுகளுக்குகூட வெளாடமுடியாது. கோழி கூப்ட எந்திருச்சு இம்புட்டுக்கானு புள்ளகூட தீப்பெட்டி ஆபிசு பஸ்ஸில போய் மசங்குற வரைக்கும் வேல பாக்குதுங்க.

ஊர்ல திடீர்னு நெனச்சுக்கிட்டாப்ல ஆளுகள்ளாஞ் சேந்துக்கிட்டு செலம்பு வெளாடுவாக. நீட்ட கம்பு வஞ்சுக்கிட்டு அடுச்சு வெளாடுவாக. எனக்கு அதுபத்தி ஒன்னுந் தெரியாது. ஆனாலும் சாவடிக்கு முன்னால நடக்குற இந்த செலம்பாட்டத்தப் பாக்க மொத ஆளாப்போயி நின்னுக்குவேன். இதமாறி எளவட்டங் கள்ளாஞ் சேந்து கபடி வெளாடுவாக. அது நல்லா இருக்கும் பாக்க. தெருவுல நெறய்யப்பேரு வந்து பாப்பாக. ஆம்பளைக மரத்தடியில சீட்டாடுவாக. துட்டுவச்சு ஆடி சண்ட போடுவாக. போலீசு வந்தா கெட்னவேட்டீ உளுகுறதுகூட தெரியாம ஓடுவானுக.

உருண்டையா ஒரு கல்லு சாவடிக்கிட்ட கெடக்கும். அத எளவட்டக் கல்லுன்னு சொல்லுவாக. சாயந்தரத்துல எளவட்டங்க அந்த கல்ல தல ஒசரத்துக்குத் தூக்கிட்டு பெறகு கீழ போடுவா களாம். அவுகளுக்கு எம்புட்டு பெலம் இருக்குன்னு அதவச்சுக் காட்டுவாகளாம்.

முன்னாடி பொங்கல் டயத்துல சல்லிக்கெட்டு இருக்கும். இப்ப அதெல்லாம் எடுத்துட்டாக. யாரும் சல்லிக்கெட்டு உடுறதில்ல. கிறிஸ்துமஸ், ஈஸ்டர் திருநாளைக்கு ஊர்ல கபடிப்போட்டி வப்பாக. செலசமயம் எங்க தெருப் பெயங்களுக் குள்ளயே போட்டி நடக்கும். இல்லன்னா பக்கத்து ஊருக்கும் எங்க ஊருக்கும் போட்டி நடக்கும். சாவடிக்கு முன்னால கூட்டம் ஜே ஜேன்னு இருக்கும்.

இது தவிர கிறிஸ்துமஸ், ஈஸ்டர் திருநாளுக வரயில சாவடியில மைக் வச்சு ரேடியா கெட்டுவாக. இந்த ரேடியாங்குறது லவுட் ஸ்பீக்கர்னு ரொம்ப நாளைக்குப் பெறகுதான் தெருஞ்சுக் கிட்டேன். அப்ப எங்க ஊர்ல யாருகிட்டயும் மைக்செட் இல்ல. பக்கத்து ஊர்ல போய்தான் கூட்டிட்டு வருவாக.

மைக்செட்டுக்காரன் பஸ் ஸ்டாண்டுல வந்து எறங்கிட் டாலே போதும். சின்னப்பிள்ளைக பூரா பஸ் ஸ்டாண்டுக்கே ஓடிப் போய் மைக்செட்டுக்காரங்கூடயே தெருவுக்கு வருவோம். ரேடி யாவ பெயல்கதா தூக்கிட்டு வருவானுக. வரும்போதே அதுல வாய வச்சு ஹலோ ஹலோன்னு கண்டமாணிக்கப் பேசிக்கிட்டே வருவானுக. எனக்கும் அதத் தொட்டுப்பாக்கனும், அவனுகளப் போலப் பேசிப் பாக்கனும்னு ஆசயா இருக்கும். ஆனா ஒரு நாக்கூட அதுக்கு சான்ஸ் கெடைக்கல.

சாவடிக்குக் கொண்டாந்து ரேடியாக்கெட்டி “கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் தெறக்கப்படும் தேடுங்கள் கிடைக்கும் என்றார்” பாட்டுத்தான் எடுத்த எடுப்புல போடுவாக. இந்தச் சத்தத்தக் கேட்டதுமே வீடுகள்ள இருக்குற அத்தன சின்னப்

புள்ளைகளும் எலிக் குட்டிக மாறி மடத்துக்கு ஓடியாருங்க. மடத்துப்படிகள் ஏறி கீழே குதிச்சு சந்தோசத்தக் காட்டுவோம். ரொம்ப அதிகமா சந்தோசமாச்சுன்னா ஒருத்தர ஒருத்தர் மணல்ல தள்ளி உட்டு மேல உளுந்து பெரண்டு எந்துருச்சு சந்தோசத்தக் காட்டுவோம்.

கொஞ்ச நேரங்கழிச்சி வீட்ல போயி புதுத்துணி போட்டு, எண்ணதேச்சு வழுச்சு, சடபோட்டு பூவச்சு, பொட்டுச் செரட்டயில எச்சிதுப்பி ரோசிப் பொட்டு வச்சுக்கிட்டு மறுபடியும் சாவடிக்கு வருவோம். இப்ப வந்து ஒருத்தர்மாத்தி ஒருத்தரா துணியத் தொட்டுப் பாக்குறதுலயும், அதப்பத்தி ஒண்ணுக்குப் பத்தாப் பேசுறதுலயும் சந்தோசத்தைப் பகுந்துக்குவோம்.

சின்னப்புள்ளைகளுக்குள்ள இப்பிடின்னா, வயசுப்புள்ளைக அவுகளுக்குள்ளயே சிரிச்சிக்கிட்டு அலைவாக. அப்பப்பாத்தா மடத்துக்கு எதிரா இருக்குற கெணத்துல இருந்து தண்ணி எடுத்துட்டு கொடத்தத் தூக்கிட்டு கட்டு கட்டுன்னு நடக்குற நடயிலேயே சந்தோசந்தெரியும். அன்னைக்கெல்லாம் தெருவெல்லாம் ஒரே ஆராவாரமா இருக்கும்.

பெயல்களும் லொட லொடன்னு கொஞ்சப் பேரும், ரொம்பா இரிக்கலா கொஞ்சப் பேரும் டவுசர் சட்டைகளப் போட்டுக்கிட்டு தினுசு தினுசா முடிய வளுச்சி உட்டு அத அப்பப்ப தொட்டுப் பாத்துக்கிட்டு ஒரு சாயலா சிருச்சுக்கிட்டே அலைவா னுக. செலபேரு வெளேர்னு வேட்டிய கால்வரைக்குங் கெட்டிக் கிட்டு செவத்த பனியன்மேல சட்ட போட்டுக்கிட்டு அலைவாக. எல்லாங் கலர் கலரா இருக்கும்.

தெருவுகள்ள இருக்குற குரூசுகளுக்கு முன்னால பந்தப் போட்டு ரெண்டு வாழமரம் நட்டு வச்சுருப்பாக. பந்தக்காலப் புடுச்சு சுத்திக்கிட்டு வெளாடுவோம். பந்தலு கிடுகிடுன்னு ஆடும். பொம்பளைக வந்து குரூசுகள்ள மெழுகுத்திரி பொருத்திவச்சு கும்புட்டுட்டுப் போவாக. அவுக பொருத்தி வச்ச மெழுகுத்திரி சின்னப் பெயல்களுக்குப் பீடி பத்தவைக்கத் தோதா இருக்கும். பெரியாளுக குடுச்சுட்டுப் போட்ட கட்டப் பீடிகளப் பெரக்கி வச்சுட்டுக்கிட்டு இவனுக பொருத்தி மறவாப் போய்க் குடிப்பானுக. பொம்பளப் பிள்ளைக அத வேடிக்கை பாத்துக்கிட்டு இருப்போம். சண்ட கிண்ட எடயில வந்தா இருடா, நீ கட்டப் பீடி குடிச்சத ஒங்கம்மைக்கிட்ட சொல்லித் தாரேன்னு மெரட்டுவோம்.

மைக்செட் வந்துட்டாலே விடியரவரைக்கும் ஆளாளுக்குப் பெயல்க மைக்ல கண்ட மேனிக்குப் பேசுவானுக. பாட்டுப்படிப் பானுக. அதுக்குத் தக்கன தாளமும் கச்சிதமா ஆளுக போடுங்க. மைக்குல சத்தமா ஒவ்வொருத்தனா பேருகளச் சொல்லிக் கூப்புட்டு

பாட்டுப் படிக்கச்சொல்வாக. அதுக்குக்கூட சண்டவரும்.

முன்னால ஊதன்னு ஒரு ஆளு இருந்தாரு. அவரோட நெசப் பேரு என்னன்னு தெரியல. ஊர்க்குள்ள இவரப்பத்தித் தெரியாத ஆளு இல்ல. ஏன்னா தெனமும் பெண்டாட்டிய மடத்துச்சாவடிக்குத் தரதரன்னு முடியப்புடுச்சு இழுத்துட்டு வந்து மாட்ட அடிச்சாப்ல எடவார்ட்டயே அடிப்பாரு. எல்லாரும் வேடிக்க பாப்பாக. ஒருத்தரும் கிட்டத்துல போய் வெலக்க முடியாது. ஏதாவது ஒரு காரணத்துக்குத் தெனமுஞ் சண்டவரும். அடிதடி நடக்கும்.

இவுக ரெண்டு பேருக்கும் கலியாணம் நடக்குறப்ப கோயில்ல தாலி கட்டுறதுக்கு முன்னால சாமியார் ஊதங்கிட்ட "இவள மனவியா ஏத்துக்க சம்மதிக்கியான்னு கேட்டாராம். அதுக்கு மாப்பிள்ளையா இருந்த ஊதன் சத்தமா "சம்மதமில்ல சாமி"ன்னு சொன்னாராம். ஒடனே அவுகய்யன், பெரீய்யன் எல்லாம் போயி ஊதன மெரட்டி சம்மதம்னு சொல்ல வச்சு பெறகுதான் தாலி கட்டுனாகளாம். இப்பிடி பிடிக்காத பொண்ண வம்படியா கெட்டிவச்சதுனாலதான் தெனமும் அடிக்கிறாம்னு சொல்லிக் கிட்டாக.

இந்த ஊதனுக்குக் கொழலு நல்லா ஊதத்கெரியும். மூங்கில்ல செஞ்ச பொல்லாங்கொழலு அருமையா வாசிப்பாரு. மைக்செட் வச்சு சாவடில பாட்டுங் கூத்துமா அமர்க்களப் படும்போது இவரும் கொழலு ஊதுவாரு. கேக்குதுக்கு நல்லா இருக்கும்.

அனா ஆவன்னா தெரியாது. எங்கிட்டுருந்துதான் கொழலூதப் படிச்சாரோ தெரியலம்பாங்க. முதியோர் கல்வி வந்தப்ப இவரும் போய் செலேட்டுல 'அ' 'ஆ'ன்னு எழுதிப் படிச்சுக்கிட்டு இருந்தாரு. இவரோட பொண்டாட்டி ஆவேசமா ஓடியாந்து "சீ வெக்கங்கெட்டவனே காலம் போன கடேசில ஒனக்கு படிப்பு கேக்குதாக்கும். பெரிய்ய கலெக்டரு உத்தியோகமா பாக்கப் போற"ன்னு கூப்பாடு போட்டு ஒரு மூச்சு ரகள வந்துச்சு. அவருஞ் செத்துப்போயி இப்ப ஏழெட்டு வருசமாச்சு.

அதுமாதிரி பன்னிப்பவுலுன்னு ஒரு ஆளு இருக்காரு. அவருபேரு பவுலு. எதுக்குப் பன்னிப்பவுலுன்றாங்கன்னு தெரியல. அவருஞ்சரி அவரோட மகனுஞ்சரி நல்லா பாட்டுப் படிச்சு ஆடுவாக. ரெண்டொருதரம் மருதையில இருந்து பொம்பளைகளக் கூட்டியாந்து ரிக்கார்டு டான்சு கூடப் போட்டுருக்கானுக. நாடகமும் போடுவாக.

இவரோட மகனும் ரொம்பக் குசும்புக்காரன். ஒரு தடவ ஈஸ்டருக்குச் சப்பரஞ் சுத்திவரும்போது மேளக்காரனுக பூராங்

குடுச்சுப்போட்டு மேளம் அடிக்கமுடியாம தடுமாறிக்கிட்டு வந்தானுக. அப்ப இவந்தான் நாலஞ்சு எளவட்டப் பெயல்கள சேத்துக்கிட்டு மேளக்காரனுக கையிலிருந்த மேளம், கொழலு, சிங்கி எல்லாம் புடுங்கிக்கிட்டு மேளம் அடிச்சுட்டுக்கிட்டு சப்பரத் துக்கு முன்னால தெருத்தெருவா வந்தான். மேளக்காரனுகளவிட நல்லா அடிச்சான்.

தவசி பேத்தியா மகன் பவுலுன்னு இன்னொருத்தன். அவனும் நல்லா பாட்டுப் படிப்பான். அவனும் ஒரு குரூப்பு வச்சுக்கிட்டு வில்லடி அடிப்பான். செக்கடி பசார்ல கூட நெறய தடவ வில்லுப்பாட்டு வச்சுருக்கான். நெறயப்பேருக்கு படிப்பு வாசனயே இல்லன்னாக்கூட கூத்தும், தாளமும், பாட்டும் ரொம்ப நல்ல போடுவாங்க.

பானய வகுத்தோட கவுத்தி வச்சுக்கிட்டு சின்னக்கல்ல கையுயல புடுச்சுக்கிட்டு பாட்டுக்குத் தக்கன பானயத்தட்டி தாளம் போடுவாங்க. நல்லா இருக்கும் கேக்குதுக்கு. மம்பானயுலயும் போடுவாக. பித்தளைப் பானயுலயும் போடுவாக. அதுலயும் நாலஞ்சு பேரு ஒண்ணா சேந்து ஒருமிக்க அடிக்கையில அம்புட்டு நல்லா இருக்கும். அடிக்குத் தக்கன தலைகளையும் ஆட்டிக்கிடுவாக. அடிக்குறதப் பாத்துக்கிட்டே இருக்கலாம் போல இருக்கும்.

இந்தப்பாட்டுங் கூத்தும் சின்னதுககிட்டகூட இருக்கும். அம்மணக்குண்டியா அலயுற சிறுசுகூட சஞ்சனக்கா, சனசனக்கான்னு சொல்லிக்கிட்டு ஒடஞ்சுபோன மண்பானைவாயில மாட்டுச்சவ்வை இழுத்துக் கட்டுன கொட்டுகள வச்சு அடிச்சுக்கிட்டு தாளந் தப்பாம ஆடுறது அம்புட்டு அழகா இருக்கும்.

பொம்பளைகளும் பாட்டுப்படிப்பாக. நாத்து நடயில, கள எடுக்கையில, கதிரறுக்கையிலன்னு வேலவெட்டி செய்யும் போதே மெட்டுக் கெட்டிப் படிப்பாக. பிள்ளையத்தொட்டில போட்டு ரோராட்டும்போதும் பாட்டுப் படிப்பாக. பொம்பளைப் புள்ளைக சமஞ்சுட்டாலும் பாட்டுப் படிப்பாக. செத்தப் பெறகும் ஒப்பாரி வச்சுப் பாட்டுப் படிப்பாக. கோயில்ல ஈஸ்டர் பூசைக்குப் பெறகு பொம்பளைகளா ரவுண்டா நின்னு

"தெருவில் வாராறே, தெருவில் வாராறே-சேசு
தேரில் வராறே"

இப்பிடிப் பாடிக்கிட்டு கும்மி அடிப்பாக. எல்லாங் கூடிநின்னு பாப்போம். அதுக்குப் பெறகுதான் சப்பரச்சுற்றுப் பிரகாரம் நடக்கும். மொற மாப்பிள, மொறப் பொண்ணுக்கும் பாட்டு இட்டுக்கெட்டி

"மஞ்சள் அரைக்கையிலே என்ன

மதுலெட்டிப் பாத்த மச்சா
என்ன பொடி தூவுனீரோ என்னால
இழுத்தரைக்க முடியலயே" -ன்னு பாடுவாக.

ரவைக்கு வேட்ட நாய்கள வச்சுக்கிட்டு ஆம்பளைக மலக் காட்டுச் செம வேட்டைக்குப் போவாக. இது அவுகளுக்குப் பொழுதுபோக்கு மட்டுமில்ல. வெள்ளாம வெளச்சல காட்டுப் பன்னி, நரி-இப்பிடி நெறய்ய மிருகங்க வந்து அழிமாண்டஞ் செய்யுங்க. அதுகள புடிக்கவுந்தான் போவாக. வேட்ட நாய்கள உசுக்காட்டி உட்டுமொயலோ, காட்டுப்பன்னியோ இப்பிடி எது அகப்படுதோ அதுகள புடிப்பாக.

ஒருநாளு முள்ளம்பன்னிய புடுச்சாந்து சாவடிக்கு முன்னால உள்ள லைட் கம்பத்துல கட்டி வச்சிருந்தாக. அப்பந்தா மொத மொதல்ல முள்ளம் பன்னி பாத்தேன். காட்டுப்பன்னி அம்புட்டுச் சுன்னா கொண்டாந்து தீக்குள்ள போட்டு சுட்டு, ரோமத்தை பொசுக்கிட்டு, மஞ்சள்பூசி குளுப்பாட்டி பூ கீவெல்லாம் வச்சு சோடிச்சு, மால போட்டு, மாட்டிவண்டியில தூக்கிவச்சு ஒசக்க கட்டி தெருத்தெருவா சுத்துவாக. பெரியாளுக சின்னப்பிள்ளைக பூரா அதுக்கு பின்னாலயே சுத்துவோம். பன்னி அடிச்ச ஆளுக்கு புதுசா வேட்டி துண்டுகூட எடுத்துப்போடுவாக. தெருப்பூராஞ் சுத்துனப் பெறகு அத அறுத்து எல்லாக் குடும்பத்துக்கும் கறிய பங்கு போட்டு குடுப்பாக. அன்னைக்கெல்லாம் ஊரு ஜே ஜேன்னு இருக்கும். ஒரு தடவ மானுகூட அடுச்சு கொண்டாந்திருக்காக. மானு, வரஆடு இதெல்லாம் அடிக்கக் கூடாதாம். ஆனா பாரஸ்டருக்குக் கறி குடுத் தாச்சுன்னாக் கண்டுக்க மாட்டாராம்.

இதுதவுர கிறிஸ்மஸ், வருசப்பெறப்பு, ஈஸ்டரு, சின்னமலத் திருநாளுன்னு கொண்டாடுவாக. இப்பெல்லாம் இந்த கொண் டாட்டங்களும் மாறிப்போச்சு. இப்ப சினிமாப்படம் பாக்குதுக்கு இருக்குற முஸ்தீப்பு கோயில்காரியங்கள்ள இல்ல. ரொம்ப வருசத்துக்குப்பெறகு இந்த வருசப்பெறப்புக்கு ஊர்ல இருந்தேன். வருசப் பெறப்புக்கு முந்துன நாள் சாயங்காலத்துல இருந்தே ஊரு களகட்டிப் போச்சு. தெருவுகள்ள அங்கங்க இட்லி, தோச, பணியாரத்துக்குப் போட்டவுக ஒக்காந்து பழம பேசிக்கிட்டே மாவாட்டிக்கிட்டே இருந்தாக. அங்ன அங்ன உற்சாகமா கத்திக் கத்திப் பேசிக்கிட்டாக.

"ஏக்கா பெலேந்திர பொண்டாட்டி, நாளைக்கு மாடு போடுறாகளா?" இப்பிடி ஏகலம் கேட்டா.

"ஏண்டி, கேக்கா பாரு கேள்வி, வருசப் பெறப்பும் அதுவுமா மாடடிக்காமலா இருப்பாக" ன்னு பதுலுக்குச் சொன்னா.

"அப்பன்னா மொதல்ல போயி அந்தமச்சா முடியப்பங் கிட்ட ரெண்டு கெலோ கறிக்குச் சொல்லி வைக்கனும் மதினி, இல்லாட்டி கறி கெடைக்காது." இப்பிடிச் சொல்லிக்கிட்டே அந்தோணி விருட்விருட்டுன்னு வீட்டப்பாக்க ஓடுனா.

ஒரலுமேல ஒக்காந்திருந்த மெக்கேலம்மா, "இப்ப பாருங்க மச்சா பல சாதிக்காரப் பெயலுக வந்து மாட்டுக்கறி எடுத்து மறவா திங்கானுக; நம்மளுக்குக் கறிகெடைக்கிறது கஸ்டமா இருக்குது. எல்லாப் பெயலுந்தா திங்கா. ஆனா பாத்துக்கோ இன்னமும் நம் மளத்தா தாழ்ந்த சாதீங்கிறான்." இப்பிடி ஆளாளுக்குப் பேசிக் கிட்டாக.

ராத்திரி மணி ஒம்பது இருக்கும். சாவடில இருந்த மைக்குல வருசப் பெறப்புக்காக நாளைக்கு ராத்திரி சினிமா காட்டப்போறா கன்னு சத்தம் போட்டுச் சொன்னாக. சிறுசு மொதக்கொண்டு பெருசு வர எல்லாத்துக்கும் கொண்டாட்டந்தான். மறுநா ராத்திரி எப்படா வருமுன்னு காத்துக்கிட்டு இருந்தாக.

மறுநா காலை தெருவெல்லாம் ஒரே சலசலப்பு, சந்தோசந் தான். ஆப்பிள்பழம், ஆரஞ்சுப்பழம், தெராச்சப்பழமுன்னு யாரோ ராகத்தோட கத்திக்கிட்டு வித்துட்டு போனாக. ஏதுடா நம்ம தெருவுல இப்பிடி வெல ஒசந்த பழங்ககூட விக்குதேன்னு ஆச்சர்யமா போய்ப் பாத்தேன்.

"ஏம்மா ஆரஞ்சுப்பழம், இங்க வாங்க," இப்பிடி பல கொரலுக அந்த பழக்கார அம்மாவ கூப்பிட்டதுக. இது இன்னங் கொஞ்சம் ஆச்சர்யமா இருந்துச்சு.

"சாமியாருக்கும் தாயாருக்குமா சேத்து வாங்குமா" -இப்பிடி முத்தம்மா கிட்ட மகஞ் சொன்னான்.

மகளும், "ஏம்மா, மாதா சப பிள்ளைகளும் சந்திப்பு வைக்க னும், சேத்து வாங்கும்மா" அப்பிடீன்னா.

பெறகுதான் வெசயம் புரிஞ்சது. வருசப்பெறப்புக்குத் தாயாருக்கும், சாமியாருக்கும் குடும்பங் குடும்பமா சபக்காருகளா போய் பழம், பிஸ்கத்து - இப்பிடி குடுத்துட்டு மல மரியாத செய்றது வழக்கம். அது இன்னும் இருக்குதுன்னு தெருஞ்சுக்கிட்டேன். எங்க தெரு ஆளுக இந்த பழங்களோட ருசிய பாத்திராட்டாலும் எப்பாடு பட்டாச்சும் இத வாங்கிட்டு போயி சாமியாரு, தாயார்களுக்குச் சந்திப்பு வச்சுட்டு அடக்க ஒடுக்கமா மொழங்கால்போட்டு நெத்தில சிலுவை வாங்கிட்டு வருவாக.

எங்க வீட்ல இருந்தும் சந்திப்புச் சாமான்களத் தூக்கிக்கிட்டு கோயிலுக்குப் போனோம். வருசப்பெறப்புன்னு அன்னைக்கு பாவ சங்கீர்த்தன தொட்டிக்கு முன்னால பெரிய வருச நின்னது. எட்டு

மணிக்குப் பூச தொடங்கி பத்தரமணிக்கு ஒருவழியா முடிஞ்சிருச்சு.

பூசயில ஒரெ ஒருத்தன் மட்டும் கத்திப் பாட்டு படிக்க நாலு பேரு அதுக்கு கண்ட கண்ட சாமானுகள வச்சு தாளம் போட்டானுக. ஒடனே பொம்பளக பக்கமிருந்து ஒருத்தி "வேணும் பாட்டுப் படிக்க வே ஆளுக இல்ல. இதுல பத்துப்பேரு தாளம் போட வந்துட்டா னுக. வெக்கங்கெட்டவனுக." இப்பிடி சத்தம்போட்டுச் சொல்ல கொல்லுன்னு கோயிலுக்குள்ள சிரிப்பு. கொஞ்சப் பேரு உஸ், உஸ்னு பாம்புக் கூட்டங்கெணக்கா சத்தம் போட்டு அமைதியா இருக்க சொன்னாக.

சாமியாரு வந்து தீத்தந் தொளிச்சிட்டுப் போன நடு செண்டருல ஒரு பெய அம்மணக்குண்டியா நின்னுக்குட்டு கிராதிக் கிட்ட இருந்து ஒன்னுக்கடுச்சுக்கிட்டே நடந்து வந்தான். அவனுஞ் சாமியாரு தொளிச்ச மாறி தொளிக்க நெனச்சானோ என்ன கழுதயோ. கோலம் போட்டது கணக்கா குஞ்சானப் புடுச்சுக்கிட்டே வாரான்.

இதப்பாத்துக்கிட்டு இருந்த சிஸ்டரு எந்துருச்சுப் போய் படார் படார்னு அந்தப்பெய முதுகுல நாலு உடுப்பு உட்டாக. அவெ அடி பொறுக்கமாட்டாம அலற, அளகம்ம ஓடியாந்து, "வருசப் பெறப்பும் அதுவுமா இப்பிடியா பச்சப்பிள்ளையப் போட்டு அடிப்பாக பாதகத்தின்னு" கத்திட்டு பிள்ளையத் தூக்கிட்டு கோயிலுக்கு வெளியே போயிட்டா.

பூச முடிஞ்சு, சாமியார் பங்களாவுல ஒரே கூட்டம். குடும்பங்குடும்பமா மட்டுமில்லாம மாதாசப, பார்சப, நலமரண சப, நற்கருணைவீரர்சப இப்பிடி ஏகப்பட்ட பேர் சந்திப்புச் வச்சாக. நாங்களும் கூட்டத்தோடு கூட்டமாப் போயி முட்டி மோதி சந்திப்பு வச்சுட்டு வெளிய வந்ததோம். நம்ம கேட்டமோ இல்லியோ, நின்ன வுக, மொழங்கால் போட்டவுக, நெடுஞ்சாங் கெடையா உழுந்தவுக எல்லாத்துக்கும் சாமியாரு வருசயா நெத்தில சிலுவ போட்டாரு.

"முந்தியிருந்த சாமியாருக சந்திப்புச் செஞ்சா சிலுவ போட்டு, ரெவண்டு ஆரஞ்சுமுட்டா, அஞ்சாறு சுரூவங்க, புதுவருசக் காலண்டரு எல்லாங் குடுப்பாரு. இவரு வெறுஞ் சிலுவய மட்டும் போட்டு போகச் சொல்றாரு " இப்பிடி ஒருத்தி பொலம்ப எல்லாரும் அதான, இவரு இம்புட்டு கஞ்சத்தனம் பண்றாருன்னு சொல்லிக்கிட்டே வந்தாக.

"ஏக்கா, சாமிகிட்ட சிருச்சுக்கிட்டே ஒரு காலண்டரு கேக்கேன். அவரு மனசார துட்டுக் கேக்காருக்கா, வெலைக்குத்தான் விப்பாராம். கேட்டுக்கிட்டியா. காலம் போற போக்க" ன்னு சொல்லி சினும அந்தோணி சொல்லி சிரிச்சா.

ஒடனே மாதா சபத் தலவி லூர்து "சரிசரி பல்லக்காட்டிட்டு நிக்காம அப்பிடியே எல்லாரும் மடத்துக்கு வாங்க. நம்ம சபக்காருக போயி தாயாருக்குச் சந்திப்பு வப்போ" முன்னு அதட்டிகூட்டிட்டுப் போனா. தாயாரும் வெறும் சிலுவபோட்டு போகச் சொல்லிட்டா களாம். "தாயாரே, ஒரு சுருவங் கிருவம் இருந்தா குடுங்கன்னு" கேட்டதுக்கு, "என்ன துட்டா குடுத்து வச்சிருக்கீக, சுரூவம் வாங்கிக் குடுக்க, சரி,சரி, சொவத்துல சாயாம, தொடாம வெளிய போங்க"ன்னு சொல்லி வெரட்டி உட்டாகளாம்.

பெறகு சபத் தலவியக் கூப்பிட்டுக் கணக்குப்பாத்து அங்க போனவுகளுக்கு மட்டும் ஒரொரு சுருக்குப்பை குடுத்தாகளாம். வீட்டுக்கு வந்தப் பெறகு இதவச்சே பெரிய தகராறு.

"தேவிடியாப் பெய மக்க, எனக்கொன்னு சேத்து சுருக்குப்பை வாங்கியாரக்கூடாது. ஆளப்போல நானும் ஏழு ரூபா சந்திப்புக்குக் கெட்டல. காத்துட்டு குடுக்காத முண்டைகள்ளா சுருக்குப்பை வாங்கியாந்திருக்காளுக." அந்தக்கா திருச்சிலுவம் ஒரே கூப்பாடு போட்டு தெருவ அலர வச்சுக்கிட்டு இருந்தா. பெறகு அதது மாட்டுக்கறி எடுத்து தின்னுட்டு ராத்திரி படம் பாக்க ஆவலா காத்துக்கெடந்துச்சுக.

ராத்திரி ஏழு மணிலருந்தே சாவடிக்கு முன்னால ஒரே கூட்டம். சாமியாரு கோயில்ல வருசப்பெறப்புக்குன்னு ஸ்பெசலா ஆசிர்வாதம் வைக்கனும்னு சொல்லி தெருத்தெருவா பள்ளிக் கொடத்து பெயல்க மணி அடுச்சு சொல்லிட்டுப் போனானுக. படத்த விட்டுட்டு யாரு ஆசிர்வாதத்துக்குப் போறதுன்னு ஒரு சனமும் போகல.

ஊர் நாட்டாம டெக்கு வாடகைக்கு கொண்டாந்து விடிய விடிய மூனு படம் போட்றதா ஊருக்குள்ள பேச்சு. அடுத்த வீட்டு அந்தோணியம்மா வந்து, "பெரீம்மா, மூனு லெக்குல படம் போடப் போறாகளாம். செவத்தியாரு குரூசுகிட்ட ரசினி காந்தி படமாம்; அந்தோணியார் குரூசுகிட்ட கமலதாசன் படமாம் ; இன்னாசியார் குரூசுகிட்ட எம்.ஜி.ஆரு படமாம். எப்பிடியும் மூனையும் பாத்தரனும். எதுக்கு செவாஜிகணேசன் படமட்டும் போடல?" கேட்டுட்டு சாவடிக்கு விர்னு ஓடிப்போனா.

ராத்திரி பத்து மணி ஆனப்பெறகும் டெக்கு வரல. படமும் வரல. காத்துக்கெடந்த சனங்களுக்கு ஒரே ஏமாத்தம். தூறல்போடுற மாறி வேற இருந்துச்சு. செவத்தியாரே மழவராம நிப்பாட்டும்னு எடயில செவம் வேற செஞ்சுக்கிட்டு ஆணி அடுச்சு வச்சமாறி அம்புட்டு பேரும் சாவடிக்கு முன்னால ஒக்காந்து இருந்தாக.

"சரி இந்த டெக்கு இல்லாட்டிப் போகுது. அந்த சித்தப்பா வாத்தியாரு வீட்ல இருக்குற டி.வி.ய வெளியே கொண்டாந்து வச்சு

போட்டுக் காட்டலாமுல்ல” இப்பிடி சின்னப்பன் சொல்லவும்,

“அதெப்டிடா வீட்டு டி.வி.ல படந்தெரியும், அங்க டி.வி.டேசன்ல என்னத்தக் காட்ரானோ அதுதான் டி.வி.ல வரும்.” இப்பிடி தோமசு சொன்னான். அதென்ன எழவு டி.வி. எல்லாப் படமுங்காட்டவேணாம்! இப்டி கூட்டத்துல ஒரே சலிப்பு.

கூட்டத்துல இருந்த கல்குண்டான். “இந்த வீட்டு டி.வி. இருக்கே இது கைரேடியோ மாதிரி. டெக்கு போட்டு, வீடியோப் படம் பாக்குறது டேப்ரெக்காடர் மாதிரி. ரேடியோவுல கட்டயத் திருகித் திருகி அதுல என்ன வருதோ அதத்தான கேக்குறோம். அது கெணக்கா டி.வி.ல கட்டயத் திருகி உட்டு அதுல என்ன வருதோ அதத்தான் பாக்கமுடியும். ஆனா டெக்குக்குள்ள நாம நெனச்ச படத்த தள்ளிவுட்டு போட்டுப் பார்க்கலாம். இப்பிடி அவனுக்குத் தெருஞ்சத வெளக்குனான்.

மணி பதினொன்னு ஆகியும் படம் வராததுனால, சனங்க ஒவ்வொன்னா கலஞ்சு போக ஆரம்பிச்சாக. திடீர்னு மைக்குல, டெக்குப் படத்துக்குப் பதுலா தெரப்படம் போடுறாகுன்னு அறிவிப்பு செஞ்சாக. ஒடனே எல்லாரும் உளுந்தடிச்சு சாவடிக்கு எடம்புடிக்க ஓடுனாக. சாவடிக்கு முன்னால ரெண்டு பெரிய கம்புகள கட்டி வெள்ளத்தெர ஒன்னு கட்டுனாக.

“ஏக்கா செவத்தி, தெரப்படம், எம்.ஜி. ஆருபடம் போடு றாகளாம், ஓடியா”ன்னு கூப்புட்டுக்கிட்டே ஓடுனா அமலோற் பவம்.

“ஏமச்சா வைகுண்டம், என்ன படம், ஆரு நடிச்சது?

“குடியிருந்த கோயிலு, எம.ஜி.ஆரும் அந்தம்மா ஜெயலலிதாவும் நடிச்சது” இப்பிடி அந்த மச்சா சொல்ல, எல்லாரும் சந்தோசமா ஒக்காந்திருந்தாக.

ஒருவழியா பன்னண்டு மணிக்கு மேல படந்தொடங்குச்சு. கப்சிப்ன்னு எல்லாரும் அமைதியா இருந்தாக. குடியிருந்த கோயி லுக்கு முன்னால எம்.ஜி.ஆரு செத்து தூக்கிக்கிட்டுப்போற காட்சியக் காட்ட , கூட்டத்துல இருந்து உச் உச் சுன்னு எல்லா அனு தாபப்பட்டுக்கிட்டு கெடந்தாக. அம்புட்டு நேரமாக் காத்துக்கெடந்து கடேசியா இப்பிடி எல்லாருஞ் சோகமாகிப்போயி பாத்துக்கிட்டு இருந்தாக. இதெல்லாம் முடிஞ்சப் பெறகு “குடியிருந்த கோயில்” காட்ட ஆரம்பிச்சாக.

மறுநாளு காலைல கொஞ்சப்பேருட்ட நேத்துப்படம் எப்பிடி இருந்துச்சுன்னு கேட்டேன்.

“ஏத்தா, நீ வரலயாக்கும். எப்பேர்ப்பட்ட படம், ரெண்டு எம்.ஜி.ஆரு நடிச்சது. அந்தம்மா ஜெயலலிதா எப்படி ஆடுறாங் கன்னு பாத்தெ. அழகுன்னா அம்புட்டு அழகு. எம்.ஜி.ஆரும் அந்த

பொம்பளையும் பாட்டுப்படிச்சுக்கிட்டு -மறுபடியுஞ் சொல்றேன் நீ போகாதேன்னா போகாதே- ன்னு ஆடுறாகளே அந்நியாரம்பாத்து அவுகய்யங்கூட பாத்துட்டு வெரட்டுவானே அந்தக் கட்டத்துல எனக்கு ஒன்னுக்கு முடுத்து நெருக்குச்சா; அடக்கிக்கிட்டு ஒக்கார முடியல. எந்துருச்சு போயிட்டேன். அந்த எடத்துல பாக்க முடியாம போச்சு."

பெறகு இந்த நம்பியாரோ யாரோ வரான்னா. ரொம்ப காவாலிப் பயலா இருக்கான். படம் படத்துக்கு இப்பிடித்தான் படுக் காளிப் பெயலாத்தான் வாரான். அவனோட மகா ஒருத்தி துணி யுமில்லாம மணியுமில்லாம அவுத்துப் போட்டுக்கிட்டு ஆடுறா. வெக்கமே இருக்காது பொருக்கோ. தேவிடியாத்தனம் பண்றவு களுக்கு எங்குட்டு கூடி வெக்கமிருக்கும்? இப்பிடி ஆளாளுக்கு படத்தப் பத்திச் சொல்லிக்கிட்டே வேல வெட்டிகளுக்கு கௌம்பிட் டாக.

கிறிஸ்மஸ், ஈஸ்டர், வருசப் பெறப்புகளுக்கு அங்கங்க ரஜனிகாந்து, கமலகாசன் படங்கள கெட்டி தொங்க உடுறானுக. யாருக்குத் திருநாளு, என்ன திருநாளுன்னு தெரியாது. அந்தந்த மன் றத்துக்காரனுக போட்டிப்புகள்ள படத்த மாட்டுவாக. அம்புட்டுத் தான். நாலஞ்சு எடங்கள்ள ரேடியாகட்டி மன்றத்துக்காரனுக சினிமா பாட்டுக்கள போட்டு காளு பூளுன்னு அலற வைப்பானுக. இதுதான் இப்ப இருக்குற பொழுதுபோக்கு.

இப்ப ஊருக்குள்ளயே ஒரு சினிமாக் கொட்டயும் வந் துருச்சு. அதுல போய் அப்பப்ப படம் பாத்துட்டு வாராக. முன்னால ஊர்ல படுச்ச எளவட்டங்க நாடகம் போடுவாக. இப்ப அதெல்லாம் ஒன்னுமில்ல. எல்லா அரகொற படிப்போட அலயுறானுக. இப்ப இருக்குற நேரத்துல கெழடு கெட்டைக ஆடுபுலி ஆட்டம், சீட்டாட் டம் ஆடுறாக. கள்ளோ, சாராயமோ குடுச்சுப்போட்டு மல்லுக் கெட்டிட்டுத் திரியிரானுக.

# ஆறு

எங்கப்பா பட்டாளத்துல இருந்து லீவுக்கு வர்ராங்கனா ஒரு பக்கம் சந்தோசமா இருந்தாலும் இன்னொரு பக்கம் பயம்மாவும் இருக்கும். லீவுக்கு வரும்போது நெறய்ய தீம்பண்டம், தெராச்சப் பழம், ஆப்பிள்பழம், பிஸ்கட்பெட்டி, முட்டாயி, புதுத்துணிமணி, டின்னுபாலு, டின்னு மீனு - இப்பிடி என்னென்னவோ கொண்டுக் கிட்டு வருவாங்க. அதெல்லாந் திங்கலாம்னு சந்தோசமா இருக்கும். ஆனா அவரு லீவுக்கு வந்து வீட்ல இருக்கும் ரெண்டு மாத்தைக்கும் நல்ல சாப்பாடு தண்ணி நெறய கெடைக்கும். மத்த நாளுக பூரா கூழு தான்.

வழக்கமா ரவைக்குச் சோறுங் கொழம்பும், காலையில, மத்தியானத்துல எல்லாம் ஏதாவது ஒரு கூழுதான். சீசனுக்குத் தகுந்த மாதிரி ஒரு கூழு. கூழுக்குக் கடிச்சுக்கிறதுக்கு வெங்காயம், வேர்க் கடல, அச்சுவெல்லம், பச்சமொளகா - இப்பிடி ஏதாச்சும் இருக்கும். கொஞ்சம் துட்டு கையில இருந்தா பொறிகடலத் தொவையழு, இல்லன்னா நாடாரு கடைகள்ள விக்கிற ஊறுகா, அல்லது கடுச்சிக் கிட ஏதாச்சும் வாங்கிக்குவோம். கடைகள்ள இந்த ஊறுகா பாக்கெட் பாக்கெட்டா தொங்கும். கடுச்சுக்கீர மொதலாளிக வீட்டுகள்ல செஞ்சு கொண்டாருவாக. கத்தரிக்கா, மொளகா வத்த எல்லாத்தை யும் போட்டு நல்லா ருசியா வச்சுருப்பாக. ஆல எலையில அஞ்சு பைசா, பத்து பைசாவுக்கு வச்சுத் தருவாக. இன்னைக்கு வரைக்கும் அதுக்கு கடுச்சுக்கீரன்னுதா பேரு. கூழுக்கும் அதுக்கும் நல்லாத்தான் இருக்கும்.

நாயித்துக்கெழமைகள்ள நல்ல சாப்பாடு கெடைக்கும். காலையில்ல பூசை முடிஞ்ச வர்ரதுக்கும் மாடு வெட்றதுக்கும் சரியா இருக்கும். நல்லா மாட்டுக்கறி எடுத்து மதியத்துக்கு கூழுக்கூட நனவு தண்ணிக் கறியா கொஞ்சம் திம்போம். நனவு தண்ணிக் கறின்னா மசாலகிசால எதுவும் போடாம சும்மா உப்புப்போட்டு வேகவச்ச கறி. பெறகு ராத்திரிக்குச் சோறும் மாட்டுக் கறிக்கொழம்பும். கறிக் கொழம்பு வக்கிற அன்னைக்கு கோயில்ல செவம் முடிஞ்சதும் பெறாக்கு பாக்காம நேரா வீட்டுக்கு வந்துருவோம்.

கம்மா பெருகிக் கெடந்தா சிலேபிக் கெண்டையும், கெண்டமீனுந்தான் சீப்பாக் கெடைக்கும். அதை வாங்கி மீன்

கொழம்பு வச்சுட்டாகன்னா சாயங்காலச் செவத்துக்குக் கோயிலுக்குக்கூட போக மனசு வராது. சோறும் மீன் கொழம்பும் சாப்பிட்டுட்டு பெறகுதான் கோயிலுக்குப் போவோம். சில நேரம் ஒன்னும் இருக்காது. எங்கம்மா எப்பிடியாச்சும் பழைய சோறோ, கூழோ குடுத்து எங்க பசியாத்திடுவா.

தெனம் பள்ளிக்கொடம் போம்போது ரெண்டு பைசா மூனு பைசா வாங்கிட்டு போவோம். அது மாமூலா நடக்கும். பள்ளிக் கொடத்துக்குப்போக ரெடியாகிட்ட ஒடனே வாங்கிக் திங்கற துட்டுன்னு மறக்காம கேட்டு வாங்கிட்டுப் போவோம்.

எங்கப்பா பட்டாளத்துல இருக்கும்போது பாக்கிஸ்தான் சண்ட, சீனாக்காரஞ் சண்ட, பங்களா தேசச் சண்டன்னு வந்துருக்கு. அப்பயெல்லாம் பணங்கிணம் ஒன்னும் அவுங்க அனுப்பமாட் டாங்க. கடிதங்கூட வராது. எங்கம்மாதான் எங்கிட்டாச்சும் கூலி வேலக்குப் போயிட்டு வந்து எங்கள காப்பாத்துவாங்க. சாயங்காலத் துல கம்மாக்கரப்பக்கம் போயி, குப்பைக்கீர, தொயிலுக்கீரன்னு, புடுங்கிட்டு வந்து கேப்பக்கழிக்கிண்டித் திம்போம். முருங்கக்கீர கூட வேகவச்சுத் திம்போம். லீவுநாள்ல கடலகௌய, வெறகு பெறக்க, சாணி பெறக்க இப்பிடி ஏதாச்சும் வேலவெட்டி செஞ்சுக் கிட்டு வருவேன். செலநேரத்துல இருக்குற கஞ்சியோ, கூழோ நாங்க குடுச் சுடுவோம். எங்கம்மா பட்டினியாத்தான் கெடப்பாக. இப்பிடியே சமாளிச்சுட்டு வந்து எட்டாங்கௌாஸ் படிச்சு முடிச்சிட்டேன்.

பெறகு பக்கத்து ஊர்ல ஒரு மடத்துல ஆஸ்டல்ல சேத்து விட்டாங்க, நெறயப் பணங்கெட்டி படிக்கிற ஆஸ்டலு அது. நல்ல சாப்பாடு தண்ணி கெடச்சாலும் அங்க இருக்குதுக்குச் சங்கட்டமா இருந்துச்சு. பள்ளிக்கொடமும் பெரிய பள்ளிக்கொடம். நெறய்யா பிள்ளைக படிச்சாக. எனக்குன்னா அங்க தங்கிப் படிக்கிறதுக்குப் புடிக்கவே இல்லை. வீட்டுக்கு ஓடியாந்துருலாம்னா பயம்மா வேற இருந்துச்சு. அப்பிடி ஓடியாந்தா எங்கண்ண எனிய கொன்னு போடும்னு எங்கம்மா பயங்காட்டிட்டுப் போயிட்டாக. வேற வழி இல்லாம பல்லக்கடிச்சுகிட்டு கெடந்தேன். நாளு ஆக ஆக எல்லாஞ் சரியாப் போச்சு. எங்க ஊரு தேவமாரு தெருவுல இருந்து ஒரு பிள்ள எங்கூட வந்து படிக்கச் சேந்திருந்தா. அது ரெண்டே நாள்ள வீட்டுக்கு ஓடிப்போச்சு.

பள்ளிக்கொடத்லயுஞ்சரி ஆஸ்டல்லயுஞ்சரி பிள்ளைக வெத வெதமா துணிமணிகளும் தீம்பண்டங்களும் வச்சிருந்துச்சுக. அவுகள்ளா ஒசந்த சாதிப் பிள்ளைகன்னு நெனச்சுக்கிட்டேன். எங்கம்மாவும் சொஞ்சம் அரிசியும், நெலக்கள்ளையும் வருத்து குடுத்திருந்தாக. அத வச்சுக்கிட்டு நானும் இருந்தேன். எப்பிடி வேற

சாதிப்பிள்ளைகளுக்கு மட்டும் இப்பிடி நல்ல துணிமணியும், தீம்பண்டமும் கெடைக்குதுன்னு நெனைச்சுக்குவேன். அவுககிட்ட தான் பணமும் இருக்குது. நானு சாதியிலயும் கீச்சாதி. பணமும் இல்ல. எப்பிடியும் படிச்சு முன்னுக்கு வரனும்னு நெனச்சுக்கிட்டு நல்லா படிச்சேன்.

ஊர்ல நான் எங்க பாட்டிக்குப் பேன் பெறக்குற தெறமையை வச்சே எங்க பாட்டி எனிய ரொம்ப கருக்கடையான பிள்ளையா வருவாள்னு அடிக்கொரு தரம் சொல்லிருக்கா. எங்கண்ணாங்கூட எனக்குக்கடிதம் எழுதும்போது ‘குருவி தலையில பனங்கா வச்ச மாதி’ ஒனக்கு புத்தி நெறய இருக்கு. நல்லா படிச்சு நெறய்ய மார்க் வாங்கனும்னு எழுதுவாங்க. துணிமணிகளப்பத்தி பெறகு நானு ரொம்ப கவலைப்பட்டுக்கல. நமக்குக் கெடச்ச கெதி அம்புட்டுத் தான்னுட்டு எம்பாட்டுக்கு இருந்தேன்.

மாசா மாசம் எங்கப்பா பட்டாளத்துல இருந்து பணம் அனுப்புவாக. சாப்பாட்டு பீசுக்குக்போக ஏஞ்செலவுக்கும் சேத்து ரொம்பவே அனுப்புவாக. நானும் நல்லா வாங்கிப் பெறக்கிக் தின்னுக்கிட்டு சந்தோசமாத்தான் இருந்தேன். எங்கம்மாவும் விசிட்டர்ஸ் சன்டேயில மாட்டுக்கறி, இல்லன்னா கோழி அடுச்சு கொழம்பு வச்சு கொண்டாருவாக. நெறய்யா தீம்பண்டமும் வாங்கிட்டு வருவாக. வந்து எனக்கு பேனு கீனு பாத்துவுட்டு, சடப்பின்னிவுட்டு, பூவு வச்சுவுட்டுட்டுப் போவாக. சந்தோசமா இருக்கும். அங்க பெரிய பத்துவர படிச்சு முடிச்சுட்டு வீட்ல வந்து இருந்தேன். பெரியபத்துல கவர்மென்ட் பரிச்சையில நான் நல்ல மார்க் வாங்குனேன்னு எல்லாரும் சொன்னாக. எனக்குஞ் சந்தோசமா இருந்துச்சு.

பெரிய பத்துக்குப் பெறகு மேல காலேஜ்கெல்லாம் போகக் கூடாதுன்னு வீட்ல நிப்பாட்டிக்கிட்டாங்க. பணமும் இல்ல. மேல் படிப்புப் படிச்சா எங்க சாதியில மாப்பிள்ளை கெடைக்குறது கஸ்டமாம். அதுனால டீச்சர் ட்ரெயினிங் போகனும்னு நாலு எடத் துல எழுதிப் போட்டாங்க.

அந்த லீவுல எனக்குப் பத்தாங்கிளாஸ்ல பாடம் எடுத்த சிஸ்டரைப் பாக்கப்போனேன். அவுக நான் படிக்காம வீட்ல சும்மா இருக்குறதப் பாத்துட்டு ரொம்ப வெசனப்பட்டாங்க. எங்கம்மாக் கிட்ட சொல்லி இப்பிடி நல்லா படிக்கிற பிள்ளைய படிக்க வைக் காம வீட்ல வச்சிருக்கீகன்னு சத்தம் போட்டாங்க. எங்கம்மாவும் பணமில்ல சிஸ்டர்னு சொல்ல, அந்த சிஸ்டர் என்னக் கையோட கூட்டிட்டுப்போயி, எங்கம்மா காதுல கெடந்த பாம்படத்தை வாங்கிக்கிட்டு கொஞ்சம் பணம்குடுத்து ஒரு காலேஜிக்கு அனுப்பி வச்சாங்க. நானும் எப்பிடியாவது படிச்சுறனும்னு வைராக்கியத்துல,

கெட்டுன துணியோட காலேஜ் போய் சேந்து அங்க இருந்த ஆஸ்டல்ல தங்கிக்கிட்டேன்.

ஒருவாரம் இப்பிடி ஒரே பாவடை, சட்டை, தாவணியப் போட்டுக்கிட்டுப் போனேன். கிளாஸ் பிள்ளைக பூரா என்னிய ஏதோ ஒரு வினோதப் பிராணியப் பாக்குற மாதிரி பாத்தாக. செல பிள்ளைக ஏங்கிட்ட, ஒங்கிட்ட ஒரு செட்துணிதான் இருக்குதா? வேற துணிமணி இல்லலையான்னு கேட்டாங்க. எனக்குன்னா ரொம்ப கேவலமாப் போச்சு. எங்கம்மா கொண்டுக்கிட்டு வருவாங் கன்னு சொல்லிட்டு ஆஸ்டல்ல போயி அழுதேன். எங்கப்பா பட்டாளத்துல இருந்து "நீ அந்த சிஸ்டர்மாரு பேச்சைக்கேட்டுட்டுப் போயி காலெஜ்ல சேந்தீல்ல. நீ அவுக கிட்டய பணம் வாங்கிக்கோ; அவுககிட்டயே போய்க்கோ"ன்னு கண்டமாறி கடிதம் எழுதிட் டாங்க. திரும்பி வீட்டுக்குப் போகவும் புடிக்கல. எப்பிடியாது படிச்சு முடிச்சுறனும்னு மனசுக்குள்ள ஒரு இது. அதுனால எல்லா அவமானத்தையும் தாங்கிக்கிட்டு தொடர்ந்து இருந்தேன்.

நான் எடுத்த மார்க்கப் பாத்துகிட்டு, நான் நல்லா உசாரா படிக்கிறதப் பாத்துட்டு, டீச்சர்க, சிஸ்டர்க எல்லாரும் என்னப் பாராட்டுனாங்க. ஒருவாரங் கழிச்சு எங்கம்மா என்னோட துணி மணி, பெட்டி, படுக்கைகள எடுத்துட்டுவந்து தந்தாங்க. பெறகு ஏங்கிளாஸ் பிள்ளைகளும் எங்கிட்ட கொஞ்சம் பிரியமாப் பழக ஆரம்பிச்சாங்க. டெஸ்டுகள்ல நான் முதல் மார்க் வாங்கவும் அவுகளுக்கு ஆச்சரியமா போச்சு. டீச்சர்களும் பிந்தி வந்து சேந்த பிள்ளையப் பாருங்க, எப்படி படிக்குதுன்னு சொன்னாங்க. நானு பெறகுத் துணிமணி, நகை நட்டுன்னு கவலைப் பட்டுக்காம ஏம்பாட்டுக்குப் படிச்சேன்.

செல பிள்ளைக ஏங் காதுல கழுத்துல ஒன்னுமில்ல? கால்ல செருப்புக் கூட இல்லன்னு எங்கிட்ட கேட்டாங்க. ஏறக்குறைய எல்லாப் பிள்ளைகளும் வெதவெதமா நக நட்டு போட்டுக்கிட்டு நல்லத் துணிமணிகளக் கெட்டிக்கிட்டுத்தான் வந்தாங்க. எங்கிட்ட இருந்தாத்தானே போடுறதுக்கு? இருந்த ஒரு சின்னக் கம்மலையும், பரிச்சை பீஸ் கட்டுறதுக்கு அடகு வச்சிட்டேன். துணிமணிகளும் ரொம்பப் பிரமாதமா ஒன்னுமில்ல.

வருசத்துக்கு ரெண்டு தடவ துணி எடுப்பாக வீட்டுல. ஒன்னு கிறிஸ்துமஸ்சுக்கு. இன்னொன்னு சிறுமலத் திருநாளுக்கு. எடப்பட்ட நேரம் எதுவும் எடுக்கமாட்டாக. இந்த ரெண்ட வச்சுக்கிட்டு சமாளிக்கனும். எங்க அக்கா கழிச்சுப்போட்ட துணிகளக் கொஞ்சம் சேத்து வச்சுக்கிட்டேன். இப்பிடியே நாலு வருசத்தைக் கடத்திட்டேன்.

நாலாவது வருசம் காலேஜ்டேன்னு வச்சாங்க. அது

கிராண்டா கொண்டாடுனாங்க. கடேசி வருசப் பிள்ளைக எல்லாரும் பட்டுச் சீல கெட்டி, சோடிச்சு பார்டிக்கு வருவாங்க. எங்கிட்ட மருந்துக்குக்கூட ஒரு நல்ல சீல இல்ல. என்ன செய்றதுன்னுந் தெரியல. யாருகிட்டேயும் போயி கடனா வாங்கிக் கெட்டவும் புடிக்கல. அன்னைக்குனு பாத்து எங்கிட்டும் போகவும் முடியாது. உடவும் மாட்டாங்க. அதுனால ஏம் பாட்டுக்கு குளிப்பு ரூமுக்குள்ள போயி இருந்துக்கிட்டு கதவெப் பூட்டிக்கிட்டேன். எனக்கு ஏ நெலமைய நெனச்சு அழுகை அழுகையா வந்துச்சு. கையில துட்டு இல்லன்னா எப்படியெல்லாம் அவமானப் படவேண்டி இருக்குன்னு தெருஞ்சுக்கிட்டேன்.

என்னோட பிரண்டு ஒருத்தி நாய்க்கமாரு பிள்ள. எங்கிட்ட “வீட்டுக்கு எழுதி ஒரு பட்டுச் சீல கொண்டுவரச்சொல்லி இருக்கலாமுல்ல” ன்னா. அப்பிடி வீட்டுல என்ன பட்டுச் சீல வெளயவா செய்யும்? வீட்டுல யாருகிட்டயும் இல்லங்கிற வெசயம் அவளுக்குத் தெரியாது. புதுசா எடுக்கச்சொல்லவும் முடியாது. அந்த பார்ட்டி முடியுற வரைக்கும் பாத்ரூமுக்குள்ள ஒளிஞ்சு கெடந்தேன்.

பி.எட். படிக்கப்போன எடத்துலயும் அப்பிடித்தான். நம்மள விடவும் எத்தனையோ சனங்க இன்னுங் கீழ் ரோட்டுல இருக்குறதப் பாத்துட்டு நம்ம நெலம எம்புட்டோ தேவலன்னு மனச தேத்திக்கிட்டு இருந்தேன்.

பி.எட். முடிச்சுட்டு வேலைக்குப் போன பெறகு ரொம்ப சௌரியமா இருந்தேன். மாசாமாசம் கைநெறய்ய சம்பளம் வாங்கிட்டு வசதியா, சொதந்திரமா அலஞ்சது நல்லாத்தான் இருந்துச்சு. நெனச்ச சீல சட்டை எடுத்து கெட்டிக்க முடிஞ்சது. நெனச்ச எடத்துக்கு போக முடிஞ்சது. நெனச்சதை வாங்கிப் பெறக்கித்திங்க முடிஞ்சது. கொஞ்சம் நக நட்டுஞ் செய்ய முடிஞ்சது. கையில கொஞ்சம் காசு இருந்தா அதிகாரமும் அந்தஸ்தும், ஒரு கௌரவமும் கெடைக்குதுன்னும் புரிஞ்சுக்கிட்டேன். சும்மாவா சொன்னான், பணம் பாதாளம் வர பாயுமுன்னு. இப்பிடித்தான் துட்டு இருக்கிற எல்லாரும் எப்பமும் சொகுசா இருக்கிறாகன்னு தெருஞ்சுக்கிட்டேன்.

எங்க சனங்க ஊர்ல ராப்பகலா கஸ்டப்பட்டு ஒழச்சாலும் காத்துட்டு கையுல இருக்க மாட்டேங்கு. ஒழச்சு ஒழச்சு ஓடாத் தேஞ்சு போறதுதான் மிச்சம். தெனமும் கூழும் கஞ்சியும் குடுச்சுக்கிட்டு, ஒன்னு ரெண்டு கந்தத் துணிகளக் கெட்டிக்கிட்டு, நல்ல வீடோ, நெலமோ இல்லாம ஒழச்சு ஒழச்சு இந்த பணக்காரங்களுக்கே போட்டுக்கிட்டு இருக்குதுங்க. இந்த சொகுசெல்லாம் அவுகளுக்கு எங்க கெடைக்கும்? நாங்கூட என்னமோ கொஞ்சம் படிச்சு வேலைக்கு வந்துட்டா நல்லா இருக்கலாம்னு தெரிஞ்சுக்

கிட்டேன். ஆனா எப்பிடி அவுக படிப்பாக? அவுக வகுத்துப்பாடே பெரும்பாடா இருக்கே.

இப்பிடி நெனச்சுக்கிட்டு இருக்குறப்ப மடத்தனமா மடத்துக் குள்ள கன்னியாஸ்திரியா சேந்து நம்மளப்போல கஸ்டப்படுற பிள்ளைகளுக்காகப் பாடுபடலாம்னு ஆசைப்பட்டுக்கிட்டு போய் ஒரு மடத்துல சேந்தேன். இப்பிடி ஒரு சாதியில பெறந்து இவ்வளவு கஷ்டப்படுற பிள்ளைகளையும் முன்னுக்குக் கொண்டுவரலாம்னு மனசுக்குள்ள ஒரு ஆச. அப்பிடிப்பட்ட பிள்ளைகளுக்குப் படிச்சுக் குடுக்கனும்னு ஆச. ஆனா நான் போய் சேந்தமடம் இப்பிடி கஸ்டப் படுற பிள்ளைகளக் கண்ணெடுத்தும் பாக்காம பெரிய பெரிய பணக் காரப் புள்ளைகளுக்குத்தான் சேவகம் பண்ணிக்கிட்டு இருக்கிற வெசயத்தை உள்ள போய் தெருஞ்சுக்கிட்டேன். மடத்துக்குள்ள வறுமையில வாடுற சனங்கன்னா ஒரு தினுசாவும், துட்டு இருக்குற வுகள இன்னொரு தினுசாவுந்தான் நடத்துராங்க.

சிஸ்டர் ஆகுறதுக்கு முன்னால நாங்க வறுமையா வாழ்வோம்னு வார்த்தைப்பாடு எடுக்குறாங்க. அது சும்மானாலுந் தான் அப்பிடி எடுக்குறது. மடத்துக்குள்ள வறுமைன்னா என்னன்னு தெரியாது. மணி அடிச்சா சோறு. வெறுஞ்சோறுதானா? வக வகயாச் சாப்பாடு. கறி, மீனு, முட்டன்னு வெதத்துக்கொரு சாப்பாடு. பலமாறிப்பட்ட காய்கறி, பழம் அது இதுன்னு எக்கச்சக்கமா இருக்கும். இருக்குறதுக்கு வசதியான ரூம். ரூமுக்குள்ள கட்டலு, காத்தாடி, மேசை, நாற்காலி, தண்ணி வசதி எல்லாம் இருக்குது. மடத்துக்கிட்டயே பள்ளிக்கொடம். நாலெட்டுல போய் சொல்லிக் குடுத்துட்டு ஓடியாந்துரலாம். பஸ் புடுச்சி, அடிப்பட்டு, நசுங்கி, அரக்க பரக்க ஓடியாரனும்னு அவசியமில்ல. பத்து மணி ஆச்சுன்னா காப்பி, பலகாரம், பன்னெண்டு மணியாச்சுன்னா சூடாச் சாப்பாடு. நாலு மணியாச்சுன்னா மறுபடியும் டீ, பாலகாரம், பெறகு ஏழு மணியாச்சுன்னா திரும்பியும் சூடாச் சாப்பாடு.

உள்ளுக்க எல்லா வசதியும் இருக்குது. வெறுந் தீவனந்தின்னுக்கிட்டு, துணிமணி கட்டிக்கிட்டு ஊர் ஊரா சுத்திக்கிட்டு இருக்கனும்னா மடத்துக்குள்ள இருக்கலாம். எனக்கு மடத்துல சேந்தப் பெறகு சீ இம்புட்டுத்தானா இந்த கன்னியாஸ்திரிகளோட வாழ்க்கைன்னு ஆகிப்போச்சு. இதுல எங்குட்டுக்கூடி வறுமையைப் பாக்குறது?

பள்ளிக்கொடத்துல பூரா பணக்கார வீட்டுப் பிள்ளைகதா. இவுக நட ஓட பவுருக்குத் தக்கனதான் மடத்து கன்னியாஸ்திரிகளும் குலுக்கி மினுக்கி, அலையுறாங்க. எனக்கு இதெப் பாக்க பாக்க வகுத்தெருச்சலா வந்துருச்சு. மனசுக்கு உறுத்தலா இருந்துச்சு. மனசாட்சி கெடந்து அடிச்சுக்கிட்டு கெடந்துச்சு. கடைசில இது ஒரு

வாழ்க்கையான்னு ஆயிப்போச்சு. ரொம்ப மனசு வெறுத்துப்போயி, மடத்தை உட்டுட்டு வீட்டுக்கு வந்துட்டேன்.

வீட்டுக்கு ரொம்ப வீராப்பா வந்துட்டாலும் ரொம்ப கஸ்டமாத்தான் இருந்துச்சு. இருந்த வேலயும் போச்சு. கையுல பணமும் இல்ல. கெட்ட சீல துணிமணியும் அவ்வளவா கெடை யாது. மனசுலயும் கொஞ்சஞ்ச வேதனயில்ல. இது எல்லாத்தையும் விட வெளியே வந்துட்ட பெறகு, எல்லாமே மாறிப்போயி, கண்ணக்கெட்டி காட்டுல உட்டமாறி தெணறிட்டேன்.

வீட்டுல நம்மள ஏத்துக்கிட்டாலும் எனக்கென்னவோ மனசு ஒரு மாதிரியா இருந்துச்சு. மடத்து வாழ்க்க ஒரேடியா என்ன மாத்திப்போடுச்சு. எம்புட்டோ தைரியமா இருந்த நானு ரொம்ப பூஞ்சமனசுக் காரியா ஆகிப்போயி, எதுக்கெடுத்தாலும் ஒரு பயம், அழுகை, இப்பிடி தெம்பில்லாமப் போனேன். யாருமில்லாத அனாதப்பிள்ளகெணக்கா இருந்தேன். மனுச மக்ககிட்ட சாதாரணமா பேசிப் பழகக் கூட கூச்சமா இருக்குது. இப்பிடி கெடக்குறதுக்கு பேசாம செத்துத் தொலஞ்சிரலாம்னுகூட செல சமயம் மனசுல நெனச்சேன்.

இன்னைக்கு நெரந்தரமா ஒரு வேலவெட்டி எதுவுமில்லாம, சாப்பாட்டுக்கும் துணிமணிக்கும் தங்க ஒரு பாதுகாப்பான எடத்துக் கும் வழி வக இல்லாம, தெரு நாய்மாறி அலைறேன். தலித் மக்க ஏழைகளா கெடந்து கஸ்டப்படுற நெலமய நானும் அனுபவிக் கிறேன். ரணபாடுபட்டு வெயில்லயும் மழையில்லயும் ஒழச்சிட்டு கூழுத் தண்ணியக் குடுச்சுப் போட்டு குடுசைகள்ள காலத்தக் கழிக்குற தலித்துகளோட வறும நெலயில கொஞ்சம் நானும் அனுப விக்கேன். பாடுபடுறது பரம ஏழைகளான தலித்துக. அதோட பலன அனுபவிக்குறது துட்டுக்காரனா இருக்குற மேச்சாதிகாரனுகதான். இதுதா இன்னைக்கும் எங்க ஊர்ல நடக்குறது.

மேச்சாதிக்குள்ளயே ஏழையாப் பெறந்தாக் கஸ்டம்தான். அப்பிடி இருக்க பறக்குடிக்குள்ள பரம ஏழைகளா அன்னாடங்காச்சி களாகப் பெறந்துட்டப் பெறகு நெலம என்னன்னு சொல்லித் தெரியவேண்டாம். கோழி கூப்டுறதுக்கு முன்னாலய எந்துருச்சு வாசத்தொளுச்சுட்டு, தண்ணி கிண்ணி எடுத்துவச்சுட்டு, கூழு குடிச்சும் குடிக்காமலும் அரக்கப்பரக்க வேலைக்கு ஓடுறதுக்கே நேரம் சரியாப் போகும். இதுல எங்க இவுக பெத்த புள்ளைகள கவனிச்சு பள்ளிக்கொடத்துக்குப் போகச் சொல்ல முடியும்?

இந்த வறுமைக்குள்ள என்ன படிப்புன்னு, பொம்பளப் புள்ளைக வெறகு சுள்ளி பெறக்கி, வீட்டப் பாத்துக்கிட்டு, கைப் பிள்ளைகளக் கவனிச்சுக்கிட்டு, வீட்டு வேலைகள செஞ்சுக்கிட்டு கெடக்குதுக. பெயல்க கொஞ்சம் வெவரந் தெருஞ்சதும் ஆட்ட

மாட்ட மேச்சுக்கிட்டு அலையுறானுக. தெருவுகள்ள பாத்தா, சின்னப் புள்ளைக துணிமணி இல்லாம மூக்க வடிச்சுகிட்டு, நாய்க்குட்டின்னு பன்னிக்குட்டின்னு வித்தியாசம் இல்லாம சேத்துலயும் சகதியிலயும் உருண்டு கெடந்து வெளாண்டுட்டுக் கெடக்குங்க.

ஆனா இவுக ஒழப்ப அட்டகெணக்கா உறுஞ்சுற மேச்சாதிக் காரனுகளோட புள்ளைக, நல்லா தின்னு கொளுத்துட்டு, துணிமணி கெட்டிக்கிட்டு, பள்ளிக்கொடம் போயி படிச்சு, பதவிக்கு வந்து பணத்துக்கு மேல பணஞ்சேத்துக்கிறாக. ஒழைக்குறதுக்கு ஒரு சாதி. ஒக்காந்து திங்கறதுக்கு ஒரு சாதின்னு பிரிச்சு வச்சுருக்காக. சமுதாயத்துல தீண்டத் தகாதவுகன்னு பிரிச்சு ஒதுக்கி ஓரங்கட்டி வச்சுக்கிட்டு, அவுகள எந்திரங்கெணக்கா வேல வாங்கி அவுகள முன்னேற உடாம இப்பிடி அநியாயம் அக்கிரமம் செய்றாகளே, இது என்னைக்கு மாறப்போகுதோ தெரியல. நம்பள வெரட்டி சொகுசு கண்டபய இத மாத்துவானா? மாத்தத்தான் உடுவானா?

பெறப்பால கெடச்ச சாதியையோ, இந்த சாதியோட கெடைக்குற வறுமையையோ, அவமானத்தையோ, மாத்துறதுக்கு வழிதெரியல. நமக்குக்கெடச்ச கெதி இம்புட்டுத்தான்னு சமாதானஞ் சொல்லிக்கிட்டு, பொறுமையா ஏத்து சகிச்சுக்கிட்டு போறாக. இது நமக்குக் கெடச்ச கெதியுமில்ல. விதியுமில்லன்னு ஒணந்துகிட்ட கொஞ்சப் பேரு இந்த அக்கிரமத்த தட்டிக் கேக்கனும்னு மொயற்சி பண்றாங்க. ஆனா பண பலத்துக்கு இருக்குற அதிகாரம், சக்தி நம்ப மனசுபலத்துக்கு இல்லியே. எம்புட்டு நாளைக்கு கஞ்சிதண்ணி இல்லாம நியாயத்துக்கும் சத்தியத்துக்கும் போராட முடியும்? அன்னாடஞ் சாப்பாட்டுக்கே அடுத்தவன நம்பித்தான் இருக்கவேண் டிய நெலம. ஒருவேளச்சோத்துக்கே தாளம் போடவேண்டிருக்கு. இத வச்சுக்கிட்டுத்தான் பணக்காரனுக, தலித்துகள அடக்கிவச்சு நசுக்கிப் போடுறானுக.

சமுதாயத்துல சனங்ககிட்ட மட்டும் இந்த நெல இல்ல. இத விட மோசமா நம்ம திருச்சபைக்குள்ளயே இருக்குது. அறியாமை யில கெடக்குற தலித்துகள மூலதனமா வச்சு பெரிய வியாபாரமே செஞ்சு, அவனவெஞ் சாதி சனத்துக்கள முன்னேத்தி உடுறானுக. திருச்சபையில தலித்துக நம்பர்லதா சாஸ்தி. மீதி எல்லாத்துலயும் கீழ்ரேட்டுதான். திருச்சபைச் சொத்து சொகத்த அனுபவிக்குறது மேச்சாதி கிறிஸ்தவங்கதான். இந்தச் சாமியாரு கன்னியாஸ்திரிகள்ள கூட பெரியபெரிய பதவிகள புடுச்சுக்கிட்டு அடாவடித்தனமும், அதிகாரமுஞ் செய்றது மேச்சாதிகதான். தலித்துக சாமியாரா, கன்னி யாஸ்திரியா போனாலும் அங்கயும் அவுகள ஓரங்கட்டி வச்சுட்டுத் தான் மறுசோலி பாக்குறாக. அதுனால, எங்களப் போல தலித்துக தொறவறத்துல இருக்கனும்னு ஆசப்பட்டாலும், எங்களப் போலவு களுக்கு அங்க எடமில்ல.

# ஏழு

கடவுள் மேல நான் வச்சிருக்கிற நம்பிக்கை, பக்தி எல்லாம் இத்தன வருசத்துக்குப் பெறகு பாக்கையில எம்புட்டோ மாறிப் போயிருக்கு. எனக்கே ஆச்சரியமாக்கூட இருக்குது.

ஊர்ல இருக்கும்போது கடவுளப் பத்தி எனக்குச் சொல்லிக் குடுத்தது எங்கம்மா, பாட்டி, வாத்திமாருங்க, சிஸ்டருங்க அப்புறம் சாமியாருங்க. இவுக சொன்னதப் பூரா அப்பிடியே நம்புவேன் . அப்படியே செவஞ் செய்வேன்.

தெனமுஞ் சாயங்காலத்துல மந்தர கிளாஸ் கோயில்ல நடக்கும். ஒரு துண்ட எடுத்து பொத்திக்கிட்டு பள்ளிக்கொடம் முடிஞ்சு வந்த கொஞ்ச நேரத்துல கோயிலுக்குப் பொறப்பட்டு போயிருவோம். பசியான பசி எடுக்கும். ஏதாச்சும் இருந்தா தின்னுக்கிட்டே கோயிலுக்குப் போகலாம்னு ஆசையா இருக்கும். செலநேரம் குருநா நனயப்போட்டு மடியில அல்லது சட்டப்பைக் குள்ள போட்டுக்கிட்டு தின்னுக்கிட்டே போவோம். போறவழில செக்கடி பஜாருல கண்ட கண்ட சாமானுக விக்கும். துட்டுதான் இருக்காது. சும்மா நின்னு பாத்துட்டு போவோம்.

விடியங்காட்டி மழன்னாலும், பனின்னாலும் வெள்ளனத் துல எந்துருச்சு காலப் பூசைக்குப் போகனும். பல்லு வெளக்கியும் வெளக்காமலுமும் துண்ட தூக்கிப் போட்டுக்கிட்டு ஓடனும். கோழி கூப்டத்தான் ஒறக்கமும் நல்லா வரும். ஆனா அன்னியாரந்தான் எந்திருச்சு கோயிலுக்குப் போகனும். எந்திரிக்கவே சங்கடமா இருக் கும். மூஞ்சியக் கழுவியும் கலுவாமலும் ஓடுவோம். அதுலயும் கம்மா பெருகிக்கெடந்தா எந்துருச்சு போகவே முடியாது. ரொம்ப குளுரும். எத்தன தடவ உசுப்பி உட்டாலும் பெரண்டு பெரண்டு படுக்கத்தாஞ் சொல்லுமே தவர எந்திரிக்க மனசு வராது. ஆனா என்ன பாடு பட்டாலும் எந்திருச்சு போய்த்தா ஆகனும். போகாட்டி மறுநாளு பள்ளிக்கொடத்து அசெம்பிளில வச்சு சாமியார்கிட்ட இல்லன்னா வாத்தியார்கிட்ட அடி வாங்கனும். அடின்னா சாதாரண அடிஇல்ல. பெரம்புட்டு சுளீர் சுளீர்னு அடி உழும். வீங்கிப்போகும் வீங்கி. அந்த அடிய நெனச்சுக்கிட்டாப் போதும். படுக்கையிலிருந்து துள்ளிக் குதுச்சு எழுந்துருச்சுருவோம்.

எனக்குச் சின்ன வயசுல இருந்தே மனப்பாடம் பண்றது

ரொம்ப ஈஸியா இருக்கும். ஞாவக சக்தியும் சாஸ்தி . அதுனால மந்திரங்கள்லாம் அத்துபடி. ஞானதேசத்துல பரிச்சை வச்சா நா எப்பவும் மொத ப்ரைஸ் வாங்குவேன்.

நானு ரெண்டாங் கிளாஸ் படிக்கும்போது ஒரு வெள்ளக் காரச்சாமியார் பள்ளிக்கொடத்துக்கு வந்தார். ஒயரமா வெள்ள வெளேர்னு நீளத்தாடி வச்சுக்கிட்டு வந்தாரு. அவரத் தொட்டுப் பாக்கனும்னு நாங்க ஆசைப்பட்டுக்கிட்டு கெடந்தோம். சிஸ்டர் ஒவ்வொருத்தரையா மந்தரஞ் சொல்ல சொன்னாக. ஆறு லச்சண மந்தரம், கர்த்தர் கற்பித்த செவம். மங்கள வார்த்தை செவம், விசுமாச மந்திரம் எல்லாத்தையும் சொல்லச் சொன்னாங்க. நா மட்டுத்தான் எல்லா மந்தரத்தையும் சரியாக் சொன்னேன். அந்தச் சாமியாரு என்னத் தூக்கி எடுத்து முத்தங்குடுத்து அஞ்சுபைசா குடுத்தாரு. அந்த வெள்ளக்காரச்சாமி என்னத்தொட்டுத்தூக்கியதே பெரிய சந்தோசம். அதுல வேற முத்தங்குடுத்துட்டு துட்டு வேற குடுத்தது எனக்குத் தலகாலு புரியாத சந்தோசம்; அந்த துட்டை வாங்கித் திங்காம பாவாடையில பத்திரமா சொருகி வச்சுக் கிட்டேன். வீட்டுல போய் காட்டனும்னு ஆச. அதுக்குத்தான்.

ரெண்டாங்கிளாஸ் படிக்கும்போதே புது நன்ம வாங்கிட் டேன். மூணாப்பு படிக்கும்போது மதுரையில இருந்து ஆண்டவர் சாமி வந்தாரு. அப்ப உறுதி பூசுதல் வாங்கிட்டேன்.

தாயாருமாரு பள்ளிக்கொடத்ல படிக்கையில சிஸ்டருங்க எனியத்தான் பங்குக்கோயில தெறக்க பூட்டச்சொன்னாக. பள்ளிக் கொடத்து நேரத்துல கோயில்ல போய் பூ வாசு எடுத்துட்டு வர, அத வெளக்க, பெறகு சிஸ்டரு பூ வாசு வச்சுத்தர கொண்டுபோய் கோயில்ல வைக்க எல்லா நாஞ்செய்வேன். ஏங்கூட யாராச்சும் இன்னொரு பிள்ளய கூட்டிக்கிட்டுப் போவேன். எதுக்குன்னா கோயிலுக்குள்ள தனியாப் போகப் பயம்மா இருக்கும். யாராச்சுங் கூட இருந்தா கொஞ்சந் தெம்பா இருக்கும்.

கோயிலுக்குள்ள தனியா இருக்கனும்னா கொலையே நடுங்கும். ஏன்னா அப்ப பாத்துத்தான் சிஸ்டருக ஞானதேசக் கிளாஸ்ல சொன்ன பேய்க்கதை பெசாசுக் கதை எல்லாம் நெனப்புக்கு வரும். கோயிலுக்குள்ள எங்குட்டுப் பாத்தாலும் பேயா இருக்குற மாறி இருக்கும்.

நாம பாவஞ் செஞ்சுக்கிட்டே இருந்தா பேயி பெரிய நோட்டுல நம்ம பாவத்த எழுதி எழுதி வச்சு கடவுள்கிட்ட காட்டு மாம். அப்பிடி ரொம்ப பாவஞ் செஞ்சா நோட்டு காலியானப் பெறகு நம்ம முதுகுத் தோல உருச்சு பாவத்தை எழுதும்னு சிஸ்டரு ஞானதேசக் கிளாஸ்ல சொன்னாங்க. கரெக்டா நானு கோயில்ல தனியா இருக்கும்போதுதான் இது ஞாவத்துக்கு வரும். பேயி

எம்பாவத்தை எழுதி எழுதி நோட்டுத் தீந்துட்ட மாறியும் ஏம் முதுகுத்தோல உரிக்கிறதுக்கு பேய் வர்ர மாறியுமா தெரியும். படத்துகள்ல பாக்ற கருப்புப் பேயி பெரிய வாலு, கொம்பு, நெகம், பல்லு வச்சுக்கிட்டு எங்கிட்ட வர்ரமாரியும் நாஞ் செஞ்ச பாவத்தை எழுதுன நோட்டக் காட்டுற மாறியும் இப்பிடி கண்ணுக்குள்ள தெரியும். பயந்து செத்துருவேன். கோயில உட்டு வெளியே வந்துட்டா இத மறந்துடுவேன்.

இந்த சிஸ்டருகளுங் கொஞ்ச நல்ல கதையா எதுவுஞ் சொல்லமாட்டாக. எப்பப்பாரு பேய்க் கததான். பேய் ஒரு தராசு வச்சுக்கிட்டு அலயுறதாயும், தராசுல ஒரு தட்டுல நாம செஞ்ச பாவத்தையும், இன்னொரு தட்டுல நாம செஞ்ச புண்ணியத்தையும் நிறுக்குறமாறியும் சொல்லுவாக. கோயிலு பக்கம் போயிட்டாலே பெசாசு தராசோட தலைக்கு மேல கத்துரமாறி ஒரு பெரம்ம புடுச்சுப்போய் பயம்மா இருக்கும். பாவம் வச்சிருக்க தராசுதான் கீழாம இழுத்துக்கிட்டு போறமாறி தெரியும்.

புண்ணியம் உள்ள தட்டை கீழ கொண்டுவர்ரதுக்குன்னு சிஸ்டருக சொல்ற வேலையெல்லாம் செய்வேன். என்னசொன்னாலும் கீழ்ப்படிவேன். அடிக்கடி மந்தரஞ் சொல்வேன். ஆனாக்கூட பாவத் தட்டுத்தான் எறங்குறமாறி இருக்கும். கண்ணால பெசாச பாக்க முடியுமாம். அதுதான் ரொம்ப பயம்மா இருக்கும். இப்ப ஒனிடா டி.வி வெளம்பரத்துக்கு வர்ர பெசாசு மாறித்தான் அப்பயும் வரும். ஆனா அந்தப் பெசாசு கரேன்னு பாக்கவே பயங்கரமா இருக்கும். பதறிப் போவேன் பதறி.

நம்ம நெறய்ய பாவஞ் செஞ்சா பெசாசுக்குச் சந்தோசமாகவும், சம்மனசுக்கு வருத்தமாகவும் இருக்கும்னு சிஸ்டருங்க சொல்லுவாக. அதுனால நானு சின்னப் பொய்கிய் சொல்லிட்டாக்க, குச்சியோ பென்சிலோ களவாண்டுட்டா, வீட்ல தாய் தகப்பனுக்குப் பெரியவுகளுக்குக் கீழ்ப் படியாட்டா, பள்ளிக்கொடத்துல நல்ல பிள்ளையா நடக்காட்டி, தராசு தூக்கிட்டு அலையுற பெசாசு பல்லக் காட்டி சந்தோசமா சிரிச்சுக்கிட்டு இருக்கிற மாறியும், சம்மனசு பாவம் போல அழுகுறமாறியும் கண்ணுக்கு முன்னால தெரியும். அழுகுற சம்மனசப் பாக்கையில எனக்கும் அழுகை வர்ர மாறி இருக்கும். எப்பிடித்தான் இத மறக்கனும், அழிக்கனும்னு நெனச்சாலும் முடியாது. இன்னும் அதிகமாத்தான் கண்ணுக்கெதுக்க வரும்.

புதுநன்ம வாங்குறதுக்கு முன்னால நல்ல பாவசங்கீர்த்தனம் செய்ய சொல்லிக் குடுத்தாங்க. அவுக அன்னைக்குச் சொல்லிக் குடுத்த பாவத்தைத்தான் நான் ரொம்ப நாளா சொல்லிக்கிட்டு வந்தேன். வாரா வாரம் பாவசங்கீர்த்தனம் செய்யனும்னாங்க. பாவசங்கீர்த்தன தொட்டில போயி மொழங்கால் போட்டு

மனப்பாடம் பண்ணுன வாய்ப்பாட்டை ஒப்பிப்பேன்.

"சாமி சர்வேசுரனுக்குத் தோத்திரம். நான் பாவியாயிருக் கேன். என்ன ஆசீர்வதியும். நான் பாவசங்கீர்த்தனம் செஞ்சு ஒரு வாரம் ஆகுது. நான் நாலு தடவ பொய்சொன்னேன்; அஞ்சு தடவை களவாண்டேன்; பெரியவங்களுக்குக் கீழ்ப்படிஞ்சு நடக்கல; கோயில்ல பெறாக்குப் பாத்தேன்; இந்தப் பாவங்களுக்கும் மறந்து போன பாவங்களுக்கும் மனஸ்தாபப்படுறேன் சாமி" - இதான் அந்த வாய்ப்பாடு.

சாமியாரு தண்டனயா 'மூனு அருள் நிறைந்த மரியாயே செபத்தைச் சொல்லு' ன்னு சொல்லிட்டு சத்தமா ஆசீர்வாதம்னு சொல்வாரு. ஒடனே எந்துருச்சு கோயிலுக்குள்ள போய் தண்டனயை நெறவேத்தனும். சாமியாரு பங்களாவுல இருந்து கோயிலுக்குள்ள இருட்டுக்குள்ள போறதுக்கு பயம்மா இருக்கும். ஒவ்வொரு தடவயும் பாவசங்கீர்த்தனம் முடிச்சிட்டு பயந்து நடுங்கி ஓட்டமு நடையமாத்தான் கோயிலுக்குள்ள போவேன். அங்கப்போயி சாமியாரு சொன்ன மந்தரங்களோட உத்த மனஸ்தாப மந்தரத்தயும் சேத்து சொல்லிட்டு வீட்டுக்கு ஓடுவோம்.

நன்ம வாங்கும்போது நன்மய பல்லுட்டயோ கையுட்டயோ தொடக்கூடாது. வாய்க்குள்ள ஒட்டிக்கிட்டாலும் நாக்காலயே தடவித் தடவி தள்ளி முழுங்கனும்னு சிஸ்டர் சொன்னாங்க. சேசு நன்மயில இருக்குறார். அவரைக் கடிக்கக்கூடாது. நம்ம பாவக் கையிட்டுத் தொடக்கூடாதுன்னு திரும்பி திரும்பிச் சொன்னாங்க. கொஞ்ச நாளைக்கு அவுக சொன்னபடியே செஞ்சேன். நன்ம மேல ஒட்டிக் கிட்டா ரொம்பச் சங்கடமா இருக்கும். நாக்குட்டயே தடவித் தடவி எடுக்க கஸ்டமா இருக்கும். நேரமும் ஆகும் பெறகு எப்பிடி நற்கருணை நாதர்கிட்ட சொல்லவேண்டிய செவத்தைச் சொல்ல முடியும்? அதுனால கூடுமான வரைல சீக்கிரத்தில நன்மய முழுங்க முயற்சி செய்வேன்.

ரொம்ப வேடிக்கையா இருக்கும். முக்காடு போட்ட துண்டுனால வாய மறச்சுக்கிட்டு நாக்குட்ட தள்ளித்தள்ளி, தள்ளுற துக்கு யாரும் நம்பள பாக்குறாகளா, முக்கியமா சிஸ்டருக யாரும் பாக்குறாகளான்னு ஓரக்கண்ணுட்ட பாத்துக்குவேன்.

ரொம்ப நாளா நன்மயக் கையிட்ட தொட்டுப் பாத்துர னும்னு ஒரு ஆசை. அதுனால ஒருதடவ முக்காட்டுத் துணிய வச்சு நல்லா மறச்சுக்கிட்டு நன்மயக் கையிட்ட தொட்டுட்டேன். சிஸ்டர்க பயங்காட்ன மாறி ஒன்னுமே நடக்கல. கையிட்ட தொட்ட கையில ரத்தமா ஒட்டும்னு சொன்னாக. வெரல எடுத்துப் பாத்தேன். ஒன்னுமே இல்ல. சிஸ்டருக சும்மா சொல்றாகன்னு தெருஞ்சுக்கிட் டேன். ஆனா அத யாருகிட்டயும் சொல்லமுடியல. சொல்லனும்னு

ஆசதான். ஆனா சொன்னா நன்மயக் கையிட்ட தொட்ட வெசயம் தெருஞ்சு போகுமேன்னு பயத்துல யாருக்கிட்டேயும் அப்பச் சொல்லல.

எந்த ஊர்லயோ ஒரு பெய நன்மய பல்லுட்ட கடுச்சுட்டா னாம். காலைல இருந்தே அவெ வாயிலருந்து ரத்தமா கொட்டுச் சாம். அன்னைக்குப் பூரா நிக்கலியாம்... இப்படியும் சிஸ்டர் சொன் னாக. அதையுந்தான் பாப்போமேன்னு ஒருநாளு முக்காட்டுத்துணிய வாய்கிட்ட வச்சுக்கிட்டு பயந்து பயந்து நன்மயக் கடுச்சு மென்னு முழுங்கிட்டேன். துண்டுட்ட வாய தொடச்சுப்பாத்தேன். ரத்தமே இல்ல. இதுவும் சும்மாதான் சிஸ்டருக சொல்லி இருக்காகன்னு தெரிஞ்சுக்கிட்டேன். ஆனா அதையும் யார்கிட்டயும் சொல்ல முடியல. இந்த மாறிப் பக்தி விசுவாசத்துல வளந்து வந்தேன்.

மூனாங்கிளாஸ்ல படிக்கையில உறுதிப்பூசுதல் வாங்கு னேன். உறுதிப் பூசுதலின் போது ஆண்டவர்சாமி கன்னத்துல அடிப் பார்னு சொல்லி இருந்தாக. அப்பிடி அடிக்கும் போதுதான் இஸ்பிரீத்துசாந்து ஏம்மேல எறங்கி வருவாராம். அவர் அடிக்குறதை எதிர்பார்த்து ஆண்டவர் சாமி எம்பக்கத்துக்கு வந்ததுல இருந்து கண்ண மூடி மூடி தெறந்துக்கிட்டு இருக்க, நான் எதிர்பாராத நேரத் துல டப்புன்னு அவர் கன்னத்துல அடிக்க இஸ்பிரித்து சாந்துவான வர் எறங்குன மாறியே தெரியலே. ஆனா பக்தியா இருக்குறதுக்காக தலய குனிஞ்சுக்கிட்டு இருந்தேன். அத இன்னைக்கு நெனச்சாச் சிரிப்பு பொத்துக்கிட்டு வருது.

தாயாருமாரு பள்ளிக்கொடத்துல படிக்கும்போது பாலர் சபையில இருப்போம். நாயித்துக்கெழமைகள்ல பூசைக்கு முன்னால பாலர் சபை மெடல் குத்திக்கனும். அந்த மெடல் குத்தறதுகூட ரொம்ப சந்தோசமா இருக்கும். பூசை முடிஞ்சு பாலர் சபைக்கூட்டம் இருக்கும். பெறகு, பாலர்சபை தினம்னு ஒன்னு வரும். பெறகு அப்பப்ப எதுக்கோ துட்டுக் குடுக்கனும். அதுதான் நெனவிருக்கு.

நாயித்துக்கெழமச் சாயங்காலம் மந்தரக்கிளாஸ் இருக்கும். அது முடிஞ்சு கோயில்ல ஆசீர்வாதம் இருக்கும். இந்த ஆசீர்வாதம் மணிக்கணக்கா நடக்கும். சாமியார் வந்து பெரசங்கம் வச்சு ஆயிரத் தெட்டு கேள்விகேட்டு இப்பிடியே நேரமாகும். எங்களுக்குச் சின்னப் பிள்ளைகளுக்கு ஒறக்கம் அப்பிடி கண்ணச் சொக்கிட்டு வரும். லேசா கண்ண மூடிட்டாலும் போதும், பக்கத்துல ஒக்காந்திருக்கிற சிஸ்டர் படீர்ன முதுகுல அடிக்கும். அதுக்குப் பயந்து கண்ணத் தொறந்து வைக்க நெனச்சாலும் கொஞ்ச நேரத்துல ஒன்னும் முடியாது. அப்பிடியே ஒன்னொண்ணா கீழ சாஞ்சுருவோம்.

இப்ப சிஸ்டரு அடிக்கமாட்டாக. ஆனா நறுக்குன்னு கிள்ளி வைப்பாக. அது அதைவிட வலிக்கும். கிள்ளுதுக்குன்னே நெகத்தை

வளத்து வப்பாகபோல. கிள்ளு வாங்குன சொஞ்ச நேரத்துல மறுபடியும் தல ஆடி ஆடிச்சாயும். செல சமயம் சாமியாரு பாத்துட்டு சிஸ்டரக்கூப்பிட்டு அடிக்கச் சொல்லுவாரு. ஆராருக்குத்தான் பயப்படுகிறது? தூக்கத்தை எப்பிடித்தான் அடக்கிப் பாத்தாலும் அடக்க முடியாது. ஒருநாளு இப்பிடித்தான் நான் நல்லா தூங்கிட்டு இருக்கையில சிஸ்டர் வச்ச அடியில அங்னயே ஒன்னுக்கிருந்திட்டேன். அதுக்குஞ்சேத்து கூட நாலு அடி வச்சாக. எங்கம்மா வந்து தொடச்சிட்டு நாங் கத்தி அழவே கூட்டிட்டுப் போயிட்டாக.

நான் மந்தரங்கள நல்லாச் சொல்வேங்குறதுனால சிஸ்டரு எனிய கல்யாணத்துக்கு மந்தரம் படிக்க வந்த பொண்ணுகளுக்கு மந்தரஞ்சொல்லிக் குடுக்கச் சொன்னாங்க. மாப்பிள்ளைகளுக்குப் பிரதர் கோயில்ல வச்சு சொல்லிக் குடுப்பாரு. நானு அப்பிடி ஒருவாரம் ரெண்டுவாரம் மந்திரஞ் சொல்லிக்குடுத்த பெறகு சிஸ்டரு வந்து பொண்ணுக்கிட்ட மந்திரங் கேப்பாக. அவுகளுக்குச் சொல்லத் தெரியாட்டி எனியத்தான் வைவாக.

அப்பிடித்தான் ஒரு நாளு நான் மந்தரஞ் சொல்லிக்குடுத்துக்கிட்டு இருந்தப்ப சிஸ்டரு வந்தாக. அவுக வந்த பயத்துல நான் ஒரு வரி தப்பா மாத்திச் சொல்லிட்டேன். வந்ததே சரின்னு சிஸ்டர் ஏந்நெத்தியில ஓங்கிக் கொட்டுனாங்க. எனக்கு நல்லாப் பெரிய நெத்தி, வலின்னா உசுரு போயிருச்சு. அந்த எடத்துல வீங்கிருச்சு. பெறகும் விடல. அழுதுக்கிட்டே மந்தரஞ் சொன்னேன். அன்னைக்கு எம்மனசுக்குள்ள நானு பெரிசா வளந்தப் பெறகு இந்த சிஸ்டரை கல்ல எடுத்து எறியனும்னு நெனச்சுக்கிட்டேன். அத்தோட இந்த மந்திரகிளாஸ், ஆசீர்வாதம் எதுக்கும் போகமாட்டேன்னு நெனச்சுக்கிட்டேன். அந்த நெனப்புல கொஞ்சங் கோவம் தணிஞ்சுது. ஆனா நானு பெரிசாகுறதுக்கு முன்னாலயே அந்த சிஸ்டர் எங்க ஊரவிட்டு மாத்திப் போயிட்டாங்க.

இப்பிடிக் காலைல பூசை, சாயங்காலத்துல மந்திரக்கிளாஸ், செவம்னு ஒவ்வொருநாளும் போவோம். பள்ளிக்கொடத்துல கிறிஸ்தவப் பிள்ளைகளுக்கு ஞானதேசக் கிளாசும், இந்துப் பிள்ளைகளுக்கு நல்லொழுக்கக் கிளாசும் நடக்கும், ஞானதேசத்துல எப்பிடியும் நல்ல மார்க்கு வாங்குவேன். ப்ரைஸ்கூட வாங்கி இருக்கேன்.

கோயிலுக்கு, பள்ளிக்கொடத்துக்குப் போகனும்னா பல தெருவுகளத் தாண்டி நடந்துபோகனும். கோயிலு, பள்ளிக்கொடம், மடம், சாமியாரு பங்களா எல்லாமே மேச்சாதிக்காரங்க இருக்குற எடத்துலதான் இருக்குது. பள்ளிக்கொடத்துக்குல முக்காவாசிப் பிள்ளைக எங்க தெருப்பிள்ளைகதான். இருந்தாக்கூட இம்புட்டுப் பிள்ளைகளும் நடந்து அங்கபோய் படிக்கனும். மேச்சாதி ஆளுகள்ள

கொஞ்சப் பேறுதா கிறிஸ்தவங்க. அவுகளுக்கு கோயில், பள்ளிக் கொடம், சிஸ்டருக மடம், சாமியாரு பங்களா எல்லாமே பக்கத்துல தான். நடக்கனும்னு அவசியமில்ல. நாங்கதா மழன்னாலும் வெயிலுனாலும் நடந்து போகனும். இதுலவேற எங்கதெருவுல இருக்குற லைட்டு மட்டும் அநேகமா எரியாது. யாரும் அத கண்டுக் கவும் மாட்டாக. இருட்டுக்குள்ள சகதிக்குள்ள பீங்காட்டு வழியா போய் வரனும். ஒருவேள இங்க இம்புட்டு அசிங்கமா இருக்குன்னு தான் சாமியாரு, சிஸ்டருக எல்லாரும் ஒதுங்கிக்கிட்டாகளோ என்னமோ தெரியல.

சாமியார் பள்ளிக்கொடத்துல படிக்கையில, பழய கோயில இடுச்சுட்டு புதுக்கோயில கெட்ட ஆரம்புச்சாங்க. அப்ப பழய கோயிலுக்குப் பின்னால கெட்டடங் கெட்டுறதுக்கு வானந்தோண்டு னாங்க. நாங்க கைத்தொழில் கிளாஸ்ல அங்கபோயி பள்ளத்துல இருந்து மண்ண அள்ளிவெளிய போடுவோம். ஒருநாளு அப்பிடிப் போயிருக்கையில பள்ளத்து செவர்ல ஒரு எலும்புக்கூடு தெருஞ்சது பல்லெல்லாம் வருசைக்கா இருந்துச்சு. நானும் இன்னும் ரெண்டு மூணு பிள்ளைகளும் பாத்துட்டு பயந்துபோய் நின்னோம். அப்ப இன்னொருத்தி பாத்துட்டு அது யாரோ சாமியாரோட எழும்புக் கூடாம். முன்னாடி அங்க செத்து பெதைச்சாகளாம். இப்ப அவரு புனிதரா மோச்சத்துல இருக்குறாருன்னு கத கதயாச் சொன்னா.

இதுமட்டுமில்லாம கூடவே இது சாமியார் எழும்புக் கூடுங்கறதுனால இத எடுத்து வச்சுக்கிட்டா நல்லா படிப்புவரும், நாம கேக்குறதெல்லாங் கெடைக்கும்னு வேற சொல்லிப்போட்டா. சொல்லிக்கிட்டே இருந்தவ அந்த பல்லுல ரெண்டு மூனு எடுத்தா. ஒடனே நாங்க எல்லாரும் கையுல கெடச்சதெல்லாம் அந்த எழும்புக்கூட்டுல இருந்து எடுத்துக்கிட்டோம். பெரிய எலும்புகள உட்டுட்டோம். அதை எடுக்கவும் முடியல. சின்ன எலும்புக, பல்லுக எல்லாம் பெறக்கி ஜாமின்றி பெட்டிக்குள்ள பத்திரமா வச்சுக்கிட்டோம். தெனமும் அந்த பல்லுககிட்ட வேண்டிக் கிடு வோம். வாத்தியார்க்கிட்ட அடி வாங்கக்கூடாது. நல்லாப் படிக் கனும். நல்லா புத்தி வரனும். இப்பிடி என்னென்னமோ கேட் டோம்.

கொஞ்ச நாளு இப்பிடிப் போனது. ஒருநாளு எங்கவீட்ல நாங்க எல்லாரும் ஒண்ணா ஒக்காந்து ராத்திரி படுச்சுக்கிட்டு இருந்தோம். விஞ்ஞானத்துல ரெண்டு படம் வரையச்சொல்லி சயன்ஸ் டீச்சர் சொல்லி இருந்தாங்க. அத வரஞ்சுக்கிட்டு இருந்தப்ப எங்க அக்கா என்னோட டப்பாயில பல்லப்பாத்துட்டு இது ஏதுடி இம்புட்டு பல்லு? எங்க இருந்து எடுத்தன்னு கேட்டா. ஒடனே எங்கண்ண, தங்கச்சி, அம்மா, பாட்டி, எல்லாரும் கேள்விக்கு மேல கேள்வி கேக்க ஆரம்பிச்சிட்டாங்க. நானு வெளக்கமாச் சொன்னேன்.

எல்லாருஞ் சிருச்சாக. எங்கம்மாவும் பாட்டியும் அது சாமியாரோட எலும்புக்கூடு இல்ல. சாமியார்கள இங்க பெதைக்க மாட்டாக. முன்னாடிச் சாமியாருக்குக் குசினி வேல பாத்துக்கிட்டு இருந்தவரு சாகவும் கோயிலுக்குப் பின்னாடிதான் பெதச்சாக. இது அவரோட பல்லாத்தா இருக்குமுன்னு சொல்லி வெளியே தூக்கிப் போடச் சொன்னாக. எனக்கு மனசே வரல. ஏன்னா அதுமேல அப்படி ஒரு பக்தி வச்சிருந்தேன். தூக்கிப்போட்டா அது பாவ மோன்னு ஒரு பக்கம் பயம்மாவும் இருந்துச்சு. நான் தூக்கிப்போ டல. எங்கண்ணந்தான் அம்புட்டயும் எடுத்து குப்பையில போட்டுட்டாங்க. மறுநாளு நான் பள்ளிக்கொடத்துக்கு போனப்ப மத்த பிள்ளைககிட்டயும் சொன்னேன். பெறகு அவுகளும் பயந்துக் கிட்டு தூக்கிப் போட்டுட்டாங்க. அதுகள எவ்வளவு மேர மரியாதையோட வச்சிருந்தோமோ அதுக்கு எதிரா அதைக் கொண்டு போய் வீசி எறுஞ்சுட்டு திரும்பிப் பாக்காம ஓடியாந்துட்டோம். இப்பிடியும் ஒரு பக்தியில நான் இருந்து வந்திருக்கேன்.

அப்ப வீட்டுல தெனமும் ராத்திரி குடும்பச் செவஞ் சொல்லுவோம். சாயங்காலம் கோயிலுக்குப் போயிட்டு வந்த ஒடனே வீட்டுல செவம். பசி வயித்தக் கிள்ளும். ஆனா செவஞ் சொன்னபெறகுதா சாப்பாடுன்னு எங்கம்மா கண்டிப்பா சொல்லு வாங்க. அதுலயும் ஏதாவது கறி, மீனுன்னா செவத்து மேல நாட்ட மே இருக்காது. சாப்பிட்டுட்டுச் சொல்வோம்னு அடம்புடுச்சு செல நாட்கள்ள சாப்பிட்டுச் சொல்லி இருக்கோம். சாப்பிட்டு செவஞ் சொன்னா எல்லாருந் தூக்கி உளுவோம். அதுக்காகத்தான் செவத் துக்குப் பெறகு சாப்பாடுன்னு சட்டம்.

நாங்க ஏதோ கடனேன்னு சொன்னாக்கூட எங்கம்மா தல பூரா முக்காடு போட்டு ரொம்ப உருக்கமா மன்றாடுவாங்க. நானு எப்ப எங்கம்மாவ நெனச்சாலும் நாஞ் சிறுசா இருந்தப்ப அடிக்கடிப் பாத்த இந்த எங்கம்மாவோட உருவந்தான் இன்னும் எங்கண்ணு முன்னால நிக்கும். செவத்து முடிவுல பாட்டுப் புஸ்தகம் வச்சு பாட்டுப்படிப்போம். எந்தப் பாட்டு படிச்சாலும் படிக்காட்டியும் "மனமே வா தொழுவோம், பரமானந்தமாங் கடவுள்" இந்த பாட்ட மறக்காம எங்கம்மா படிப்பாங்க. அது முடிச்ச ஒடனே சாப்பிடப் போவோம்.

நானு ஆறாங்கிறாஸ் படிக்கும்போது எங்க வீட்ல கரண்டு இழுத்தாங்க. அதுவரயில சீமத்தண்ணி வெளக்குத்தான் வச்சிருந் தோம். கரண்டு இழுத்த புதுஸ்ல லைட் போட, அமத்த ரொம்ப புடிக்கும். வீட்ல அதுக்குச் சண்டகூட வரும். எங்க பாட்டிகூட சும்மா லைட்போட்டு போட்டு அமத்திக்கிட்டு சின்னப்பிள்ள கெணக்கா சிரிப்பா. "என்ன மாயத்துல இப்பிடி கரண்டு புடுச்ச

வச்சிருக்காம்பாரு. தட்டி உட்ட ஒடனே லபக்னு கரண்டு புடுச்சு லைட் எரியுது"ன்னு அடிக்கடி ஆச்சரியமா சொல்லுவாக. சீமத் தண்ணிமாறி கரண்டு காலியாகாமலே எரியுறதுல பாட்டிக்கு ரொம்ப சந்தோசம்.

பாட்டி வீட்ல சேசு பாலனோட தல மட்டும் ஒன்னு இருக்கும். கோயில்ல சேசுபாலன் சுரூபம் ஒடஞ்சு தூரத் தூக்கிப் போட்டாகளாம். தலயமட்டும் பத்திரமா பாட்டி எடுத்துட்டு வந்து அவுக வீட்ல வச்சிருந்தா. அவுக வீட்டுக்குப் போம்போதெல்லாம் அந்தத் தலயத் தூக்கி மடியில வச்சுக்கிட்டு முத்தங்குடுத்துட்டு வருவேன். வெளிய கொண்டு வந்து அந்தத் தெருப் பிள்ளைக பூரா முத்தங்குடுக்க காட்டுவேன். பாட்டினா வைவா. ஒடச்சுப் போடுவனாம். பாட்டி சொகமில்லாம படுத்தப்பெறகு எந்தம்பி அத எடுத்து கண்டமானிக்கு மூஞ்சில கலர் பூசிஉட்டு பொம்மத்தல மாறி ஆக்கிட்டான். அந்த தலமேல நான் வச்சிருந்த பக்தி அவனுக்குத் தெரிய நாயமில்லை.

எங்க வீட்டுல சேசு, மாதா, சூசையப்பரு, அந்தோணியாரு, செவத்தியாரு, இன்னாசியாரு, மெக்கேல் சம்மனசு, திருக்குடும்பம், பாடுபட்ட சுரூபம் இப்பிடி பல படங்க, பல சுரூவங்க இருக்கு. மாதாவுலேய பலதரப்பட்ட மாதாக்க, சகாயமாதா, பூண்டிமாதா, வேளாங்கண்ணிமாதா, வியாகுலமாதா - இப்பிடி வகவகயா படங்க இருக்கும். கரண்டு இழுத்தப் பெறகு இந்த படங்களுக்குப் பக்கத்துல ப்ளக் வச்சு லைட் எரிய வச்சுருப்போம். இந்த ப்ளக் வெசயம் எனக்கு அப்ப அவ்வளவு தெரியாது. லைட்போட அமத்த மட்டுந்தான் தெரியும்.

ஒரு நாளு காலக்கோயில் முடிஞ்சு வீட்டுக்கு வரும்போது கோயில் பக்கத்துல இருந்த எங்க வாத்தியார் வீட்டுல இருந்து ரெண்டு செம்பருத்திப்பூ களவாண்டுட்டு வந்தேன். பாத்தா உடமாட்டாங்க. தெரியாம காம்பவுண்டு சொவத்துல ஏறி புடுங்குவோம், செவுத்துக்கு வெளியே பூ தொங்கிட்டு கெடக்கும். பூவக் கொண்டாந்து வீட்ல சேசு படத்துக்கு வைக்க நெனச்சேன். ஆனா பூ வைக்க எந்த எடமும் வசதியா இல்லாமப்போகவே கடைசியா எங்கண்ணுலபட்டது அந்த ப்ளக்தான்.

அதுல நல்லா மூனு ஓட்ட இருக்கவே, ஒரு பூவ மொதல்ல ஒரு ஓட்டயில சொருகுனேன். கைய சுரீர்னு என்னமோ இழுத்துச்சு. எனக்கொன்னும் வெளங்கல. சரின்னுட்டு ரெண்டாவது பூவ இன்னொரு ஒட்டயில சொருகுனேன். அப்பயும் கையைப்புடுச்சு இழுத்துச்சு. ரெண்டாந்தடவ வைக்கயில கரண்டுதான் புடுச்சு இழுக்குதுன்னு கண்டுபுடுச்சுட்டேன். போச்சுடா நம்ம பூவ களவாண்டுட்டு வந்து வச்சதுனாலதான் கடவுள் கரண்ட உட்டு

இழுக்க உடுறார்னு எனக்கு பயமெடுத்துக்குச்சு. ஒடனே அங்கனயே ஒரு சின்ன செவஞ் சொன்னேன். இனி இப்பிடி பூவக் களவாண்டுட்டு வந்து வைக்கமாட்டேன்னு பயந்து பயந்து சொல்லிட்டு எறங்கிப்போயிட்டேன். அப்ப எங்கிட்ட இருந்த பக்தி அது!

எங்க ஊரு பக்கத்துல ஒரு மல இருக்குது. முந்திக்காலத்துல அங்க மாதா காட்சி குடுத்தாகளாம். முன்னாடி எப்பமோ எங்க பங்குச் சாமியாரு மாட்டு வண்டிக் கெட்டிக்கிட்டு இன்னொரு ஊருக்குப் பூச வைக்கப் போனாராம். அந்தக் காலத்துல இப்ப மாறி பஸ் கெடையாதாம். அப்பிடி வண்டியில போம்போது ராத்திரி ஆயிருச்சாம். அது ஒரு காட்டு வழியாம். சரி இன்னுங் கொஞ்ச தொலவுலதான போயிரலாம்னு வண்டிக்காரங்கிட்ட போச் சொன்னாராம்.

ஒரு குறிப்பிட்ட எடத்துல மாடு மேல போமாட்டேனுச் சாம். ரொம்ப பெரயாசைப்பட்டு வண்டிக்காரன் மாட்டைப் பத்திப் பத்திப் பாக்கானாம். மாடு அசைவனாங்குதாம். என்ன செஞ்சும் மாடு ஒரு அடிகூட முன்னாடி எடுத்து வைக்க மாட்டேன்றுச்சாம். சரி இது என்ன இந்தப்பெய மாடுக இப்பிடி நேரங்கெட்ட நேரத்துல சண்டித்தனம் பண்ணுதுகன்னு சொல்லிட்டு அங்னகுள்ளயே வண்டிய நிப்பாட்டிட்டு வண்டிக்குள்ளயே சாமியாரு படுத்துக் கிட்டாராம்.

அது ஆள் அரவமில்லாத காடாம். சுத்தி மலைகதானாம். நெறய்ய மரங்களா இருந்துச்சாம். கீன்னு வண்டுச் சத்தமா கேட்டுக் கிட்டு இருந்துச்சாம். சாமியாருக்கும் வண்டிக்காரனுக்கும் உள்ளுக் குள்ள பயந்தானாம். சாமியாரு செபமால சொல்லிக்கிட்டே அப்பிடியே ஒறங்கிட்டாராம்.

நடுச்சாமம் இருக்குமாம். சாமியாரு கெனாக் கண்டுக்கிட்டு கெடந்துருக்காரு. அவரு சொப்பனத்துல தேவமாதா வந்து இந்த எடத்துல எனக்கு ஒரு கோயில் கட்டனும்னு சொன்னாங்களாம். அவரு கண்ணு முழிச்சு எந்த எடத்துல தாயேன்னு கேட்டாராம். வண்டி நின்ன எடத்துக்குக் கொஞ்சந்தள்ளி தேவமாதா அழகு சௌந்தர்யமா நின்னுக்கிட்டு இருந்தாகளாம். அவுகளச் சுத்தி அப்பிடி ஒரு ஒளி அடுச்சுச்சாம். அந்தமானிக்க சட்டுன்னு மறஞ்சுட்டாகளாம்.

சாமியாருக்கு அதுக்குப்பெறகு தூக்கமே இல்லயாம். விடியுந்தட்டிக்கு ஒக்காந்து செபமால சொன்னாராம். விடிஞ்சப் பெறகு வண்டிக்காரன உசுப்பி போக வேண்டிய ஊருக்குப் போயிருக்காரு. விடிஞ்சப்பெறகு வண்டிக்காரன் மாட்டப்பத்துனா அது சாதாரணமா போச்சாம். அவனுக்கு ஆச்சர்யமா இருந்துச்சாம். சாமியாரு அவங்கிட்ட ராத்திரி நடந்ததப் பூராஞ் சொன்னாராம். ஒடனே அந்த எடத்துல ஒரு கோயில கட்டிட்டாராம். அந்த கோயில்

கெட்டட வேலைக்கு எங்கப்பா கூட போனதாகச் சொன்னாங்க. இப்பிடித்தான் அங்ன மாதா காட்சி தந்ததாகவும் கோயில் கட்னதா கவும் பெரியவுக சொல்லிக் கேட்டுருக்கேன். இந்த எடத்துக்குச் சின்னமலன்னு பேரு.

இந்த சின்ன மலயுல ஒவ்வொரு மாசமும் மொத வெள்ளிக் கெழமைகள்ள பூச நடக்கும். நாங்க படிக்கிற பிள்ளைகள்ளாம் ஒண்ணாச் சேந்து கெட்டுச்சோறு கெட்டிக்கிட்டு எங்க ஊர்ல இருந்து வேளக்கெழம சாயங்காலமே நடந்து போயிருவோம். ஊருக்கும் மலைக்கும் எடயில அஞ்சாறு மைல் தொலவு இருக்கும். போறதுக்கு முன்னாடியே வீட்டுல இருந்து கொஞ்சம் துட்டு வாங்கிக்குவோம். போறவழியில முறுக்கு, குச்சி ஐஸ், பஞ்சு முட்டாய், சவ்வு முட்டாய், கொய்யாப்பழம், வெள்ளரிக்கான்னு வாங்கித் தின்னுக்கிட்டு பேசிக்கிட்டே நடந்து போவோம்.

சாயங்காலம் கோயில்ல செபமால இருக்கும். அதுமுடிஞ்சு ஒக்காந்து கொஞ்சம் சோறு சாப்பிடுவோம். மறுநாள் காலைக்குக் கொஞ்சம் வச்சுக்குவோம். பெறகு கோயிலுக்குள்ளயே துண்ட விரிச்சு படுத்து ஒறங்குவோம். புளியங்காயி சீசன்னா புளியங்காய புடுங்கி மெழுகுத்திரியக் கொழுத்திவச்சு சுட்டுத் திம்போம். இல்லன்னா கல்லுல எச்சியத்துப்பி ஒரசி அதை வழுச்சு நக்குவோம். நாக்குப் புண்ணாப் போகும். ஆனாக்கூட உடமாட்டோம். அங்ன இருக்குற ஆலமரத்துகள்ள ஏறி உழுதுகளப் புடுச்சு ஊஞ்சலாடி வெளையாட நல்லா இருக்கும். நல்ல எடம் அது. மலைகள்ள ஏறி எறங்கியும் வெளாடலாம். சுத்திலும் மலதான். பாக்க அழகா இருக்கும். நல்ல காத்தோட்டமா குளுகுளுன்னு அப்பிடி இருக்கும்.

மறுநா காலைல எந்துருச்சு செங்கம்பட்டிய தட்டிப் பல்ல வெளக்கி மொகத்தக் கழுவிட்டு பூசைக்குப் போவோம். பூச நடந்துட்டு இருக்கும்போதே காலவண்டிக்குக் கொஞ்சம் பேரு வந்து எறங்குவாங்க. பூசையில இருந்துக்கிட்டே யார் யார் வர்ராங்கன்னு பாத்துப் போடுவோம். பூச முடிஞ்சதும் பக்கத்துல மலக்கொகைப் பக்கத்துல இருக்குற பாடுபட்ட சரூவத்துக்கு சேசுவின் மருத திரு இருதயமேன்னு ஒருபாட்டப் படிச்சுக்குட்டே போய் அங்ன ஒரு செவஞ்சொல்லுவோம். காணிக்கப் பெட்டில காணிக்க போட்டுட்டு ஒக்காந்து மீதிக் கெட்டுச்சோறத் திம்போம். தின்னுமுடிச்சுட்டு அங்னகுள்ள இருக்குற வேப்பமரம், புளியமரத்துகள்ள இருக்கற எலைகளப் புடுங்கி தூக்குச் சட்டிகளுக்குள்ள வச்சு வீட்டுக்குக்கொண்டாருவோம். பெரிய பொம்பளைக அப்பிடிச்செய்வாளுக. அதப்பாத்துக்கிட்டு நாங்க சின்னப்பிள்ளைக் காடுகளும் செய்வோம். அது பரிசுத்தமான எலைகளாம். மருந்துக்கு நல்லதாம். அத வச்சிருந்தா பூச்சி பொட்டு கடிக்காதாம். வீட்டு

நெலப்படிகள்ள சொருகி வச்சா பேய் பெசாசு, காத்து கருப்பு அண்டாதாம்.

பூச முடிஞ்சு திரும்பி வீட்டுக்கு நடந்தே வருவோம். வெயிலு சுள்ளுன்னு அடிக்கும். செறுப்பு கிறுப்பு ஒன்னும் இருக் காது. பொடிப் பொசுக்கும். கொஞ்ச நேரம் ஓடுறது; கொஞ்சநேரம் நடக்குறது; கொஞ்சநேரம் மரத்து நெழலுகள்ள ஒக்கார்ரது இப்பிடியே வீடு வந்து சேருவோம். அன்னைக்குப் பள்ளிக்கொடத் துக்கும் லீவு உட்டுருவாக.

மாசாமாசம் சின்ன மலைக்குப் போறது மட்டுமல்லாம ஒவ்வொரு வருசமும் மே மாசத்துல சின்னமலத் திருநாளு கொண் டாடுவோம். பல ஊரு சனங்க இந்தத் திருநாளைக்குச் சின்னமலை வருவாக. ஒம்பது நாளைக்கு முன்னாலயே சின்ன மலையில கொடியேத்தி, ஒம்பதா நாள் ராத்திரியும், பத்தா நாளு பகல்லயும் திருநா கொண்டாடுவாக.

ஒம்பதா நாளு காலைல இருந்து சனங்க சார சாரையாக மாட்டுவண்டி கெட்டிக்கிட்டு இல்லன்னா நடந்தோ, பஸ்கள்ளயோ வந்துக்கிட்டே இருப்பாக. கூடவே மலைல்ல அடிக்குறதுக்குக் கோழியோ, ஆடோ, பன்னியோ கெட்டி, சமயலுக்கு வேண்டிய வெறகு, சட்டிபான, மசால எல்லா எடுத்துட்டு வருவாக.

சின்னமலய அப்பப் பாத்தா ஜேஜேன்னு இருக்கும். கோயிலச்சுத்திப் பந்தல் போட்டு, வாழமரம் ஊனி, சுத்தி ட்யூப் லைட்டுக கெட்டிருப்பாக. இந்தக் கடக்காரனுகளுக்கு எங்குட்டு கூடித்தான் தெரியுமோ, கரெக்டா ரெண்டு நாளைக்கு முன்னாலேயே வந்து தரய செம்மபடுத்திக் கட போட்டுருவானுக.

பூக்கடைக, வளயல்கடைக, மாம்பழக்கடைக, சுரூவக் கடைக, இட்லி தோச காப்பி பலகாரக் கடைக இப்பிடி வருச வருசயா கடைக போடுவாக. கொடராட்னம், பெட்டிராட்னங்கூட வரும். பதினி, நொங்கு, எளனி, வட, ஐஸ், அல்வா, கேசரி, பாயாசம், பயறு - இப்பிடிச் சில்லண்டி யாவாரமும் நடக்கும்.

கூட்டத்தப் பாத்தா நெருசல் தாங்க முடியாது. மாட்டு வண்டிக மாடுகள்ளாம் ஒருதிக்கம் கெட்டிக் கெடக்கும். கோழிகளும் ஆடுகளும் வெட்டுப்படப்போறது தெரியாம தின்னுபோட்டு கத்திக் கிட்டு கெடக்கும். எப்பப் பாத்தாலும் ஒருத்தர ஒருத்தர் கத்திக் கத்திக் கூப்பிட்டுக்கிட்டு கூ கொல்லோன்னு அலைஞ்சுக்கிட்டு கெடப்பாக. முந்தி மாறி இப்ப கூட்டம் வர்ரதில்லயாம். முன்னால எள்ளுப்போட எடமிருக்காதாம். அம்பட்டுக் கூட்டம் வருமாம்.

சாயங்காலத்ல கோயில்ல செபமால, செபம் நடக்கும். கோயிலுக்குள்ள எடங்கெடச்சவுக கொஞ்சப்பேரு செவஞ்செய்வாக. மீதப்பேரு ஒறங்குவாக. எளவட்டப்பெயலுக புதுத்துணிமணிகளப்

போட்டுக்கிட்டு, வடிய வடிய எண்ணெ தேச்சு வளுச்சுக்கிட்டு கடக் காட்டு வழியா அலைவானுக. பொம்பளப் பிள்ளைகளும் புதுச் சேல சட்ட கெட்டிக்கிட்டு, கூடப்பூவக் கொண்டயில வச்சுக்கிட்டு சிரிப்பும் பேச்சுமாத் திரிவாளுக.

கெழடு கெட்டைக, ஒக்காந்து வெத்தல இடுச்சுப்போட்டுக் கிட்டு சாமானுக்குக் காவலாவும், எடத்தை வேற யாரும் வந்து புடுச்சுக்கூடாதுன்னும் ஒக்காந்த எடத்துலயே ஒக்காந்துகிட்டு வழம பேசிக்கிட்டு இருப்பாக. அங்கங்க பந்தக்கால்கள்ள, மரத்துக்கள்ள கெட்டியிருக்கிற தொட்டிகள்ள கெடந்து பச்சப்புள்ளைக அப்பப்ப வீறு வீறுன்னு கத்துங்க. இருக்குற கூச்சல்ல இதுக சத்தம் செல நேரம் கேக்காது. தொட்டிச்சீல துள்ளுறத வச்சுக்கிட்டு கேட்டாத் தான் உண்டு. கெழவிக அத ஆட்டி ஒறங்க வைப்பாக.

விடிய விடிய சப்பரச் சுற்றுப்பிரகாரம் இருக்கும். மேளக் காரனுக தூங்காம கொள்ளாம மேளம் அடிச்சுட்டு முன்னால போக, பெட்ரோமாஸ் லைட் தூக்கிக்கிட்டு கொஞ்சப்பேரு போக, கொஞ் சப்பேரு மாதா சப்பரத்தைத்தூக்கிக்கிட்டுச் சுத்திவருவாக. எடயில வேட்டுக்கூடப் போடுவாக. வாணவேடிக்கைகளும் இருக்கும். சப் பரத்துக்குக்கூடப்போறது கொஞ்சப்பேருதான். நாலஞ்சு சாமியாருக பாவசங்கீர்த்தனத் தொட்டிகள்ள ஒக்காந்து கெடப்பாங்க. அந்தச் சத்தத்துக்குள்ள என்னத்த பாவசங்கீர்த்தனம் செய்யறது? நாம சொல்றது அவருக்குக் கேக்காது. அவருசொல்றது நம்மளுக்குக் கேக்காது. ஏதோ கடனுக்கு பாவசங்கீர்த்தனம் செய்யனுமேன்னு நானும் ஆளோட ஆளா வருசயில நின்னு பாவசங்கீர்த்தனஞ் செய்வேன். இல்லன்னா திருநாளுக்குக்கூட பாவசங்கீர்த்தனஞ் செய்யலன்னு எங்கம்மாவும் பாட்டியும் வைவாக. அதுனால அவுக ளோட நானும் போயிருவேன்.

ராத்திரிக்குக் கெட்டுச்சோறு கொண்டாந்து வடகிட வாங்கிச் சாப்பிட்டு ஒறங்குவாக. காலைல கோயில்ல பூசை இருக்கும். ஒறங் கிட்டு கெடந்தவுகளுங்கூட ஒறக்கச்சடவோடபோயி நன்ம வாங் கிட்டு வருவாக, அந்தப்பூசையில நன்ம வாங்காட்டி பெறகு ஏழுமணிக்குக் கொகப் பூசையிலதான் வாங்க முடியும். கொகப் பூசைக்கு போனா அப்புறம் காலைல வெள்ளனத்துல சமைக்க முடி யாது. அதனால எப்பிடியும் முட்டிமோதி அந்தப்பூசையில நன்ம எடுத்துருவாக.

ஏழுமணிக்குக் கொகையில பூச இருக்கும். அதுக்கு கொகப் பூசைன்னுபேரு. பூச அதுபாட்டுக்கு மேல நடக்கும். மல அடிவாரத் துல இருந்து உச்சி வரைக்கும் சனங்க கலர் கலரா ஏறுவருசயில ஒக்காந்திருக்குறதப் பாக்க ரொம்ப அழகா இருக்கும். கொகையில ரெண்டு மூனு சாமிங்கக் கூட்டுப்பூச வப்பாங்க. அந்தப் பூசையில

நன்ம எடுக்குறது கெட்டிக்காரத்தனந்தான். சருக்கிச் சருக்கி உடும். எப்பிடியும் போய் நன்ம வாங்கிடுவோம்.

கொகப்பூசை தொடங்கும்போது அங்கங்க கல்லுட்ட அடுப்புக் கூட்டி சமைக்க ஆரம்பிச்சிடுவாங்க. பொகக்காடு மண்டும். வெட்டும் போது கோழி,சேவல், ஆடுக கத்துறது ரொம்ப பரிதாபமா இருக்கும். முக்கியமா இந்தச் சேவலுதான் ஏழு ஊருக்குக் கேக்கும்படி கூப்பாடும் போடும். கெடா வெட்டுறவுக, பன்னி அறுக்குறவுக மத்தவுகளுக்கும் விப்பாங்களாம். வெறகு கொண்டு வராதவுக அங்குட்டு இங்குட்டு போயி முள்ளுக்கிள்ளுப் பெறக்கிட்டு வருவாக. ஆம்பளைங்க மரத்து மேல ஏறி காஞ்சு கெடக்குற கெளைகள வெட்டித்தள்ளுவாங்க. சோறாக்கி, கொழம்பு வச்சு எறக்குறதுக்குள்ள எல்லாத்துக்கும் பசி பொறுக்கமாட்டாம அதுலய அள்ளித் திங்குங்க.

பத்து பதினொரு மணி வாக்குல எல்லோரும் பந்தி அமந்து மூக்கு முட்டச் சாப்டுவாக. சாப்ட்டு முடிக்குதுக்குள்ள ஏகப்பட்ட பிச்சைக்காரக் கூட்டம், நரிக்கொறவங்க வந்து வாயுல சோத்த வைக்க உடாதுங்க. ஒருவழியா எல்லா முடிச்சப்பெறகு, மீதியிருக் கிற சோறு, கொழம்பு, கறி எல்லாத்தையும் பிச்சைகேட்டு வர்ரவு களுக்கு அன்னதானமா பகுந்து குடுத்துட்டு வெயில்தாள மறுபடி வண்டியக் கெட்டிக்கிட்டு ஊரு வந்து சேர எப்பிடியும் சாயங்காலம் ஆகும்.

இப்பிடி வருசா வருசம் நடக்குது. இந்த தேவமாதா பக்தி முக்கியமா புதுத்துணி எடுத்து கெட்டுறதுலயும், கெடாவோ, கோழியோ அடுச்சு சோறாக்கித் திங்குறதுலயும் இருக்குது. இன்னைக்கு வரைல இது இப்பிடித்தான் நடந்துக்கிட்டு இருக்குது. இப்ப கோயிலுக்குச் சுத்தியுள்ள மலங்காட்டுச் செம கள்ளு, சாராயம் விக்க ஆரம்பிச்சிட்டாங்களாம். குடுச்சுப்போட்டு வந்து அதுவேற கூத்தும் சண்டைக்காடும் நாறிப்போகும் நாறி.

மடத்துல சேர்ரவரைக்கும் நானும் இந்த திருநாள்ல கூட்டத்தோட கூட்டமா இருந்து சாமி கும்பிட்டிருக்கேன். சின்னப் பிள்ளையா இருக்கும்போது புதுத்துணி கெடைக்குது, வண்டில போலாம். வாங்கிப் பெறக்கித் திங்கலாம். நல்லாச் சோறுகறி திங்கலாம். புதுச்சுரூவம், வளையல், வெளயாட்டுச் சாமானுக வாங்கலாம். - இப்பிடித்தான் இந்த பக்தி முயற்சி இருந்திருக்கு. கொஞ்சம் வளந்தப் பெறகு, புதுத் துணிமணிகளோட, பிரண்டுகளப் பாக்கலாம். அங்கிட்டு இங்கிட்டுச் சுத்தலாம் இப்பிடித்தான் இருந்திருக்கு. கொஞ்சம் புத்தி வெவரந்தெரிஞ்சப் பெறகு இதென்னடா திருநாளுன்னு இந்தக் கூட்டத்துக்குள்ளப்போயிக் கெடக்குறதுக்கு வீட்டுல இருந்தே கும்புட்டுக்கலாம்னு இருந்தது.

மடத்துல சேந்தப்பெறகு இந்த திருநாளுக்குப் போக வாய்ப்பு கெடைக்கல. அத நெனச்சு வருத்தப்பட்டதுமில்ல.

ஊர்ல ஈஸ்டர் திருநாளு ரொம்பச் செறப்பா கொண்டாடு வாங்க. வீட்டுக்கு வீடு வரி பிரிச்சு நல்ல மேளத்தோட கொண்டாடு வோம். எங்க தலித் கிறிஸ்தவக வீட்டுகள்ள மட்டுந்தா வரி பிரிப் பாக. நாடாக்கமாரு வரியுங் குடுக்கமாட்டாக. திருநாள் கொண்டாட் டத்துல கலந்துக்கிடவும் மாட்டாக. ஈஸ்டருக்கு முன்னால கோயில்ல பொழுதுக்கும் ஆராதன இருக்கும், அதான் பெரிய வெள்ளிக்கெழம அன்னைக்கு. ஊர்ல தாயாரு பள்ளிக் கொடம், சாமியாரு பள்ளிக்கொடத்துல படிக்கும்போது கண்டிப்பா அந்த ஆராதனைக்குப் போகனும். ஒரு வாத்தியார் ஒரு புஸ்தகத்தை வச்சு ராகம் போட்டு இழுத்து இழுத்து செவம் படிப்பாரு. ஒரே ராகமா இருக்கும். அந்த ராகத்துக்கு தூக்கம் நல்லா வரும். ஆனா வழக்கம் போல சிஸ்டர்மாரு தொந்தரவுனால தூங்கமுடியாது. செல சமயத்துல சிஸ்டர்களே தூங்குவாக. ஆனா அவுகளப்போயி நாம அடிக்க முடியமா? கிள்ள முடியுமா?

ஈஸ்டர் நடுச்சாமப் பூசைக்கு நல்ல சீல கட்டி, பூ வாங்கி வச்சுக்கிட்டு போவோம். அப்ப எல்லாம் கோயிலுக்கு முன்னால வெளியதான் பூசை இருக்கும். எல்லாரும் படுத்து தூங்குவாக. வெளிய வேப்பமரத்துக் காத்து நல்லா ஜில்லுன்னு அடிக்கும். சேசு உயிர்க்கும் போது சிஸ்டர்க எல்லாத்தையும் அவுக போட்டு ஒக்கார்ர பாய வச்சு அடுச்சு எழுப்புவாக. கோயில்ல பெரியமணி, பூசச் சின்னமணி எல்லா மணியும் அடிப்பாக. அன்னியார வரைல ஒரு வெள்ளத்துணியபோட்டு மறச்சு வச்சிருந்த உயிர்த்தசேசு சரூவத்த ஒரு வாத்தியாரு ஓடிப்போயி தெறந்து ஒடவும் சேசு உயிர்த்து நிப்பாரு. எல்லா உளுந்து கும்புடுவோம். அந்த மணிச் சத்தங்கள்ள கேக்கும் போதும் உயிர்த்த சேசு சுரூவத்தைக் காட்டும்போதும் எனக்கு ஒடம்பே புல்லரிச்சுப் போகும். அப்ப என்னமோ வானத்துலருந்து கடவுள் வர்ரமாறி இருக்கும்.

பூசையில அப்பப்ப மெழுகுவத்தியப் பொருத்த, அமத்த சொல் வாக. எரிய வச்சுக்கிட்டே இருக்கத்தான் புடிக்கும் . ஆனா சிஸ்டர்க உடமாட்டாக. எடயிலயே அமத்த சொல்லுவாக. ஊதிப்போடணும். மணலக் குமிச்சு அதுல மெழுகுவத்திய வச்சு வெளாட நல்லா இருக்கும். பூச அதுபாட்டுக்கு நடக்கும். சாமியாரு பெரிய மெழுகு வத்திய வச்சுக்கிடுவாரு. பூச முடிஞ்சதோ முடியலயோ எல்லாரும் கரண்டிகளயும், சட்டிகளயும், தூக்கிட்டு ஓடுவோம். அப்ப ஒரு சண்ட வந்தேத் தீரும். கெடச்சவரைக்கும் தீத்தத் தண்ணியும், புது நெருப்பும் அள்ளிக்கிட்டு வீட்டுக்கு வருவோம்.

வீட்டுக்கு வந்த ஒடனே பக்தியா அந்தத் தீத்தத்தண்ணில கொஞ்சங் குடிக்கனும். பெறகு வீடு பூரா அத அப்பிடியும் இப்பிடி யுமா தொழுச்சி உடனும். கொண்டுவந்த நெருப்ப அடுப்புக்குள்ள போட்டு வச்சிருவோம். காலங்காத்தால எந்துருச்சு இட்லி சுடுறதுக்கு அந்த நெருப்புல இருந்துதான் தீப்பத்த வைக்கனும். அன்னைக்குப் பூரா நல்லா சோறு தண்ணி ஆக்கித் திம்போம்.

அன்னைக்குச் சாயங்காலத்துல தெருவுல இருந்து கொட்டு அடுச்சுக்கிட்டே கோயிலுக்குப் போவோம். ஆசீர்வாதம் இருக்கும். முடுஞ்ச ஒடனே பெரிய பொம்பளைகளா வட்டம் போட்டு, “தெருவில் வாராரோ, சேசு தேரில் வாராரோ”- ன்னு பாட்டுப் படுச்சுக்கிட்டு கும்மி அடிப்பாக. நாங்க எல்லாருஞ் சுத்திநின்னு வேடிக்க பாப்போம். ஆம்பளைக சடுகுடு வெளாடுவாக. பெறகு மசங்குனப்பெறகு உயிர்த்த சேசச் சப்பரத்துல வச்சு சோடிச்சு சாமியார் மந்துருச்ச பெறகு ஊருக்குள்ள தூக்கிட்டுப் போவோம்.

நாடாக்கமாருக என்னமோ இதுல எதுலயும் கலந்துக்க மாட்டாக, திருநாளைக்கு வரியுங் குடுக்கமாட்டாக. சப்பரஞ் சோடிக்கவோ, தூக்கவோ கூட வரமாட்டாக. அவுக தெரு வழியா சப்பரம் வரும்போது இந்துக்காரக மாறி எட்டிப்பாத்துட்டு வீட்டுக்குள்ள போயிருவாக. தலித் சாதிக கொண்டாட்டத்துல அவுக சேந்துக்கமாட்டாக. சப்பரம் பல சாதிக்காருக தெருவுக வழியாப் போகும். வழி நெடுக கிறிஸ்தவ பாட்டு படுச்சிட்டு, செபம்பண்ணிக்கிட்டுப் போவோம். நாங்க செக்கடி வரையில போயிட்டு அப்பிடியே வீட்டுக்குப்படுக்கப் போயிருவோம். அம்புட்டுதா. ஈஸ்டரு முடிஞ்சிடும். வேற எடங்களுக்குப் படிக்கப் போனப்பெறகுதான் இந்த ஈஸ்டர் எம்புட்டு பெரிய திருநாளுன்னு வெளங்குச்சு. அதோட அர்த்தமே அப்பத்தான் புரிஞ்சது.

கிறிஸ்மஸ் நடுச்சாமப் பூசையோட முடிஞ்சுபோகும். நடுச்சாமத்துல கிறிஸ்மஸ், ஈஸ்டர் பூசைக்கு எந்துருச்சுப்போக கஸ்டமா இருக்கும். எதுக்கு இந்த சேசு நடுகுடுச்சாமத்துலதான் பெறக்காரு, உயிர்க்காரு? தூக்கத்துல இருந்து எந்திருக்கனுமேன்னு இப்பிடி செலவருசம் நெனச்சிருக்கேன். ஈஸ்டர விட கிறிஸ்மஸ் புடிக்கும். ஏன்னா கிறிஸ்மஸ்குப் புதுத் துணி எடுப்பாக. ஈஸ்டருக்கு எடுக்க மாட்டாக. வழக்கமான மாட்டுக் கறியோட கிறிஸ்மஸ் முடிஞ்சுரும்.

வருசப்பெறப்பும் அப்பிடித்தான். இப்பெல்லாம் இந்த திரு நாளுகளோட கொண்டாட்டங்களே மாறிப் போய்க்கிட்டு வருது. காலம் மாறிக்கிட்டுப் போறதுக்குத் தக்கன அதுவும் மாறுது. ஆனா என்னத்துக்காக இதுகளக் கொண்டாடுறோம்னு யாரும் யோசிக் கிறது இல்ல. சாமியாருங்க சிஸ்டருங்களும் எது தேவையோ அதச்

சொல்லாம பொருத்தமில்லாம, அர்த்தமில்லாம, கண்டத களியத பேசிட்டுப் போறாக. இது மாறி இதுல எல்லாம் எனக்கு ஒரு அர்த்தமும் இல்ல. இப்ப கடனேன்னு போறதும் வாரதும்தான் இப்ப பக்தியா போச்சு.

எங்க ஊர்ல படிப்ப முடிச்சுட்டு ஒம்பதாங்கிளாக்கு ஒரு ஆஸ்டல்ல சேந்து படிக்கும்போது கடவுள்மேல் இருந்த பயம் கொஞ்சம் கொஞ்சமாகப் போயி மனசுக்குள்ளயே ஒரு பாசம் உண்டாச்சு. எப்பயும் செவஞ் செய்யனும்; போய் அடிக்கடி சேசப் பாத்துப்பேசனும்; அவரு மனசு கஷ்டப்படும்படி நடக்கக்கூடாது; பாவஞ்செய்யக்கூடாது; நல்லபிள்ளையா நடக்கனும்னு பலமாறிப் பெரயாசப்பட்டேன். வருசா வருசம் மூணுநாள் தியானம் இருக்கும். அது எனக்கு ரொம்பப் புடிக்கும். தெனமும் பூசைக்குப் போறது, நன்ம வாங்குறது, வாராவாரம் வாசங்கீர்த்தனம் செய்றது எல்லாம் மனசுக்குப் பிரியப்பட்டுச் செய்ய ஆரம்பிச்சுது அப்பத்தான். அங்க இருந்த சிஸ்டர்களையும் ரொம்பப் புடிச்சது. அவுகளப்போல நானும் சிஸ்டராகி, கடவுளுக்கு என்னையே கொடுக்கனும்னு வேற மனச்சுக்குள்ள ஆச. பெரிய பத்து முடுச்சப்பெறகு ஒரு சிஸ்டர்கிட்ட இந்த ஆசெயச் சொன்னேன். அவுக நானு காலேஜ் படிப்பு முடிச்சப்பெறகுதான் சேரனும்னு சொல்லிட்டாக.

கஷ்டப்பட்டு காலேஜ்ல சேந்தேன். ஆனா அங்க படிக்கும் போது கடவுள்மேல நான் வச்சிருந்த பாசம் பக்தி எல்லாம் கொறஞ்சுபோச்சு. எதாச்சுங் கஷ்டநஸ்டம் வந்தா கடவுளே காப்பாத் துன்னு சொல்றதோட போச்சு. இதுகூட பழக்கதோசத்துல வந்து போச்சு. “தெனமும் ஏன் பூசைக்குப்போகனும்? நன்ம வாங்கனும்?” இப்பிடி கண்டமானிக்கு மனசுக்குள்ள கேள்வி வரும். சாமியார் களும், சிஸ்டர்களும் எனிய ரொம்ப ஏமாத்திட்டாங்கன்னு மனசுக்குப்படும். அதுவரைக்கும் இவுக வழியாத்தான் கடவுள் நம்மகிட்ட வர்ராருன்ன நெனச்சதெல்லாம் மாறி, இவுககிட்ட கடவுளே இல்லங்குற மாறி மனசுக்குப்படும். அதுனால அவுக செய்ற ஒன்னுமே புடிக்காது. எதுத்து கேள்வி கேட்டேன். சண்ட போட்டேன். சே, ஏமாத்துக்காரங்க, வேசக்காரங்கன்னு மனசுக் குள்ள ஒரு வெறுப்பு உண்டாச்சு.

இவுக இல்லாமலே நாமளா கடவுளுக்கிட்ட பேசமுடியும் போக முடியும்னு மனசுக்குப் பட்டுச்சு. இவுக சொல்லிக்குடுத்த மாறி நாம வளவளன்னு சொல்ற மந்தரங்கள்ள, அந்த பக்தி முயற்சி, இந்த பக்தி முயற்சி, நவநாள், செவமால இப்பிடி இதுகள்ளதான் கடவுள் இருக்குரார்னு நம்ப முடியல. இயற்கையில சாதாரணமா தெனம் நடக்குற சம்பவங்கள்ள கடவுள மனசுக்குள்ள பாக்க முடியும்னு ஒனந்துக்கிட்டேன். அதுனால அம்புட்டுநாளு நம்பிக்

கிட்டு செய்துக்கிட்டு வந்ததெல்லாம் அர்த்தமில்லாததா, போலித் தனமா பட்டுச்சு. சிஸ்டரா போகனும்னு இருந்த ஆசையெல்லாம் அடியோட போச்சு.

படிப்பெ முடிச்சுட்டு வேலை செய்ய ஆரம்பிச்சேன். வேல செய்யப்போனதும் ஒரு கன்னியாஸ்திரிகளோட பள்ளிக்கொடத்துல தான். எடுத்த எடுப்புல அவுகளப் பாத்துட்டு இவுக கொஞ்சம் வித்தியாசமா இருப்பாக போலன்னு நெனச்சேன். பின்னாலப் போகப்போகத்தான் தெருஞ்சது, அவுக நெசம்மாவே சேசு சொன்ன மாறி வெள்ளை அடிக்கப்பட்ட கல்லறைகன்னு. இது தெரியாத வரைக்கும் மனசுக்குள்ள இவுக சபையில சேந்து சிஸ்டராகனும்னு ஒரு சபலங்கூட உண்டாயிருந்துச்சு. நல்ல காலத்துக்கு அப்பிடி எதுவுஞ் செய்யாம இருந்தேன்.

அஞ்சு வருசம் அங்க வேல பார்த்தேன். அந்தப் பள்ளிக் கொடத்ததுல படிச்ச பிள்ளைக பூராம் ஏழைப்பிள்ளைக. முக்கா வாசிப்பேரு தலித் பிள்ளைகதான். அதுகளுக்குப்பாடஞ் சொல்லிக் குடுக்குறதுக்கு புடுச்சிருந்துச்சு. சந்தோசமா இருந்தேன். ஆனா மடத்துல அந்தக் கன்னியாஸ்திரிக பண்ணுன அக்ரமங்களப் பாக்கையில பத்திக்கிட்டு வரும். அந்தப் பிள்ளைகளுக்கு எம்புட்டோ செய்யலாம். ஆனா ஒன்னுஞ் செய்யாம தின்னு கொளுத்துப் போய் அவுகளுக்குள்ளேயே சண்டைக்காடு போட்டுக்கிட்டுக் கெடந்தாக.

ஏழைப் பிள்ளைப்பேரச் சொல்லி போர்டிங்குன்னு ஒன்ன வச்சுக்கிட்டு, அந்தப் பிள்ளைகளத்தான் சகல வேலைகளையும் செய்யச் சொல்லிக்கிட்டு இருந்தாங்க. என்னமோ இந்த கன்னியாஸ் திரிகதான் ராணிக மாறியும் மிச்சப்பேரு எல்லாரும் எடுபிடி ஆளுங்க மாறியும் வச்சிருந்தாங்க. கொஞ்சம் மனுசத் தன்மையா நடக்குற சிஸ்டர்க ரொம்ப கஸ்டப்பட்டுக்கிட்டு கெடந்துச்சுக. அவுகளுக் குள்ளேயே சாதிச்சண்டை, ஏழை பணக்காரன்னு சண்டை, பேசுற பாசை வச்சுக்கூட சண்டைதான்.

தலித் பிள்ளைகளுக்கு படிப்போட வேற பல காரியங்களை யும் சொல்லி ஊர் ஒலகத்துல அவுக நெலமைய வெளங்கவைக் கலாம். ஆனா அதுக்கு மாறாக தலித் பிள்ளைகன்னா இப்பிடித்தான் இருக்கனும். அவுகளுக்கு வேற பொகலிடம் கெடையாதுங்குற மாறித்தான் அந்தப்பிள்ளைகள நடத்துறது, பேசுறது எல்லாமே. அதுனாலயே அந்தப்பிள்ளைகளும் சரி நமக்கு கெடச்ச கெதி அம் புட்டுத்தாங்குற மாறி இருக்குங்க. காலைலயும், சாயங்காலமும் மடத்துல இருக்கிற அத்தன வேலைகளையும் செய்யுங்க. இதெல் லாம் பார்த்த எனக்கு மனசு ரொம்பச் சங்கடப்பட்டுச்சு. என்ன கன்னியாஸ்திரிக இதுங்க. ஏழை எளியவுங்களுக்குன்னு வந்தோம்ங்

கறாங்க. ஆனா இப்பிடி இருக்காகன்னு கோவமா வரும். செல சமயம் அவுககிட்டய கேள்விகேட்டுச் சண்டகூடப் போட்டுருக் கேன்.

இங்க இந்த சிஸ்டருங்கள இப்பிடிப் பாத்த பெறகும் எனக்கு எடயிலேயே மடத்துல சேரனும்னு தோணும். சேந்து வித்தியாசமா இருக்கனும்; இப்பிடி ஏழை எளியப் பிள்ளைகள ஆட்டிப்படைக்காம மத்தவுக மாறியே அவுகளயும் வச்சுக்கிடனும் - இப்பிடி ஆசை வந்துச்சு, ஆனா பிடிவாதமா நான் மடத்துக்குப் போக்கூடாதுன்னும் எனக்கு நானே சொல்லிக்கிட்டிருந்தேன். சேசுமேல, மாதாமேல எல்லாம் ஒரு மாறியான பாசம் பக்தி மனசுக் குள்ள இருந்துச்சு. ஆனா அந்த சிஸ்டருக சாமியாருக சொல்றது வெறுப்பா இருந்துச்சு. என்னைக்காவது வெளியூர்ச் சாமியாரு வந்து சமுதாயத்தைப் பத்தி, மக்களப்பத்தி பேசும்போது மனசுக்குள்ள ஒரு ஆவலா இருக்கும். ஒரு மாறியான ஆசை உண்டாகும். அங்க இருக்கையிலதான் திடீர்னு என்னமோ, பைபிளப்பூரா ஒரு தடவயாவது வாசிச்சுப் பாத்துரனும்னு ரொம்ப ஆசையா இருந்துச்சு, அதனால தெனமுங் காலை, ராத்திரியில பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடுன்னு வாசிச்சேன்.

கஸ்டப்படுற சனங்கமேலதான் கடவுள் ரொம்ப கருசனை யா இருந்துருக்காரு. சேசு கூட அப்பேர்ப்பட்ட சனங்கூடதான் இருந்துருக்காருனு தெரிஞ்சுக்கிட்டேன். இப்பிடி யாருமே இதை எடுத்துச்சொல்லல. அதுவரைக்கும் சொன்னவுக பூராமே கடவுள் அன்பானவர், இரக்கமானவர், சாந்தமானவர், பாவங்களை மன்னிப்பவர், பொறுமையானவர், மென்மையானவர், தாழ்ச்சி உள்ளவர், கீழ்ப்படிதல் உள்ளவர் - இப்பிடியேதான் சொல்லித் தந்தாங்க. கடவுள் நீதியானவர், நேர்மையானவர், அநீதி கண்டு கோபப்படுபவர், போலித்தனத்தை எதிர்ப்பவர், ஏற்றத்தாழ்வு காட்டாதவர் - இப்பிடிப்பட்ட எதுவுமே அதுவரையில யாரும் சொல்லித்தரல. இந்த சேசுவுக்கும், நடமொறயில இருக்கிற சேசுவுக்கும் ரொம்ப வித்தியாசம் இருக்குது. கஸ்டப்படுற சனங்கிட்ட இப்பிடி இவரப்பத்தி சொல்லித்தராம சும்மா அர்த்தங்கெட்டதனமா தாழ்ச்சி, கீழ்ப்படிதல், பொறுமை, சாந்தம்னு சொல்லிக்கிட்டு கெடந்தாங்க.

கன்னியாஸ்திரிகளக் கொற சொல்லிட்டு இருந்த எனக்கு என்ன ஆச்சுன்னே தெரியல. நான் ஒரு சிஸ்டராகி கஸ்டப்படுற சனங்கிட்ட, இந்த மாறியான சேசும் இருக்கார்னு சொல்லி அவுகள உசுப்பி உடனும்னு மனசுக்குள்ள ஆச வந்துச்சு. ஆனா சிஸ்டரானா இப்பிடி எல்லாஞ் செய்ய முடியாதுன்னும் தெரிஞ்சுக்கிட்டேன். ஆனாக்கூட வேண்டான்னு வலுக்கட்டாயமா ஒதுக்குனாக் கூட

என்னமோ அந்த நெனப்பு இன்னும் அதிகமாகிக்கிட்டே போனது. என்னடா வம்பா போச்சு. இம்புட்டு நாளா கன்னியாஸ்திரிகள வஞ்சுக்கிட்டு இருந்த எனக்கு இப்பம்போயி இப்படி ஒரு ஆசன்னு சங்கடமாவும் இருந்துச்சு.

இத வீட்லயும், தெரிஞ்ச ப்ரண்ட்ஸ்கிட்டயும் சொன்னா ஒருத்தர் கூட சம்மதிக்கல. எல்லாரும் நானு ஏதோ வெளாட்டு பண்ணிக்கிட்டு இருக்குதாத்தான் நெனச்சாக. எனக்குங்கூட அந்த நெனப்பு போயிட்டா நல்லா இருக்குமேன்னுதான் தோணுச்சு. அது போகனும்னு நெனைக்க நெனைக்க சேரனும்கிற நெனப்ப இன்னும் அதிகமாகிட்டேதான் போனது. அதனால எத்தனையோ பேரு புத்தி சொல்லியும், சேரவேண்டாம்ன்னு அடுச்சு சொன்னப்பெறகும், பாத்துக்கிட்டு இருந்த வேலய ராஜினாமா பண்ணிக்கிட்டு போய் ஒரு மடத்துல சேந்துக்கிட்டேன். அது எவ்வளவு பெரிய முட்டாள் தனம்னு இன்னைக்குத் தெரியுது. அன்னைக்கு ஒரு எழவும் புரியல. கண்ண மூடிட்டு போய் கெணத்துல உளுந்தமாறி உளுந்துட்டேன்.

உள்ள போனா அங்கயும் ஏமாந்தந்தான். மொத ஒரு மூணு வருசம் கொஞ்சம் பரவாயில்ல. கொஞ்சத்துக்குக் கொஞ்சமாச்சும் கஸ்டப்படுற சனங்களப்பத்தி சேசுவோட மனுசத் தன்மையும் பத்தி படிச்சோம். பேசுனோம். என்ன செய்யலாம் எப்பிடிச்செய்யலாம்னு ஒரு ஆர்வத்தோட சிந்திச்சுக்கிட்டு இருந்தோம். சிஸ்டரானப்பெறகு எது செய்யலாம் எப்பிடிச்செய்யலாம்னு ஒரே கனவுங்கற்பனையு மாத்தான் காலம் ஓடுச்சு. அந்த சபையைத் தோற்றுவிச்ச அம்மாவைப்பத்தி படிச்சோம். அவுக எப்பிடி ஏழைப்பிள்ளைக மேல அக்கறையும் அன்பும் வச்சு அவுகளுக்காக வாழ்ந்து செத்துப் போனாகன்னு படிக்கும் போது நல்லாத்தான் இருந்துச்சு. அவுக மாறி நம்மளும் ஏழைகளுக்குத்தான் பாடுபடப்போறோம்னு, பாடுபடவேணும்னு மனசுக்குள்ள எக்கச்சக்கமான ஆச இருந்துச்சு.

என்னோட செபம், தியானம், சிந்தனை எல்லாமே இந்தமாறி ஒடுக்கப்பட்ட, அமுக்கப்பபட்ட சனங்கமேலயும், நீதி நாயத்துக்காகப் போராடுன சேசு மேலயுந்தான் இருந்துச்சு. இப்பிடி இல்லாம வெறுமனே அலங்கார வார்த்தைகள்ள செவம் பண்ணிக் கிட்டு, வாழ்க்கைக்கும் செபத்துக்கும் வழிபாட்டுக்கும் சம்பந்தமே இல்லாம இருக்குறதுல அர்த்தமே இல்லன்னு பட்டுச்சு. இந்தமாறி நான் ஒணந்ததை மத்தவுக கிட்டயும் சொல்லுவேன். அப்பிடி இல்லாம இருக்கும்போது ஏன்னு கேள்வியுங் கேட்டுருக்கேன். நம்ப நம்புறது ஒன்னும் செய்றது ஒன்னமா இருக்கக்கூடாது. எத நம்புற மோ அதச் சொல்லனும், அதச் செஞ்சுகாட்டனும். அதுதான் மனுசத்தன்மை. மத்ததெல்லாம் வேசம் போடுறமாறித்தான். வேசம் போட்டு பொழைக்குறது எனக்குப் பிடிக்காது.

மனசுக்குள்ள எக்கச்சக்கமான ஆசைகள வச்சுக்கிட்டு மொத வாத்தப்பாடு எடுத்தேன். கஸ்டப்படுற சனத்தோட சனமா நம்மளுஞ் சேந்து, அவுகளுக்காக வாழ்ந்து செத்துப்போகனும்னு கெனாக்கண்டுக் கிட்டு வந்தேன். ஒரு பெரிய பள்ளிக்கொடத்துல பாடஞ் சொல்லிக் குடுக்கச்சொன்னாக. அங்கப்போனப்பெறகுதான், வெசயமே வெளங்குச்சு. பூரா பணக்காரப்புள்ளைங்க. மடமும் பணக்கார மடந் தான். அதனால கும்புட்ட சேசும் பணக்காரச் சேசுதான். கஸ்டப் படுற சனங்களுக்கும் கடவுளுக்கும் சம்பந்தமே இல்ல. இப்பிடிச் சம்பந்தமே இல்லாம ராவும் பகலுமா செவங்க. தெனம் பூச நன்ம வேற. எனக்கு ஒரு எழவும் புரியல. கடவுள் எங்கிட்டுக் கெடக்கு றார்னு தேட வேண்டியதாப் போச்சு.

சதாகாலமும் கடவுள் ரொம்ப அன்பானவர்னு சொல்லிக் கிட்டு இருக்கிற இவுங்க மடத்துக்குள்ள அன்பக்காணோம். ஏழ எளிய சனங்கமேல அன்பக்காணோம். கடவுள் நிபந்தனை போடாம நம்மள அன்புசெய்றார்னு சொல்லிக்கிட்டாங்க. ஆனா மடத்துக் குள்ள இப்பிடி இப்பிடி இருந்தாத்தான், இன்னார் இன்னாருக்குத் தான் அன்புன்னு ஏகப்பட்ட கண்டிசன் இருக்குது. வெளிச் சனங்க பணம், படிப்பு பகட்டோட வந்தா ஒரு அன்பு. இல்லன்னா வேற அன்புமா (அது அன்பான்னே தெரியல) இருக்குது. கடவுள் நீதி உள்ளவர்னு கத்திக் கத்திப் பேசறாங்க. பாடுறாங்க. ஆனா இந்த மடங்களுக்குள்ளே யோ, மடத்துக்காரங்களோட எந்த நிறுவனங் கள்ளயோ அநியாயந் தான் தலவிரிச்சு ஆடிக்கிட்டு இருக்குது. நம்ம கடவுள், மன்னிக்கும் கடவுள்னு மனமுருகிக்கிட்டு சொல்றாங்க. உள்ளுக்குள்ள பாத்தா யாரெ, எப்படா, எப்பிடிடா குத்துவோம் கொதறுவோம்னு அலயு றாங்க. அவுக வார்த்தைகளே போதும். அம்புகனக்கா தைக்கும். அவுக சௌகரியப்படி நடக்காத யாரையும் லேசுல உட்டு வைக்க மாட்டாங்க.

கடவுள் ஏழையாகப் பொறந்தாரு, வாழ்ந்தாரு, ஏழை யாகவே செத்தாருன்னு, கோயிலுக்குள்ள அவ்வளவு பக்தி பரவசத்தோட பேசுறாங்க. ஆனா மடத்துக்குள்ளயோ பள்ளிக் கொடத்துக்குள்ளயோ தப்பித் தவறி ஏழை எளியவுக வந்துட்டா சள்ளுப் புள்ளுனு வெறி நாய்க உளுந்தமாறி உளுதுங்க. அந்நியார மெல்லாம் எனக்கு "ஒருவனோட தோற்றத்தைக் கொண்டு அவன நடத்தினா பாவம்"ங்ற இந்த வரிதான் நெனப்புக்கு வரும். இந்த வரியக்கூட வச்சு ஒருமணி ஆராதனை திருமணி ஆராதனன்னு வள வளன்னு செய்றாக.

இதே மாறித்தான் எத உண்போம், எதக் குடிப்போம்னு கவலப்பட வேண்டாம்னு சேசு சொன்னதையும் பிரமாதமா பேசி வியாக்கினஞ் செய்வாங்க. எல்லாங் கோயிலுகள்ள, இல்லன்னா

மீட்டிங்குகள்ளதான். வெளியே பாருங்களேன் - இன்னைக்கு என்ன திம்போம், நாளைக்கு என்ன திம்போம், இன்னைக்கு என்ன கெட்டுவோம், நாளைக்கு என்ன கெட்டுவோம்னு மெனக்கிட்டு ஒக்காந்து மணிக் கெணக்கா பேசிக்குவாங்க. இது என்ன பக்தி, விசுவாசம்னு, எனக்கு மண்டயப்போட்டு கொழப்பும். கோயிலுக் குள்ள ஒரு கடவுள் வெளிய வந்தப்பெறகு வேற கடவுள். இப்பிடி பல கடவுளுகள வச்சுக்கிட்டு ரொம்பத் திண்டாட்டமா இருந்துச்சு. ஆனா அவுக ரொம்பக் கில்லாடித்தனமா அத்தன கடவுளையும் உண்டாக்கி, சமாளிச்சுட்டு இருந்துடுறாங்க. இதுவும் தெறமதான் போங்க!

ஒன்னு எங்க கடவுள் பணக்காரக் கடவுள். அவரத்தான் நாங்க பின்பற்றி நடக்குறோம்னு சொல்லிட்டு அப்பிடி இருந் துட்டுப் போகனும். இல்லன்னா, எங்க கடவுள் மாட்டுக்கொட்டா யில பெறந்த ஏழக்கடவுள், அவருமாறித்தான் நாங்களும்னு அப்பிடி இருக்க மொயற்சி பண்ணனும். இப்பிடி ஒண்ணச் சொல்லிக்கிட்டு இன்னொன்னச் செஞ்சுக்கிட்டு இருக்கிறது ரொம்ப அசிங்கம், இப் பிடி எம்புட்டு நாளைக்கு வேசம் போட்டு இருக்குறது? என்னால முடியல. ஏழாவது வருசத்துல மடத்த உட்டு வெளியே வந்துட் டேன். வேசம் போட்டு போட்டு வேசத்துக்கும் நெசத்துக்கும் வித்தி யாசந் தெரியாமக் கண்டா இப்பிடி அலையுறாங்களோ என்னமோ!

இன்னைக்கு மடத்தை உட்டு வெளியே வந்தப்பெறகு, இந்தச் சாமியாரு, சிஸ்டர்களப் பாத்தா கோவம் வருது. மடத்துக் குள்ள போகமெ இருக்குற வரைக்கும் இவுகளோட சங்கதி எதுவுந் தெரியாம இருந்தேன். போயிட்டு வந்தப்பெறகு இவுகளப்பத்தி, இவுகளோட மனுசத்தன்மை இல்லாத பக்தியப்பத்தித் தெருஞ்சு கிட்டேன். சும்மானாலும் பக்தி, துறவறம், பரிசுத்த ஆவி, தேவ அழைத்தல், கற்பு, தரித்திரம், கீழ்ப்படிதல்னு சொல்லிக்கிட்டு, இவுக வாழ்ற வாழ்க்கையப் பாத்தா, பைபிள்ள வர்ர பரிசேயர், சதுசேயர், ஆயக்கார், குருக்கள்தான் ஞாபகத்துக்கு வர்ராங்க. இன்னைக்கு சேசு வந்தார்னா அப்ப சொன்னதவிட இன்னுங் காரசாரமா கேப்பாரு. இவுகள அப்பிடிக் கேட்டாக்கூட இவுகளுக்கு ஒரைக்குமோ என்னமோ தெரியல.

இன்னைக்கு இங்க இருக்குற திருச்சபையப் பாத்தா, இது சாமியாருங்க, சிஸ்டருங்க இவுங்களோட சொந்த பந்தங்களோட திருச்சபையாத்தான் இருக்குது. சாமியாரு, சிஸ்டருங்க யாருன்னு பாத்தா, பூரா மேச்சாதிக்காரவுகளாத்தான் இருக்காக. அவுகதான் அதிகாரத்துல இருக்குறாக. கிறிஸ்தவ சனங்களப்பாத்தா பூரா ஏழ எளியதுகளா தலித்துகளா இருக்காக. அதிகாரத்த வச்சுக்கிட்டு

இப்பிடி இல்லாத ஏழ எளியதுகள அடக்கி, அவுககிட்ட குருட்டுத் தனமான பக்தி, விசுவாசம் இதை எல்லாம் திணிச்சு, கடவுள் பேர வச்சு இவுகள அடிமைகளாக்கிக்கிட்டு சொகுசா இருக்குறாங்க.

கஷ்டப்பட்டுக்கிட்டு இருக்குற மக்ககிட்ட கடவுள் பேரச் சொல்லி களவாங்குறாங்க. இவுங்க கண்ணத் தொறந்து பாத்துரக் கூடாதுன்னுட்டே, பக்தியா கண்ண மூடி செபஞ் செய்யுங்கண்ணு சொல்லித்தராங்க. இவுகளுக்குச் சமமா, மனுசங்களா ஆயிறக்கூடா துன்னுட்டே கையக்கட்டி, நெடுஞ்சாங்கடையா உளுந்து தெண்ட னிட்டுப் பிராத்தனை பண்ணச் சொல்லித்தராங்க. இதென்ன எழவு பக்தி? இவுகளயே கடவுள்னு ஆக்கிக்கிட்டு அக்கிரமம் பண்ணிட்டு இருக்காக. கடவுள் எங்குட்டுப் போனாரோ. இப்ப கடவுள்னு சொல்லிக்கிட்டு திரியுறது இந்த சாமிமார்க, சிஸ்டருக, இவுக சொந்தக்காரருகதான்.

பச்சப்பிள்ளைகள ஏமாத்துறமாறி பூசையக்காட்டி, நன்மயைக் காட்டி, செபமாலை-நவ நாளக் காட்டி ஏமாத்திக்கிட்டு எத்தனை நாளைக்கி இருந்துருவாங்க? வளந்த பிள்ளைக வாயப் பொழந்து எல்லாத்தையுங் கேட்டுக்குட்டு தலையாட்டாதுக. தலித் சனங்க நெசத்தப் பாக்க ஆரம்புச்சுட்டாங்க. இம்புட்டு நாளா மிதிச்சு ஏறுற படிக்கல்லா இவுகள வச்சுக்கிட்டு இருந்ததக் கண்டு புடுச்சுட் டாங்க. கடவுள், பூசை, கோயில் பேரச்சொல்லி இவுகள அடிமை களா ஆக்கிவச்சதை அறிஞ்சுக்கிட்டாங்க. இவுக பேரச் சொல்லி, அவுக ஒசந்துக்கிட்டு இவுகள எட்டி மிதிக்குற நெலமயை அனுபவிச் சிட்டாங்க. நம்மள மனுசங்களாகவே மதிக்காம, அவுகளோட வேசத்தனத்துக்கு மதத்த வச்சு வளச்சு போட்டுக்கிட்டதை ஒணந்துக் கிட்டாங்க.

கடவுள் இந்தமாறி இல்லியே, இப்பிடிச்சொல்லலை யேன்னு இப்பப் புருஞ்சுக்கிட்டாங்க. நம்மளும் கடவுளோட சாயலுல படைக்கப்பட்ட மக்கதான்னு ஒணந்துட்டாக. நொறுக்கி, நாசமாக்கி, அழிக்கப்பட்ட இந்தச் சாயல மறுபடியும் கொண்டாந்து, மனுச நேயத்தோட மான மரியாதையோட வாழனும்னு இவுககிட்ட புதுத்தெம்பு பெறந்திருக்கு. இதுதான் நெசமான பக்தின்னு மனசுக்குப்படுது.

# எட்டு

ஒரு கிராமத்துல தலித்துப் பொண்ணா பெறந்து, வளந்து, படிச்சு, அஞ்சாறு வருசம் வேலயும் பாத்துட்டு, முன்னால சொன்னது கெணக்கா ஒரு மடத்துல சேந்தேன். இந்த மடத்துல சேர்ரதுக்கு முன்னால இந்த சபய உண்டாக்குன அம்மாளப் பத்தி படிச்சுத் தெருஞ்சுக்கிட்டேன். ஏழ எளிய சனங்க மேல இந்தம்மா எம்புட்டு அன்பு வச்சு, துணிச்சலா நின்னு ஏழப் பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிக் குடுத்து அவுகள முன்னேத்தி உட்டுருக்காகன்னு தெருஞ்சு அவுக மேல எனக்கு ஈடுபாடு வந்துச்சு. நம்மளும் நம்மளால முடிஞ்சவர நம்ம வாழ்க்கய பிரயோசனமா அர்த்தமுள்ள வெதத்துல வாழனும்னு ரொம்ப ஆசைப்பட்டுக்கிட்டுத்தான் மடத்துல சேந்தேன்.

சேந்தப் பெறகுதான் கொஞ்சங் கொஞ்சமா அங்க இருந்த நெசமான நெலவரம் தெரிய வந்துச்சு. மடத்துல சேரும்போது வீட்லயுஞ்சரி, தெருஞ்சவுகளுஞ்சரி சேரவேண்டாமுன்னு அம்புட்டு சொல்லிப் பாத்தாக. உள்ள பூரா வெசயம் வேறமாறித்தான் இருக்கு முன்னுஞ் சொன்னாங்க. ஆனா நாந்தான் என்னமோ பெரிசா சாதிக்கப் போறோம்னு கெனாக் கண்டுக்கிட்டு போய் சேந்தேன். சேந்தப்பெறகுதான் அவுக சொன்னது பூரா நெசந்தான்னு தெருஞ்சுக் கிட்டேன். சரி நம்மளால முடுஞ்சவர சமாளிச்சு இருந்து பாப்போ முன்னு இருந்தேன்.

மடத்துக்குள்ள ஒரு தனி ஒலகந்தான். நெறய்ய பேசுனோம். சேசுநாசாமி, மாதா, இந்த சபையோட ஒழுங்குமுறை, இப்பிடி பேசுனோம். நேரத்துக்கு நேரம் நல்லா தீவனந் தின்னோம். ஒழுங்குப் பெரகாரம் முணுமுணுன்னு ஜெபம் படிச்சோம். அந்தத் திருநா, இந்தத் திருநான்னு கொண்டாடி பொழுதனைக்கும் விருந்துவச்சு சாப்புட்டோம். எத சாப்புடுறது, எத உடுறதுன்னு தெரியாது. அம்புட்டு வகவகயா இருக்கும். நெறய இதுகளுக்கு எனக்குப் பேரே தெரியாது. தெரிஞ்சாலும் அந்தப் பேருக வாய்க் குள்ள நொழயாது. வசதின்னா அம்புட்டு வசதி.

சாப்பாடு இப்பிடின்னா, அங்க இருந்த கட்டடங்களும் அதுக்கு மேல. எங்க ஊர்சனங்க பூரா குடியிருக்கலாம். அம்புட்டு

பெரிய மடம், பள்ளிக்கொடம். எனக்குன்னா ஒரு மாதிரி இருந்துச்சு. வெக்கமா இருக்கு. அதே சமயம் ஒருமாதிரி நாய்க்க மார்க வீடுகளுக்குள்ள போயிட்டமாதிரி இருக்குது. சொதந்தரமா நடமாடவோ, பேசவோ, திங்கவோ முடியல. அப்பிடி ஒரு ஒணர்வு.

சரி, தின்னுபோட்டு சும்மானாலும் இருக்கு விதியா. அதுவுமில்ல. உள்ள சண்டக்காடு அப்பிடி வரும். ஒருத்திக்கொருத்தி பொறாமை, போட்டிப்பு, ஆங்காரம் இப்பிடினுன்னு எப்பப்பாரு சண்ட நெறியும். சூதுவாதோட இருந்தாத்தான் பொழைக்க முடியும். நெனைக்காதத நெனைச்சோம்பாங்க. சொல்லாததைச் சொன்னோம் பாங்க அதுலயும் நித்திய வார்த்தைப்பாடு எடுக்காத வரைல, என்ன மோ நம்ம பச்சப்பிள்ளை மாறி ஓடிக்கிட்டும், ஆடிக்கிட்டும் அவுக காலால இட்ட வேலைகள நம்ம தலையால செஞ்சுக்கிட்டும் அலையனும். எனக்குன்னா சீன்னு போச்சு. பெறகுஞ்சரி, நாம என்ன இதுக்கா வந்தோம். நமக்குன்னு ஒரு நோக்கமிருக்கு, நம்ம சனங்களுக்காகத்தான் வந்தோம். இதுக எப்பிடியுங் கெடக்கட்டும்னு நெனச்சுக்கிட்டேன்.

அதுக்குங்கூட அங்க வழி இல்லன்னு பெறகு புருஞ்சு போச்சு. எப்பப்பாத்தாலும் எத எப்பிடிச் செஞ்சு எப்பிடித் திங்கலாம், எத எப்பிடிக் கொண்டாடிக் கூத்தடிக்கலாம், எதக் கட்ட லாம், எத இடிக்கலாம், எத எங்க வாங்கலாம், விக்கலாம் - இப்பிடியேதான் பேச்சுப் பூராம். சனங்க ஏன் கஸ்டப்படுறாக, நாட்டு நடப்பு என்ன, சேசுநாசாமி சனங்களுக்கு என்ன செஞ்சாரு. நாம எதுக்கு கன்னியாஸ்திரிக ஆனோம். நம்மளால இந்த அநியாயத்த எப்பிடி நீக்கலாம் - இப்பிடி எதுவும் வாயில வராது.

மடத்துல அம்புட்டு கொட்டிக் கெடந்தாலும், வீடுகளுக்கு நாங்க லீவுக்குப் போயிட்டு வரும்போது எதுனாச்சும் கொண்டார னும்னு எதிர்பாப்பாக. இவுக அந்தஸ்துக்குத் தக்கன நம்ம கொண்டு போக முடியுமா? நம்மளுக்கு அம்புட்டு ஐவசு இருக்கா? அவுக அந்தஸ்துக்குத் தக்கன அது இதுன்னு கொண்டு போனா, ரொம்ப தடபுடலா இருப்பாக. இல்லன்னா யாரு எவருன்னு கூடக் கண்டுக்க மாட்டாக. நல்லா பெருத்த துட்டுக்காரியா இருந்து, நாலு சாதி சனத்தோட செல்வாக்கா இருந்தா அதுக்கு ஒரு தனி மவுசுதான். இல்லன்னா நம்பள யாருஞ் சீந்தமாட்டாக.

சரி, மடந்தான் இப்பிடி, பள்ளிக்கொடம் நல்லா இருக்கும்னு நெனச்சா அது அதுக்குமேல. கிளாஸ்ல பூரா பணக்கார வீட்டுப்பிள்ளைக. நல்லா கொழுகொழுன்னு தின்னுபோட்டு வந்து ஒக்காந்திருக்குங்க. வெள்ளத்தோலா இருந்து, காருல வந்து எறங் கிட்டா போதும். இம்புட்டுக்கானு பிள்ளகூட, வேலக்காரபிள்ளைக

சோறு தூக்கியாந்து குடுக்க, தின்னுபோட்டு குதியாட்டம் போடுங்க.

பேருக்கு நாலஞ்சு ஏழப்பிள்ளகள பள்ளிக்கொடத்துல சேப்பாக. இதுக பாவம் இந்த பணக்கார கும்பல்ல அஞ்சி, ஒடுங்கி, நடுங்கி, மூலைல கெடக்குங்க. அப்பப்ப, இந்த ஏழைப் பிள்ளைகளப் பத்திப் புகார் வரும். இதுக பக்கத்துல ஒக்கார மாட்டோம், இதுக கருப்பு, ஏழ, அசிங்கமா இருக்குதுக, நல்ல துணிமணி இல்லாதது கன்னு பணக்காரப் பிள்ளைக சொல்லுங்க. ஒரு டிராமா, டான்சுகள்ள ஏழைப்பிள்ளைக மாதிரி வேசம் போடக்கூட இந்தப் பணக்கார பிள்ளைகளுக்குப் புடிக்காதுன்னா பாத்துக்கொங்களேன். இதுகளுக்குப் பாடஞ்சொல்லிக் குடுக்குறது தெண்டம்னு பட்டுச்சு. இதப் பத்தி மடத்துல மத்தவுக கிட்டப் பேசவும் முடியல. பேசுனா அதக் கேக்கவும் மாட்டாக.

எந்துருச்ச ஒடனே செவம், பூச, மதியச்செவம், சாயங் காலத்து செவம், ராத்திரி செவம்னு பொழுதனிக்கும் செவந்தான். ஆனா இந்த செவத்துக்கும், வாழுற வாழக்கைக்கும், செய்யுற வேலைக்கும் சம்பந்தமே இல்ல. ஏதோ கடனேன்னு ஒருபக்கம் இப்பிடி செவங்க. அடுத்தபக்கம் இவுகளோட அந்தஸ்தும், ஆதிக் கமும் இவுகள கிறிஸ்தவுகன்னுகூட காட்டாது.

மூனு வார்த்தப்பாடுக எடுக்குறாக. அந்த மூனும் இவுகள சொதந்தரப்படுத்தி மக்கள மையமா வச்சு வாழ வழிசெய்யுதுன்னு சொல்லிக்குடுக்காக. ஆனா நெசத்துக்கு, இது மூனையும் வச்சே நம்பள மொடக்கிப்போட்டு அடிமைகளா ஆக்கிப்போடுறாக.

வெளில இருக்கும்போது வறுமய அனுபவிச்சு, வறுமையுல வாடுற சனங்களோட வாழ்ந்திருக்கேன். ஆனா உள்ள போனா வறுமையோட தடத்தக்கூடப்பாக்க முடில. ஏழ எளிய சனங்களக் கூட பாக்க முடில. வசதியானகூண்டுக்குள்ள அடச்சுப்போட்ட மாதிரி, அதுக்குள்ளயே சொகுசா வளய வளய வந்துட்டு இருக் கனும்.

எல்லாரையும் அன்பு செய்யனும், ஏன்னா எல்லாரும் கடவு ளோட பிள்ளைகன்னு அம்புட்டு பிரமாதமா பேசுவாக. ஆனா இவுக பேசிப் பெழங்குறது, பள்ளிக்கொடத்துல சேக்குறது, ஒறவு கொண்டாடுறது-எல்லமே பணக்காரக் கூட்டத்தோடதான். ஏழ எளியதுகள்ளாம் இவுகளுக்கு மனுசங்க மாறியே தெரியாது. நம்ம ஏதாவது இதப் பத்திப் பேசிட்டா, தேவ அழைத்தலு ஏழைகளுக்கு மட்டுமில்ல. பணக்காரர்களும் கடவுளோட மக்கள்தானேன்னு மறுவெளக்கஞ் சொல்றாக. ஏழைகள் என்னைக்கும் ஒங்களோடு இருப்பாகன்னு கடவுளே சொல்லி இருக்காருன்னு வெளக்கந் தாராங்க. சிரிக்கவா அழவான்னு முழிக்க வேண்டியதாயிருக்கு.

"கீழ்படிதல்" னு சொல்லிச் சொல்லி நம்பள தலநிமுர உடாம அமுக்கிப்போடுவாக. நம்ம வயசுக்குத் தகுந்தமாறி சிந்திக்கக் கூட உடமாட்டாக, நமக்குப்பதுலா அவுக சிந்திப்பாக. நாம செயல் படனுமாம். சின்னப்பிள்ளைக்கு இருக்குற சொதந்திரமும், உரிமையுங்கூட நம்மளுக்கு இருக்காது. எதுவும் எக்கேடு கெட்டுப் போகட்டும். எனிய ஒரு கிராமத்துக்கோ, ஏழப்பிள்ளைக படிக்கிற பள்ளிக்கொடத்துக்கோ அனுப்புங்கன்னு கேட்டா "கீழ்ப்படிதல்" "விசுவாசம்" - இதச் சொல்லிப் பயங்காட்டி அவுக அனுப்புற எடத்துக்குத்தான் போகனும், அவுக சொல்ற படிதான் செய்யனும்னு அடம் பிடிக்குதுக. விசுவாசக் கண்ணோட பாக்கனுமாம். அவுக அதிகாரங் கொடிகட்டிப் பறக்குது. அந்த ஆணவத்துக்குப் பலியாவது எனியப் போல உள்ளவுகதான். இத எப்பிடி விசுவாசத்தோட பாக்குறதுன்னு வெளங்கல.

இவுகளோட மூனு வார்த்தப்பாடுகளுமே இவுகள சனங் கிட்ட இருந்து, நெச வாழ்க்கையில இருந்து, ரொம்ப தூரத்துக்கு பிரிச்சு வெலக்கி வச்சு இவுக ஏதோ இன்னொரு ஒலகத்தச் சேந்தவு கன்னு காட்டுது.

மடத்துல சேந்து, கன்னியாஸ்திரி ஆறதுக்கு டிரெயினிங் குடுக்காக. அப்ப சொல்லிக் குடுக்கறதப்பாத்தா அம்புட்டு அருமையா இருக்கும். நம்ம ஒவ்வொருத்தரும் வித்தியாசமானவுக; நமக்குன்னு தனித்தன்ம இருக்குது; நம்பளப்போல வேற ஒருத்தரு ஒலகத்துல இல்லவே இல்லன்னு சொல்லித்தாராக. கடவுள் அம்புட்டு ஸ்பெசலா ஒவ்வொருத்தரையும் படச்சார்னு வாய் நெறயப் பேசும்போது கேக்க நல்லாத்தான் இருக்குது.

ஆனா, நெச வாழ்க்கன்னு வரும்போது, இந்தமாதிரி எதுவும் இருக்காது. எல்லாரும் ஒரே அச்சுல ஊத்திச் செஞ்சமாதிரி இருக்க னும்னு எதிர்பாப்பாக, வேறமாதிரி சிந்திக்கவோ பேசிறவோ கூடாது.அவுகசொன்னதுதான் வேதவாக்குன்னு ஏத்துக்கனும்.அப்பிடி ஏத்துக்காம ஏதாவது வித்தியாசமா பேசிட்டாப் போச்சு. ஒன்னோட கொழந்தப்பருவம் சரியில்ல, ஏதோ மிஸ்டேக்கு ஆயிப்போயிருக் குன்னு சொல்றாக. ஒங்க குடும்பத்துல என்னமோ நடந்துருக்குன்னு என்னமோ ஜோசியம் பாக்குரது மாதிரி சொல்லிக்கிட்டுத் திரிகிறாக.

இதுமட்டுமில்லாம கீழ்ப்படிதல் தாழ்ச்சி எதுவுமே இல்லன் னும் சொல்லி தேவன் ஒனிய அழைக்கல அப்பிடின்னு கண்டுபிடிச் சிட்டதா சொல்றாக. ஆக மொத்தத்துல, அவுக அமெரிக்கா, ஐரோப் பான்னு போயி கண்டதயும் படுச்சுட்டு வந்து, அதுக்குத் தக்கன நம்பள மாத்திப் போடனும்னு கண்டமானிக்கப் பேசிக்கிட்டு இருப் பாக. அவுக படுச்ச படிப்புக்குள்ள நாம அடங்கிப் போகலன்னா

தேவ அழைத்தல் சந்தேகமா இருக்குன்னு முடிவுக்கு வாராக. அவுக படிப்புக்குத்தக்கன நம்பள மாத்தனும். மொத்தத்துல நாம நாமளா இருக்கக்கூடாது. வேறாளா உருமாறி செதஞ்சுபோய் கெடக்கனு மாம். இந்த மாதிரி பைத்தியக்காரத்தனம் எங்கயாச்சும் இருக்கா?

மடத்துகள்ள நெறயப்பேருக்குத் தலித்துன்னாலே என் னன்னு தெரியல. தெரிஞ்சு வச்சிருக்குற கொஞ்சப்பேரும் அவுகளப் பத்தி ரொம்பக் கேவலமாத்தான் நெனைக்காக, பேசுறாக. தலித்துகள இழிவா இவுக பேசும்போது நானு அப்பிடியே கூனிக் குறுகிப்போ வேன். நானும் ஒரு தலித்துன்னு அவுகளுக்குத் தெரியாது. அவுக கிட்ட இதச்சொல்லவும் எனக்குத் தைரியம் இல்ல அப்ப. சொல் லிட்டா எப்பிடி நடத்துவாகளோ, பேசுவாகளோன்னு பயம்மா இருக்கும். தாழ்த்தப்பட்ட தலித் மக்களப் பத்தி இவுக பேசற பேச்சுகளக் கேட்டா இவுக எப்படி ஏற்றத்தாழ்வு இல்லாத கடவு ளோட ராச்சியத்த உண்டாக்குவாகன்னு நெனப்பேன். இவுக தலித்துகளப் பத்திச் சொல்றது :

-“இந்த சனங்கள எப்பிடி நம்ம வீடுகளுக்குள்ள உட முடியும்? அப்பிடி நாம உட்டாக்கூட இவுக உள்ள வரமாட்டாக. ஏன்னா, அவுகளுக்கேத் தெரியும், அவுக எங்க இருக்கனும்னு.”

-“இதுங்களுக்கு நாம எதுவுமே செய்யமுடியாது. செய்யக் கூடாது. அப்பிடிச்செய்றது நல்லபாம்புகளுக்கு ஒதவி செய்ற மாதிரி.”

-“நாம நெனச்சு எதுவுஞ் செஞ்சாகூட இதுக முன்னேறாதுக. அப்பிடிப்பட்டதுக இதுக.”

-“இதுக கூட இப்ப நல்லா டிரஸ் பண்ணிக்கிட்டு அலை யுதுக. அதனால முன்னமாதிரி இதுகள அடையாளம் கண்டு பிடிக் குறதுகூட கொஞ்சம் கஸ்டம்தான்.”

-“இந்த சனங்களுக்குப்போயி கவர்மெண்டு சலுகை செய்யுது. படிப்பறிவு இல்லாத இதுகளுக்கு எதுக்கு இதெல்லாம்.”

ஏதாவது அசிங்கமா, மோசமா இருக்குறதப் பத்தி பேசனும்னா அத ஹரிஜன்னு சொல்லிப் பேசுவாக. இப்பிடி அழுக்குப் பிடுச்சுப்போய் கெடக்குற இவுகளால என்ன சேவ செய்ய முடியும்? இம்புட்டையும் கேட்டுட்டு, பாத்துட்டு, அனுபவிச்சிட்டு, நானும் மேலக்குடி ஆளு மாதிரி ரொம்ப மேட்டுமையா இருந்தது மனசுக்குள்ள உறுத்திக்கிட்டே இருந்துச்சு.

மூனு வருசங் கழிச்சு எனிய வேற எடத்துக்கு மாத்துனாக. ஒரே மாசத்துக்குள்ள அஞ்சு எடத்துக்கு மாத்தி உட்டாக. இந்த மாத்த மெல்லாம் இஸ்பிரீத்துசாந்து வந்து சொல்லித்தான் செய்யுறதா சொல்றாக. ஆனா இந்த இஸ்பிரீத்துசாந்துக்கு இம்புட்டு தடுமாத்தம் ஏன்னு புரியல.

சரி, இம்புட்டுத்தடவ மாத்திட்டு கடேசியா ஏதாவது உறுப்பிடியா ஒரு பள்ளிக்கொடத்துலயோ, கிராமத்துலயோ போடுவாகன்னு பாத்தா, கடைசியா இன்னொரு பெரிய பணக்காரப் பள்ளிக்கொடத்துல சொல்லிக் குடுக்கப் போகச் சொன்னாக. எம்மனசே தாறுமாறா செதறிப்போச்சு. இப்பிடி அர்த்தங்கெட்டத் தனமா ஒரு டீச்சரா வந்து பணக்காரக்கூட்டத்துக்குச் சொல்லிக் குடுத்து அவுகள முன்னேத்தி உடுறதுக்கு தேவ அழைத்தல்னு ஒன்னு அவசியமான்னு பட்டுச்சு. இப்பிடி டீச்சரா வெளியவே இருக்கலா மேன்னு அடிக்கடி மனசுக்குப் பட்டுச்சு. அந்தப் பள்ளிக்கொடத்துல, பணக்காரப் பிள்ளைக சொல்றமாறி நாம கேக்கனும். அவுக இழுத்த இழுப்புக்கு பள்ளிக்கொடம் நடக்குது. இது என்ன இப்பிடின்னு கேட்டா, இதுல இருந்துதா சபைக்கு ஏகப்பட்ட வருமானம் வருதாம். அதுனால கண்ண மூடிகிட்டு இழுத்த இழுப்புக்குப் போகனுமாம்.

என்னடா இது வருமானத்துக்காக பள்ளிக்கொடங்களான்னு நெனச்சேன். இங்க வருமானம் எடுத்து வேறு எங்குட்டோ தனியா சேவ செய்றாகளாம். சரி வருமானம் எடுங்க, எனிய வேற மனுசங்க இருக்குற எடத்துக்கு அனுப்புங்கன்னா, மறுபடியும், கீழ்ப்படிதல் விசுவாசம் இப்பிடிச் சொல்லிப் பயங்காட்டுராக.

ஒரு அஞ்சு மாசம் அங்ன பல்லக்கடுச்சுட்டு இருந்து பாத் தேன். அதுக்குமேல தாக்குப்பிடிக்க முடியல. சும்மா வேசம் போட்டுக்கிட்டே ரொம்ப நாளைக்கு இருக்க முடியுமா? எண்ணை யுந் தண்ணியுமா எத்தன நாளைக்கு ஒட்டிக்கிட்டு இருக்குறது. ஆறாவது மாசத்துல இந்தச்சித்திரவத நமக்கு வேண்டாமின்னு பெட்டியத்தூக்கிட்டு மடத்தவிட்டு வெளியே வந்துட்டேன். அப்பிடி வர்ரதுக்குள்ள நாம் பட்டபாடு அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். அம்புட்டு ஈஸியா உடமாட்டேன்னுட்டாக. எப்பிடி யோ படாத கஸ்டப்பட்டு வீட்டுக்கு வந்துட்டேன். வந்தப் பெறகு படுற கஸ்டம் கொஞ்ச நஞ்சமல்ல.

# ஒன்பது

மடத்திலிருந்து துணிஞ்சு வெளிய வந்தப்பெறகு, என்னமோ நமக்குச் சம்மந்தமில்லாத எடத்துக்கு வந்துட்ட மாறி இருக்குது. மடத்துக்குள்ள பதுங்கிக் கெடந்து, வேளாவேளைக்குத் தின்னு போட்டு எல்லா வசதியோடயும் வாழ்ந்த பெறகு, இப்ப இந்த ஒலகத்துல நானு தனிச்சுக்கெடந்து, இருக்க எடம், வேல வெட்டி, சோறுதண்ணி இப்பிடி எல்லாத்தையும் நானே தேடிக் கிட்டு கஸ்டப்பட வேண்டிய நெலம.

எதக்கண்டாலும், யாரக்கண்டாலும் பயம்மா இருக்குது. எங்க போகனும்னாலும் ஒருமாதிரியா இருக்குது. வேல கெடைக் குறதும் குருதக்கொம்பா இருக்குது, பேப்பர்ல பாத்து வேலைக்கு எழுதிப்போட்டுதான் மொயற்சி செஞ்சுக்கிட்டு இருக்கேன். வேற நமக்கென்ன பணமா இருக்கு, லஞ்சங்கெட்டி வேல வாங்குறதுக்கு? சிவார்சு செய்ய ஆளுங்கெடையாது.

இப்பிடித்தான், பேப்பர்ல பாத்து எழுதிப்போட்டதுல, ஒரு எடத்துல இருந்து இன்ட்ரி வந்துச்சு. போனேன். ஆயிரத்தெட்டு கேள்விகளக் கேட்டு, பரிச்சை எழுதவச்சுட்டு கடேசில என்னாச் சுன்னா சம்பளம் 400 ரூவாயாம். இந்த வெலவாசில நானூறு ரூவா எந்த மூலைக்குக் காணும்? ஆனா அந்த வேலையுங்கூடக் கெடக்கல. ஏன்னா நானு ஒரு தலித். அது நாடாருங்க வச்சு நடத்துற பள்ளிக் கொடம். நாடாத்திகளத்தான் எடுப்பாகளாம். இதுக்கு என்னத்துக்கு பெரிசா இன்ட்ரி அது இதுன்னு எல்லாத்தையுங் கூப்டுறானுகளோ தெரியல. நாடாக்கமாருக்கு மட்டும்னு பேப்பர்ல போட்டா நாங்க ஏன் போப்போறோம்?

இப்பிடி நாடாரு பள்ளிக்கொடங்கள்ள நாடாக்கமாராத்தான் எடுப்பாகளாம். நாய்க்கமாரு பள்ளிக்கொடங்கள்ள நாய்க்கமாரத் தான் எடுப்பாகளாம். அய்யமார்க பள்ளிக்கொடங்கள்ள அய்யமார் பிள்ளைகளத்தான் எடுப்பாகளாம். இப்பிடிப்போனா தலித்துகள் ளாம் எங்கபோய் மண்டய முட்டிக்கிறதுன்னு தெரியல. தலித்துக பள்ளிக்கொடம்னு எங்கயும் இருக்குதான்னு எனக்குத் தெரியல.

சரி, வேற எங்கயும் நம்மள சீந்த மாட்டிக்காகன்னு சாமியாரு, சிஸ்டருமாரு வச்சு நடத்துற பள்ளிக்கொடங்கள்ள

கேட்டா தலித் பிள்ளைகளச் சேத்தா அவுகளோட பள்ளிக்கொடத் தோட தரம் குறைஞ்சு போகும்றாங்க. எங்களயே தரங்கெட்டுப் போனவுகன்னுதான ஒதுக்கறாக. இதுல எப்பிடி, எங்க வேல வாங்கிப் பொழைக்குறதுன்னு மலப்பா இருக்குது.

வயசும் ஏறிக்கிட்டுப் போகுது. வேல வெட்டி இல்லாம வீட்டுல ஒக்காந்து வெட்டித் தீவனந் திங்க முடியுமா? அப்பிடியே னாலும் தாய் தகப்பன் இருக்குற வரைக்குஞ்சரி. அவுக காலத்துக்குப் பெறகு நமக்குன்னு என்ன இருக்குது? யாரு இருக்கா? கூடப் பொறந்தது அதது பொழப்பத்தான் பாக்குதுக. நல்லாப் பழகுனவு களும் எம்புட்டு நாளைக்கு நம்மளுக்கு ஒதவி செஞ்சுட்டு இருக்க முடியும்.

வேலைக்கு, பணத்துக்கு இம்புட்டுக் கஸ்டம்னா வெளிய தனியா நடமாட முடியாத கஸ்டம் வேற. பொம்பள தனியா நின்னாலே கண்ட பெயலும் வந்து பல்லக்காட்டிட்டு நிக்குறானுக, அவனுக பார்வையும், மூஞ்சியும் பாக்கையில வாந்தி வரமாறி அரு வெருப்பாவும், கோவமாவும் வந்தாலும், நம்ம தனியாளா என்ன செய்ய முடியுது? எம்புட்டோ சிந்திக்கிறோம். என்னவெல்லாமோ நெனைக்குறோம். படிக்கிறோம். ஆனா நெச வாழ்க்கையில எல்லாமே மொரண்பாடாத்தான் அமையுது. பாதுகாப்பு இல்லாம பதறிப்பதறி அலஞ்சுக்கிட்டு இருக்க வேண்டிய நிர்ப்பந்தமா இருக்குது.

ஏழெட்டு வருசகாலமா இந்த மாறியான நெச வாழ்க்கையி லிருந்து ஒதுங்கியே கெடந்தபெறகு திடீர்னு இன்னைக்கு இதுல வந்து வாழுறது ரொம்ப சங்கட்டமாத்தான் இருக்குது. மடத்துக் குள்ள இருந்துட்டு கஸ்டப்படுற சனங்க, நீதி, நியாயமுன்னு நாற் காலில ஒக்காந்து வளவளன்னு பேசலாம். அவுகளுக்காக இவு களுக்காக செவஞ் செஞ்சு போட்டு வசதியா வாழலாம். ஆனா மக் கள் படுற வேதனைகள ஒணரக்கூட முடியாது அங்க.

இப்ப நா அனுபவிக்கேன். பசின்னா என்னா, நோய் நொடிப்பட்டு தனியா கெடந்து அவஸ்தப் படுறதுன்னா என்ன, பைசா கையில இல்லாம முழிபிதுங்கி நிக்குறதுன்னா என்ன, பாது காப்பு இல்லாம தெருவுல நிக்குறதுன்னா என்ன, யாருமே இல்லாம தனியா அனாத கெணக்கா கெடக்குறதுன்னா என்ன, பதவியோ அந்தஸ்தோ பணமோ அதிகாரமோ எதுவுமே இல்லாம இந்த வாழ்க்கையில எதிர் நீச்சல் போடுறதுன்னா என்னன்னு இன்னைக்கு எனக்குத் தெரியுது. அதுக்காக நான் மடத்தை, அதோட சுக போகங் களை உட்டுட்டு வந்துட்டேன்னு கவலப்பட்டுக்கல. என்ன இருந்தாலும் அது ஒரு போலித்தனமான வாழ்க்கதான். எப்பப்

பாருங்க அவுகளுக்கு இவுகளுக்குன்னு வேசம் போட்டுக்கிட்டே அலய முடியுமா.

மடத்துக்குள்ள இருந்தப்ப, சாதாரண மக்களுக்கு நாம அந்நிய மனுசங்களாவும், நமக்கு அவுக அந்நிய மனுசங்களாவுந் தான் இருந்துச்சு. ஏன்னா, அப்ப நமக்குன்னு ஒரு அந்தஸ்து, பணம் வசதி இப்பிடி நெறய்ய மேட்டுமத்தனம் இருந்ததுனால அவுக நம்ம கிட்ட ஒட்ட முடியல. ஆனா இப்ப நமக்குன்னு எதுவுமில்லாம, நம்பளும் அவுகளப்போல இருக்குறதுனால அவுகளுக்கும் நம்ம கிட்டப் பேசிப்பெழங்க முடியுது. நம்பளுக்கும் அவுங்ககிட்ட சர்வ சாதாரணமாப் பழக முடியுது.

மடத்துகள்ள என்ன மாயமந்தரஞ் செய்ராகளோ, ஒரு ஏழெட்டு வருசத்துக்குள்ள மூளயக் கலக்கி மழுங்கிடுச்சு ஒரு வழியா நம்பள வேத்தாளா மாத்திப் போடுறாக. அதுதான் வெளிய வந்தபெறகு வாழுறதுக்கு தடங்கலா இருக்குது. அதத் தொறக்கணும் இதத் தொறக்கனும் இப்பிடி இருக்கனும் அப்பிடி இருக்கனும்னு கண்டத களியதச் சொல்லி கடேசியா நம்பளுக்கே நம்ம வேத்தாளு மாறியா ஆகிப் போறோம். உள்ளுக்குள்ளேயே ஒரு தனி ஒலகத்துக் குள்ள வந்த பெறகு, அதோட வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாம தன்னால தெணறித்திண்டாட வேண்டி இருக்கு. நம்பள முழுசா ஆள்மாறாட்டஞ் செய்யறதுதான் அவுகளோட கில்லாடித்தனம்.

மடத்துல சேரும்போது வைரம் பாஞ்ச தேக்கு மரங் கெணக்கா இருந்தேன். மனசுலயுஞ் சரி, ஒடலுலயுஞ் சரி, அம்புட்டு தெடமா இருந்தேன். ஆனா வெளிய வந்தப் பெறகு லேசா வீசுற காத்துக்குக்கூட சாஞ்சு போகும் முருங்க மரங்கெணக்கா பலமத்து போனேன். உள்ள சேந்தப் பெறகுதான் எங்குட்டு கெடக்குற சீக்கு நோக்கெல்லாம் வந்து ஒட்டுச்சு. மனசுங்கெடந்து பலமாறி இடி பட்டு, அடிபட்டு நொந்து அரஉசிருங் கொற உசிருமா ஆகிப்போச்சு. இப்பிடி அரையுங் கொறையுமா இருந்துகிட்டு என்ன சேவ செய்ய முடியும்?

யார் செஞ்ச புண்ணியமோ, புத்தி வந்து வெளிய வந்துட் டேன். வாழுறது கஸ்டம்னாலும், மனசு சுத்தமா, நேர்மையா வாழ்றது சந்தோசமாத்தான் இருக்குது. நாலு சனத்தோட சனமா சாதாரணமா வாழ்றதுல ஒரு நிம்மதியும் இருக்குது. தண்ணில இருந்து தூக்கி எறிஞ்ச மீனு கெணக்கா உள்ள தத்தழுச்சுப் போயி இன்னைக்கு மறுபடியும் தண்ணிக்குள்ள வந்த மீனு கெணக்கா சொதந்தரமா, சொகம்மா மூச்சு உட முடியுது. மடத்துக்குள்ள இருந்து சேவை கீவைன்னு பேசறது சொல்றதுல எல்லாம் எனக்குச் சுத்தமா நம்பிக்கை இல்லாமப் போச்சு. ஏதோ பணத்தையும் படிப்

பையும், அதிகாரத்தையும், அந்தஸ்த்தையும் வச்சிக்கிட்டு மேட்டுமத்தனமா அலையலாம். சேவை செய்றோம்னு சொல்லிக்கிட்டு திரியலாம். ஆனா மனுசத்தன்மையே இல்லாம செய்றது என்ன பெரிய சேவை?

இப்பப் பல மாறி யோசன வருது. செறகொடிக்கப்பட்ட பறவகெணக்கா இருக்கேன். செறகொடிக்கப்பட்ட பெறகுக் கூண்டுக்குள்ள கெடந்தாத்தான் அதுக்கு பாதுகாப்பு. கூண்ட விட்டு வெளிய வந்தா, பறக்க முடியாம பட்டுப் பட்டுன்னு அடிச்சுக்கிட்டு பரிதாபமா அலைய வேண்டியதுதான். அப்பிடித்தான் நான் இருக்கேன்.

கண்டத களியதச் சொல்லி மடத்துக்குள்ள இருந்தப்ப எனிய வெட்டி, செதுக்கி, ஊனமாக்கிப் போட்டாக, இன்னைக்கு வெளிய வந்துட்டு தத்தக்கா, புத்தக்கான்னு அலயுறேன். இந்த வயசுல இப்பிடி அலயுறதுதான் வேதனையா இருக்குது.

ஒடிக்கப்பட்ட செறகுகள் திரும்பவும் வளந்து வலுப்பெத்து, நானும் நாலுபேரப் போல என்னைக்குப் பறக்க ஆரம்பிப்பேனோ தெரியல. செறகு இல்லாத பறவயக் கண்டா, கண்டதுங் கல்லக் கொண்டு எறிஞ்சு காயப்படுத்துற மாதிரி, என்னையும் ஏகப்பட்டப் பேரு வார்த்தையினால, செயலுனால காயப்படுத்துறாக. அம் புட்டையுந் தாங்கிக்கிட்டு நானும் அடிமேல அடி வச்சு நகந்துக் கிட்டு இருக்கேன்.

நாம நல்லா இருந்த காலத்துல நம்மள ஒட்டிக்கிட்டு இருந்தவுகள்ளெல்லாம் இப்ப பிச்சுக்கிட்டுப் போயிட்டாக. நாம காயப்பட்டுப்போன ஆளுன்னு தெருஞ்சுட்டா நாலு பேரு கொணப்படுத்துற மாதிரி வந்து புண்ணக்குத்திவிட்டு வேடிக்க பாக்குறாக. இம்புட்டு வேதன இருந்தாலும் அடிமனசுக்குள்ள என்னமோ ஒரு சந்தோசம் இருக்கத்தான் செய்யுது. ஒரு தெம்பு, ஒரு வீம்பு இருக்குது, வாழ முடியும்னு ஒரு நம்பிக்கையும் வாழனும்னு ஒரு ஆசையும் இருக்கத்தான் செய்யுது.

இப்போதைக்கு வழிவக ஒன்னுந் தெரியல. இருந்தாலும், நாலு பேருக்கு பிரயோசனப்படுற மாதிரி, அர்த்தத்தோட வாழ முடியும்னு நெனக்கிறேன். போலித்தனமா சிரிச்சுக்கிட்டு வாழுறத விட, நெசத்துக்கு அழுதுக்கிட்டே வாழுறது பரவாயில்லைன்னு மனசத் தேத்திக்கிட்டு இருக்கேன்.

நன்றி - ஊடறு

# சங்கதி

# ஒன்று

'மூனாவது பொண்ணு முத்தமெல்லாம் பொன்னு' இப்பிடித்தான் நாம் பெறக்கையிலே எங்க பாட்டி வெள்ளையம்மா சொல்லிக்கிட்டு சந்தோசப்பட்டாளாம். எங்கம்மைக்கும் சந்தோச மாத்தான் இருந்துச்சாம். ஆனா எனக்க முன்னால பெறந்த எங்கண்ண, எங்கக்கா மாறி நானு கலராப் பெறக்காமெ கரேர்னு பெறந்தது கொஞ்சம் ஏமாத்தமா இருந்துச்சாம், எங்கம்ம சொன்னா. எங்க ஊர்ல பொண்ணு, ஆணுன்னு வித்தியாசங் காட்டாமத்தான் பிள்ளயப் பெத்தாக. ஆனா வளக்கும்போது ஆம்பளைகதான் அதிகாரத்தக் காட்டிக்கிட்டு அலைராக.

பிள்ளைக பெறக்கையில, ஒன்னாவது, மூனாவது, அஞ்சாவது, ஏழாவது, ஒம்பதாவது இப்பிடி ஒத்தப்படைலன்னா பொம்பளப் பிள்ள நல்லதும்பாக. ரெண்டாவது, நாலாவது, ஆறாவது, எட்டாவது இப்பிடி ரெட்டப்படைலன்னா ஆம்பளப் பிள்ள நல்லதும்பாக.

அப்பயெல்லாம் எங்க ஊர்ல ஆஸ்பத்திரி ஒன்னுங்கெடையாது. இப்பயுங் கெடையாதுதான். நோவு,நோக்காடு வந்தா நாட்டு வைத்தியம் பாத்துக்கிருவாக. அதுல கட்டுப் படலன்னாத்தான் பக்கத்து ஊர்ல இருக்குற கவர்மெண்டு தர்மாஸ்பத்திரிக்குப் போவாக. பேறுகாலமெல்லாம் வீட்லயேதான் பாப்பாக. எங்க ஊர்ல எல்லாத்துக்கும் பேறுகாலம் பாக்குறது எங்க பாட்டிதான். மேச்சாதிக் காருக மட்டும் பாட்டியக் கூப்டமாட்டாக. பாட்டி பறைச் சிங்கறதுனால அவுக கூப்டமாட்டாக.

பாட்டிக்கு எப்பிடித்தான் பேறுகாலம் பாக்கத் தெரியுமோ? மழைக்குக் கூட பள்ளிக்கொடத்துல ஒதுங்குனதில்ல பாட்டி. எப்பிடியோ பாப்பா. எப்பேர்ப்பட்ட கஸ்டமான கேசுன்னாலும் பாட்டி நல்லா பாப்பாளாம். பிள்ள கொடி சுத்திக் கெடந்தாலும், குறுக்கக் கெடந்தாலும், ரெட்டப் பிள்ளன்னாலும், கொறமாத்தப் பிள்ளன்னாலும் தாய்க்கும் பிள்ளைக்கும் ஆபத்து இல்லாமெ தாய் வேற, பிள்ள வேறன்னு பிருச்சுப் போட்ருவாளாம். எங்க தெருவுகள்ள இருக்குற முக்காவாசிப் பிள்ளக்காடுகள எங்க பாட்டிதான் இழுத்து வெளிய போட்டிருக்கா. எந்தச் சாமயாமங் கூப்டாலும் சலிக்காமப் போயி பேறுகாலம் பாப்பா பாட்டி. பேறுகாலம்

பாக்குதுக்கு ரூவாயெல்லாம் வாங்கமாட்டா. செல வீடுகள்ள வெத்தல பாக்கு குடுப்பாகளாம். அம்புட்டுத்தான். பேறு காலத் துக்குக் கூப்புட்டாகன்னா, இடுப்புவலி வந்து, கன்னிக்கொடம் ஒடஞ்சு, பிள்ளப் பெத்து, நஞ்சுக்கொடி வந்து உழுகுந்தட்டிக்கும் அங்குட்டு இங்குட்டு நகராம நின்னு முழுசும் முடுச்சுக் குடுத் துட்டுத்தான் வருவாளாம். அதுனால பாட்டிய ரொம்பப் பேருக்குப் புடிக்கும். ரொம்பக் கைராசிக்காரக் கெழவின்னு சொல்லுவாக. பெருமாபட்டி கெராமத்துல எங்க பாட்டிய ரொம்பப் பேருக்குத் தெரியும்.

வெள்ளையம்மாக் கெழவி எங்கம்மயப் பெத்த பாட்டி. எங்க தாத்தா கோயிந்தன எங்கம்மகூடப் பாத்ததில்ல. எங்கம்ம மூனுமாத்தப் பிள்ளையா இருக்கைல போனவந்தானாம். அதுக்குப் பெறகு வரவே இல்லியாம். எங்க பாட்டிக்கு பதினாலு வயசுல கலியாணம் ஆச்சாம். எங்கம்மாதான் ரெண்டாவது பிள்ள. மூத்தது எங்க பெரீம. கலயாணம் ஆன நாலாவது வருசமே தாத்தா எங்குட் டோ போயிட்டாராம்.

அந்தக் காலத்துல கங்காணி ஒருத்தன் வந்து எலங்கைக்குத் தேயிலைத் தோட்டத்துல வேல செய்றதுக்கு எங்க ஊர்ல இருந்து குரூப்பா ஆளுகளக் கூப்டுக்கிட்டுப் போயிருக்கான். அவுகளோட சேந்து எங்க தாத்தாவும் போனாராம்.

போனவரு போனவர்தானாம். திரும்பி வரவே இல்லியாம். ஆனா அப்பப்போனவுக பூராம் நாலஞ்சு மாசத்துல திரும்பி வந்துட்டாகளாம். அங்கயும் நாயிபட்டபாடுதானாம். அதுக்கு நம்ம ஊரே தேவலன்னாக.

பாட்டி பாக்குரதுக்கு நல்லா இருப்பா. கொமரியா இருக்கம் போது இதவிட அழகா இருப்பாளாம். நல்லா ஒசரமா வளந்துருப் பா. சாகுந்தாட்டிக்கும் அவளுக்கு முடி நரைக்கவே இல்ல. இடுப்பு வரைக்கும் தொங்குற முடிய ஒதறி அள்ளி முடுஞ்சானா ரொம்ப எடுப்பா இருக்கும் கொண்ட. பாம்படம் போடுற துக்கு பாட்டி காது வளத்துருந்தா. ஆனா எப்பயும் அது வெறுங் காதாத்தான் தொங்கும். அவா நகபோட்டே நாம் பாத்ததில்ல. கொமரியா இருக்கைல, காதுக்கு ரெவண்டு இரும்புக் குணுக்குப் போட்டுருந்தாளாம்.

பாட்டி சட்ட போட்டும் நாம் பாத்ததில்ல. அவுக காலத்துல கீச்சாதிப் பொம்பளைக சட்ட போடக் கூடாதாம். எங்க பெரீம கூட சட்ட போடல. எங்கம்மாகூட கலியாணங் காச்சி முடிச்சப் பெறகு தான் சட்ட போட்டாளாம். பாட்டிக்கு தெடகாத்ரமான ஒடம்பு. சாகுந்தட்டிக்கும் நோவு நோக்காடுன்னு படுத்ததே இல்லியாம். பாட்டிக்கே அவா வயது தெரியாது. வயசக் கேட்டா, என்ன ஒரு எழுவது எம்பது இருக்குமுன்னு குத்துமதிப்பாச் சொல்லிட்டுச்

சிரிப்பா.

கோயிந்தன் வருவா வாருவாமுன்னு பாத்துட்டுப் பெறகு ஒரு டயத்துல கடுமையானப் பஞ்சம் வரவும், பாட்டி தாலியக் கழத்தி வித்துட்டாளாம். அதுக்குப் பெறகு தாலி கீலி ஒன்னும் போடல. புருசங்காணப் பெணமா ஆயிட்டாமுன்னு மனசத் தேத்திக் கிட்டு ஒத்தயில பாடுபட்டு ரெண்டு பிள்ளைகளையும் காப்பாத்தி இருக்கா.

எங்கம்மயும் பெரீமயும் சின்னப்பிள்ளைகளாக இருக்கைல வேதாக்காரச் சாமிமாருக ஊருக்கு வந்தாகளாம். வேதத்துல சேந்தா பிள்ளைகள எலவசமா படிக்க வப்பமுன்னு சொல்லவும் பறையம் பூராஞ் சேந்துட்டானாம். வேற பள்ளங், கொறவஞ், சக்கிலியப் பெயல்க யாருஞ் சேரலியாம். அவுக பூராம் இந்தாத்தான் இருந்துருக் காக. பறையனுக என்ன எழவுக்குப் போயி வேதத்துல சேந்தானு களோ, இப்பிடிச் சேந்ததுனால இன்னைக்கு சர்க்காருகட்ட இருந்து சலுக ஒன்னுமில்லாமப் போச்சு.

வெள்ளக்காரச் சாமிமாருக எலவசமா படிக்க வச்சாலும், பிள்ளக்காடுக படிக்கப் போகாதுக. எல்லாங் காடுகரச் செம வேல வெட்டிக்குப் போகுங்க. ஆம்பளப் பெயல்க கொஞ்ச நாளைக்குப் பள்ளிக்கொடம் போயிட்டு, பெறகு நின்றுவான்க. பொட்டச்சிக அதுதானும் போமாட்டாக. வீட்ல பிள்ள எடுத்துக்கிட்டு வீட்டுச் சோலிக பாக்கவே அதுகளுக்குச் சரியாப் போகும். எங்கம்மாயாவது அஞ்சாங் கௌாஸ் வர படுச்சிருக்கா. எங்க பெரீமைக்கு ஒன்னுந் தெரியாது.

பாட்டி ஒரு நாளு எனக்கு தல வகுந்துட்டு இருந்தா. பாட்டிக்கு ரொம்பத் தெளிவான பார்வ. நேத்துப் பெறந்தச்செள்ளக் கூட எடுத்துக் குத்துவா முடிய தூக்கி உட்டு, பெரிய பேனுகளப் பூரா புடுச்சுருவா. ஈருவலியக் கொண்டு உருவுனாலும் சடச்சடன்னு நெறியும். வலிக்காம உருவிக் குத்துவா. பேனு பெறக்கும்போதே ஊர்ல நடக்குற வெசயம் பூராஞ் சொல்லுவா. அந்நியாரம் அப்பிக் கூடி காட்டுராசாங்ற பெய போனான்.

“இவெம்பேரு காட்டுராசான்னு எதுக்கு வச்சாக தெரியுமா?” பாட்டி ஏங்கிட்ட கேட்டா.

“தெரியாது. நீ சொல்லு.” நாங்கேக்கவும் பாட்டி லேசா சிருச்சுக்கிட்டா. பெறகு சொன்னா.

“இவுகம்ம அதான் அந்தப் பச்சமூக்கிப்பிள்ள. அவளும் வாக்கப்பட்டு நாலஞ்சு பிள்ள தாயாகிட்டா. ஆனா இன்னமும் துருச் துருச்குன்னு மூக்க உறுஞ்சுக்கிட்டே இருப்பா. இந்தப் பெயலப் பார்த்தீலே அவுகம்மயக் கெணக்காத்தான் மூக்க வடுச்சுக்கிட்டு அலைரான்.”

“இவெம்பேரு எதுக்க காட்டுராசான்னு வச்சாகன்னு சொல்றம்ன பாட்டி” நான் நாவகப்படுத்துனேன்.

“நாம்பாரு எதையோ சொல்லிக்கிட்டுப் போறேன். அதான் இவுகம்மா ஒருநாளு மாட்டுக்குப் புல்லுப் பெறக்கப் போயிருக்கா. நெமாத்தச் சூலி. போன லெக்குல வலிகண்டு அங்கனக்குள்ளயே பிளளையப் பெத்துட்டா. புல்லறுக்கக் கொண்டுபோன பன்னறுவாளக் கொண்டு தொப்புளுக் கொடிய அறுத்துப்போட்டு, நஞ்சுக் கொடிய அங்ன குழியத் தோண்டிப் பெதச்சுட்டு பிள்ளையுந் தூக்கிட்டு புல்லுக்கட்டையும் தூக்கிட்டு வீட்டுக்கு வந்துட்டா. பெறகு வெந்நிய கின்னிய வச்சு ஊத்திருக்காக. இப்பப் போனானே, இந்தப் பெயதான் அது. அதுனாலதான் காட்டுராசான்னு பேரு வச்சுருக்கா.”

“இப்பிடி ஒத்தைல பிள்ளப் பெத்துரலாமாக்கும் பாட்டி. எதுக்கு பிள்ளப்பெறும்போது வேலைக்குப் போறாக. வீட்லயே இருக்கலாம்ல.”

“வீட்ல இருந்தா சோறு தண்ணிக்கு எங்குட்டுப் போக. மாடுகன்னுக கொல பட்னியா கெடக்கும். இவா மட்டுமில்ல, நம்ம தெருவுல ஏறக்கொறய எல்லாப் பொம்பளைகளுமே இப்பிடித் தான். ஒங்கம்மாகூட மேலக்காட்ல போயி வயல்ல நட்டுட்டுவந்து, சாயங்காலம் மசால அரைக்கப் போம்போதுதான் வலிகண்டு அங்ன குள்ளயே ஒனியப் பெத்துக்கிட்டா.”

பெறகு பாட்டியே பேசிக்கிட்டா. “ஆம்பளைக கெணக்கா வேல வெட்டியுஞ் செஞ்சுகிட்டு, தொயந்து பிள்ளைகளையும் பெத்துக்கிட்டு கஸ்டப்பட வேண்டி இருக்கு. ஆம்பளைக்கென்ன. காட்டுவேலையோட முடிஞ்சது. பெறந்தா ஆம்பளையாப் பொறக் கனும். பொட்டச்சிகளாப் பெறந்து என்ன சொகத்தக் கண்டோம். நோனி பிதுங்க காட்லயும் வீட்லயும் வேல செய்யறதுதான் மிச்சம். சரி ஒங்கம்மையிட்டப் போயி சடயப்போடு. ஓடு.

பாட்டிக்குச் சடை பின்னத்தெரியாது. அதான் பேனப் பெறக் கிட்டு எங்கமயிட்ட போச்சொல்லிட்டா.

பாட்டி சொன்னது கெணக்கா, எங்க தெருவுல, பொம் பளைக ரொம்ப கஸ்டப்படத்தான் செய்றாக. சின்னவயசுலருந்தே இப்பிடித்தான் இருக்குது.

கைப்பிள்ளையா இருக்கும்போது, ஆம்பளப் பிள்ளய அழ உடமாட்டாக. ஆம்பளப் பிள்ள அழுதா ஒடனே தூக்கிப் பால் குடுப்பாக. பொம்பளப் பிள்ளன்னா அப்பிடி இல்ல. பால் குடுக்குறதுல கூட ஆம்பளன்னா ரொம்ப நாளைக்குக் குடுப்பாக. பொம்பளன்னா சீக்கிரத்துல பால்குடி மறக்க வப்பாக. சீக்கு

நோக்குன்னு வந்தாலும் ஆம்பளன்னா அக்கறையா ஓடிஓடி கவனிப்பாக. பொம்பளன்னா வேகாரிக்குப் போடுவாக.

கொஞ்சம் வளந்தப்பெறகும் இப்பிடித்தான். பெயல்களுக் குத்தான் மதிப்பு. அவனுக தின்னுட்டுத் தின்னுட்டு வெளாடப் போவானுக. பொம்பளப் பிள்ளைகதான் வீட்ல இருந்து, சட்டி வட்டி வெளக்கி, தண்ணி எடுத்து, வீடு கூட்டி, வெறகு பெறக்கி, துணி தொவச்சு, இப்பிடி சதா வெல செஞ்சுக்கிட்டு கெடக்கனும். இந்த வேல முடிஞ்சா கைப்பிள்ளயத் தூக்கிக்கிட்டு வெளாடப் போகனும்.

வெளாட்லகூட ஆம்பளைக வெளாட்ட பொம்பளைக வெளாடக்கூடாது. சேக்கமாட்டானுக. பொம்பளைக்குன்னு இருக்குறது கஞ்சி காச்சி, கலியாணம் முடிச்சு, தட்டாங்கல்லு, தாயம் வெளாடுறதுதான். ஆம்பளைக வெளாடுறதெலுக்கா கோலிக் குண்டு, செலாங்குச்சி, கபடி இப்பிடி எதையும் வெளாண்டுட்டா, “ரொம்ப மப்புக்காரி பொறுக்கோ, பொட்டக் கழுத மாறியா இருக்கா. ஆம்பள கெணக்கா அவளுக்கு வெளாட்டப்பாரு” இப்பிடி கண்டமானிக்க வைவாக.

எங்க பாட்டியும் லேசுப்பட்டவா இல்ல. எங்களவிட பேரமார்களத்தான் நல்லா வச்சுக்கிருவா. வேலவெட்டிக்குப் போயிட்டு வரும்போது ஏதாச்சும் கொண்டாந்தான்னா மொதல்ல பேரனுகளத்தான் கூப்டு குடுப்பா. வெள்ளரிக்கா கொண்டாந் தான்னா, பல்லு இல்லாததுனால வெதயப்பூரா நெகத்துட்ட கொடஞ்சு தின்னுட்டு மீதிய எங்களுக்குக் குடுப்பா. அது மாதிரி மாம்பழங் கொண்டாந்தான்னா, அவா தின்னப் பெறகு இருக்குற மாம்பழத்தொலி, கொட்ட இதுகள எங்களுக்குக் குடுத்துட்டு, நல்ல முழு மாம்பழத்த பெயல்க கிட்ட குடுப்பா. வேற வழி இல்லாம நாங்களும் தின்னு கழுச்ச தொலிகள எடுத்துத் திம்போம்.

பாட்டி கொத்தச்சி வேல செஞ்சுதான் பிள்ளைகளக் காப் பாத்துனாளாம். கொத்தச்சி வேலன்னா, சம்சாரிக வீடுகளுக்குப் போயி வேல வெசாரிச்சுட்டு, எங்க தெருவுகள்ள இருந்து பொம் பளைகள வேலைக்கு அமத்திட்டுப்போயி வேல செஞ்சுட்டு, சாயந்தரம் கூலி வாங்கியாந்துப் பிரிச்சுக் குடுக்கனும். சம்சாரி கள்ளாம் மேச்சாதிங்ரதுனால, அவுக வீடுக எங்க தெருவுல இருந்து ரொம்பத்தூரம் தள்ளி இருக்கும். வேல வெசாரிக்கப் போனாலும் செஞ்ச வேலைக்குக் கூலி வாங்கப் போனாலும் பத்துத் தடவ நாயா அலைய வப்பானுக.

பாட்டிக்கிட்ட ரெண்டு பாலுமாடுக நின்னுச்சு. எரும ஒன்னு, பசு ஒன்னு. மாடுகளுக்குப் புல்லுப் பெறக்க, எரிக்க முள்ளு கிள்ளுப் பெறக்கப் போம்போது எனியவுங் கூட்டிட்டுப் போவா.

புல்லுப் பெறக்கைல என்னத்தனாலும் சொல்லிக்கிட்டே இருப்பா.

ஒரு தடவ வெறகு பெறக்கப் போனோம். "இந்தப் பக்கமெல்லாம் ஒத்தசத்தைல பொம்பளைக வரக்கூடாது. மேல் சாதிக்காரப் பெயல்க கண்ல அம்புட்டாப் போச்சு. இழுத்துட்டுப் போயி அழிமாண்டஞ் செய்வானுக. இன்னுங் கொஞ்சந் தள்ளிப் போனா, வாரண்டுத் தோப்புக்காரனுக இருக்கானுக. மலங்காட்டு கள்ள ஒழுஞ்சுக்கிட்டு திரிரானுக. அவனுக கண்லயும் எம்புடக் கூடாது." பாட்டி இப்பிடிச் சொல்லவும் எனக்குப் பயம்மா இருந்துச்சு. அப்ப எனக்குப் பதிமூனு வயசு. எட்டாங்கௌாஸ் படுச் சுக்கிட்டு இருந்தேன்.

"ஒனக்கு பயம்மா இல்லியா பாட்டி. வா வீட்டுக்குப் போயிருவோம்." பாட்டிய கூப்புட்டேன்.

"நம்ம ரெண்டு பேரு இருக்கம்ல. இன்னுஞ் செத்த நேரம் பெறக்கிட்டுப் போவோம். நீ பச்சப்பிள்ளயங் காட்டிப் பயப்புடுற. நானெல்லாம் எத்தன தடவ ஒத்தயில வந்து புல்லுப் பெறக்கிட்டுப் போயிருக்கேன் தெரியுமா?"

"அப்பயெல்லாம் ஒனக்குப் பயம்மா இருக்காதா பாட்டி? பூச்சக்கள்ளன் வந்தா என்ன செய்வ நீயி?" நாங்கேக்கவும், பெறக்ன வெறக கொடி போட்டு கெட்டிக்கிட்டே பாட்டி சொன்னா.

"எனியப் பத்தி ஒனக்குத் தெரியாது. நம்ம தெருப்பெய மக்களுக்கே தெரியாது. நா ஒரு தங்கைப் பத்தினியாக்கும். ஒரு பெயல கிட்டத்துல நெருங்க உடமாட்டேன். இது தெரியாம இந்த பறச்சிரிக்கி முண்டைக பாடைல போறவளுக, எனியப் பத்தி தாறு மாறாப் பேசுவாளுக. போக்கத்த கொள்ளுமக்க குண்டிக்குப் பின்னாலதான் பேசுவாளுக. நேருக்கு நேரா பேசச் சொல்லு பாக் கேன்." வெறகுக் கெட்டத் தூக்கிக்கிட்டு வீட்டுக்கு வந்துட்டோம்.

ரெண்டு நாக்கழுச்சு பாட்டி எங்க வீட்டுக்கு வந்தா. வந்து எங்கம்மைட்ட, "செவத்தி, இவா பாத்திமாப் பிள்ளையத் தாவணி போடச் சொல்லு. கௌக்காத்தண்டி மொலைகள வச்சுக்கிட்டு பெயல்களோட சேந்து படிக்குறது அம்புட்டு நல்லா இல்ல. நேத்துச் சாயங்காலம் கடைல குருநா வாங்கிட்டு வரைல அவுக வாத்தியாரு, அதாம்டி லூர்துராசு வாத்தியாரு எனிய மெனக்குட்டு கூப்புட்டு, ஒம்பேத்தியா பாத்திமாள தாவணி போட்டாரச் சொல்லுங்கத்தன்னு சொல்லிட்டுப் போறான்." இப்பிடி பாட்டி சொன்னதக் கேட்டுக் கிட்டுருந்து நாஞ் சொன்னேன்.

"நாந்தாவணி போடமாட்டேன். பெயல்கள்ளாம் உரிக் காட்டுவானக. நானு ஒன்பதாங் கௌாசுக்குப் போம்போதுதான் தாவணி போடுவேன்."

“ஒனக்கென்னடி தெரியும். அவெம்பாரு பாடஞ்சொல்லிக் குடுக்கத உட்டுட்டு இதக் கருக்கடையாப் பாத்துட்டு வந்து சொல் றான். பேசாமப் போட்டுட்டுப்போ.” பாட்டி அரட்டுனா.

எனக்கு தாவணி போடுரதுக்கு ஆசையா இருந்தாலும், வெக்கமாவும் இருந்துச்சு. தாவணி போட்டா எப்பிடி இருக்கும்னு நானு நெனச்சு நெனச்சப் பாத்துக்கிட்டு இருந்தேன்.

பாட்டியும் அம்மையுமா பேசிக்கிட்டாக. பாட்டி அம்மை கிட்ட சொல்றா. “ரெண்டு மூனு மாத்தையில இவா ஆளானாலும் ஆகிருவா பொருக்கோ. மொகமெல்லாம் மினங்கிக்கிட்டு வர்ரதப் பாத்தியா. சடங்கானதும் படிப்ப நிப்பாட்டிட்டு எவங்கைலயாவது புடுச்சுக் குடுத்துட்டு ஒம்பாட்டுக்கு நிம்மதியா இரு.”

“அப்பிடியெல்லாம் இப்ப நிப்பாட்ட உடமாட்டாக. பெரிய பத்து வரைக்கும் மாச்சும் படிக்க வைக்கனும்னு சொல்றாக. நம்ம தான் படிக்காம கெடந்து சீரழிறோம். அதுகளாவது படிக்கட்டும்ங் காக.” அம்ம இப்பிடிச் சொல்லவும் பாட்டிக்குக் கோவம் வந்துருச்சு.

“ஒனக்கு ஏதாச்சும் வெவரமிருக்கா. கொமரி குட்டச்சிகள கலியாணம் முடுச்சுக் குடுக்காம வீட்ல எப்பிடி வச்சுக்கிட்டு இருப்ப. நாலுபேரு நாலு வெதமா பேசமாட்டாக. பொம்பளப் பிள்ளைகள வீட்ல வச்சுக்கிட்டு இருக்குறது வகுத்துல நெருப்ப வச்சுக்கிட்டு இருக்குறது கெணக்கா. எம்புட்டு நாளைக்கு இவகள வச்சு நீ காபந்து செய்வ? சொல்லு. ஏங்காலத்துல பொம்பளைக ஆளாகுமுன்னாலியே கெட்டிக் குடுத்துருவாக. அவா குருவம்மாப் பிள்ளையெல்லாங் கெட்டிக்குடுத்து ரெண்டு வருசஞ் செண்டுதான் வயசுக்கு வந்தா.

கேட்டுக்கிட்டுருந்த நாங்கேட்டேன். “எங்கம்மய எப்படி பாட்டி கலியாணம் முடுச்சுக்குடுத்த?”

“ஒங்கம்ம சடங்காகி நாலஞ்சு மாசம் வீட்ல இருந்தா. ஒங்க பெரீமயத்தான் ஒடனே புடுச்சுக் குடுத்துட்டேன். அவா பாவம் மாட் டம்னா. அவெ மொசுலுபட்டிக்காரன் பொண்ணு கேட்டு ஒத்தக்கால்ல நின்னான். அவெந் தொல்ல தாங்க மாட்டாமத்தான் சட்டுபுட்டுன்னு முடுச்சுப் போட்டேன். அவனக் கெட்டிக்கிட்டு அவா என்னத்த வாழ்ந்துட்டா? வருசயா ஏழெட்டு பிள்ளைகளப் பெத்துப் போட்டு, பொடுக்குனு கண்ண மூடிட்டா. பாதகத்தி.”

“பெரீம எப்பிடி பாட்டி செத்தா?”

“கிளிய வளத்து பூன கைல குடுத்துட்டேன். ஒங்க பெரீயப்பன் அவள அடுச்சே கொன்னு போட்டான். பெத்த வகுறு எரியுது. அநியாயமா அவளச் சாகடுச்சான் பாவி. நா ஒரு பெயலுக்கு முந்தி போட்டவா சொல்றேன். நீ வேண்ணா பாத்துக்கிட்டு இரு.

ஒங்கப் பெரீயப்பன் என்ன சாவு சாவானோ.

“எதுக்கு பாட்டி அடுச்சாக? நாங்கேட்டு முடிக்குதுக்குள்ளே பாட்டி கோவமா கத்துனா.”

“எதுக்கா, காமக் கோட்டாள புடுச்சபெய. தெனமும் மல்லாரச் சொல்லித்தான். ராப்பகலா வீட்லயும் காட்லயும் வேல செஞ்சுட்டு வந்துட்டு இவெ வெறிக்கு ஆளாக முடியுமா? மிருகச் சாதிப்பெய. மாட்டம்னு சொன்னா இடுப்பு எடவார்லயே வெளுப்பான். ஒரு நா ஏங்கண்ணுக்கெதுர ஒலக்கைய கொண்டி அடுச்சுப்போட்டான். அவெங் கைல பாம்பு புடுங்க.”

“நீ பாத்துக்கிட்டு சும்மாயா இருந்த. போயி வெலக்கி உட்டான.”

“சின்னப்பிள்ளத்தனமா நீ பேசுற. ஆம்பள அடிக்கும் போது பொம்ள போயி வெலக முடியுமா? அவா என்ன நாலஞ்சு அண்ணந் தம்பி கூடயா பெறந்துருக்கா? எதுத்துக்கேக்க நாதியில்ல. பெத்தத் தகப்பனும் இல்ல. எவெ என்னன்னு கேப்பான்? அப்பிடியே அங்ன நின்னவுக வெலக வந்தாலும், ஏம் பொண்டாட்டி, நா அடிப்பேன் கொல்லுவன்னு ஆணவமாப் பேசி அம்புட்டுப் பேரையும் வைரான். யாரு போவா சொல்லு.”

“அவா சாகும்போது கடைசிப் பிள்ளைக்கு, அதான் செயக் கொடியாளுக்கு நாலே மாசந்தான். பால்குடி மறக்காத பச்சமண்ண உட்டுட்டுப் போயிட்டா.”

“செயக்கொடியாப் பிள்ளைய யாரு வளத்தாக?”

“அவுகக்காமாரு ரெண்டு பேருந்தான் பாத்துக்கிட்டாளுக. மூத்தவா கஞ்சி தண்ணி காச்சுவா. எளையவா பிள்ளைய வச்சுக் கிட்டு இருந்தா. நானு ஊடதாட போயி பாத்துக்கிட்டேன்.”

அன்னியாரம் பாத்து செயக்கொடியாபிள்ளை வந்தா. வந்து “ஏ பாட்டி ஒனிய அக்கா கூப்டுரா” சொல்லி கையோட கூட்டிட்டுப் போனா.

செயக்கொடியாளுக்கு அஞ்சாறு வயசு இருக்கும். பள்ளிக்கொடம் போகாம வீட்டு வேல செஞ்சுகிட்டு வீட்ல இருந்தா. அவுங்கக்கா மூத்தவளுக்குப் பதினாறு வயசுக்கு மேலயே ஆயிருச்சு. ஆனா அவா இன்னமுஞ் சடங்காகல. அதுனால அவா இருசியாயிட்டான்னு ஊருக்குள்ள பேசிக்கிட்டாக. பாட்டி இதுனால ரொம்ப கஸ்டப்பட்டா.

ஒரு நாளு பாட்டியும் அம்மையும் இதப்பத்திப் பேசிக் கிட்டிருந்தாக.

“மரியம்மாவுக்கு இம்புட்டு வயசாகியும் மொலையும் வல்ல. ஒன்னும் வல்ல. அவா சடங்காகாமெ இருக்குறத வச்சு, கண்டமானிக்கா பேசுராளுக. அந்தப் பிள்ள வயசுக்கு மீறுன வேல

செஞ்சே கரண்டுபோனா பாவம்" பாட்டி இப்பிடிச் சொல்லவும் எங்கம்மா சொன்னா ஃ

"ஏமா இந்த டவுனுல இருக்குற வெள்ளக்காரத் தாயாருமாரு ஆஸ்பத்திரியில கொண்டு போயிக் காட்டுனா, சடங்காரதுக்கு மாத்திர, டானிக்கு ஏதாச்சும் குடுப்பாகளாம். நம்ம ஊருத் தாயாரு மாரு சொன்னாக. போயிக் காட்டிப் பாரேன்."

"நானே குருட்டுக் கண்ணு கொள்ளுகணக்கா இருக்கேன். நா எங்குட்டு கூடி வெசாருச்சுப் போப் போறேன். ஒரு நாளைக்குக் கொண்டு போயிக் காட்டனும். அவுகய்யன் ஒன்னுஞ் செய்ய மாட்டான். வகுறு ரொம்புனா போதும். அவெம்பாட்டுக்கு அலைவான். பொம்பள இல்லாத வீடு ஒரு வீடா."

"ஏ பாட்டி நீ மரியம்மாளக் கூப்டுக்கிட்டுப் போம்போது நானும் வாரேன்." நாங் கேட்டேன்.

"நீ என்னத்துக்கு, துட்டுக்குப் புடுச்ச கேடா?" சொல்லிட்டு எந்துருச்சு அவா வீட்டுக்குப் போயிட்டா பாட்டி.

"மரியம்மாள ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போயிட்டு பாட்டி எங்க வீட்டுக்கு வந்தா. "எப்பிடி பாட்டி வண்டி பாத்து ஏறிப் போயிட்டு வந்துட்ட?" நாங் கேக்கவும் பாட்டி சிருச்சுக்கிட்டே சொன்னா.

"நம்ம ஊரு அம்மாக்கமாருகதான் தெனமும் டவுனுக்குப் போறாகள்ள. அவுகளோடய போயிட்டேன்."

"அம்மாக்காமாரெல்லாம் மேகலக்குடிச் சனங்க. அவுகளப் பாத்தீன்னா ஒவ்வொருத்தரும் மகாலச்சுமி கெணக்கா இருப்பாக. அவுக தலைல எப்பப் பாத்தாலும் எண்ணையும் பூவும் வாடாம இருக்கும். நம்மளக் கெணக்கா நாயித்து நாயித்துக்கெழம இத்தினிக் கானு தேங்கா எண்ண வாங்கி தேய்க்க மாட்டாக. தேங்காய செக்குல போட்டு ஆட்டி சுத்தமா எண்ணை எடுத்து வச்சுக்கிட்டு தெனமும் தேப்பாக. அவுக வளுச்சுச் சடப்போடுறதுக்கே ஒரு மணி நேரம் ஆகும்."

"நீ எப்பிடிப் போனன்னு கேட்டா என்னத்தையோ சொல்ற. சரி ஆஸ்பத்திரில என்ன சொன்னாக?" எங்கம்மா கேட்டா.

"ஆஸ்பத்திரில என்ன சொன்னாகளா; கண்ணு, நாக்கு கீக்கெல்லாம் பாத்துட்டு இத்தினிக்கூட ரத்தமில்லன்னுட்டாக. ரத்தவிருத்தி இருந்தாத்தான் ஆளாவான்னு சொல்லி, ஒரு ஊசியப் போட்டு, மாத்திர, டானிக்கு குடுத்துப் போச் சொன்னாக. ரெண்டு மூனு மாசம் பாத்துட்டுப் பெறகு வரச் சொன்னாக."

"அந்த டவுன்ல பாத்தீன்னா வண்டிக்காடு வதியளிது. எம்புட்டு வண்டிங்ற. அம்புட்டு வண்டிகள்ளயும் சனங்க போயிட்டு வந்துட்டுத்தான் இருக்குதுக. பெயமக்க எங்கதான் போகுதுகளோ

வருதுகளோ. சும்மாயுமா போறாளுக, கண்டதக்களியத வாங்கி தின்னுக்கிட்டு திரு நாக் கூட்டங் கெணக்காத்தான். இந்த யாவாரிகளும் என்னென்ன சாமானுகளயெல்லாங் கொண்டாந்து விக்கானுகங்க.” பாட்டி சொல்லவும் நாங்க அருவசமா ஒக்காந்து கேட்டோம்.

“ஏ செவத்தி, இன்னொரு வெசயம் தெரியுமா ஒனக்கு. அந்த ஆஸ்பத்திரில இருக்குர வெள்ளகாரத் தாயார்க வெள்ள வெளேர்னு இருக்காக. பாதகத்திக என்னத்தத்தான் திம்பாளுகளோ. பிச்சுத் திங்கலாம் போல இருக்காக.” பாட்டி சொல்லவும் எங்கம்ம கேட்டா: “இதென்ன அருவசம்ங்ற. இங்க நம்ம ஊர்லயுந்தா வெள்ளக்காரச் சாமிக வெள்ளக்காரத் தாயார்க இருந்தாக. நாயித்து நாயித்துக் கெழம நீ கோயில்ல பாக்கல?”

“நா அதச் சொல்ல வரலடி. தாயார்மார்கதான் அப்பிடின்னா, அவுக வளக்குற பன்னிக கூட வெளேர்னுதான் இருக்கு. பாக்கப் பாக்க அம்புட்டு அருவசமா இருக்கு.” பாட்டி சொல்லி முடிக்கவும் அங்ன ஒக்காந்திருந்த மாடத்தி நக்கலா சொன்னா.

“இவா வெள்ளையம்மா கெழவி பொய்யச் சொன்னாலும் பொருந்தச் சொல்லனும். எங்கள என்ன கேனகூதிகனா நெனச்சுக் கிட்ட.”

பாட்டிக்குக் கோவம் வந்துருச்சு. “ஏ செத்த பெய மகளே, நாம் பாத்துட்டு வந்து சொல்றனாக்கும். நீ மப்புப் பண்ணிட்டு பேசுறியே. ஏம்பேத்தியா மரியம்மாளக் கேட்டுப்பாரு. பன்னிகளப் பாத்துட்டு அங்குட்டு இங்குட்டு நகர முடியல. அப்பிடி ஒவ்வொன் னும் கரடு மொரடா கொளுத்துப்போயி கெடக்கு. நீ என்ன அத சாதரணப் பன்னின்னா நெனைக்க? அதுக பூராச் சீமப் பன்னிகளாம். நம்ம பன்னிக கெணக்கா பேண்ட பீயத்தின்னுகிட்டு அலையிது கனா பாத்த? பூராங் கோதுமையும், பால்பவுடரும், பிஸ் கோத்துமா குடுத்துல அத வளக்காக. பெறகு வெளேர்னு இருக்காமெ கரேர்னா இருக்கும்” பாட்டி இப்பிடி சொல்லவும் அருவசமா சீமப் பன்னிய பாக்ரது கெணக்கா பாட்டியப் பாத்தோம்.

பெறகு மாடத்தி சொன்னா “நம்ம இங்க நாயி பட்ட பாடு பட்டு கோதுமையும், பால்பவுடரும் சாமியார்ட்ட வாங்கித் திங்கோம். அங்க பாரு பன்னிகளுக்கு அடுச்ச அதுர்ஸ்டத்த.

இதெல்லாங் கேட்டு நாம் பாட்டிக்கிட்ட கேட்டேன். “ஏ பாட்டி, எனிய ஒரு தடவ கூட்டிட்டுப் போயேன் பாட்டி” நாங் கெஞ்சவும் பாட்டி ரொம்ப வேகமா, “ஒங்கய்யங்கிட்டப் போயி கேளு. எங்குட்டுப் போனாலும் கலியாணம் ஆகாத எளவட்டங் கெணக்கா அலையுதுல. பொண்டாட்டி பிள்ளைகள நாலு லெக்குக் குக் கூட்டிட்டுப் போயி காட்டுனா என்ன?”

“எங்கய்யா எனியெல்லாம் கூப்டுப் போகாது பாட்டி. எங்கண்ணனத்தான் கூட்டிட்டுப் போகும். நாங்கேட்டா, பொம் பளப் பிள்ளகள அங்குட்டு இங்குட்டு கூட்டிட்டுப் போகக் கூடாதுங்குது.”

“அது என்ன கழுதையோ அப்பிடித்தான் செய்றாக. இந்த இங்ன இருக்குற சினிமாக் கொட்டாயில கூட சினிமாப் பாக்கப் போவுடமாட்டாங்க. நம்ம போனா முக்கிமுக்கி இந்த கோயிலுக்குப் போவோம். ஆம்பளைக சொல்றதும் ஒரு திக்கத்தலு பாத்தா நாயமாத்தான் இருக்கு. அவனுகளமாதி நம்ம அலைய முடியுமா. நம்மள கண்டபெயலும் அழிமாண்டஞ் செஞ்சு போடுவான்க.” சொல்லிக்கிட்டே பாட்டி எந்துருச்சு சீலய ஒதறிச் செருகிக்கிட்டுப் போயிட்டா.

மருந்து மாத்தரைகளைத் தின்னப் பெறகும் மரியம்மா சடங்காகல. ஊர்ல பாட்டிய பாக்குரவுகல்லாம், “என்ன வெள்ளை யம்மா, ஒம்பேத்தியாளுக்கு டவுனு ஆஸ்பத்திரில மருந்து வாங்கிக் குடுத்தும் பெரிய மனுசி ஆகலியாமே” இப்பிடி கேக்க ஆரம்பிச் சுட்டாக.

அப்பத்தான் தெக்குத் தெரு காளியம்மா, பாட்டிக்க ஒரு யோசன சொன்னா. “இந்த மதுரகிரிங்கற ஊர்ல பாருங்கத்தே, ஒரு பூசாரி இருக்காராம். அவரு கையால மந்துருச்சு தாயத்து கெட்டி உட்டா, பிள்ளையில்லாத மலடிக்குப் பிள்ளப் பாக்கியம் கெடைக்கு தாம். சமயாத பிள்ளக்காடுக சமஞ்சுருதாம். ஓம் பேத்தியாள அவருட்ட கொண்டு போயி காட்டுங்களேன்.

சரி, இதையுஞ் செஞ்சு பாத்துருவம்னு பாட்டிக்கு ஆசை. ஆனா எதுத்த வீட்டு ரெசினாப்பிள்ள வந்து, “வேதத்துல சேந்தப் பெறகு இப்பிடி பூசாரிக்கிட்ட போயி மந்துருச்சா சாவான பாவம்னு சாமியாரு போன வாரந்தா சொன்னாரு. நித்திய நரகத்துக்குத்தான் போவமாம்.” இப்பிடி சொல்லிப் பயங்காட்டி உட்டுட்டா.

இதக்கேட்ட காளியம்மா, “அப்பிடி எல்லாம் ஒன்னு மில்லங்கத்த. போயி மந்துருச்சுட்டு வாரவுகள்ளாம் பைத்தியக்கார் களா என்ன. இவா கெடக்கா, இவா வைற கெட்ட வாத்தைக்கு இவாதான் நேரா நரகத்துக்குப் போவா. சரி அப்டி ஒங்களுக்கு ஒரு மாதிரி இருந்துச்சுன்னா, போயிட்டு வந்துட்டு வார நாயித்துக்கெழம பாவ சங்கீர்த்தனத்துல சொல்லிட்டு நன்ம வாங்கலாம். நீங்க ஒங்க பாட்டுக்குப்போங்க” இப்பிடி தைரியங் குடுக்கவும் பாட்டி போலாம்னு முடிவு செஞ்சா.

வார செவ்வாக்கெழம வாக்குல கூப்டு போகலாம்னு நெனச் சுக்கிட்டு இருந்தா பாட்டி. ஆனா அதுக்கு முன்னாலியே திங்கக் கெழம விடியங்காட்டி கோழி கூப்ட மரியம்மா சடங்காயிட்டா.

# இரண்டு

எங்க தெருவுகள்ள பிள்ளைக சமஞ்சுட்டா வீட்டுக்குள்ள பன ஓலைய வச்சு குச்சுலுக்கெட்டி பதினாறு நாளு அந்தக் குச்சுலுக் குள்ள ஒக்காரவைப்பாக. அந்தப்பதினாறு நாளும் சமஞ்ச பிள்ளைக எந்த வேல வெட்டிக்கும் போகாதுங்க. வீட்லயும் வேல செய்யாதுக. ஒரு நாளைக்கு ஒருத்தரா சொந்தக்காருக இந்தச்சடங்கான பிள்ளைக் குச் சோற காச்சிப் போடுவாக. இதோட ஏதாச்சும் தீம்பண்டங்களும் வாங்கித் திங்கக் குடுப்பாக.

குச்சுலுக்குள்ள இருக்கும்போது தெனமும் மஞ்சப்பூசி குளுச்சு, வெளுத்த சீலையைக் கெட்டிக்கிட்டு வேளா வேளைக்குச் சோத்துல நல்லெண்ண ஊத்திச் சாப்பிடுவா. நாங்க சின்னப் பிள்ளை கள்ளாம் சேந்துக்கிட்டுப்போயி குச்சுலுக்குள்ள எட்டிப் பாப்போம். அருவசமா இருக்கும். மத்த கொமரிப் பிள்ளைகளும் வந்து பாத்துட்டு என்னத்தென்னத்தையோ பேசுவாளுக. அவளுக பேசிக் கிட்டாளுகன்னா சிரிப்பாணி அள்ளும்.

அவளப்போயி பாக்கப்போற பிள்ளைக கூட தாயம், பன்னாங்குழி, தட்டாங்கல்லு இப்பிடி ஏதாச்சும் வெளாடுவா சமஞ்ச பிள்ள. அவா குச்சுலுக்குள்ள பதினாறு நாளும் கைல சினுக்கோரி இல்லின்னா ஏதாச்சும் இரும்புச் சாமா வச்சிருக்கனும். முக்கியமா ஒன்னுக்கு ரெண்டுக்கு வெளியே போம்போது அதக்கொண்டு போக னும். இல்லைனா பேயடுச்சுருமாம்.

பிள்ளைக சமஞ்ச அன்னைக்கு ராத்திரி, பொம்பளைக வேல வெட்டிக்குப்போயிட்டுத் திரும்பி வந்த பெறகு, வயசுக்கு வந்த பிள்ளையக் குளுப்பாட்டுவாக. அந்தப் பிள்ளையோட அம்மாக்காரி போயி சொந்தக்காருக வீட்ல பூராஞ் சொல்லிட்டு வந்துருவா. மசங் குனப்பெறகு நாலு பொம்பளைக சீலய விருச்சு நாலா திக்கமும் மறச்சுக்கிட்டு அந்தப்பிள்ளைய நடுவுல ஒக்கார வச்சு ஒவ்வொருத் தரா தண்ணி ஊத்திக் குளுப்பாட்டும்போது, பாட்டுப்படுச்சு கொலவ போடுவாக. பதினாறாவது நாளு குச்சுல புடுங்கிச் சுட்டப் பெறகு ஆளப்போல வெளிய வந்து வேல வெட்டிக்குப் போவா.

கொஞ்சம் ஏலுக்கையா இருக்குரவுக பதினாறாவது நாள்ல வீட்டுக்கு முன்னாடிப் பந்தப்போட்டு, வாழ நட்டு, ரேடியாகெட்டி, மொய் உழுத்தாட்டி, ரொம்ப பவுரா கொண்டாடுவாக. இதுக்குத்

தாய் மாமன் வீட்ல இருந்து சேல, ரவுக்க, அண்டா, குண்டான்னு எடுத்து வைக்கனும். மத்த சொந்தக்காரங்களும் பாத்திரம் பண்டங்கள எடுத்துட்டு வருவாக. இப்பிடிக் கொண்டுட்டு வார சீர்களப் பூராம் தலைல வச்சுக்கிட்டு கொட்டடுச்சுக்கிட்டு, பெட்ரமாஸ் லைட்டுகள தூக்கிக்கிட்டுத் தெருத் தெருவாச் சுத்துவாக. அதப் பாத்துட்டு இன்னாரு மகா சடங்குக்கு இம்புட்டுச் சீருசெனத்தி வந்துச்சன்னு பேசிக்கிருவாக. சீரு செஞ்சவுக வீட்ல இப்பிடிச் சடங்கு வரும்போது இவுக திருப்பிச் செய்யனும். இல்லாட்டி கேவலமாப் பேசிச் சண்ட போடுவாக. இப்பத்தான் இப்பிடிச் செய்ராகளாம். எங்க பாட்டி காலத்துல இப்பிடிக் கொண்டாட்ட மெல் லாம் கெடையாதாம்.

மரியம்மா சடங்கானப்ப இப்பிடி எதுவுமே செய்யலன்னு பாட்டி சொல்லி வருத்தப்பட்டா.

“பேருக்கு எட்டுநாளு குச்சுலுக்குள்ள இருந்தா. ஒங்கம்ம ரெண்டுநாளு காச்சி ஊத்துனா. கைல இருவது ரூவாயும், ரெண்டு பிடி அரிசியுங் குடுத்தா. பெறகு ஏ மாமெ மக்க நாலு நாளு காச்சி ஊத்துச்சுக. அதுககிட்ட என்ன இருக்கு பாவம். முருங்கக் கீரையும், ரசமும், கருவாட்டுத் தண்ணியுங் கொண்டாந்து போட்டாளுக.”

“எதுக்கு பாட்டி மரியம்மாளுக்கு சடங்கு வைக்காம உட்டுட்டீங்க” ன்னு நாங் கேட்டேன்.

“சடங்கு வைக்குறதுன்னா சும்மாவா. கைல நாலு துட்டு இருந்தா எல்லாம் வைக்கலாம். எட்டாவது நாளே குச்சுலப் புடுங்கி சுட்டுட்டு வேலைக்குக் கெளம்பிட்டா. அம்ம போயி சேந்துட்டா. அப்பங்காரங் குடுச்சுக்கிட்டு, வப்பாட்டி வச்சுக்கிட்டு அலைரான். பிள்ளைகளப் பத்திக் கடுகளவு கவல இருக்குதா அவனுக்கு. அவெம் பூழலு நெறஞ்சா போதும்.”

“சரி. சடங்கானதுக்குப் பாட்டுப் படுச்சு கொலவ போடுவாகள்ள. அந்தப்பாட்டு ஒனக்குத் தெரியுமா பாட்டி.”

“கஞ்சிக்கத்துப் போயிக் கெடந்தாலும் பெயமக்க பாட்டு மட் டும் பெருசா படுச்சு கொலவ போட்டுருவாக” சொல்லிட்டு அந்தப் பாட்டப்படுச்சா பாட்டி.

வெள்ளிக் கெழமன்னைக்கு விடியாச் சாமத்துல
பொஸ்பவதி ஆயிருக்கா பெரியவுக சொன்னாக
தாயுந் தகப்பனும் சந்தோசப் பட்டாக
வருசயில மாமெம்மாரு வந்து எறங்குனாக-

சவுளிக் கடதொறந்து சருகப் பட்டெடுத்து
மாடிக் கடதொறந்து மனசுக்கேத்தப் பட்டெடுத்து
அடிமுந்திக் கரையிலயோ அன்னம் பதுச்சுருக்கும்

மேமுந்திக் கரையிலயோ மேகம் பதுச்சுருக்கும்-

ஆத்துல குளுச்சாலும் மலவாட தட்டுமுன்னு
கொளத்துல குளுச்சாலும் குளுர்வாட தட்டுமுன்னு
செங்கெணத்துத் தண்ணியில சேந்து தலமுழுகி
இலுப்பப் பூத் தொட்டியில இருந்து தலமுழுகி-

தங்கச் சினுக்குவலி தட்டித் தலையுணத்தி
வெள்ளிச் சினுக்குவலி வீசித் தலையுணத்தி
பொன்னுச் சினுக்குவலி போட்டுத் தலையுணத்தி
பொன்னான ஒருகொலவ போடுங்கடி பொம்பளைக-”

“நாலு வரிக்கொருக்கா கொலவ போடுவாளுக.” பாட்டி சொன்னா. “பாதகத்திமகா பொசுப்பவதி ஆகித்தான் என்ன பெரயோசனம். ஆளான அடுத்த வாரத்துலயே படுத்த படுக்கை ஆயிட்டா.”

குச்சுலுப் புடுங்கிச் சுட்டப்பெறகு கெணத்து வெட்டு வேலைல சம்பளம் ரொம்பாக் குடுக்காகன்னு மரியம்மா கெணத்து வேலைக்குப் போனா. எளவட்டங்க, கொமரி குட்டச்சிகதான் அந்த வேலைக்குப் போகமுடியும். கஸ்டமான வேலன்னாலும் ஏதோ கொஞ்சம் துட்டு உண்டெனாக் கெடச்சா வகுராறக் கஞ்சி குடிக்கலா முன்னு இந்த வேலைக்குப் போவாக.

கெணத்து வெட்டு வேலைல, ஆம்பளைக கெணத்துக்குள்ள எறங்கி நின்னு வெட்டி, சரளிக்கல்ல கூடைகள்ள அள்ளிஉட, பொம் பளைக கல்லுக்கூடையக் கீழருந்து தலைல வச்சுச் செமந்து கொண் டாந்து மேல கொட்டனும். கெணறு வெட்டுறது, வெடிவைக்கிறது, சம்மிட்டி அடிக்கிறது, எல்லாம் ஆம்பளைக வேல. அதுனால அவுகளுக்குச் சம்பளம் சாஸ்தி. பொம்பளைகளுக்கு எந்த வேலைக் குமே கொறச்ச சம்பளந்தான். ஒரே மாதிரி வேல செஞ்சாக் கூட கொறச்ச கூலிதான். வெறகுக் கட்லகூட ஆம்பள கெட்டுனா அஞ்சாறு ரூவா கூடத்தான். பொம்பளைக கெட்டயே ஆம்பள கொண்டு போயி வித்தம்னா அதுக்கு உண்டன வெலதான்.

ஒருநாளு அப்பிடித்தான் மரியம்மா கல்லுக்கூட தூக்கிக் கிட்டு மேல வரும்போது, கல்லுத்தடுக்கி, மேல இருந்து கூடை யோட கீழ உழுந்துட்டா. அம்புட்டு ஆழக் கெணத்துல உழுந்து அவா பொழச்சதே மறுபொழப்பு. தலைல அம்புட்டு அடி இல்ல. ஆனா ஒடம்புலருந்த எலும்புபூரா நொறுங்கிப் போச்சு. அந்தானிக்க ஓலப்பாய்ல அள்ளிச் சுத்திக்கிட்டு மாட்டுவண்டில வச்சு பக்கத்து ஊர்ல இருந்த கவுர்மெண்டு தர்மாஸ்பத்திரிக்குக் கொண்டு போயி

பெட்டுல சேத்துட்டாக.

வெசயத்தக் கேள்விப்பட்டு நாங்கள்ளாம் போனோம். எங்க பாட்டியும் வந்தா. பாத்துட்டு அழுகாத ஆளு பாக்கியில்ல. மரியம் மாவுக்கு மூஞ்சி மட்டுத்தான் தெருஞ்சது. கழுத்துல இருந்து காலு வரைக்கும் பூரா மாவுக்கெட்டுப் போட்டு அங்குட்டு இங்குட்டுப் பெரளக்கூட முடியாம கெடந்தா. அவா எந்துருச்சு நடமாட எப்பிடி யும் ஒரு வருசமாச்சும் ஆகும்னாக.

மரியம்மாளப் பாத்துட்டு வயக்காட்டுப் பாதையில பேசிக் கிட்டே நடந்து வந்தோம். “இப்பிடித்தான் ஒருபெய கலியாணம் முடுச்ச ரெண்டாவது வாரத்துல கெணத்து வேலைக்குப் போயி வெடி வைக்கும்போது, வெடில மாட்டிக்கிட்டுச் செத்துப் போனான். இன்னொரு பெய கமல போட்டு தண்ணி எறைக்கயில மாடுக மெரண்டு இவன இழுத்துக் கொண்டுபோயி கெணத்துல தள்ளி, செவத்துல மூஞ்சி அடியா அடுச்சுச் செத்துப்போனான்.”

“போன வருசங்கூட கடல போடப் போன பிள்ளைக ரெண்டு பேரு, ரெண்டுங் கொமரிப் பிள்ளைக, கடலப்பருப்புத் தின்னுட்டு வாந்தி எடுத்துச் செத்துப் போச்சுக.”

பாட்டி இப்பிடிச் சொல்லவும், “கடலப்பருப்பத் தின்னா செத்துப் போவாகளாக்கும்?” நாங் கேட்டேன்.

“வெறும் பருப்பத் தின்னாச் சாகமாட்டாக. வெதைக்கு வச்சிருக்க பருப்புல சம்சாரிக மருந்த கலந்து வச்சிருக்காக. இவளுக பருப்பத் தின்னுப் போடக்கூடாதுன்னு கண்ட மருந்தக் கலக்கி வச்சானுகளோ என்ன எழவோ. கலந்தவ முன்னக் கூட்டியே சொல்லியாவது வச்சிருக்கனும். இந்தப் பாதகத்தி மக்களும், மருந்து வாசத்தக் கண்டு திங்காமயாச்சும் இருந்துருக்கனும். வெறுவகுத்துல கஞ்சி தண்ணிக் குடிக்காம அந்தப் பருப்பத் தின்னுட்டு காட்லயே வாந்தி எடுத்துக்கிட்டு கெடந்துருக்காளுக. அங்ன ஒழவுக்குப் போன நம்மாளுகதான் பாத்து தூக்கியாந்து இதே ஆசுபத்திரில போட்டாக. அன்னைக்கு ரவைக்கே ரெண்டு பேருஞ் செத்துப் போயித் தூக்கிட்டு வந்து பெதச்சாக. தஞ்சாவு செத்தாலும் முழுசாக் கொண்டு போயிப் பெதைக்கலாம். ஆசுபத்திரிக்கு வந்த அன்னைக்கி மூள, கொல, ஈரலு எல்லாத்தையும் அறுத்து எடுத்துக்கிட்டு வெறுங் கொடல வச்சு தச்சு பாய்ல கெட்டிக் குடுப்பானாம்.”

வயக்காட்டு வழியா மூனு மைல் தூரம் பேசிக்கிட்டே நடந்து வந்தோம். திடீர்னு என்னமோ பயங்கரமா சத்தம் போட் டுச்சு. எனக்குன்னா கொலையெல்லாம் நடுங்குச்சு. பாட்டி சொன் னா எங்குட்டோ நரிக கெடந்து ஊளையிடுதுன்னு.

நாதியத்துப் போயி ஆசுபத்திரில கெடந்து கஸ்டப்பட்டு ஏழெட்டு மாசங் கழுச்சு மரியம்மா வீட்டுக்கு வந்தா.

கொஞ்சநாளு கழுச்சு வேல வெட்டிக்குப்போக ஆரம்பிச்சிட்டா. அவுக தங்கச்சி அன்னம்மாளும் வேலைக்குப் போனா. ரெண்டு பேருமாச் சேந்து களை எடுக்க, கதுரறுக்கப் போனாக. வேல கெடைக்காத நாள்ல மலங்காட்டுக்கு வெறகுக்குப் போயி வெறகு கொண்டாந்து வித்து கஞ்சி காச்சுனாக.

ஒருநாளு வெறகு பெறக்கிட்டு, வேனாப்பறந்த வெயில்ல வெறகுக் கெட்ட தூக்கிக்கிட்டு வந்துருக்கா மரியம்மா. கால்ல செருப்புகிருப்பு ஒன்னுமில்ல. ஓடக்காட்டு மணல்ல பொடிப் பொசுக்கிக் கெடக்கவும். அங்ன ஆலமரத்துல வெறகுக் கெட்ட ஊனிட்டு செத்தநேரம் எளப்பார ஒக்காந்துருக்கா. பக்கத்துல பம்புசெட்ல தண்ணி ஓடவும் போயி ரெண்டு வா தாகத்துக்குக் குடுச்சிட்டு வருவோம்ன்னு போயிருக்கா. அது அந்தய்யா கொமாரசாமியோட பிஞ்ச ரூமுக்குள்ள அவரு இருந்துருக்காரு. இவா பாட்டுக்குப் போயி தண்ணிக் குடுச்சிட்டு வரயில, கையப்புடுச்சு ரூமுக்குள்ள இழுத்துருக்காரு. இவா மெரண்டு போயி தப்புச்சோம் பொழைச்சோமுன்னு ஓடியாந்துருக்கா.

ஊருக்குள்ள வந்து அவா ஒட்ட பிள்ளைகிட்ட சொல்லவும், “மரியம்மா இத வெளிய சொல்லாம இருக்குறதுதான் ஒனக்கு நல்லது. நடந்தத சொல்லப்போனா ஒனியத்தான் அவுசாரி சாட்டு வாக. பேசாம வா. போயி நீ உட்டுட்டு வந்த வெறகுக்கெட்ட தூக்கி யாந்துருவோம். இனிமே ஒத்த சத்தைல வெறகுக் கெட்ட தூக்கி யாராத. அந்தப் பிஞ்சைக்காரங் கொழுத்த துட்டுக்காரன். மேகலக் குடி வேற. அவுகள நம்ம எதுக்க முடியுமா? அவுக பேச்சு எடுபடுமா நம்ம பேச்சு எடுபடுமா?” சொல்லிட்டு ஆளும்பேருமாப் போயி வெறகுக் கெட்டத் தூக்கியாந்து வித்துட்டு வீட்டுக்கு வந்துட்டாளுக.

இதுக்குள்ள நம்ம பேரு வெளிப்பட்டுருமோன்னு நெனச்சு, கொமாரசாமி ஐயா ஊருக்குள்ள வந்து நாட்டாம கிட்ட பொகாரு குடுத்துட்டுப் போயிட்டாரு.

“வெறகு வெட்டிக்குப் போற ஒங்க தெரு பிள்ளைக நடந்துக் குற மொற சரியில்ல. அங்குட்டு காடுகரப்பக்கமா வந்து ஒதுங்கு துங்க. நானும் நெடு நாளாப் பாத்துட்டு, இன்னைக்குத்தான் சொல் றேன். இன்னைக்குக்கூடப் பாருங்க அந்தப்பெய சமுத்திரக் கனி யோட மகா மரியம்மாவும், அந்த மூக்காயி பேரன் மாணிக்கமும் ரொம்ப அசிங்கமா நடந்தத எங்கண்ணால பாத்தேன். நாம்பாக்கப் போயி சரியாப்போச்சு, ஒங்ககிட்ட வந்து சொல்றேன். வேற யாரு கண்ணுலயாவது ஆப்பிட்டுருந்தா அம்புட்டுத்தான். அங்னக் குள்ளயே ஆலமரத்துல ரெண்டு பேரையும் கையுங்களவுமா புடுச்சு கெட்டி வச்சுட்டுத்தான் ஒங்களுக்குத் தகவல் குடுப்பாக.”

மரியம்மாளுக்குப் பெறகு மாணிக்கம் பெய வெறகு கொண்டுவாரத பாத்த சம்சாரி நாட்டாமகிட்ட ஒன்னுக்கு ரெண்டா பத்தவச்சு தாம் பேரக் காப்பாத்திக்கிட்டாரு.

“நாங்க இன்னைக்கு ரவைக்கே ஊர்க்கூட்டம் போட்டு வெசாரிக்கோம் ஐயா.” மொதலாளிக்கிட்ட சொன்ன நாட்டாம, சொன்னது கெணக்கா தண்டரா போட்டு ராத்திரி ஊர்க்கூட்டத்தக் கூட்டிட்டாரு.

ஊர்ச்சாவடிக்கு முன்னால ஆம்பளைக பூராங் கூடி ஒக்காந் துட்டாக. பொம்பளைக அங்கனங்ன சுத்தி நின்னு வேடிக்க பாத்தா ளுக. நாட்டாம ஆளனுப்புனாரு. சின்ன நாட்டாம, பெரிய நாட்டாம, ஊர்ல பெரிய ஆம்பளைக, எளவட்டங்க, சின்னப் பெயல்க கூட ஒக்காந்திருந்தானுக.

“எல்லாரும் அமேதியா இருக்கனும். இது நம்ம சாதி மானமே போற கேசு. பலசாதி மக்க இருக்குற ஊர்ல. நம்ம சாதில இருந்து இப்பிடி நடந்துக்கிட்டது பெரிய கேவலம். ஏற்கனவே பறையம்னா எல்லாருக்கும் ஒரு எளக்காரந்தான். அதுல இப்பிடி வேற. சின்ன நாட்டாம எல்லாத்தையும் வெளக்கமாச் சொல்வாரு. அவுக ரெண்டுபேரையும் இப்பிடி முன்னக்கு வரச்சொல்லுங்க.” சொல்லிட்டு சின்ன நாட்டாம செல்லக்கண்ணப் பாத்தாரு பெரிய நாட்டாம சீனியப்பன்.

பெரிய நாட்டாம பேசவும் கூட்டத்துல கப்சிப்புனு அமைதி. பொம்பளைகளும் அழுகுற பிள்ளைகள அடக்கி அமத்திக் கிட்டு என்னமோ ஏதோன்னு பாத்துக்கிட்டு நின்னாளுக. மரியம் மாளும், மாணிக்கமும் கூட்டத்துக்கு நடுவுல வந்து நின்னு நெடுஞ் சாங்கெடையா உழுந்து வணங்கிட்டு ஆளுக்கொரு பக்கமா போயி கைகெட்டி நின்னாக.

சின்ன நாட்டாம செல்லக்கண்ணுப் பேசத் தொடங்குனாரு. இதுக்குள்ள பொம்பளைக பக்கத்துல இருந்து சலசலப்பு வந்துச்சு. ஒவ்வொருத்தியும் எதுக்காக இந்தக் கூட்டமுன்னு தனக்குத் தெருஞ்சத மூக்கு முழி வச்சு மத்தவளுக்குச் சொல்லிக்கிட்டிருந்தா. ஒடனே ரெண்டு எளவட்டப் பெயல்க எந்துருச்சு வந்து, “ஒங்களுக்கு அறிவிருக்கா. ஆம்பளைக பேசுற எடத்துல வந்து என்னத்த ஊம்பு றீக. அம்புட்டுப் பேரும் வீட்டப்பாத்து ஓடிப்போ” ரெண்டு கெட்டவாத்தையும் போட்டு வஞ்சு பொம்பளைகள வெரட்டு னானுக. அவளுகளும் கொஞ்ச தூரம் ஓடுற மாறி ஓடிட்டு பெறகு கொஞ்ச நேரத்துல மறுவடியும் சுத்தி வந்து நின்னு வேடிக்க பாத்தாளுக.

“இன்னைக்குச் சாயந்திரம் நானும், இன்னும் ரெண்டு மூனு பேரும் மாங்கமண்டச் செட்டியாரு கடையில மாட்டுக்குப் புண்ணாக்கு வாங்கிக்கிட்டு பேசிக்கிட்டு இருந்தோம். கோடி வீட்டு மொதலாளி எனிய கூப்ட்டு, எனியயும் பெரிய நாட்டாமயயும் பாத்துப்பேசனம்னாரு. நானு அந்தாக்குல பெரிய நாட்டாமய ஆளு உட்டு கூப்ட்டு வந்தேன்.” சொல்லிட்டு சின்ன நாட்டாம அமைதியா கூட்டத்தப் பாத்தாரு. பெறகு தோள்ல கெடந்த துண்ட எடுத்து மூஞ்சியத் தொடச்சுட்டு மறுவடியும் துண்ட தோள்ல போட்டுட்டு, “இன்னைக்கு மலங்காட்டுக்கு வெறகு பெறக்கப் போன சமுத்திரக்கனியோட மகா மரியம்மாளும், கீழத்தெரு செல்லையா மகன், அதான் மூக்காயி பேரன் மாணிக்கமும் வெறகுக்கட்ட ஆலமரத்துல ஊனிட்டு பக்கத்துல இருந்த கொமாரசாமி மொதலாளியோட பம்பு செட்ல போயி ஒதுங்கிருக்காக. அன்னியாரம் பாத்து மொதலாளி அங்ன ஒரு சோலியா வந்தவரு பாத்துட்டாரு. மொதலாளியக் கண்டதும் கத்துச்சாங் கழுத எடுத்துச்சாம் ஓட்டம்னு ஓடியாந்துட்டாகளாம். கண்ணாரப் பாத்த ஐயாவே எங்ககிட்ட நேர்ல வந்து ஒப்புச்சுட்டுப் போறாரு. வேறொருத்தர்னா நடந்திருக்கதே வேற.” சின்ன நாட்டாம சொல்லி முடிக்கவும் கூட்டத்துல ஒருத்தருக்கொருத்தர் குசுகுசுன்னு பேசிக்கிட்டாக.

“ஒங்களுக்குள்ளயே பேசிக்கிட்டா எப்பிடி. மேக்கொண்டு என்ன செய்யலாம்னு சொல்லுங்க” பெரிய நாட்டாம சொன்னாரு.

“அவுக ரெண்டு பேரும் இந்த நிக்காகள்ள. அவுக கிட்டயே வெசாரிப்போம்.” கூட்டத்துல இருந்த கருப்பையா சொல்லவும்,

“வெசாரிக்கிறது என்ன வெசாரிக்கிறது. அதான் மொதலாளியே நேர்ல பாத்துட்டு வந்துதான சொன்னாரு. என்ன தெண்டம் போடலாம்னு சொல்லுங்க” கோவத்தோட சத்தமாச் சொன்னாரு மலையாண்டி.

ஒடனே கூட்டத்துல இருந்து நாலஞ்சு பேரு, “அதெப்படி, மொதலாளி சொல்லிட்டாப்ல ஆச்சா. இவுககிட்டயும் நாலு வாத்த கேட்டாத்தான் என்ன நடந்துச்சுன்னு தெரியும்” மொத்தமா கத்தவும்,

“சரி, சரி கூப்பாடு போடாதீக, இவுககிட்டயே கேட்ரலாம்” பெரிய நாட்டாம சொல்லிக் கூட்டத்த அடக்கிட்டு, “ஏலே மாணிக்கம் நீ என்னலே சொல்ற?” ரொம்ப அதட்டலா கேட்டாரு.

மாணிக்கம் கைகட்டி அடக்கமா நின்னுக்கிட்டு சொன்னான்ஃ “மொதலாளி சொன்னமாறி எதுவுமே நடக்கல. அந்தப்புள்ள எனக்கு முன்னாடியே வெறகுக் கெட்ட தூக்கியாந்துருச்சு. அங்ன மலங்காட்ல சும்மா டமாஸா பேசிக்கிட்டோம். அதுவும் எல்லாரும் இருக்கையிலதான். அவா எங்கத்த மகான்னுதான் அப்பிடி

கிண்டலடுச்சேன். வெறகுக் கெட்டத் தூக்கிட்டு வரும்போது நானு அவள எடவழில கூட எங்னயும் பாக்கல."

"ஏத்தா மரியம்மா, நீ என்ன சொல்ற?"

"அந்த மச்சான் சொல்றது நெசந்தாங்க. நாலு பேரோட வெறகு பெறக்கையில சும்மா கேலிக்கு ரெண்டு வாத்த சொன்னாக. நானு முன்னாலியே வந்துட்டேன். அவுக எப்ப வந்தாகன்னுகூட எனக்குத் தெரியாது" இன்னுங் கொஞ்சம் பேசுனா அழுதுரது மாதிரி மரியம்மா சொல்லி முடுச்சிட்டு சீலைய வச்சு மொகத்த தொடச் சிட்டு, தலைய கீழாம தொங்க உட்டபடி குனுஞ்சிட்ட இருந்தா.

"அப்ப மொதலாளி பாத்தது, சொன்னதெல்லாம் பொய்யா? மரியாதயா ஒத்துக்கிட்டு மன்னிப்புக் கேட்டா ஆச்சு. இல்லன்னா தெண்டம்போட வேண்டியதுதான்" பெரிய நாட்டாம ஓங்கிச் சொன் னாரு. பொம்பளைக கூட்டத்துல இருந்த காளியம்மா, " அந்தக்கா மரியம்மா எல்லாருக்கும் மின்னாடியே வெறகுக்கெட்ட தூக்கி யாந்துட்டா. எனக்கு வெறகுக்கெட்ட தூக்கி உட்டுட்டு ஏம்பின்னால தான் மச்சா மாணிக்கம் வந்தாக. எடையில எங்குட்டு கூடி இப்பிடி நடக்க முடியும். அநியாயம் இது. இந்த மொதலாளிக்கு எதுக்கு இம் புட்டு ராங்கி. வந்து புழுகிட்டு போயிருக்றாரு." தனக்குத் தானே மொணங்கிக்கிட்டு இருக்கும்போதே ஆம்பளைகள்ள நாலஞ்சு பேரு எந்துருச்சு, "இந்தப் பொட்டக் கழுதைகளெல்லாம் இப்ப எடத்த காலி பண்ணிட்டு போறீகளா மிதி வேணுமா. வெரட்ட வெரட்ட வந்து நின்னுக்கிட்டு மணியம் பண்ராளுக" சைட்டு மேனிக்கக் கத்தவும் பொம்பளைக அடங்கிப் போனாளுக.

சின்ன நாட்டாம மரியம்மா அவுகய்யன் சமுத்திரக்கனியக் கூப்பிட்டு, "இந்தா பாருப்பா சமுத்திரம், ஒம்மகள கால்ல உழுந்து மன்னிப்புக் கேக்கச் சொல்லு. ஊரு மன்னிச்சிட்டு பத்தோ, இருவதோ தெண்டம் போட்டு வழக்க முடிச்சுப் போடுவோம். இல்லன்னா பெருந்தொகையா தெண்டங்கெட்ட ஒனக்கு முடியுமா? சொல்லு."

சின்ன நாட்டாம சொன்னதக் கேட்ட சமுத்திரக்கனி மகாகிட்டத்துல போயி, "என்னத்தா, சொன்னது கேட்டுச்சுல்ல. கல்லுக்கெணக்கா எதுக்கு நிக்க? மன்னிப்புக்கேளு நாயே, ஒனியால நாம்பட்ட கேவலம் போதும்" சொல்லிட்டு மரியம்மாள கோவத் தோட பாத்தான்.

"நானு அப்பிடியெல்லாஞ் செய்யலய்யா, மொதலாளிதான் எடயில எங்கிட்ட தப்பா நடக்க மொயற்சி பன்னாரு. நானு தப்பிச்சு ஓடியாந்துட்டேன்" சொல்லிட்டுச் சத்தமா அழுதா.

ஒடனே கூட்டத்துல இருந்த ஆம்பளைங்க செலபேரு, “பாத்தியா, கண்டாரத்த கொள்ளு மகா தாந் தப்பிக்கனும்னு படார்னு மொதலாளி மேல தூக்கிப் போடுறத. இவாள்ளாம் முழுச்சுக்கிட்டு இருக்கைலயே முழியத் தோண்டிருவா.” இப்பிடி கத்திட்டு நாட்டாமயிட்ட, “இவள வெசாருச்சு பெரயோசனமில்ல மாமா. தெண்டம் எம்புட்டுன்னு தீர்மானம் பண்ணுங்க. அப்பத்தான் நாளபின்ன எவளும் இப்பிடி அவுசாரித்தனஞ் செய்ய மாட்டாளுக.” இப்பிடிச் சொல்லவும் பாதிப்பேருக்கு மேல இதுக்கு ஒத்துக் கிட்டாக.

இதுக்குமேல யாரும் சத்தம் போட்டு பேசல. பொம்பளைக பக்கத்துலருந்து கொஞ்சப் பேரு மொணங்கிக்கிட்டே இருந்தாங்க.

“அந்த மொதலாளிதான் மரியம்மாளக் கெடுக்கப் பாத்துருக் கான். இவா பயந்து போயி மாட்டமுன்னுட்டு ஓடியரவும் தேவிடியாப்பெய ஊருக்குள்ள வந்து வேற மாதிரி சொல்லிட்டுப் போயிட் டான். மசங்கவும் நானுந்தான் கூடப் போயி அவா உட்டுட்டு வந்த வெறகுக் கெட்ட தூக்கியாந்தோம்.” அனந்தம்மா இப்பிடிச் சொல்லவும்,

“இவனுககிட்ட என்னத்தப்பேச முடியுது. தெருஞ்ச நாயத்தக் கூட இவனுககிட்ட சொல்ல வழி இல்ல. ஊர்க்கூட்டத்துல நம்மள ஒக்கார உடமாட்டானுக. ஓரமா இங்ன ஒதுங்கி நிக்கக்கூட உடமாட் டேங்கானுக. இவனுக வீரத்த நம்ம கிட்டத்தான் காட்டுவானுக. போயி அந்த மொதலாளிமார்ட்ட காட்டச்சொல்லு பாக்கேன். வாயையும் சூத்தையும் பொத்திக்கிட்டு அலைவானுக அங்க” அந்த மதினி சூசையம்மா சொல்லிட்டு வெசனப்பட்டா.

இதக் கேட்டுக்கிட்டுருந்த முத்தம்மா சொன்னா, “ஒனக்கு அனேகந் தெரியும். இவுகப்பனே வப்பாட்டி வச்சுக்கிட்டு அலை ரான். இவா மட்டும் என்ன. லண்டியாத்தான் இருப்பா. போன வாரம் எள்ளுக்கள எடுக்கைல ஏங்கிட்ட அப்பிடி மல்லுக்கு நிக்கா. இவா செஞ்சுருப்பா.”

“அவுகய்யன் வப்பாட்டி வச்சுருக்கது ஊரறுஞ்ச வெசயம். நேத்துப் பெறந்த பிள்ளைக்குக் கூடத் தெரியும். அத எவனாவது ஊர்க் கூட்டத்துக்குக் கொண்டாந்து வெசாரிக்கானா. சொல்லப் போனா, அவெ ஆம்பள, சகதி கண்ட லெக்குல மிதிப்பான், தண்ணி கண்ட லெக்குல கழுவுவான்னு சொல்றானுக. ஆம்பளைக்குன்னா ஒரு நாயம், பொம்பளைக்குன்னா ஒரு நாயம்,” இப்பிடி அவளுகளுக்குள்ளயே வாக்குவாதஞ் செஞ்சுக்கிட்டு இருந்தாளுக. அன்னியாரம் ஆம்பளைகள்ள கொஞ்சப் பேரு வந்து பொம்பளை களப் பூராவஞ்சு தோள்ல போட்டுருந்த துண்ட வச்சு அடுச்சு வெரட்டி உட்டானுக.

மரியம்மா அவுகய்யன், "இப்பிடிக் குத்துக்கல்லு மாதிரி நின்னு என்ன பெரயோசனம். இந்தப்புத்தி மொதல்ல இருந்துருக் கனும். சட்டுன்னு உழுந்து மன்னிப்புக் கேளு" சொல்லிட்டு கிட்டத் துலயே நின்னான்.

மரியம்மா ஒணர்ச்சியெல்லாம் செத்துப்போனவ மாதிரி நின்னுக்கிட்டே இருந்தா. ஒன்னும் பேசல.

அவுங்கய்யனுக்கு கோவம் வந்து பளார் பளார்னு அறஞ்சு போட்டான். அப்பயும் மரியம்மா வெளுமுத்தி புடுச்சிப் போயி நின்னுக்கிட்டு அழுதா. ஒன்னுஞ்சொல்லல.

"மொளைக்காமுட்டு பொம்பள எத்தன தடவ சொல்லியும் எப்பிடி நிக்கான்னு பாரு."

"செய்யுரதயுஞ் செஞ்சுப்போட்டு இம்புட்டு ஆம்பளைக சொல்லியும் நிக்கரதப் பாரு, ஒரு மருவாத வேண்டாம்."

இதுக்கெடையில ஒருத்தி "இந்தப் புள்ளையப் போட்டு இந்தப்பாடு படுத்துரான்களே. அந்தப்பய்யன் மாணிக்கத்த அடிக்கானுகளான்னு பாரு. சரி அந்த மொதலாளி எதுவும் தப்புத் தண்டரா செஞ்சாரான்னு கேப்பமுன்னு ஒரு பெயலுக்கும் புத்தி வர மாட்டேங்கே" சொல்லி முடிக்க முன்னாலயே பக்கத்துல நின்ன சின்னத்தாயி "நல்லா இருக்கு ஓங்கத. மேச்சாதிக்காரங்கிட்ட இவனுக போயி கேக்க அவந்துட்டுக்காரன் பறப்பெயலுகளுக்கு இம்புட்டுத் திமுரான்னு அவனுக சண்டைக்கு வர, நம்மளால தாக்குப் புடிக்க முடியுமா? அவனே தப்புச் செஞ்சிருந்தாலும் கமுக்கமா வச்சுட்டு இவுகளுக்கு அம்பதோ நூறோ தெண்டத்தப் போட்டு முடிக்கறத உட்டுட்டு நீ ஊருக்குள்ள கலகத்த உண்டாக்குவ பொருக்கோ, முன்னால அப்பிடித்தான் சுடுகாட்டுச் சண்டையில மேச்சாதிக்காரனுக போலீசுகாரனுகள உட்டு நம்மள அடுச்சு நொறுக்குனது நெனப்புல இருக்கா," சொல்லி முடிக்கவும், "அதுவுஞ் சரித்தான். நாலையும் யோசிச்சுத்தான் செய்யனும். நம்ப ஆம்பளைக அதெல்லாம் தெரியாமலா செய்வாக," சீனியம்மா சொல்லி முடுச்சா. நாட்டாம பேசத் தொடங்குனாரு.

ஒடனே பாலுக்குடுச்சுட்டு அழுத பச்சப் புள்ளய அரட்டி, "சும்மா இரு பெயமகளே கூட்டத்துல பேசுரத கேக்கட்டும்," சொல்லிட்டு, "எனக்கு வெவரந்தெரிய இப்பிடி அவுசாரி கேசு இப்பத்தான் ஊருக் கூட்டத்துக்குன்னு வந்துருக்கு. காடு கரைகள்ள சம்சாரிமாருக எம்புட்டெம்புட்டோ அக்ரமம் செய்றாக. அதெல்லாம் நாம நாயங் கேட்டுப் பேசமுடியுமா. நாளப்பின்ன வேலவெட்டிக்கு அவுககிட்டதான போகனும்." நின்னுக்கிட்டே பிள்ளய அமத்துனா சவரியம்மா.

மரியம்மாள மறுவடியும் அவுகய்யன் அடிக்க வர பயந்து

போயி கால்ல உழுந்து மன்னிப்புக் கேட்டா. மாணிக்கத்த யாரும் கால்ல உழச் சொல்லல. பெறகு மரியம்மாளுக்கு எரனூறு ரூவாயும், மாணிக்கத்துக்கு நூறு ரூவாயும் தெண்டம் போட்டாக.

"பொட்டச்சிதான் அடங்கி ஒடுங்கி இருந்துருக்கனும். ஆம்பள ஆயிரஞ் செய்வான். இவாள்ள வகுத்துல வாய்ல வந்து ரும்னு யோசிக்கனும்" நாட்டாம சொல்லி முடுச்சாரு.

மாணிக்கத்தோட அய்யா அம்பது ரூவாயக்கெட்டிட்டு மீதி அம்பது ரூவாய்க்கு ஒரு பித்தாளக் குத்துச்சட்டிய கொண்டாந்து வச்சாரு. மீதி ரூவாயக் குடுத்துட்டு குத்துச் சட்டிய வாங்கிட்டுப் போகலாம். கைவசம் ரூவா இல்லைனா இப்பிடித்தாஞ் செய்வாக.

மரியம்மா பாவம் இப்பத்தான் கெணத்து வேலைல கீழ உழுந்து பிட்டாணி போயி ஆசுபத்திரில இருந்து வந்துருக்கா. கைல காத்துட்டு இல்ல. அவுகய்யன் எளய மகா அன்னம்மாட்ட சொல்லி வீட்ல இருந்த சருவப்பான, கொடம் ரெண்டயும் தூக்கியாரச் சொன்னான். அது ரெண்டயும் நாட்டாம கிட்ட குடுத்தான்.

பெறகு எல்லாம் வீடுகளுக்குக் கலஞ்சு போனாக. போம் போதே நடுத்தெரு ஆரோக்கியம் சொன்னா, "இப்பிடி அநியாயத் தெண்டம் வாங்குரானுகளே. போன வாரத்துல ஒம்பேத்தியா பரலோகம் மாட்டுக்குப் புல்லுக்குப் போனவள புல்லுக்கெட்டத் தூக்கி உடுறமுன்னுட்டு வந்து தூக்கி உட்டுட்டு அப்பிடியே மொல ரெண்டையும் புடுச்சி கசக்கி இருக்கான் அந்தக் காட்டுக்காரப் பெய. மொதலாளியோட மகனாம். படுச்சவனாம். அந்தப்பிள்ள ஏங்கிட்டச் சொல்லிக்கிட்டு அழுதுச்சு. ஆனா அத வெளிய சொல்லி யிருந்தம்னு வச்சுக்கோ. ஒம்பேத்தியாதான் அவுசாரின்னுட்டு தெண்டம் போடுவானுக. ஆம்பள என்ன செஞ்சாலும் அது பொம்பளைக மேலதான் வந்து விடியும்."

எங்க பாட்டிக்கு ஒரே கோவம். பொழுதெனிக்கும் மரியம் மாட்ட, "அந்தப்பெய ஒனிய ரூமுக்கு இழுத்துட்டுப் போம்போதே அவெஞ் சாமானத்துல பாத்து நாலு மிதி மிதுச்சுருக்கக் கூடாது? அநியாயமா கூட்டத்துக்குப் போயி அவப்பேரு வாங்கி தெண்டமுங் கெட்டியாச்சு. இனி எப்ப ரூவா சேத்து அந்தப் பானையுங் கொடத்தையும் திருப்புரது. சரி உட்டுத்தள்ளு. பானைல சோறு இருந்தா பறையங் கண்ணு தூங்காதுங்ற கணக்குல ஒங்கய்யனுக்கு அந்தப் பானையுங் கொடமுந்தான உறுத்திக்கிட்டு இருந்துச்சு. எப்படா அதவித்துட்டுப் போயி சாராயக்கட மாரியப்பங் கைல குடுப்போம்னு அலஞ்சான். இப்ப என்ன செய்வான். சரிபோயி படுத்து ஒறங்குத்தா" ன்னுட்டு பாட்டி போயிட்டா.

அன்னைக்கு ராத்திரிப்பூரா மரியம்மாளுக்கு ஒறக்கமே

வல்ல. இந்தானிக்கக் கவுரப் போட்டுத் தூக்குல தொங்கிட்டாக்கூட நல்லதுன்னு நெனச்சா. ஒக்காந்து அழுதுக்கிட்டே இருந்தா. அவா தங்கச்சி அன்னம்மா, “அழுகாதக்கா. பேசாம படுத்து ஒறங்கு” ன்னு ஆறுதல் சொன்னா. கடேசித் தங்கச்சி செயக்கொடியா ஒறக்கத்துல எழுந்துருச்சு அழுகவும் அவளத்தட்டி தூங்கவச்சிட்டு மரியம்மா படுத்தா. படுத்துக்கிட்டே அழுதா.

# மூன்று

மரியம்மா ஊர்க்கூட்டத்துல நின்னு கேவலப்பட்டத என்னால மறக்கவே முடியல. அவள நெனைக்க நெனைக்க ரொம்பப் பாவமா இருந்துச்சு. ஒரு திக்கம் பாவமா இருந்தாலும் இன்னொரு திக்கம் ரொம்பக் கோவமாவும் வந்துச்சு. அன்னைக்கு மட்டும் அவாகூட வெறகுக்குப்போன பொம்பளைகள ஊர்க் கூட்டத்துல பேச உட்டுருந்தா, நெசமும் பொய்யும் வெளிப்பட்டுப் போயிருக்குமே. எதுக்குப் பொம்பளைகள இப்பிடி எல்லா எடத்துலயும் ஒதுக்கியே வைக்காகன்னு ஏம் மனசு கொடஞ்சுக்கிட்டே கெடக்குது.

பாட்டி பல லெக்குல பேறுகாலம் பாத்துக்கிட்டு, கொத் தச்சி வேல செய்றதுனால பெரிய மனுசிமாதித்தானே இருக்கா. அவா போயி கூட்டத்துல பேசி இருக்கலாமுல்ல. கொமரி குட்டச்சிகளத்தான் உடமாட்டாக. இப்பிடி எனக்குள்ளயே நெனச்சுக்கிட்டு எங்க பாட்டிக்கிட்ட, "எம்பாட்டி, நீ ஊர்ல பெரிய மனுசிதான; நீ போயி அன்னைக்கு ஊர்க்கூட்டத்துல உண்மய சொல்லி இருக்கலாமல்ல" நானு இப்பிடி கேக்கவும், இரும்பு ஒரலுக்குள்ள வெத்தலயத் திணுச்சு ஒலக்கையிட்டு இடுச்சுக்கிட்டே பாட்டி சொன்னா, "நீ வெளாட்டுப்பாக்குல பேசுற. பெரிய மனுசியாவது சின்ன மனுசியாவது. பொட்டச்சியா பெறந்தன் னைக்கு நம்ம நாலு ஆம்பளைக கூடுற லெக்குல போயி நிக்க முடி யுமா? நிக்கலாமா அப்பிடி? நாங்கொமரியா இருக்கையில கூட்டமுன்னு ஊர் சாட்டுனா, நாங்கள்ளாம் கஞ்சி தண்ணியக் குடுச்சுட்டு வீட்டுகள்ளதான் இருப்போம். இப்பப் பாரு, கொமரி குட்டச்சியெல்லாம் போயி வேடிக்க பாக்காளுக. அதான வெரட்டுப்பட்டு ஓடுனாளுக. நமக்கென்ன தெரியும். ஆம்புளைக பாத்து சொல்றதுதான் சரின்னு ஒங்க பாட்டம் பூட்டங்காலத் துலருந்தே இருக்கு. நீ என்னமோ நாலெழுத்து படிச்சுட்டாப்ல எல்லாம் மாறுமுன்னு கெனாக் கண்டுக்கிட்டு கெடக்காத."

"அப்ப ஆம்பளைக என்ன சொன்னாலும் சரியாப் போயிருமா பாட்டி. பொம்பளைக என்ன சொன்னாலும் தப்புத் தானாக்கும்?" மனசு கெடந்து அரிக்கவும் இப்பிடி கேட்டேன்.

சரின்னாலும், தப்புன்னாலும் பொம்பளைக வாயத் தொறந்து பேசக்கூடாது. ஒனக்குச் சரின்னு பட்டதச் சொல்லிப்பாரு, ஒதையும் அடியும் மிதியும்தான் கிடைக்கும். இங்க மட்டுமல்ல ஒலகம் பூராம் இப்பிடித்தான். பொம்பளைக்குன்னு ஒரு அந்தஸ்து கெடையாது." சொல்லி முடிச்சுட்டு இடுச்ச வெத்தலய வளுச்சு எடுத்து வாயுல போட்டு மக்குமக்குன்னு ரெண்டு தடவ மென்னுட்டு ஒதப்பிக்கிட்டா.

"ஒலகம் பூராம் போயி பாத்துட்டு வந்த மாதிரி சொல்றா பாரு" இப்பிடி மனசுக்குள்ள நெனச்சாலும் பாட்டிகிட்ட சொல்லல. அவா வாயில போட்ட வெத்தலயில கொஞ்சம் நா வாங்கி மென்னுகிட்டே, "எங்கள எப்பப்பாத்தாலும் நீங்கதான மட்டந் தட்டியே வக்கீக. சின்னப்பிள்ளைல இருந்தே பெயல்கனா ஒரு மாதிரி, பொட்டச்சின்னா ஒரு மாதிரித்தான நடத்துரீக. இப்பிடி ஒரு கண்ணுல வெண்ணெயும் ஒரு கண்ணுல சுண்ணாம்பையும் வக்கிரதே நீங்கதான," நானு இப்பிடிச் சொல்லவும் பாட்டி ரொம்ப வெரசா வெத்தல எச்சிய துப்பிட்டு கேட்டா. "அட பாதகத்தி மகளே, என்ன மெல்லாங் கேக்கான்னு பாரு. ஒனக்கென்ன வகுத்துக்குக் கஞ்சி தண்ணி ஊத்தாம பட்டினியாவா போட்டாக. இப்பிடிக் கேக்க?"

"கஞ்சி தண்ணிக்குச் சொல்லல, பெயல்க மாதிரி நாங்க இருக்க முடியுதா? நாங்க சத்தமா பேசக்கூடாது, சிரிக்கக்கூடாது, ஒறங்கைல கூட மல்லாந்து படுக்கக்கூடாது, குப்புறப்படுக்கக் கூடாது, குனுஞ்ச தல நிமுராம காலு பெருவெரலப் பாத்துக்கிட்டே தான் நடக்கணும், இப்பிடி கண்டத களியதச் சொல்லிக் கட்டுப் படுத்தரீக. வகுறு பசுச்சா கூட நம்ம மொதல்ல சாப்பிடக்கூடாது. வீட்ல ஆம்பளைக சாப்பிட்டுப் போனப்பெறகுதான் பொம்பளைக சாப்டனும். என்ன பாட்டி நாம என்ன மனுசங்க இல்லியா?"

"இன்னைக்கு நேத்தைக்கா இப்பிடி இருக்குன்னு நெனைக்க. பொஸ்தகத்துல கூட இதெல்லாம் போட்டுருக்காமுல்ல. நீ படிக்கல?" பாட்டி ஏங்கிட்டயே திருப்பிக் கேட்டா.

"என்ன போட்டுருக்கு ? நீ என்னமோ படுச்ச மாதிரி சொல்ற."

"எனியத்தான் படிக்க வைக்க நாதியில்லியே. அந்தக் காலத் துல பொம்பளைக அவ்வளவா பள்ளிக்கொடம் போமாட்டாளுக. ஒங்கம்மய படிக்க வைக்கனும்னு அப்ப வந்த வெள்ளக்காரத் தாயா ருக அம்புட்டு மொயற்சி பண்ணுனாக. நோட்டு பொஸ்தக மெல்லாம் ஓசில தந்து, மதியம் கஞ்சியும் ஊத்திப் படிக்க வச்சாக.

பெயமகா அஞ்சாங்கௌாசுக்கு மேல போமாட்டேன்னுட்டா.”

“சரி புஸ்தகத்துல என்னமோ போட்டுருக்குன்னு சொன்ன,” நானு ஞாபகப்படுத்தவும்,

“ஆமா, அதான் யாரோ திருவள்ளுவரு பொண்டாட்டி யாமுல்ல, புருசனச் சாப்பிட வச்சுட்டு பக்கத்துல இருந்து கீழ உளுகுற சோத்துப் பருக்கைய ஊசில குத்தி எடுத்து கழுவுமாமுல்ல. ரொம்ப நொரநாட்டியம் புடுச்ச அம்மாவா இருக்கும் பொருக்கோ. அதக் கையிட்ட எடுத்துப் போட்டா என்னவாம். அப்ப இருந்தே ஆம்பளைக சாப்டப் பெறகுதான் பொம்பளைக சாப்டுருக்காக.

“சரி, இத மாத்தி, பொம்பளைக மொதல்ல சாப்டா என்ன தப்பு?” “என்ன தப்பா? சாப்டா அவா மேலத்தெரு அனந்தம்மா அடிப்பட்டுக் கெடந்த மாதிரி கெடக்க வேண்டியதுதான். இந்தப் பிள்ளக்காடு ஒரு பாட்டு படுச்சுட்டுத் திரியுதுகளே கேட்டீயா

நண்டே நண்டே சிறு சிங்கார நண்டே
நா நாட்ட வயலெல்லாம் தொளச்ச நண்டே
காலுவேற கப்புவேற பிச்சுல போட்டேன்
ஒண்ணாங் கொதிப்புல எறக்கில வச்சேன்.
வருவா வருவாமுன்னு வச்சுல பாத்தேன்
வார சமயம் பாத்து தின்னுல போட்டேன்
ஆனச்சட்டி நக்கிப்பெய அடிக்கவுல வாரான்
குண்டுச்சட்டி நக்கிப்பெய கொல்லவுல வாரான்
எனிய அடுச்சான், பிள்ளைய அடுச்சான்,
வகுத்துக் குட்டிய நொறுங்க அடுச்சான்
காலு மிஞ்சி களர அடுச்சான்
கைவளையல் நொறுங்க அடுச்சான்.

வகுத்துப் பிள்ளக்காரின்னு கூட பாக்காமெ அப்பிடி அடுச்சானாம் புருசக்காரன், வயக்காட்ல நண்டு புடுச்சாந்து கொழம்பு வச்சுட்டு, புருசஞ் சாப்பிடுறதுக்கு முன்னாடி சாப்டதுக் குத்தான் இம்புட்டு இம்ச. நீ ஒம்பாட்டுக்குப் பேசுற” பாட்டி சொல் லிட்டு எந்துருச்சுப் போயிட்டா.

பாட்டி சொல்றது நெசந்தான். பொம்பளைக கொஞ்சம் வேற மாதிரி எதார்த்தமா நடந்துட்டால் எல்லாரும் வையத்தான் செய்றாக.

வெளாட்டுக்கு அம்மா அப்பான்னு வெளாடும் போதுகூட மண்ணுச் சோறாக்கி பெயல்களுக்குத்தான் மொதல்ல போட்டு வப்போம். “என்னடி சோறாக்கியிருக்க உப்புமில்ல ஒன்னுமில்ல.”

சொல்லிக்கிட்டு முடியப்புடுச்சு அடிப்பானுக. அப்பெல்லாம் அந்தப் பொய்யடிகள வாங்கிட்டு அதுதான் சொகமின்னு நெனச்சோம். அதுவே இப்ப நெறய்யப் பேத்துக்கு மெய்யடியாப் போயி வாழ்க்கையே நரகமாகிப் போச்சு.

பெறந்ததுல இருந்தே இப்பிடித்தான் இருக்கு. ஒருநா அப்பிடித்தான் நாங்கள்ளாம் தாயம் வெளாண்டுட்டு இருக்கோம். அப்ப கீழத்தெரு மூக்கம்மா வந்து சொல்றா. “ஏ மதினி லூர்து, ஒனக்கு இத்தினியாச்சும் அறிவு இருக்கா, அங்க ஒம் மகன் தொட்டிச் சீலைல மோண்டுட்டு காகமா கத்திக்கிட்டு கெடக்கான். நீ இங்க தாயமா போட்டுக்கிட்டு இருக்க. பொட்டச் சிறுக்கின்னாக் கூட அழுகட்டும்னு உடலாம். ஆம்பளப்பயல இப்பிடி அழுகப் போட்டுட்டு வந்துருக்கியே.”

மூக்கம்மா சொன்னதும் வெளாட்ட உட்டுட்டு ஓடுனா லூர்து. நானு அப்பயே கேட்டேன்.

“ஆம்பளப் பெயல்னா அழுக உடக்கூடாது, பொம்பளப் பிள்ளன்னா கத்த உடலாமாக்கும்.”

“ஆமா, நாளப்பின்ன தவுச்ச வாய்க்கு அவந்தான தண்ணி ஊத்துவான். பொம்பளய வளத்து எவங்கைலயாவது புடுச்சுக் குடுக்கனும். அவளா நம்மள கவனிக்கப் போறா?”

இப்பிடி வெள்ளக்கண்ணு பெரியம்மா சொல்லவும் “இந்த காலத்துல பொட்டச்சியும் கவனிக்கமாட்டா. பெயல்களும் கவனிக்க மாட்டானுக. நம்ம ஒழச்சா நமக்கு கஞ்சி; இல்லன்னா இல்ல. நம்ம கைகாலு தெடமா இருக்கையிலயே கடவுள் நம்மள எடுத்துக்குரனும்” சப்பாணி சொல்லவும் எல்லாரும் எந்துருச்ச போயிட்டோம்.

காரு ஓட்டி வெளாடும்போது கயத்துல மொதல்லயுங் கடைசிலயும் பெயல்கதான் டிரைவரு, கண்டக்டரா இருந்துக்குட்டு பொம்பளப் பிள்ளைகள எடையில உட்டுக்குட்டு அதட்டுவானுக. புருசம் பொண்டாட்டி வெளாட்டுல கூட அவனுகதான் போலீசு, கடமொதலாளி இப்பிடி இருந்துகுட்டு அதிகாரம் பண்ணுவானுக.

வீட்டுகள்ள இப்பிடீன்னா கோயில்ல அதுக்கு மேலதான். நாங்க ஏழு, எட்டு படிக்கும்போது நானு, ஜெயாப்பிள்ள, நிருமலா, சந்துரா, சீனியம்மா இப்பிடி நாங்க எல்லாரும் எப்பிடியாச்சும் ஒரு தடவயாச்சும் கோயிலுசக்கிரிஸ்துக்குள்ள என்ன இருக்குண்டு போயி எட்டிப்பாத்துட்டு யாரு கண்ணுலயும் அம்புடாம ஓடியாந்துரனும்னு நெனப்போம். ஆனா ஒருநா ஒரு பொழுது அதுக்குள்ள போமுடியல. நேத்துப் பெறந்த இத்தினிக்கானு பெயகூட விருட்டு விருட்டுன்னு உள்ள போவானுக. ஒரு திக்கமா போயிட்டு

மறுதிக்கமா வருவானுக. எங்கள உடவே மாட்டேங்காக. அது என்ன எழவுக்கோ, பொம்பளைகன்னா எதுலயும் சேக்கமாட் டேங்காக.

ஊர்ல ஏதாவது திருநாளைக்கு நாடகங் கீடகம் போட்டா கன்னா அதுல பொம்பளைகளச் சேக்கவே மாட்டாக. ஆம்பளைக பொம்பள வேசம் போட்டு நடிச்சாலும் நடிப்பானுகளே தவுர பொம்பளைய நாடகத்துல எடுக்க மாட்டாக.

ஒரு தடவ அப்பிடித்தான் ஒரு நாடகம் போட்டாக. கூட்டம் னா கூட்டம் அப்பிடியொரு கூட்டம். நாடகந் தொடங்க முன்னாடி ஏழெட்டுப் பேரு மேடைல வந்து கண்டமானிக்கப் பேசிக்கிட்டே இருந்தாக. நாடகத்தப் பாக்கக் காத்துக் கெடந்த பொம்பளைகளுக் குனா சீன்னு போச்சு.

“மானாவாரிக்க இப்பிடி வந்து எல்லாப் பெயலும் பேசிக் கிட்டே இருந்தா நாடகத்த எப்பப் போடுறதாம். இவனுக நாடகத்த முடுச்சாத்தான மருதயில இருந்து கொண்டாந்த ரெக்காடு டான்சு காரிகள ஆட உட முடியும்” தெக்குத்தெரு சேசம்மா சொன்னா.

“நாடகத்துல சேசுபாலன் வாராராம் மதினி. அதுக்குச் செவப்பா இருக்குர பிள்ளையத் தேடிட்டு அலைராகளாம். அதான் இம்புட்டுத் நேரமாகுது” மோச்சமேரி பதிலுக்குச் சொன்னா.

“ஏம் மச்சா மகா பேத்தியா செவேர்னுதான இருக்கா. அவளக்கொண்டு போலாமுல்ல” கன்னிமரியா சொல்லி முடிக்கவும் “ஒனக்கு ஏதாச்சும் அறிவு கிறிவு இருக்கா? சேசுபாலனுக்குப் போயி பொம்பளப் பிள்ளய வைக்கச் சொல்றியே” மொழக்கி நீட்டுனா மேலத்தெரு பாக்கியம்.

“யே, இவா சொல்றதப்பாரு. என்ன சேசுபாலன முண்டக்கட்டையாவா வைக்கப் போறாக. சட்டயப் போட்டு மறச்சட்டு, துண்டவச்சுத் தூக்கிக்கிட்டா பொம்பளன்னா தெரியப் போகுது. நல்லாச் சொன்னா பாதகத்தி” சிருச்சுக்கிட்டே அந்தக்கா அமலோற்பவம் சொல்லவும்,

“ஆமாண்டி, அதுவுஞ்சரிதான், போயி சட்டுன்னு சொல்லிட்டுவா. நாடகத்தையாவது வெள்ளெனத் தொடங்குவானக” பாக்கியம் சொல்லி முடிக்கவும் பக்கத்துல இருந்த அந்தோனி யம்மா, “தேவமாதாவா நடிக்கதுக்க செவத்த தொலிருக்குற பெயல் களைத் தேடிட்டு இருக்காக நீ போறியா பெரீம?” பாக்கியத்தப் பாத்து கேக்கவும் பாக்கியம், “ஒனக்கு எம்புட்டு ராங்கின்னா இப்பிடிக் கேப்ப, ஒங்கம்மயப் போச்சொல்லு தேவிடியாகொள்ளு. எம்புட்டு ரப்புல பேசுரான்னு பாரு கோவமா பேசுனா.

ஆம்பளப் பெயங் கெடைக்காட்டி செவப்பா இருக்குற பொம்பளைய மாதாவாப் போடலாமுல்ல. அந்த வாத்தியாரு மகா செவப்பாத்தான இருக்கா. அவளச் சோடிச்ச பிள்ளையுங் கைல குடுத்தா லூர்துமாதா கெணக்கா நல்லா இருப்பா"பாத்திமாப் பிள்ள சொன்னா.

"அப்பிடிச் சொல்லிப் பாத்துட்டாக. மாட்டேம்கானுங்க. இத்தனைக்கும் அங்கே நிமுசச் சீனுதானாம். அதுக்குக்கூட பொம் பளைய போடமாட்டேங்காளுக" பொம்பளைக இப்பிடிப் பேசிக் கிட்டு இருக்கைல வடக்குத்தெரு பெய தோமாசுன்னு ஒருத்தன மாதாவா சோடுச்சு பிள்ளையுங் கைல குடுத்து நாடகம் ஆரம்பிச்சாக. வேற வழி இல்லாம சேசுபாலனுக்குப் பொம்பளப் பிள்ளைய வச்சுக்கிட்டாக. மேடைல போட்ட லைட்டுக்கும் அதுக்கும், கூட்டத்தப் பாத்துட்டு சேசுபாலன் பொழுதெனிக்கும் அழுது கூப்பாடு போட்டுருச்சு. பெறகு ஒரு வழியா நாடகத்த தொயந்து நடிச்சாக.

"எடையிலயே கரண்டு போச்சு. ஒடனே பாக்கியம் சத்தமா, ஒருத்தன் மாத்தி ஒருத்தன் எசலிப்புல பேசுனான்க. அதான் அந்தச் சின்னயா வீட்டுக் கரண்டும் காலியாப் போச்சு. இனி என்ன செய் வானுக. வேறயொரு வீட்லருந்தாச்சும் கரண்டு இழுக்கச்சொல்லுங் கத்தா" சொல்லிட்டு தலய வரட்டு வரட்டுன்ன சொருஞ்சு கிட்டு கொட்டாவி உட்டா , இதக் கேட்டுட்டு அம்புட்டுப் பேரும் சிரிச்சாக.

"அட எடுவட்ட பெயமக்கா. என்னத்துக்குச் சிரிப்பாணி அள்ளது. சட்டுன்னு முடுச்சுட்டுப் படுக்க வேண்டாமா தேவடியாப் பெயமக்கா."

"ஏ பாட்டி, ஒரு வீட்ல கரண்டு போனா, எல்லா வீட்லயும் போயிரும். இதென்ன சீமெத்தண்ணியா, காலியா போறதுக்கு" சொல்லிட்டுச் சிருச்சா கொழந்தையம்மா.

"அது என்ன எதுவோ நம்மளுக்கென்ன தெரியுது" சலுச்சுக்கிட்டா பாக்கியம். இந்த பாக்கியம் பதினேழு பிள்ளைகப் பெத்தவா. பதினோரு பிள்ளைக செத்துப் போச்சு. இப்ப இருக்குறது ஆறே மக்க. இவாதான் ஒருநாளு கோயில்ல பூச நேரத்துல எல்லா ரையுஞ் சிரிக்க வச்சா.

வழக்கமா, நாயித்துக் கெழமப் பூசைல பொம்பளைக காணிக்க கொண்டு போயி சாமியாருக்குக் குடுப்பாக. அந்தந்த சீசனுக்குத்தக்கன நெல்லு, சோளம், கேப்ப, பயறுபச்சைக, எள்ளு, மொச்சிக்கா இப்பிடி காடுகரைகள்ள கெடைக்கிற தானிய தவசத்த பெட்டில போட்டுத் தூக்கிட்டுப் போயி குடுத்துட்டு சாமியார்ட்ட

இருந்து ஆசீர்வாதம் வாங்கிட்டு வருவாளுக. இப்பிடிக் காணிக்க தூக்கிட்டு பொம்பளைகதான் போவாளுக. ஆம்பளைக பொட்டியத் தூக்கிட்டு கோயில் நடுவுல நடந்து போனத நானு பாத்ததே இல்ல.

அப்பிடித்தான் அன்னைக்கு பொம்பளைக வருசையா பொட்டிகளத் தூக்கிக்கிட்டு பக்திப் பரவசத்தோட தயங்கித் தயங்கி நடந்து போனாளுக. இவா பாக்கியமும் கூடப் போனா. எல்லார் கைலயும் பொட்டி இருக்கு. பாக்கியத்துட்ட பெட்டி இல்ல. அதப் பாத்துட்டு யாரோ ஒருத்தி பின்னால இருந்து,

"இந்தக் கொள்ளு பாக்கியத்தப் பாரு. காணிக்கையுமில்லாம ஒண்ணுமில்லாம ஆளோட ஆளா எந்துருச்சுப் போறதப் பாரு. வெக்கங்கெட்ட கழுத" சத்தமாச் சொல்லவும், பாக்கியம் திரும்பிப் பாத்து ஒரு மொற மொறச்சுட்டு வருசைல போனா. வருசைலருந்த யாரு கிட்டு இருந்தோ கோழி ஒன்னு கத்திக்கிட்டே போகுது.

"எவளோ பாரு கோழியப் புடுச்ச பொட்டில போட்டு கொண்டாந்துருக்காளுக. இதெல்லாம் பவுருத்தனமில்ல. கோயிலுக்குள்ள போயி கோழியக் கத்த உட்டுக்கிட்டு" கீழத் தெரு மரிய பொசுப்பம் சொன்னா.

"அது எவாத்தா கோழியப் புடுச்சுட்டுப் போறது. சத்தம் மட்டும் கேக்குது. எவா வச்சுருக்கான்னு தெரியலியே."

"சாமியார்ட்ட குடுக்கம்போது பாரு. எவா பொட்டிக்குள்ள கோழி தெரியுதுன்னு பாரு." இப்பிடி அன்னைக்குக் காணிக்கப் பவனில பேச்சுஞ் சிரிப்புமா இருந்துச்சு.

ஒவ்வொருத்தரும் பொட்டியக் குடுத்துட்டு சாமியார குனுஞ்சு வணங்கிட்டுப் போனாக. ஒருத்தி பொட்டிலயும் கோழி இல்ல. கடேசியா பாக்கியம் கிராதிக்கிட்ட வரவும் சேலைக்குள்ள மறச்சு வச்சுருந்த கோழிய எடுத்து சாமியார்ட்ட குடுத்தா. கோழின்னா றெக்கைய அடுச்சுக்கிட்டு, ஏழூர்க்குக் கேக்கும்படி கத்துது. கோயிலுக்குள்ள இருந்த அம்புட்டுச் சனமும் சிரிக்குது.

சாமியாருக்கு என்ன செய்யறதுன்ன தெரியல. கோழிய வாங்குனவரு அது படபடன்ன றெக்கையப் போட்டு அடிக்கவும் உடுப்புல கிடுப்புல பேண்டு தள்ளிரும்னோ என்னமோ கோழியச் சரியாப் புடிக்காம உட்டுட்டாரு. கோழி கீழ உழுகவும் இன்னும் பெருசாச் சத்தம் போட்டுகுட்டு கோயிலுக்குள்ள ஓடுது. பெறகு முன்னால ஒக்காந்திருந்த பெயல்க பத்துப் பேரு எந்துருச்ச ஓடி வளச்சு கோழியப் புடுச்சுக் கொண்டு போயி சாமியாரு பங்களாவுல கட்டிப்போட்டுட்டு வந்தானுக. கோயில்ல எல்லாருஞ் சிருச்சாலும் பாக்கியம் மட்டும் சிரிக்கல. அவளுக்கும் சிரிப்பு வாரமாரி இருக்கு. ஆனாலும் சிரிப்ப அடக்கிக்கிட்டு மறக்காம குனுஞ்சு வணங்கிட்டு

அம்புட்டுச் சீரியஸ்ஸா நடுவுல நடந்து அவா எடத்துல போயி மொழங்காலு போட்டா. ஆம்பளைகளும் பூராஞ் சிருச்சிட்டு பெறகு கொஞ்ச நேரத்துல, "கோயிலுக்குள்ள என்ன சிரிப்பு, மரியாத கெட்ட கழுதைக. ஒரு வெவஸ்த இருக்கா." சொல்லிக் கிட்டு பொம்பளைகள அதட்டுனாக.

இந்தப் பாக்கியம் இருக்காளே; இவா ஆடிக்கொருதரம், அமாவாசைக்கு ஒருதரம் கோயிலுக்கு வருவா. வந்தான்னா சாமியாரு நன்ம குடுத்துட்டு வரும்போது அவரு காலு, கை, உடுப்பு ஒன்ன உடாம தொட்டுத் தொட்டு முத்தங்குடுப்பா. சாமியாரும் ரொம்பச் சந்தோசமாப் போவாரு. இவளப் போல ஏகப்பட்டப் பேரு இருக்காக.

திருநாச் சமயங்கள்ள ஊர்ல மைக்ல பாட்டுப் படிப்பாக. அப்பயுங்கூட ஆம்பளைகதான் தாளம் போட்டுக்கிட்டு பாட்டும் படிப்பானுக. பொம்பளைகள்ள எத்தனையோ பேரு அம்புட்டு அருமையா பாட்டுப் படிப்பாக. ஆனா இதுவரைல ஒரு பொம் பளையக்கூட பாட்டு படிக்க உட்டதுமில்ல. கூப்டதுமில்ல. நாஞ் சின்னப் பிள்ளையா இருக்கும்போது திருநாச் சமயத்துல ராத்திரி பொம்பளைகளாப் பாட்டுப் படிச்சு கும்மி அடிப்பாளுக. இப்ப அதக்கூட நிப்பாட்டிட்டாக.

பொம்பளைகளோட நெலம ரொம்ப பரிதாவமாகவும், கேவலமாகவுந்தான் இருக்குது. காடுகரைகள்ள மேச்சாதிகாரனுகட்ட இருந்து தப்பிக்கனும். கோயிலு காரியங்கள்ள இந்தச் சாமியாங்கால நக்கிக்கிட்டு, கடவுளு, மோட்சம், நரகமுன்னு அவெம் பயங்காட்ரத னால, அவனுக்கு அடிமைகளா கெடக்கனும். வீட்ல வந்தாலும் கஞ்சியக் காச்சுனமா குடுச்சமா படுத்தமான்னு இல்லாம புருசங்கார னுட்ட இம்சப்படனும்.

பிள்ளைக்குமேல பிள்ள பெத்துக்கிட்டே இருந்தா ஒடம்பு என்னத்துக்கு ஆகும்? நல்ல சாப்பாடு தண்ணியுங் கெடையாது. ஆம்பளைகதான் வீட்லயுங் கடைலையும் அமுக்குரானுக. ஆசுபத் திரி வசதி இல்லாம வீட்லயே அரைகொறையா பேறுகாலம் நடக் குது. பிள்ளப் பெறும் போதும் பெத்தப் பெறகும் ஏகப்பட்ட பொம் பளைக செத்துப்போறா. ஒடனே ஆம்பளைக அடுத்த கலியாணம் முடுச்சுக்கிரானுக. குடும்பக் கட்டுப்பாடு செய்யலாம்னா, ஆம்பள செய்ய மாட்டேங்கா. செஞ்சா பெலங் கொறஞ்சிருமாம். படிப் பறிவு இல்லாம போயி ஏனோ தனோன்னு குடும்பக் கட்டுப்பாடு செஞ்சுக்கிட்டு வந்தா, அதுக்குப் பெறகு முன்னப்போல காடுகரை கள்ள வேல செய்ய முடியலங்றாக. வேல வெட்டி செய்ய லன்னா சாப்பாடு எப்பிடிக் கெடைக்கும்? பொம்பளைய நம்பித் தான குடும்பம் ஓடுது. அவுக கேக்குற கேள்வியும் நாயமாத்தான் இருக்கு.

# நான்கு

தைப் பொறக்கவும் வெள்ளையம்மா பாட்டி மரியம்மாட்ட சொன்னா, “இந்த வருசம் கம்மாய்கள்ளாம் ரொம்பிக் கெடக்கு. வயக்காடுகள்ளாம் வௌஞ்சுபோச்சு, நீயும், ஒந்தங்கச்சியுமா கதுரறுக்கப் போனீகன்னா ரெண்டு மூனு மூட்ட நெல்லு சேத்துர லாம்தா. வையாசி பெறக்கவும் ஒனக்கு ஒரு கலியாணங்காச்சி முடிக்கனும்னா நெல்லு வேனும்ல. ஒங்கய்யக்காரன் ஒன்னுஞ் செய்யமாட்டான். வீட்ல சமஞ்ச கொமரிக ரெண்டு பேரு இருக்கா ளேன்னு ஒரு வெசாரம் இருக்கா.”

அங்னகுள்ள ஒக்காந்து தல வகுந்துக்கிட்டு இருந்த சம்முகக் கெழவி இதக் கேட்டுக்கிட்டுச் சொன்னா. “ஓம் பேத்தியாள எவெம் பொண்ணு கேட்டு வந்து வருசயில நிக்கானுக. அதுலேயே கலியாணங்காச்சி முடிக்கனும்னு கதுரறுக்கப் போச்சொல்ற.”

இந்த சம்முகக் கெழவி பேரு சண்முகம். நாங்க சின்னப் பிள்ளைகள்ளாம் அவள மைக்கூழ் கெழவின்னு கூப்டுவோம். அப்பிடிக் கூப்டா கெழவிக்கு ரொம்ப கோவம் வரும். சாதாரணமா கேப்பக்கூழு காச்சுனா இத்தினிகானு குருனாவும் போட்டுத்தான் காச்சுவாக. அப்பத்தான் பசி ஆறும்பாக. ஆனா இந்த சம்முகக் கெழவி மட்டும் குருநாவே போடாமெ மொட்டக் கூழாத்தான் காச்சிக் குடிப்பா. எதுக்கு குருநா போடமாட்டேங்கான்னு கேட்டோம்.

“குருநாவெ போட்டுக் காச்சுன்னா, கூழு குடிக்கும்போது அதென்ன சோத்துப் பருக்க வாயுல தட்டுப்பட்டுக்கிட்டு கூழு குடிச்சாப்லேயே இல்ல. மொட்டக் கூழாக் காச்சிக் குடுச்சுப் பாரு. கூழு விழுவிழுன்னு தொண்டைக்குள்ள கடக்கு கடக்குன்னு எறங்கும். நாடாரு கட கடுச்சக் கீரையும் வாங்கி வச்சுக்கிட்டு மொட்டக் கூழுக்குக் கடுச்சுக்கிட்டே குடுச்சீன்னா தேவாமிர்தங் குடுச்சது கெணக்கா இருக்கும்.” இப்பிடிச் சொல்லிக்கிட்டே “ஒங்களுக்கென்னத்தெரியும் பொடிப்பெயமக்கான்னு” எங்கள வஞ்சுக்கிட்டுப் போவா.

அவாகிட்ட பேச்சக்குடுத்தா கண்டிப்பா கடைசில வசவு வாங்கனும். நம்ம பேச்சுக் குடுக்காட்டாலும் வலிய வந்து பேசி இடும்பு பண்ணுவா. யாரு பேச்சுலயும் வந்து முந்திக்கிட்டு பேசி

சண்ட இழுத்து உடுவா. அவா சோலிமயித்தப் பாத்துட்டு இருக்க மாட்டான்னு எல்லாரும் சடச்சுக்கிருவாக.

சம்முகக் கெழவி சொன்னதக் கேட்டு வெள்ளையம்மா பாட்டிக்கு மட்டுமில்ல, எனக்கும் கோவமா வந்துச்சு. பாட்டி ஒடனே கெழவியப் பாத்து, “ஏ, ஒம் பேத்திமார்களுக்குத்தான் மாப்பிள்ளக்காரனுக டக்கு டக்குனு வந்து நிக்கிரானுகளோ, கருநாக்கு முண்ட. ஒஞ்சோலிமயித்தப் பாத்துட்டுப்போயேன். யாரு பேச்சுக்குன்னாலும் வந்துருவா கவுடு மொழஞ்ச கொள்ளு. ஓ இதப் பொத்திக்கிட்டு அங்குட்டு எந்துருச்சுப்போ நாத்த மெடுத்த முண்ட;” வஞ்சுக்கிட்டே மரியம்மாட்ட சொன்னா. “அவா கெடக்காத்தா பலவட்ர முண்ட. நீ ஒம்பாட்டுக்குப் போத்தா. செத்த நாயி கண்ல பாரு ஒரு கூட பூழ தள்ளிக் கெடக்கும். வீச்ச மெடுத்த சக்களத்தி வாயத் தொறந்து மெனக்கெட்டுப் பேச வந்துட்டா.”

“இந்தக் கெழவி ரொம்ப அக்குருவம் புடுச்சவா. மொகரயும் மூஞ்சியும் பாரு” அவளுக்குக் கேட்டுராம நானும் மெதுவா வஞ்சேன் . கேட்ச்சுன்னா அம்புட்டுத்தான்.

மைக்கூழ் கெழவியும் விருச்சுக் கெடந்த நாலு முடியதட்டி கொண்டயப் போட்டுக்கிட்டு, “இப்ப என்னு சொல்லிட்டாக ஒம்பேத்தியாள. இப்பிடி வெறி நாயி கெணக்கா உழுகுற. போங்கடி, தேவிடியாப் பெயமக்கா. ஒங்க வகுச தெரியாதாக்கும். ஊர்ல கேட்டுப் பாரு. நேத்துப் பெறந்த பிள்ளைக்குக்கூட ஒம்பேத்தியாளோட வகுச தெரியும். அவுசாரி போயி புடிபட்டு ஊர்க் கூட்டத்துல கேவலப்பட்டு, கெட்டுப்பட்டு நின்ன சக்களத்திக்குப் பேச்சப்பாரு பேச்ச. தூ... நீயும் நாலுபேரு கெணக்கா பேசுற. ஈனமானமுன்னு இருந்துச்சுன்னா போயி கம்மாயில, கெணத்துல உழுந்து செத்துப்போங்கடி,” துப்புக்கழுச்சுட்டு, கத்திக்கிட்டே கம்பையும் எடுத்து ஊனிக்கிட்டுப் போயிட்டா சம்முகக் கெழவி.

அன்னியாரம் பாத்து அங்க வந்த மதினி பரலோகம் கேட்டாஃ “நீ எதுக்கு அவாகிட்ட வாத்த குடுத்த? அவாதான் ரப்பெடுத்து பேசுவான்னு ஒனக்குத் தெரியுமில்ல...”

“நா எங்கடி அந்த முண்டயிட்ட வாத்த குடுத்தேன். பீக்கு முந்துன குசுவும் பிள்ளைக்கு முந்துன கன்னிக்கொடமுங் கெணக்கா அவாள்ள வலிய வம்புக்கு வாரா.” சொல்லிக்கிட்டே பாட்டி கஞ்சி காச்சுரதுக்கு முள்ளு நறுக்க அருவாளும் முண்டுமா போயிட்டா.

இந்தச் சம்முகக் கெழவிய நெனக்கையிலே கோவங் கோவமா வந்துச்சு. அவள கிறுக்குமுண்டேன்னு ஊர்ல சொல்லு வாக. நாங்க சாயந்தரக் கோயிலுக்குப் போயிட்டு செவம் முடுஞ்சு வரும்போது இந்தக் கெழவி கூட வந்தான்னா எல்லாரும் அவள உட்டுட்டு ஓட்டமும் நடையுமா வீடுகளுக்கு ஓடியாந்துருவோம்.

ஏன்னா இவாகூட வந்தா நாங்க பேசிக்கிட்டு வார பிள்ளைககிட்ட வந்து ரெண்டு பேரு கையயும் சேத்து வச்சு குசு போட்டு உட்டுட்டுப் போவா வீச்சமெடுத்தவா. யாருக்கும் பயப்படமாட்டா.

ஒருநாளு நாங்கள்ளாம் பள்ளிக் கொடத்துக்குப் போயிட்டிருந்தோம். அப்ப மொதலாளி காடுகரைக்கு வேலைக்குப் போற எங்க தெரு பொம்பளைகளும் அப்பிடிக் கூடி வந்தாக. அப்ப ஒரு கடைல போயி ஒரு குச்சி வாங்கிட்டு மீதித் துட்டுக்கு முட்டாயி கேட்டுக்குட்டு இருக்கையில சம்முகக் கெழவி வந்தா. ஒடனே "தள்ளு தள்ளுங்க பெயமக்கா. இவளுகள்ளாம் படுச்சுத்தான் பறக்குடி முன்னேறனும்" சொல்லிக்கிட்டே, "மொதலாளி, பத்து காசு ஊறுகாப்பாள ஒன்னு குடுங்க,"ன்னு கேட்டு வாங்குனா. அவளப் பாக்கவும் எங்களுக்குச் சிரிப்புன்னாச் சிரிப்பு அம்புட்டுச் சிரிப்பு. எதுக்குன்னா அவா தலைல சீலயச் சும்மாடு கூட்டி ஒரு சட்டியும், ஒரு தோளுல மம்முட்டியும் இன்னொரு தோள்ல தெர்மாசு பிளாஸ்க்கும் தொங்க உட்டுருந்தா. எள்ளுக்களைக்குப் போற வாளுக்கு தெர்மாசுக் குடுவ என்னத்துக்கு. அதுல காப்பிதான வாங்குவாகன்னு நாங்க குசுகுசுன்னு பேசிக்கிட்டே சிருச்சோம், நாங்க மடத்துல படிக்கும்போது, தாயாருமாருக அதுல காப்பி வச்சு குடுச்சத பாத்துருக்கோம். எங்ககூட இருந்த மெக்கேலு பிள்ள தகிரியமா " ஏ பாட்டி, நீ என்ன களவெட்டுக்குக் காப்பியா கொண்டுபோற" கேட்டுட்டு சிருச்சா.

"அடி செறுப்பால, அது எவாடி, அவெம் பெலேந்தரமகா தான, எம்புட்டு லக்கலுன்னு பாத்தியா அவளுக்கு. நீ இந்த வயசுலயே இம்புட்டு சௌடாலுத்தனம் பண்றவா கொமரி குட்டச்சி ஆயிட்டா என்ன செய்யக் காத்திரிக்கியோ. கேட்டீகளா மொதலாளி, காப்பி கொண்டு போறமுன்னு லக்கல் பன்றத," கடக்கார மொதலாளி ஆறுமுகச் செட்டியார்ட்ட சொல்லவும், செட்டியாரு சொன்னாரு. "பாப்பா கேட்டதுல என்ன தப்பு? நீயி பிளாஸ்கு தொங்கப் போட்டுக்கிட்டு போறீல, அதான் கேட்டுருக்கா. காப்பி யாருக்கு வாங்கிட்டுப் போற? நாய்க்கரு வாங்கியாரச் சொன்னாரா?"

"இதச் சொல்றீகாளா, இதுல கேப்பக்கூழ்க் கரச்சு ஊத்திக்கிட்டுப் போறேன். இதுக்குள்ள என்னமோ கண்ணாடி கெணக்கா மினுங்கிக்கிட்டு இருக்குறது ஒடஞ்சு போச்சாம். இதுலயும் என்னமோ கோளாறுன்னு எங்க நாய்க்கரம்மா தூக்கிக் குப்பைல போட்டாக. நாந்தான் தூக்கிட்டு வந்து ஒடஞ்ச கண்ணாடிச் சில்லக் கொட்டிப்பிட்டு மொட்டக்கூழக் கரச்சு ஊத்திட்டுப் போறேன். அதுக்குக் கடுச்சுக்குரதுக்குத்தான இப்ப ஊறுகாப் பாள வாங்குனேன்." சொல்லிட்டு அவா பாட்டுக்குப்

போறா. செட்டியாரும் சிரிக்காரு. நாங்களும் சிருச்சுக்கிட்டே பள்ளிக்கொடம் போயிட்டோம். அன்னைக்குச் சாயங்காலம் வீட்டுக்கு வந்த ஒடனே நெறய்யாப் பேத்துக்கிட்ட பிளாஸ்குக் கூழு வெசயத்தச் சொல்லிச் சிருச்சுச் சிருச்சு வகுறே புண்ணாப் போச்சு. அதுல இருந்து மைக்கூழ் கெழவின்ற பேரு போயி பிளாஸ்குக் கூழுன்னு பேரு வந்துச்சு. யாராச்சம். 'ஏ பிளாஸ்கு' ன்னு சொல்லிட் டாலே போதும். கெழவி கம்ப எடுத்துக்கிட்டு ஒற்றே எறிதான். அம்புட்டுக் கோவம் வரும் அவளுக்கு.

வெள்ளையம்மா பாட்டி சொன்னது கெணக்கா மரியம்மா தங்கச்சியக் கூப்டுகிட்டு கதுரறுக்கப்போனா. வயல் வரப்புல, களத்து மேட்டுல வேல வெட்டி செய்யும்போதும் மரியம்மா ஊர்க்கூட் டத்துக்குப் போனதுபத்தி சாடமாடையா பேசுனாக. மரியம்மாளுக்கு வாழ்க்கையே வெறுப்புத் தட்டிப் போச்சு. வெள்ளையம்மா பாட்டிக்கிட்ட ஒருநா அழுதுக்கிட்டே சொன்னா, "நாஞ் செய்யாத குத்தத்துக்கு எங்குட்டுப் போனாலும் வசவு வாங்க வேண்டி இருக்கு. அந்தப் பெய மூஞ்சிய பாத்தனா மொகறயப் பாத்தனா? இப்பிடி இந்த ஊர்ப்பெய மக்க வாய்க்கு வந்ததெல்லாம் பேசுராளுக."

இதக் கேக்கவும் எனக்கும் அழுகையா வந்துச்சு. பொம் பளைககூட பொம்பளைகளுக்கு எரக்கங் காட்ட மாட்டேங்காக ளேன்னு கஸ்டமா இருந்துச்சு. பாட்டிக்கும் ரொம்ப வேதனையா இருந்துச்சு. அவா மொகமே வாடி வதங்கிப்போச்சு. "ஒனிய பொண்ணு பிள்ளன்னு யாருங்கேட்டு வந்தாலும், இந்தப்பெயமக்க கண்டதக் களியதச் சொல்லிக் கெடுத்துப் போடுவாக. என்னன்னு தான் ஒனிய கர ஏத்துரதோ தெரியல. ஒந்தங்கச்சி வேற சடங்காகி நிக்கா. அடுத்தவளும் ஆளாகுற மாதிரி மதமதன்னு வளந்து நிக்கா. ஒரு வீட்ல ரெண்டு மூனு கொமரு நிக்கக்கூடாது. நின்னா ஊர் வாயே மென்னு போடும்," பாட்டி சொல்லிட்டு பெருமூச்சு உட்டா.

அந்நியாரம் மரியம்மாளோட அய்யன் சமுத்துரக்கனி அங்ன வரவும் பாட்டி அவெங்கிட்ட மனசுல கெடந்து அருச்சுக்கிட்டு கெடந்ததச் சொன்னா. "மரியம்மாவுக்கு வயசாகிகிட்டே போகு தல்ல. காலா காலத்துல எவெங் கையிலயாவது புடுச்சுக் குடுத் துட்டா நல்லது. ஏற்கனவே சும்மா இருந்த பிள்ளய கண்டமானிக்கச் சொல்லிக் கேவலப்படுத்திட்டாக."

இதக் கேட்டதும் சமுத்துரக்கனிக்கு அம்புட்டுக் கோவம் வந் துருச்சு. "இவா ஒழுங்கா இருந்தான்னா யாரு பேசப் போறா? நெருப்பில்லாமெ பொக வருமா? மானங் கெட்டுப் போன இவள இனி எவெங்கெட்டப் போறான். பேசாமெ அந்தப்பெய மாணிக்கத் துக்கே கெட்டிக் குடுத்தாத்தான் போச்சு. வேற வழி இல்ல."

சமுத்துரக்கனி கத்தவும் மரியம்மா வீக்குறு வீக்குறுன்னு அழுதா.

"கிளிய வளத்து பூன கைல குடுத்தது கெணக்கா, போயும் போயும் அந்தப் பெயலுக்கா வாக்கப்படச் சொல்றீக. அவெஞ் சரியான குடிகாரப்பெய. வேல வெட்டிக்குப் போமாட்டான். இதுல எப்பப் பாத்தாலும் துட்டுக்குச் சீட்டாடுவான். வீட்ல கஞ்சி குடிக்கிற கும்பாயக் கூட அடவுவச்சு சீட்டாடி தோத்தானாமுல்ல. கள்ளச் சாராயம் காச்சி ஏழெட்டு தடவ ஜெயிலுக்குப் போயிட்டு வந்துருக்கான்." பாட்டி சொல்லவும் சமுத்துரக்கனி மேல ஒன்னும் பேசல. பீடியப் பத்தவச்சுட்டு வெளிய போயிட்டான்.

அவெம் போன பெறகு, பாட்டி யோசன பண்ணிப் பாக்கையில சமுத்துரக்கனி சொல்றதும் சரிதான்னு பட்டுச்சு. "வேற யாருக்கும் வாக்கப்பட முடியலன்னா இப்பிடி கன்னி கழியாமெ வீட்லயே வைக்க முடியாதே. அதுக்கு அந்தப் பெய மாணிக்கத்துக்கே கெட்டி வச்சுட்டா, கல்யாணமின்னு ஒன்ன ஆன மாதிரி இருக்கும். பெறகு அடுத்த பிள்ளைகள கரை ஏத்திரலாம்."

"மரியம்மாட்ட இந்த யோசனயச் சொல்லவும், மரியம்மா அருதிக்கு மாட்டமுன்னு அடம் புடுச்சா. அந்தப்பெயலுக்கு யாரும் பொண்ணு குடுக்காமத்தான் இம்புட்டு நாளாக் கலியாணம் செய்யாமெ இருக்கான். அவனுக்கு வாக்கபடுரதுக்குப் பதுலா ரெண்டு மொழக் கவுத்துல தொங்கலாம்." சொல்லிட்டு கொடத்த எடுத்துக்கிட்டு தண்ணி எடுக்கப் போயிட்டா.

பாட்டிக்கு அவா சொல்றதும் நாயமுன்னு பட்டாலும் வேற என்ன செய்றதுன்னு ஒன்னும் புரியல. ஆனா வையாசி மாசம் பெறக்கவும் சமுத்துரக்கனியே மும்முரமா நின்னு மரியம்மாள அரட்டி மெரட்டி மாணிக்கத்துக்குக் கெட்டி வச்சுட்டான். அவனுக்கு வாக்கப்பட்டதுலருந்து தெனமும், அடியும், மிதியும், ஒதயும் வாங்கிட்டு அரஉசுரும் கொற உசுருமா ஆகிட்டா மரியம்மா.

மரியம்மா வாழ்க்கைய நெனச்சுப் பாக்கையில ஏம்மனசுக் குள்ள அம்புட்டு ஆங்காரமும் வெறுப்புமா வந்துச்சு. எவனோ மேச்சாதிக்காரப் பெய பண்ணுன இடும்புக்கு இவாமேல பழியப் போட்டு, இவா வாழ்க்கையவே நாசமாக்கிப் போட்டாக. பொம்பளமேல ஒரு பழிச்சொல்லு வந்துட்டா அம்புட்டுத்தான் அவாகெதி. அது நெசம்மா பொய்யான்னு யாரும் யோசிக்கமாட் டாக. அவளச் சொல்லவும் உடமாட்டாக. எவனாவது அயோக்கியப் பெயலுக்குக் கெட்டி வச்சுட்டு அவா செத்தாலுஞ் சரி பொழச் சாலுஞ் சரின்னு தலமுழுகிடுறாக. சீன்னு வந்துச்சு எனக்கு. அவள இப்பிடி ஆக்கிவச்ச அம்புட்டுப் பேரையும் கடுச்சுக் கொதறி மென்னு துப்பிடலாம் போல இருக்குது.

இது மாறித்தான் மேலத் தெருவுல தாயின்ன ஒரு பொம்பள

இருந்தா. அவா கதயக் கேட்டா நம்ம பொம்பளையா பெறக்கவே கூடாதுன்னு நெனப்பேன்.

தாயி எங்க தெருவுலேயே நல்ல செக்கச் செவேர்னு இருப்பா. அவாள்ளாம் நல்லா வளுச்சி கிளுச்சி சோடுச்சான்னா அசல் நாய்க்கமாரு பொம்பள கெணக்காவே இருப்பா. ஆனா நாள் தவறுனாலும் அவா அடிவாங்குரது தவறவே தவறாது. அவளுக்கு இஸ்டமில்லாத எடத்துல வம்பு பண்ணி வலுக்கட்டாயமா கெட்டிக் குடுத்துருக்காக. அவள புருசன் கம்புட்டயும், இடுப்பு எடவார்ட யுடமா மாட்ட அடுச்சது கணக்கா தெருக்காடெல்லாம் போட்டு தரதரன்னு இழுத்துக் கொண்டாந்து போட்டு அடிப்பான்.

ஒருநா நானு பள்ளிக்கொடம் போயிட்டு சாயங்காலம் வீட்டுக்குத் திரும்பி வந்துக்கிட்டுருந்தேன். எங்க தெருவுக்குள்ள நொழையும் போதே தாயோட அழுகச்சத்தம் கேட்டுச்சு. கிட்டத்துல போயி பாத்த எனக்குக் கண்ணீரு முட்டிக்கிட்டு வந்துருச்சு. இடுப்பு எடவாரக் கொண்டு, தாய அவா புருசன் மாத்தி மாத்தி அடுச்சான். அவா சட்டையும் போடலயா. அவளோட செவத்த தொலில எடவாரு பட்ட எடமெல்லாம் செவேர் செவேர்னு தடுப்பு அப்பிடி உளுந்து கெடந்துச்சு. அவளக் கீழ போட்டு காலுட்டு மிதிச்சுக்கிட்டு அவென் அடுச்சத இப்ப நெனச்சாலும் எனக்கு ஒடம்பே புல்லருச்சுப் போகும். யாராவது அவள வந்து இழுத்துக்கிட்டு ஓடிர மாட்டாகளான்னு நானு நெனச்சுக்கிட்டு இருக்கையில அங்க வந்த காத்தமுத்து அதட்டலா சத்தம் போட்டாரு. “நீ என்ன மனுசந்தானாடா? ஒரு பொம்பளய அடிக்குதுக்கு வரமொற கிடையாதா? கொஞ்சங்கூட எரக்கமில்லாம இப்பிடிக் கொல்ற?”

இதக் கேட்டதும் தாயி புருசனுக்கு ஆங்காரம் அதிகமாச்சே தவுர கொறையல. அவனும் பதுலுக்கு “நீ யாரு இந்த முண்டைக்கு வக்காலத்து வாங்கிட்டு வார? ஏம் பொண்டாட்டி நா அடிப்பேன். கொல்லுவேன். நீ ஒஞ்சோலியப் பாத்துக்கிட்டுப் போ,” சொல்லிட்டு “ஏண்டி கண்டாரளி, கண்ட பெயல்லாம் சப்போட்டுக்கு வாரான். கள்ளத் தாயளிமகா. பத்துப் பெயகிட்ட போவா,” இப்பிடி கெட்ட வாத்த சொல்லி வஞ்சுக்கிட்டு இன்னும் பெலமா அடுச்சான்.

அங்ன ஆப்டவுகள்ளாம் வகுத்தெரிச்சப்பட்டு, “இவெம் மனுசப் பெயன்னா போயி வெலக்கி உடலாம். மிருக சாதிப் பெயகிட்ட என்னத்த சொல்ல முடியுது. யாரு போயி வெலக்கு னாலும் அவள அவுசாரி சாட்டி அடிக்கான்.” பொலம்பிக்கிட்டே போனாக.

எனக்கும் நெஞ்செல்லாம் அடச்சுக்கிட்டு ஒரு மாதிரி இருந்துச்சு. வீட்டுக்கு வந்து எங்கம்மயிட்ட சொன்னேன், “என்னம்மா இப்பிடி தாலி கெட்டிட்டா எப்பிடின்னாலும்

அடிக்கலாமாக்கும். தாயப் பாக்கையில பாவமா இருக்கும்மா.”

“வாக்கப்பட்ட அன்னைக்கே அவனுக்கு அடிம கெணக்காத் தான். அதான் எல்லாப் பெயல்களும் பொம்பளைகள அடக்கி மெரட்டி வைக்கானுக. ஆனாலும் இவனப் போல அடிக்குற ஆம்பளய நாம் பாத்ததில்ல,” எங்கம்ம சொல்லிட்டு பெருமூச்சு உட்டா.

தொயந்து எங்கம்மா ஏங்கிட்ட சொன்னா, “தாயிப்பிள்ள வீட்டுச் செம ஒருநாளு போயிருந்தேனா. அவ வீட்டு நெலப்படில கத்தையா இம்புட்டு முடிக்குக் கெட்டி தொங்க உட்ருந்துச்சு. அங்ன வாசல்ல நெல்லக் காயப் போட்டுட்டு, பா...பா... ஊட்டி, ஊட்டி... ஊட்டி...,-ன்னு பண்ணிகளச் சத்தம் போட்டு கூப்டு, அதுகளுக்கு ஊறத் தண்ணிய ஊத்திட்டு இருந்தா தாயி. அவளக் கூப்டு‘ ஏத்தா எதுக்கு இம்புட்டு மயிருக் கத்தய நெலப்படில கெட்டி தொங்க உட்டுருக்க’ ன்னு கேட்டேன். அவா பதிலு சொல்லமுன்ன வீட்டுக்குள்ள இருந்து அவா புருசன் வெளிய வந்து சொல்றான், ‘அதா மதினி, ஒங்களப் போல இப்பிடி நாலு பேரு கேட்டு இவா மொகறைல காறித்துப்பட்டும்னு நாந்தான் கெட்டித்தொங்க உட்ருக் கேன். இந்த கண்டாரளி முடியத்தான் அறுத்து, தொங்க விட்ருக்கேன். அவா பெடதில பாருங்க வள்ளுசா முடி இருக்காது. அவா மப்ப அடக்கனும்னுதான் வெட்டுனேன்” சொல்லிட்டு சிரிக்கான். கொஞ்சங்கூட நெஞ்சுல ஈரமில்லாத பாவி.

இதக் கேட்டப் பெறகு எனக்கு ஆத்திரமா வந்துச்சு. “ஏம்மா இப்பிடி இவங்கூட எதுக்கு இருந்து கஸ்டப்படனும். இவன உட்டுட்டு தனியாப் போனா என்ன? அடி வாங்காமெயாச்சும் இருக்கலாமுல்ல,” நாங் கேட்டேன்.

“வாக்கப்பட்டப்பெறகு அம்புட்பு ஈஸியா போமுடியாது. ஒரலுக்குள்ள தலயக் குடுத்தப் பெறகு ஒலக்கைக்குத் தப்ப முடி யுமா? மண்ட மண்ணுல மடியுந்தட்டிக்கும் இம்சப் பட்டுக்கிட்டுத் தான் இருக்கனும்.” எங்கம்ம இப்பிடிச் சொல்லவும் எனக்குள்ள கோவம், வேகம், ஆங்காரம், ஆத்துரம், எரிச்சலு, வெறுப்பு இப்பிடி பல மாறியான ஒணர்வு வந்துச்சு.

# ஐந்து

“ஏடியோய் செவத்தி, கேட்டுக்கிட்டியா சங்கதியெ? ஓம்மச்சா மகா மனச்சி பேயி புடுச்சி ஆடுறாளாம்டி,” சொல்லிக் கிட்டே எங்க பாட்டி வந்தா.

ஒடனே அங்னகுள்ள சட்டிபான கழுவிக்கிட்ட இருந்த டமாட்டா மாடு, “யாருக்கு பெரீம்மெ பேயி புடுச்சுருக்கு. எப்பிடி புடுச்சுச்சாம்?” கேட்டுக்கிட்டே கையக் கழுவிட்டு எந்துருச்சு வந்தா.

டமாட்டா மாடுங்கறது நானம்மாளோட பட்டப்பேரு. யாரும் அவாளோட நெசப்பேரச் சொல்லிக் கூப்டமாட்டாக. டமாட்டா மாடுன்னுதான் சொல்வாக. ஊர்காட்ல காளமாட்ட சோடுச்சு கீடுச்சு வீட்டு வீட்டுக்குத் துட்டு வாங்கிட்டு வருவானுக செலபேரு. அந்தமாடு ஒரு சொதாரிப்பே இல்லாமெ அவெ இழுத்த இழுப்புக்கு மப்பு புடுச்ச மாதிரி திரியும். அது கெணக்காத்தான் நானம்மாளும் இருப்பா. அதான் அவா பேரு டமாட்டா மாடு. பாட்டி கத்துன கத்துக்கு அங்ன ஆப்ட அம்புட்டுப் பேரும் வேலையுஞ் சோலியும் போட்டுட்டு பாட்டிட்ட ஓடியாந்தாக. ஏழெட்டுப் பேரு சேந்துரவும் பாட்டி நெதானமா ஒக்காந்து மனச்சியப் பத்தி வெவரமாச் சொல்ல ஆரம்பிச்சா. கூழு குடுச்சுக் குட்டு இருந்த நானும் கும்பாயோட தூக்கி மடக்கு மடக்குன்னு குடுச்சுட்டு கையக் கழுவியுங் கழுவாமலும் பாட்டி சொல்றதக் கேக்க ஓடுனேன்.

“ போன பொதங்கெழமெ மனச்சிப்பிள்ள மாட்டுக்கு ரெண்டு பில்லுப் பெறக்கிட்டு வருவோம்னு அவரு மூளியம்மா காட்டுச் செம போயிருக்கா. போன கழுதகூட யாரையாச்சும் கூப்டுக்கிட்டுப் போக்கூடாது. ஒத்தைல அதுலயும் பொழுதுளுகுற டயத்துக்குப் போயிருக்கா.” பாட்டி சொல்லிட்டிருக்கைலயே சினும சின்னம்மா “அப்பிடிச் சொல்லு அங்க அந்த கெணத்துக்குள்ளதான போன மாசம் மூக்கையாச் செட்டியாரோட சம்சாரம் உளுந்து செத்தாக.” சொல்லி முடிக்கமுன்ன கூட இருந்த பொம்பளைக “ இவா ஒருத்தி எடைல பேசிக்கிட்டு, அவா வெள்ளைம்மா கெழவி முழுசுஞ் சொல்லட்டுமே;” ஒன்னாக் கத்தவும் சின்னம்மா வாய மூடிக்கிட்டா.

வெள்ளையம்மா பாட்டி தொயந்து சொன்னா. “பில்லப்

பெறக்கிகிட்டு கெட்டித் தூக்கியார நேரத்துல கெணத்துக்குள்ள யாரோ டமார்னு உழுந்த சத்தங்கேட்டு திடுக்குன்னு பயந்துபோயி திலும்பிப் பாத்துருக்கா பெயமகா. அந்தச் செட்டியாரோட சம்சாரந்தான் துட்டக் கொட்டுனது கெணக்கா கலகலன்னு சிருச்சுக் கிட்டே கெணத்து நடுச்செண்டருல நின்னுருக்கு. அப்பிடியே பில்லுக்கெட்டையும் தூக்காமெ வெறுமுத்திப் புடுச்சுப் போயி வீட்ல வந்து படுத்தவதானாம். கஞ்சி தண்ணி செல்லாம காச்சலா கெடந்துருக்கா. ஒருத்தருக்கும் ஒரு வெவரமுந் தெரியல. இன்னைக்கு வெள்ளிக்கெழம அதுவுமா சொல்லி ஆடுறா." பாட்டி சொல்லி முடிச்சுட்டு பொடி மட்டய எடுத்து இத்தினி பொடி அள்ளி வாய்க்குள்ள வச்சுக்கிட்டா.

"கேக்கயிலயே ஒடம்பெல்லாம் புல்லரிக்கு தாயே." டமாட்டா மாடு சொன்னா.

"எங்னகுள்ள ஆடுறா பாட்டி" நாங் கேட்டேன்.

"இந்தா அந்தோணியாரு குரூசுக்குக் கொண்டாந்துருக்காக. நீயெல்லாம் ஒம்பாட்டுக்குப் போயிப் பாக்காத, வயசுப் பிள்ளைகள கண்டா படக்குன்னு புடுச்சுக்குறும்."

"இம்புட்டு நாளா சும்மா இருந்துட்டு இப்ப எப்பிடி அந்தப் பேயி சக்களத்தி ஆட்டங்குடுத்தா?"மேலத்தெரு மூக்கம்மா கேட்டா.

"இது பேயிக் கோளாறுன்னு தெரியாமெ காச்சலுக்குக் கண்டதக் களியதக் குடுத்துப் பாத்துருக்காளுக. நானும் பாத்தேன். மண்ட நெத்தியெல்லாம் அந்தப் பிள்ள பத்துப் போட்டுக்கிட்டு இருந்துச்சு. பெறகு அவா உச்சாயிக் கெழவிதான் 'ஏ கழுதைகளா நோய்க்கும் பாரு, பேய்க்கும் பாருன்னு சும்மாவா சொன்னாக. அவெங் கோடாங்கிக் காரனக் கூட்டியாந்து குறி கேளுங்க' ன்னு சொல்லவும், கூட்டியாந்து பாத்தா இப்ப வெசயம் வெளங்குது. பொம்பளைக ஒத்த சத்தயில போக்கூடாதுன்னு சொன்னாக் கேட்டாத்தான பாட்டி" சொல்லிட்டு எந்துருச்சுப் போயிட்டா.

"இனி அந்தக் காட்டுச்செம வேல வெட்டிக்குக்கூட போமுடியாது பொருக்கோ. இந்த அம்மாளுக்கு வேற கெணறே கெடைக்கலன்னு நாலு சனம் எறங்கி தண்ணி கிண்ணி குடிக்கிற கெணத்துல போயி உளுந்து செத்துருக்கு."

"ஏம்மகா சொன்னா , அந்தப்பிள்ள மனச்சி அன்னைக்குத் தலைக்குவேற ஊத்தலயாம். மப்புத்தான அவளுக்கு. தூம வாடைக்கு எங்குட்டாப் பேயெல்லாம் வந்து புடிக்குமே.

ஆளாளுக்கு ஒவ்வொன்னாச் சொல்லிக்கிட்டு எந்துருச்சுப் போயிட்டாக.

மனச்சிப் பிள்ளையப் போயிப் பாக்கனும்போல இருந்துச்சு. ஆனா பயம்மாவும் இருந்துச்சு. இன்ன ரெண்டு பேரக் கூப்டுக்கிட்டு

போகலாம்னு நெனச்சு, போயி பரலோகத்தையும், பேச்சியாத் தாளையும் கூட்டிக்கிட்டுப் போனேன்.

அந்தோணியாரு குருசுக்கு முன்னால ஒரே கூட்டம். மனச்சிப் பிள்ள நடுவுல ஒக்காந்திருந்தா. அவா தலமுடி விருச்சுக் கெடந்துச்சு. திருத்திருன்னு சுத்திச் சுத்தி முழிக்கா. அவளப் பாக்கவெ பயம்மாக் கெடந்துச்சு. ஒன்னுமே பேசல.

அவா பேயாடுவான்னு நாங்களும் நின்னு நின்னு பாத்தோம். ஆடவே இல்ல. இப்ப ஆடி முடுச்சுட்டான்னு சொல் லிட்டாக. சரி, இன்னொரு தடவ ஆடும்போது வந்து பாப்போ மின்னு சொல்லிட்டு வந்துட்டேன்.

அன்னைக்கு ரவைக்கெல்லாம் எனக்கு ஒறக்கமே வல்ல. நானு ஏழாங் கௌாஸ் படிக்கையில ஒரு நாளு சாயங்காலம் கோயிலுக்குப் போகைல வண்ணாக்குடில ஒரு பொம்பளைக்குப் பேயி புடுச்சு ஆடுறான்னு சொல்லி நாங்க ஒரு நாலஞ்சு பேரு கோயிலுக்குப் போகாமெ பேய் பாக்கப் போனோம். அந்த நெனப்பு வரவே அதையே யோசிச்சுக்கிட்டுப் படுத்துக் கெடந்தேன். நெனைக்க நெனைக்கப் பயம்னா இன்னமட்டுன்னு இல்ல. அங்குட்டு இங்குட்டு பெறண்டு கூடப் படுக்காமெ ஆடாமெ அசையாமக் கெடந்தேன்.

எங்க தெருவுக்கு அடுத்த தெருதான் வண்ணாக்குடி. அப்பச் சாயந்தரம் ஆறுமணி இருக்கும். இருளப்பன் பொண்டாட்டி எசக்கி புடுச்சு ஆடுனா. இருளப்பன் வீட்ல கோடாங்கி வச்சு அடுச்சாக. நாங்க அங்க போம்போது ஏற்கனவே நெறய்யாப் பேரு கூட்டமா கூடி நின்னாக. வீராயி, அதான் இருளப்பன் பொண்டாட்டி தல முடிய விருச்சுப் போட்டமேனிக்கா நடுவுல ஒக்காந்துக்கிட்டு மலங்க மலங்க முழிக்கா. அவா பார்வ ஏம்மேல படும்போ தெல்லாம் சட்டுன்னு எனக்கு முன்னால நின்னவுக பின்னால மறஞ்சுக்கிட்டேன். இல்லன்னா எனியப் பாத்துப் புடுச்சுருவான்னு பயந்துகிட்டுத்தான் அப்பிடி மறஞ்சேன்.

கோடாங்கி நெத்தி நெறய்ய தின்னீறு பூசி நடுவுல செந்து ருக்கப் பொட்டு வச்சிருந்தாரு. வாயி நெறய்யா வெத்தலய மென்னு ஒதப்பிக்கிட்டு கைல கோடாங்கியப் புடுச்சுருந்தாரு. அவருக்கு முன் னால ஒரு தட்டுல வெத்தல பாக்கு, குங்குமம், வாழப்பழம், ஊது பத்தி, எல்லாம் இருந்துச்சு. பக்கத்துல ஒரு சட்டில தீகங்கு வச்சு அதுக்குள்ள சாம்பிராணியப் போட்டுக்கிட்டு இருந்தாக. சாம்பி ராணிப் பொக மண்டுச்சு. அந்தப் பொகைக்குள்ள தலவிரி கோலத் தோட வீராயப் பாக்கையில அடிவகுறெல்லாம் கலக்குது. அந்தச் சாம்பிராணி வாசனகூட என்னமோ மாறி இருந்துச்சு. நாங்க எல்லாரும் கூட்டத்தோட கூட்டமா பயத்துல ஈரக்கொலய கைல

புடுச்சுக்கிட்டு நின்னோம்.

கோடாங்கிக்காரன் கோடாங்கிய அடிக்க ஆரம்பிச்சான். ‘டயின் டயின்டா டயின் டயின்டா டயின் டயின்டா,’ இப்பிடி ஒரு மாதிரி வகுத்த கலக்குற மாதிரி அந்தக் கோடாங்கிச் சத்தத்தக் கேட்டதும் வீராயி தல, சத்தத்துக்குத் தக்கன ஆட ஆரம்பிச்சது. ஏ நெஞ்சுக்குள்ள முருங்கமரத்து கம்பிளிப் பூச்சுக வந்து ஊர்ர மாறி இருக்கு. ஓடிப்போயிரலாம் போல இருக்கு. இருந்தாலும் வீராயி ஆடுறதக் கொஞ்ச நேரம் பாத்துட்டுப் போகலாம்னுட்டு நின்னேன்.

கோடாங்கிப் போகப் போக வேகமா அடுச்சான். வீராயி விர்ரு விர்ருன்னு தலைய சொழட்டிச் சொழட்டி ஆடுறா. அவா மொகமெல்லாம் முத்து முத்தா வேர்த்து ஊத்துது. வீராயி ஆட ஆட, அவளப் பாத்துக்கிட்டு நின்ன ஏந்தலயும் எனிய அறியாமெ ஆடுது. ஏங் கூட வந்த இன்னாசியம்மா பிள்ளைட்ட சொன்னேன், “ஏத்தா பயம்மா கெடக்குத்தா. வா போயிருவோம். கோயிலுக்கு நேரமாச்சு.”

அவா என்னடான்னா, “இம்புட்டு நேரம் பாத்துட்டம்ல. இப்ப கொஞ்ச நேரத்துல அவா கல் தூக்கிட்டுப் போவா. பாத்துட்டுப் போயிருவம்தா,” சொல்லிட்டு முன்னாடி இருந்த இத்தினிக்கானு எடத்துல நொழஞ்சு முன்னாடி போயிட்டா.

கல்லுத் தூக்கிட்டுப் போறதுக்கு முன்னாடி வீராயி உச்சந்தலைல இருந்து முடி எடுத்து, அந்த முடியக் கொண்டு அரைவாக. அந்த முடி எடுக்குரதப் பாக்குரதுக்குத்தான் அப்பிடி முண்டி அடுச்சு ஓடுனா.

வீராயி ஆடி முடுச்சு களச்சுப் போயி இருந்தா. கோடாங்கி அவாகிட்ட கேட்டான் “இந்தக் கன்னிய எப்ப புடுச்ச?”

“நடுமத்தியானம் இவா மஞ்சனத்தி மடைகிட்ட வெள்ளாவி வச்சு துணி தொவச்சா. அந்த நேரத்துல புடுச்சேன்.” வீராயி ஆடிக்கிட்டே சொல்றா. எசக்கிதான் வீராயி கெணக்கா பேசுதாம். பக்கத்துல நின்னவுக சொன்னாக.

“இந்தக் கன்னிய இவ்வளவு நாளா புடுச்சு வச்சிருக்க. உனக்கு தொட்டுலு, சொளகு செஞ்சு வைக்கோம். இந்த கன்னிய உட்டுரியா?” கோடாங்கி கேட்டுட்டு மடமடன்னு கோடாங்கிய அடுச்சான்.

“தொட்டுலு, சொளகோட ஒரு சட்டயுந் தச்சுப் போட்டா வெலகிருவேன்.” வீராயி சொன்னா. சொல்லிட்டு கோடாங்கி அடுச்ச அடிக்குத் தக்கன ஸ்பீடா ஆடுனா. ஆடிக்கிட்டு இருக்கைலயே கோடாங்கி அவா முடியப் புடுச்சு இழுத்து நடு மண்டயில இருந்து ஒரு குத்து மயிர கைட்ட சொழட்டிப் புடுச்சு வெக்குன்னு இழுத்து புடுங்கிட்டான். எப்பிடி இழுத்தாலும், அடுச்சாலும் பேய்க

கழுதைக்கு வலிக்காதாம். பேயாடி முடுச்சப் பெறகு தன்னொணர்வு வந்தா விட்டித்தான் வலிக்குமாம் அதோட வீராயி ஆட்டத்த நிப்பாட்டிட்டா. பெறகு வீராய எழுப்பிஉட்டு சீலையெல்லாம் சரியாக் கெட்டிவுட்டு பக்கத்துல வச்சுருந்த பெரிய கல்லத் தூக்கி அவா தலைல வச்சாக. வச்சதும் அதத் தூக்கிக்கிட்டு கம்மாக்கர வழியா ஓடுனா ஓட்டம். அவா பின்னாலியே கோடாங்கி போனான். வேற ரெண்டு மூனு ஆம்பளைக போனாக. பொம்பளைக யாரும் போகல. போனா அவுகளப்புடுச்சுக்கிருமாம்.

நாங்க கோயிலுக்கும் போகாமெ நின்னு பாத்துக்கிட்டு இருந்தோம். வீராயி தூக்கிட்டுப் போன கல்ல மஞ்சனத்தி மடைக்கிட்ட நிக்குர ஆலமரத்துக்கிட்டப் போடுவாளாம். கோடாங்கி போயி அவா தலைல பிச்ச முடிய அந்த மரத்துல ஆணிய வச்சு அரஞ்சுட்டு, அந்த மரத்துக்குக் குங்குமம், மஞ்சளு, பூ போட்டுட்டு வீராயிய கூட்டிட்டு வந்துருவானாம். திலும்பி வரும்போது வீராயிட்ட பேயி இருக்காதாம். எசக்கி அந்த மரத்துல போயி நின்னுக்கிருமாம். மறுநாளு கோடாங்கியோட நாலஞ்சு ஆம்பளைக போயி எசக்கி கேட்டபடிக்கு சின்ன மரத் தொட்டுலு, சின்னப் புதுச் சொளகு, புதுச் சட்ட - இதுகளக் கொண்டு போயி அந்த மரத்துல கெட்டித் தொங்க உட்டுட்டு வருவாக. யாராச்சும் இந்தச் சாமானுகள எடுத்தா, எசக்கி அவுகளப் புடிச்சுக்கிருவாளாம்.

அங்னகுள்ள பொம்பளைக பேசுனதக் கேட்டுக்கிட்டே நாங்க வீட்டுக்கு வந்துட்டோம். "கோயிலு முடுஞ்சு பிள்ளக் காடெல்லாம் அப்பாதய வந்துருச்சுக; நீ எங்குட்டுப் போயிட்டு இப்பவார?" எங்கம்ம கேட்டா. நாஞ் சும்மானாலும், "கோயிலு முடுஞ்சு ஏழாப்பு பிள்ளைகளச் சாமியாரு கோயிலு கூட்டச் சொன்னாரு, அதான் இம்புட்டு நேரம்." ஒரு பொய்யச் சொல்லித் தப்புச்சுக்கிட்டேன்.

மறுநாளு தெருவுல வீராயி கல்லுத் தூக்கிப் போட்டதப் பத்தி பேசிக்கிட்டாக. "இனி கம்மாக்கர வழியா சாமயாமஞ் சினிமாப் பாத்துட்டு வாரவுக ஒசாரா வரனும். அந்த மரத்துப் பாதைலதான் வரனும் போகனும்," பாட்டி சொன்னா.

நா அப்ப பாட்டிட்ட கேட்டேன். "எதுக்கு பாட்டி பொம் பளைகள மட்டும் பேயி புடிக்குது. ஒத்த ஆம்பளயக்கூட பேயி புடிக்க மாட்டேங்கி?"

"ஆம்பளைகள எப்பிடிப் புடிக்கும்? அவனுக நெஞ்சுல தகிரியமா இருப்பாகள்ள, பயந்தாத்தான பேயி புடிக்கும். பொம் பளைகதான பயந்தாங் கொள்ளிகளா இருக்காளுக."

"அது மட்டுமில்லத்தா, பொம்பளைகளுக்குத்தான மாச மாசம் தீட்டு வர்ரது. அது இருந்தாலே பேயி புடிக்குமாம். ஆம்ப ளைக்கு அப்பிடி இல்லைல. கொழந்தையம்மா சொன்னா

இப்பிடி."

"அது என்ன எழவோ, அந்தப் பேய்க் கழுதைக்குக்கூட, நம்மன்னா ஒரு எளக்காரமாப் போயிட்டோம் பாத்துக்கோ", சிருச்சுக்கிட்டே சொல்லிட்டுப் போனா ராசம்மா.

"நீயெல்லாம் வெளாட்டுப் பாக்குல அந்த மரத்துச் செம போயிராதெ. போனாலும் அதுல கெட்டிக் கெடக்குற தொட்டுலு சொளக தூக்கியாந்துராதே. எசக்கி தொட்டானா லேசுல உடமாட்டா. அதுலயுங் கன்னி கழியாத கொமருகன்னா இந்தச் சென்மத்துல உடமாட்டா," பாட்டி ஏங்கிட்ட சொல்லிட்டு, "இந்த தலயக் கொஞ்சம் பாருத்தா. பேனு அப்பிடிக் கடிக்குது," சொல்லிக்கிட்டே கொண்டய அவுத்து உட்டு முடிய ஒதறிட்டு ஏம்முன்னாடி வந்து ஒக்காந்தா.

நானு தல வகுந்து பேனு பெறக்கிக் குடுத்தேன். பேனு பெறக்கும்போதே, "ஏம் பாட்டி தொட்டிலு, சொளகு வைக்காக. வேற சாமான் வச்சா என்ன" இப்டிக் கேட்டேன்.

"எசக்கிக்கு மாத்ரம் தொட்டிலு, பொம்ம, சொளகு இப்பிடித் தான் வப்பாக. அவா அப்பிடித்தான் கேப்பா", சொல்லிட்டு, "ஒனக்கு எசக்கி கத தெரியுமாத்தா?" ன்னு ஏங்கிட்ட கேட்டா. நாந் தெரியாதுன்னு சொல்லவும், அந்தக் கதயச் சொல்ல ஆரம்பிச்சா. கதகேக்குர ஆர்வத்துல நானு முன்னால போயி ஒக்காரவும், "நீ தல வகுந்துக்கிட்டே கேளு. நாஞ் சொல்றே" ன்னு சொன்னா. நானுஞ் சரின்னுட்டு பேனு பெறக்கிக்கிட்டே கேட்டேன்.

"அந்தக் காலத்துல ஒரு ஊர்ல ஒரு தாய் தகப்பனுக்கு எட்டுப் பிள்ளைகப் பெறந்திருக்கு. மொத ஏழும் வருசயா ஆம்பளப் பிள்ளைக. எட்டாவது ஒரு பொம்பளப் பிள்ள பெறந்திருக்கு. ஏழு ஆம்பளைக்குப் பெறகு ஒரே ஒரு பொம்பள பெறக்கவும் தாயுந் தகப்பனும் அப்பிடி சந்தோசப்பட்டாகளாம். ஏழு அண்ணமார்களும் பொன்னே, பூவேன்னு அந்த பிள்ளய வளத்தாகளாம். அந்தப் பிள்ள பேருதான் எசக்கியம்மா. அவள வளத்து ஆளாக்கி நல்ல எடத்துல கெட்டிக் குடுக்கனும்னு ஆளாளுக்கு ஆசப்பட்டு தங்கச்சிய ஒரு ஈ எறும்பு கடிக்காமெ வளத்துருக்காக.

"அப்ப அந்தக் காலத்துல பொம்பளப் பிள்ளன்னா மட்டமா நெனக்கலியாக்கும்?" நாங் கேட்டுட்டு பேனு பெறக்குரத உட்டுட்டு அவா முன்னாடி போயி ஒக்காந்தேன்.

"நீ பேனப் பெறக்குத்தா, நாங் கதய சொல்றேன்"னு சொல்லிட்டு தொயந்து பாட்டி சொன்னா. நானும் அரமனசா பேனு பெறக்கப் பின்னால போய் ஒக்காந்தேன்.

“என்ன கேட்ட. பொம்பளன்னா மட்டமுன்னா சொன்ன? அதெல்லாம் இந்தக் காலத்துலதான் அப்பிடி. அப்பயெல்லாம் ஆணுன்னாலுஞ் சரி, பொண்ணுன்னாலுஞ் சரி. பிள்ளன்னு பெறந்துட் டாலே சந்தோசந்தான். பிள்ள இல்லாமெ மலடியாத்தான் இருக்கக் கூடாது.”

சொல்லிட்டு செத்த நேரம் சும்மா இருந்த பெறகு எசக்கி கதய தொயந்து சொன்னா. “அண்ணமாருக அவளச் செல்லமா வளத்து ஆளாக்கிஉட அந்த முண்டைக்கு ராங்கித்தனம். போயும் போயும் வண்ணாப் பெயமேல ஆசவச்சுட்டா. இது எப்பிடியோ அண்ணமாருக்குத் தெருஞ்சு போச்சு. அவனுகளுக்கு வந்த வெளத்துக்கு அப்பிடியே அவளக் கண்டந்துண்டமா வெட்டிப் பெதச்சுரலாமான்னு இருந்துச்சு. அவளத்தனியாக் கூப்புட்டு ஆனமட்டும் புத்திமதி சொல்லிப் பாத்தாக. நல்லாப் பணக்கார மாப்பிளையாப் பாத்து கெட்டி வைக்கிறோம்னு எம்புட்டோ எடுத்துச் சொல்லி இருக்காக.”

“அவா சரின்னு சொல்லிட்டாளாக்கும்?” நானு பொறுக்க மாட்டாமெ கேட்டேன்.”

“பாதகத்திமகா சரின்னு சொல்லி இருந்தாத்தான் பெரச்சனையே இல்லியே. ‘ நானு வாக்கப்பட்டா அவுகளுக்குத்தான் வாக்கபடுவேன்.’ இப்பிடித் தெம்பாச் சொல்லவும், ‘நாங்க உசுரோட இருக்குர வரைக்கும் அது நடக்காது’ன்னு அண்ணங் காரனுக ஆவேசமா சொல்லிட்டுப் போயிட்டானுக.”

“அவனுக போனப் பெறகு பல மாதிரி யோசன பண்ணுனா. கடேசில அண்ணனுக வீட்டுக்குத் திலும்பி வர்ரதுக்கு முன்னாடியே வீட்ட உட்டுப் போயிட்டா. எங்க போனாங்குற? நேரா... அந்த வண்ணாப்பெய வீட்டுக்குப் போயி வெவரத்தச் சொல்லி அழுதுருக்கா.”

“ஒடனே அவெ என்ன செஞ்சுருக்காங்கற ? எசக்கிய கூப்டுகிட்டு வேற ஊருக்கு ஓடிப் போயிட்டான். அங்க போயி அதுக பாட்டுக்கு அன்னாடம் வேல வெட்டி செஞ்சு சந்தோசமா குடும்பம் நடத்திக்கிட்டு இருந்துருக்குக.”

“நீ மேல குருத ஏறாமெ பேனப்பெரக்கு தாயே. ஒடம்பே வலிக்குது.” அதட்டிக்கிட்டு மேல சொல்லப்போனா.

“எட்ட மாட்டேங்ல பாட்டி, அதான் எவ்வி எவ்விப் பாக்க வேண்டி இருக்கு,” நாஞ் சொல்லிட்டு பேனு பெறக்குத உட்டுட்டு எந்துருச்சு முன்னால போயி ஒக்காந்துக்கிட்டேன்.

சரின்னுட்டு பாட்டியும் முடிய ஒதறிக் கொண்ட போட்டுக்கிட்டே எசக்கி கதயச் சொன்னா.

“அந்த ஏழு அண்ணங்காரனுக என்ன அம்புட்டு லேசுபட்ட

வனுகனா நெனச்ச. எப்பிடிக் கூடியோ துப்புக் கண்டு புடுச்சு எசக்கி இருக்குற லெக்க கண்டுபுடுச்சுட்டானுக. இதுக்கெடையில எசக்கி முழுகாம நின்ருக்கா. அவா நெற மாத்தச் சூலியா இருக்கைல அண்ணங்காரனுக ரெண்டு பழங்கிழம் வாங்கிட்டு எசக்கி வீட்டுக்குப் போயிருக்கானுக."

பாட்டி இப்பிடிச் சொல்லிக்கிட்டு இருக்கைல எனக்கு மனசு படபடன்னு அடிக்கு. எசக்கிய என்னமுஞ் செஞ்சுருவாகளோன்னு தவியாத்தவிக்குது. "எசக்கிய அடுச்சுப் போட்டாகளாக்கும் பாட்டி" ன்னு நானு ஆத்துரப்பட்டு கேக்கவும்,

"இவா ஒருத்திடி 'ஆக்கப் பொறுத்தவா ஆறப்பொறுக்க மாட்டா' ங்குற கணக்குல, நாந்தான் சொல்லிக்கிட்டு வாராம்ல," பாட்டி நெதானமா சொல்லிட்டு கொட்டாவி உட்டுக்கிட்டே "தல வகுந்ததுக்கு அதுக்குமா ஒறக்கம் கண்ணுக்குள்ள வந்து நிக்கது,"சொல்லிக்கிட்டு முந்தாணிய எடுத்து கண்ணத் தொடச்சுக் கிட்டா.

"எசக்கிய என்ன பாட்டி செஞ்சாக? சொல்லிட்டு நீ ஒறங்கப்போ" நாஞ் சொன்னேன்.

"எடுத்த எடுப்புல அண்ணங்காரனுகள திடுதிப்புன்னு பாக்கவும் எசக்கிக்குச் சர்வ நாடியும் ஒடுங்கிப் போச்சு. பயத்துல வகுத்துல கெடந்த புள்ள அன்னியாரமே வெளிய வந்துருமோன்ன இருக்கு. அவா புருசனும் அஞ்சி ஒடுங்கி நின்னுருக்கான். வந்தவுகள வாங்கன்னுகூட சொல்லத் தோணாமெ ரெண்டுபேரும் பேயறஞ்சது கெணக்கா நிக்கவும் அண்ணங்காரனுகளே பேசியிருக்கானுக."

"எசக்கி, என்னம்மா அப்பிடி நின்னுட்டே? என்ன இருந் தாலும், ஒனிய கெணக்கா கல்லு மனசா எங்களுக்கு இருக்க முடியல. நீ வீட்ட உட்டு வந்ததுல இருந்து எங்களுக்கு மனசே ஒடஞ்சு போச்சு. நாங்களும் அங்ன இங்ன வெசாரிச்சுக்கிட்டேதான் இருந்தோம். பாவம் செல்லமா வளந்த நீயி எங்ன போயி என்ன கஸ்டப் படுறியோன்னு தெனமும் நெனைக்காத நேரமில்ல. கடேசியா இப்பத்தான் தெருஞ்சது நீ இந்த ஊர்ல இருக்கன்னு. எங்களுக்கு எம்புட்டு சந்தோசமா இருக்கு தெரியுமா? ஆனது ஆகிப் போச்சு. ஒஞ்சந்தோசந்தான் எங்களுக்கு முக்கியம்." இப்பிடி என்னத் தென்னத்தையோ சொல்லி ஏமாத்திப் பெறக்கி எசக்கிய கூட்டியாந்துட்டாக.

"அந்தப் பாவி முண்ட எசக்கியும் அவுக பேச்ச நம்பி அம்புட்டு சந்தோசமா பெறப்டு வந்துட்டா. அவா புருசனுக்கு மட்டும் மனசுல கடுகளவும் சம்மதமில்ல. பயந்துக்கிட்டேதான் அனுப்பி இருக்கான். அவா பெறப்படயிலயே கெவுளி அடுச்சுருக்கு. என்னமோ ஏடாகூடமா நடக்கப்போகுதுன்னு கெவுளிச் சத்தங்

கேட்டதுமே நெனச்சருக்கான்.” பாட்டி இதச் சொல்லும்போதே அவா கொரலே கரகரத்துப் போச்சு. எனக்கும் அழுக வார மாதிரி இருந்துச்சு. பெறகு செருமிக்கிட்டு பாட்டி மேல சொன்னா.

“ எசக்கிய கூப்டுகிட்டு போன சண்டாளப் பெயல்க அவள வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போகல. நேரா மலங்காட்டுச் செம கொண்டுக்கிட்டுப் போயிருக்கானுக. நம்ம இவனுகள நம்பி மோசம் போயிட்டமேன்னு எசக்கி அழுதுக்கிட்டு திமிறிட்டு தப்பிச்சுட்டு ஓடியார மொயற்சி செஞ்சுருக்கா. ஏழு ஆம்பளை களுக்குள்ள இவா ஒருத்தி என்ன செய்ய முடியும். வெளில யாருக்குந் தெரியாம இருக்கனும்னு, நல்ல கூண்டு வண்டிக்குள்ள இவள வச்சு, வாயில துணிய வச்சு அடச்சு, கையக் காலக் கெட்டி, மலங்காட்டுச் செம கூட்டிக்கிட்டுப் போயிட்டானுக.”

“ மலங்காட்டுல ஆளுக யாருமே இல்லியா பாட்டி?”

“இங்ன எதுப்பத்துலன்னா ஆடுமாடு மேச்சுக்கிட்டு இருப்பானுக. ஆனா இவனுக மலங்காட்டுலயே ரொம்பத் தொல வட்டுக்குக் கொண்டுட்டுப் போயிட்டானுக. அங்குட்டெல்லாம் மனுசமக்க நடமாட்டம் சாஸ்தி இருக்காது. ஆன, புலி, சிங்கம் இப்பிடி மிருகங்கதான் இருக்கும். அங்க போயி அந்தப் பிள்ளைய வண்டிலருந்து எறக்கி, நெறமாத்துச் சூலின்னுகூடப் பாக்காமெ, வீச்சறுவாளக் கொண்டி ஒரே வெட்டுல தல வேற ஒடம்பு வேறன்னு வெட்டிப் போட்டுட்டானுக. வகுத்தக் கீறிப் பிள்ளயும் எடுத்து அதயுங் கொதவளயத் திருகிக் கொன்னு போட்டுட்டு வீட்டுக்குப் போயிட்டானுக. இத எப்பிடியோ மலையடிவாரத்துல ஆடு மேச்சுக்கிட்டு இருந்தவனுக பாத்துட்டுப் போயி வண்ணாப் பெயகிட்ட சொல்லிட்டாக. அதக் கேட்டதுலருந்து அவெ வாயுல வகுத்துல அடுச்சு அழுதுட்டு அப்பிடியே கிறுக்குப் புடுச்சுப் போயி அந்த மலங்காட்டுச் செம ‘எசக்கி, ஏமா எசக்கி’ன்னு சொல்லிக் கிட்டே அலஞ்சுருக்கான். பெறகு என்ன ஆனான்னு யாருக்குந் தெரியல. பிலிகிலி அடுச்சுத் தின்னுருக்கும்.”

இதுக்கு பெறகு பாட்டியும் ஒன்னும் பேசல. நானும் கம்முன்னு ஒக்காந்துருந்தேன்.

கொஞ்ச நேரங் கழுச்சு பாட்டி சொன்னா, “அதுல இருந்து எசக்கிப் பேயா அலையுரா. தஞ்சாவு சாகாமெ, வெட்டுப்பட்டுச் செத் தாள்ள. அதுலயும் நெறமாத்தச் சூலியாச் செத்தாளா, அதான் அந்தப் பிள்ள ஆவுகத்துலயே அலைவா. அவா யாரப் புடுச்சாலும் தொட்டிலு, பொம்மை, சொளகு இப்பிடித்தான் கேப்பா.” பாட்டி சொல்லி முடுச்சுட்டு எந்துருச்சுப் போயிட்டா. நானும் வீட்டுக்குப் போயிட்டேன். எசக்கி கதய நெனச்சுக்கிட்டே படுத்துருந்த நானு, அப்பிடியே ஒறங்கிப் போயிட்டேன்.

எங்க தெருவுகள்ள பேய்களப் பத்தி நெறய்யாப் பேசுவாக. தஞ்சாவு சாகாமெ, தற்கொல செஞ்சுக்கிட்டாலும், வண்டிகிண்டில அடிபட்டுச் செத்தாலும் வெட்டுப்பட்டுச் செத்தாலும், அந்த ஆவிக பேயா அலயுமாம். இது தவுர மேற்க முனி இருக்குதாம். ஊருக்கு மேற்க இருக்கற பெரிய ஆலமரத்துல முனி இருக்கு. மரத்துத் தூர்ல ஏழு அண்டாப் பணத்தப் பெதச்சு வச்சுக்கிட்டு காவக் காத்துக்கிட்டு இருக்குதாம். வடக்கே என்னமோ ஐயங்காச்சிப் படைக அலையுதாம். சிறுசும் பெருசுமா பேய்க தீப்பந்தங்களோட கூட்டமா அலயுமாம். கேக்கவே புல்லரிக்கும்.

இந்த ஐயங்காச்சிப் படைகளப் பத்தி எங்க தெருவுகள்ள ஒரு கத சொல்வாக. இந்தக் கதயக்கூட எங்க பாட்டி வெள்ளையம்மாதான் எனக்குச் சொன்னா.

எந்த ஊர்லயோ, ஒரு பொம்பள பக்கத்து வீட்டுப் பொம்பளைட்ட போயி,“ஏ மதினி, நாளைக்கு ஏங் கொழுந்தனுக்குக் கலியாணம். போட்டுட்டுப் போக நக இல்ல. ஏம் பாம்படத்தக்கொண்டு போயி அடவு போட்டாக எங்க வீட்ல. வெறுங்காதா எப்பிடிப் போறது? நம்ம ஊருக்குள்ளனாக்கூட தேவல. இது மருதப் பக்கத்துல ஒரு ஊரு. நாலு சாதிசனம் வர்ர எடம். ஓ நகயக் குடு போயிட்டு வந்த ஒடனே பத்தரமா திருப்பிக் குடுத்துர்ரேன்,” இப்பிடிக் கேட்ருக்கா.

யோசிக்காமக் கொள்ளாம அந்த முண்ட வெள்ளிக்கெழம அதுவுமா, அதுவும் மசங்குனப் பெறகு போயி நகயக் கேட்டுருக்கா. நகக்காரி சொல்லிட்டா, “வெள்ளிக் கெழமயும் அதுவுமா வெளக்கு வச்சப் பெறகு எப்பிடி நகயக் குடுக்குறது? நீயி கொஞ்சம் வெள்ளனத்துல வந்து வாங்கியிருக்கப் படதா? சரி, நீ என்ன மருத வண்டிக்குத்தான போவ? நீ அதுக்கு முன்னால விடியக்கருக்கல்ல வந்து நகய வாங்கிட்டு போயிரு.”

இவளுக ரெண்டுபேரும் பராபத்தியாப் பேசிட்டுப் படுக்கப் போயிட்டாளுக. ஆனா மசங்குன நேரங்குறதுனால இந்தப் பேய்க் கண்டாரளிக இவளுக பேசுன பேச்சுக் கேட்டுக்கிருச்சுக. பேயிக வந்து ஆவிகதான. நம்ம கண்ணுக்குத் தட்டுப்படாமெ அலையுங்களாம்.

நடுச்சாமம் பன்னண்டு மணி இருக்குமாம். இந்த ஐயங்காச்சிப் படைக்குத் தலைவரா இருக்குற பேயி பக்கத்து வீட்டுப் பொம்பள கெணக்கா வேசம் போட்டுகிட்டு நகக்காரி வீட்டுக் கதவப் போயி தட்டி இருக்கு. பேயிக எந்த ரூவத்துலயும் வருமாம்.

“மதினி, நேரமாச்சு; அந்த நகயக் குடுக்கீகளா? பேயி பக்கத்து வீட்டுப் பொம்பள கெணக்காவே பேசி இருக்கு. ஒடனே

அவா எந்துருச்சு வந்து ஒறக்கச் சடவோடய நகயக் கொண்டாந்து குடுத்துருக்கா. பேயும் நகய வாங்கிக்கிட்டு காட்டுச் செம அதுக எல்லைக்குள்ள போயி ஒவ்வொரு பேய்க்கா நகயப் போட்டு போட்டுப் பாத்து கும்மி அடுச்சுக்குட்டு ஆடிக் கும்மாளம் போட்டுக்குட்டு இருந்துருக்குக.

கோழி கூப்டற நேரத்துல பக்கத்து வீட்டுக்காரி சீலயக் கீலயக் கெட்டிக்கிட்டு வந்து நகயக் கேட்டுருக்கா. ரெண்டு பேருக்கும் சண்டக்காடு நாறிப் போச்சாம். ராத்திரி வந்து நகய வாங்கிட்டுப் போயிட்டு விடியங் காட்டி வந்து வாங்கலன்னு அழிச்சாடியம் பண்றா. வாங்காதது கெணக்கா நகய கேக்கான்னு சொல்லிக்கிட்டு பச்ச பச்சயா அப்பிடிக் கிழிச்சாளாம்.

பக்கத்து வீட்டுக்காரியும், "இம்புட்டு ஏமாத்துக்காரிய நாம் பாக்கல சாமி. தொட்டாலேப் பலிகுடு பாண்டித் தேவான்னு சொல்வாகளாம். அது கெணக்கா இவா இந்தப் போடு போடுறா. நக கேட்ட தோசத்துக்கு இவாட்ட இந்தப் பேச்சு வாங்கவேண்டி இருக்கு . நடுச்சாமத்துல வந்து நகய வாங்கிட்டுப் போனம்னு வாய் கூசாமெ புளுகித் தள்ளுரா பாரு. புளுத்தள்ளித்தான் சாவா இவா," இப்பிடி ரெண்டுபேரும் மாறி மாறி வஞ்சுக்கிட்டு சண்ட போட்டுக்கிட்டு இருந்தாளுக.

நகக்காரியோட புருசன், "எதுக்கு நகயக் குடுத்தன்னு" அவளப் போட்டு அடிக்கான். பக்கத்து வீட்டுக்காரியோட புருசன் "எதுக்கு ஓசி வாங்கப் போனன்னு" அவளப் போட்டு அடிக்கான். அடி வாங்க வாங்க ரெண்டு பொம்பளைகளும் ஆக்ரோசமாக கத்த ஊரே கேடு நாடே கேடுன்னு ஆகிப் போயி அந்தத் தெருவே கூட்டமா நின்னு வேடிக்க பாக்குது.

இதுக்கெடயில, ராத்திரி தண்ணி பாச்சப் போயிருந்த அந்தத் தெரு ஆளு ஒருத்தரு மம்பிட்டியுங் கையுமா வீட்டுக்குத் திரும்பி வந்துக்கிட்டுருந்தாரு. இவளுக எந்த நகைக்காகச் சண்ட போட்டுக்கிட்டு இருந்தாளுகளோ, அந்த நக அவரு கைல இருக்குது. அதப் பாத்ததும் ரெண்டு பேரும் கப்சிப்புன்னு ஆயிட்டாளுக. அங்ன கூடி நின்ன அம்புட்டுச் சனமும் தெறந்த வாயி மூடாமெ அந்த அண்ணாச்சியப் பாத்தாக. அவரு வந்து நடந்த வெசயத்த வெலாவாரியாப் பிட்டு பிட்டு வைக்க, அம்புட்டுச் சனமும் மூக்குமேல வெரல வச்சுக் கேட்டுச்சுக.

"அட மடப்பெயமக்கா, நீங்க ரெண்டு பேரும் அனாவசியமா இங்க சண்ட போட்டுக்கிட்டு கெடக்கீக. அங்ன என்னடான்னா, இந்த நகய வச்சுக்கிட்டு ஐயங்காச்சிப் படைக ஆடிக்கிட்டுக் கெடக்குதுக."

இதக் கேட்டதும் சக்திமுத்தா, அதான் நகய குடுத்தவா, “நா இவாகிட்ட குடுத்த நக எப்பிடி பேய்க்கழுத கைல சிக்குச்சு,” நம்ப மாட்டாம கேட்டா.

சக்திமுத்தாளுக்கும் நக கேட்டுப் போன பக்கத்து வீட்டுக்காரிக்கும் என்ன நடந்துச்சுன்னு தீர விசாரிச்சுட்டு, ஒன்னு ஒன்னும் ரெண்டுன்னு கரெக்டாச் சொல்லிப்புட்டாரு அந்த அண்ணாச்சி.

“அந்த அண்ணாச்சிக்கு எப்படிக் கரெக்டா தெரியும் பாட்டி,” ன்னு நாங் கேட்டேன்

பாட்டி குறுஞ்சிரிப்பா சிருச்சுக்கிட்டு, இந்தப் பெயமக்க மசங்குன நேரத்துல பேசிக்கிட்டத ஐயங்காச்சிப்படைல ஒரு கழுத கேட்டுக்கிட்டு இருந்துட்டு நடுக்குடுச் சாமத்துல பக்கத்து வீட்டுக்காரி ரூவத்துல போயி சக்திமுத்தாட்ட நகயக் கேட்டுருக்கு. அவளும் ஒறக்கச் சடவுல எந்துருச்சு விடுஞ்சுதான் போச்சுன்னு வந்து நகயக் கொண்டு போயி கழுதியிட்ட குடுத்துட்டா. குடுத்த சிறுக்கி முண்ட, வந்த கழுதைக்குக் காலு இருக்கான்னு பாத்துருந்தா சுதாருச் சுருந்துருப்பா.”

“எப்பிடி?” நாங் கேட்டேன்.

“பேய்க்கழுதைகளுக்குத்தான் காலு இருக்காதே. அருவியாத் தான நிக்கும்,” பாட்டி இப்பிடிச் சொல்லவும் எனக்கு ஒன்னும் வெளங்கல. ஆனாலும் மேக்கொண்டு என்னாச்சுன்னு தெரியனும்னு ஒன்னுங் கேட்டுக்கல.

“நகய வாங்கிட்டுப்போனப் பெசாசுக் கழுத காட்டுச் செம போயி ஒரோரு பேய்க்கா நகயப் போட்டு அழகு பாத்துருக்க. பேய்க் கண்டாரளிக்குக் கூட எம்புட்டு ஆசைன்னு பாத்துக்கோ,” சொல் லிட்டு பாட்டி பொக்கவாயக் கொண்டி அழகா சிருச்சா. நானுஞ் சிருச்சுக்கிட்டேன்.

“அந்நியாரம் பாத்து இந்த அண்ணாச்சி வயக்காட்ல தண்ணியப் பாச்சிட்டு வந்துருக்காரு. என்னடா எழவு இங்னக்குள்ள ஒரே கூத்துஞ் சத்தமுமாக் கேக்குதேன்ன சொதாருச்சுக்கிட்டு கைல இருந்த பேட்ரிக் கட்டயக் கொண்டு வெளிச்சத்த அடுச்சுப் பாத்துருக்காரு. பாத்தா, அவரு வகுத்துல கெடந்த கட்டிப் பீயெல்லாங் கரஞ்சு போயி பயத்துல ஒடம்பு சில்லுட்டுப் போச்சாம்.”

பாட்டி சொன்னதைக் கேட்டுக்கிட்டு இருந்த எனக்கும் அடி வகுத்தக் கலக்குர மாறி இருந்துச்சு. பயத்துலு வெரச்சுப் போயி நாங்கேட்டுக்கிட்டு இருந்தேன்.

“பாத்தவரு சட்டுன்னு நெதானுச்சு யோசுச்சிருக்காரு. மேல

போட்டுருந்த வேட்டி துண்ட அவுத்து வச்சுட்டு, இடுப்புல கெடந்த அண்ணாக் கவுத்தக் கூட அறுத்துப் போட்டுட்டு முண்டக்கட்டையா இவரும் போயி பேய்க் கூட்டத்தோட கூட்டமா ஆடிருக்காரு.”

“அவளுக பேய்க்கழுதைகளுக்கு பாட்டு ஒரு கேடு. என்ன சொல்லி ஆடிருக்குதுங்குற? யே,... சக்தி முத்தா குடுத்த நகைய அண்ணனுக்குப் போடுங்க நல்லா இருக்கு. யே...தம்பிக்குப் போடுங்க நல்லா இருக்கு. இப்பிடிச் சொல்லிக்கிட்டு நகய ஒருத்தர் மாத்தி ஒருத்தரு போட்டுக்கிட்டு ஆடவும், இந்த அண்ணாச்சிக்கும் போட்டு உட்டுருக்குதுங்க. நகய கைப்பத்துனாரோ இல்லியோ, அந்தானைக்கு பக்கத்துல போட்டுருந்த மம்பிட்டிய எடுத்து ஐயங்காச்சிப் படைக பொச்சுல இறுத்திருக்காரு. வச்ச வப்புல அம்புட்டும் மாயமா மறைஞ்சு போச்சாம். மம்பிட்டி இரும்பு பாத்தியா. இரும்புக்குப் பேய் கழுதைக பயப்படும்.”

“பெறகு துணிமணிகள எடுத்துக் கெட்டிக்கிட்டு வந்து சக்திமுத்தாட்ட நகயத் திலுப்பிக் குடுத்துருக்காரு. மறுநாளு அங்குட்டுக் கூடி வேல வெட்டிக்குப் போனவளுக வந்து சொன்னாளுகளாம். அந்த அண்ணாச்சி பெசாசுகளலெக்குல பத்து பன்னெண்டு கரட்டாண்டிகளா செத்து வெரச்சப் போயி கெடந்துச்சுகளாம். நாஞ் சொல்லல, பெசாசு எந்த ரூவமும் எடுக்குமுன்னு.”

அதுல இருந்து பாத்துக்கோ மசங்குனப் பெறகு பெலக்கா எதையுஞ் சொல்லக்கூடாது. எனிய உசுப்பு, ஒனிய உசுப்பு, இப்ப வாரேன் அப்ப வாரேன்னு ஒரக்கச் சொல்லக்கூடாது. ஒறக்கத்துல யாரும் உசுப்புனாலும் மொதல்ல காலு இருக்கான்னு பாத்தரனும்,” பாட்டி இப்பிடிச் சொல்லவும் நாங்க சின்னப் பிள்ளைக ஒருத்தருக் கொருத்தரு காலப் பூசைக்கு வந்து உசுப்பி உடக்கூட சொல்ல மாட்டோம். பேயி வந்து உசுப்பிக் கொண்டுக்கிட்டு போயிரும்னு பயந்தான்.

மறுதடவ மனச்சிப் பிள்ள பேயாடும் போதுகூட நாம் போயி பாக்கப்போகல. பாட்டி சொன்ன கதைல, ஆம்பளன்னா தைரியமா பேயக்கூட அடிக்கான்; பொம்பளன்னா பேயி ஈஸியா புடிக்குதேன்னு நெனைக்கேன். பொம்பளகள்ளயும் இந்த மேகலக் குடி பொம்பளைகளப் பேயி புடுச்சி ஆடுனதா நாங் கேள்விப் பட்டதே இல்ல. பேயி பூராம் இந்த பள்ளக்குடி, பறக்குடி, சக்கிலியக்குடி, கொறக்குடி பொம்பளைகளத்தான் புடிக்குதுக.

எங்கம்மயிட்ட ஒரு நாளு இதபத்திக் கேட்டதுக்கு, “நம்ம பொம்பளைகதான காடுகரைக்கு வேல வெட்டிக்குப் போறாளுக. பேய்க்கழுதைக காட்டு மாட்டுச் செமதான அலயும். சுத்தம்பத்தம் இல்லாம காடுகரைகள்ள போம்போது பேயி புடிக்கும். தீட்டுக்கலக்கோட போயி பயந்துட்டா பேயி ஒடனே புடிக்கும்.

மேகலக்குடி பொம்பளைகளும் நம்மள மாதிரி வேல வெட்டிக்குப் போனா பேயி அவுகளயுந்தான் புடிக்கும். பேய்க்கழுதைக்கு யாருன்னா என்ன? ஆம்பளைகள மட்டும் புடிக்காது. ஏன்னா ஆம்பளைகளுக்கு நெஞ்சுல தைரியம் இருக்குல்ல. பொம்பளைகள்ளகூட பயப்படாமெ துணுஞ்சு போறவளுகள பேயி புடிக்காதே," இப்பிடின்னு எங்கம்ம சொன்னா.

எனக்கு வெவரந் தெரியத் தெரிய நெசத்துக்கு பேயி இருக்கான்னு நெனச்சேன். எப்பிடி வந்து பேயி பொம்பள மாதிரி வேசம் போட்டு நகய வாங்கும்னு யோசனயா இருந்துச்சு. சும்மா கதைக்குத்தான் பாட்டி அப்பிடி சொல்லிருப்பான்னு நெனச்சுக் கிட்டேன்.

பேயிகூட ஆம்பளைக்குப் பயப்படும் பொறுக்கோன்ன நெனச்சேன். அப்ப ஆம்பளன்னா எல்லாக் கழுதையும் பயப்படு மோன்னு வேற சந்தேகமா இருந்துச்சு. எங்கம்ம சொன்னது கெணக்கா, நெஞ்சுல தைரியமிருந்தா பயமில்லாமெ இருக்கலாம். பேய்க்கு மட்டுமில்ல, ஆம்பளைகளுக்கும் நம்ப பயப்படாமெ இருக்கலாம். இருட்டக் கண்டா பயம், ஒத்தயில போக வர பயம், இப்பிடி எங்குட்டுப் பாத்தாலும் பயங்காட்டித்தான் வைக்காக.

அதுலயும் பொம்பளப் பிள்ளைக சடங்காயிட்டாப்போதும். என்னத் தென்னத்தையோ சொல்லி அவுக நடமாட்டத்தக் கட்டுப் படுத்துராக. நம்மளும் பயந்து போயி மெரண்டு மெரண்டு முழுச்சுக்கிட்டு, எல்லாத்துக்கும் அச்சப்பட்டு நடுங்கிச் சாகுரோம். அரண்டவங் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயின்னு சும்மாவா சொன்னாக. நெஞ்சுல துணிவு இல்லாட்டி நம்ம சக்திபூராம் எழந்து ஒரு பெரயோசனமும் இல்லாமப் போவோம். துணிச்சலா இருந்தம்னா எதையுஞ் சாதிக்கலாம்.

வெவரந் தெரியத் தெரிய இந்தப் பேயி பெசாசு எல்லாம் சும்மானாச்சுக்கும்னு தெருஞ்சுக்கிட்டேன். ஆனா எதுக்குப் பொம்பளைகள மட்டும், அதுலயும் தலித்துப் பொம்பளைகள மட்டும் பேயி புடிக்குதுன்னு நெனச்சுப் பாத்தேன்.

எங்க பொம்பளைக வாழ்க்கையப் பாக்கையில இதுக்கு என்ன காரணமுன்னு தெரியுது. விடியங்காட்டி எந்துருச்சதுல இருந்து வீட்ல வேல, பெறகு காட்ல வேல, வீட்ல புருசம் பிள்ளைகளோட புடுங்கலு, காட்ல சம்சாரிகளோட இம்ச, பயம், குறுக்கொடிர வேல, பெறகு மசங்குனப் பெறகு வீட்டுக்கு வந்தப் பெறகும் மூச்சு உடக்கூட நேரமில்லாத வேல. தண்ணி பாத்து, வெறகு பாத்து, கஞ்சி காச்சி, புருசம் பிள்ளைக பசி ஆத்திட்டு நிம்மதியாப் படுத்தோம்; எந்துருச்சோம்னு இல்ல. ரவைக்கு ரவைக்குப் புருசங்காரன் இஸ்டத்துக்குக் கட்டுப்பட்டே ஆகனும்.

ஒடம்பு ரணவலி வலுச்சாலும் அவனுக்கு அவெஞ் சந்தோசந்தான் முக்கியம். இந்த வெறுப்பு, சலிப்பு, களைப்பு எல்லாஞ் சேந்து, பொம்பளைகள ஒரேடியா அமுக்கிப் போடுது. அதுனால கொஞ்சந் தெம்புக்காரிகன்னா எப்பிடியோ சமாளுச்சு காலத்த ஓட்டிராளுக. மனசுல கோளாறு ஆகி இப்பிடி பேயி புடுச்சு ஆடுற மாதிரி ஆகிப் போறாளுக.

எங்க ஆம்பளைகளுக்கு இந்தப்பாடு கெடையாது. கடுமயா ஒழச்சாலும், அவுகளுக்குன்னுச் சொதந்தரம் இருக்கு. பொம்பள பிள்ளைகள அடக்கி ஆண்டுச் சொகங் கண்டுக்கிறானுக. வீட்ல அவனுக வச்சதுதாஞ் சட்டம்; அவெஞ் சொன்னதுதான் வேதவாக்கு.

இந்த நெலமய ஒணந்துக்கிட்டு நம்ம இன்னும் பேயி பெசாசுன்னு ஆடிக்கிட்டு நம்மளயே ஏமாத்திக்கிட்டு இருக்கக் கூடாது. நம்மளும் தெம்பா இருக்கனும். ஒரு ஆக்ரோசத்தோட சொதந்தரமா வாழனும்னு வைராக்கியத்தோட வாழ்ந்து காட்டனும். மனசுல நொடுச்சுப் போயி நம்ம தல எழுத்து அம்புட்டுத்தாம்னு சோந்து போயிராமெ, சொணங்கிப் போயிராமெ, நம்ம ஒடம்புல வலு இருக்கந்தட்டிக்கும் ஒழைக்குரது கெணக்கா, மனசையும் வலுவாக்கி வாழனும்னு நானு நெனச்சுக்கிட்டேன்.

# ஆறு

எங்க பாட்டி வயசான காலத்திலயும் வேலவெட்டிக்குப் போயிக்கிட்டுருந்தா. ஒருத்தி ஒத்தையா இருந்து வயசான காலத்துலயும் வெறகு பாத்து, சுள்ளி பாத்து தனி ஒல வச்சு காச்சிக் குடுச்சா. அவா சூடக் கருவாடு போட்டு கொழம்பு வச்சா அம்புட்டு ருசியா இருக்கும். பல்லு இல்லன்னாக் கூட நாயித்துக் கெழம மாடு அடுச்சாகன்னா, கொடலு குந்தாணியக் கூட வாங்கிக் கொழம்பு வப்பா. கறிக் கொழம்பு வச்சான்னா போணில கொஞ்சம் ஊத்தி எங்களுக்குக் கொண்டாந்து குடுப்பா.

அப்பிடித்தான் ஒருநாளு நானு பாட்டி வீட்ல ஒக்காந்து கேப்பக்களியும் மாட்டுக் கொடலுக் கொழம்பும் தின்னுக்கிட்டு இருந்தேன். அந்நியாரம் மரியம்மா அங்க வந்தா . வகுத்துப் பிள்ளக்காரின்னு பாட்டிதான் களி திங்க வரச்சொன்னாளாம். அவளுக்குங் களியப்போட்டுக் குடுத்தா பாட்டி. நாங்க தின்னுக்கிட்டு இருக்கும்போதே மேலத்தெரு சடச்சிப் பிள்ள வந்து,

“ஏத்தா மரியம்மா நீ இங்கயா இருக்க. நானு ஒனிய தேடிக்கிட்டு ஒங்க வீட்டுச்செம போயிட்டு வாரேன்,” சொல்லிக் கிட்டே திருணயில ஒக்காந்தா.

“எதுக்குக்கா எனியத் தேடுன?” மரியம்மா கேக்கவும், “ஏத்தா சங்கதியக் கேட்டியா? அவா ராக்கம்மா பிள்ளைக்கும் அவா புருசனுக்கும் சண்டக்காடு நாறிப்போச்சு. தெருவே கூகொல்லோன்ன அலையுது,” சடச்சி சொல்லவும்,

“எந்த ராக்கம்மா பிள்ள?

“அதாம்தா ஒங்கலியாணத்தன்னைக்குத் தாலி கெட்டி வர்ல? அதான் அந்த குப்பச்சிபட்டிக்காரி.” சடச்சி எனமாச் சொல்லவும், பாட்டி சொன்னா, “அந்தக் கழுதைக என்னைக்குத்தான் சண்ட சச்சரவு இல்லாம இருந்துச்சுக. ஆனாலும் அந்தப் பெய பாக்கிய ராசுக்கு இம்புட்டு இடும்பு கூடாது. ஒரு நாளு பாக்கி இல்லாமெ குடுச்சுப் போட்டு வந்து அவளப் படுத்துரபாடு! அவளாங் காட்டி அவெங்கூட இருந்து வாழ்க்க நடத்துரா. ஏங் கூட்டாளிக்கு வாக்கப்பட்ட மூனா நாளே ஓடியாந்துருப்பேன்.”

“ராக்கம்மாப் பிள்ளய லேசுப்பட்டவள்னா நெனைக்க? நீ கூட இருந்து பாத்தின்னா தெரியும். நானு அவுக வீட்டுக்கு எதுத்த

வீடுதான. தெனமும் ரகளதான்.” சடச்சி சொல்லிக்கிட்டே மரியம்மா பெளேட்டுல இருந்து இத்தினிக் களியெடுத்து வாயுல போட்டா.

நானு வேக வேகமா தின்னுட்டு சண்டயப் பாக்கனும்னு ஓடுனேன். பாக்கியராசு கண்டமாணிக்கு பச்ச பச்சயா வஞ்சுக்கிட்டு அடிக்கப் போறான். ராக்கம்மாவும் பதிலுக்குப் பதிலு வஞ்சா. அவெங் கையி மேல படமுன்னே “ஐயய்யோ எம்மா, எனிய கொல்ரானே சண்டாளப் பெய கட்டைல போறவன், அதக் கரும்பி இதக் கரும்பி, கொள்ளக் கரும்பி, கொழலக் கரும்பி ” இப்பிடி கத்திக் கத்தி வஞ்சா.

“அவா கண்டாரளி அடிக்கமுன்ன அலர்ரத பாரு, வாயப் போடுடி ங்கோத்தா. இல்லன்னா வகுத்துல மிதிக்குற மிதில எரப்ப செதறனும் ங்கொம்மாக்....” இப்பிடி வையவும் ராக்கம்மா சும்மா உடல.

“எங்கடா, எத்துடா நீயி பாப்பம். எத்து நீ சரியான ஆம்பளன்னா எத்திரு பாப்பம். பொம்பள இதக் கடிக்கத்தான வருவ ஓமுட்டு ஆம்பளைகட்ட போயி சண்ட போடு. சூத்துல அணப்புப் பட்டு வருவ. எத்துர மொகரயும் மூஞ்சியும் பாரு; தூ...” ன்னு துப்புகளுச்சா.

பாக்கியராசுக்குக் கோவம் இன்ன மட்டுமின்னுல்ல. “அவா பொம்பள கெணக்காவா பேசுரா. தட்டுக்கெட்ட முண்ட. ஓராங்கியெல்லாம் குப்பச்சிப் பெட்டியோட வச்சுக்கோ. இங்கு காட்ன ஒற்றே மிதிலே சதம்பிப் போகும் சதம்பி, நாவகம் வச்சுக்கோ,” கோவமாக சொல்லிட்டு வந்ததே சரின்னு ராக்கம்மா முடியப் புடுச்சு இழுத்துப் போட்டு அடி வகுத்துல பாத்து ஒரு எத்து எத்திப் போட்டான்.

எத்து வாங்குனப் பெறகு ராக்கம்மா எந்துருச்சு சத்தம் போட்டு அலறுனா. கெட்ட கெட்ட வாத்தயா வஞ்சுக்கிட்டு மண்ண வாரித்தூத்துனா. “ஓடியாந்து மிதிக்க நீயி, சாதி கெட்ட பெய... ஓங்கையால குட்டம் பத்த, முடியவாடா புடுச்சு இழுக்க? மொன்ன மாறிப் பெயலே. பொம்பளக் குசுவக் குடிக்குற பொண்டுகப் பெயலே. தெனமுஞ் சாராயங் குடிக்குதுக்கு ஏம்மகன் மோத்தரத்தக் குடி. ஏந்துமையக்குடி,” சொல்லிக்கிட்டே அம்புட்டுப் பேருக்கு முன்னால சீலயத் தூக்கிக் காட்டுரா.

அந்தாணிக்க பாக்கிராசு வஞ்சுக்கிட்டே போயிட்டான். அங்ன இருந்த பொம்பளைகள்ளாம், “இவா என்ன மனுசிதானா? அந்தச் சின்னய்யன், முடியப்பன், வாத்தியாரு, அண்ணந்தம்பி கள்ளாம் நிக்காக. அவா பாட்டுக்குச் சீலயத் தூக்கிக் காட்டுரா. வெக்கங் கெட்ட கழுத. படுச்ச பிள்ளைக வந்துக்கிட்டும் போய்க் கிட்டும் இருக்குதுக. இப்பிடி அடங்காத லண்டியா இருக்காளே,” ஆளாளுக்கு வஞ்சாக.

ஒடனே ராக்கம்மா சொல்றா; “நீங்க ஒங்க சோலி மயித்தப்பாத்துட்டுப் போங்க. தெனமும் அடிவாங்கிச் சாகுர எனக்குல தெரியும். இவன இப்பிடித்தான் வழிக்குக் கொண்டு வரனும். இல்லின்னா இந்நியாரம் எம் மண்டயப் பேத்துருப்பான் எடுவட்ட பெய.”

ராக்கம்மா செஞ்சதப் பாத்துட்டு எனக்கும் மொதல்ல சீ, என்ன இந்தப் பொம்பள இப்பிடிக் காட்டுரான்னு இருந்தாலும், அவா இப்பிடியெல்லாம் வஞ்சு அலறி கத்துனப் பெறகுதான் பாக்கியராசு அடிய உட்டுட்டுப் போனதப் பாத்தா, அவெங் கிட்டருந்து தப்பிக்கத்தான் இவா இப்பிடிச் சொய்ரான்னு நெனச்சுக் கிட்டேன்.

இதுமாறி புருசம் பொண்டாட்டி சண்டைக தெனமும் எங்க தெருவுகள்ள நடக்கும். அப்பிடித்தான் ஒருநாளு ராத்திரி கஞ்சி குடிச்சப் பெறகு நாங்க பொம்பளப் பிள்ளைகளா ரோஜாப்பூவே மெல்ல வந்து மெல்லப் போன்னு கண்ணப் பொத்திக்கிட்டு வெளாடுற வெளாட்டு வெளாண்டுக்கிட்டு இருந்தோம். திடுதிப்புன்னு ஒரு பொம்பள கெழக்காம ஓடியாந்தா, வகுத்துப் பிள்ளக்காரி வேற. அவா பின்னாலியே அவ புருசங்காரன் மலஞ் செறகாயத் தூக்கிக்கிட்டு அவள வெரட்டிக்கிட்டு வாரான். நல்ல காலத்துக்கு அங்ன சாவடில இருந்த ஆம்பளைக அவன மடக்கிச் செறகாயப் புடுங்கிட்டாக. அப்பயும் உடல. அவென் திமிறிக்கிட்டு ஓடியாந்து அந்தப் பொம்பள தலமயித்தைப் புடுச்சுத் தரதரன்னு இழுத்துக்கிட்டு “எங்கடி ஓடற? எங்க போனாலும் ஏங்கைல சிக்காமெ போமாட்டங்கொம்மா கொள்ளு. யாருட்ட வந்து மப்புதனம் பண்ற?” வஞ்சுக்கிட்டு இழுத்துக்கிட்டே போறான்.

அவா மாசமா இருந்ததுனால அவ வகுரெல்லாம் தரயில ஒரசிக்கிட்டே போகுது. அதப் பாத்த சனங்க, “ஏலேய், மிருகசாதிக் குப் பொறந்த மிருகப் பெயலே, கொஞ்சமாச்சும் ஈவு எரக்கம் இருக் காடா? வகுத்துப்பிள்ளக்காரின்னுகூட பாக்காமெ இந்த இம்ச படுத்துர” ன்ன வஞ்சாக.

ஒடனே அவனும் பதுலுக்கு, இந்த “கண்டாரத்தகொள்ளு மகா உட்டா ஓடிப்போவா,” சொல்லிக்கிட்டு முடியப்புடுச்சு அலாக்கா தூக்கிட்டுப்போனான்.

முடிய மட்டும் புடுச்சுத் தூக்கவும் வலில துடுச்சுப் போயி அலறுனா. அப்பயும் அவென் உடல. அப்பிடியே செந்துனுக்காத் தூக்கிட்டுப் போயி வீட்டுக்குள்ள போட்டு கதவச் சாத்திக்கிட்டு அடுச்சான் பாவிப்பெய. இதப்பாத்த நாங்கள்ளாம் அழுதுட்டோம்.

அந்தப் பிள்ளையோட தாயி தகப்பங்கிட்டப் போயி சனங்க இதச் சொன்னதுக்கு, “இது அவளாப் பாத்துக்கிட்ட மாப்பளதான.

நாங்க பாத்தா கெட்டி வச்சோம். கூட்டிக்கிட்டு ஓடும்போது வலிக்கல. இப்பகெடந்து சீரழியரா. நாங்க என்ன செய்ரது," சர்வ சாதாரணமாகச் சொல்லிட்டு இருந்துக்கிட்டாக.

"இத்தனைக்கும் அந்தப் பிள்ள செஞ்ச குத்தம் வேற ஒன்னமில்ல. அவெஞ் சம்பளத்துட்ட கேட்டதாலதான் இம்புட்டு வாக்குவாதம் வந்துருக்கு. பாதகத்தி மகா துட்டுப் போனாப் போகுதுன்னுட்டு உட்டுருந்தான்னா இந்த கேவலப் பட்ட அடி வாங்கி இருக்க வேண்டாம்."

"ஆம்பள சம்பாருச்சுச் சாராயங் குடிச்சுக்கிட்டு கௌப்புக் கடைகள்ள தீவனந்தின்னுக்கிட்டுத் திருஞ்சா,பொம்பள ஒருத்தி வேல செஞ்சு பிள்ள குட்டிக பசி அமத்தி, சகலசோலியும் பாக்க முடியுமா?" ஆத்தமாட்டாமெ அங்ன நின்னவுக பேசிட்டுப் போயிட்டாக.

எங்க வீட்டுப் பக்கத்துல இருக்குற காளியம்மாளுக்கும் அவா புருசன் சின்னப்பனுக்கம் வார சண்டையப் பாத்தா ரொம்ப வேடிக்கையா இருக்கும். இந்தச் சண்டயப் பாக்கையில எனக்கு அப்பிடி மனசு கஸ்டப்படாது. ஏன்னா இதுல காளியம்மா சரிக்குச்சரியா மல்லுக்கு நிப்பா. செல நேரம் அவாதான் சண்டையில செவிச்சிருவா. அவெ அடுச்சாம்னா இவளும் திலுப்பிக்கிட்டு அடுச்சுப் போடுவா. அதுனாலேயோ என்னமோ வாச்சண்டயாத்தான் இருக்குமே ஒழுசு கைகலப்பு வராது.

ஒரு நாளு சின்னப்ப வீட்டுக்கு முன்னால ஒக்காந்து சொரக்கா வெட்டிக்கிட்டு இருக்கான். அவா காளியம்மா தண்ணி எடுத்துட்டு வந்தவா பிலுபிலுன்னு புடுச்சுக்கிட்டா. "நாம் போயி அம்புட்டு நீள வருசயில கொடத்தப் போட்டு காலு கடுக்க நின்னு அந்த முண்டைககிட்ட சண்ட போட்டுத் தண்ணி புடுச்சுட்டு வாரேன். நீ என்னடான்னா சொரக்காயுங்கையுமா வெளிய ஒக்காந்துக்கிட்டு அடுப்புல போட்ட தீயக்கூட தள்ளி உடாமெப் போட்டு அமத்தி போட்டுருக்க. எனக்கு மட்டும் ஆத்துரம்ங்ற? இந்தச் சொரக்கா மயித்த நாவந்து வெட்டமாட்டேனோ? ஒலயில அரிசி போட்டுட்டுப் போனா, தீயப் போடாமெப் போட்டு அம்புட்டும் நனயரிசிப்பட்டுப் போய்க் கெடக்கு. நானம் ஒனிய கெணக்கா வேனாப்பட்ட வெயில்ல கெடந்து செத்துப் போய்தான் வந்துருக்கேன். வந்து ஒனக்கு வக்கணையா வடுச்சுப் போட தண்ணி பாத்து, வெறகு பாத்து கடகண்ணிக்குப் போயிட்டு வந்து எனிய மனுசின்னு நெனச்சியா என்ன? இவெம் பெரிய மொதலாளிமாரு மாதிரி கம்மாயில போயி குளுச்சுட்டு வந்து சொரக்கா வெட்டுரானாம் சொரக்கா" வஞ்சுக்கிட்டு இடுப்புல இருந்த கொடத்த மெதுவா எறக்கி வச்சுட்டு, தலைல இருந்த பானைய

ஏறக்கி நங்குன்னு வச்சா.

சின்னப்பனுக்குங் கோவம் தாங்கல. அவனும் கத்த ஆரம்பிச்சான். "ஒனக்குப் புண்ணியத்துக்கு ஒக்காந்து காய வெட்டுனா ஏம் பேச மாட்ட. அந்தானிக்க அறுவாமனையக் கொண்டு எறுஞ்சம்னா பாத்துக்கோ," சொல்லிக்கிட்டே காய வெட்டுனான்.

ஒடனே பக்கத்துல இருந்த பார்வதி கெழவி, "அவெந்தான் காயி வெட்டுராம்லடி. நீ எதுக்கு வம்புக்கு நிக்க?"

"இவெங்காயி வெட்டி கடுச்சது போதும். நாம் போயி ஒட்டுப் பொறக்கி ஊம்பெறக்கி இத்தினி முள்ளுக் கெட்டி கொண் டாந்து அடுப்ப பத்த வச்சு அரிசியப் போட்டுட்டுப் போனா தீயப் போட்டானா பாட்டி. இப்ப திலுப்பியும் அடுப்புப் பத்த வச்சுக் கிட்டுக் கெடக்கனும். அது கழுத அம்புட்டும் பச்சமுள்ளா இருக்கு." ஊதி ஊதி வெலா எலும்பெல்லாம் வலிக்குது. சொல்லிக்கிட்டே அடுப்புப் பத்த வச்சா காளியம்மா.

அவா பொகைக்குள்ள ஊதிட்டு கெடந்ததப் பாக்கையில பாவமாத்தான் இருந்துச்சு. "ஏத்தா கொஞ்சஞ் சீமத்தண்ணி இருந்தா ஊத்து, ஒடனே பத்திக்கிடும்." சின்னப்பந்தான் சொன்னான்.

"சீமத்தண்ணி அந்தானிக்க வாங்கி வச்சுருக்க பாரு. எடுத்து ஒடனே ஊத்துரதுக்கு. நீயெல்லாம் மனுசம்னு வெளிய பேசாத. எறும்பு சேத்தது கெணக்கா நா இத்தினி இத்தினியா மிச்சம் புடுச்சு நூறு ரூவா சீட்டுப் போட்டேன். அதக்கூட எடுத்துத் தின்னு குசிவிட்ட. நீயும் பேசுறியாக்கும். மரியாதையா ஏந்துட்டக் குடுத்துரு. இல்லின்னா நடக்குரதே வேற," மெரட்டிட்டுத் திலும்பியும் குனுஞ்சு ஊதுனா.

"ஓ ரூவா ஏங்கெண்டக்காலு ரோமத்துக்குச் சமானம்டி. பெருசா ரூவாய பாத்துட்டா. ரெண்டு நாளைல தூக்கி எறிரேன். அப்பால நின்னு வாங்கிட்டுப்போ." சொல்லிக்கிட்டு காய வெட்டி முடிச்சுட்டான்.

"ஒரு அடுப்புப் பத்த வைக்கத் தெரியல. நீயெல்லாம் ஒலகத்துல ஒரு பொம்பளைன்னு இருக்க," சொல்லிட்டு ஒரு பீடியப் பத்த வச்சுக்கிட்டுச் சாவடிக்குச் செம போயிட்டான்.

இனி அவா சோறு காச்சி கொழம்பு வச்சு எறக்கவும் கரெக்டா மூக்கு முட்டத் திங்குரதுக்கு வருவான். அவெம் பீடி குடுச்சுட்டுப் போரதப் பாக்கையில எனக்கு ஆங்காரமா வந்துச்சு. மொகரயப் பாரு, கருவாப்பெயன்னு நானே அவன மனசுக்குள்ள வஞ்சுக்கிட்டேன்.

எங்க தெருவுகள்ள இப்பிடித்தான். ஆணும் பொண்ணும் காடுகரைகள்ள வேல செஞ்சுட்டு வந்தாலும் வீட்டுக்கு வந்த

ஒடனே ஆம்பளைக சாவடில, பசாருல போயி பொழுதக் கழுச்சுட்டுத் திங்க வருவானுக. ஆனா பொம்பளைக வீட்டுக்கு வந்த ஒடனே, சட்டிப்பான கழுவி, வீட்டக்கூட்டி, தண்ணி எடுத்து வெறகு பெறக்கியாந்து, கடகண்ணிக்குப் போயி அரிசி கொழம்புச் சாமானுக வாங்கிட்டு வந்து சோத்தக் காச்சி, கொழம்புவச்சு, கூழக் காச்சி, புருசம் பிள்ளைகளுக்குப் போட்டுக் குடுத்துட்டு மிச்ச மிருந்தா சாப்டுட்டுப் படுக்கனும்.

ஒடம்பெல்லாம் ரணவேதனையாய் படுத்தாலும் தூங்க உடமாட்டானுக. அவா செத்தாலும் பொழச்சாலும் அவனுகளுக்குச் சோலி முடியனும். இதெல்லாம் நெனச்சுப் பாத்தா சேய், இதென்ன பொழப்புன்னு இருக்கு. ஆம்பளையாப் பெறந்துட்டாக் கூடத் தேவல பொறுக்கோ.

இப்பெல்லாம் இத நெனக்கையில எதுக்கு நம்ம தெரு ஆளுக இப்பிடி குடிக்கிரதும், அடிக்குரதுமா அலையுரானுகன்னு பாத்தா, ஒருவேள மத்த லெக்குகள்ள அவனோட அதிகாரத்த, ஆம்பளங்ற திமுர, காட்ட முடியாத ஆத்துரத்தப் பூரா வீட்டுக்கு வந்து பொண்டாட்டியப் போட்டு வெளுத்து தீத்துகிரானுகளோன்னு நெனக்கேன்.

ஆம்பளன்னாலும், எங்க ஆம்பளையா இருக்கரதுனால காடுகரைகள்ள, சாம்சாரிக கிட்டயெல்லாம் வாலச்சுருட்டி வச்சுக்கிட்டு நாயிக்கெணக்கா அலைவானுக. அதுனால அவம் பாச்சா அங்க பலிக்காது, வீட்ல வந்து பொண்டாட்டி பிள்ளைக கிட்ட காட்டுரானுக. ஆனா நாங்க பொம்பளைக வெளியும், வீட்லயும் இப்பிடி இம்சப்பட்டுக்கிட்டே வாழனும்ங்கிறதுதான் தலவிதியா?

யோசிச்சுப் பாக்கையில, பொம்பளைக பூராம் ஆம்பளை களுக்கு அடிமைனாக் கூட எங்க பொம்பளைக படாத பாடுபடுராக. வேற சாதிப் பொம்பளைகளுக்கு இந்த மாதிரி இல்ல. காடுகரை கள்ள வேல வெட்டிக்குப் போம்போது மேச்சாதிக்காரப் பெயல் களோட இம்ச தாங்க முடியல. வீட்டுக்கு வந்தா, புருசக்காரனோட இம்ச தாங்க முடியாத இம்சயா இருக்கு.

சரி, இதுதான் இப்பிடின்னா, மேச்சாதிக்கார பொம்பளை கூட பொம்பளைக்குப் பொம்பள ஈவு எரக்கங் காட்டாமெ எங்க பொம்பளைகன்னா என்னமோ மான மருவாத ஒன்னுமில்லாத ஒரு உசுப்பிராணி கெணக்கா கேவலமா நடத்துராளுக. இவளுக வீட்டுக்குள்ளயே அடபட்டுக்கிட்டு திங்குறதும், பேலுரதும், புருசமாருக்கு ஏண்டவேல, எடுத்த வேல செய்யுரதுமா கெடந்தது கிட்டே இந்த மணியஞ் செய்ராளுக. அது என்னன்னுதான் இருவத்து நாலு மணி நேரமும் நாலு சொவத்துக்குள்ளயே அடஞ்சு

கெடக்காளுகளோ தெரியல.

அந்த வகைல பாக்கப் போனா நம்ம பொம்பளைக தானா கஸ்டப்பட்டு சம்பாருச்சு, கையில நாலு துட்டு பெழக்கத்துல இருக்காக. அவளுகள கெணக்கா எதுக்கெடுத்தாலும் புருசங்கிட்ட கையேந்திக்கிட்டு நிக்க வேணாம்.

ஆனா நம்ம சாதிய வச்சு, நம்ம வறுமய வச்சு, எல்லாப் பெயலும் நம்மள எச்சித்தனமாப் பாக்குரான், எங்குட்டுப் பாத்தாலும், போலிசுக்காரன் மொதக்கொண்டு, அது என்ன கலவரமுன்னு வந்தாலும், நம்ம எனசனப் பொம்பளைகளத்தான் மானபங்கப் படுத்துரானுக. இதுக்கு சருக்காரும் ஒன்னுஞ் செய்ராப்ல தெரியல. நம்மதான் துணுஞ்சு இந்தப் பெயலுக சிலுவாய இனுங்கிப் போடனும்.

ஓடுற நாயக் கண்டா வெரட்டுவனுக்குத் தொக்குங்ற கெணக்கா நம்ம பயந்துக்கிட்டே இருந்தம்னு வைவி. எல்லாப் பெயலும் ஏறி மேயிவானுக. மயிரு போனாப் போகுது, செத்தாலுஞ்சரி, பொழச்சாலும் சரின்னுட்டு எதுத்து நின்னம்னு வைவி, அம்புட்டுப் பெயலும் கவுடு மொழைவானுக.

'மண்ணுக்குள்ள இருக்குற மயிராண்டி உரிக்க உரிக்கத் தோலாண்டின்னு' ஒரு அழிப்பாங்கத இருக்கு. அது கெணக்கா இவனுகள்ளாம் ஈராங்கா கெணக்காத்தான் ஆச்சா போச்சான்னு கத்துவானுக. நம்மள ஒரு வாத்த பேசக் கூடாதும்பானுக. அவனுகட்டதான் சரக்கு இருக்குன்னு படங்காட்டுவானுக. நம்ம தெறமைகள நம்ம எதுக்கு மூடி மறைக்கனும்? அவனுகள கெணக்கா அம்புட்டு வேலயுஞ்செய்றோம். ஏ அவனுகளுக்கு மேலயே செய்றோம்னு சொல்லு. நம்ம இல்லன்னா ஒரு நாளு அவெ பிள்ள குட்டிகளுக்குச் சவரட்ன செஞ்சு, வீட்டப் பாத்துட்டு, வீட்ல நம்ம பாக்குற அம்புட்டையும் பாக்கச் சொல்லு. ஒற்றே நாள்ல பிட்டாணி தள்ளிப் போகும் பெயல்களுக்கு. இதப் பாத்தாம்னா குண்டிக்கொழுப்பு அடங்கும். அவெஞ் சாமானியத்துல யோசிக்க மாட்டான். நம்மதான் நம்ம உரிமைகள நெலநாட்டனும். எல்லாரையும் போல நாமளும் மனுசங்கதான்னு எந்துருச்சு நிக்கனும். மத்தவுக நம்மள எந்துருச்சு நிப்பாட்டுவாகன்னு இருந்தா ஜென்மத்துக்கும் அப்பிடியே கெடக்க வேண்டியதுதான்.

மேகலக்குடி பொம்பளைக என்னமோ புருசம் பொண்டாட்டிக சண்ட போடாது கொணக்கா மேலுமினுக்கிகளா காட்டிக்கிருவாளுக. என்னமோ எங்க தெருக்காட்டுகள்ளதான் அநாகரியமா சண்ட போட்டுக் கெடக்கம்னு சொல்லுவாக. அவளுக வீட்டுக்குள்ளற போயி பாத்தால தெரியும். ஓய்யாரக் கொண்டையாம் தாழம்பூவு, அதுல உள்ள இருக்குமாம் 'ஈறும் பேனு' ம்ங்ற

கததான். புருசஞ் சொல்லுக்குப் பெட்டிப்பாம்பா அடங்கிப் போவாளுக. போவேண்டியதுதான். ஏன்னா அவெங் குடுக்ற துட்டுலதான் வண்டி ஓடனும். அதுனால அவெ நில்லுன்னா நிக்கனும், ஒக்காருனா ஒக்காரனும்.

ஆனா எங்க தெருவுள்ள பொம்பளைகளும் ஆம்பளைக்கு சரிக்குச் சரியா சம்பாரிக்காக. ஆம்பளைகள்ள ரொம்பப் பேரு சம்பாருச்சாலும் துட்ட பொண்டாட்டிட்ட குடுக்கரதில்ல. பொம் பளதான் சகலத்தையும் பாக்குரா. அப்பிடி இருக்கையில, அவள அநியாயமா போட்டுக்குட்டு அடிக்கவும் மிதிக்கவும் செஞ்சா பொறுத்துக்கிட்டா இருக்க முடியும். அதான் சரிமல்லுக்கு நிக்கா. அவெங்கைட்ட பெலத்தக் காட்னா, இவா வாய்ட்ட பெலத்தக் காட்ரா. திலும்பி அடிக்க முடியாத கொறைக்கு, நல்லா நாலுவாத்த சாகும்படியா கேக்கா. வேற என்ன செய்றது?

ஆனாக்கூட, எல்லா பொம்பளைகளும் இப்பிடி இல்ல. நெறய்யாப் பேரு அடியும் மிதியும் வாங்கிக்கிட்டு நரகவேதன பட்டுக்கிட்டுதான் இருக்காக. ஒழச்சு ஒழச்சு ஓடாப் போறது ஒருதிக்கம்னா, இவனுககிட்ட அடி வாங்கியே அர உசிரும் கொர உசுருமாப் போறது இன்னொரு திக்கம். என்னைக்குத்தான் எங்களுக்கு விடிவு காலம் பெறக்குமோ தெரியல. துணுஞ்ச வனுக்குச் சமுத்தரமும் மொழங்காலுதாங்கற மாதிரி, துணிச்சலா நின்னு நம்ம வாழ்க்கைய நாம வாழ்ந்து காட்டனும்.

எங்க தெருவுகள்ள வார சண்டைக கூட எப்பயும் விடியக்கருக்கல்லயும், ராத்திரிமசங்குனப் பெறகுந்தான் வரும். எதுக்கு இப்பிடி இந்த நேரத்துகள்ள மட்டும் கூகொல்லோன்னு தெருக்காடு அமளி துமளிப்படுது; மத்த நேரங்கள்ள அமேதியா கெடக்குன்னு நெனச்சுப் பாத்தா, வேல வெட்டிக்குப் போறதுனால, இந்த நேரத்துலதான மனுசமக்க தெருக்காட்ல இருக்குது; அதான் சண்ட வருதுன்னு நெனச்சேன். ஆனாப் பெறகுதான் என்னன்னு தெருஞ்சது.

நாள்பூராம் கஸ்டப்பட்டு வந்து சூசுவான்னு படுத்து ஒறங்க முடியல. புருசக்காரனுக இஸ்டப்பட்ட நேரத்துல அவனுக ஆசையக் கட்டாயம் நெறவேத்தனும். இதுனால பொம்பளை களுக்கு எந்தச் சொகமும் கெடைக்ரது இல்ல. இப்பிடி மனசுக்கோ, ஒடம்புக்கோ எந்தச் சொகமுங் கெடைக்காம ஒறங்கி எந்துருச்சு, அந்த எருச்சல ஒடனே மத்தவுககிட்ட சண்டக்காடு போட்டுட்டு வேல வெட்டிக்கு ஓடனும்.

வம்பாடுபட்டு வேல செஞ்சுட்டு மசங்கவும் வீடு வந்தா, அங்கயும் ஓய்வு ஒழுச்சலு இல்லாத வேல. திக்கத்துக்குத் திக்கம் பிள்ளைக புடுங்கலு; புருசங்காரனோட அக்குருமம், அநியாயம் புடுச்ச அதிகாரம். எல்லாத்துக்கும் ஈடு குடுத்து மழுமட்டையா வாழ

வேண்டிய எருச்சல்ல மறுவடியுஞ் சண்டக்காடுதான் போட வேண்டி இருக்கு.

இந்தச் சண்டைகள்ள, பொம்பளைக வைற வசவுகளப் பாத்தா, பூராங்கெட்ட வாத்தைகளா பச்ச பச்சையா, அதுலயும் முக்கியமா இந்தக் குடும்ப வாழ்க்க வாழுறத வச்சுக்கிட்டுத்தான் பேசுவாளுக. வாயத்தொறந்துட்டா பூராங்'கூ' னா, 'பு' னான்னுதான் வரும். இப்பிடி வைறது கூட, குடும்ப வாழ்க்கைல எந்தச் சொகமோ, நெறைவோ இல்லாத காரணத்துனாலதான், அந்தந்த ஊறுப்புகளச் சொல்லி வஞ்சு ஒரு விரக்தியான சொகங் கண்டுக்குராகளோ என்னமோன்ன நெனைக்கேன்.

இதுமட்டுமில்ல; தாம்புருசன் வப்பாட்டி வச்சுக்கிட்டா, வானத்துக்கும் பூமிக்குமா குதிக்குர பொம்பளைக, வேற பொம்பளைக கூட சண்ட போடையில, எடுத்த எடுப்புலேயே ஏம் புருசனுக்குப் படுத்த சக்காளத்தின்னுதான் சொல்லி வைறாளுக. இத யோசிச்சுப் பாத்தா, தன்னால ஒன்னுஞ்செய்ய முடியாத வேக் காட்ல, தாம் புருசன அதுலயுங் குடும்ப வாழ்க்கைய வச்சு அவள அடக்கியாச்சுங்ற திருப்தி, சந்தோசங் கெடைக்குதுபோலுக்கோன்னு தோணுது. இதுலயும் ஆம்பளையோட ஆணவமும், அதிகாரமுந் தான் தலதூக்கி நிக்குது. பொம்பளையோட ஒடலு, மனசு, ஒணர்வு, வாத்த, செயலு, அவா ஒலகம் பூராவுமே ஆம்பளையோட ஆதிக்கத்துல, அவெனுக்குள்ள அடக்கமாத்தான் இருக்குது. இப்பிடி இருக்குரதுதான் நாயமானதுன்னு சொல்லி நம்பளையும் நம்பவச்சு, ஆம்பளைக்கு அடிமபட்டுக் கெடக்குரதுலதான் நமக்கு சொகமான வாழ்க்க இருக்குன்னு நம்மளும் நம்பிக்கிட்டு மழுமட்டச் சீவனஞ் செஞ்சிக்கிட்டு கெடக்கோம். நம்மளும் ரோசம், மானம், மரியாத உள்ளவுகன்னு ஒணந்தம்னா, எம்புட்டெம்புட்டோ சாதிக்கலாம்.

இப்பிடி வடுஞ்சாச் சண்ட, அடஞ்சாச் சண்டன்னு போடப் போயோ என்ன கழுதயோ எங்க பொம்பளைக பைத்தியம் புடிக்காமெ, எப்பிடியோ சமாளுச்சு வாழ்க்கைய ஓட்டுராக. இந்தச் சீவனஞ் சீவிக்கனும்னா இப்பிடியெல்லாம் கத்திப் பெறக்கி கிறுக்குப் பிடிக்காமெ இருக்கோம். ஆனா மேகலக்குடிப் பொம்பளைக என்னத்தனாலும் மனசுக்குள்ளேயே வச்சுக்கிட்டு மெல்லவும் முடியாமெ உழுங்கவும் முடியாமெ தெணறப் போயி அவுகாளுகள்ள ரொம்பப் பேரு கிறுக்குப் புடுச்சு லூசுத்தனமாப் பேசுராக. அதுவரைக்கும் பாக்கைல எப்பிடியாச்சும் முக்கித்தக்கிப் பொழச்சாகனும்ங்ற வேகம் எங்ககிட்ட எக்கச்சக்கமா இருக்குது. அதுக்குத்தக்கன எல்லாஞ் சுளுவா நாங்க தெருஞ்சோ தெரியாமலோ செஞ்சு சீவிக்கிரோம்.

# ஏழு

எங்க வீட்டுக்குப் பக்கத்து வீட்ல மைக்கண்ணின்னு ஒரு பிள்ள இருக்குது. துருதுருன்னு, மூக்கும் முழியுமா இருப்பா. அவளுக்கு பதினோரு வயது இருக்கும். ஆனாப் பாத்தா ஏழெட்டு வயசுப் பிள்ள கெணக்கா கரண்டு போயி இருப்பா. அவாதான் அவுக வீட்ல மூத்த பிள்ள. அவளுக்குக் கீழ பிள்ளைக இருக்கு. மூனு ஆம்பள, ரெண்டு பொட்டச்சிக.

மைக்கண்ணிப் பெறந்த நாள்ல இருந்தே எனக்கு அவளத் தெரியும். அவுகம்மயும் நானும் ஒரு ஒட்ட. அவுகம்ம சடங்காகி ரெண்டு வருசத்துல மைக்கண்ணியோட அய்யனக் கூட்டிட்டு ஓடிட்டா. அவுக ரெண்டு பேருக்கும் ரொம்பா நாளாவே பழக்கம். ஆனா ரெண்டு வீட்டுலருந்தும் அதுக்குச் சம்மதமில்லாமெ இருக்கவே ஒருநா வேற ஊருக்கு ஓடிப் போயிட்டு கொஞ்ச நாள்ல திரும்பி வந்துட்டாக. வந்தப் பெறகு மைக்கண்ணிப் பெறக்குந் தட்டிக்கும் நல்லா இருந்தாக. அவா பெறந்த ராசியோ என்ன கழுதையோ, அவுகய்யன் இன்னொரு பொம்பள கூட செநேகதம் ஆகி இப்ப ரெண்டு பொண்டாட்டிக்காரனா அலைரான். நெனச்சா வீட்டுக்கு வருவான். வரும்போதெல்லாம் அவுகம்ம வகுத்துல வச்சுட்டுப் போயிருவான். அவளும் ஏழாவது பிள்ள உண்டா யிருக்கா. இதுக்குப் பெறகு குடும்பக் கட்டுப்பாடு செய்யனும்னு சொல்லிக்கிட்டா.

குடும்பக்கட்டுப்பாடு செஞ்சா முன்னப் போல காடு கரைகள்ள கடுத்த வேலையெல்லாஞ் செய்ய முடியாதுன்னுதான் இம்புட்டு நாளா செய்யாம இருந்தா. அவா படுத்துக்கிட்டா பிள்ளைக பூரா கொலபட்னியா கெடக்கும். பூராங் குஞ்சுங்குறு மானுமா இருக்குதுக. இப்ப மைக்கண்ணி கொஞ்சம் தல எடுத்துட்டப் பெறகு குடும்பக் கட்டுப்பாடு செஞ்சா, மைக்கண்ணி வேல வெட்டிக்குப் போவான்னு இப்ப செய்யனும்னா.

மைக்கண்ணியோட நெசப்பேரு செயராணி. ஆனா யாரும் செயராணின்னு கூப்டமாட்டாக. அவ கண்ணு மை போட்டது கெணக்கா அழகா இருக்கும். அதுனாலதான் அவாப்பேரே மைக்கண்ணின்னு ஆகிருச்சு. அவா மொகத்தப் பாத்தா தெளுஞ்சு ஓடுற ஓடத் தண்ணி கெணக்கா பளுச்சுன்னு இருக்கும். கண்ணு

ரெண்டும் எந்த நேரமும் ஒளி அடிக்கும். தெருவுல பொம்பளைக சொல்வாக.

"இவாள்ளாம் மேகலக் குடில பெறந்துருந்தான்னா இதுக்கு மேல போட்சா இருப்பா. இப்பயும் என்ன கொறச்சலு. சமஞ்ச ஒடனே நா நீயின்னு எவனும் வந்து கொத்திகிட்டுப் போயிருவான்".

மைக்கண்ணி நடக்க ஆரம்பிச்ச அன்னைக்கே வேலயுஞ் செய்ய ஆரம்பிச்சுட்டா. அவுகம்ம காட்டு வேலைக்குப் போவா. மைக்கண்ணிதான் வீட்டு வேல பூராஞ் செய்வா.

காலைல எந்துருச்சு வாசத் தொளிக்குரது மொதக்கொண்டு, வீடு கூட்டுரது, சட்டிப்பான கழுவுரது, தண்ணி எடுக்குரது, துணி தொவைக்குரது, வெறகு பெறக்குரது கடகண்ணிக்குப் போரது, கஞ்சி காச்சுரது இப்பிடித் தொயந்தடியா வேல செஞ்சுக்கிட்டே இருப்பா.

அவுகம்மைக்குப் பேறுகாலம் வரும்போது மட்டும் மைக் கண்ணி பக்கத்து ஊர்ல இருக்குர தீப்பெட்டி ஆபிசுக்குப் போயி வேல செஞ்சுட்டு வருவா. ஏம்னா, அப்ப அவுகம்ம வேலைக்குப் போமாட்டா. மைக்கண்ணி சம்பாத்தியத்துலதான் அப்ப எல்லாம் நடக்கும். தீப்பெட்டி ஆபிசுக்குப் போயிட்டு வந்து, வீட்லயும் வேல பாக்கும் அந்தப் பிள்ளயப் பாக்கைல பரிதாவமா இருக்கும். ஆனா அவா என்ன சொல்வா தெரியுமா, "எங்கம்மைக்கு எனிய உட்டா வேற யாரு இருக்கா? எங்கய்யனும் போயிருச்சு. நாந்தான பாக்கனும்," அம்புட்டுப் பொறுப்பா பேசுவா.

அவுகம்ம பிள்ளயப் பெத்துப் போட்டுட்டு மறுவடியும் காட்டு வேலைக்குப் போயிருவா. மைக்கண்ணி தீப்பெட்டி ஆபிசுக்குப் போறத உட்டுட்டு பிள்ளையும் பாத்துக்கிட்டு வீட்டு வேலைகளப் பூராஞ் செய்வா. எனக்கு அவளப் பாக்கைல அருவசமா இருக்கும். இத்தினிக்கானு பிள்ள, என்னன்னு தான் பச்ச பிள்ளய வளத்துக்குட்டு வேலைகளையுஞ் செஞ்சுக்கிட்டு இருக்காளோன்னு அருவசப்படுவேன்.

ஒஞ்ச நேரத்துல ஏங்ட்டதான் வருவா. அவா பேசுனான்னா சலிப்புத் தட்டாம நாள்பூராங் கேட்டுக்கிட்டு இருக்கலாம். பிள்ளையத் தொட்டில போட்டுட்டு ரோராட்டுனானா சத்தம் கணீர் கணீர்னு கேக்க நல்லா இருக்கும். அவுகம்மைக்கு நல்ல கொரலு.

"காடு கரைகள்ள வேலைக்குப் போகத்தான் புடிக்கும் பெரீம்மா. ஆனா ஒன்னே ஒன்னுக்காகத்தான் தீப்பெட்டி ஆபிசுக்குப் போகப் புடிக்குது."

"எதுக்கு?"

"எதுக்குத் தெரியுமா? தீப்பெட்டி ஆபிசு வண்டில

போறதுதான் புடிக்குது. மொத மொதல்ல இப்பத்தான வண்டில போறேன். எங்க வண்டியப் பாத்துருக்கீகளா நீங்க. சூப்பரா இருக் கும். விடியங்காட்டி கோழீ கூப்ட மருத வண்டி வருது பாத்தீகளா. அதுக்கும் மின்னாடியே எங்க வண்டி வந்துரும். மருத வண்டிய விட நீட்டமா இருக்கும் எங்க வண்டி."

என்னமோ அவளோட சொந்த பஸ்சு கெணக்காச் சொன்னா.

"காடுகரைக்கு வேலைக்குப் போனா, விடுஞ்சாப் பெறகு போகலாம். ஆனா தீப்பெட்டி ஆபிசுக்குப் போகனும்னா வெள்ளனத்துல போகனும். இல்லன்னா வண்டில ஒக்கார எடங்கெடைக்காது. கொஞ்சம் லேட்டா போனா வண்டி போயிடும். வண்டிய உட்டுட்டு வந்தா எங்கம்ம அடி கொன்னு போடுவா. அதுனாலதான் கண்ணத் தொறக்கவே முடியாமெ ஒறக்கமா வந்தாலும் வம்பாரத்துக்குனாலும் கண்ணு முழுச்சுட்டு, கூழ ஊத்திக்கிட்டு ஓடுவேன்."

"தீப்பெட்டி ஆபிசுக்குப் போறதுனால ஒனக்கு வகுத்த வலி வருதுன்னு ஒங்கம்ம சொன்னா."

"ஆமா பெரீம, அந்த மருந்து நாத்தங் கொடலப் புடுங்குது. ஆனா என்ன செய்ய. நானு இன்னங் கொஞ்சம் வளருந்தட்டிக்கும் தீப்பெட்டி ஆபிசுக்குப் போவேன். பெறகு காட்டு வேலைக்குப் போயிடுவேன். இப்பக் காட்டு வேலைக்குப் போனா நாஞ் சின்னப் பிள்ளன்னு சம்சாரிக வேணாம்ங்றாங்க. தீப்பெட்டி ஆபிசுல பாத்தீ கன்னா எனிய விட சின்னப்பிள்ள கூட வந்து வேல செய்து பெரீம," அருவசமாச் சொன்னா.

அந்தத் தீப்பெட்டி ஆபிசுக்குப் போயிட்டு வாரது மைக்கண்ணிக்கு என்னவோ டவுனுக்குப் போயிட்டு வாரமாதிரித் தான். எப்பிடியும் வாரத்துக்கு நாப்பது, அம்பது ரூவா சம்பாருச்சுருவா.

ஒவ்வொரு சனிக்கெழமயும் வாரச் சம்பளம் வாங்கியாந்து அவுகம்மையிட்ட குடுப்பா. அப்பிடித்தான் ஒரு சனிக்கெழமச் சாயந்தரம் தீப்பெட்டி ஆபிசுக்குப் போயிட்டு வந்த ஒடனே அவுகய்யங்கிட்ட அணப்புப்பட்டு அழுதா.

கொஞ்ச நேரங் கழுச்சு அவளா வந்து, "பெரீம, இன்னைக் குச் சம்பளம் வாங்கி அதுல ஒரு ரூவாய நாஞ் செலவழிச்சிட்டம்னு எங்கய்யம் போட்டு அடுச்சான். எல்லாப் பிள்ளைகளும் ஐஸ் வாங் கித்தின்னுச்சுக. என்னமோ கோனு ஐஸாமுல, ரொம்ப நட்னகாரன் அந்த ஐஸ்காரன் பெரீமா. செவேர்னு பொனலு கெணக்கா ஒன்ன எடுத்துக்கிட்டு அதுக்குள்ள கொழ கொழன்னு வெள்ள வெளேர்னு

நம்ப பச்சரிசிக்கூழு கெணக்கா உட்டு உட்டுத் தாரான். ஆனா அது இனிச்சுக் கெடக்கு. அந்தச் செவப்பா அடில இருக்கு பாருங்க. அதயும் கடைசில தின்ரலாம். மொத எனக்கு எப்பிடிப் புடுச்சு திங்கனும்னு தெரியல. பெறகு மத்த பிள்ளக்காடுக திங்கரதப் பாத்துட்டு நானும் நக்கி நக்கித் தின்னேன். அந்நியாரம் எனிய பாத்திருந்தீங்கன்னா சிருச்சிருப்பீக. எனக்கே சிரிப்புச் சிரிப்பா வந்துச்சு." கோனு ஐசு தின்னதுல அவுகய்யன் அடுச்ச அடியக்கூட மறந்துட்டா.

"ஒங்கய்யனுக்கு எப்பிடித் தெரியும் நீ ஒரு ரூவா செலவழிச்சது, நீ எதுக்குச் சொன்ன?" நாங் கேக்கவும், "அவெ எப்பயாச்சும் எடயில இப்படி வந்து எங்கம்மய, எனியெல்லாம் அரட்டுரா பெரீம. சிட்டைல குறிப்பாகள்ள ரூவாய, அதப் பாத்து கண்டு புடுச்சுட்டான். எங்கய்ய அஞ்சாங் கெளாஸ் படிச்சுருக் குல்ல." ரொம்ப மரியாதையாச் சொன்னா.

"இன்னைக்கு யாரு மொகத்துல முழுச்சனோ பெரீம்ம, இன்னைக்குப் பூரா அடியும் வசவுந்தான்," சலிப்பாச் சொன்னா மைக்கண்ணி.

"ஏம்தா, என்ன ஆச்சு இன்னிக்கு?"

"காலைல மொத ஆளா நாம் போயி தீப்பட்டி ஆபிசு வண்டில சன்னலோரமா எடம்புடுச்சு ஒக்காந்தனா, ஆனா எனக்குப் பெறகு வந்து ஏறுன கக்களயக்குடி ஆம்பளப் பெயல்க எனிய தள்ளி உட்டுட்டு அவம் போயி சன்னலுப் பக்கம் ஒக்காந்துக்கிட்டான். எப்பயும் அவனுகதான் சன்னலுக்கிட்ட ஒக்காருவானுக."

"நீ அவனுகள சும்மாய உட்ட?"

"நானு கண்டமானிக்க வஞ்சுட்டு எந்திரிக்கமாட்டமுன்னு தான் சொன்னேன். அவனுக இழுத்துப் போட்டுட்டு ஒக்காந்துக் கிட்டானுக. எடுவட்ட பெயலுக."

"இதுக்கா நாளே நல்லா இல்லங்க?"

"இது மட்டுமில்ல; அங்க தீப்பெட்டி ஆபிசுல மேஸ்திரி அண்ணாச்சிட்ட அடி வாங்குனேன். பெறகு இப்ப எங்கய்யங்கிட்ட அடி வாங்குனேன்", சொல்லும்போதே அவா கண்ணுலருந்து பொங் கிக்கிட்டு வந்த தண்ணிய பாவாடயத் தூக்கித் தொடச்சுக்கிட்டா. எனக்கும் மனசுக்குச் சங்கடமா இருந்துச்சு.

"மேஸ்திரி எதுக்குத்தா அடுச்சான்?"

"மேஸ்திரி இன்னைக்கு ரெண்டு தடவ அடுச்சுப் போட்டான் பெரீம. மொதத் தடவ தீப்பெட்டி ஒட்டயில பசய நெறய்யா தடவி ரெண்டு தாள ஒட்ட முடியாம தூக்கிப் போடுரதப் பாத்துட்டு வந்து நறுக்குன்னு தலைலகொட்டுனான். தலையே விண்ணுன்னு தெருச்சுப் போச்சு. அம்மாந்தட்டி ஆளு கொட்டுனா

நாஞ் சின்னப்பிள்ள பொறுக்க முடியுமா? சொல்லுங்க," கேட்டுக்கிட்டே தலையத் தடவுனா.

எனக்கு அவளப் பாக்கைல ரொம்ப கஸ்டமா இருந்துச்சு. அது பாட்ல கன்னுக்குட்டி கெணக்கா ஓடியாடி வெளாண்டுட்டு கெடக்க வேண்டிய வயசுல, இப்பிடிக் கெடந்து அவஸ்தப் படுதேன்னு பாவமா இருந்துச்சு."

"பெறகு எதுக்கு திரும்பியும் அடுச்சான்?

திலும்பியா? எனக்கு எடைல வெளிக்கு முடுக்கிக் கெடந்துச்சா. நாம் பாட்டுக்கு நம்மூருல போற மாதிரி போயி வெளிய ஒரு மரத்தடில இருந்துட்டு கல்லுட்ட தொடச்சுப் போட்டு வந்தேன். இத எவளோ சொல்லிக் குடுத்துருக்கா. இப்பிடி வெளிய பேண்டதுக்குக்கூட அடிக்காக." கொஞ்ச நேரம் பேசாம இருந்தா. அவளையும் மீறி கண்ணீரு ஊத்துது. தொடச்சுக்கிட்டே சொன்னா, நானு கோழி கூப்ட எந்துருச்சு ஓடுமுன்ன வெளிக்கெல்லாம் போக டயமில்ல பெரீமா. இம்புட்டு நாளா வெளிக்கு வந்ததில்ல. அப்பிடியே வந்தாலும் செல நேரம் அடக்கி வச்சுட்டு இங்க வந்து நம்ம கொல்லாமந்தைலதான் இருப்பேன். இன்னைக்கு அடக்கவே முடில. அதான் போயிட்டேன்." இப்பிடி சோகமாச் சொல்லிக்கிட்டு வந்தவா திடீர்னு மொகத்துல ஒரு சிரிப்போட சத்தமா, "பெரீமா, ஒங்களுக்கு ஒரு வெசயந் தெரியுமா?" கேட்டுக்கிட்டு என்னன்னு சொல்லாமலே சிரிப்புன்னாச் சிரிப்பு அப்பிடி ஒரு சிரிப்புச் சிரிக்கா.

எனக்கு வெசயந் தெரியாமலே அவா சிரிக்குர சிரிப்பப் பாத்துட்டு எனக்கும் சிரிப்பு அள்ளுது.

இம்புட்டு நேரமும் நாங்க பேசுத கேட்டுக்கிட்டுருந்த எங்கம்ம, "ஏ பெயமகளே சொல்லிட்டுச் சிரி. அங்க பாரு," சொல் லிட்டு எங்கம்மையுஞ் சிரிக்கா.

பெறகு சிருச்சுக்கிட்டே ரகசியமா ஏங்கிட்டத்துல வந்து, "பெரீமா, தீபெட்டி ஆபிசுல பீரும்புன்னு தனியா கெட்டி வச்சிருக்காக. அதுலதான் போயி ஒன்னுக்கு ரெண்டுக்கு இருக்கனு மாம்." சொல்லிட்டு திரும்பியும் சத்தம் போட்டு கெக்கரிச்சுக்கிட்டுச் சிரிக்கா.

இதக் கேட்டுட்டு நாங்க எல்லாருங் கெடந்து உழுந்து உழுந்து சிருச்சோம்.

மைக்கண்ணிதான் அவளுக்குப் பின்னால பெறந்த அஞ்சு பிள்ளைகளையும் வளத்து உட்டா. அவுகம்ம பிள்ளையப் பெத்துப் போடுரதோட சரி. ஒரு பிள்ள நடக்க ஆரம்பிச்ச ஒடனே அடுத்த பிள்ளையப் பெற ரெடியாயிருவா.

பெறகு ஒரு நாளு மைக்கண்ணீ தீப்பெட்டி ஆபிசுக்குப் போயிட்டு ரொம்பாத் துடிப்பா எங்க வீட்டுக்கு வந்தா.

“பெரீமா, நீங்க ‘வீரா’ படம் பாத்தீகளா? சூப்பர் ஸ்டாரு நடுச்சது. இன்னைக்குக் தீப்பெட்டி ஆபிசுல பொழுதனிக்கும் அந்தப் படத்துப் பாட்டுகளத்தான் போட்டாக. பூராப்பாட்டும் எப்பிடி இருக்குதிங்க? கேக்கக் கேக்க நாக்குல எச்சி ஊரும்.”

“அதென்ன ஊறுகாயாடி நாக்குல எச்சி ஊறுதுக்கு? ஒங்க ஆபிசில பாட்டெல்லாம் போடுவாகளாக்கும்?” நாங் கேட்டேன்.

“எங்க ஆபிச என்னன்னு நெனச்சீக? தெனமும் புதுப் புதுப் பாட்டுக்களா போடுவாக. அப்பத்தான நாங்க சுறுசுறுப்பா வேல செய்வோம். அதுக்குத்தான். மேஸ்திரி அண்ணாச்சி ரூம்புக்குள்ள ஒரு காத்தாடி கூட இருக்குது. அது அப்பிடி ரொங்கும். நாங்க வேல செய்ற லெக்குல காத்தாடி இருக்கு. ஆனா அது அப்பிடிய ரொங்காது. காத்தே வராது.

“பெறகென்ன ஒங்களுக்கு? எல்லாச் சவுரியமுஞ் செஞ்சு குடுக்காகள்ள,” எங்கம்ம கேட்டா.

“ஆமா, இவுக சவுரியத்தக் கொண்டு போயி குப்பைல போடச்சொல்லு பாட்டி. நேத்தெல்லாம் பாத்தீகன்னா ஆபிசில சண்டக்காடு நாறிப் போச்சு. நம்ம தெருப்பிள்ளக்காடுக பூராம் வேல செய்யமாட்டம்னு தூக்குச் சட்டிகளத் தூக்கிக்கிட்டு கௌம்பிட்டோம்.”

“எதுக்குத்தா? என்ன செஞ்சாக?”

“அந்த ஊர்க்காரப் பிள்ளக்காடுக நம்ம தெருப் பிள்ளய, அந்தா அவா பெரனத்து பேத்தியாள பறப்பய பிள்ளன்ன சொல்லி வஞ்சுருக்காளுக. அவா எங்ககிட்டச் சொல்லவும் நாங்க அம்புட்டுப் பேரும் சைட்டுமேனிக்கா எந்துருச்சு வசவுன்னா வசவு அப்பிடி வஞ்சோம். ஒவ்வொரு பெயமக்களையுஞ் சாகும்படியா கேட்டுச் சண்டை போட்டோம். அதப் பாத்த மேஸ்திரி அண்ணாச்சி வந்து எங்கள ஓயச் சொல்லி பொழுதெனிக்குஞ் சொன்னாரு. நாங்களா ஒய்வோம்? ஓயவே மாட்டம்னுட்டு சட்டிகளத் தூக்கிக்கிட்டு, நாங்க நடந்தேன்னாலும் வீட்டுக்குப் போறோம்னு சொல்லிட்டு கௌம்பிட்டோம்.” சொல்லிட்டு மைக்கண்ணி பெருமையாச் சிருச்சுக்கிட்டா.

“பெறகு எந்நியாரம் ஓஞ்சிக?”

“அந்த அண்ணாச்சி மொகத்துக்காக பெறகு ஓஞ்சோம். அவருதான், உட்ருங்கம்மா, உட்ருங்கம்மான்னு பொழுதெனிக்கும் கேட்டாரு, இனி ஒரு தடவ அப்பிடிப் பேசுனாப் பாத்துக்கிரலாம்னு உடச் சொன்னாரு. சரின்னுட்டு வசவுகள உட்டுட்டோம்.”

“அந்தப்பிள்ளைக என்ன ஆளுக?” எங்கம்மா கேட்டா.

“அவளுக என்னாளுகன்னு தெரியல. ஆனா நிச்சயமா பறக்குடிப் பிள்ளைக இல்ல,” மைக்கண்ணி சொல்லவும்,

"அதெப்பிடித்தா அம்புட்டு உறுதியாச் சொல்ற?" நாங் கேட்டேன்.

"அதா, நம்ம பிள்ளைகன்னா எப்பயுங் கட்டுக் கட்டுன்னு நடப்பாளுக. அவளுக நடயப் பாத்தீங்கன்னா, பூராங் கொணங்கிக் கொணங்கி நடப்பாளுக," சொல்லிட்டு எந்துருச்சு வீட்டுக்குப் போயிட்டா.

"இத்தினிக்கானு பிள்ள எம்புட்டு வெவரமா பேசுரான்னு பாத்தியாமா?" நானு எங்கம்மயிட்டச் சொல்லவும், எங்கம்மா ஏங் கிட்ட கேட்டா, "போன வாரத்துல அவா கருவலங் காட்டுக்குள்ள முள்ளுப் பெறக்கப் போகைல நடந்த சங்கதியச் சொன்னாளா?"

"இல்லியே" நாஞ் சொன்னேன்.

"இவளும், இன்னு நாலஞ்சு பிள்ளக் காடுகளுமாச் சேந்து கருவலங் காட்டுக்குள்ள எரிக்க முள்ளு பெறக்கப் போயிருக்கு ராளுக. அங்ன எவனோ ஒருத்தன் நின்னுக்கிட்டு இவா மைக் கண்ணி பிள்ளையக் கூப்டுருக்கான்," சொல்லிக்கிட்ருக்கைலயே மைக்கண்ணி அவுக தங்கச்சிய இடுப்புல தூக்கிட்டு வந்தா.

"இந்தா வாரள்ள, இவாகிட்டயே கேளு," எங்கம்ம சொன்னா.

நானு அவாகிட்ட, கேக்கவும், "ஆமா பெரீம, நாங்க போயி பெறக்கிக்கிட்டு இருக்கோம். அந்தப் பெய உள்ள ரொம்பா முள்ளுக் கெடக்குன்னு கூப்டான். நாங்க அம்புட்டு பேரும் போனோம். ஒடனே அவெ, மத்தவுகள அங்னகுள்ளயே நின்னு பெறக்கச் சொல்லிட்டு, எனிய மட்டும் உள்ள வந்து பெறக்கச் சொன்னான். நா வேற எளந் துணில ஒரு பாவாட கெட்டிருந்தேன். யாரோ குடுத்த பாவாடதான். உள்ள ஒட்டியாங் கிட்டியாம் போடல. எம்மா... இந்தப் பெய ரொம்ப அக்குருமம் புடுச்சவம் போலுக்கோன்னு பிள்ளைக கிட்டா சொன்னனா, அவர்களும் ஏத்தா... உள்ள போகாத. இவெ என்னத்துக்கோதான் ஒனிய மட்டும் கூப்றான்ன சொன்னாளுக. அந்தமாணிக்க பெறக்குள முள்ள அள்ளிக்கிட்டு ஓடியாந்துட்டோம்."

இந்த சின்ன வயசுல இந்தப் பிள்ளைக்கு என்னென்ன நடந்துருக்குன்னு நெனச்சு ஒரு திக்கம் வேதனையா இருந்தாலும் மறு திக்கம் ஆக்ரோசமா வந்துச்சு. அந்தப் பிள்ளையும் வயசுக்கு மீறுன வேல செஞ்சுக்கிட்டு வயசுக்கு மீறுன வெவரத்தோடதான் இருக்கா.

எங்க தெருவுகள்ள ஏறக்குறைய எல்லாப் பொம்பளப் பிள்ளைகளுக்கும் சின்னப்பிள்ள பருவமே இருக்குரது இல்ல. மொளச்சு மூனு எல உட முன்னாடியே பெரிய மனுசிக கெணக்காதான் வீட்டுச்சோலி பாக்குரது, கைப்பிள்ளைகள வளக்குரது, கூலிக்கு வேலைக்குப் போரது எல்லாஞ் செய்துக. ஆனா

இம்புட்டுத் தும்பத்துலயும் தொயரத்துலயும் பளிச்சு பளிச்சுன்னு அதுக பேச்சும், கட்டு கட்டுன்னு அதுக நடையும், கலகலன்னு அதுக சிரிப்பும் பாக்கைல மனசுக்குள்ள புல்லரிக்கத்தாஞ் செய்யுது.

மைக்கண்ணி மாதிரி எங்க தெருவுள்ள அனேகம் பிள்ளைக இப்பிடித்தான் சிறுசுலயே வேல வெட்டிக்குப் போயிக்கிட்டு வீட்லயும் வேல செய்யுதுக. ஆம்பளப் பெயல்க நல்லா தின்னுபோட்டு வெளாண்டுத் திரிரதப் பாத்துருக்கேன். பொம்பளப் பிள்ளன்னா அதுக்கே இன்னுஞ் சரியா நடக்கத் தெரியாம இருந்தாலும், அது ஒரு கைப்பிள்ளயத் தூக்கிக்கிட்டு அலையும்; தண்ணிக் கொடந்தூக்கும், மாட்டுக்குப் பில்லு, அடுப்பெரிக்க வெறகு பெறக்கியாரும்.

இம்புட்டுச் செஞ்சாலும் இந்த மைக்கண்ணிப் பிள்ள எப்பயும் சிருச்சுப் பேசிக்கிட்டேதான் திரிவா. எம்புட்டு வேல செஞ்சாலும் அவா சிரிப்பும், கலகலப்பும் மாறவே மாறாது. திடீர்னு வருவா. வந்து எங்கய்யாட்ட, “தாத்தா, ஏந்தலயப் பாத்தீகளா, வளுச்சு பூ வச்சிருக்கேன். எனியப் பாத்தா செயலலிதா மாதிரி இல்ல?” கேட்டுக்கிட்டு தலய அங்குட்டும் இங்குட்டுமா வெட்டுவா.

“பெரீமயோய், எங்க தங்கச்சி அமலோற்பத்த இன்னிக்குப் பாத்தீகளா, அச்சசல் குசுப்பு கெணக்காவே இருக்கா. நாயக்கமாரு தெருவுல ஒரு அம்மா பழைய கெவுனு குடுத்தாக. அதப் போடவும் சூப்ரா இருக்கா பெரீமா,” இப்பிடி எந்த நேரத்துலயும் கலகலன்னு பேசிச்சிரிப்பா.

எங்க தெரு பொம்பளைகளும் அப்பிடித்தான். விடுஞ்சா வேல வெட்டிக்குப் போயிட்டு பொழுதுமுழுக வீடுகளுக்கு வந்து சேந்தாலும் அப்பயும் சிரிப்புங் கும்மாளமுமாத்தான் அலைவாக.

ஒரு தடவ கடலைக்குக் கள வெட்டப் போகையில, எவளோ ஒருத்தி தலமேல முக்காடப் போட்டுக்கிட்டுப் போனாளாம். அப்ப வெயிலு கூட இல்லியாம். ஒடனே அந்தந்த இன்னாசி மகா ஆரோக்கியமேரி அவ லக்கலு பண்ணி,

‘பாதை யோரம் பரட்டச் செடி
பதக் கொளக்குப் பூக்குஞ் செடி
எடுக்க வாம்மா துலுக்கப் பிள்ள
ஒனக்குங் கொஞ்சம் பூவுத் தாரேன்’னு

படுச்சு கிண்டலு பண்ணி உட்டாளாம்.

அது கெணக்காத்தான் அவா நானப்பூ மகா ரஞ்சிதத்துக்குப் பருசம் போட்ட பெறகு அவா வேலைக்குப் போன லெக்குல, மாப்பிள்ளப் பையன் அவள விட கருப்புன்னு லக்கலு பண்ணி பாட்டுக் கெட்டிருக்காக.

‘காக்கா நெறத் தழகா
கரிப்பானத் தூரழகா
எனக்குன்னு வாச்சவரே
இங்கிலீசு படுச்சவரே’

அந்தப் பெய எட்டாங் கெளாசு வர படுச்சவனாம். அதுக்குத்தான் இங்கிலீசு படுச்சவம்னு கேலி அடுச்சாளுகளாம்.

ஒத்த ஆள உட்டு வைக்கமாட்டாக.

‘பதினெட்டுப் பணியாரம்
மதிலெட்டித் தந்தவரே
எனத்தநீ தந்தபோதும்
எனத்தி புருசந்தானே’

இப்பிடி கலியாணமாகிட்டு இன்னொருத்திய வப்பாட்டியா வச்சுக்கிட்டுருந்தவனப் பத்திபடுச்சிருக்கா.

‘ஆத்துல ஊத்துத் தோண்டி
அவரும் நானும் பல்வெளக்கி
எச்சித் தண்ணி தெருச்சதுக்கோ
எட்டு நாளாப் பேசலியே’

ஒன்னுக்குமில்லாத உப்புக் கல்லுக்குப் பெரயோசனப் படாத காரியத்துக்குச் சண்ட போட்டுக்கிட்டு மொனச்சுக்கிட்டுப் போன புருசனுக்குப் படுச்ச பாட்டு இது.

இது மாதிரி கள எடுக்கைல, நாத்து நடயில, கதுரறுக்கைல, இப்பிடி என்ன செஞ்சாலும் ஒரே பாட்டுஞ் சிரிப்புந்தான். ஒருத்தர ஒருத்தரு பாட்டுக் கெட்டியே லக்கலு செய்வாக.

அப்பிடித்தான் எவளோ ஒருத்தி நடுத்தெருவுல மசால அரைச்சுக்கிட்டு இருக்கைல, அப்பிடிக் கூடி அவளோட மொற மாப்பிள போனானாம். ஒடனே அங்ன தாயம் வெளாண்டுட்டு இருந்த மொகூர்க்காரி,

‘கார வீட்டுத் திருணயில
கறிக்கு மஞ்ச ளரைக்கையிலே
என்ன பொடி தூவுனாரோ
இழுத்த ரைக்க முடியலயே’ ன்னு

ஒடனே மெட்டுப் போட்டு படுச்சாளாம்.

அது பாவம் அந்தப் பிள்ள அப்பிராணியா மசால அரைச்சிருக்கு. மொகூர்க்காரிக்கு எம்புட்டு ராங்கின்னா இப்பிடி ஒரு பாட்ட படுச்சுருப்பா.

என்னன்னுதான் இப்பிடி டக் டக்குன்னு பாட்டுக் கெட்டிராளுகளோ தெரியல. மைக்கண்ணிப் பிள்ளைக்கு எல்லாப் பாட்டும் தெரியும்.

இதுகெணக்கா பிள்ளைய தொட்டில போட்டு ரோராட்டுற

பாட்டும் படிப்பாக. பெரிய பொம்பளைக ரோராட்டக் கேட்டா நம்மளுக்கே ஒறக்கஞ் சொக்கிக்கிட்டு வரும். மயங்கி மயங்கிப் படிப்பாளுக.

யாருஞ் செத்துப் போனாலும் அப்பிடித்தான் ஒப்பாரி வச்சு அழுவாளுக. பாக்கப் போனா பெறப்லருந்து எறப்பு வரைக்கும் ஒரே பாட்டுங் கூத்துந்தான். இதெல்லாம் பொம்பளைகதான் செய்றது. ரோராட்டு, ஒப்பாரி எல்லமே பொம்பளைகதான் படிப்பாக.

நாஞ் சின்னப் பிள்ளையா இருக்கைல எல்லாம் நாங்க வீட்டுகள்ள வேல வெட்டி செஞ்சாலும் ராத்திரி கஞ்சி குடுச்சப் பெறகு நல்லா வெளாடுவோம். ஆம்பளப் பெயல்க அவனுக பாட்டுக்கு அவனுக வெளாட்டுகள வெளாடும்போது, நாங்க எங்க பாட்டுக்கு எங்க வெளாட்டுகள வெளாடுவோம்.

ஆனா இப்ப எங்க தெருவுல பாத்தா, பெயல்க நெறய்யாப் பேரு கோழி கூப்ட எந்துருச்சு தீப்பெட்டி ஆபிசுக்குப் போயிட்டு மசங்குனப் பெறகுதான் வீட்டுக்கு வர்ரதுனால கஞ்சி குடுச்சும் குடிக்காமயும் படுத்து ஒறங்கிருதுக. எங்க தெருவுலருந்து ஆம்பளப் பெயல்க அப்பிடியா தீப்பெட்டி ஆபிசுக்குப் போறதில்ல. முன்னால எல்லாம் பொம்பளப் பிள்ளைக, கைப்பிள்ளைகளைத் தூக்கி வச்சுக்கிட்டு, அதுகள கவனிச்சுக்கிட்டு இருக்குங்க. இப்ப அதுக வேலைக்குப் போறதுனால, தெருவுகள்ள பாத்தா, பூராம் நண்டும் நசுக்குமா ரெண்டு வயசு, மூனுவயசுப் பிள்ளைக தன்னால தட்டுத் தடுமாறி அலைஞ்சுகிட்டு இருக்குங்க. காலைல இருந்து ராத்திரி வரைக்கும் அதுகளாத்தான் தெரு நாய்களோட நாய்களா, பன்னிகளோட பன்னியா கெடக்குதுக. பெறகு வேலைக்குப் போன அவுகம்மமாரு வந்து செத்த நேரந் தூக்கி வச்சு அமத்தி உடுரதோட சரி. அவுகளும் கஞ்சி தண்ணி காச்சனும்ங்றதுனால பிள்ளைகளக் கவனிக்க முடியாது. சரி, இந்த தகப்பங்காரனுகளாவது பிள்ளயத் தூக்குவோம் வப்போம்னு இருக்க மாட்டானுக. வேல உட்டு வந்ததும் கடக்காட்டுல போயி ஒக்காந்துருந்துட்டு ரவைக்குக் கஞ்சி குடிக்ர நேரத்துக்கு வந்து குடுச்சுட்டுப் படுத்துருவானுக. பொம்பளைகதான் பிள்ளையும் வச்சுக்குட்டு கஞ்சியுங் காச்சிக்கிட்டு அவஸ்தப் படனும். ஒரே நேரத்துல எத்தனை வேலைகளத்தான் பம்பரமா ஆடிக்கிட்டு செய்ராளுக! மிசினுகூட அப்பிடிச் செய்ய முடியாது.

# எட்டு

நானும் எங்க பாட்டியும் வயக்காட்டுச் செம காஞ்ச எருப்பெறக்கப் போனோம். மாடுகன்னு அங்குட்டு மேயிம்போது போட்ட சாணி காஞ்சு போயிக் கெடக்கும். அதப் பெறக்கிக் கொண்டாந்து அடுப்பெரிப்போம். அதக்கூட பிஞ்சுக்காரம் பாத்தா வைவான். எருக்கெடந்தா பிஞ்சைக்கு நல்ல ஒரமாகுமில்ல, அதான்.

நாங்க எருப் பெறக்கிட்டு இருந்த வயலுக்குப் பக்கத்து காட்டுல வகுறு தள்ளிக் கெழவி எரும மாடு மேச்சுக்கிட்டு இருந்தா. அவளப் பாத்துக்கிட்டு, "ஏடியோய் மூக்கம்மா , என்ன கஞ்சி கிஞ்சி குடிக்கப் போகலியா? பொழுது சாயப் போகுதே," எங்க பாட்டி கேட்டா.

"இன்னஞ் செத்த மேய உட்டுட்டு பத்திட்டு போகனும் மதினி. மாட்டு வகுத்தப் பாரு கொடேர்னு கெடக்கு," சொல்லிட்டு "தா, பெய மாடு ஒரு லெக்குல நில்லாது. வரப்புக் காட்ல எனியால வெரட்ட முடியுமா?" அவளாப் பேசிக்கிட்டு மாட்ட வெரட்டுனா. பக்கத்துல இருந்த பருத்திக் காட்டுல மேஞ்சுராம பத்தி உட்டா.

எங்க பாட்டி அவள மூக்கம்மானு கூப்டதுனாலதான் எனக்கு அவா பேரு மூக்கம்மான்னு தெரியும். நாங்கள்ளாம் அவள வகுறு தள்ளிக் கெழவின்னுதான் சொல்லுவோம். இத்தனைக்கும் அவளுக்கு வகுறு அம்புட்டு ஒன்னும் பெருசா இருக்காது. ஒருவேள அவா சின்னப் பிள்ளையா இருக்கைல கண்டா வகுறு பெருசா இருந்துச்சோ என்னமோ தெரியல.

எருப் பெறக்கிக்கிட்டே பாட்டி ஏங்கிட்ட சொல்றா, "இந்த மூக்கம்மா இப்ப இப்பிடிப் போனா. இவளக் கொமரில பாத்துருக் கனுமே. அய்யம்மாரு பிள்ள தோத்துப் போவா. இவா கல்யாண மெல்லாம் ரொம்பப் பெருகளமா முடுச்சாக. பொண்ணும் மாப்பிள்ளயும் சோடி சேந்து வரயில பார்வதியும் பரமசிவனுங் கெணக்கா வந்தாகன்னு ஊரெல்லாம் பேசிக்கிட்டாக."

"பெருகளமா முடுச்சாகன்னா, காருலயா ஊர்வலம் வந்தாக?" "நம்ம சாதிய யாரு காரு கொண்டாந்து கலியாணம் முடுச்சது? நாலு பேரக் கெணக்கா நடந்துதான் வந்தாக, ஆனா வந்தவுகளுக்கு நெல்லுச் சோறுல்ல ஆக்கிப் போட்டாக." பாட்டி

சொல்லவும் எனக்குச் சிரிப்பா வந்துச்சு. சிருச்சுக்கிட்டே பாட்டிட்ட கேட்டேன் ‍: “ஏ பாட்டி, நெல்லுச் சோறு போட்டதையா பெருகளமா முடுச்சாங்க. இப்பயுந்தான் நெல்லுச் சோறு போடுராக.”

“அந்தக் காலத்துல நெல்லுச்சோறு போடுரது அருவசந் தாம்தா. அப்பக் கடும் பஞ்சமாக்கும்.”

நானு கொஞ்சங் காயாத எருவப் பெறட்டிப் போட்டு அதுக்கடில கெடந்த பூரானக் கரம்பக் கட்டியக் கொண்டு அடுச்சேன்.

“வெளாடாமெ பொடு பொடுன்னு பெறக்குத்தா. காட்டுக் கார ஐயா வந்தார்னா எருவப்பூராம் புடுங்கிக்கிட்டு உட்டுருவாரு.” பாட்டி சொல்லிட்டு இன்னங் கொஞ்சத் தெக்க தள்ளிப் போயி பெறக்குனா.

“ஒங்கம்ம கலியாணந்தான் ஒன்னுக்குமத்த கலியாணமாப் போச்சு. சோத்துக்கே அலமாந்து போயிக் கெடந்தோம்.”

“எங்கம்ம கலியாணம் எப்பிடி முடுஞ்சுச்சு பாட்டி?” நாங்கேட்டுட்டு எங்க பட்டி நின்ன எடத்துல இருந்த வரப்பு மேல போயி ஒக்காந்துக்கிட்டேன்.

“ஒங்கம்ம கலியாணத்தப்ப கடும் பஞ்சம். புல்லரிசி தூத்தாந்து கலியாணம் முடுச்சோம். பந்தலு கூடப் போட வக்கில் லாமெச் சோளத் தட்டப் பந்தலு போட்டோம்.”

“எங்கம்ம கலியாணம் எப்ப முடுஞ்சது பாட்டி?”

“அதெல்லாமா எனக்கு நெனப்புல இருக்கு. ஒங்கம்ம கலியாணம் முடுஞ்ச மறாது வருசத்துல யாரு அது, காந்தித் தாத்தா வாமுல, அவரச் சுட்டுக் கொன்னு போட்டாகன்னு கடக்காட்ல பேசிக் கிட்டாக. அவரு சாகுரதுக்கு மின்னதான் ஒங்கம்மய்க்குக் கலியாணம்.”

“நீயி என்னென்ன சாமாஞ்சட்டு, சீருன்னு குடுத்து உட்ட?”

“நானு ஊராப்போல நாட்டப்போல ஒரு வெங்கலக் கும்பா, ரெண்டு லோட்டா, சருவப்பான, செப்புக்கொடம், குத்துச்சட்டி குடுத்தேன். கூட ஒரு அம்மிக்கல்லக் குடுத்தமுனுதான ஒங்க பெரீம ஏங்கூட மல்லுக்கு நின்னா.”

“எதுக்கு மல்லுக்கு நின்னா.”

“அங்க பெரீமய்க்கு அம்மிக்கல்லு குடுக்கல. அதுக்குப் போயி சண்ட போட்டா. ஒங்கய்யா அப்பயே அம்பத்தோறு ரூவா பருசம் போட்டாகளே. அதுக்கு தக்கன சீரு குடுக்க வேண்டாம். ஒங்க பெரீம புருசன் என்ன அம்புட்டா பருசம் போட்டான்?”

“சங்கிலி எல்லாம் போடல?”

“நம்ம சாதிகள்ள யாரு சங்கிலியெல்லாம் போட்டாக.

அதெல்லாஞ் சம்சாரிக வீடுகள்ளதான். ஒங்கம்ம என்ன வெறுங்காதாவா போனா. காதுல ரெவண்டு குணுக்கு, மூக்குல மூக்குத்தி, கால்ல தண்ட கிண்ட எல்லாம் போட்டுத்தான் போனா. நம்மாளுகள்ள சீரு செத்தின்னு ரொம்பாக் குடுக்குறதில்ல. மாப்பிள்ள பருசம் போடுவானுல்ல, அந்த ரூவாயக் கொண்டு வாங்க முடுஞ்சத வாங்கிக் குடுத்துருவோம். அம்பட்டுத்தான்," சொல்லிக்கிட்டே எருவெல்லாம் கொண்டுபோன சாக்குல போட்டு கெட்டுனா. எனக்கும் ஒரு சின்னத் துணில போட்டுக் கெட்டிட்டு தூக்கிக்கிட்டு வீட்டுக்கு வந்தோம்.

"முன்னால கலியாணத்துல மொய் உழுத்தாட்ட மாட்டா களாக்கும் பாட்டி?" வார வழில நாங்கேட்டேன்.

"மொய்யெல்லாம் உழுத்தாட்டுவாக. ஆனா இப்ப ரேடியா போட்டுச் சொல்றது கெணக்கா அப்பச் சொல்ல மாட்டாக. அப்பல்லாம் இந்த ரேடியா கீடியா ஒன்னுங் கெடையாதுல்ல."

மைக்செட்டத்தான் எங்க பாட்டி ரேடியான்னு சொன்னா.

"அப்ப என்ன செய்வாகன்னா, சோறாக்கி கத்தரிக்கா இல்லின்னா பூசணிக்கா வெஞ்சனம் வச்சு ஒரு ரசம் வச்சுப் போடுவாக. பெறகு வெங்கலக் கும்பாய வச்சுக்கிட்டு மாப்பிள ஒக்காந்துருப்பான். சாப்பிட்டவுக அஞ்சோ, பத்தோ அதுல போட்டுட்டு போவாக. அதான் மொய் உழுத்தாட்டுரது."

"இப்ப பாட்டி, மைக்குல ஓ ஒறவின் மொறையாரே, இன்னாருக மக, இன்னாரு கலியாணத்துக்கு, இன்னாரு மக, இன்னாரு இம்புட்டு ரூவா மொய் செஞ்சுருக்காருன்ன ஒரு ஆளு கத்துது. அதுக்கு அங்ன நிக்கரவுக எல்லாரும் பதுலுக்கு நல்ல காரியம்னு சொல்லிட்டு பொம்பளைக கொலவ போடுராகளே" நாஞ் சொன்னேன்.

"ஆமா, இப்பத்தான் இப்பிடிப் போட்டு ஏழூர்க்குக் கேக்கும் படியாக் கத்துரானுக. பறப்பெய கலியாணம் முடிக்குரது பலசாதிக் காரனுக்குந் தெரியனுமில்ல. வெறும் பெயல்களப் போச்சொல்லு," சொல்லிட்டே அவா வீடு வரவும் போயிட்டா. நானு எங்க வீட்டுக்கு வந்தேன்.

வந்த ஒடனே ரெண்டு ஈரங்காய உருச்சு கடுச்சுக்கிட்டே கூழுக்குடுச்சேன். எங்கம்ம ரவைக்கு வைக்குரதுக்கு முருங்கக் கீர உறுவிக்கிட்டு இருந்தா. கீரைல போடுறதுக்கு வச்சிருந்த பச்ச மொளகாயில ஒன்ன எடுத்துக் கடுச்சுக்கிட்டே எங்கம்மயிட்ட கேட்டேன்.

"ஏமா, ஒங்கலியாணத்துல புல்லரிசிச் சோறுதான் போட் டாளாமுல்ல. பாட்டி சொன்னா."

"ஆமா, இத்தினிக்கானு வெளக்கமாத்தையும் சொளகையும் எடுத்துக்கிட்டுப் போயி எறும்புக் குழிகள வெட்டி வெட்டி வெளக்க மாத்துட்ட கூட்டி அள்ளிட்டு வருவோம். எறும்ப சேத்து வச்ச புல்லரிசியக் கொண்டாந்து சொந்தக்காரக வீடுகளுக்காக வீட்டுக்கு ஒரு ஆளுக்குச் சாப்பாடு குடுத்தோம். அப்பயெல்லாங் கடும் பஞ்சம்."

நாங் கூழுக் குடுச்சு முடிக்கவும், எங்கம்ம கூடப் போயி கீர உறுவுனேன். அந்நியாரத்துல தெரு வழியா ஒரு ஆளு, "இன்னைக்கு ராத்திரி கீழத்தெரு சக்கர மகா முத்தரசிக்குப் பருசம் போடுராக; எல்லாரும் வந்துருங்க" ன்னு கத்திக் கத்திச் சொல்லிக்கிட்டே போனான்.

"அது யாரும்மா சக்கரன்னா?" நாங் கேக்கவும், "அதாம்டி, போன தைப் பொங்கல்லுச் சமயத்துல சல்லிக்கெட்டு மாட்டப் புடிக்க போயி தொடயில குத்துப்பட்டுக் கெடந்தானே அவெம் மகளுக்குத்தான். அந்தப்பிள்ள ஆளாகி ரெண்டு மூனு மாசந்தான் இருக்கும். மாப்பிள்ள வரவும் சட்டுன்னு முடுச்சுரலாம்னு பாத்துருப்பான்." எங்கம்ம சொல்லிட்டு அடுப்புப் பத்த வைக்கப் போனா.

நானு இத்தினக்கானுப் புளி எடுத்து வாயுல போட்டுச் சப்பிக்கிட்டே சாவடிச்செம வெளாடப் போனேன். கொஞ்ச நேரம் வெளாண்டுட்டு நானும் ரெண்டு மூனு பிள்ளைகளும் பருசம் போடுற வீட்டுக்குப் போனோம்.

வீட்டுக்கு வெளிய அடுப்புத் தோண்டி முத்தரசி அவுகம்மயும், சினுமயும் சோறாக்கிக்கிட்டு இருந்தாக. முத்தரசி ஒக்காந்து கத்தரிக்கா முனுக்கிக்கிட்டு இருந்தா. அந்நியாரம் பெரிய நாட்டாமெ, சின்ன நாட்டாமெ, தாய் மாமென், இன்னுங் கொஞ்சம் ஊர்ப் பெரியவுக வந்தாக. மாப்பிள்ளையோட அய்யன் முத்திருளனும் வந்தாரு. மாப்பிள்ளையோ, அவுகம்மையோ யாரும் வரல. முத்திருளங் கைல ஒரு தாம்பாளத் தட்டுல பருசச் சீல, ரவுக்கத் துணி, ஒரு கெட்டு வெத்தல, பாக்கு, ஒரு சீப்பு வாழப்பழம், ஒரு தேங்கா, அத்தோட பருசத் தொக நூத்தி ஒரு ரூவா எல்லாம் வச்சுத் தூக்கிக்கிட்டு வந்தாரு.

காயி முனுக்கிக்கிட்டு இருந்த முத்தரசி போயி பாய எடுத்துட்டு வந்து வீட்டுக்கு முன்னால போடவும் அதுல எல்லாரும் ஒக்காந்தாக. முத்தரசி அவுகய்யன் சக்கரையும் வந்து ஒக்காந்தாரு. ஒடனே பெரிய நாட்டாம, முத்துருளங் கைலருந்த தாம்பாளத் தட்ட வாங்கித் தாயி மாமங்கிட்ட சம்மதங் கேட்டுட்டு, சக்கர கைல தட்டக் குடுத்தாரு.

சக்கர தட்ட வாங்குனப் பெறகு முத்திருளனும், நாட்டாமயுஞ் சேந்து பேசி வார வையாசி பத்தாந் தேதி கலியாணத்த முடுச்சுருவோம்னு சொல்லிட்டு எந்துருச்சுப் போயிட்டாக. பருசத்துக்கு வந்த வெத்தலக் கெட்டப் பிருச்சு ஒரு ஆள உட்டு குடுத்துட்டு வந்தாக. யாரு வீட்டுல பருசம் போட்டாலும் எல்லா வீட்டுக்கும் பாக்கு வெத்தல குடுப்பாக.

நானு வீட்டுக்கு வந்ததும், “ஏமா பருச வீட்டுல குடுத்த பாக்கு வெத்தல எங்கம்மா?” ன்னு கேட்டேன்.

“இப்பத்தான வந்து பாட்டி வாங்கிட்டுப் போரா,” ன்னு சொன்னா எங்கம்ம.

எங்க பாட்டி கஞ்சி தண்ணி குடிக்காம இருந்தாலும் இருந்துருவாளே ஒழிய, வெத்தல பாக்குப் போயல இல்லாமெ இருக்க மாட்டா.

வையாசி மாசம் எங்களுக்குப் பள்ளிக்கொடத்துல லீவு உட்டுட்டாக. அந்த லீவுல எங்க தெருவுல நெறய்யாக் கலியாணம் நடக்கும். ரெண்டு மூனு மாத்தைக்கு முன்னாலயே பருசம் போட்டு இந்த மாப்பிள்ளைக்கு இந்தப் பொண்ணுன்னு முடிவு செஞ்சு வச்சுக்கிருவாக. பெறகு வையாசி பெறக்கவும் கலியாணம் முடிப்பாக.

முத்தரசி கலியாணத்தன்னைக்கு அஞ்சு கலியாணம் நடந்துச்சு. காலப் பூசைல தான் கலியாணம் நடக்கும். நானும் அந்தக் கலியாணப் பூசைக்குப் போனேன்.

கோயிலுக்கு முன்னால மேளக்காருக ஒக்காந்துருந்தாக. மேளக்காருகள்ளாம் எங்காளுகதான். மாட்டுச் சவ்வக்கொண்டு இழுத்துக் கெட்ன மேளம், பீப்பி, சிங்சா எல்லாம் வச்சுருந்தாக. கோயிலு மண்டவத்துல அஞ்சு மாப்பிள்ளைகளும் கலியாண வேட்டி சட்ட போட்டு சருகத் துண்ட தோள்ல போட்டு சோடுச்சுக்கிட்டு இருந்தாக. அங்ன பூராம் பெயல்களா நின்னானுக. கோயிலுக்கு எடப்பக்கத்துல நின்ன லவா மரத்துக்குக் கீழ அஞ்சு பொண்ணுகளையும் வச்சு சோடுச்சுக்கிட்டு இருந்தாக. அங்ன பூராம் கொமரிகளும் சின்னப் பிள்ளக் காடுகளுமா இருந்தாக. நானும் போயி பொண்ணு சோடிக்குரதப் பாத்தேன்.

வழக்கமா காடுகரைகளுக்கு வேல வெட்டிக்குப் போம் போது சீலக் கொசுவத்த பின்னால வச்சுக் கெட்டுவாக. ஆனா இப்ப படுச்ச பொம்பளைக கெணக்கா முங்கோசலம் வச்சு கெட்டுனாக. வழக்கமா தூக்கிப் போடுற கொண்ட போடாம, வளுச்சு முடி மயிரு வச்சு நீட்டமா சடப்பின்னி நெறய்யாப் பூ வச்சாக. பெறகு பவுடரு போட்டுப் பொட்டு வச்சுட்டு, மிச்சமிருந்த கதம்பத்துல இத்தினி இத்தினி பல்லுட்ட கடுச்சு சொந்தக்காரப் பிள்ளைகளுக்கா

குடுத்தாக. பெறகு ஒரு பெரிய ரோசாப்பூ மால, அதுக்குத் தொண மாலன்னு சின்ன மல்லிகப்பூ மால ஒன்னப் போட்டு வருசையா கோயிலுக்குள்ள கூப்டுட்டுப் போனாக.

பொண்ணுக போரதுக்கு முன்னாடியே மாப்பிள்ளைகளும் மாலைகளப் போட்டுக்கிட்டுப் போயி கிராதிக்கு முன்னால போட்டுருந்த பாயில ஒக்காந்திருந்தாக. ஒரோரு பொண்ணு மாப்பிள்ளைக்கும் ஒரோரு புதுப்பாயி போட்டுருந்தாக. அது மாப்பிள்ள வீட்லருந்து வாங்கியாந்து போடனும். அஞ்சு பொண்ணு மாப்பிளையுஞ் சோடியா ஒக்காரவும் சாமியாரு வந்து பூச தொடங்குனாரு.

நாங்க சின்னப் பிள்ளைகள்ளாம் பூச பாக்காமெ பொண்ணு மாப்பிள்ளைக போட்டுருந்த மாலைல இருந்து உளுகுற ரோசாப்பூ எதழ்களப் பெறக்கிப் பெறக்கித் தின்னுக் கிட்டுருந்தோம். தாலி கெட்ர நேரத்துக்கு பொண்ணும் மாப்பிள்ளையும் எந்துருச்சுப் போயி முன்னால மொழங்காலு போட்டு சாமியாரு தாலி மந்துருச்சு குடுக்கவும் மாப்பிள்ள தாலி கெட்டுனா. தாலி கெட்டும்போது கோயிலுக்கு வெளிய ஒக்காந்துருக்குற மேளக்காருக மேளத்தப் போட்டு டம் டம் டம்முன்னு அடிப்பாக. பீப்பியும் ஊதுவாக. அதத் திடீர்னு கேக்கைல மனசுக்குள்ள ஒரு மாதிரி இருக்கும்.

தாலி கெட்டி முடுஞ்சு நன்ம வாங்குன ஒடனே பெரிய பொம்பளைகள்ளாம் வீட்ல வேல பாக்கனும்னு ஓடியாந்துருவாக. ஆம்பளைகள்ளாம் கடேசி வர இருப்பாக. பூச முடுஞ்ச ஒடனே மேளக்காருக மேளத்த அடிக்க ஆரம்பிச்சிருவாக. அவுக அடுச்சுக்கிட்டே முன்னால போக அதுக்குத்தக்கன ஆம்பளப் பெயல்க ஆடிக்கிட்டுப் போவானுக. அவுகளுக்குப் பின்னால அஞ்சு மாப்பிள்ளைகளும், மத்த ஆம்பளைகளும் போக, அவுகளுக்குப் பின்னால அஞ்சு பொண்ணுகளும் போனாக. நாங்களும் பொண்ணுக பின்னால போனோம்.

போம்போதே நல்ல வெயிலு வந்துருச்சு. பொண்ணு, மாப்பிள்ளைகளுக்கு அவுகவுக சொந்தக்காருக போயிக் கொடப் புடுச்சாக. மாப்பிள்ளைக சட்டைகள்ள இஸ்டப் பட்டவுக, அவுகவுக பிரண்டுக போயி ரெண்டு ரூவாத்தாளு, அஞ்சு ரூவாத்தாளுகளாக் குத்துனாக. பசாரு வந்ததும் அங்ன செத்த நிப்பாட்டி மேளக்காரனுக ரொம்ப உற்சாகமா அடிக்க, அதுக்குத்தக்கன முன்னால போன எளவட்டங்க சின்னப் பெயல்கள்ளாம் ஆடுனாக.

அங்ன இருந்த கௌப்புக்கடைல இருந்து பொண்ணு மாப்பிள்ளைகளுக்குக் காப்பி, பாலு இல்லன்னா சோடா, சருப்பத்து வாங்கிக் குடுத்தாக. பொண்ணு மாப்பிள்ளைக குடுச்சாப் பெறகு திரும்பியும் கொட்டடுச்சுக்கிட்டே வந்து எங்க தெருக்காட்ல

மொழஞ்சோம். அங்க எல்லாத் தெருவையும் சுத்துனாக. அங்னங்ன சொந்தக்காருக அவுகவுக பொண்ணு மாப்பிள்ளையக் கூப்டு பாலு பழ மரியாத செஞ்சாக. கடைலருந்து பாலு வாங்கியாந்து, கூட ரெண்டு வாழப்பழம் குடுப்பாக.

எல்லாத் தெருவுஞ் சுத்துனாப் பெறகு மாப்பிள்ள வீட்டுக்குள்ள மொழைறதுக்கு முன்னால மஞ்சத் தண்ணிக்குள்ள வெத்தலயக்கிள்ளிப் போட்டு ஆலாத்தி எடுப்பாக. ஆலாத்தி எடுக்குரவுகளுக்கு மாப்பிள்ள துட்டு குடுப்பாரு. பொண்ணு மாப்பிள வீட்டுக்குள்ள மொழையும் போது, எந்தக் கலியாண வீட்லயுஞ் சரி ரேடியாவுல மணமகளே, மருமகளே வா வா. உன் வலது காலை எடுத்து வச்சு வா வாங்ற பாட்ட மறக்காமெ போட்டுருவாக, இந்தப் பாட்டுக் கேட்டதுமே பொண்ணு மாப்ள வீட்டுக்கு வந்தாச்சுன்னு எல்லாருக்குந் தெருஞ்சு போகும். பொண்ணு , மாப்பிளையும் பாயப் போட்டு ஒக்கார வைப்பாக.

ஆம்பளைக பூராம் வெளில பெஞ்சு கிஞ்சு போட்டு பேசிக்கிட்டு இருப்பாக. இல்லன்னா கடக்காட்டுச் செம போயிருவாக. பொம்பளைக பூராம் சோறாக்கி கொழம்பு வச்சுக்கிட்டு சதா வேல செஞ்சுக்கிட்டு இருப்பாக. காலச் சாப்பாடு, மதியச் சாப்பாடெல்லாம், கலியாண வீட்டுக்காரங்களுக்கும் வெளியூர்லருந்து கலியாணத்துக்கு வந்துருக்கவுகளுக்கும் குடுப்பாக. பொண்ணு, மாப்பிள்ளையுஞ் சாப்டுட்டு ஒக்காந்துருப்பாக.

ராத்திரி சாப்பாடு மொய் போடுற எல்லாத்துக்கும் குடுக்கனும். அஞ்சோ பத்தோ மொய் எழுதிட்டு வீட்ல இருக்குர அம்புட்டுப் பேரும் சாப்டுரது மட்டுமில்லாமெ, கூடயே ஒரு நார்ப்பொட்டியக் கொண்டாந்து பொட்டிச் சோறுன்னு சொல்லி அது நெறய்யாச் சோறு வாங்கிட்டுப் போவாக. அதக் கொண்டு போயித் தண்ணி ஊத்தி வச்சு, அடுத்த நாளைக்குப் பழைய சோறாச் சாப்டுக்கிடுவாக. சாப்பாட்டுக்கேக் கஸ்டப்படுர சனங்க வேற என்ன செய்யும்? அதுனால கலியாணம் முடிக்கனும்னா முன்னக்கூட்டியே அறுப்புக் காலத்துல நெல்லு சேத்துவச்சு அவுச்சு, ரோதைல அரச்சு வச்சுருப்பாக. கடைல அரிசி வாங்கிக் கட்டுப்பிடி ஆகாது.

இப்பிடி நெல் அவுச்சு, அரச்சு, பொடச்சு வச்சு, கலியாணத்தன்னைக்கு அம்புட்டுச் சமையலையும் பொம்பளைகளே செய்வாக. வேற எடங்கள்ள வாரமாதிரி, சமையலுக்கு வெளிலருந்தெல்லாம் ஆளு கூப்டமாட்டாக. ஏதோ, அவுகவுகளுக்குத் தக்கன, சோத்தக் காச்சி, ரசத்த வச்சு ஊத்துவாக. ஏதாச்சும் ஒரு வெஞ்சனங் கூட வப்பாக.

சாயங்காலத்துல மேளக்காருக மேளத்த அடுச்சுக்கிட்டு முன்னால வர, பொண்ணு மாப்ளயும் தண்ணி எடுக்க கெணத்துக்கு

வருவாக. அப்பயும் நாங்கள்ளாம் ஓடிப்போயிப் பாப்போம்.

பொண்ணும் மாப்பிள்ளயும் கெணத்துக்கு வந்த ஒடனே கெணத்தச் சுத்தி வந்து கெணத்தோட நாலு மூலைலயும் மஞ்சளத் தடவிட்டு, ரெண்டு பேரு கையயும் சேத்து வைச்சு அதுல கொஞ்சம் வெத்தலய வச்சு கெணத்துத் தண்ணிக்குள்ளப் போடுவாக. எம்புட்டு வெத்தல குப்புற உளுகுதோ, அத்தன பொம்பளப்பிள்ள பெறக்கும்; எம்புட்டு வெத்தல மல்லாக்க உளுகுதோ, அத்தன ஆம்பளப் பிள்ள பெறக்கும்னு சொல்லுவாக. பெறகு மாப்பிள்ள வாளியக் கொண்டு தண்ணிய எறச்சுக் குடுக்க பொண்ணு வாங்கி கொடத்துக்குள்ள ஊத்தும். தண்ணிய வாங்கிக் கொடத்துக்குள்ள கொஞ்சம் போல உளுகும்படி ஊத்திட்டு மீதிய வெளியயும் ஊத்துவா. அவா நேரா கொடத்துக்குள்ள ஊத்துனாலும் கூட இருக்கவுக கோணல் மாணலா ஊத்தச் சொல்லுவாக. மாப்பிள்ளையப் பொழுதனிக்கும் எறைக்க வைக்குதுக்குத்தான் இந்தக் கோளாரு. அதே மாதிரி, பெறகு பொண்ணு எறச்சுக் குடுக்க, மாப்பிள்ள வாங்கி கோணலுமாணலாக் கொடத்துக்குள்ள ஊத்துவாரு.

எப்பிடியோ எறச்சு கொடம் நெறையவும், மாப்பிள்ள கொடத்தத் தூக்கிப் பொண்ணு இடுப்புல வைக்கவும், திரும்பியும் மேளத்த அடுச்சுக்கிட்டு வீட்டுக்குப் போவாக.

இதெல்லாம் என்னத்துக்குச் செய்ராகன்னுச் சரியாத் தெரியல. ஒருவேள எல்லா வேலைகளையும் ரெண்டு பேரும் சரிக்குச் சரியா செய்மோன்னு அடையாளமாச் செய்ராகளோ என்னமோ. நானு எங்கம்மயிட்ட இதக் கேட்டதுக்கு அது என்னமோ அப்ப இருந்து இதுதான் வழக்கமா இருக்குங்றா.

வீட்டுக்குத் தண்ணி எடுத்துட்டுப் போனப் பெறகு அங்க பொண்ணும் மாப்பிள்ளையும் குளிப்பாக. இத எண்ணப்பு சடங்கும்பாக. கெணத்துலருந்து நாங்க எல்லாரும் மொத ஓடிப்போயி அதப் பாக்க நிப்போம்.

கலியாணச்சீல, வேட்டியக் கழத்திட்டுச் சாதா சீல, வேட்டி கெட்டிக்கிட்டு பொண்ணும் மாப்பிள்ளையும் பக்கத்துல பக்கத்துல ஒக்காருவாக. அப்பப் பொண்ணு கைல கொஞ்சம் எண்ணய ஊத்தி மாப்பிள்ள தலைல தேய்க்கச் சொல்வாக. அவா ரொம்பா வெக்கப்பட்டுக்கிட்டு குனுஞ்ச தல நிமுராம மாப்பிள்ள தலைல தடவுவா.

அதுமாதிரி மாப்பிள்ள கைல கொஞ்சம் எண்ணய ஊத்தி பொண்ணு தலைல தேய்க்கச் சொல்வாக. மாப்பிள்ள எண்ண தேச்சு உட்டப்பெறகு கொஞ்சஞ் சீவக்காயக் கரச்சு மாறி மாறித் தடவுவாக. பெறகு பொண்ணு மாப்பிள்ளைக்கும், மாப்பிள்ள பொண்ணுக்கும் மாறி மாறித் தண்ணி ஊத்தி உடுவாக. கூட நிக்கரவுக பொண்ணு

தலையத் தேச்சு உடுவாக. கூட நிக்கறவுக பொண்ணு மாப்பிள்ளத் தலையத் தேச்சு உடுவாக. மொறமக்காரப் பிள்ளைகளும், பெயல்களும் பொண்ணு மாப்பிள்ளத் தாலைல தவுடு, உமி இப்பிடி எதயாச்சுங் கேலிக்கு எறிவாக. அம்புட்டுத்தான் குளிப்பு. பெறகு உள்ள போயித் தலயக் கிலயத் தொவட்டிட்டு கலியாணச் சீல வேட்டியக் கெட்டிக்கிட்டு வந்து வெளிய ஒக்காருவாக.

அப்ப ஊர்ப் பெரியவுக, சொந்தக்காருக வந்து மால மாத்துவாக. மொதல்ல நாட்டாம வந்து பொண்ணு கழுத்துல கெடக்குற மாலைய மாப்பிள்ள கழுத்துலயும் மாப்பிள்ள கழுத்துல கெடக்குற மாலையப் பொண்ணு கழுத்துலயும் மாத்திப் போட்டு உட்டுட்டு நெத்தில சிலுவ வரஞ்சுட்டுப் போவாரு. அதே மாதிரி பெரியவுக சொந்தக்காருகள்ளாம் வந்து மாத்தி மாத்திப் போட்டுட்டு பொண்ணு மாப்பிள்ளய ஆசீர்வாதஞ் செஞ்சுட்டுப் போவாக.

மத்தியானம் மூனு மணிக்கெல்லாம் அடுப்புத் தோண்டி ஒலய வச்சு பெரிய பெரிய அண்டாவுல சோறாக்குரது காயி வெட்டுரது, எல்லாமே பொம்பளைகதான் செய்வாக. ஆக்குன சோத்த வைக்கலப் போட்டு அதுல ஈரத்துணியப் போட்டு சோத்தக் கொட்டி ஆற வப்பாக. பெரிய பெரிய அண்டானாலும் பொம்பளை களே தூக்கி எடுத்துக்கொட்டி அம்புட்டுச் சோலியும் பாத்துருவாக. ஆம்பளைக வேல பந்தில பரிமாறுரதுதான்.

பந்தி ஆரம்பிக்குரது முன்னால மாப்பிள்ள ஒக்காந்துருக்க, மொய் எழுதுரவுக வந்து மாப்பிள்ள கைல ரூவாய குடுத்துட்டுப் பெறகு சாப்பிடப் போவாக. மாப்பிள்ளைக்கிட்ட ரூவாயக் குடுக்கக் குடுக்க ஒரு பெய அத மைக்குல சத்தம் போட்டுச் சொல்லுவான். முத்தரசி கலியாணத்துலயும் அப்பிடித்தான். பொண்ணு வீட்டாளுக மொய் போட்டா “ஓ ஒர மொறையாரே சக்கரமகா முத்தரசி கலியாணத்துக்கு, தோமாசு மகன் சின்னப்பன் அஞ்சு ரூவா மொய்யி” ன்னு சொல்லவும் கூட நின்னவுக “நல்ல காரியம்” னு கத்த, ரெண்டு பொம்பளைக ஒடனே கொலவ போட்டாளக.

அதுமாதிரி மாப்பிள்ள வீட்டாளுக மொய் போட்டா மாப்பிள்ள பேரச் சொல்லி மைக்ல கத்துவாக.

இந்த மொய்யி உளுத்தாட்டுரது ஊரு பூராங் கேக்கும். கொஞ்சம் வளந்த பெறகு நானு, ஏங்கூடப் படிக்கிற பிள்ளைகள்ளாம் எம்புட்டு மொய்யி உளுந்துச்சுன்னு மைக்ல சொல்லச் சொல்ல எண்ணிக்கிட்டே இருப்போம்.

மொய் போடுரவுக வீடுகள்ள கலயாணங் காச்சின்ன வரைல இவுக போயி அவுக செஞ்ச மொய்ய பதிலுக்குச் செய்யனும். அப்பிடிச் செய்யாட்ட கேவலமாப் பேசுவாக. அதுனால எங்க பாட்டி சொல்லுவா, “மொய்யின்னா என்ன, வட்டி இல்லாத

கடந்தான்.”

எங்க வீட்டுக்கு முன்னால இருந்த திருணைல ஒக்காந்து நெறய்யா பொம்பளைக பேசிட்டு இருந்தாக. அப்ப சிலுவமேரி சொன்னா: “நாங்கள்ளாம் கலியாணம் முடிக்கைல, காடுகரைகள்ளப் பாத்து பழகியிருந்தாலும் தாயி தகப்பன் பொண்ணு பிள்ளன்னு பாத்துக் கெட்டிவச்சாக. ஆனா இப்ப வரவர இந்த எளவட்டங்களும் கொமரிகளும் வேல வெட்டி செய்யயிலயே பாத்துப் பழகிட்டு, அப்பிடியே சேந்துக்கிருதுக. கேவலப்பட்ட கழுதைக.”

ஒடனே எங்க பாட்டி, “நாங் கொமரியா இருக்கும் போதெல்லாம், நாங்க இப்பிடி நொரநாட்டியம் புடுச்சு அலையல. தாயி தகப்பன் பாத்து கெட்டி வச்ச புருசனுக்கு வாக்கப்பட்டோம். எனக்கெல்லாம் தாலி கெட்டி வந்த அன்னிக்கு ராத்திரி ஒங்க மச்சானக் கண்டு அம்புட்டு பயம்மா இருந்துச்சு.”

“எதுக்கு பாட்டி பயம்மா கெடந்துச்சு?” நாங் கேக்கவும், “எதுக்கா, முன்னப் பின்னத் தெரியாத ஆம்பளைகூட தனியா ரவைக்கு இருக்கரதுக்குப் பயம்மா இருக்காதா பின்ன? நானாச்சும் எப்பிடியோ சமாளுச்சு இருந்துக்கிட்டேன். ஒங்க பெரீமதான் பாவம் ஒன்னுந் தெரியாம வாக்கப்பட்டு ரொம்பக் கஸ்டப்பட்டா.” பாட்டி சொன்னா.

“எங்கக்காள கெட்டிக் குடுக்கும்போது, கலியாணத் தன்னைக்கு ராத்திரி, அவா புருசங் கிட்டத்துல வரவும் ‘எனிய கெட்ட வழக்கஞ் செய்யவா கெட்டிக் குடுத்தீக’ன்னு அலறிக்கிட்டு வெளிய ஓடியாந்துட்டாளாம். அதுலருந்து ரவைக்குரவ எங்கம்மயிட்டயே போயி படுத்துருக்கா. பெரிய பொம்பளைக எம்புட்டோ எடுத்துச் சொல்லியும் அரிதிக்குப் போமாட்டேனுட்டா. ‘எனக்கு அந்த ஆளப் பாக்கையில ஐயரவா இருக்கு. அந்த ஆளு ரொம்ப அக்குருமம் புடுச்சவனா இருக்கான்.’ நாம் போமாட் டேன்னு அழுதுருக்கா. அவனும் பொறுத்துப் பொறுத்துப் பாத்துட்டு நாலஞ்சு நாள் கழுச்சு வம்பாரத்துக்கு இழுத்துட்டுப் போயி வாழ்ந்துருக்கான்.” எங்கம்ம எங்க பெரீமயப் பத்தி சொன்னா.

“அப்ப இருந்த கொமரிகளுக்கு அம்புட்டு வெவரம் இல்ல. இப்பச் சொல்லு இத்தினிக்கானு விடுக்கும்கூட எல்லாந் தெரியுது. அதுதான் கலிகாலங்றது,” பாட்டி சொல்லிட்டும் எந்துருச்சுப் போயிட்டா.

“அந்தக் காலத்துல பத்து வயசுலயும், பன்னண்டு வயசுலயுமா கலியாணம் முடுச்சா எப்பிடிம்மா வெவரந் தெரியும்? நீதான ஒருநா சொன்ன, வயசுக்கு முன்னாலியே கெட்டிக் குடுத்துருவாகன்னு. இப்ப வெவரந் தெரிஞ்சா விட்டிக் கெட்டிக்

குடுக்காக. அதுக்குப் போயி பாட்டி கலிகாலங்கா," எங்கம்மயிட்ட நாஞ் சொன்னேன்.

"அதுவும் வாஸ்தவந்தான், ஆனாலும் இந்தக் காலத்துப் பிள்ளைக ரொம்ப ராங்கி புடுச்சவளுகளாத்தான் இருக்காக "

அதுக்கு மேல நானு ஒன்னங் கேட்டுக்கல. ஆனா வேற எடங்கள்ள நடக்குற கலியாணங்களுக்கும், எங்க தெருவுகள்ள நடக்குற கலியாணங்களுக்கும், எம்புட்டு வித்தியாசம்னு நெனச்சுப் பாத்தேன்.

எங்க தெருவுகள்ள இந்த வரதட்சணை அது இதுன்னு பிக்கலு பிடுங்கலு இல்ல. ஏதோ இருக்குரத வச்சு ஒப்பேத்திருவாக. பொம்பள போயி ரூவாயக் குடுத்து கலியாணஞ் செய்றது இல்லாம ஆம்பளதான் பருசம் போட்டு கெட்டிக்கிரனும். எம்புட்டு அதிகம் பருசம் போடுரானோ அம்புட்டு கெவுரவம் ஆம்பளைக்கு. ஆனா இதெல்லாம் இப்ப படுச்சு மேல வந்தவுக கிட்ட மாறிக்கிட்டே இருக்கு.

அவுகள்ளாம் என்னமோ மேச்சாதிக கெணக்கா அவுகளப் பாத்து காப்பியடிக்காக. இம்புட்டு நகப் போடனும் இம்புட்டு ரொக்கங் குடுக்கனும்னு கண்ராவியா இருக்குது.

இந்த மாதிரி வெசயத்துலதான் அவுக வேற சாதி கெணக்கா மாறிக்குராக. ஆனா என்ன படுச்சாலும், எப்பிடி இருந்தாலும், என்ன தான் வேற சாதிக மொறமைகள காப்பி அடுச்சாலும், நம்மள என்னமோ கீழ்ரேட்டுலதான் வைக்கானுக. இதுக்கு என்ன எழவுக்கு மத்தவுகள காப்பி அடிக்குரது? இதுனால நம்மகிட்ட இருக்குற அம்புட்டு நல்ல பழக்கத்தையும் உட்டுப் போட்டு இதுலயுமில்லாம அதுலயுமில்லாம ரெண்டுங் கெட்டானா எதுக்கு அலையனும்? கைல இருக்குற வெண்ணய உட்டுட்டு நெய்யிக்கு அலஞ்ச கததான்.

நம்ம வழமப்படி கலியாணங்காச்சி முடுச்சா, மத்தவுகளுக்கு என்னமோ அது பிச்சக்காரத்தனமா தெரியுது. அசிங்கமாத் தெரியுது. "இந்த ஆளுகளா, வகுறு நெறஞ்சா வச்சு மூடத் தெரியாத சாதில இது. அதான் இப்பிடி கெடக்குதுகன்னு," சொல்லுதுக. அதுகளக் கெணக்கா அடுத்தவ மொதலுக்கு ஆசப்பட்டு அடுத்தவ வகுத்துல அடிக்கனும் பொறுக்கோ.

எங்க தெருவுல எழவு உழுந்தாலும் பொம்பளைகளாப் போயி பெரேதத்துக்கிட்ட ஒக்காந்து, சத்தமா ஒப்பாரி வப்பாக. ஆம்பளைக வெளிய ஒக்காந்துருப்பாக. பொம்பள செத்துப் போனா பொம்பளைகளா சேந்து பெணத்தத் தூக்கிக் குளுப்பாட்டிப் பாடைல வப்பாக. பெறகு பெணத்தப் பெதைக்கப் போம்போதும் கல்லற வரைக்கும் ஆணும் பொண்ணும் அம்புட்டுப் பேரும் போவோம். பெதச்சு முடுச்சாவிட்டி வீடுகள்ள வந்து குளிப்பாக.

இதெல்லாம் ஆம்பளதான் செய்யனும், இதெல்லாம் பொம்பளதான் செய்யனும்னு கெடையாது. எல்லா வேலையும் எல்லாருஞ் செய்வாக.

பொம்பளைக பிள்ளப் பெறும்போதும் வீட்லயே பெத்துட்டு, அஞ்சாறு நாள்ல பழையபடி காட்டு வேலைக்குப் போயிருவாக. எங்க பாட்டி செத்தப் பெறகு இப்பயும் இன்னொரு பொம்பளதான் பேறுகாலம் பாக்குது. வேற வசதி கிசதி ஒன்னும் இல்ல.

பிள்ள உண்டானா இப்பிடி இருக்கனும், அப்பிடி இருக்கனும், இந்த ஊசி போடனும் அது சாப்புடனும் இது சாப்புடனும்னு சொல்லிக்கிராக இப்ப. ஆனா எங்க பொம்பளைக வழக்கம்போல கூழுத்தண்ணீயக் குடுச்சுட்டு வேல வெட்டிக்குப் போயிட்டு வந்து பிள்ளையப் பெத்துட்டு, நாலஞ்சு நாள்ல மறுவடி வேலைக்கு ஓடனும். அப்பிடி ஓடுனாத்தான் கஞ்சி குடிக்க முடியும்.

இப்பிடி வீட்லயே பெரவசம் பாத்துச் சரிவர பாக்காமெ எம்புட்டோ பேரு செத்துக்கூடப் போயிட்டாக. இருந்தாலும் ஆசுபத்திரிகளுக்குக் கொண்டு போயிப் பாக்குர அளவுக்கு ஐவசு இல்ல. மத்த தெருவுகளுக்குப் போற மாதிரி எங்க தெருவுகளுக்கு மருத்துவச்சிகளோ, டாக்டர்மாரோ வரமாட்டாக.

புருசஞ் செத்துப்போனா ஒடனே பொம்பள வெள்ளச்சீல கெட்டனும். அப்பிடி இருக்கனும் இப்பிடி இருக்கனும்னு எந்தச் சடங்குமில்லை. புருசஞ் செத்துப் போனாலும் வழக்கம் போலத்தான் இருப்பாக. ஏம்னா புருச இருந்தாலும் கண்டுசனா பொட்டு வைக்குரது, வளையலு போடுரது, நக நட்டுப் போடுரது, மஞ்சப்பூசி மினுக்குரது இப்பிடி எந்த இதும் கெடையாது. மொதக்காரியம் நக நட்டுன்னு இருந்தாத்தான போடுரதுக்கு? குளுச்சு கிளுச்சு மஞ்சப் பூசி, பொட்டு, பூ வைக்குதுக்கு அவுகளுக்கு நேரமெங்க இருக்கு. விடுஞ்ச ஒடனே வேல வெட்டிக்குப் போயிட்டு அடஞ்சப் பெறகு வீடுகளுக்கு வருவாக. அதுனால புருசன் இருந்தாலும் செத்தாலும் ஒரே மாதிரிதான் இருப்பாக. வேனும்னா தாலிய மட்டும் கழத்திடுவாக. செலபேரு கலியாணம் முடுச்சாலும் தாலி போடாமக்கூட புருசம் பொண்டாட்டியா இருப்பாக. தாலிக்கு அம்புட்டு முக்கியமில்ல.

செல பொம்பளைக புருசஞ் செத்தப் பெறகு திரும்பியுங் கலியாணம் முடுச்சுக்கிருவாக. அதெல்லாஞ் சகசமா நடக்கும். ஆனா எங்க ஊர்லயே வேற சாதிகள்ள புருசமில்லாத வெதவை களை பாத்த ஒடனே கண்டு புடுச்சுப் போடலாம். எங்க தெருவுல எல்லாம் ஒன்னு மண்ணாத்தான் இருப்பாக. அப்பிடி வித்தியாச மெல்லாங் கெடையாது.

பல வெசயத்துல பாக்கும்போது, எங்க சாதில இருக்குரது எம்புட்டோ நல்ல விசயமாத் தெரியுது. வேற சாதிப் பொம்பளைக கிட்ட இருக்குற கெடுபிடிகள்ளாம் எங்ககிட்ட இல்ல. ஆனா என்ன தமாசுன்னா, அவுககிட்ட இருக்குற கெடுபிடிகள்ளாம் நல்லதுன்னும் எங்ககிட்ட இருக்கரதெல்லாம் என்னமோ அசிங்கம் அநாகரிகம்னு சொல்லிக்கிராக. இதான் சிரிப்பா இருக்கு.

# ஒன்பது

ஒருநா பஸ் ஸ்டாண்டுலருந்து எங்க வீட்டுக்குப் போயிக் கிட்டுருந்தேன். எடவழில பேச்சியம்மா எனிய நிப்பாட்டி, “ஏத்தா, இன்னியுங் கலியாணம் முடிக்கலியாக்கும். எதுக்கு இம்புட்டு வயசாகியும் முடிக்காமெ இருக்க?” ன்னு கேட்டா.

பேச்சியம்மாவும் நானும் அஞ்சாங் கெளாசு வரைல ஒன்னாப் படுச்சோம். ஆறாங் கெளாசுக்குப் போம்போதே அவா நின்னுட்டா. அவாச் சக்கிலியக்குடிப் பிள்ள. சக்கிலியக்குடில அம்புட்டுக்காப் பொம்பளப் பிள்ளைகப் படிக்குறதில்ல. பெயல்க கொஞ்ச பேரு படிக்கானுக.

“இல்லத்தா, கலியாணம் முடிக்கல. ஆமா, இதாரு? ஒம் மகளா?” இடுப்புலருந்த பிள்ளையைப் பாத்துக் கேட்டேன்.

“ஆமா, இப்ப ரெண்டாங் கலியாணத்துல பெறந்தது. மொதல்ல ரெண்டு மக்க ; ஆணொண்ணு பொண்ணொன்னு. அவெங் காளிப்பெய அவுகப்பங்கூட இருக்கான். பொட்டச்சி ராமாயி ஏங்கிட்ட இருக்கா.”

இவா என்ன இப்பிடிச் சொல்ரா. நம்ம கிருஸ்தவ மதத்துல மொதப் புருசஞ் செத்தாத்தான ரெண்டாங் கலியாணஞ் செய்யலாம். இவா என்னடான்னா மொதப் புருசன் இருக்கைலயே ரெண்டாவது கலியாணம் முடுச்சுப் பிள்ளையும் பெத்துருக்கான்னு ஏம் மனசுக்குள்ள ஓடுது. சரி, இன்னகுள்ள பாதைல இதப்பத்திக் கேக்க வேண்டாமுனுட்டு, “சரி பேச்சி, நா வாரேன். நேரமாகுது. இன்னொரு தடவ பாப்பம்,” சொல்லிட்டு வீட்டுக்கு வந்துட்டேன்.

வீட்டுக்கு வந்தாவிட்டி இத யாருட்டயாச்சும் கேக்கனும்னு நெனச்சுக்கிட்டுருந்தேன்.

சொல்லி வச்சது கெணக்கா ரெண்டு நாக் கழுச்சு சக்கிலியக் குடியலருந்து இருளாயி எங்க வீட்டுக்க வந்தா. இருளாயி சம்சாரிகளுக்கு பண்ண வேல பாத்து ஒரு ரெண்டு மூட்டச் சோளத்த எங்க வீட்டில போட்டு வச்சுருந்தா. இருளாயி வீடு ரொம்பச் சின்னது. அவா புருசங் குடிகாரன். வீட்ல சோளத்த வச்சா எடுத்து வித்து குடுச்சுப்போடுவான். எங்க பாட்டிக்கும் இருளாயோட அம்ம மாரிக்கும் ரொம்ப நாளு பழக்கம். ரெண்டு பேரும் குடுக்கலு வாங் கலு வச்சுக்கிருவாகளாம். அப்பிடித்தான் இருளாயி எங்களுக்குப்

பழக்கம்.

பேச்சியம்மாளப் பத்தி இருளாயிட்டக் கேக்கனும்னு நெனச்சேன். எங்கம்மயும் இருளாயும் பேசிக்கிட்டுருக்கைல நானும் போயி இருளாயிட்டக் கேட்டேன். "ஒங்க தெரு பேச்சியம்மாப் பிள்ள ரெண்டாங் கலியாணமா முடுச்சுருக்கா ? எதுக்கு?"

"யாரு அவரு கருப்பசாமி மகா பேச்சியா? அவ தீந்துக்கிட்டுப்போயி கீழக்கடேசித் தெருவுல சொடலமாட மகனக் கெட்டிக்கிட்டா. இப்ப அவனுக்கு ஒரு பிள்ளயும் பெத்துக்கிட் டாளே" இருளாயி சர்வ சாதாரணமாச் சொன்னா.

"மொதப்புருச இருக்கைல எப்பிடி போயி ரெண்டாவது ஒரு கலியாணம் முடுச்சா?"

"அதெல்லாம் சர்வ சாதாரணமாச் செய்யலாமெ. நீங்க வேதக்காருகதான் அப்பிடிச் செய்ய முடியாது. நாங்க இந்துக் காருக, அதுலயும் பள்ளக்குடி, சக்கிலியக்குடில மட்டும் பொம் பளைக தீந்துக்கிட்டுப் போயிட்டு வேற கலியாணம் முடிக்கலாம். மித்த சாதிகள்ள இந்தப் பழக்கம் இல்ல," இருளாயி வெவரமா சொன்னா.

"சரி, இந்தப் பேச்சியம்மா எப்பிடி தீந்துக்கிட்டா?" நாங் கேட்டேன். "அவளும் வாக்கபட்டு ரெண்டு பிள்ளத் தாயாகிட்டா. புருசக்காரன் சதாக்குடி. ஒரு பைசா வீட்ல குடுக்கமாட்டான். காணாக் கொறைக்கு இவா வேல செஞ்சுட்டு வாரதையும் அடுச்சுப் புடுங்கிட்டுப் போயிருவான். எம்புட்டு நாளைக்குத்தான் பட்டினி கெடப்பா. இவா கெடந்தாலும் பச்சப் பிள்ளைக கெடக்குமா? இந்த லெச்சணத்துல, அவெம் மொகறக் கட்டைக்கு வப்பாட்டி வேற. வீட்ல ஒரு சாமான வைக்க உடமாட்டான். அடின்னா அடி, கொலபாதகமா அடிப்பான். அந்தப் பிள்ளையும் பொறுத்துப் பொறுத்துப் பாத்துட்டு அவுகய்யா வீட்டுக்குப் போயிட்டா."

"அப்பிடியே இருந்து ரெண்டாங் கலியாணம் முடுச்சுக் குட்டாளாக்கும்?"

"அந்தானிக்க என்ன செஞ்சான்னா, அவுகய்யங்கிட்டச் சொல்லி ஊர் நாட்டாமயிட்ட வெவரத்தச் சொல்லி இனிமேச் சேந்து வாழ முடியாது; பிருச்சு உட்ருங்கன்னு சொல்லிருக்கா. நாட்டாமக்காரு பஞ்சாயத்து வச்சு புருசம் பெஞ்சாதி ரெண்டு பேரையுங் கூட்டத்துக்குக் கூப்டு தீத்து உட்டுட்டாக."

"எப்டி தீத்து உட்டாக?" நாங் கேட்டேன்

"எப்பிடின்னா, வழக்கம் போலதான். பேச்சிட்ட நாட்டாம கேட்டாரு. அவா படுர இம்சயச் சொன்னா. வப்பாட்டி பேச்சக் கேட்டுக்கிட்டு இவளயும் பிள்ளைகளையும் படுத்துர பாட்டையும், குடிச்சுட்டு வந்து மிருகங் கெணக்கா நடந்துக்குரதயுஞ் சொல்லிட்டு, இனி நானு சேந்து வழ இஸ்டப்படலன்னுட்டா. சரின்னுட்டு

பெயல அப்பங்கூடயும், பொட்டச்சிய அம்மக்காரிக்கூடயும் SÞ÷@ËqÂê± XðgôÙ NÝ°Y· X«¢ uËv°@."

"இதுக்குப் பெறகு வேற கலியாணம் முடுச்சுக்குரலாமா?"

"ம்,...அதான் பேச்சிபிள்ள முடுச்சு இன்னொரு பிள்ள பெத்துட்டாளே. அவெ முடிக்கல. இன்னு வப்பாட்டிக்காரியோட அலைரான். அந்த ஆம்பளப் பெய காளி, முக்காவாசி நேரம் பேச்சி வீட்லதான் கெடப்பான். சரி, நானு வாரேன். இருட்டிக்கிட்டு வருது;" சொல்லிட்டு இருளாயி போயிட்டா.

அவா சொன்னத நெனச்சா எனக்கு அருவசமா இருந்துச்சு. ஆனா இப்பிடியொரு வசதி நம்ம பொம்பளைகளக்குக் கெடச்சது எம்புட்டு நல்லதாப் போச்சு. சும்மாக் கலியாணம்னு ஒன்னு கெட்டுனதுக்காக காலம் பூராம் புடிக்காதவனோட கெடந்து வெந்து சாக வேண்டாம்ல. ஆனா இந்த வசதி நம்ம கிறிஸ்தவுக கிட்ட இல்லியேன்னு வருத்தமாயும் இருந்துச்சு.

வேற மேகலக் குடிகள்ள எல்லாம் இப்பிடி நெனச்சுக்கூடப் பாக்க முடியாது. புருசன உட்டுட்டு வந்துட்டா வாழா வெட்டின்னு சொல்லி கொஞ்சங் கொஞ்சமா சித்ரவத செஞ்சு கொன்னே போடுவாக. கல்லானாலுங் கணவன்; புல்லானாலும் புருசம்னுட்டு கெடக்கனும். இப்பிடி யோசுச்சுக்கிட்டே எங்கம்மயிட்ட கேட்டேன். "ஏம்மா, இப்பிடி இருளாயி சொல்றது கெணக்கா ஆம் பளைக்குப் புடிக்காட்டி தீந்துக்கிட்டு வேற கலியாணம் முடிக்கலாமா?"

"பொம்பளைக்கே இந்தச் சலுக இருக்குன்னா, ஆம்பளைக்கா இல்லாமப் போகும். போயி அவுக தெருக்காட்ல பாரு. நெறய்யா ஆம்பளைக தீந்துட்டு, தீந்துட்டு வேற கலியாணம் முடுச்சுக்கிரு வானுக. அவளுக கிட்டக்கேட்டா வேதக்காருகளே மேலும்பாங்க," எங்கம்ம சொன்னா.

"எதுக்கு வேதக்காருகளே மேலுங்கா? இப்பிடி இருக்குரது எம்புட்டு நல்லதுன்னு அவுகளுக்குத் தெரியாது போலுக்கோ. அங்குட்டங்குட்டுப் போயிப் பாக்கச் சொல்லு. தாலின்னு ஒன்னு கழுத்துல கெட்டிட்டா போதும். அம்புட்டுத்தான் சாகுந்தட்டிக்கும் என்ன சித்ரவதன்னாலும் அனுபவிச்சுக்கிட்டு புருசங் கூடத்தான் இருக்கனும். பெறந்த வீட்டுக்கும் போமுடியாது. புகுந்த வீட்லயும் இம்சப்பட்டுக்கிட்டு இருக்க முடியாது. எத்தனை பொம்பளைக இதுனால தற்கொல பண்ணிக்கிட்டுச் செத்துப்போராக தெரியுமா? அப்பிடித் தற்கொல பண்ணாம சடங்கெணக்கா சீவிச்சாலும் எத்தன பேரக் கொன்னுபோட்டு, அது தற்கொலன்னு சோடிக்காக தெரியுமா? இப்பிடி ஒரு வசதி இருந்தா, பேசாமெ கழுதப் பெயல உட்டுட்டு, புடுச்சா வேற கலியாணம் செஞ்சுக்கிரலாம். இல்லன்னா

சும்மாயாச்சும் கெடக்கலாம்," நாஞ் சொன்னேன்.

"நீயி இப்பிடிச் சொல்ற. ஆனா நம்மூருல பள்ளக்குடி, சக்கிலியக்குடிகள்ள போயிப்பாரு. பாதிக்கு மேல ஆம்பளைகதான் ஈங்கமுன்ன பொடுக்கு பொடுக்குன்னு பொம்பளைய தீத்துஉட்டுட்டு, வேற கலியாணம் முடிக்கான். அப்ப இது பொம்பளைகளத்தான ரொம்பாயும் பாதிக்குது," எங்கம்ம சொல்றதும் நெசம்மாத்தான் தெருஞ்சது.

"புடிக்காமத்தானம்மா தீத்து உடுரானுக. புடிக்காத பெயல்களக் கட்டிப் போட்டா வைக்க முடியும்? வச்சுத்தான் எதுக்கு? அதுனால முண்டப்பெய போராம்னு உட்டுத்தள்ள வேண்டியதுதானே? நம்ம சாதிகள்ள இந்த வாழா வெட்டி, அது, இதுன்னு ஒன்னும் இல்லைல. வேற கலியாணமும் முடிக்கலாம்ல. பெறகென்ன?"

"அதுவும் நெசந்தான். வேண்டாத பொண்டாட்டி கைப்பட்டாலுங் குத்தம், கால் பட்டாலும் குத்தம்ங்ற சாடைல, நம்ம என்ன செஞ்சாலும், எப்பிடி இருந்தாலும் குத்தங் கண்டு புடுச்சு கொதறிக்கிட்டு இருக்குரவெங்கூட வாழுரதும் வாழாததும் ஒன்னுதான். ஆனா நம்ம கிறிஸ்தவ மதத்துல இப்பிடி ஈஸியா உட்டுட்டுப் போமுடியாது. தாலி கெட்ர அன்னைக்கே கோயில்ல சாமியாரு சொல்றத கேட்டியா?" எங்கம்ம பெரசங்கம் வைக்க ஆரம்புச்சுட்டா.

"என்ன சொல்றாரு?" நான் கேட்டேன்.

"போமா.. போ... இப்டித்தான் சாமியாரு, சிஸ்டருக, கடவுளு,சத்தியம், பாவம், புண்ணியம், மோச்சம், நித்திய நரகமுன்னு கண்டமாணிக்காச் சொல்லி நம்மள கெதி கலங்க வைக்காக. நம்ம சந்தோசமா, சொதந்தரமா இருக்கனும்னுதாங் கடவுளு படச்சாரு. சும்மா ஒரு தாலிக் கவுத்தக் கெட்டிட்டதுக்காக சாகுந்தட்டிக்கும் அடிமையா நமக்குன்னு ஒரு அந்தஸ்தோ, அதிகாரமோ, எதுவுமே இல்லாமெ வாழுரது கடவுளுக்கே புடிக்காது. தெரியும்ல," நாஞ் சொல்லவும்,

"அப்ப இந்துக்காரா இருந்துட்டா பெரச்சனயே இல்லமெ சொக போகமா வாழலாம்ங்றியாக்கும்," எங்கம்ம கேட்டா.

"நா அப்டிச் சொல்லல. இந்துக்காருகளுக்கும் லாப நட்டமுன்னு இருக்கத்தாஞ் செய்யுது. ஆனா என்ன வசதின்னா, இப்டி படிக்காதவன் தீத்து உட்ரலாம்ல." நாஞ் சொன்னப் பெறகு நாங்க செத்த நேரம் என்னமும் பேசிக்கிரல.

அந்நியாரம் எங்க வீட்டுக்கு வந்த ஒச்சக்கண்ணுச்சினும, "என்ன, தாயும் மகளும் அமேதியா ஒக்காந்திட்டீக. மாமாவெக் காணும் வயக்காட்டுச்செம போயிருக்காகளாக்கும்?" கேட்டுக்

கிட்டே ஒக்காந்தா.

"சக்கிலியக் குடிலருந்து இருளாயி வந்துட்டுப்போனா. அவுக தெருவுமல யாரோ பேச்சியாம். இவாகூட படுச்ச புள்ளை யாம். அவா புருசன தீத்துட்டு வேற கலியாணம் முடுச்சுப் பிள்ளை யும் பெத்துட்டாளாம். அதப் பேசிக்கிட்டு இருந்தோம். நம்ம மதத் துல இந்தச் சலுக இல்லைல" எங்கம்ம சொன்னா.

"நீ சொல்றது நெசந்தாம்கா. மேச்சாதிகள்ள புருசன உட்டுட்டு சீவிக்கவே முடியாது. திக்கத்துக்குத் திக்கம் வாழா வெட்டின்னு சொல்லிச் சொல்லியே, அது எம்புட்டுத் துட்டுகார வீட்டுப் பிள்ளன்னாலுஞ் சரி, எம்புட்டு அழகு சௌந்தர்யமான பிள்ளன்னாலுஞ் சரி, படிச்ச பிள்ளன்னாளும் சரி, படிக்காத பிள்ளன்னாலும் புருசன உட்டுட்டு வந்த அன்னைக்கு அவளுக்கு எல்லாம் போச்சு. அவளுக்கு மதிப்பு, மரியாத ஒன்னுங் கெடையாது. ஆம்பளைக சும்மா உட்டாலும் இந்தப் பொட்டச் சக்களத்திக பேறுவாதி வஞ்சு வஞ்சே அந்தப் பிள்ள உசுரப் போக்கிடுவாளுக. நா வேல வெட்டிக்குப் போர சம்சாரிக வீடுகள்ள இப்டி எம்புட்டோ நடக்குது."

அந்த ஐயா பொட்டலு மண்டைக்கெல்லாம் என்ன கொறச்சலு. ஒத்தே மகா. மகா பேருக்கே நாப்பது அம்பது ஏக்கரு நஞ்ச புஞ்சைய எழுதி வச்சு கலியாணம் முடுச்சுக் குடுத்தாரு. போன நாலஞ்சு மாத்தையே காடுகரையப் பூராம் புருசக்காரம் பேருக்கு மாத்திட்டு, இந்தப் பிள்ளையத் திரும்பிக்கூட பாக்கமாட்டானாம். இவா கண்ணுக்கு முன்னாலியே அவுகத்த மகள வச்சுக்கிட்டு இந்தப் பிள்ளைய அம்புட்டு இம்ச படுத்துவானாம். பொறுத்துப் பொறுத்துப் பாத்துட்டு பெறந்த வீட்டுக்கு வந்துருச்சு. இப்பிடி வாக்கப்பட்ட வீட்ல புருசங்கூட இல்லாமெ வாழாவெட்டியா வந்துட்ட துக்கத்துல படுத்தவருதான் அந்த ஐயா. மறா மாசமே செத்துப் போனாரு. அந்தம்மா பாவம் கைம்பொண்டாட்டி கச்சர இந்தப் பிள்ளையும் வச்சுக்கிட்டு செத்துக்கிட்டுருக்கு. ஒரு காலத்துல எப்பிடி வாழ்ந்த குடும்பம், எப்பிடி ஆகிப்போச்சு."

"பேய்க்கு வாக்கப்பட்டா புளிய மரம் ஏறித்தானாகனும்," எங்கம்ம சுருக்கமா சொல்லி முடுச்சுக்கிட்டா.

இதக் கேக்கவும் எனக்கு ரொம்பாக் கடுப்பா வந்துச்சு. அந்தக் கடுப்லயே சொன்னேன், "ஆமா, ஆம்பள மட்டும் பேயா இருக்கலாம். கொள்ளி வாயிப் பெசாசா இருக்கலாம். ஆனா பொம்பளைகதான் அவனுகள அனுசருச்சு, அரவணச்சு, அவனுக பேய்க் கொணத்துக்குத் தக்கன நம்மள மாத்திக்கிட்டு அவனுகளச் சந்தோசமாக்கிக்கிட்டே இருக்கனும். அப்பிடி என்ன மயித்துக்கு அவனுக குண்டியவே தாங்கிக்கிட்டு அலையனும்? என்னைக்கு

அவெ மனுசமில்ல, பேயின்னு தெரியுதோ அன்னைக்கே துப்புக் கழுச்சுட்டு வெளியேறிப் போயி வாழுரத உட்டுட்டு, வாக்கபட்டுட்டா புளிய மரம் ஏறித்தான் ஆகனுமாம்."

"ஏ...யெம்மா, ஒம்மகளுக்கு வார வெளத்தப் பாரு, இன்னுங் கலியாணம் முடிக்கலைல. அதான் இந்தத் துள்ளு துள்ளுரா. ஒருத்தங் கைல எம்புடட்டும். அம்புட்டுத்தான். நாலே நாள்ல வசக்கி வழிக்குக் கொண்டாந்துருவான்," சினும சொல்லிக்கிட்டுச் சிருச்சா.

நானு ஒன்னும் பேசிக்கிரல. பெறகுச் சினுமயே சொன்னா.

"அதுல பாருத்தா இந்தப் பள்ளக்குடி, சக்கிலியக் குடிகள்ள புருசம் பொண்டாட்டி தீத்துக்கிட்டு மறு கலியாணம் செஞ்சுக்கிட்டு இருந்துரலாம். இந்தப் பறப் பெயல்களுக்குன்னு ஒரு நாயம். சரி புருசனப் பிடிக்கலன்னு உட்டுட்டு வந்தா, நிம்மதியா இருக்க உடுராங்கன்னா பாத்த. அவா பாட்டுக்கு வெலகி வந்து வேல வெட்டி செஞ்சு கஞ்சியக் காச்சி குடுச்சுட்டு இருக்க விதியில்ல. பஞ்சாயத்துப் போட்டு வெசாருச்சு வலுக்கட்டாயமா புருசன் வீட்டுக்கு அனுப்பி உடுராக. கூட்டத்துல யார வெசாரிக்கங்ற? பொம்பளைய கூப்டக் கூட மாட்டாக. அவுகய்யனக் கூப்டு, இல்லன்னா அவுகண்ணனக் கூப்டு, " அவள ரெண்டு தட்டுத் தட்டி புருசங்கூட வாழச் சொல்லுங்கன்னு, சொல்லி முடுச்சுக்கிரானுக. இவனுகள்ளாம் ஊர்ப் பெரியவனுக!."

"இவா எதுக்குப் போறா? எவனும் எப்பிடியுஞ் சொல்லட்டு முன்னுட்டு அவா பாட்டுக்கு இருக்க வேண்டியதுதான?" நாங் கேட்டேன்.

"அப்பிடியும் செல பொம்பளைக தைரியமா இருக்காகள்ள. ஆனா அதுக்குப் பெறகு என்ன செய்ரானுகன்னு தெரியுமில்ல. புருசக்காரன் நேரா வந்து மாட்ட அடுச்சாப்ல அடுச்சு தல மயித்தப் பிடுச்சு இழுத்துட்டுப் போயி வச்சுக்குரான். கீழத் தெருவுல அவா ஆந்தக்கண்ணிப் பிள்ள கெணத்துக்காட்ல குளுச்சுட்டு நாலஞ்சு பேர்கூட வந்தவளத்தான அவா புருசங்காரன் போயி, கள்ளப்பெறாந்து கோழிக்குஞ்ச தூக்குரது கெணக்காச் செந்துணுக்காத் தூக்கியாந்து வீட்ல போட்டு மிதி மிதின்னு மிதிச்சிருக்கான். சேந்து வாழப் புடிக்கலன்னா உடவேண்டியதுதான. படுக்காளிப் பெய. ரெண்டு நாளு பேலக்கூட போஉடாமெ வீட்டுக்குள்ளயே பூட்டிப் போட்டானாம். எடுவட்ட பெய," சினும சொல்லிட்டு மண்ணு கொழைக்கனும்னு மம்பிட்டிய எடுத்துட்டு போனா.

ஒரு வகைல பாத்தா நம்ம வேதத்துல சேந்ததே தப்புத்தான். எங்க தாத்தா, பாட்டி எல்லாரும் இந்துக்களாத்தான இருந்துருக்கா.

எங்கம்மயில எடுப்பேறிப்போயி வெள்ளையம்மான்னு இருந்த பேர மரியம்மான்னு மாத்தி வச்சுக்கிட்டு கிறிஸ்தவளா மாறிட்டா," எங்கம்ம சொன்னா.

"இந்துக்களா இருந்தா இந்த ஒரு சலுகையாச்சும் நம்ம பொம்பளைகளுக்கு இருந்துருக்கும். ஆனா மத்த வெசயங்கள்ள நம்ம எல்லா நெலமயும் ஒன்னுதான்," ஒரு பெருமூச்சோட சொல்லிட்டு நானும் எங்கம்மயும் தாய வெளாட்டு வெளாடப் போனோம்.

# பத்து

நானு ஏழு, எட்டாங் கௌாஸ் படிக்கைல ஓட்டுப் போடுற டயம் வந்துருச்சு. அப்ப எனக்கு ரொம்பாச் சந்தோசமா இருக்கும். எதுக்குன்னா, அப்ப எங்களுக்கு பள்ளிக்கொடம் லீவு உட்டுருவாங்க. எங்க பள்ளிக்கொடத்துலதான் ஓட்டுப் போடுவாக. நாஞ் சின்னதா இருக்கைல எங்கம்ம கூட ஓட்டுப் போடுற லெக்குக்குப் போயிருக்கேன். எங்கம்மகூட வருசைல நிப்பேன். எங்கம்ம ஓட்டுப்போட உள்ள போகவும் நா வெளிய நின்னுக்குட்டு வேடிக்க பாப்பேன். அங்னங்ன போலீசுக்காரனுக நிப்பாக. ஆம்பளைக ஒரு வருச, பொம்பளை இன்னொரு வருசயா போவாக.

ஒரு தடவ ஓட்டுப் போட்டுட்டு வீட்டுக்கு வந்ததும் எங்கமயிட்ட, " ஏம்மா , நீ யாருக்கு ஓட்டுப் போட்ட?" ன்னு கேட்டேன்.

அதுக்கு எங்கம்ம சொன்னா, "ஓட்டு போட்ட வெவரமெல்லாம் வெளிய சொல்லக்கூடாது. ஒங்கய்யா எதுக்குப் போடச் சொன்னாகளோ அதுக்குத்தான் போட்டேன்."

எங்க பாட்டிட்ட ஒரு தடவ கேட்டதுக்கு, "ஏடி, அங்ன குடுத்த தாளுல இருந்த ஏதாச்சும் ஒரு படத்து மேல சீலு குத்தனுமாம். நாம் போயி குருட்டுக் கொள்ளுக்கெணக்கா பூராப் படத்துலயுங் குத்திப் போட்டேன். குத்திட்டு வெளிய வந்தாவிட்டி அந்த வாத்தியாரு பொண்டாட்டி சொல்ரா, நாம் போட்ட ஓட்டு செல்லுபடி ஆகாதாம்," சொல்லிட்டி சிரிச்சா பாட்டி.

"நீயி முன்னக்கூட்டியே கேட்டுட்டுப் போயிருக்கலாம்ல?" நாஞ் சொன்னேன்.

"ஆமா ஏ ஓட்டுலதான் போயி நெறயப் போகுதாக்கும்? நம்ம ஓட்டு போட்டா என்ன, போடாட்டி என்ன? நம்ம தல எழுத்த எவெம் மாத்தப் போரான்! இந்த ஓட்டுப் போடுறதுனால ஒரு நாளு வேல கெட்டுப் போனதுதான் மிச்சம்," எங்க பாட்டி சொல்லிக்கிட்டு இருக்கும்போதே எங்க மாமெம் பொண்டாட்டி அந்தோணி வந்தா.

ஒடனே பாட்டி கேட்டா, "ஏடியோய், அந்தோணி நீ ஓட்ட சரியாப் பாத்து குத்திப் போட்டியா? எதுல குத்துன?

"நானா? நானு ஏரு ஒழவஞ் சின்னத்துல குத்துனேன்.

ஏம்னா கலப்பையும் மாடுந்தான நம்ம வகுத்த ரொப்புது. அது இல்லன்னா நம்ம பொழப்புல மண்ணு . அதான் அதுல குத்துனேன்." அந்தோணி சொல்லவும், "நீயாச்சும் ஒன்னுல குத்திட்ட, எனிய கெணக்கா இன்னும் எத்தன பெய மக்க நாலஞ்சு படத்துல குத்திட்டு வந்தாளுகளோ. கடவுளுக்குத்தான் வெளுச்சம்," பாட்டி சொன்னா.

"ஏ..பாதகத்திகா, ஓட்டுப்போடுரதுக்கு அந்தப் பள்ளிக் கொடத்துக்குள்ள மொழயவா முடியுது? அங்குட்டு ஒருத்தன் வந்து ஒதய சூரியனுக்குப் போடுங்ரான். இங்குட்டு ஒருத்தன் வந்து ரெட்ட எலக்குப் போடுங்கிறான். இந்த கம்னிஸ்டுகாரனுகளும் வெக்கமில்லமெ வந்து கதுரறுவாச் சின்னத்துக்குப் பேடுங்ரான். எதுல போட்டாலும் கம்னிஸ்டுகாரனுக்கப் போடலாமா? போடக் கூடாது," சொல்லிட்டு மடில வச்சுருந்த அவுச்ச மொச்சிப் பெயர அள்ளி வாயில போட்டுக்கிட்டா அனந்தம்மா.

"எதுக்கு கம்னிஸ்டுகாரகளுக்குப் போடக்கூடாது?" அந்தோணி கேட்டா.

"எதுக்கா, அந்தப் பெயல்க கடவுளு இல்லன்னு சொல்ற பெயல்க. நம்ம ஒரே கடவுள விசுவசிக்கிறேம்னு சொல்லிகிட்டு அவனுகளுக்கு ஓட்டுப் போட்டா பாவமில்லையா? அதுக்குத்தான் போடக்கூடாது," அனந்தம்மா வெளக்கமா சொன்னா.

அங்ன ஒக்காந்து இதக் கேட்டுக்கிட்டு இருந்த கண்ணம் பெய சொன்னா, "பொட்டக் கண்டாரளிகங்ரது சரியாத்தான் இருக்கு. கடவுளு இல்லன்னு சொன்னாகளாக்கும்? அதெல்லாஞ் சும்மாத்தா. கடவுளு கடவுளுன்னு சொல்லிக்கிட்டு, ஒழச்சுச் சீவனம் பண்ற பாட்டாளி மக்களோட ஒழைப்ப சொரண்டிட்டு, தொழிலாளிகள நசுக்கக் கூடாதுன்னுதான் கம்னிஸ்டு சொல்லுது. நீ என்னமோ பெருசா பேசுரெ."

" என்னமோப்பா, நம்ம என்னத்த கண்டோம்? ராமெ ஆண்டா என்ன, ராவன ஆண்டா என்ன. நம்ம நெலம என்னைக்கும் ஒன்னுதான். நாங்கூட ஓட்டுப் போடப் போயிருக்க மாட்டேன். அந்த மச்சான் மலையாண்டி வந்து ரெவண்டு ரூவா குடுத்துப் போயி அது என்னமோ ஒரு படத்துல குத்துங்கத்தான்னு போச் சொன்னாரு. அந்த வருசைல நின்னு உள்ள போயிக் குத்தப் போனா அவரு சொன்ன படங்கூட மறந்து போச்சு. பெறகு எம்பாட்டுக்கு சைக்கிள் படத்து மேல ஒரு குத்தும், ஆனப் படத்து மேல ஒரு குத்தும் வச்சு போட்டுட்டேன். அந்த ரெண்டு ரூவாய்க்குத்தான் மொச்சிப் பயறு வாங்கித் தின்னுக்கிட்டு வாரென், " அனந்தம்மா சொல்லிட்டு கொஞ்சம் பயித்த அள்ளி எங்கப் பாட்டிக்குக் குடுத்தா.

எங்க பாட்டியும் அத வாங்கி நசுக்கி நசுக்கித் தின்னுக் கிட்டே சொன்னா, “நீ போட்ட ஓட்டும் செல்லுபடி ஆகாதுடி. ரெண்டு படத்துல குத்திட்டில. ஒன்னுலதாங் குத்தனுமாம்.”

“ஒனிய விட நாந் தேவல கெழவி. நாநாச்சும் ரெண்டுலதாங் குத்துனேன். நீ பூராத்துலயுமில்ல குத்துன. ஒ ஓட்டுக்கு ஏ ஓட்டுப் பரவாயில்ல. கொஞ்சத்துக்குக் கொஞ்சமாச்சும் செல்லும்,” அனந்தம்மா சொன்னா. இதக் கேட்டுட்டு அங்ன ஒக்காந்துருந்த ஆம்பளைக பூராஞ் சிருச்சாக. “கொஞ்சங் கூட வெவரங் கெட்ட கழுதைகளாவுல இருக்கு. இவுகளுகள ஓட்டுப் போடவே உட்டுருக்கக் கூடாதுப்பா,” கண்ணன் சொன்னான்.

கண்ணனுக்கு, அம்மவெளாட்டுல கண்ணுல பூ உழுந்து ஒரு கண்ணு வள்ளுசா தெரியாது. வெளேர்னு இருக்கும். அதுனால அவன எல்லாருங் கண்ணமுன்னு கூப்டுவாக.

அவெஞ் சொன்னதக் கேட்டதும் பளிச்சி, “இப்ப இந்த ஓட்டுப் போடாட்டி எங்களுக்கு என்ன கொறஞ்சு போகுது? ஓட்டுப் போட்டாலும் போடாட்டியும் கூழுக் குடிக்கிரவங் கூழுதாங் குடிப்பான்; சோத்தத் திங்கிரவஞ் சோத்தத்தான் திம்பான். எனனமோ இந்த ஓட்டுப் போட்டாத்தான் எங்க வகுறு ரொம்புங்ரது கெணக் காவுல சொல்ராக” படபடன்னு பொருஞ்சு தள்ளுனா.

அவா சொல்ரதும் நாயமான பேச்சுதாம்னு நானு நெனச்சுக் கிட்டேன்.

அந்நியாரம் பாத்து அப்டிக்கூடி நாலஞ்சு கொமரிக சிருச்சுக் கிட்டு வந்தாளுக. “ஏ பெயமக்கா, என்ன சிரிப்பாணி அள்ளுது? ஓட்டுப் போன லெக்குல எவனையாவது பாத்திட்டிகளா?” பளிச்சி கேக்கவும், பட்டுன்னு சிரிப்ப நிப்பாட்டிட்டு “ஏ...நீங்கள்ளாம் எவனையும் பாக்கத்தான் ஓட்டுப் போட போனீகளாக்கும்? எடுத்த எடுப்புலயே என்னன்னு கேக்கான்னு பாரு,” சவரிப் பிள்ள சொல்லவும், அனந்தம்மா சொன்னா, “சரி சரி உடுத்தா. சும்மா ஒரு லக்கலுக்குச் சொன்னா பிலுபிலுன்னு ஓடாமெ பேசுர. சரி எதுக்குச் சிருச்சுகிட்டு வந்தீக? அதச் சொல்லுங்கடி.”

“அதா மதினி, இந்த தெக்குத் தெருவுல உச்சாயி கெழவி இருக்கா பாத்தீகளா? தன்னால பேண்டுட்டு கெடக்குரவள மெனக்குட்டு ரெண்டு எளவட்டப் பெயல்க தூக்கிட்டுப் போயி ஓட்டுப்போடு கெழவின்னு சொல்லி, ஓட்டுப் போடவும் திலும்பியுந் தூக்கியாந்து வீட்ல போட்டுட்டு போயிட்டானுக. அவா அப்ரானி கண்ணுந் தெரியாது. காடயத்துந் தெரியாது. என்னன்னு ஓட்டுப் போட்டாளோ? அதப் பாத்துட்டுத்தான் சிருச்சுக்கிட்டு

வாரோம்.” செயமேரி சொன்ன ஒடனே அம்புட்டுப் பேரும் கெக்கரிச்சுச் சிருச்சாக.

“கெழவியும் சவ்வாரி போயிட்டு வந்துட்டா. துட்டு கிட்டு குடுத்தானுகளா? ” அனந்தம்மா கேட்டா. “ துட்டு எவெங் குடுத்தா? ஓட்டப்போட்ட ஒடனே தூக்கியாந்து நச்சுன்னு விட்டெறிஞ்சுட்டுப் போயிட்டானுக,” ராணி சொன்னா.

இதக் கேட்டுக்கிட்டுருந்த பாட்டி சொன்னா, “இவா சம்முகங்கெழவி ஓட்டுப்போட்ட வெசயந் தெரியுமா ஒங்களுக்கு? போன ஓட்டுச் சமயத்துல வீட்டு வீட்டுக்கு காரு கொண்டாந்து அதுல சனங்கள ஏத்திட்டுப்போயி ஓட்டுப்போட வச்சு எறக்கி உட்டாக. அப்ப சம்சாரிகள்ள முக்காவாசிப் பேரு காங்கிரசு கச்சில இருந்தாக. அவரு கோவால்சாமி ஐயா காருல சம்முகங் கெழவி ஏறிக்கிட்டு அப்பிடி ஒரு மொனப்பா போறா. ஓட்டுப்போட்டு முடிக்கவும் திரும்பியும் போயி காருல ஒக்காந்துக்கிட்டு, வீட்ல கொண்டு போயி உட்டாத்தான் ஆச்சுன்னு அடம் புடுச்சுருக்கா.”

“கொண்டாந்து உட்டாகளாக்கும் பாட்டி?” செயமேரி கேட்டா.

“அவரா கொண்டாந்து உடுவாரு? எறங்குன்னு அதட்டி இருக்காரு. அவாத் திமுரா ஒக்காந்துக்கிட்டு, ‘ஓட்ட மட்டும் வாங்கிக்கிட்டு இப்ப உட்டுட்டா போறீக? நாங்க ஓட்டுப் போடுரதுனால ஒரு சொகமும் இல்ல. இந்த ஓசிச் சவ்வாரியாச்சும் கெடக்கட்டும். ஏத்திக் கொண்டு போயி வீட்ல உடுங்கய்யா. இல்லாட்டி எங்க தெருவுல சொல்லி எந்தப் பொம்பளைகளும் ஒங்க கச்சில குத்த உடாமெ ஆக்கிப் போடுவேன்.’ சொல்லிட்டு எறங்கவே மாட்டம்னாளாம். பெறகு வேற வழி இல்லாமெ திரும்பியும் கொண்டாந்து எறக்கி உட்டுட்டுப் போனாக. வந்த ஒடனே என்ன சொன்னாங்க? ‘இந்த தெருவுக்குள்ள கோவால்சாமி ஐயா காருல பசாரு வழியே எவாடி போயிட்டு திரும்பி வந்துருக்கா?’ சொல்லிக்கிட்டு சத்தம் போட்டுச் சிரிக்கா.”

பாட்டி சொல்லி முடிக்கவும், அந்தோணி சொன்னா, “இந்தச் சம்முகக் கெழவி ரொம்ப ராங்கிக்காரியா இருப்பா பொறுக்கோ. வம்பு தும்புக்குப் போகாமெ அவளால இருக்கவே முடியாது.”

செத்த நேரங் கழுச்சு கொல்லா மந்தைல வெளிக்கிருந்துக் கிட்டு இருக்கைல சம்முகக்கெழவி வந்தா. அங்க வந்து சொல்ரா, “கோவால்சாமி ஐயா எனிய ஏத்திட்டுப் போனதா மிச்சம். நானு எந்தப் பெயலுக்கும் ஓட்டுப்போடல. குடுத்த ஓட்ட அந்தாணிக்க மடுச்சுக் கொண்டு போயி பொட்டிக்குள்ள போட்டுட்டு வந்துட் டேன். பாத்துக்கிட்டா இருக்கான்?” பாட்டி சொல்லவும் நாங்க

எல்லாருங் கெடந்து சிருச்சோம்.

வீட்ல நாங்க பேசிக்கிட்டு இருக்கைலயே நாலஞ்சு எலவட்டப் பெயல்க வந்தானுக. வந்து, “ஓட்டுப் போட்டுட்டு வந்திட்டீகளா? ஒங்க ஓட்டப் புரட்சித் தலைவருக்குப் போடனும். அவருதான ஒங்க பிள்ளைகளுக்கு சத்துணவு தாராரு. அதுனால அவருக்கு மறக்காமெப் போடுங்க” ன்னு சொல்லிட்டு போனாக.

அவனுக அங்குட்டுப் போன ஒடனே, பாட்டி சொன்னா, “ஏ போங்கடா போக்கத்த பெணமக்கா. சத்துணவு என்ன அவுகப்ப வீட்டுல இருந்தா கொண்டாந்து போடுரா? சர்க்காரு துட்டு. கண்டமாணிக்கா அள்ளி வெளாசுராரு. நம்மளுக்கு ஒன்னுந் தெரியாதுன்னு பேசிட்டுப் போரானுக.”

“நம்ம தெருப் பெயல்க இப்டி அந்தக் கச்சி இந்தக் கச்சின்னு வெறி புடுச்ச நாய்க கெணக்கா அலைரானுக. ஒழச்சமா குடுச்சமான்னு இல்லாமெ இவனுகளுக்கு எதுக்கு இந்தத் தொழிலு. அதெல்லாந் துட்டுக்காரனுக செய்ய வேண்டியதுதான். நம்ம ஒரு நா வேலைக்குப் போலன்னா குண்டி காஞ்சு போகும். இதுல இவனுகளுக்கு கச்சி. அறிவு கெட்ட பெயல்களப் போச் சொல்லு,” அனந்தம்மா சொன்னா.

“இந்தக் கச்சி கிச்சியெல்லாஞ் சும்மா கண்ணு தொடப்பு வேலதான். இதுனால நம்ம என சனத்துக்குள்ளயே அடுச்சுக்கிட்டுங் குத்திக்கிட்டுங் கெடக்க வேண்டியதுதான். நாலஞ்சு வருசத்துக்கு முன்னால நம்ம பெயல்களே கச்சிய வச்சு ஒருத்த இன்னொருத்தனக் குத்தி கொன்னு போடல. அதுவும் பசாருல வச்சே,” பளிச்சி சொன்னா.

“ஆமாங்கத்தே, பாவம் அந்த செல்வராசுப் பெய அவனக் கொன்னு போட்டாக. அவெங் கச்சி வந்து என்ன புடுங்குச்சு? துட்டுக்காரனுக பூராம் நம்மள பகடக்காய்களாக பயன்படுத்திக் கிரானுக. இது இந்தப் பெயல்க மண்டைலயும் உதிக்க மாட் டேங்கி,” சவரிப்பிள்ள சொல்லிட்டு எந்துருச்சுப் போனா

“அப்டியே ஒவ்வொருத்தரா அவுகவுக வீடுகளுக்குப் போயிட்டாக. எங்க பாட்டியும், எங்கம்மயும் நானும் ஒக்காந்துருந் தோம். கொஞ்ச நேரங் கழுச்சு எங்க பாட்டி சொன்னா. “ இப்ப சம்சாரிக கூட கச்சி மாறிட்டாக. முன்னால வேற வேற கட்சியில இருந்தவுக இப்ப எவனோ அவுகாளுகள்ள அதான் நாயுடுல ஒருத்தன் புதுசா என்னமோ கச்சி தொடங்கவும் எல்லாம் அதுல போயி சேந்துட்டாக.”

“அப்ப கச்சி பெருசு இல்ல. சாதிதான் பெருசு. இல்ல பாட்டி ?” நாங் கேட்டேன்.

“அப்பிடித்தான் நடமொறைல இருக்கு. இது நம்ம

பெயல்களுக்குத் தெரியாம கச்சிய வச்சு நம்மளுக்குள்ளயே சண்ட போடுறானுக," பாட்டி சொன்னா.

நம்ம என்ன தவ்வு தவ்வுனாலும் எல்லாத்துக்கும் ஆணிவேரா நிக்குரது சாதிதான். மதமும் இருக்கு, அரசியலும் இருக்கு, படிப்பும் இருக்கு, எல்லாக் கழுதையும் அதுலதான். எங்க தெருவுல முக்கியமா பொம்பளைகளுக்கு இந்த நாத்தம் புடுச்ச கச்சி கிச்சி எல்லாங் கெடையாது. யாரு வந்தா என்ன, யாரு போனா என்ன. நம்ம வகுத்துப் பாட்ட நம்ம பாக்கனும்னுதான் இருக்காக நாங்க இருக்கற நெலைல அப்பிடித்தான் இருக்க முடியுது. எல்லாந் துட்டுக்காரனுக செய்ர மப்புதான் இதெல்லாம்.

எங்க பொம்பளைகளுக்கு யாரு ஆட்சில இருக்கா. என்ன செய்ராக. ஏது செய்ராக, நம்ம எதுக்கு ஓட்டுப் போடனும், யாருக்குப் போடனும்னு ஒரு எழுவும் தெரிய மாட்டேங்கி. ஏ...ஆம்பளைக்கே தெரிய மாட்டேங்கி. கம்னிஸ்டுன்னு சொல்லிக்கிட்டுத் திரிரவுனுக செவப்புத் துண்ட தோளுல போட்டுட்டா போதும்னு இருக்கானுக. தி.மு.கான்னு சொல்ரானுக செவப்புங் கருப்புமா உள்ள கரவச்ச வேட்டியக் கெட்டுனா போதும்ங்ரான். காங்கிரஸ்காரனுக கதர்த்துண்ட போட்டுக்குரான். ஏதாச்சும் கச்சிக் கூட்டம் எடுபிடி வேலைக்குப் போயிட்டு ரெண்டு காசோ இல்லன்னா கொஞ்சந் தண்ணிய வாங்கி ஊத்திட்டா என்னமோ இவனுகதான் மந்திரிகளா இருக்குர மாதிரி மப்புல பேசுவானுக.

பொம்பளைக பாடு இதுக்கு மேல. பாதிப் பேருக்கு மேல ஓட்டுப் போடவே போமாட்டாக. எங்க பொம்பளைக இருக்குர எண்ணிக்கைக்கு எம்புட்டெம்புட்டோ சாதிக்கலாம். எங்களுக்கு இருக்குர உரிமைகளத் தட்டிக் கேக்கலாம். சும்மா அவனுக குடுக்குர பிச்சக்காச விட்டெறிஞ்சுட்டு எங்காளுகள்ளயே எம்.எல்.ஏ-வக் கொண்டாரலாம். அரசியலுல எங்களுக்கும் எம்புட்டு சக்தி இருக்குன்னு காட்டலாம். இதெல்லாம் உட்டுப்போட்டு... இப்டியே நெனச்சுக்குட்டு இருந்தேன்.

இப்ப கொஞ்ச வருசமா எங்க தெருவுகள்ள அம்பேத்காரு பத்தி பேச்சு அடிபடுது. அந்தத்த பாக்கியம் ஒரு நாச்சொன்னா, "நம்ம பெயல்க அம்பேத்காருன்னு இங்ன பேசிக்கிட்டு அலைரானுகளா. அது எங்களுக்குத்தான் வெனையா இருக்கு. நாங்க காடுகரைக்கு வேல வெட்டிக்குப் போம்போது, ஒங்க மாமேத அம்பேத்காரு பிஞ்சைல போயி வேல செஞ்சு பொழைக்க வேண்டியதுதான? இங்க எதுக்கு வாரீக" ன்னு சொல்லி மொழைய உடாமெ வெரட்டியே உட்டுட்டாரு.

“அம்பேத்காருன்னு சொன்னா அவனுகளுக்கு என்ன வலிக்காம்?” எங்கம்ம கேட்டா .

“அவரு அம்பேத்காரு நம்மாளுகளாம்ல? நம்ம சாதி சனத்துக்குன்னு பாடுபட்டாராம்ல? ஏம்தா, இந்தப் பெயல்க சொல்ரானுக. நெசமா?” ஏங்கிட்ட கேட்டா பாக்கியம்.

“ஆமா, அவரு சொன்னபடிக்குச் செஞ்சாத்தான் வேற பெயல்களுக்கு நம்ம பலம் புரியுமே. நம்மளத்தான் ஒன்னு சேர உடாமெ கண்ட மானிக்கா, கச்சி, சாமி, கடவுளு, சாதின்னு பிரிச்சு வச்சு ஆட்டம் போடுரானுக. நம்மளும் இளுச்சவாக் கொள்ளுகளா இருக்கோம்,” நாங்கோவமா சொன்னேன்.

“நம்ம பொட்டக்கழுதைக என்னத்தச் செய்ய முடியும். ஆனானப்பட்ட ஆம்பளைகளாலயே முடியல.” எங்கம்ம சொன்னா.

“அப்டிச் சொல்லாதமா நீயி. இப்டி சொல்லிச் சொல்லித் தான் நம்மள கூமுட்டைகளா ஆக்கிட்டாக. இப்ப பொம்பளைக என்னன்ன காரியமெல்லாஞ் செய்ராளுகங்க. வீட்ல எப்பிடி நம்மள மட்டந்தட்டி உரிம இல்லாதவுகளா ஆக்கிப் போட்டாகளோ, அதே மாதிரி நாட்லயும் நம்மள ஓரங்கட்டிட்டாக. சன்னஞ் சன்னமா நாமளே சிந்திக்க, முடிவெடுக்க, துணுஞ்சு செயல்பட தொவங் கனும். துருப்புடுச்சுக் கெடந்த அருவாளத் தீட்டிக் கூர்மையாக் குராம்ல. அதுகெணக்கா நம்மளும் நம்மளயே கூர்மப்படுத்திக் கிட்டு தன்மானத்தோட வாழனும்.”

“கஞ்சிக்கே இல்லாமெ கஸ்டப்பட்டுக் கெடக்குர நம்ம எப்பிடி இதெல்லாஞ் செய்ய முடியும். வகுத்துப் பாடே பெரும் பாடா இருக்கு,” பாக்கியம் சொன்னா.

“நம்ம மட்டும் எதுக்கு ஒருவாக் கஞ்சிக்குக் கஸ்டப் படுரம்னு யோசி. மத்தவுக ஒழைக்காமயே வசுராற கஞ்சி குடிக்க, நம்ம மட்டும் ஒழச்சாலும் கஞ்சிக்கு லாட்ரி அடிக்கமெ, அது ஏம்னு யோசி. அப்பத் தெரியும் ஒனக்கு” நாஞ் சொன்னேன்.

“நீயி கேக்குரது நாயமாத்தாம்தா இருக்கு. நம்மள ஒன்னுக்கும் ஒதவாத குப்பக் கோழிகன்னு சொல்லச் சொல்ல நம்மளும் அப்பிடியே நம்பிக்கிட்டு பின்வாங்குரோம். இனியாச்சும் உருப்படியான காரியம் செய்யனும். சரி, நாம் போறேன். ஏம் மகெ, பேப்பரு வாங்கியாரச் சொன்னான். தெனமும் அங்ன ஆப்டவுகளுக்கு பேப்பர்ல போடுற சங்கதிகள வாசுச்சு காட்டுவான்.. வரட்டுமாத்தா? ,” கேட்டுக்கிட்டே எந்துருச்சு போனா பாக்கியம்.

# பதினொன்று

எங்க தெருவுகள்ள பொம்பளைக்கு ஏகப்பட்ட கட்டு மானங்க இருக்கு. இப்பயுங் கூட ஊர்ல ஆம்பளைக மட்டுந்தான் சினிமாப் பாக்கப் போகனும். பொம்பளைக யாரும் போக்கூடாது.

எங்க ஊர்ல சினிமாக் கொட்டக இல்ல. பக்கத்து ஊர்லதான் இருக்குது. ரெண்டு மூனு மைலு தூரம் இருக்கும். நடந்து போயி பாத்துட்டு நடந்தே வருவாக. இப்ப என்னமோ ரெண்டு வண்டி உட்ருக்குதா சொல்லிகிராக.

எங்க பாட்டிட்ட பொம்பளைக எதுக்கு சினிமாக்குப் போக்கூடாதுன்னு கேட்டதுக்கு, "சினிமாவுக்குப் பலசாதி ஆளுக வருங்க. நம்ம பொம்பள பிள்ளைக அங்ன எவனுங் கையப் புடுச்சு இழுத்துட்டா மல்லுக்கெட்டு வந்துரும்ல. அதுக்குத்தாம்" னா.

"வேற சாதிப் பொம்பளைகள்ளாம் போறாக, அவுகள மட்டும் இழுக்கமாட்டாகளாக்கும் பாட்டி?"

"வேற பொம்பளைகள அப்பிடி கூசாமத் தொடமாட்டா னுக. நம்ம பொம்பளைகன்னா அவனுகளுக்கு ஒரு எளக்காரந்தான். அப்பிடி ஏடாகூடாம எதாச்சும் நடந்து போச்சுன்னா, பெறகு சாதிக் கலவரம் வந்துரும்னுதான். எனக்கு இம்புட்டு வயசாகுதுல்ல. சினிமான்னா எப்பிடி இருக்கும்னுகூட தெரியாது.

"அதெப்படி பாட்டி, மானாங்கணியா எவனும் வந்து இழுப்பான்? மத்த பொம்பளைகளுந்தான் இருக்காகள்ள," நாங் கேக்கவும், "நாந்தான் அப்பயே சொன்னம்லத்தா, வேற சாதி பொம் பளைகளத் தொட அச்சப்படுவானுக. ஏம்னா அவுககிட்ட சாதிப் பவுரு, பணம் எல்லாம் இருக்கு. நம்மகிட்ட என்ன இருக்கு? அவெந் தொட்டாலும் அவனப் பகைச்சுட்டு நிக்க முடியாதுல்ல. ஏம்னா, அவெங்கிட்டத்தான திரும்பி நம்ம வேல வெட்டிக்குப் போயாகனும். எம்புட்டு நாளைக்கு எதுத்துக்கிட்டு நிப்ப?" பாட்டி சொல்லிட்டு எந்துருச்சுப் போகப் போனா.

நானு திரும்பியுங் கேட்டேன். "மேகலக்குடி ஆளுக நம்ம பொம்பளப் பிள்ளைகளத் தொட்டுட்டா மட்டும் பயந்துக்கிட்டு கண்டும் காணாதது மாதிரி உட்டுர்ரோம். அதே இது பள்ளம் பறையனக்குள்ள பொண்ணு பிள்ளைகளத் தொட்டாலோ லக்கலு

செஞ்சாலோ சண்ட நாறிப் போகுது. இப்ப மட்டும் எதுக்குச் சண்டக்காடு போடுரானுக?”

“ஒங் கிராசு கேள்விகளுக்கெல்லாம் ஒக்காந்து பதிலு சொல்லிக்கிட்டு இருக்க முடியாது. நானு வேல வெட்டிக்குப் போக வேண்டாம்.” சொல்லிட்டு எந்துருச்சுப் போயிட்டா.

எனக்குத் தெரிய ஒரு தடவ பள்ளப் பிள்ள கைய பறையம் புடுச்சு இழுத்தாம்னு பஞ்சாயத்துப் போட்டுப் பேசி தெண்டம் போட்டாக. அது மாறி பறப்பிள்ளைட்ட பள்ளப்பெய குசும்பு பண்ணுனாம்னு கசமுசான்னு ஆகித் தெண்டம் போட்டாக. நம்மளுக்குள்ள இம்புட்டு வீம்பும், வீராப்பும் வச்சுக்கிட்டு இருக்குரோமேத் தவுர வெளில ஒரு மயித்தயுங் காணாம்னு நெனச்சுக்கிட்டேன்.

இப்ப இதெல்லாம் யோசுச்சுப் பாத்தா, இந்த சாதி உட்டு சாதி போயிக் கலியாணம் முடிக்குரது கூட எங்க தெருவுல ஆம்பளைக முடுச்சா கண்டுக்க மாட்டேங்காக. ஆனா பொம்பளை யாராச்சும் சாதி உட்டுச் சாதி கலியாணம் முடுச்சா ஒரு பெயலும் ஒப்புக்க மாட்டேங்காக, மல்லுக்கு நிக்கானுக.

எங்க தெருவுல ஒரு பிள்ள அப்பிடித்தான் தெரியாத்தனமா போயி ஒரு பள்ளப் பெயல விரும்பிட்டா. ரெண்டு பேத்துக்கும் மனசுக்குப் புடுச்சுப் போச்சு. அதுக்காக அவா பட்டபாடு இருக்கே! எம்மா, கனவுலகூட வேற சாதிப் பெயல்கள நெனைக்கக் கூடாதுன்னு தோனுது. அந்தப் பாடுபட்டா.

அந்த பிள்ளையோட வீட்ல அவளோட தம்பிக்காரனும், அப்பங்காரனும், தெனமும் அடிதான். அடின்னா லேசுப்பட்ட அடி இல்ல. இத்தனைக்கும் அது படுச்சு வேல பாக்கர பிள்ள.

செவுட்டோட அறஞ்சு கம்மலு கிம்மலெல்லாம் அக்குவேற ஆணிவேற பிச்சுப் போட்டான் தம்பிக்காரன். இன்னொரு தடவ கழுத்துல கெடந்த சங்கிலியப் புடுச்சு இழுத்துக் கந்தலு கந்தலாப் பிச்சு எறுஞ்சான். இதாச்சும் தேவலங்கலாம். செவுட்டறையா அறைஞ்சதுல அவா காது என்னப்பாருன்னு ஒன்னப்பாருன்னு இம்மந்தண்டிக்கு வீங்கிப் போயி கரேர்னு கெடந்துச்சு. பாவம் அவுகம்மதான் அத இதப் போட்டு ஒத்தனங் குடுத்து சரியாக்கி உட்டா.

ஒரு தடவ நானு அந்தப் பிள்ளையப் பாக்கப் போயிருக்கைல தலவிரி கோலமா, கெடந்து அழுகக்கூட முடியாமெ ஏங்கிக்கிட்டுருந்தா.

“என்னத்தா?”ன்னு கேட்டேன்.

“பள்ளிக்கொடம் போயிட்டு மத்தியானங் கஞ்சி குடிக்க

வந்தவள இந்தப் பெய - அதான் தம்பிக்காரன் வீட்டுக்குள்ள மொழயுரதுக்கு முன்னால தல மகுத்த புடுச்சு தெருவுலருந்தே தரதரன்னு இழுத்துட்டுப் போயி அந்தானிக்க முடியப் புடுச்சுக்கிட்டே தூக்கித் தூக்கி நச்சு நச்சுன்னு தரைல அடுச்சுருக் கான். நெத்தி கித்தியெல்லாம் பேந்து போயி ரத்தக்காடு மூஞ்சி மொகர எல்லாம் ஒழுகுது. வலிதாங்க மாட்டாமெ திமிருதான்ன பாவிப்பெய முடியப் புடுச்சு அந்த இழு இழுத்து கொத்துக் கொத்தா முடி கீழே உழுகுது. வெலாவுல மாறிமாறி எத்தி மூச்சு உடமுடியாம இந்தக் கண்ட்ராவியப் பாத்த அவுகய்யா ஓடியாந்தாக. சரி, வெலக்கித்தான் உடப் போறாகான்னு பாத்தா மஞ்சனத்திக் கம்பக் கொண்டாந்து அவுக நாலு வச்சுட்டுப் போராக. நாம் பொம்பள; எனியால வெலக முடியல. கதவயும் பூட்டிப் போட்டுக்கிட்டு அடிக்கான். எம்புட்டு வெறிப்புடுச்சவனா இருக்காம்ங்ற . இங்குட்டுப் போறான், ஓடியாந்து வெலாவுல எத்துரான். அங்குட்டுப் போறான், ஓடியாந்து அம்புட்டு வெசையா எத்துரான். மூஞ்சி மேலய மிதிக்கான் இவனுக்கு வாக்கப்படுர வாள்ளாம் என்ன கெதி ஆகப் போராளோ," அழுகையுங் கண்ணீருமா அந்தப் பிள்ளையோட அம்ம சொன்னா.

இதக் கேட்டுட்டு நானு அப்பிடியே உக்குச்சுப் போயி நின்னேன். மேக்கொண்டு என்ன பேசுரதுன்னு ஒன்னுந் தெரியல. நானு அவெங்கிட்டக் கேக்கட்டான்னு கேட்டதுக்கு, "ஐயய்யோ, வேண்டாம்க்கா, நீ கேட்டுட்டுப் போனப் பெறகு எனிய உசுரோட உடமாட்டான்," சொல்லிக்கிட்டே எனிய கெட்டிப் புடுச்சுக்கிட்டு அழுகுரா. கண்ணுல மால மாலையா கண்ணீரு ஊத்துது.

"சரி இவா பள்ளிக்கொடத்துலருந்து வரைல என்ன செஞ் சான்னு இப்பிடி கொல பாதகமா அடுச்சான்" நாங் கேட்டேன்.

"அதான், அந்தப் பையன் இருக்காமுல்ல, இவா செநேகதமா இருக்காள்ள பள்ளப் பெய, அவனோட மதினியோ, யாரோ ஒருத்தி இவளக் கூப்டுப் பேசிட்டாளாம். அதுக்குத்தான்," அவுகம்ம சொன்னா. இதுக்குப் போயா இம்புட்டு அடி அடுச்சாம்னு எனக்கு ஆக்ரோசமா வந்துச்சு.

"இந்தானிக்கா இந்தக் காயத்தோட போயி போலிசு டேசன்ல எழுதி வச்சா என்ன?" ன்னு கேட்டுட்டேன்.

"ஐய்யய்யோ வேண்டாம்கா, தயவு செஞ்சு ஒன்னுஞ் செய்ய வேண்டாம்கா," சொல்லிக்கிட்டு கையெடுத்து பரிதாவமாக் கும்புடுரா. பயந்து நடுங்குரா.

சரி இந்தப் பிள்ளைய எப்பிடியாச்சும் அந்தப் பையனுக்குக் கெட்டி வச்சுரனும்னு மனசுக்குள்ள நெனச்சுக்கிட்டு, " நீ இந்த அடி

வாங்கிச் சாகுரதுக்கு பேசாமெ கலியாணத்த முடுச்சுரு," நாஞ் சொன்னேன். அவா ஒன்னும் பேசிக்கல. ஊமையா கெடந்து கண்ணீர் உட்டா. சரின்னுட்டு நானு வந்துட்டேன்.

இதுக்கெடயில எங்க தெரு ஆம்பளைக கொஞ்சப் பேரு அந்தப் பையனோட தகப்பங்கிட்டப் போயி ஒன்னுக்கு ரெண்டா கத அளந்து உட்டுருக்கானுக. அவருகிட்ட சொன்னதுமில்லாமெ, இந்தப் பிள்ளையோட தம்பிக்கிட்டயும், அய்யாக்கிட்டயும் கண்டமாணிக்க இழுத்து உட்டுருக்கானுக. அதக் கேக்கக் கேக்க இந்தப் பிள்ளைக்குத் தெனமும் அடிதான்; வசவுதான்.

இத நிப்பாட்ட சீக்கிரத்துல கலியாணம் முடிச்சாத்தான்னு நாஞ் சொன்னதுக்கு, " நானு இப்பத்தான் வேலைல சேந்துருக்கேன். ரிஜிஸ்தர் கலியாணம் முடுச்சா வேலைல இருந்து எடுத்துருவாக. கோயில்லதான் முடிக்கனும். அப்பிடின்னாலும் நம்மூரு கோயில்ல முடிக்க முடியாது. பறப்பெயல்க சும்மா உடமாட்டானுக. அவுக வீட்லயும் உடமாட்டாக. வேற ஊர்ல முடிக்கனும்னு சொல்ராக," அந்தப்பிள்ள சொல்லிக்கிட்டு பாவம் போல முழிக்கா.

அவா சொல்றதும் நாயந்தான். ஏம்னா, அவா கிறிஸ்தவச் சாமியாருக பள்ளிக் கொடத்துல வேல பாக்கா. அவுக இஸ்டப்படி நடக்கலன்னா, கண்டதக் களியதச் சொல்லி வேலைலருந்து நிப்பாட்டிப் போடுவாக. யோசுச்சுட்டு, "நீ அந்தப் பங்குச் சாமியார்ட போயி எல்லா வெவரத்தையும் சொல்லி எழுதிக் கேளுத்தா" நா ஒரு கூறுகெட்ட குப்பக்கோழி சொன்னேன்.

அந்தப் பிள்ளையும் போயி வெவரம் பூராஞ் சொல்லி கேட்டுருக்கா. பெறகுதான் தெரியுது அவெ எம்புட்டு நீசப் பெயன்னு.

இந்த மாதிரிக் கலப்புத் திருமணஞ் செய்ரது நல்லது, அது இதுன்னு திருச்சப சட்டத்துல சொன்னாலும் இந்தச் சாமியாரா இருக்கவனுக என்னமோ இதுக்குத் தடுதலயாத்தான் இருக்கானுக. அந்தப் பங்குச்சாமியானும் அந்தப் பிள்ள கதயக்கேட்டுட்டு, அத ஒரு எளக்காரமா வாரவுக போறவுகட்ட எல்லாஞ் சொல்ரது. இந்தப் பிள்ளய என்னமோ தேவிடியாத்தனஞ் செஞ்சவா கெணக்கா பேசுரது, வைரது, தனிய ரூம்புக்குள்ள கூப்டுகிட்டு பல்லிளிக்குரது, பலவட்ரத்தனமா பேசுரது இப்பிடியே செஞ்சுக்குட்டு, அவள வீட்டுக்கும் கோயிலுக்குமா நாயிகெணக்கா இழுத்தடுச்சானே ஒழிசு கலியாணமுஞ் செய்யல; காடயத்தும் செய்யல.

அடுத்து வந்த சாமியார்ட கெஞ்சிக் கூத்தாடி எழுதி வாங்கிக்கிட்டு, ஊருக்குத் தெரியாம தெருஞ்ச பிரண்டுகளோட ஒதவியோட வேற ஒரு ஊர்லபோயி தாலியக் கெட்டிட்டு

இருந்துச்சுக. கொஞ்ச நாள்ல அதயுங் கண்டுபுடுச்சு ஊர்ல ஆம்பளைக குதுச்சுருக்கானுக. இப்ப என்னமோ அவாவேற ஊர்ல வேல பாக்கா. சொந்த ஊர்ல நொழைய முடியல. இவுக வீட்டுகள்ள இன்னும் எதிர்ப்புத்தான். ரெண்டு பேரும் ஊருக்குள்ள நடமாட முடியாமெ தலமறவா அலையுதுக பாவம்.

நெனச்சுப் பாக்கைல, என்னடா இந்தப் பிள்ள அப்பிடி என்ன தப்பு செஞ்சுருச்சுன்னுதான் தோணுது. எங்க தெருவுலயே ஆம்பளைப் பெயல்க வேற ஊர்கள்ள இருந்து வேற சாதிப் பொண்ணுகளக் கெட்டியாந்து வச்சுருக்கானுக. அதெல்லாஞ் சரின்னு ஏத்துக்கிரவுனுக ஒரு பொம்பள வேற சாதி ஆம்பளையக் கலியாணம் முடுச்சா அவனுகளுக்கு வலிக்குது. அவனுக செஞ்சா கரெக்டு. அதையே ஒரு பொம்பள செஞ்சா தப்பு. இது என்ன நாயமுன்னு தெரியல.

அவனுக வேற சாதிப்பொண்ணுகளக் கெட்டிக்கிட்டா ஒன்னுமில்லியாம். ஆனா ஒரு பொம்பள வேற சாதிக்காரனக் கெட்டுனா சாதியோட மான மருவாத எல்லாம் போச்சாம். இதுல மான மருவாத எங்குட்டுக் கூடி எப்பிடிப் போகுதுன்னு தெரியல.

இதே மாதிரித்தான் பொம்பள நாலெழுத்துப் படுச்சு, நாலெழுத்து எழுதி, நாலெடத்துல துணிஞ்சு பேசிட்டாலும், அவனுகளுக்குப் பொறுக்க மாட்டேங்கி. ‘என்ன இருந்தாலும் பொட்டச்சிதான்’ன்னு சொல்லி, பொம்பளையாப் பெறந்துட்டது னால அவா என்ன செஞ்சாலும், வச்சாலும், ஆம்பள அதக் கீழ் ரேட்டாத்தான் மதிக்கிரானுக. எல்லா வெசயத்துலயும் இப்பிடித்தான் இருக்குது. யாராச்சும் பொம்பளைக நல்ல படியா, ஏதாச்சும் செஞ்சுட்டாக் கூட ‘அவளப் பாரப்பா; ஆம்பளகெணக்கா,’ அப்பிடின்னு அப்பக்கூட ஆம்பளயத்தான் ஒசத்துரானுக.

ஆம்பளங்ற ஒரு காரணத்துக்காக அவனுக நெனச்சா பொண்ணக் கெட்டிக்கலாம். அதுவும் வேற சாதில கூட கெட்டிக்கலாம். ஆனா பொம்பளையாப் பெறந்துட்டா எங்க சாதிக்குள்ள யாரையுங் கெட்டலாம். ஆனா வேற சாதில கெட்டக்கூடாது. அதுகூட படிக்காமெ காடுகரைகள்ள வேல வெட்டிக்குப் போற பிளளைக எங்க சாதிக்குள்ளயே புடுச்ச மாப்பிள்ளைக்கு வாக்கப்பட முடியுது. மொறப்படி வாக்கப்பட உடலைன்னா அதது சேந்துக்குருதுக. ஆனாக் கொஞ்சம் படுச்சு கிடுச்சு வந்துட்டா இப்பிடி நெனச்ச மாப்பிளையத் தேடவும் முடியாது. கெட்டவும் முடியாது. சாதி உட்டுச்சாதி போயிக் கெட்டிட்டா, சாதிக் கலவரமே வந்துரும் பொறுக்கோ. வேறு எங்குட்டாவது ஊர்களுக்குப் போயித் தெரியாமக் கெட்டிக்கிட்டாத்

தான் உண்டு.

"ஏ, நம்ம தெருவுல ஆம்பளைக இல்லியோ, வேற சாதில போயி ஆம்பள தேடுறதுக்கு" ன்னு வைரானுக. எங்க சாதிக் குள்ளயே பத்துப் பேர்க்கூட போனாலும் பரவாயில்லயாம். ஆனா வேற சாதிகூடப் போகக் கூடாதாம்.

நம்ம சாதிக்குள்ளயே முடிக்கனும்னு என்ன கணக்கு? மனசுக்குப் புடுச்சவனக் கெட்டிக்கிட்டு சந்தோசமா வாழட்டுமேன்னு உடமாட்டானுக. ஆம்பள சொல்றதுதான் சட்டம். அவெஞ் சந்தோசந்தான் முக்கியம். அவனுக்கு எது இஸ்டமோ அதான் நடக்கனும். அவெஞ் சவுகரியப்படிதான் எல்லாம் இருக்கனும். பொம்பள சவுகரியத்துக்குனு ஒன்னு செஞ்சுட்டாப் போதும். அவனுகளால பொறுக்க முடியாது. வானத்துக்கும் பூமிக்குமா எகுறுவானுக. இவனுக கீச்சுன கோட்டத் தாண்டக் கூடாதும்பானுக. இம்புட்டுக் காலமாத் தாண்டாம இருந்துதான் என்னத்த வாரிக் கெட்டிக்கிட்டோம்.?

# பன்னிரண்டு

ஆன மோண்ட மாதிரி மழச் சடச்சடன்னு ஊத்துது. நாங்க ஒரு அஞ்சாறு பேரு தொப்புளானோட தொழுவத்துல மழைக்காக ஒதுங்கி ஒக்காந்து பேசிக்கிட்டு இருந்தோம்.

"இந்த மழ எள்ளுக்கும், பருத்திக்கும் நல்லது. நல்லாக் கீரத்தண்டுக கெணக்காத் தளதளன்னு வளந்துருங்க," சூசையம்மா சொன்னா.

"என்னமோ அவா பெத்த பிள்ளைக வளர்ரது கெணக்கா அம்புட்டுப் பாசத்தோட எள்ளுச்செடி, பருத்திச் செடிகளப் பத்திப் பேசவும், "நீயி காடு வாங்கி இருக்கியாகும்தா?" சோலயம்மா கேட்டா.

"நா எந்தக் காட்டுக்குப் போக? சம்சாரிக காடுகளத்தாஞ் சொல்றேன். அவுகளுக்கு வெள்ளாம வெளச்சலு நல்லா இருந்தாத்தான நம்மளுக்கு வேல வெட்டி கெடைக்கும். நம்மாளுக காடுகர வாங்கிப் பொழச்சாத்தாஞ் சொல்றியா, என்னமோ நம்மளும் ஆத்தமாட்டாமெ இருக்கோம்."

சூசையம்மா சொல்லி முடிக்கவும், "என்னத்தா இம்புட்டுச் சடவாச் சொல்லிட்ட, காடுகரதானா பெருசு? நம்ம ஏதோ ஒழச்சமா, கஞ்சி குடுச்சமான்னு அன்னாடம் பொழுத ஓட்ரோம். மேகலக்குடிகள்ள போயிப்பாரு. சொத்து சொகமிருந்து என்ன செய்ய. அம்மாக்கமாருக பூராம் ஆம்பளைகளுக்கு அடங்கி ஒடுங்கி பெட்டிப் பாம்பாச் சுருண்டு கெடப்பாக."

"சட்டிக்குப் பொட்டிக்கு எல்லாஞ் சரித்தான். நம்ம ஒரு வகைல தும்பப்படுறோம். அவுக ஒருவகைல தும்பப்படுராக."

"அவுகளப் பாத்தாத் தும்பப்படுரது கெணக்காவா இருக்குது? நல்லா நெழலுல இருந்துக்கிட்டு காச்சவும் திங்கவுமா இருக்காக. வெதத்துக்கு ஒரு சீல துணிமணி உடுத்துராக. தெனமும் குளிப்புத்தான் வளிப்புத்தான். அவுகளுக்கு என்ன கொறங்ற?"

தொழுவத்துக்கு எதுத்தாப்ல நாகம்மாக் கெழவியோட வீடு. அவா வீட்டுத் திருணைல ஒக்காந்து அரிசி பொடச்சுக்கிட்டு இருந்த நாகம்மா சொன்னா, "மலைக்கும் மடுவுக்கும் ஒப்புட்டு பேச முடிமா? நம்ம குப்பக்காட்டுக் கழுதைக சாகுந்தட்டிக்கும் இதே கெதிதான்."

இதக் கேட்ட மேரிப்பிள்ள சொன்னா, "அப்பிடி ஒரேடியா நம்மள மட்டந்தட்டாத. ஒங்க காலத்த விட எங்க காலத்துல எம்புட்டோ மாறித்தான் இருக்கு. அவுககிட்ட எம்புட்டுக் கெடுபிடிக இருக்கு தெரியுமா. அதெல்லாம் பாத்தா நல்லகாலந் தாயே, நம்ம பறக்குடில பெறந்ததுன்னு நெனச்சுக்கிருவேன்."

"அப்டி என்னத்தா கெடுபிடிக அவுககிட்ட இருக்கு?" நாங் கேக்கவும். "நல்லாக்கேட்டத்தா நீயி. அம்மாக்கமாருக வீட்டுகள்ள போயி ஒரு ரெண்டு வருசம் வேல வெட்டி செஞ்சு பாரு, தெரியும். நானும் அந்தய்யா செயக்குமாரு வீட்ல சாணி சகதி அள்ளிக்கிட்டு அவுக காட்ல பண்ணவேல பாக்கைலதான் அவுக வகுசகள தெருஞ்சுக்கிட்டேன்;"

"மழ இப்பக்குள்ள நிக்காது போலுக்கோன்னு" சொன்ன மேரி தொயந்து சொன்னா.

"அம்மாக்கமாருக வெளிப்பார்வைக்குத்தான் இப்பிடி இருக்காக. அவுகாளுகள்ள கொமரி குட்டச்சிகளக் கர ஏத்துரதுன்னா லேசுப்பட்டக் காரியமில்ல. கழுத்து நிமுர நக போடனும். கைல ரொக்கங் குடுக்கனும். காடுகரைகள எழுதி வைக்கனும். இம்புட்டுஞ் செஞ்சு கெட்டிக் குடுத்தாலும் போற லெக்குகள்ள சந்தோசமாவா இருக்காகன்னா நெனச்சீக. அது பத்தாது இது பாத்தாதுன்னு கொற வெட்டி கொடுமப்படுத்துவாக. மாப்பிள்ளைக கெடைக்குரதுக் குதுரக் கொம்புதான்." மேரி சொல்லி முடிக்கவும் நாகம்மாக் கெழவி சொன்னா, "நீ சொல்றதும் நெசந்தாம்தா. நம்ம தெருவுகள்ள அப்பிடி இல்ல. என்னமோ நம்மளால ஏண்டது காதுல, மூக்குல, கம்மலு மூக்குத் தட்டக் குத்தி உட்டு பத்தி உட்ரலாம். கலியாணச் செலவு பூராம் மாப்பிள்ள வீட்டாளுக பாத்துக்குரும். நம்ம ரொக்கங் குடுக்க வேண்டாம். மாப்பிள்ள வந்து பருசம்னு போட்டு நம்மளுக்கு ரொக்கங்குடுத்துக் கெட்டிட்டுப் போகனும்."

"அது மட்டுமில்ல பாட்டி, மேச்சாதிகள்ள அந்தா இந்தான்ன கடப்பட்டு ஒடப்பட்டு முக்கித் தக்கி ஒரு பொண்ணக் கெட்டிக் குடுத்தாவிட்டி, புருசஞ் செத்துப் போராம்னு வையி. அந்தப் பிள்ளையோட கெதி அம்புட்டுத்தான். பூவு, பொட்டு, மஞ்சளு ஒன்னும் வைக்கக்கூடாது. நக நட்டுன்னு போடக்கூடாது. கலர்சீலைக கெட்டக்கூடாது. வெதவன்னு சொல்லி எந்த நல்ல காரியத்துலயும் ஒதுக்கியேவப்பாக. அந்தய்யா குப்புசாமி நாய்க்கரோட மகா, கலியாணம் முடுச்ச ரெண்டாவது வருசத்துலயே வெதவயாகிட்டு, பாவம் அந்த இம்சப்படுது. கஞ்சி தண்ணிகூட சரியா வகுத்துக்கு ஊத்தமாட்டாகளாம். நம்ம தெருவுகள்ள

அப்பிடியா? வெதவன்னு பேரு கூடகெடையாது. நம்ம எல்லாரும் ஒன்னுமண்ணா இருக்கோம்." "நம்ம தெருவுல புருசஞ் செத்தப் பெறகு எம்புட்டுப் பேரு மறுகலியாணஞ் செஞ்சுருக்காக? அது நம்ம சாதி வழக்கம். இந்த நாகம்மா கெழவிகூட ரெண்டாங் கலியாணந்தான் முடுச்சுருக்கா. இல்ல பாட்டி?" மரியம்மா கேக்கவும், "ஆமாத்தா. அதுல தப்பு இல்லன்னு நம்ம சொல்றோம். மேகலக்குடில அப்பிடி முடிக்கிரத அசிங்கம்னு சொல்றாக." நாகம்மா சொல்லிட்டு ஒல வைக்கனும்னு உள்ள எந்துருச்சுப் போனா.

"ஏ, வாங்கடி. மழ உட்டுருச்சு. வீடுகளுக்குப் போவம்" னு சொல்லிக்கிட்டு அம்புட்டுப் பேரும் வீடுகளுக்கு ஓடிப் போனோம்.

வீட்டுக்கு வந்தப் பெறகும் நாங்க தொழுவத்துல பேசுனதையே நெனச்சுக்கிட்டு இருந்தேன். அப்பிடிப் பாக்கப் போனா நானு பறச்சியாப் பெறந்தது ரொம்ப நல்ல காரியமாத்தான் தெரியுது. ஆனா எம்புட்டுத் தடவ இந்தச் சாதில பெறந்ததுக்காக வெக்கப்பட்டுக்கிட்டு வருத்தப்பட்டு இருந்திருக்கேம்னு மனசுல நெனச்சுக்கிட்டேன்.

நம்மகிட்ட பல நல்ல சங்கதிங்க இருந்தாலும் அதையெல்லாம் நம்ம உட்டுட்டு மேகலக்குடில இருக்குரதுதான் ஒசந்ததுன்னு நெச்சுக்குரோம். எப்பிடியும் இக்கரைக்கு அக்கரப் பச்சதான?

நம்ம பிங்கொசுவம் வச்சுச் சீல கெட்டுரது, தல மயித்தத் தூக்கிக் கொண்ட போடுரது, இதெல்லாங் கூட பாத்தா அழகாத்தான் இருக்கு. ஆனா இதெல்லாம் அசிங்கம்னு மத்தவுக சொல்லிட்டதுனால நம்மளும் அசிங்கம்னு நெனச்சுக்கிட்டு மேகலக்குடிப் பொம்பளைகளோட பழக்கவழக்கங்களக் காப்பி அடிக்கனம்னு ஆசப்படுரோம்.

இப்பிடி யோசுச்சுக்கிட்டு இருக்கைல பக்கத்து வீட்டுச் சிட்டு பொட்டியுஞ் சொளகுமா உள்ள வந்தா.

"என்னச் சினும, இந்நியாரத்துல பொட்டியுஞ் சொளகுமா வார? ஓம்மகா வந்துட்டாளா?" நாங் கேட்டேன்.

"நாளிக் கேப்ப இருக்குத்தா. அதத் திருச்சுக் களிக்கிண்டலாம்னு பாக்கேன். இந்த மழைக்கு அதுக்கும் சூடாக் களிக் கிண்டி, சூடாக்கருவாட்டுத் தண்ணி வச்சுக்கிட்டுத் தின்னா அப்பிடி இருக்கும். ஒங்க திருக எங்க கெடக்குது. திரிக்கத்தான் வந்தேன். ஏம்மகா இப்ப வருவா;" சொல்லிக்கிட்டே சாக்க விருச்சுப் போட்டுத் திருகக் கல்லத் தூக்கி வச்சுக் கேப்பயத் திரிக்க ஆரம்புச்சா. அவா திருச்சுக்கிட்டு இருக்கைலயே அவா மகா தேவி வந்தா.

“ஏம்மா, ரவைக்காச்சும் அரிசி வாங்கிச் சோறாக்கலாம்லமா. பகலைக்குக் கேப்பக்கூழு; ரவைக்குக் கேப்பக்களி. சீன்னு வருது ஒனியோட,” சொல்லிட்டு கூட ஒக்காந்து கேப்ப திருச்சா.

“கேப்பைல எம்புட்டுச் சத்து இருக்குன்னு ஒனக்குத் தெரியாது. போயி பரமசிவ நாய்க்கரு வீட்ல பாரு. அவரு பெரியய்யாவுக்கு காலைலயும், ராத்திரியும் கேப்பயத்தாங் குடுக்காக. அம்புட்டுச் சொத்துக்காரரு. பாவம், கூலத்தான் குடிக்காரு.” சிட்டு சொல்லவும், எங்கம்ம சொன்னா, “அவரு சீக்காளித்தா. அதான் அப்டிக் குடிக்காரு.”

“கேட்டுக்கோமா, அப்ப நம்ம பூராஞ் சீக்காளிகதான். அதான் ராப்பகலாக் கூழக் குடிக்கோம். இப்பிடிக் கரேர்னு கூழக் குடிக்கப் போயித்தான் நம்ம பிள்ளக்காடுக பூராம் கன்னங்கரேர்னு காக்கா நெறத்துல பெறக்குதுக. மேகலக்குடில பாரு, அம்புட்டுப் பிள்ளைகளும் செவேர்னு பெறக்குதுக. செல பிள்ளைகளச் சுண்டுனா ரத்தம் வரும். அப்பிடி இருக்குதுக. ஏம்னா, அவுகப் பாலுஞ் சோறுமாத் திங்காக,” தேவி சொல்லி முடிக்கக்கூட இல்ல. அதுக்குள்ள கோழிக் கூட்டு மேல ஒக்காந்துருந்த ரெண்டுபல்லி சொன்னா, “ஏ , போடி...வெவரங் கெட்ட கழுத. நம்ம பிள்ளக்காடுக கருப்புத் தொலினாலும் நல்ல மொகவாக்கோட மொகக் களையா இருக்குதுக. கருப்புத்தான் கட்டி வைரம். அவுக தெருவுகள்ளப் போயி பாரு. தோலுதான் வெள்ளத்தோலு. மொகரையும் மூஞ்சியும் பாரு. கட்டாணியும் பிட்டாணியுமா, பூராங் குண்டக்க மண்டக்க இருக்காளுக. அவளுக மொகவாக்குக்கு நம்ம நெரத்துல இருந்தாளுகன்னா ஒரு கழுத கூட அவுகளத் திரும்பிப் பாக்காது.” ரெண்டு பல்லி சொல்ரதும் நெசந்தான்னு நெனச்சேன். ரெண்டு பல்லிக்கு முன்னாடி ரெண்டு பல்லு தெத்துப் பல்லா நீட்டிக்கிட்டு இருக்கும். அதுனாலதான் அவா பேரு ரெண்டுபல்லி.

திருகக் குழிக்குள்ள கேப்பய அள்ளிப் போட்டுக்கிட்டே சிட்டு, “இந்தப் பிள்ள எப்பவும் இப்பிடித்தான். மேகலக்குடின்னா என்னமோ தேவலோகத்து ரம்பைக கெணக்காத்தான் பேசுவா. கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசம்? நம்மள மட்டந்தட்டியேதான் பேசுது கழுத,” அவா மகளப் பத்திச் சொல்லிக்கிட்டா.

ஒடனே ரெண்டுபல்லி, “ஏடி, நீயி நாலாங் கௌாசு வர படுச்சிருக்கீலடி. புத்தியக் கொண்டி யோசிக்கனும்டி. மேகலக்குடிப் பொம்பளைகள நம்மளக் கெணக்கா வந்து தொழிக்குள்ள நாத்து நடச் சொல்லு, கள எடுக்கச் சொல்லு. கதுரறுத்துச் மெக்கச் சொல்லு பாக்கேன். தன்னால நோனி தள்ளிப் போயி கெடப்பாக. சும்மாக்

கஞ்சியக் காச்சிக் குடுச்சுப் போட்டு மினுக்கிக்கிட்டு இருக்குரது பெரிய காரியமாக்கும்?” சொல்லிட்டு பொடி மட்டய விருச்சு பொடி அள்ளிப் போட்டுக்கிட்டா.

தேவிப்பிள்ள, மேல ஒன்னும் பேசல. சிட்டுத்தான் தன்னால பேசிக்கிட்டுத் திருகயச் சுத்துனா. “வேற தெருவுகள்ள பொம்பளப் பிள்ள பெறந்துச்சுன்னா என்னமோ எழவு உழுந்தது கெணக்கா துக்கப்படுவாக. ஏம்னா, பொட்டச்சிக்குக் கலியாணம் முடிக்கனும்னா சீரு செனத்தினு நெறய்யா கொட்டி அழுகனும். இதுனால பொட்டச்சின்னா செலவு, ஆம்பளப் பிள்ளன்னா வரவும்பாக. இன்னுஞ் செல லெக்குகள்ள பாதகத்திக பொட்டப்பிள்ளனா, பச்ச மண்ணுன்னு கூட பாக்காமெ கொன்னு போடுராளுகளாம். ஈவு எரக்கங்கெட்ட முண்டைக.”

“அந்த மட்டுக்கும் நம்மகிட்ட இப்பிடி வழக்கமில்ல. பொம்பளன்னாலும், ஆம்பளன்னாலும் பெத்து வளத்து உட்ருதாக. வளந்தாப் பெறகு ரெண்டு பேருமே வேல வெட்டி செஞ்சுதான் கஞ்சி குடிக்கனும். இதுல என்ன ஆம்பளன்னா ஒசத்தி?” தேவியும் ஆமாக்கனுன்னு ஒத்துக்கிட்டா. பெறகு திருச்ச மாவுல இத்தினி அள்ளி வாயுல போட்டா.

அதப்பாத்த சிட்டு, “பாத்துக்கிட்டியாத்தா? கேப்பன்னா எளப்பமா பேசுன கொள்ளு பச்ச மாவ அள்ளித் திங்கரத;” சொல்லிக்கிட்டே திருச்ச மாவப் பொட்டிக்குள்ள அள்ளிக் கிட்டுத் திருகயத் தூக்கி ஓரத்துல வச்சுட்டுப் போனா.

சனிச் சனிக்கெழம சாயங்காலம் நாங்க கெணத்துக் காட்டுச் செம குளிக்கப் போவோம். அப்பிடியே அழுக்குத் துணிகளக் கொண்டு போயித் தப்பிக் காயப்போட்டுக் கொண்டாருவோம். நாயித்துக் கெழமக் காலைல கோயிலுக்குப் பூசைக்குப் போகனும். வாரத்துல அந்த ஒரு நாளுதான் குளிப்பு. குளிக்குரது கூட எங்களுக்குச் சொகபோகங் கெணக்காத்தான். தெனமும் வேனாப் பறந்த வெயிலுக்குள்ள வேல செஞ்சுட்டு வீட்டு வேலையும் பாத்துக்கிட்டு இருக்கவே பொழுது சரியாப் போகுது. அதுனால குளிக்கக்கூட முடியாது.

குளிக்கும்போது கெணத்து மேல இருந்து, பம்பு செட்டு ரூமு மேல இருந்து கெணத்துக்குள்ள டமார்னு உழுந்து நீச்சலடிப்போம். நாஞ்சின்னப் பிள்ளையா இருக்கைல ஆம்பள, பொம்பளன்னு வித்தியாசம் இல்லாமெ, எல்லாப்பிள்ளைகளும் ஒன்னமன்னாக் கெடந்து நீச்சலடிப்போம். முங்கு நீச்சல போயி தண்ணிக்குள்ளயே தொட்டுப்புடுச்சு வெளாடுவோம். பெரிய பிள்ளையா ஆனப் பெறகு பொம்பளைகளாக் குளிப்போம்.

அங்ன குளிக்குது பூராம் பள்ளு, பறைச்சிய பொம்பளைக தான்.

அசிங்கமெல்லாம் படமாட்டோம். நாங்க பாட்டுல துணிமணிகள அவுத்துப் போட்டுட்டு குளிப்போம். அன்னைக்குத் தான் இத்தினி மஞ்சளும் மொத்துக்குப் பூசுவோம்.

ஒரு தடவ ராசா நாய்க்கரு கெணத்துல நாங்க ஒரு பத்துப் பன்னெண்டு பொம்பளைக குளுச்சுக்கிட்டு இருந்தோம். சின்னப்பிள்ளக்காடுகளும் ஒரு நாலஞ்சு பேரு இருந்துச்சுக. அப்ப நாங் கேட்டேன். “வேற சாதிப் பொம்பளைக ஒருத்தரும் இங்க குளிக்க வர மாட்டேங்காகளே எதுக்கு? ”

ஒடனே தண்ணிக்குள்ளயே நெல நீச்சு அடுச்சுக்கிட்டுருந்த ஒதடிப்பிள்ள சொன்னா, “அவளுகளுக்கெல்லாம் நீச்சலுத் தெரியாதே. அதுவுமில்லாமெ, இப்பிடி நாலு பேருக்கு எதுக்க அவுகள்ளாம் முண்டக் கட்டையாக் குளிக்க மாட்டாளுக. என்னமோ அவுகளுக்கு மட்டும் வேற மாதிரி இருக்குரது கெணக்கா பொத்திப் பொத்தி வச்சுக்கிருவாளுக.”

“இவா ஒரு அக்குருமம் புடுச்ச கூதி. எதுக்கெடுத்தாலும் ஆம்பளைக சாமானம், பொம்பளைக இருப்பிடத்தத்தாஞ் சொல்லிப் பேசுவா. இங்னக்குள்ள நம்ம கீச்சாதி ஆளுக குளிக்குர லெக்குல வந்து அம்மாக்கமாருக குளிக்க முடியுமா?” கன்னியம்மா சொல்லவும், “ஏ, இங்ன குளிக்குர நம்மெல்லாம் பீதிங்ர பன்னிகளா? சரி, இங்ன குளிக்காட்டி வேற கெணத்துகள்ள போயி குளிக்கலாம்ல?” ஒதடிதான் கேட்டா.

“அவளுக பூராம் பயந்தாங்கொள்ளிகடி, நீச்சலுந் தெரியாது ஒரு எழவும் தெரியாது. அங்ன வீட்டுகள்ளயே ரெண்டு வாளி தண்ணிய வச்சிக்கிட்டு மோந்து மோந்து ஊத்திக் குளிப்பாளுக. அது என்னன்னுதான் இத்தினிக்கானு தண்ணிய மோந்து ஊத்திக்கிட்டு குளிக்காளுகளோ. இப்பிடி முங்கிக் குளிக்குது எப்பிடி இருக்கு?” சொல்லிக்கிட்டே டொம்முன்னு தண்ணிக்குள்ள குதுச்சா பூர்ணம்.

“நம்ம வீட்டுகள்ள குளிக்குதுக்குன்னு எடமில்ல. இத்தினிக்கானு குடுசைக்குள்ளக் கூழக் காச்சிக் குடுச்சுட்டு அதுக்குள்ளயே மொடக்கிக்கிட்டு கெடக்குர நம்ம எங்குட்டுப் போயி குளிக்க முடியும்? அத உடு. பிள்ளப் பெத்தா, வெந்நிகிந்நி வச்சு ஊத்த எடமிருக்கா? அதான் கெணத்துக்காட்டுச் செம வாரோம். அம்மாக்கமாரு வீடுகள்ள குளிக்குதுக்கு, கொல்லைக்குப் போக ஒன்னுக்குப் போகன்னு தனித்தனியா ரூம்பு கெட்டி வச்சுருக்காக. பெறகு அவுக எதுக்கு இங்க வரனும்?”வரப்போரமாப் புல்லறுத்துக்கிட்டு இருந்த கோவாலு பாட்டி சொன்னா.

]

“நீயி இப்பிடியா கெழவி சொல்ற? நம்மளக் கெணக்கா இப்பிடிச் சொதந்தரமா வந்து குதுச்சு, நீச்சலடிக்க முடியுமா அவுகளுக்கு? இந்தக் கும்மரச்சமெல்லாம் அவுகளுக்குக் கெடைக்காதுல்ல. இருவத்து நாலு மணிநேரமும் சொவத்தப் பாத்துக்கிட்டு என்னன்னுதான் அப்பிடி இருக்க முடியுதோ? நம்மளால எல்லாம் அப்பிடி முடியாது தாயி;” பூர்ணம் சொல்லவும் எனக்கும் அது சரின்னு பட்டுச்சு.

பேசிக்கிட்டே குளுச்சு முடுச்சுட்டு காயப் போட்ட துணிமணிகள அள்ளிக் கெட்டிக்கிட்டு வீட்டுக்கு வந்துட்டோம். வரும்போதே ஒதடி கேட்டா, “இந்த சம்முகக் கெழவி குளிக்கப் போயி வசவு வாங்குன கத தெரியுமா ஒங்களுக்கு?”

“எங்க போயிக் குளிக்கப் போனா?”

“அவளுக்கு மப்பு. இங்குட்டெல்லாம் கெணரே இல்லன்னு அந்தா அங்க ரோட்டோரத்துல அந்தய்யா சீனிவாசங் கெணத்துல, அதுலயும் ஒத்தயில போயி குளுச்சுருக்கா. அவரு ஏற்கனவே இந்தப் பறக்குடிக் கழுதைக வந்து குளுச்சு கெணத்துத் தண்ணிய நாசமாக்கிப் போடுதுகன்னு கெணத்துப்படி பூராம் உயிரு வேலி முள்ள வச்சு அடச்சு வச்சுருக்காரு.”

“பெறகு இவா எப்பிடி உள்ள போயிக் குளுச்சா?”

“சம்முகக் கெழவி தான் ரொம்ப ரப்பெடுத்தவான்னு தெரியும்ல. இது அவாக் கொமரியா இருக்கைல குளுச்சதாம்.” எங்கம்ம சொன்னா. “இவெ என்ன பெரிய மயத்துக் கெணறு வச்சிருக்காம்னு மெனக்குட்டுப் போயி முள்ளப் பூராம் எடுத்துப் போட்டுட்டு உழுந்து நீச்சலடுச்சு குளுச்சுருக்கா. இப்பிடி பல தடவ செஞ்சாளாம். பலநாத் திருடன் ஒரு நா ஆப்டுவாங்ர சாடைல, ஒரு நாளு அவா குளுச்சுக்கிட்டு இருக்கைல பிஞ்சக்கார ஐயா வந்துட்டாராம்.”

“போ, வசம்மா மாட்டிக்கிட்டாளா?”

“வசம்மா மாட்டுனாளா, அந்தய்யா கண்டமாணிக்க வஞ்சுருக்காரு. இவா ரொம்பத் திமுரா, ‘ஐயா, ஒங்க கெணத்துத் தண்ணி நல்லா இல்லியே. ஒரே உப்புக்கச்சுல்ல கெடக்குது’ ன்னு சொல்லி வாய்க்குள்ள தண்ணிய வச்சு அவருக்கெதுக்கயே கெணத்துக்குள்ள துப்புக்குளுச்சுட்டு வந்து துணிய மாத்துனாளாம். இவா அரயுங்கொறையுமா நிக்கவும் அவரு கிட்டத்துல கூட வரலயாம். ஆனா ஊர்க்குள்ள நாட்டம கிட்டச் சொல்லிருக்காரு. நாட்டாம கூப்டு அரட்டி உட்டாராம்.”

“இதுக்குப் பெறகு அவளுக்கு அம்புட்டுக் கடுப்பாப்

]

போச்சாம். ரெண்டு மாசங் கழுச்சு அவரு காட்டுக்குக் கடல புடுங்கப் போயிருக்காக நம்ம பொம்பளைக. சம்முகக் கெழவியும் போனாளாம். போயி என்ன செஞ்சாக?"

"என்னத்தா செஞ்சாங்க?"

"அந்தய்யா குடிக்குதுக்கு ஒரு சின்னக் கொடத்துல தண்ணி கொண்டாந்து வச்சுருக்காரு. அதப் போயி நம்ம தெருப்பிள்ள ஒன்னு தெரியாமத் தொட்டுருச்சுன்னு, பச்சக் கடலக் கொழையக் கொண்டு அந்தப் பிள்ளய அடுச்சுருக்காரு. இதப்பாத்துட்டு சம்முகக் கெழவிக்கு ஆங்காரமா வந்து, 'பச்சப் பிள்ள கையி பானைல பட்டுச்சுன்னு அடிக்கான் பாவிப்பெய. இவனையெல்லா என்ன செய்யனும்னு தெரியுமா' ன்னு சொல்லிக்கிட்டு அவரு இல்லாத நேரத்துல அந்தக் கொடத்துக்குள்ளயே மோண்டு வச்சுட்டாளாம்."

இதக் கேட்டு நாங்கள்ளாம் சிருச்சோம்.

"மோண்டதுமில்லாமெ, ஊருக்குள்ள வந்து, பறச்சி குளுச்சா கெணத்துத் தண்ணி வீசுதுன்னாம்ல. இப்ப ஏ, மோத்தரத்தக் குடிக்கட்டும், படுவாப்பெய கண்டமாணிக்கச் சொல்லிக்கிட்டு வஞ்சுக்கிட்டு திருஞ்சாளாம்."

நானு வீட்டுக்கு வந்து எங்கம்மயிட்ட கேட்டேன். "ஏம்மா சம்முகக் கெழவி கொமரியா இருக்கைல சம்சாரிக தண்ணிக் கொடத்துல மோண்டு வச்சாளாக்கும்?"

"அவா சொல்லிக்கிட்டா அப்பிடி. அது நெசப்புளுவோ, பொய்ப்புளுவோ யாருக்குத் தெரியும். ஆனா அவா செய்யக்கூடிய ஆளுதா" ன்னு சொன்னா .

இந்தச் சம்முகக் கெழவி கெணக்கா ஒரு நாலு பேரு இருந்தாக்கூட நல்லா இருக்கும்னு நெனச்சுக்கிட்டேன்.

'அத்திப் பூத்தாப்ல அங்ன இங்ன ரெண்டு பேரு இப்பிடித் துணிச்சலா இருக்காக. ஆனா ரொம்பப் பேரு வலிலயும், வேதனையிலும் வெம்பி, வாடி வதங்கிப் போயித்தான் கெடக்காக. எங்குட்டுப் பாத்தாலும் இடிதான், அடிதான், கேவலந்தான், அவமானந்தான்.

கொஞ்சத்துக்குக் கொஞ்சம் படுச்சுருந்தாலும் கொஞ்சம் வெவரத்தோட இருக்கலாம். நம்மள அசிங்கப்படுத்தும்போது அம்புட்டு ஆத்துரமும் ஆங்காரமும் வரத்தான் செய்யுது. ஆனா என்ன வந்தாலுந்தான் அமுக்கிப் போடுராகளே.

ஒரு தடவ நாங்க கடல கெளயப் போன பிள்ளைகளாம் கூட இதப்பத்திப் பேசிக்கிட்டோம். "நம்ம படிக்காததுனாலதான பெறந்ததுலருந்து சாகுந்தட்டிக்கும் அடிமைக கெணக்கா, கண்ணுருந்துங் குருடங்க கெணக்கா அலைரோம். அதுனாலதான

காடுகரைகள்ள கண்ட நாயும் கையப் புடுச்சு இழுக்குது. இப்பிடித் தெனமும் ரணபாடு பட்டாத்தான் கஞ்சி; இல்லன்னா பட்னிதான்," சுப்பம்மா சொன்னா. "இந்த நம்ம கோயிலு காரியத்தக் கூடப் பாரு. கோயிலக் கூட்டிச் சுத்தஞ் செய்ரது நம்ம பொம்பளைகதான். மத்த சாதிக்காரிக வந்து ஒதுங்கி நின்னுக்கிட்டு, நம்ம கூட்டி முடிக்கவும், ஒய்யாரமாப் போயி மொத ஆளா ஒக்காந்துக்குராளுக. நானும் பொறுத்துப் பொறுத்துப் பாத்துட்டு அந்தக் கன்னியாஸ்திரிகிட்ட சொன்னதுக்கு, அவா என்ன சொல்ராங்க? கோயிலக் கூட்னா நம்மளுக்குத்தான் புண்ணியமாம். கடவுளு ஆசிர்வாதங் கெடைக்கு மாம். கடவுளுன்னு சொல்லி நம்மள எப்பிடி ஏமாத்துராகன்னு பாத்தியா? ஏ...அவளுகளுக்கெல்லாம் ஆசிர்வாதம் வேண்டா மாக்கும்?" சோதிப்பிள்ள கத்துனா.

ஒடனே சின்னம்மாக் கெழவி சொன்னா, " இங்னக்குள்ள இது வலிக்கக் கத்தி என்ன பெரயோசனம்? நீயும் நாலெழுத்துப் படுச்சுருந்தீன்னா வெள்ளையுஞ் சொள்ளையுமாத் திரியலாம். நாலு சனம் ஒனிய மதிக்கும்."

"எல்லா ஒங்களால வந்த வெனதான். நீங்களும் நாலெழுத் துப் படிக்காமெ எங்களையும் படிக்க வைக்காமெ... நானெல்லாங் கலியாணங்காச்சின்னு முடுச்சுப் பிள்ளப் பெத்தம்னா, ஏம்பிள்ளை களப் படிக்க வச்சு டாப்புக்குக் கொண்டாந்துருவேன். நீ வேன்னா, பொழச்சுக் கெடந்தாப் பாரேன்."

"அதயும் பாக்கத்தான போறேன். சரி...ஏடிகா, நானு இந்த ஓடைல கொஞ்சம் முள்ளுப் பெறக்கிட்டு இருக்கேன். போறபோது ஒரு சத்தங் குடுங்க," சொல்லிட்டு சின்னம்மா போயிட்டா.

சலேத்தா மொகத்துல ஊத்துன வேர்வத்தண்ணியச் சீலைட்ட தொடச்சுக்கிட்டு கடல கெளைரத உட்டுட்டு சொன்னா, "பெருசாப் பிள்ளப் பெத்துப் படிக்க வைக்கனும்ங்கியே, இப்ப நம்ம பறக்குடில படிச்சுருக்க பிள்ளைகளோட வகுசயக் கண்டியா? ஒவ்வொன்னும் மானத்துலருந்து குசுச்சது கெணக்கா மேகலக்குடி பொம்பளைக மாதிரித் திரிராளுக. எண்ணயுந் தண்ணியும் மாதிரி நம்ம கூட ஒட்டமாட்டேங்காளுக பாத்தியா. பறச்சின்னு சொல்லவே பயப்பிடுராளுகங்கே..."ன்னு ஒரு இழுப்பு இழுத்திட்டு திரும்பியுங் குனுஞ்சு கடல கௌஞ்சா."

"நம்ம படிக்குற படிப்புகள்ளயும் ஒரு மயிருமில்லயாம். படிக்குரது ஒரு தினுசா இருக்கு; நாம பொழைக்குரது ஒரு தினுசா இருக்குதாம். ரெண்டுக்கும் சம்மந்தமே இல்லியாம். என்ன நாலெழுத்து படிக்க எழுத படுச்சிக்கிரலாமாம். அந்த சர்டிபிகேட்ட

வச்சுக்குட்டு வேல பாத்து நாலு துட்டு சம்பாதிக்கலாமாம். அதுக்குங் கூட வேலைக்கு ரொம்ப டிமாண்டா இருக்குன்னு சொல்லிக்கிராக," பூஞ்சோல சொன்னா.

பெறகு நானும் படுச்சு, வேலைக்குன்னு வந்தாவிட்டி, படுச் சாக்கூட கஸ்டப்பட்டுத்தான் ஆகவேண்டி இருக்குன்னு தெருஞ்சுக் கிட்டேன். தலித்தா இருக்குரது ஒரு கஸ்டம், அதுலயுந் தலித்துப் பொம்பளையா இருக்குரது பெரிய கஸ்டம். இன்னுஞ் சொல்லப் போனா, வாக்கப்படாத தலித்துப் பொம்பளையா தனியாளா சீவிக்கிரது ரொம்பாப் பெரிய கஸ்டமுன்னு ஒணந்துக்கிட்டேன்.

வேல பாக்குதுக்குத் தோதா இருக்கும்முன்னு ஒரு வீட்ட வாடகைக்கு எடுத்துக்கிட்டு நானு தனியாக் காச்சி குடுச்சுக்குட்டு வேலைக்குப் போயிட்டு வந்துகிட்டு இருந்தேன். கலியாணங் காச்சி முடிக்காம தனியா இப்பிடி இருந்து சீவனம் பண்றது அம்புட்டு லேசுப்பட்ட காரியமில்ல. வீட்டுக்குச் சொந்தக்காரு, அக்கம் பக்கத்து ஆளுக மூச்சுக்கு முன்னூறு கேள்விகளக் கேட்டு எனிய ஆணி வேற அக்கு வேறயா பிச்சுட்டாக பிச்சு.

ஊரென்ன, பேரென்ன, வீடெங்க, வாசலெங்க, தாயி தகப்பன் ஒடம்பெறப்பு எம்புட்டுப் பேரு, என்ன வேல, நெல பொலம், சொத்துபத்து, நகநட்டு, பண்டபாத்துரம் இப்பிடி ஏகப்பட்ட கேள்விக. சரி, எப்பிடியோ சமாளிச்சு எல்லாக் கேள்விக்கும் பதில் சொல்லிட்டோம்னு நிம்மதியா இருக்க முடியாது.

தொயந்தடியா கேள்விகளக் கேட்டுக்கிட்டே இருப்பாக. என்ன சாதி, என்ன மதம், என்ன வேல, எம்புட்டுச் சம்பளம், என்ன வயசு, கலியாணம் ஆச்சா, ஏ இம்புட்டு நாளா ஆகல, இனி யாரைங் கட்டப் போறியா. ஏங்கட்ட மாட்ட? இப்பிடி நச்சரிச்சுக்கிட்டே இருப்பாக.

இந்த நச்சரிப்புத் தாங்க மாட்டாமெ எப்பயாச்சும், எதுக்காச் சும் கொஞ்சம் எருச்சலக் காட்டிட்டம்னா போச்சு. ஒடனே 'மூக்க ணாங் கவுறு போட்டா எல்லாஞ் சரியாப் போகும்'னு மொணங்கிக் கிட்டுப் போவாக. தாலியத்தான் மூக்கணாங் கவுறுங்ரது. மூர்க்கத் தனமான மாடுகள அடக்கத்தான் அதுகளுக்கு மூக்குப் பூறி மூக்க ணாங்கவுத்தக் கட்டுவாக. அப்ப இதுலயே தெரியல? பொம்பளைக மாடுக மாதிரி. அவுகள அடக்கனும்னா ஆம்பள அவா கழுத்துல தாலின்னு ஒன்னக் கெட்டி வசக்கனும்னு பொம்பளைகளே சொல்ராக.

அம்புட்டுக் கேள்ளிகளையும் எப்பிடியோ சமாளுச்சுட்டு இருந்தாலும், இந்த என்ன சாதிங்கர கேள்வியத்தான் சமாளிக்க

முடியாது. உள்ள சாதியப் பறச்சின்னு பளுச்சுன்னு சொன்னம்னா, அதுக்குப் பெறகு எனக்கு வாடகைக்கு வீடு தரமாட்டேங்காக. எம்புட்டு வாடக குடுத்தாலும் பெறகு வீடு கெடைக்குரது ரொம்பாக் கஸ்டம்.

இந்தக் காலத்துல வேல கெடைக்குரது எம்புட்டுக் கஸ்டமோ, அதே மாதிரித்தான் வீடு கெடைக்குரதும். தலித்துகன்னா வீடு குடுக்கத் தயங்குராக. நாங்க சொந்தமா வீடு கெட்டி வாடகைக்கு உடுர நெலமைலா இருக்கோம்? ஒன்னு ரெண்டு பேரு எங்குட்டோ அத்தி பூத்தாப்ல இருக்கலாம். இதெல்லாம் மனசுல வச்சுக்கிட்டு வீடு எப்பிடியும் வேணுமின்னு, உள்ள சாதிய வெளிக்காட்டாமெ, நானுந் தாக்காட்டிக்கிட்டே வந்தாலும், அந்தப் பாச்சா ரொம்பநாளைக்குப் பலிக்காது. எனக்கு வார கோவத்துக்கு நாம் பறச்சி, பறச்சிதாம்னு கத்திரலாம் போல இருக்கு. நம்ம சாதிய மறச்சுக்கிட்டு சும்மானாச்சும் வேற சாதியச் சொல்ரதுக்கும் புடிக்கல. அப்பிடி என்ன பொய் சொல்லிக்கிட்டு, ஒரு கவுடு மொழுஞ்ச பொழப்பு பொழைக்கனும்னு மனசு கெடந்து அடிக்குது. இந்தச் சங்கடம் வேற சாதிப் பொம்பளைகளுக்கு இல்ல. அவுக எங்கனனாலும் போயி வீடெடுத்து குடியிருக்கலாம். ஆனா நம்மளுக்கு ரூவா கெட்டி வாடகைக்குக் குடியிருக்கக் கூட உரிம இல்ல. அம்புட்டு அரோசியமாவா நாங்க இருக்கோம்?

இது இப்பிடின்னா கலியாணம் ஆகாமெ நடமாடுரது இன்னொரு பெரச்சனையா இருக்கு. ரொம்பா வயசுவரைக்கும் வாக்கப்படாமெ இருந்தம்னா என்னமோ நானு பல பேருக்கு முந்தி விரிக்குர பலவட்ரன்னு பாக்குதுக; பேசுதுக; கலியாணம்னு ஒன்னு முடுஞ்சு, கழுத்துல தாலி ஏறிட்டா, இந்தப் பெயலுக்கு இவா சொந்தம்னு சீலு குத்திர்ராக. அப்பிடி இல்லாட்டி, அவா பல பெயலுக்குச் சொந்தங்கரது கெணக்காத்தான் அம்புட்டுப் பெயல்களும் பல்லிளிக்குரது. ஏ...எந்தப் பெயலுக்குஞ் சொந்தமாக பொம்பளைக இருக்கக் கூடாதா என்ன?

நானு வேல பாக்குர லெக்குலயும் இப்பிடித்தான். தனியாப் போயி கடைல ஒரு காப்பி குடுச்சாக்கூட 'இது ஒரு சைசான கெராக்கியோ' ன்னு பேசராக. இம்புட்டு எதுக்கு? தனியாளா வீட்ட வாடகைக்கு எடுத்து சீவிக்கிரதுக்குக்கூட 'இவா பொம்பளதானா? ஒத்தைல வீடெடுத்துக்குட்டு ஆம்பளப் பெய கெணக்கா அலைரதப் பாரு' ன்னு கண்டமாணிக்காப் பேசுராக.

ஆம்பள மட்டுமா பேசரான்? பொம்பளைகளும் ரொம்ப மும்முரமா பேசுராளுக. ஏங்கூட வேல பாக்குர பொம்பள டீச்சர் களுக்கே இது பொறுக்காது. கண்ணுல வெளக்கெண்ண ஊத்திப்

பாத்துக்கிட்டுருந்து ஒன்னுமில்லாத வெசயத்தக்கூட கண்ணு, காது, மூக்கு வச்சு செத்த நேரத்துல இல்லாததும் பொல்லாததுமாப் பரப்பி உடுவாக.

இம்புட்டு இருந்தாலும் நானும் தெம்பாத்தான் அலைரேன். 'மடில கனமிருந்தாத்தான வழில பயம்?' சூரியனப் பாத்து நாயி கொலைக்குதுன்னுட்டு போவேண்டியதுதான்.

வேல ஒஞ்ச நேரத்துல வீட்ல தனியா ஒக்காந்து யோசுச்சுப் யோசுச்சுப் பாப்பேன்.

"நானு பொம்பளையா இருக்குரதுனால இம்புட்டுப் பாடு படவேண்டி இருக்கு. இப்பிடித்தான நம்ம சனங்களும் தலித்தா பெறந்ததுக்கு நித்தம் தண்டன வாங்குதுக. தலித்துகளாப் பெறந்தது எங்க குத்தமா? இதுல வேற நானு பொம்பளயா இருக்குரதுனால இன்னும் அதிகமா போராடவேண்டிருக்கு. ஆம்பளககிட்ட அவஸ்தப்படுரது இல்லாம, வேற சாதிப் பொம்பளைகளாலயும் லோலுப்பட வேண்டி இருக்கு. எத்தன திக்கத்துலதான் இடி வாங்குரது? எம்புட்டு நாளைக்கு?"

இப்பிடி நெனச்சு கவலைப்பட்டாலும், ஏ நெலம கொஞ்சம் பரவாயில்லன்னு தோணும். ஏதோ நாலெழுத்துப் படுச்சு, சம்பா ருச்சு, ஏங்கால்ல நா நிக்கேன். அப்பிடி இல்லாம, 'அ' னா 'ஆ' வன்னா தெரியாம வீட்லயும், வேல செய்ர லெக்குகள்ளயும், குனியக் குனியக் கொட்டு வாங்கிட்டே இருக்குர எங்க பொம்பளை கள நெனைக்கைல, வகுத்தெருச்சலா இருக்கும்.

எல்லாங் கூட்டிப் கழுச்சுப் பாத்தா, ஆம்பள சவுகரியத்துக்குத்தான் பொம்பளைய கடவுளு உண்டாக்குனது மாதிரி ஆக்கி வச்சுருக்காக. ஆம்பள மனசு கோணாம, அவனுக்கு ஆறுதலா, தேறுதலா இருந்து, அவெங் கொணமறுஞ்சு நடந்து அவனுக்குத் தேவப்பட்ட சகல சவரட்டனைகளையுங் செஞ்சு, அவனுக்கு வகுறு பசிக்கைல வக்கனையா ஆக்கிப் போட்டு, ஒடம்பு பசிக்கைல அதுக்கும் ஈடு குடுத்து, இப்பிடி ஒவ்வொரு நிமுசமும் அவன நடுச்சென்டருல வச்சுக்கிட்டு வாழ வேண்டியதுதான் நடைமுறைல வழக்கமா இருக்கு.

ஆனா பொம்பளைக்கு மனசு இருக்கு. அதுல ஆசாபாசம் எல்லாமிருக்கு. வகுத்துப் பசி, ஒடம்புப் பசி இப்பிடி அவளுக்கும் தேவைகள் இருக்கும்ங்றத யாரும் நெனச்சுக்கூடப் பாக்கரதில்ல. இதெல்லாம் பொம்பள வெளில காட்டிக்கிரக்கூடாது. தன்னோட தேவைகள அடக்கி, அழுச்சுட்டு, ஆம்பளைகளத்தான், குடும்பத்துல இருக்குற மத்தவுகளத்தான் ஓடியாடி கவனிக்கனும்னு நம்ம தலைல எழுதி வச்சுட்டாக. நாமளும் அத நம்பிக்கிட்டு 'கணவனே

கண்கண்ட தெய்வம்' னு ஒளறிக்கிட்டுக் கெடக்கோம்.

ஆம்பள ஆயிரந்தடவ நம்மள அசிங்கப்படுத்தலாம்; அவமரியாதயாப் பேசலாம். நடத்தலாம். அது சாதாரண வெசயம். ஆனா பொம்பள ஒரு தடவ, ஒரே தடவ எதார்த்தமா, மானமுள்ள மனுசியா இருந்துரட்டும். அவனுகளால தாங்கவே முடியாது. அவள அடுச்சு ஒடுக்கி அவெங்கைக்குள்ள அடக்கி வைக்காட்டி அவெங் குடிச்ச கஞ்சி செமிக்காது. பொம்பள கைக்கு மீறிப் போனா அவனுக மீசத்துடிக்கும். அதுக்குப் பயந்துக்கிட்டுக் கெடந்தம்னா காலா காலத்துக்கும் பொதி செமக்குற கழுதைக மாதிரி வாழ்ந்துட்டு செத்துப் போக வேண்டியதுதான்.

இதெல்லாந் தெருஞ்சுக்கிட்டப் பெறகும், நம்ம கண்ணுருந்துங் குருடங்க கெணக்கா வாழப்படாது. நம்ம நெலமய நம்ம மாத்தாட்டி வேற யாரு வந்து மாத்தப் போறா?

ஆம்பளைக்குச் சேவுகம் பண்ற கலியாண வாழ்க்கதான் நம்ம கெதிங்றத உடனும். கலியாணம் முடுச்சு அது நித்திய நரக வாழ்க்கையா ஆகிப் போனா பல்லக் கடுச்சுக்கிட்டு ஆயுசு பூராங் கஸ்டப்பட்டுத்தான் ஆகனும்ங்ரதயும் மாத்திக் காட்டனும். நம்ம பொம்பளப் பிள்ளைகள இந்த மாதிரி எண்ணங் கொண்டவுகளா சிறுசுலருந்தே வளத்துட்டு வரனும். ஆம்பள பொம்பளன்னு வித்தியாசம் பாக்காமெ படிக்க வச்சு, ஆளாக்கி உடனும். ஆம்பளைக்குக் குடுக்குர சொதந்துரத்தப் பொம்பளைக்குங் குடுக்கனும். இப்பிடி சின்னதுலருந்தே வளப்பு மொறைல செஞ்சுட்டு வந்தம்னா, பொம்பளைக சக்தியும் வெளிப்படும். அப்ப ஆவதும் பொண்ணால அழிவதும் பொண்ணாலங்ரது கெணக்கா, அநியாயத்த, அக்கிரமத்த, ஏற்றத்தாழ்வுகளப் பூராம் அழுச்சுட்டு ஆம்பளையும் பொம்பளையும் ஒன்னா, எந்த வேத்துமையுமில்லாம சம உரிமையோட வாழக்கூடிய காலம் பெறக்கும். அது பெறக்குர காலம் சீக்கிரமா வரப் போகுதுன்னு மனசுல படுது.